விஜயநகரப் பேரரசின் வரலாறு

டாக்டர் அ. கிருஷ்ணசாமி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

48831

த. பா. நி. (க. வெ.) வரிசை எண்—757

விஜயநகரப் பேரரசின் வரலாறு
(கி. பி. 1565 வரை)

(மேல் பட்டப்படிப்பிற்குரியது)

ஆசிரியர்
டாக்டர் அ. கிருஷ்ணசாமி, எம்.ஏ.,எல்.டி., பிஎச்.டி.,
ஓய்வுபெற்ற வரலாற்றுப் பேராசிரியர்,
அண்ணமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணமலை நகர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1977

Number of copies—1,000

T.N.T.B.S. (C.P.) No. 757

© Government of Tamilnadu

HISTORY OF THE VIJAYANAGAR EMPIRE UPTO 1565 A.D.

Dr. A. KRISHNASAMY

Price Rs. 15-05

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
Giri Art Printers,
Madras-600 094.

பதிப்புரை

விஜயநகரப் பேரரசின் வரலாறு (கி. பி. 1565 வரை) என்ற இந்த நூல், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் 757ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இது வரை 792 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்த நூல் மைய அரசு, கல்வி, சமூக-நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

பொருளடக்கம்

முதற்பகுதி

		பக்கம்
1.	விஜயநகர வரலாற்று ஆதாரங்கள் ...	1
2.	விஜயநகர அரசு தோன்றுவதற்குரிய அரசியல் சூழ்நிலை ...	19
3.	விஜயநகரத்தின் தொடக்கம் ...	32
4.	சங்கம வமிசத்து அரசர்கள் ...	42
5.	இரண்டாம் புக்கனும் முதலாம் தேவராயனும் ...	55
6.	இரண்டாம் தேவராயர் ...	62
7.	சங்கம வமிசத்து அரசர்களின் வீழ்ச்சி ...	71
8.	சாளுவ நரசிம்மரின் வரலாறு ...	77
9.	கிருஷ்ண தேவராயர் ...	93
10.	அச்சுத தேவராயர் ...	113
11.	சதாசிவராயர் ...	129
12.	தலைக்கோட்டைப் போர் ...	152

இரண்டாம் பகுதி

13.	விஜயநகரப் பேரரசின் அரசியல் முறை ...	165
14.	மாகாண அரசியல் ...	175
15.	விஜயநகரப் பேரரசு காலத்தில் அரசியல் முறை ...	188

பக்கம்

16. விஜயநகர அரசாங்கத்தின் வருமானங்கள் ... 200

17. நீதிமுறைகளும் நியாயம் வழங்குதலும் ... 223

18. விஜயநகரப் பேரரசில் இராணுவ அமைப்பு ... 239

19. விஜயநகர ஆட்சிக் காலத்தில் சமூக அமைப்பு ... 259

20. விஜயநகரப் பேரரசில் சமய - தத்துவ வரலாறு ... 277

21. புறச்சமயங்களின் வரலாறு ... 289

22. கல்விக்கூடங்களும் இலக்கியமும் ... 308

23. தமிழ் இலக்கிய வரலாறு ... 331

24. விஜயநகரப் பேரரசில் நிலைபெற்றிருந்த கட்டடக் கலை, உருவச் சிலைகள் அமைப்பு முதலியன ... 342

25. டாமிங்கோஸ் பீயஸ் எழுதிய விஜயநகரத்தைப் பற்றிய வரலாறு ... 375

மரபுவழிப் பட்டியல் ... 415

மேற்கோள் நூற்பட்டியல் ... 419

முதற் பகுதி

1. விஜயநகர வரலாற்று ஆதாரங்கள்

தென்னிந்திய வரலாற்றில் விஜயநகரப் பேரரசின் வரலாறு மிகவும் முக்கியமான பகுதியாகும். துங்கபத்திரை-கிருஷ்ணை பேராறுகளுக்குத் தெற்கிலுள்ள தென்னிந்தியப் பெரும்பகுதியில் தென்னாட்டுக் கலாசாரமும், சமயங்களும், அரசியல் முறைகளும் அழிந்துபடாது நிலைபெற்றிருக்கவே விஜயநகரப் பேரரசு தோன்றியதெனக் கூறலாம். கி.பி. 1336ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற விஜயநகரம் என்னும் நகரமானது 1565ஆம் ஆண்டு வரையில் பெரியதொரு பேரரசாக வளர்ந்து, ஹொய் சளர்கள், காகதீயர்கள், சோழர்கள், பாண்டியர்கள் முதலிய அரச வமிசங்களால் ஆளப்பெற்ற நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு, பெரும்புகழுடன் விளங்கியது. கி.பி. 1565ஆம் ஆண்டிற்குப் பிறகும் தென்னிந்தியாவில் இப் பேரரசு நிலை பெற்றிருந்த போதிலும் இதனுடைய பிற்கால வரலாறு இந் நூலில் இடம்பெறவில்லை. இப் பேரரசைச் சங்கமர், சாளுவர், துளுவர், ஆரவீட்டு வமிசத்தினர் என்ற நான்கு அரச குலத்தவர் போற்றி வளர்த்தனர். சங்கம வமிசத்தைச் சேர்ந்த ஹரிஹரர், புக்கர் என்ற இரு சகோதரர்கள் மாதவ வித்யாரண்யர் என்ற சிருங்கேரி சங்கராச்சாரியாரின் உதவிகொண்டு, விஜயநகரம் என்ற நகரத்தை அமைத்தனர். பின்னர் சாளுவ வமிசத்தினரும், துளுவ வமிசத்தினரும் இப் பேரரசைப் பேணிக் காத்தனர். துளுவ வமிசத்துப் பேரரசர் கிருஷ்ண தேவராயருடைய ஆட்சியில் இப் பேரரசு மிக உன்னத நிலையை அடைந்தது. சதாசிவ ராயருடைய ஆட்சிக் காலத்தில் தக்காணத்து இஸ்லாமிய அரசர்கள் ஒன்று சேர்ந்து இப் பேரரசின் செயல் வீரராக விளங்கிய இராமராயரைத் தலைக்கோட்டை என்னுமிடத்தில் தோல்வியுறச் செய்து விஜயநகரத்தை அழித்து அவலமுறச் செய்தனர். இராமராயருக்குப் பிறகு அவருடைய தம்பி திருமல ராயரும், அவருக்குப் பின் வந்தோரும் விஜயநகரத்தை விட்டு நீங்கிப் பெனுகொண்டா, திருப்பதி, சந்திரகிரி, வேலூர் முதலிய இடங்களில் தங்களுடைய தலைநகரத்தை அமைத்துத் தென் னிந்தியாவை ஆட்சி புரிந்தனர். இவ் வரசர்கள் ஆரவீட்டு வமிசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுள் கடைசி மன்னர்

களாகிய மூன்றும் வேங்கடபதி தேவராயரும், மூன்றும் ஸ்ரீரங்க ராயரும் சந்திரகிரியில் ஆட்சி புரிந்த பொழுது 1639, 1642ஆம் ஆண்டுகளில் இப்பொழுது தமிழ்நாட்டின் தலைநகரமாகச் சிறப்புற்று விளங்கும் சென்னை நகரம் அமைந்துள்ள நிலப் பகுதியை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு அளித்தனர். ஆகையால், விஜயநகரமும், அப் பேரரசும் மறைந்துவிட்ட போதிலும், இந்திய வரலாற்றில் அப் பேரரசின் நினைவுச் சின்னமாகச் சென்னை மாநகரம் விளங்குகிறதெனக் கூறலாம்.

விஜயநகர வரலாற்றை எழுதுவதற்கு இப்பொழுது பெருவாரியான வரலாற்றுதாரங்கள் கிடைத்துள்ளன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகர வரலாற்றை எழுதிய இராபர்ட் சிவெல் (Robert Sewell) என்ற அறிஞர் இவ் வரலாற்றைத் தொடங்கினர் எனக் கூறுதல் பொருத்தமானது ஆகும். அவர் இவ் வரலாற்றை 'ஒரு மறைந்து போன பேரரசு' (A Forgotten Empire) என்று அழைத்த போதிலும், இன்று இதன் நினைவு இந்திய மக்களிடையே மறைந்து விடவில்லை. விஜயநகரப் பேரரசைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கும், நூல்கள் எழுது வதற்கும் ஏராளமான வரலாற்று ஆதாரங்களும் வசதிகளும் உள்ளன. அவற்றின் துணை கொண்டு இந் நூல் எழுதப் பெறுகிறது. இவ் வரலாற்று ஆதாரங்கள், பல மொழிகளில் எழுதப் பெற்றுள்ளன. அயல்நாட்டு மொழிகளான இத்தாலிய மொழி, போர்த்துக்கீசிய மொழி, ஆங்கிலம், ஃபிரெஞ்சு, முதலிய மொழிகளில் காணப்பெறும் விஜயநகர வரலாற்றுக் குறிப்புகள் மிக்க துணை செய்கின்றன. விஜயநகரப் பேரரசின் வரலாற்றுதாரங்களை 1. தொல்பொருள் ஆராய்ச்சி ஆதாரங்கள், 2. இலக்கிய ஆதாரங்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் தொல்பொருள் ஆராய்ச்சி ஆதாரங்களைச் செப் பேடுகள், கல்வெட்டுகள் என்றும், கட்டடங்கள், கோவில்கள், அரண்மனைகள், வெற்றித் தூண்கள், கல், செம்பு, பித்தளை முதலிய உலோகங்களினாலாய உருவங்கள் என்றும், தங்கம், வெள்ளி, செம்பு முதலியவைகளால் செய்யப்பெற்ற நாணயங்கள் என்றும் மூவகையாகப் பிரிக்கலாம். ஆயினும், இம் மூவகையான ஆதாரங்களில் கல்வெட்டுகளும், செப்பேடுகளுமே மிகுந்த துணை செய்கின்றன. செப்பேடுகளும், கல்வெட்டுகளும் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் (South Indian Inscriptions) பல பகுதிகளாகப் பதிக்கப் பெற்றுள்ளன. ஆனால், அவை ஒரு விதமான வரையறையின்றி எல்லா விதமான அரச வமிசங்களின் கல்வெட்டுகளுடன் கலந்தும் காலவரையறையின்றியும் பதிப்

பிக்கப் பெற்றுள்ளன. இந்திகா எபிக்கிராபியா (Epigraphia Indica), கர்நாடக தேசத்து எபிக்கிராபியா (Epigraphia Carnatica) என்ற தொகுதிகளில் காணப்பெறும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் விஜயநகர வரலாற்றிற்கு மிக்க உதவியாக உள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் பதின்மூன்று பகுதிகளாக உள்ளன. இவற்றில் காணப்பெறும் விஜயநகர அரசர்களின் கல்வெட்டுகள், வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளில் வரையப்பெற்றுள்ளன. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று 1915ஆம் ஆண்டு வரையில் V. அரங்காச்சாரியாரால் சேகரிக்கப்பெற்ற கல்வெட்டுகளின் வரிசைத் தொகுதிகள், மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள் எவ்வெவ்விடங்களில் உள்ளன என்று குறிப்பிடுகின்றன. 1892ஆம் ஆண்டிலிருந்து பதிக்கப்பெற்ற எபிக்கிராபியா இந்திகா என்னும் சஞ்சிகை சுமார் முப்பதுக்கு மேற்பட்ட தொகுதிகளில் காணப்பெறுகிறது.

இத் தொகுதிகளில் காணப்பெறும் விஜயநகரத்து அரசர்களின் கல்வெட்டுகளில் முக்கியமானவை :

1. முதலாம் ஹரிஹர தேவருடைய பாகபள்ளிச் செப்பேடுகள்.
2. பித்திர குண்டாச் செப்பேடுகள்.
3. சிராவண பெல்கோலாவில் காணப்படும் இராமநுஜர் கல்வெட்டு.
4. முதலாம் ஹரிஹரனுடைய கோமல் சாசனம்.
5. கிருஷ்ண தேவராயருடைய ஹம்பி கல்வெட்டு.
6. கிருஷ்ண தேவராயருடைய போர்ச் செயல்களைக் குறிப்பிடும் அமராவதிக் கல்வெட்டு.
7. மங்களகிரி, கொண்டவீடு முதலிய இடங்களில் காணப் பெறும் வெற்றித்தூண் கல்வெட்டுகள்.
8. அச்சுத தேவராயருடைய கடலாடிச் செப்பேடுகள்.
9. விருபண்ண உடையாருடைய ஆலம்பூண்டிச் செப்பேடுகள்,

எபிக்கிராபியா கர்நாட்டிகா என்னும் கல்வெட்டுத் தொகுதிகளிலிருந்து மைசூர் நாட்டில் விஜயநகர ஆட்சி பரவி இருந்தமை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். மேற்கூறப் பெற்ற சாசனத் தொகுதிகள் அன்றியும் இந்தோ இஸ்லாமிகா

என்னும் கல்வெட்டுத் தொகுதியில் பாரசீக, அராபிக் மொழிகளில் காணப்பெறும் கல்வெட்டுகளும் மிக்க துணை செய்கின்றன. திருவாளர்கள் A. பட்டர்வெளர்த், வேணுகோபால் செட்டி என்போரால் சேகரிக்கப் பெற்று மூன்று பகுதிகளாக உள்ள நெல்லூர் ஜில்லாக் கல்வெட்டுகளிலிருந்து ஆந்திரப் பகுதியில் விஜயநகர ஆட்சி பரவியிருந்ததைப்பற்றி நாம் அறிய முடிகிறது. சாது சுப்பிரமணிய சாஸ்திரியாரால் ஆறு பகுதிகளாகப் பதிக்கப் பெற்ற திருமலை திருப்பதி தேவஸ்தான கல்வெட்டுகளும், புதுக் கோட்டைச் சமஸ்தானக் கல்வெட்டுத் தொகுதியும், திருவாங்கூர்ப் பழம்பொருள் ஆராய்ச்சித் தொகுதிகளும் (Travancore Archaeological Series) சென்னை அரசாங்கத்தாரால் பதிக்கப் பெற்ற தென்னிந்தியக் கோவில் சாசனங்களும் மிக்க பயன் உள்ளவையாகும்.

1. தொல்பொருட் சின்னங்கள்

துங்கபத்திரை நதியின் தென்கரையில் காணப்பெறும் விஜயநகரத்தின் அழிவுச் சின்னங்களை அந்நகரத்தின் வரலாற்றுக் கண் காட்சிச்சாலை எனக் கூறுதல் பொருத்தமாகும். ஹம்பியில் உள்ள விருபாட்சர் கோவிலும், விஜயநகரத்தின் மதிற்சுவர்களும், இடிபட்ட அரண்மனைகளும், நீர்ப்பாசனக் கால்வாய்களும், சைவ வைணவக் கோவில்களும், கோபுரங்களும், விஜயநகரத்தின் பழம் பெருமைகளை எடுத்தியம்புகின்றன. பெனுகொண்டா, சந்திரகிரி, வேலூர், செஞ்சி முதலிய இடங்களில் காணப்பெறும் கோட்டைகளும், கோட்டைச் சுவர்களும் அக்காலத்தியக் கட்டடக்கலையைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. திருப்பதி, காளத்தி, காஞ்சி, திருவண்ணுமலை, சிதம்பரம், திருவரங்கம், மதுரை முதலிய தெய்வீக இடங்களில் விஜயநகரத் தரசர்கள் அமைத்த கோவில்கள், கோபுரங்கள், கல்யாண மண்டபங்கள் முதலியவை விஜயநகரப் பேரரசில் நிலைபெற்றிருந்த கோவில் அமைப்புகளைப் பற்றிப் பறைசாற்றுகின்றன. ஹம்பியில் உள்ள வித்தளர் கோவில், கிருஷ்ணர் கோவில், இராமர் கோவில், விருபாட்சர் கோவில் முதலியன பேரரசர்களின் கலையார்வத்தைத் தெற்றென விளக்குகின்றன.

மேற்கூறப் பெற்ற கோவில்கள், கோபுரங்கள், மண்டபங்கள் முதலியவற்றில் காணப்பெறும் உருவச் சிலைகள் விஜயநகரப் பேரரசின் மன்னர்கள், மக்கள் முதலியோருடைய சமயத்தையும், கலையார்வத்தையும் காட்டுகின்றன. முழுவராகன், அரைவராகன், கால்வராகன், பணம் முதலிய நாணயங்கள்

தங்கத்தால் செய்யப் பெற்றிருந்தன. தார் என்ற நாணயம் வெள்ளியினாலும் செம்பினாலும் அமைவுற்றிருந்தது. இந்த நாணயங்களின்மீது பொறிக்கப் பெற்ற உருவங்களும் எழுத்துகளும், அக் காலத்திய சமுதாயத்தின் சமயம், பொருளாதாரம் முதலியவற்றை ஆய்வதற்கு உதவி செய்கின்றன. இந்த நாணயங்களின் மீது பொறிக்கப்பெற்ற வடமொழி, கன்னடம், தெலுங்கு, தமிழ் முதலிய எழுத்துகளிலிருந்து அவை வழக்கத்திலிருந்த இடம், விஜயநகரப் பேரரசின் எல்லைகள் முதலியவற்றை நாம் நன்கு உணரக்கூடும். இந்த நாணயங்களே லேன்பூல், நெல்சன் ரைட் ரிச்சாடுபர்ன், ஹுல்ட்ஷ், எலியட் முதலியோர் வரிசைப் படுத்தியுள்ளனர்.

2. இலக்கிய ஆதாரங்கள்

இலக்கிய ஆதாரங்களை உள்நாட்டு இலக்கியங்கள், வெளி நாட்டு இலக்கியங்கள் என இரு வகையாகப் பிரிக்கலாம். உள் நாட்டு இலக்கிய ஆதாரங்கள் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய இந்திய மொழிகளில் எழுதப் பெற்றுள்ளன. இந்த இலக்கியங்கள் பேரறிஞர் S. கிருஷ்ணசுவாமி அய்யங்கார் அவர்களால் தொகுக்கப்பெற்ற 'விஜயநகர வரலாற்று ஆதாரங்கள்' (Sources of Vijayanagar History) என்ற நூலிலும் அறிஞர் N. வெங்கட்டரமணய்யா என்பவரால் மூன்று பகுதிகளாகத் தொகுக்கப் பெற்ற நூல்களிலும் (Further Sources of Vijayanagar History) நாம் காணலாம்.

S. கிருஷ்ணசுவாமி அய்யங்கார் அவர்களால் தொகுக்கப் பெற்ற நூலிலுள்ள வடமொழி வரலாற்று ஆதாரங்கள்

1. மதுரா விஜயம் அல்லது கம்பராய சரிதம்: இந்நூல் குமார கம்பணருடைய மனைவி கங்காதேவி என்ற அரசியால் எழுதப்பெற்றதாகும். இஃது இதிகாசமுறையில் எழுதப்பெற்றுக் குமார கம்பணர் படைவீட்டு இராச்சியத்தை ஆண்ட சம்புவராய மன்னனையும், மதுரையை ஆட்சி புரிந்த சுல்தானையும் வென்று தமிழ்நாட்டில் விஜயநகரப் பேரரசு பரவிய வரலாற்றைக் கூறுவதாகும். இஃது இதிகாச முறையில் எழுதப் பெற்றிருந்த போதிலும் தென்னிந்திய வரலாற்றிற்கு மிக்க துணை செய்யும் வரலாற்று நூலாகும்.

2. சாளுவ அப்யுதயம்: இது வடமொழியில் செய்யுள் வடிவில் சாளுவ நரசிம்மருடைய ஆத்தானகவியாகிய இராஜநாத திண்டிமன் என்பவரால் எழுதப் பெற்றுச் சாளுவ நரசிம்மனின்

முன்னோர்களுடைய வரலாற்றையும், சாளுவ நரசிம்மன் குமார கம்பண உடையார் தமிழ் நாட்டின்மீது படையெடுத்த பொழுது அவருக்குச் செய்த உதவியையும்பற்றித் தெளிவாகக் கூறுகிறது.

3. இராமப்யூதயம்: சாளுவ நரசிம்மனுல் இராமாயண சாரமாக எழுதப்பெற்ற இந் நூல் இவருடைய முன்னோர் வரலாற்றையும், குமார கம்பணருக்குச் செய்த உதவியையும், திருவரங்கம் கோவிலுக்குச் சாளுவ நரசிம்மன் செய்த தான தருமங்களையும் பற்றியதாகும்.

4. பிரபன்னமிர்தம்: அனந்தராயர் என்பவரால் எழுதப் பெற்ற இந்த வடமொழி நூல் திருவரங்கம் கோவிலைப்பற்றிய வரலாறுகும். இந்து அரங்கநாதருடைய உருவச்சிலைக்கு இஸ்லாமியருடைய படையெடுப்பால் ஏற்பட்ட துன்பங்களையும், பின்னர்ச் செஞ்சி ஆளுநராகிய கோபணரியர் என்பவர் செஞ்சியில் இருந்து திருவரங்கத்திற்குச் சென்று அரங்கநாதருடைய உருவச் சிலையை மீண்டும் தாபனம் செய்ததையும் பற்றிக் கூறுகிறது.

5. மாதவ்ய தாது விருத்தி - வேத பாஷ்யம்: இவ் விரண்டு வடமொழி நூல்களும் சாயணச்சாரியாராலும், மாதவ வித்யா ரண்யர் என்பவராலும் முறையே எழுதப் பெற்றன. மாதவ்ய தாது விருத்தியைச் சாயணச்சாரியார், உதயகிரி மகராஜ்ய மகா மண்டலீஸ்வரனும் கம்பராயனுடைய மகனுமாகிய இரண்டாம் சங்கமனுக்கு அர்ப்பணம் செய்துள்ளார்.

வேதபாஷ்யம் என்ற நூல் முதலாம் புக்கராயனுடைய அமைச்சராகிய மாதவ வித்தியாரண்யர் என்பவரைப் பற்றிய தாகும்

6. நாரூர்த்த இரத்தின மாலை: இந்து இரண்டாம் ஹரி ஹரருடைய தாணைத் தலைவராகிய இருகப்பதண்டநாதர் என்பவரால் இயற்றப் பெற்றது. நாராயண விலாசம் என்ற வட மொழி நாடகம் உதயகிரி விருபண்ண உடையாரால் எழுதப் பெற்றுள்ளது. இந் நாடகத்தின் ஆசிரியராகிய விருபண்ண உடையார் தம்மைத் தொண்டை மண்டலம், சோழ, பாண்டிய மண்டலங்களுக்கு ஆளுநர் என்றும், இலங்கை நாட்டை வென்று வெற்றித்தூண் நாட்டியவர் என்றும் கூறியுள்ளார்.

7. கங்காதாச பிரதாப விலாசம்: கங்காதாரன் என்பவரால் இயற்றப்பெற்ற வடமொழி நாடகத்தின் முகவுரையில் இரண்டாம் தேவராயருடைய மகளுகிய மல்லிகார்ச்சுன ராயர்,

பாமினி சுல்தானும் கலிங்க நாட்டு கஜபதியும் விஜயநகரப் பேரரசின்மீது படையெடுத்து வந்த பொழுது அவர்களை எதிர்த்து நின்று எவ்விதம் வெற்றி பெற்றார் என்று விவரிக்கப் பெற்றுள்ளது.

8. அச்சுதராய அப்யுதயம்: இந்த வடமொழி நூல் ராஜ நாத திண்டிமன் III என்ற ஆசிரியரால் இயற்றப் பெற்றதாகும். இந் நூலில் துளுவ வமிசத்துத் தலைவனாகிய நரச நாயக்கருடைய வரலாறும், அவருடைய மக்கள் வீரநரசிம்மன், கிருஷ்ணதேவ ராயர், அச்சுத தேவராயர் முதலிய அரசர்களுடைய பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளோடு அச்சுத தேவராயருடைய ஆட்சியும் மிக விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. அச்சுத தேவராயருடைய ஆட்சியின் பெருமையை முழுவதும் உணர்ந்து கொள்வதற்கு இந் நூல் துணை செய்கிறது. சோழ நாட்டிலும், மைசூர் நாட்டிலும் அச்சுத தேவராயர் அடைந்த வெற்றிகளையும் நாம் உணர்ந்து கொள்வதற்கு ஏற்றதாகும்.

9. வரதாம்பிகா பரிணயம்: இவ் வடமொழி நூல் உரை நடையிட்ட செய்யுள் வகையான சம்பு காவியமாகத் திருமலாம்பாள் என்ற ஆசிரியையால் எழுதப் பெற்றதாகும். துளுவ வமிசத்து நரச நாயக்கருடைய வெற்றிகளையும், நரச நாயக்கருடைய குடும்ப வரலாற்றையும், அச்சுத தேவ ராயருக்கும் வரதாம்பாளுக்கும் நடந்த திருமணத்தைப் பற்றியும் மிக விரிவாகக் கூறுகிறது. அச்சுத தேவனுடைய அமைச்சர் களாகிய சாலகராஜ திருமலைத் தேவர்களுடைய வரலாறும், வேங்கடாத்திரி என்ற அச்சுத தேவராயர் மகனுடைய வரலாறும் கூறப்பெற்றுள்ளன.

10. ஜம்பாவதி கல்யாணம்-துக்க பஞ்சகம்: இந்த வடமொழி நாடகம் பேரரசர் கிருஷ்ண தேவராயரால் எழுதப்பெற்று ஹம்பி விருபாட்சர் ஆலயத்தின் வசந்தோற்சவ நாளில் மக்களுக்கு நடித்துக் காட்டப்பட்டது. துக்க பஞ்சகம் என்ற ஐந்து வட மொழிச் செய்யுள்கள் பிரதாபருத்திர கஜபதி அரசருடைய மகளாகிய துர்க்கா அல்லது ஜெகன்மோகினி என்னும் அரச குமாரியால் எழுதப்பெற்றதெனக் கருதப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் ஜெகன்மோகினியை மணந்துகொண்ட போதிலும் சில எதிர்பாராத ஏதுக்களினால் இவ்வரசி 'கம்பம்' என்னும் இடத்தில் தனித்து வாழ நேர்ந்தது. தன்னுடைய தனிமையை நினைத்து ஆறுதல் அளித்துக்கொள்ள இச் செய்யுள்களை ஜெகன்மோகினி இயற்றியதாக நாம் அறிகிறோம்.

தெலுங்கு நூல்கள்

1. பில்லாலமரி பீனவீரபத்திரர் எழுதிய ஜெய்மினி பாரதம்: இந்த நூல் பீனவீரபத்திரர் என்பவரால் எழுதப்பெற்றுச் சாளுவ நரசிம்மனுக்கு அர்ப்பணம் செய்யப் பெற்றுள்ளது; ராம அபியூதயம் என்னும் நூலைப்போல், சாளுவ நரசிம்மனின் முன்னோனகிய சாளுவமங்கு என்பான் தமிழ்நாட்டை விஜயநகரப் பேரரசோடு இணைத்துக் கொள்வதற்குச் சம்புவாயர்களையும், மதுரைச் சுல்தான்களையும் வென்றடக்கிய செய்திகளைப் பற்றிக் கூறுகிறது; திருவரங்கத்தில் அரங்கநாதப் பெருமானுக்கு அறுபதினாயிரம் மாடப் பொன்களைத் தானம் செய்ததையும் விவரிக்கிறது.

2. ஆசாரிய சுக்தி முக்தாவளி: இது திருவரங்கம் திருக்கோவிலின் வரலாற்றைப் பற்றிக் கூறும் தெலுங்கு நூலாகும். திருவரங்கத்தின் மீது இஸ்லாமியர் படையெழுச்சியையும், அரங்கநாதர் உருவச்சிலையை வைணவர்கள் எவ்விதம் காப்பாற்றினர் என்பதைப் பற்றியும் விரிவாகக் கூறித் தேவராடியார் ஒருத்தி, திருவரங்கக் கோவிலைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய உயிரைத்தியாகம் செய்த வரலாற்றையும் விவரிக்கிறது.

3. ஹரிடாபிராபம்: இது வடமொழியில் எழுதப்பெற்ற பிரேமாபிராமம் என்னும் நூலின் தெலுங்கு மொழிபெயர்ப்பாகும். இரண்டாம் தேவராயர் காலத்தில் வினுகொண்டாக் கோட்டையின் ஆளுநராக இருந்த வினுகொண்டை வல்லபராயர் என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டது. இந்த நூலின் ஏழாவது செய்யுளில் இந்த நூலாசிரியரின் முப்பாட்டன் சந்திரன் என்பார் கர்நாடக அரசன் முதலாம் புக்கராயரிடம் அமைச்சராக அலுவல் பார்த்ததாகக் கூறுவர். வல்லபராயருடைய சிற்றப்பன் லிங்கன் என்பவர் இரண்டாம் ஹரிஹரனுடைய சேனைத் தலைவராக இருந்தார். இந்த லிங்கனுடைய சகோதரனுகிய திப்பன் நவரத்தினக் கருவூலத்திற்குத் தலைவராக அலுவல் பார்த்தார். வல்லபராயர் திரிபுராந்தகர் என்பாருடைய மகன் என்பதும் வினுகொண்டா நிலப்பகுதிக்கு ஆளுநராகவும், நவரத்தினக் கருவூல அதிகாரியாகவும் அலுவல் பார்த்தார் என்பதும் விளங்குகின்றன.

4. இராமராஜ்யமு: இந்த நூல் வெங்கையா என்பவரால் எழுதப் பெற்று ஆரவீட்டுப் புக்க தேவனுடைய மூதாதை சோம தேவராஜா என்பவருடைய செயல்களை விவரித்துக் கூறுகிறது. சோமதேவனுடைய மகன் இராகவேந்திரன்; இவருடைய மகன் ஆரவீட்டு நகரத்தின் தலைவனுகிய தாடபின்னமன்; இவருடைய

மகன் ஆரவீட்டுப்புக்கன் என்பார் சாளுவ நரசிம்மனுடைய சேனைத் தலைவர் என்னும் செய்திகள் இந் நூலில் விளக்கம் பெறுகின்றன.

5. வராக புராணம்: இது நந்தி மல்லியா, கண்ட சிங்கையா என்ற இரண்டு புலவர்கள் சேர்ந்து இயற்றிய தெலுங்குச் செய்யுள் நூலாகும். இது சாளுவ நரசிம்மனுடைய சேனைத் தலைவனுகிய நரசநாயக்கருக்கு அர்ப்பணம் செய்யப் பட்டது. இவ்விரு அரசியல் தலைவர்களுடைய வீரச் செயல்களும், குடிவழி மரபும் இந் நூலில் கூறப்பெற்றுள்ளன. மேலும் நரச நாயக்கர், ஈச்வர நாயக்கருடைய மகன் என்பதும் அவர் உதயகிரி, கண்டிக் கோட்டை, பெனுகொண்டா, பங்களூர், நெல்லூர், பாகூர், நரகொண்டா, ஆமூர், ஸ்ரீரங்கப்பட்டணம் முதலிய இடங்களைத் தம்முடைய வாளின் வன்மையால் பிடித்தார் என்பதும் தெரியவருகின்றன. சாளுவ நரசிம்மருடைய ஆணையின் படி பேதண்ட கோட்டை என்ற பீடார் நகரத்தின் மீது படை யெடுத்துக் கண்டுக்கூர் என்னும் இடத்திற்கருகில் இஸ்லாமியக் குதிரைப் படைகளை வென்று வாகை சூடினார். ஈஸ்வர நாயக்கருடைய மகன் நரச நாயக்கருக்கு வரலட்சுமி கல்யாணம், நரசிம்ம புராணம் என்னும் தெலுங்கு நூல்கள் அர்ப்பணம் செய்யப்பெற்றன. மானுவா, பீடார், மாகூர் முதலிய நாட்டுத் தலைவர்கள் நரச நாயக்கருடைய பெருமையைப் புகழ்ந்துள்ளனர்.

6. நந்தி திம்மண்ணவின் பாரிஜாதாபகரணமு: இத் தெலுங்கு நூல் கிருஷ்ண தேவராயருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. கிருஷ்ண தேவராயருடைய தகப்பன் நரசநாயக்கரும் அவருடைய பாட்டன் ஈஸ்வர நாயக்கரும் புகழ்ந்து பேசப் பெறுகின்றனர். ஈஸ்வர நாயக்கர் இலக்காம்பாள் என்பாளை மணந்து நரச நாயக்கரைப் பெற்றார். இது சாளுவ நரசிம்மருக்கு உதவியாக இருந்து சங்கம வமிசத்து இறுதி அரசனை வென்று, விஜய நகரத்தைக் கைப்பற்றிய சாளுவப் புரட்சியைப் பற்றிக்கூறுகிறது; மாளவிக் என்ற இடத்தில் இஸ்லாமியர்களை வென்றதையும் சோழநாடு, மதுரை, ஸ்ரீரங்கப்பட்டணம் ஆகிய இடங்களை வென்றதையும் குறிப்பிடுகிறது. நரச நாயக்கருக்குத் திப்பாம் பாள், நாகம்மாள் என்ற இரு மனைவியர் இருந்தனர். இவ்விரு மனைமார்களுடைய மக்கள் முறையே வீர நரசிம்மரும், கிருஷ்ண தேவராயரும் ஆவர்.

7. ஆமுக்த மால்யதா: கிருஷ்ண தேவராயரால் எழுதப் பெற்றதாகக் கருதப்பெறும் இந் நூல் இணையற்ற தெலுங்குப் பிரபந்தமாகும். கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற

பொழுது விஜயவாடாவில் சில நாள்கள் தங்கியிருந்த பிறகு ஆந்திர மதுசூதனரைச் சேவிப்பதற்கு ஸ்ரீகாகுளத்திற்குச் சென்று ஏகாதசியன்று விரதமிருந்ததாகவும் அன்றிரவு நான்காவது சாமத்தில், மகாவிஷ்ணு அவருடைய கனவில் தோன்றி ஸ்ரீவில்லி புத்தூர் பெரியாழ்வாருடைய வளர்ப்பு மகளாகிய ஸ்ரீஆண்டாளின் திவ்ய சரிதத்தைத்தெலுங்கு மொழியில் பிரபந்த மாக எழுதும்படி ஆணையிட்டதாகவும் இந் நூலில் கூறப்பட்டு உள்ளது. தமிழினுடைய ஆஸ்தான கவிகள் கூறுகின்ற முறையில் கிருஷ்ண தேவராயர் தம்முடைய வெற்றிகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். கொண்டவீடு என்னுமிடத்திலிருந்து புறப்பட்டு வேங்கி, கோதாவரிநாடு, கனக கிரி, பொட்னூர் முதலிய இடங்களைக் கைப்பற்றிக் கடகம் (Cuttack) என்ற நகரை முற்றுகையிட்டார். பிரதாபருத்ர கஜபதியை வென்று சிம்மாத்திரி-பெட்னூர் என்னு மிடத்தில் வெற்றித்தூண் நிறுவினர். பிரதாப ருத்ர கஜபதியின் உறவினன் ஒருவனையும், அவனுடைய மகன் வீரபத்திரன் என்பவனையும் கொண்டவீடு என்னுமிடத்தில் சிறைப்படுத்தியதும் கூறப் பெற்றுளது. சிம்மாசலத்தில் நரசிம்ம தேவரை வணங்கிய பிறகு வெற்றித்தூண் நிறுவியது மீண்டும் ஒரு முறை கூறப்பெற்றுள்ளது.

8. இராய வாசகமு: இஃது இலக்கண மில்லாத தெலுங்கு மொழியில் விஸ்வநாத நாயக்கர் என்ற ஆளுநருக்கு அவருடைய தாளபதியால் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியைப் பற்றி எழுதப் பெற்ற நூலாகும். கிருஷ்ண தேவராயர் சிவ சமுத்திரத்தை ஆண்ட உம்மத்தூர்த் தலைவனை வென்ற பின்னர், ஸ்ரீரங்கபட்டணத்தில் கோவில் கொண்டுள்ள ஆதிரங்க நாயகரை வணங்கி இக்கேரி வழியாக, இராய்ச்சூர், முதுகல்ஆதங்கி, அதவானி (Adoni) முதலிய இடங்களுக்குச் சென்று அவற்றைக் கைப்பற்றினர். பின்னர் பீஜப்பூர், கோல்கொண்டா, பீடார் ஆகிய மூன்று நாட்டுச் சுல்தான்களோடு கிருஷ்ணா நதிக்கரையில் நடந்த போரில் வெற்றி பெற்றுக் கிருஷ்ணா நதியைக் கடந்து பிரதாபருத்திர கஜபதியையும், அவருடைய பதினாறு மகாபத்திரர்களையும் போரில் வென்று, சிம்மாத்திரியில் வெற்றித்தூண் நாட்டிப் பின்னர்க் கஜபதி அரசருடன் சமாதானம் செய்து கொண்டதைப் பற்றியும் இந் நூலில் கூறப்பெற்றுள்ளது.

9. வித்யாரண்ய கால ஞானம் - வித்யாரண்ய விருத்தாந்தம்: இவ் விரண்டு தெலுங்கு நூல்களும் பின்னர் நடக்கப் போவதை முன்கூட்டியே ஆருடம் சொல்வதைப் போன்று விஜயநகர அரசர்களுடைய வரன்முறையைப் பற்றிக் கூறுகின்றன. கல்வெட்டு

களிலும், செப்பேடுகளிலும் கூறப்பெற்ற பல வரலாற்றுச் செய்திகள் இவற்றுள் விளக்கம் பெறுகின்றன.

10. கர்னல் மெக்கன்சி என்பவரால் சேகரிக்கப்பட்ட மெகன்ஸி கையெழுத்துப் பிரதிகள் கிராமிய கவுல்கள் என்றும், கைபீதுகள் என்றும் பெயர் பெறுகின்றன. இவற்றில் விஜயநகர வரலாற்றைப் பற்றிய அரசியல், சமய, சமூக, பொருளாதாரச் செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

தமிழ் - கன்னட இலக்கிய வரலாற்று ஆதாரங்கள்

1. மதுரைத் தலவரலாறு : இந்த் நூல் இலக்கியமல்லாத கொச்சைத் தமிழில் எழுதப்பெற்று உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டிய அரசன் காலம் முதற்கொண்டு கி.பி. 1800ஆம் ஆண்டு வரையில் மதுரையை ஆண்ட அரசர்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது. மதுரையில் சுல்தான்களுடைய ஆட்சியைப் பற்றியும், குமார கம்பணன் எவ்வாறு சுல்தான் களிடமிருந்து கைப்பற்றிக் கோவில்களையும் மக்களையும் ஆட்சி புரிந்தான் என்பதைப் பற்றியும் கூறுகிறது. பின்னர் விஸ்வநாத நாயக்கர் மதுரையில் ஆட்சி மேற்கொண்ட காலத்திற்குமுன் விஜயநகர மகா மண்டலீச்வரர்களின் பெயர்களையும், அவர் களுடைய ஆட்சி ஆண்டுகளையும் பிரபவாதி ஆண்டுகளிலும், சகாப்தத்திலும் தொகுத்துரைக்கின்றது. தமிழில் எழுதப்பெற்ற இச் சிறு நூலைத் திரு. சத்தியநாதய்யர் தாம் எழுதிய 'மதுரை நாயக்கர் வரலா'ற்றில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதி யுள்ளார். இது தமிழ்நாட்டில் விஜயநகர வரலாற்றை எழுது வதற்கு மிகவும் பயன்தரும் நூலாகும்.

2. கோயிலொழுகு : இத் தமிழ்நூல் திருவரங்கக் கோவிலின் வரலாற்றைப் பற்றி மணிப்பிரவாள நடையில் எழுதப்பெற்ற தாகும். இந்த் நூலில் திருவரங்கப் பெருங்கோவில் இஸ்லாமியப் படையெடுப்பால் எவ்வித இன்னல்கள் அடைந்தது என்பதைப் பற்றியும் அரங்கநாதருடைய உருவச்சிலையை இஸ்லாமியர்க ளிடமிருந்து காப்பாற்றுவதற்கு வைணவத் தலைவர்கள் மேற் கொண்ட முயற்சிகளைப் பற்றியும் கூறுகிறது. பிள்ளை லோகாச் சாரியார், வேதாந்ததேசிகர் முதலியோர் வைணவ சமயத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சிகளையும் நாம் இதனால் அறியக் கூடும்.

3. கொங்குதேச ராசாக்கள் - கொங்கு மண்டல சதகம் : இந்த இரண்டு தமிழ் நூல்களும் கொங்கு நாட்டை ஆண்ட அரசர்களைப் பற்றிக் கூறும் நூல்களாகும். இவை கொங்கு நாட்டைக் குமார

கம்பணன் வென்று விஜயநகர அரசை நிலைநாட்டிய பிறகு துளுவ வமிசத்துச் சதாசிவராயர் ஆட்சி வரையில் கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்த விஜயநகர மகா மண்டலீச்வரர்களைப் பற்றியும், பேரரசர்களைப் பற்றியும் விவரித்துக் கூறுவதோடு அக் காலத்திய சமய, சமூகப் பொருளாதார நிலைகளைப் பற்றியும் கூறுகின்றன.

4. **கர்நாடக ராஜாக்கள் - சவிஸ்தார சரிதம்:** இந்த வரலாற்று நூல் டெய்லர் (Taylor) என்பவர் சேகரித்த 'கேட்டலாக் ரெய்சான்' (Catalogue Raisonne) என்னும் தொகுப்பில் மூன்றாவது பகுதியில் உள்ளதாகும். இது நாராயணக்கோனூர் என்பவரால் எழுதப்பெற்றுச் செஞ்சிக் கோட்டையின் வரலாற்றைக் கூறுவதாகும். இந் நூலின்படி தொண்டை மண்டலத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குக் கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்தில் வையப்ப நாயக்கர், துப்பாக்கிக் கிருஷ்ணப்ப நாயக்கர், விஜயராகவ நாயக்கர், வெங்கடப்ப நாயக்கர் என்ற நான்கு தலைவர்களின்கீழ்ப் பதினாயிரம் வீரர்கள் கொண்ட பெருஞ்சேனையொன்று அனுப்பப்பட்டது என்பதும், இத் தலைவர்கள் தமிழ்நாட்டைச் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை என்ற மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்து மூன்று நாயக்கத் தானங்கள் அமைத்தனர் என்பதும் தெரிய வருகின்றன.

மேலேகூறப்பெற்றவையன்றியும், தனிப்பாடல்திரட்டு என்ற நூலில் காணப்பெறும் சிறு வெண்பாக்களும். ஹரிதாசர் இயற்றிய இரு சமய விளக்கம் என்னும் நூலும், இரட்டைப் புலவர்களால் இயற்றப்பெற்ற ஏகாம்பர நாதருலாவும், வில்லிபுத்தூராழ்வாருடைய பாரதமும், இராமப்பய்யன் அம்மானை என்ற பிரபந்தமும் விஜயநகர வரலாற்றுதாரங்களாகக் கருதப் பெறுகின்றன. மு. இராகவய்யங்காரால் தொகுக்கப்பெற்ற சாசனத் தமிழ்க்கவிச் சரிதம் என்னும் நூலும் மிக்க உதவியாக உள்ளது.

கேலடி நிருப விஜயம் என்னும் கன்னட நூல், செய்யுளும் உரைநடையும் கலந்து லிங்கண்ண என்பவரால் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப் பெற்றதாகும். இஃது இக்கேரி அல்லது பெட்னூர் நாயக்கர்களுடைய வரலாற்றையும் கர்நாடகப் பிரதேசத்தில் பீஜப்பூர் சுல்தான்களுடைய ஆட்சி பரவிய வரலாற்றையும் கூறுகிறது. இந் நூல் மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வில்லை. வேலு கோட்டி வாரி வம்சாவளி, குமார ரமணகாதை, வைத்யராஜ வல்லபம், சங்கீத சூர்யோதயம், சரஸ்வதி விலாசம் என்ற நூல்களும் விஜயநகர வரலாற்றிற்குத் துணைசெய்கின்றன.

இஸ்லாமிய வரலாற்று நூல்கள்

விஜயநகர வரலாற்றோடு மிகவும் தொடர்புடையது பாமினி இராச்சியத்தின் வரலாறு ஆகும். இவ் விரண்டு அரசுகளின் வரலாறுகளைத் தக்காண - தென்னிந்திய வரலாறு எனக் கூறுவது பொருத்தமாகும். பாமினி இராச்சியத்தின் வரலாற்றைப் பற்றி இஸ்ஸாமி (Isami) என்பவர் எழுதிய 'ஃபூட்டு-ஸ்-சலாட்டின்' (Futuh-us-Salatin) பாரசீகமொழியில் எழுதப்பெற்றுள்ளது. கி.பி. 1327ஆம் ஆண்டில் தம்முடைய தகப்பன் சிப்பாசலார் இஸ்ஸாமி என்பவருடன் டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு (தேவகிரி) வந்து முதல் பாமினி சுல்தானுகிய அலாவுதீன்ஹாசன் கங்கு பாமினியிடம் அலுவலில் அமர்ந்தார். 1358ஆம் ஆண்டில் தம்முடைய வரலாற்று நூலை எழுதத் தொடங்கி இரண்டு ஆண்டு களுக்குள் அதை முடித்தார். பர்தூசி (Firdusi) என்பவர் பாரசீக மொழியில் இயற்றிய 'ஷாநாமா' (Shah-nama) என்ற நூல் அமைப்பைப் பின்பற்றி டெல்லி சுல்தானிய வரலற்றை முகம்மது-பின்-துக்ளக்கின் ஆட்சியாண்டு வரையில் எழுதியுள்ளார். தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் முகம்மது துக்ளக்கின் ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணங்களை விளக்கி பாமினி இராஜ்யம் தோன்றிய வரலாற்றை விவரித்துள்ளார். தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் இஸ்லாமிய ஆட்சி பரவியதன் தன்மையையும், முதல் பாமினி சுல்தானுடைய குண நலன்களையும் செயல்களையும் பற்றி இந் நூலிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

புர்ஹானி மாசிர் (Burhani Maasir): இந் நூல் அலிபின் அஜீஸ்-உல்லா டபடாபா (Ali-Bin-Azizullah Taba-Taba) என்பவரால் எழுதப்பெற்றது. ஆசிரியர் இராக் நாட்டில் சிம்மின் என்ற இடத்தில் பிறந்தவர்; கோல்கொண்டா குத்ப் ஷாகி அரசர்களிடம் முதலில் அலுவல் பார்த்து 1580இல் நால் துர்க்கம் என்ற கோட்டை முற்றுகையில் போர்த் தொழிலில் ஈடுபட்டார்; பின்னர் ஆமது நகரத்து நைசாம் ஷாஹி அரசர் களுடைய அரசியலில் பங்கு கொண்டார்; இரண்டாவது புர்ஹான் நைசாம்ஷாவின் ஆட்சியில் புர்ஹானி-மா-சீர் என்ற வர லாற்று நூலை எழுதத் தொடங்கினர். இந் நூல் குல்பர்காவிலும், பீடாரிலும் ஆண்ட பாமினி அரசர்களுடைய வரலாற்றையும், ஆமது நகரத்து நைசாம் ஷாஹியருடைய வரலாற்றையும் 1596ஆம் ஆண்டு வரையில் விவரிக்கிறது. ஜே. எஸ் கிங் (J. S. King) என்பவர் இந் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார். இவர் விஜயநகரப் பேரரசிற்கும், பாமினி இராஜ்

யத்திற்கும் நடைபெற்ற போர்களை இஸ்லாமிய சமயத்தவர்க்கும், இந்துக்களுக்கும் நடைபெற்ற போர்களாகக் கருதியுள்ளார். விஜயநகரத்தரசர்கள் பாமினி சுல்தானுக்கு அடங்கிக் கப்பங் கட்டியவர்கள் என்றும் 'நரகத்தில் இடம் பிடித்துக் கொள் வதற்குத் தகுதியுள்ளவர்கள்' என்றும் இவர் கூறுவார். 1487ஆம் ஆண்டில் மூன்றாவது பாமினி சுல்தான் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்ததை இவர் மிகைபடக் கூறியுள்ளார். ஆனால், பெரிஷ் டாவைப் போலப் பல நம்பத்தகாத செய்திகளைக் கூறவில்லை.

பெரிஷ்டாவின் வரலாற்று நூல்: முகம்மது காசிம் பெரிஷ் டாவின் இவ் வரலாற்று நூலில் பல குறைகள் இருந்த போதிலும், மற்ற வரலாறுகளுடன் ஒப்பிடும் பொழுது இதனுடைய சிறப்பு விளக்க முறுகிறது. பாரசீக நாட்டில் பிறந்த பெரிஷ்டா தம்முடைய 12ஆவது வயதில் தம்முடைய தகப்பனுடன் 1582ஆம் ஆண்டில் ஆமது நகரத்திற்கு வந்துசேர்ந்தார். இவருடைய தகப்பன் ஆமது நகரத்து இளவரசன் ஒருவனுக்கு ஆசிரியராக அலுவல் பார்த்தார். தம் தகப்பன் இறந்த பிறகு, பெரிஷ்டா ஆமது நகரத்துச் சேனையில் சேர்ந்து போர்த் தொழிலில் ஈடுபட்டார். ஷியா வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம் என்ற காரணத்தினால் ஆமது நகரத்தை விட்டுப் பீஜப்பூர் சுல்தானிடம் அலுவல் பார்த்தார். பின்னர் வாளெடுத்துப் போர் புரிவதை விட்டு வரலாற்று ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். பீஜப்பூரில் இப்ராஹிம் அடில்ஷாவும், ஷா நவாஸ்கான் என்பவரும் பெரிஷ்டாவிற்கு ஊக்கமளித்து இந்த வரலாற்று நூலை எழுதும்படி செய்தனர்.

கி.பி. 1606ஆம் ஆண்டிலும் 1610ஆம் ஆண்டிலும் முடிவு பெற்று இரு வேறு முறையில் பெரிஷ்டாவின் வரலாற்று நூல் காணப்படுகிறது. இவ் விரண்டு நூல்களிலும் பிற்சேர்க்கைகள் அதிகமாகக் காணப்பெறுகின்றன. 1831ஆம் ஆண்டில் மேஜர் ஜெனரல் பிரிக்ஸ் (Briggs) இந் நூல்களுள் ஒன்றில் சில செய்தி களைக் குறைத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தார். ஸ்காட் (Scott) என்பவரும் இதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

டபடாபா, பெரிஷ்டா ஆகிய இருவருடைய வரலாற்று நூல்களும் தக்காணத்துப் பாமினி அரசர்களுக்கும், விஜயநகர மன்னர்களுக்கும் இடையே நிலவிய அரசியல் உறவுகளை விவரிக் கின்றன. சுமார் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட வரலாற்று நூல்களை ஆராய்ச்சி செய்தும் இருபதுக்கு மேற்பட்ட ஆதாரங்களைக் கொண்டும் தம்முடைய நூலை எழுதியதாகப்

பெரிஷ்டா கூறுவார். இவர் இஸ்லாமிய சமயத்திலும் இஸ்லாமிய அரசர்களிடமும் மிகுந்த பற்றுள்ளவராகையால் இவ் விரண்டின் பெருமைகளை மிகுத்துக் கூறுவதிலேயே தம்முடைய கவனத்தைச் செலுத்தியுள்ளார். வரலாற்றில் உண்மையைக் கூறுவதே தம்முடைய நோக்கமென இவர் கூறிய போதிலும் பாமினி சுல்தான்களுடைய குறைகளை மறைத்து, நிறைகளை மாத்திரம் போற்றியுள்ளார். இந்திய - தக்காண - இஸ்லாமிய அரசர்களின் செயல்களைப் புகழ்ந்து பேசுவதில் இவர் சமர்த்தர். விஜயநகர மன்னர்கள் பாமினி சுல்தான்களுக்கு அடங்கி ஆட்சி செய்து கப்பம் கட்டியவர்கள் என்றும் இஸ்லாமிய சமயத்தை ஆதரிக்காது, உருவ வணக்கம் செய்து நரகத்திற்குச் செல் வதையே தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும் இவர் கூறுவார். பாரபட்சமின்றி உண்மையைக் கூறும் வழக்கத்தைக் கைவிட்டு ஒருதலைப்பட்சமாகவே இவர் எழுதியுள்ளார். ஆயினும், மற்ற இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களுடன் ஒப்பிடும் பொழுது பெரிஷ்டாவின் வரலாற்றுணர்வு சிறந்ததெனத் தெரிகிறது. தென்னிந்தியாவின் நில அமைப்பைப் பற்றியும் இடங்களின் பெயர்களையும், இன்னூர்தாம் அரசுரிமை வகித்தவர்கள் என்பதையும் இவர் நூலால் அறியக்கூடவில்லை. விஜயநகரத்து மன்னர்களைச் சேனைத் தலைவர்களாகவும், சேனைத் தலைவர்களை மன்னர்களாகவும் பாவித்து வரலாற்றைக் குழப்பியுள்ளார். விஜயநகரத்துப் புக்கராயனைக் கிருஷ்ணதேவராயர் என்று கூறிக் கிருஷ்ண தேவராயருடைய பெருமையைக் கூறுதுவிடுத்துள்ளார். டபடாபாவின் வரலாறும், பெரிஷ்டாவின் வரலாறும் ஒன்றற் கொன்று உதவியாக உள்ளன.

அயல்நாட்டு வரலாற்றாசிரியர்கள் - வழிப்போக்கர்கள்

மேல் நாடுகளிலிருந்து இந்தியாவிற்குப் போந்த வரலாற்று ஆசிரியர்களுள் முக்கியமானவர் மொராக்கோ நாட்டிலிருந்து வந்த இபன்பதூதா என்பவராவர் (1304-78). இபன்பதூதா சமய நூல்களிலும், நீதி நூல்களிலும் பேரறிஞராகத் திகழ்ந் தார். இவர் மற்ற வழிப்போக்கர்களைவிட வரலாற்றுண்மைகளைக் கூர்ந்தறிவதில் மிகுந்த சமர்த்தர்; தென்னிந்தியாவின் துறை முகங்கள், வியாபாரப் பொருள்கள், மக்களுடைய பழக்க வழக்கங்கள் முதலியவற்றைத் தெளிவாக எடுத்துக் கூறுவதில் வல்லவர்; மதுரைச் சுல்தான்களுடைய ஆட்சியைப் பற்றிப் பல உண்மைகளைக் கூறியுள்ளார்.

1443ஆம் ஆண்டில், ஹீராத் நகரத்திலிருந்து தைமூர் மன்னனுடைய மகனுகிய ஷாருக் என்பவரால் கள்வித்

கோட்டையில் அரசாண்ட சாமோரினுக்குத் தூதுவராக அப்துர் ரசாக் அனுப்பப்பட்டார். இரண்டாம் தேவராயர் இவரை விஜயநகரத்திற்கு அனுப்பி வைக்கும்படி சாமோரினுக்கு உத்தரவிட, அவரும் மங்களூர், பேலூர் முதலிய இடங்களைக் கடந்து 1443ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் விஜயநகரத்திற்கு வந்தார். விஜயநகரம் அமைந்திருந்ததைப்பற்றி அவருடைய கூற்றுகள் வியக்கத்தக்கனவாகும். 'நான் இதுவரையில் இந்த நகரத்தைப் போல வேறு ஒரு நகரத்தைக் கண்களால் பார்த்ததுமில்லை; செவிகளால் கேட்டதுமில்லை. ஏழு மதில்களால் சூழப்பட்ட பெரிய நகரமாக விஜயநகரம் விளங்குகிறது' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மகாநவமி அல்லது தசரா உற்சவத்தை நேரில் கண்டு விவரித்துள்ளார். அரசனுடைய மட்டற்ற அதிகாரத்தையும், அரசன் அந்தணர்களிடம் வைத்திருந்த அன்பையும் மிகைபடக் கூறியுள்ளார். விஜயநகரத்தின் மக்கள் வாழ்க்கையையும், இயற்கையமைப்பையும், அரசியல் முறையில் சில பகுதிகளையும் பற்றி இவர் எழுதியுள்ளமை போற்றத்தக்கதாகும். ஆர்மூஸ் நகரத்தில் இருந்து விஜயநகரத்திற்கு வந்து வாழ்ந்த சில வியாபாரிகள் அப்துர் ரசாக்கின் மீது பொறுமை கொண்டு விஜயநகரத்தரசரிடம் கோள்மூட்டியதால் இவர் அந்நகரத்தை விட்டு அகல வேண்டியதாயிற்று. 1443ஆண்டில் விஜயநகரத்திலிருந்து மங்களூருக்குச் சென்று, பின்னர் அடுத்த ஆண்டில் அங்கிருந்து பாரசீகத்திற்குச் சென்றார். R. H. மேஜர் என்பவர் எழுதிய '15ஆம் நூற்றாண்டில் இந்தியா' என்ற நூலிலிருந்து அப்துர்ரசாக் எழுதிய குறிப்புகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

விஜயநகரம் தோன்றிய சில ஆண்டுகளுக்குமுன் தென்னிந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்களில் முக்கியமானவர் ஃபரயர் ஓடரிக் போர்டினூன் (Friar Odoric of Pordenone) என்பவராவர்.

கி.பி. 1321ஆம் ஆண்டு இந்திய நாட்டிற்கு வந்த இவர் மலையாளக் கடற்கரையோரமாகப் பிரயாணம் செய்து, இலங்கைத் தீவைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்னையில் மயிலாப்பூரில் அமைந்துள்ள சான்தோம் பகுதிக்கும் வந்தார்; இந்திய மக்களுடைய பழக்க வழக்கங்களை நேரில் கண்டவாறு எழுதியுள்ளார்.

விஜயநகரப் பேரரசு அமைவுற்றுச் சிறப்படைந்த காலத்தில், போர்த்துக்கல் நாட்டினரும் இந்தியாவிற்கு வியாபாரத்தை நாடி வந்தனர். அவர்களைப் பின்பற்றிப் பல போர்த்துகீசியர், இத்தாலியர் முதலியோர் தென்னிந்தியாவிற்கு வந்தனர்.

அவர்களுள் 1420-21ஆம் ஆண்டுகளில் முதலாம் தேவராயர் காலத்தில் நிக்கோலோ காண்டி (Nicholo-Condi) என்ற இத்தாலியர்முக்கியமானவர். இத்தாலியில் இருந்த செல்வர்களின் குடும்பத்தைச் சேர்ந்த இவர், டமாஸ்கஸ் (Damuscus) நகரத்தில் தங்கியிருந்து, பாரசீகம், தென்னிந்தியா, இலங்கை, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளில் பிரயாணம் செய்தார். இருபத்தைந்து ஆண்டுகள் வரையில் வெளிநாடுகளில் தங்கியிருந்து, பின்னர் 1444ஆம் ஆண்டு வெனிஸ் நகரத்திற்குத் திரும்பினார். தம்முடைய பிரயாணக் குறிப்புகளைப் போப்பாண்டவரின் காரியதரிசிக்குக் குறிப்பிட்டு அனுப்ப, அவர் அக் குறிப்புகளை இலத்தீன் மொழியில் எழுதி வைத்திருந்தார். அக் குறிப்புகளில் நிகோலோ காண்டி கம்பேயா துறைமுகத்தைப் பற்றியும், விஜயநகரத்தில் கிடைத்த நவரத்தினங்கள், மக்கள் பின்பற்றிய சககமனம், உற்சவங்கள், வியாபாரம், நாணயங்கள் முதலியவற்றைப்பற்றியும் குறித்துள்ளார்; சென்னையில் செயின்ட் தாமஸின் உடல் அடக்கமான இடத்தைப் பற்றியும் எழுதியுள்ளார்.

அதேனேஷியஸ் நிகிடின் என்ற இரஷ்ய நாட்டு வியாபாரி 1470ஆம் ஆண்டிலிருந்து சில ஆண்டுகள் வரையில் தக்காணத்தில் தங்கியிருந்தார். செளல் என்ற துறைமுகத்தில் இறங்கிப் பாமினி இராஜ்யத்தில் பிரயாணம் செய்து, பீடார் நகரத்தில் பாமினி அரசர்களுடைய அரசவை, சேனை, மக்கள்நிலைமை முதலியவற்றை விவரித்துள்ளார்; விஜயநகரத்தைப் பற்றியும் தாம் கேள்விப் பட்டவற்றை எழுதியுள்ளார். பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வீரநரசிம்மர், கிருஷ்ணதேவராயர், இராம ராயர் முதலிய பேரரசர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் தென்னிந்தியாவில் போர்த்துக்கீசியர்கள் தங்களுடைய வியாபார ஆதிக்கத்தை நிலைநாட்டினர். இதனால், போர்த்துக்கீசிய வியாபாரிகளும், கிறிஸ்துவ சமயப் போதகர்களும் விஜயநகரப் பேரரசில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை உண்டாயிற்று. போலோனை நகரத்து வார்த்திமா (Varthema) என்னும் பிரமுகர் 1502 முதல் 1508ஆம் ஆண்டு வரையில் இந்தியாவில் பிரயாணம் செய்து தம்முடைய அனுபவங்களைத் தெளிவாக எழுதியுள்ளார். கோவா, கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களைப் பற்றியும், விஜயநகரம், விஜயநகரப் பேரரசு முதலியவற்றைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ள செய்திகள் வரவேற்கத் தக்கனவாகும். 1510ஆம் ஆண்டில் ஆல்புகர்க் என்பவரால் கிருஷ்ண தேவ ராயருடைய சபைக்குத் தூதுவராக அனுப்பப் பெற்ற லூயி (Luies) என்ற சமய போதகர் கிருஷ்ண தேவராயருடைய அரசியல் தந்திரங்களைப் பற்றி எழுதியுள்ளார். 1500முதல் 1516-ஆம் ஆண்டு வரையில்

இந்தியாவில் வியாபாரத்தின் பொருட்டு வந்த துவார்த்தே பார் போசா (Duarte Barbosa) 1502ஆம் ஆண்டு கண்ணனூர்ப் பண்ட சாலையில் வியாபாரியாகவும், துபாஷியாகவும் அலுவல் பார்த் தார். பார்போசா எழுதிய குறிப்புகள் விஜயநகரப் பேரரசின் சமூக நிலைமையைப் பற்றியதும், மக்கள் வாழ்க்கையைப் பற்றியதும் ஆகும். துவார்த்தே பார் போசாவின் குறிப்புகள் லாங்வொர்த் டேம்ஸ் என்பவரால் இருபகுதிகளாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

மேலே கூறப்பெற்றவையன்றியும் இராபர்ட் சிவெல் எழுதிய 'மறைந்த பேரரசு' (A Forgotten Empire) என்ற நூலில் போர்த்துக்கீசிய மொழியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டதும் டாமிங்கோஸ் பீயஸ் (Domingos Paes), பெர்ஞே நூனிஸ் (Fernao Nuniz) என்ற இருவராலும் எழுதப்பெற்றதுமாகிய வரலாறுகள் விஜயநகர வரலாற்றை எழுதுவதற்கு மிக்க துணைசெய்கின்றன. இவ் விரண்டு வரலாற்றுக் குறிப்புகளையும், பெரிஷ்டாவின் நூலை யும் கொண்டு இராபர்ட் சிவெல் தம்முடைய 'மறைந்தபேரரசு' என்ற முதனூலை எழுதியுள்ளார். பின்னர் விஜயநகரத்தைப்பற்றி ஆராய்ச்சி நூல்கள் எழுதிய S. கிருஷ்ணசுவாமி அய்யங்கார் அவர்கள், ஹீராஸ் பாதிரியார், வெங்கட்டரமணய்யா முதலியோர் இவ் விருவருடைய கூற்றுகளை மறுத்தும் ஒப்புக்கொண்டும் தங்களுடைய ஆராய்ச்சிகளை எழுதியுள்ளனர். பீயஸ் எழுதிய குறிப்புகள் கிருஷ்ண தேவராயருடைய வாழ்க்கை, தோற்றம், வெற்றிகள், நற்குணங்கள், பண்புகள் முதலியவற்றைப்பற்றி நேரில் கண்டவாறு எழுதப்பெற்றன. விஜயநகரத்தின் அமைப்பு, கோவில்கள், அரண்மனைகள், அரசவை, காரியாலயங்கள் முதலிய வற்றை நாம் நேரில் காண்பதுபோல் வரிவடிவில் காணமுடிகிறது. நூனிஸ் என்பவர் எழுதிய விஜயநகர வரலாற்றில் விஜயநகரம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த இஸ்லாமியப் படை யெடுப்புகள், சங்கமவமிசத்தின் தோற்றம், மாதவாச்சாரியின் பேருதவி, சாளுவ நரசிம்மன், நரசநாயக்கர், கிருஷ்ணதேவராயர் முதலிய அரசர்களின் பெருமைகள் முதலியவை தெற்றென விளங்குகின்றன. 1565ஆம் ஆண்டில் நடந்த தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு விஜயநகரத்திற்கு வந்த சீசர் பிரடெரிக் என்ற போர்த்துக்கீசியர் அழிந்த நிலையில் இருந்த விஜயநகரத்தின் பெருமையைப் பேசியுள்ளார். மேற்கூறப்பெற்ற ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த நூல் எழுதப் பெறுகிறது.

2. விஜயநகர அரசு தோன்றுவதற்குரிய அரசியல் சூழ்நிலை

தென்னிந்திய வரலாற்றில் 1336ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்ற விஜயநகரமும், அதனைச் சார்ந்த பேரரசும் தென்னிந்திய சமயங்கள், கோவில்கள் மற்றக் கலாசாரங்கள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்காக ஏற்பட்டதெனப் பல வரலாற்று அறிஞர்கள் கூறுவர். தென்னிந்திய அரசுகளுக்கும், சமூகத்திற்கும் எவ்விதத் துன்பங்கள் ஏற்பட்டன என்றும் நாம் உணர்ந்து கொள்ளுவது அவசியமாகும். விஜயநகரமும் அதைச் சார்ந்த பேரரசும் அமைவுறுவதற்குமுன் துங்கபத்திரை நதிக்கு வடக்கே விந்திய மலைகள் வரையில் இந்தியாவின் மேற்குப் பகுதியில் தேவகிரியைத் தலைநகராகக் கொண்டு யாதவர்கள் என்ற மராட்டியத் தலைவர்கள் ஆட்சி செய்து வந்தனர். தக்காணத்தின் கிழக்குப் பகுதியில் வாரங்கல் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு காக தீயர்கள் ஆட்சி செலுத்தினர். தேவகிரியில் யாதவத் தலைவனுகிய இராமச்சந்திர தேவனும், வாரங்கல்லில் இரண்டாம் பிரதாபருத்திரதேவனும் ஆட்சி புரிந்தனர். துங்கபத்திரை நதிக்குத் தெற்கே துவாரசமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஹொய்சள வமிசத்து அரசர்களும், கிழக்குப் பகுதியில் மதுரை வீரதவளப்பட்டணம் முதலிய தலைமை நகரங்களில் பாண்டிய அரசர்களும் ஆட்சி செலுத்தினர். இந்த நான்கு அரசர்களும் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொண்டு ஒற்றுமையின்றி இருந்தமையாலும், தகுந்த முறையில் தங்களுடைய நாடுகளைப் பாதுகாக்கத் தவறியமையாலும் வடக்கே டெல்லி நகரத்தைக் கைப்பற்றி ஒரு சுல்தானியப் பேரரசை நிலைநாட்டிய இஸ்லாமியர் களுடைய படையெடுப்புகளுக்கு ஆளாகவேண்டியவர்களாயினர்.

கி.பி. 1296ஆம் ஆண்டு அலாவுதீன் கில்ஜி தேவகிரியின்மீது படையெடுத்து, இராமச்சந்திர தேவனுடைய செல்வங்களை யெல்லாம் கொள்ளைகொண்டு, பின்னர் டெல்லி சுல்தானுகப் பதவி ஏற்றார். 1309ஆம் ஆண்டில் தம்முடைய சேனைத்தலைவர் மாலிக்கபூர் என்பவரைப் பெரியதொரு சேனையுடன் அனுப்பி, வாரங்கல் நாட்டைக் கொள்ளையடிக்கும்படி ஆணையிட்டார். இரண்டு ஆண்டுகள் கழித்து 1311இல் ஹொய்சள நாட்டுத்


நான்கு அரசுகள்
தேவகிரி, வாரங்கல்
துவாரசமுத்திரம்
மதுரை
நர்மதை
கிருஷ்ணா
எலிச்பூர்
தேவகிரி
யாதவர்களின் அரசு
தேவகிரி
கோதாவரி
வாரங்கல்
காகதீய அரசு
வேங்கி
கிருஷ்ணா
வீஜயநகரம்
ஹொய்சள அரசு
துவாரசமுத்திரம்
சென்னை
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
கஞ்சை
திருச்சி
பாண்டிய நாடு
மதுரை
திருவாங்கூர்
திருவனந்தபுரம்
இந்துப் பேராழி
இலங்கை
7°6
8°0
8°4
20
16
12
8
84

படம்—1

தலைநகராகிய துவாரசமுத்திரமும் அதே துன்பத்திற்குள்ளாகியது. துவாரசமுத்திரத்தில் சிலகாலம் தங்கி, ஓய்வெடுத்துக் கொண்டு பின்னர்ப் பாண்டிய நாட்டின்மீதும் மாலிக்கபூர் படையெடுத்தார். அச் சமயத்தில் மாறவர்மன் குலசேகர பாண்டியனுடைய மக்களாகிய சுந்தர பாண்டியனும், வீரபாண்டியனும் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருந்தனர். வீரதவளப்பட்டணம் அல்லது உய்யக்கொண்டான் திருமலை என்னும் ஊர் வீரபாண்டியனுடைய தலைநகரமாக இருந்தது. இதையே இஸ்லாமிய வரலாற்றுசிரியர்கள் பீர்துல் (Birdhul) என்றழைத்துள்ளனர். துவாரசமுத்திரத்திலிருந்து திருச்சிக் கருகிலுள்ள வீரதவளப்பட்டணத்திற்குச் செல்லும் வழியில் பல இந்துக்கோவில்களையும் மாலிக்கபூர் கொள்ளையடித்ததாகத் தெரிகிறது. பரானி, வாசாப் என்ற இரண்டு வரலாற்று ஆசிரியர்கள் பிரம்மாஸ்திபூர் அல்லது மரகதபுரி என்ற இடத்திலிருந்த கோவிலைக் கொள்ளை அடித்ததாகக் கூறுவர். இந்த மரகதபுரியைச் சில வரலாற்றுசிரியர்கள் காஞ்சிபுரம் என்றும், அல்லது சீர்காழி, சிதம்பரம் ஆகிய இடங்களாக இருக்கவேண்டும் என்றும் கருதினர். ஆனால், இந்த இடம் வேலூருக்கு மேற்கே பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள விரிஞ்சிபுரம் ஆகும். 'விரிஞ்சன்' என்னும் சொல் பிரம்மன் என்ற பொருளில் வந்து பிரம்மபுரி என்றாகும். இந்தத் தலத்துச் சுவாமிக்குப் பிரம்மபுரீசர் என்றும், அம்மனுக்கு மரகதாம்பாள் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. ஆகையால்தான் இவ் வூருக்குப் பிரம்மாஸ்திபுரி அல்லது மரகதபுரி என்ற பெயர்கள் வழங்கின. திருவரங்கம், திருவானைக்கா, கண்ணனூர் முதலிய இடங்களில் இருந்த கோவில்களும் கொள்ளையடிக்கப் பெற்றன. கோயிலொழுகு என்னும் நூலில் கூறப்பட்டபடி ஸ்ரீரங்கநாதருடைய உருவச் சிலையையும் மாலிக்கபூர், எடுத்துச் சென்றதாக நாம் அறிகிறோம். சுந்தர பாண்டியனைத் தோற்கடிப்பதற்காக மதுரையை நோக்கிச் சென்ற மாலிக்கபூர், அந்தக் கோவிலையும் கொள்ளையடித்ததாகவும் தெரிகிறது. அலாவுதீன் கில்ஜிக்குப் பிறகு சுல்தான் பதவி வகித்த முபராக்ஷா ஆட்சியில் குஸ்ரூகான் என்ற படைத்தலைவனும் தென்னாட்டின்மீது படையெடுத்து மக்களைப் பல துன்பங்களுக்குள்ளாகினான்.

துக்ளக் சுல்தான்கள் ஆட்சியில் தென்னிந்தியாவின்மீது படையெடுப்பு : கில்ஜி சுல்தான்களின் ஆட்சியில் தேவகிரி, வாரங்கல், துவாரசமுத்திரம், மதுரை முதலிய நாட்டு அரசுகள் கப்பங் கட்டுவதற்கு ஒப்புக் கொண்ட போதிலும் கில்ஜி சுல்தான்களின் ஆட்சி முடிந்து கியாஸ்உத்தின் துக்ளக், சுல்தான் பதவியை வகித்த

பொழுது, மீண்டும் தென்னிந்தியாவின்மீது படையெடுப்பது அவசியமாயிற்று. வாரங்கல் நாட்டு இரண்டாம் பிரதாபருத்திர தேவன் திறை செலுத்த மறுத்தமையால் கியாஸ் உத்தீன் தம்முடைய மகன், உலூக்கான் என்பாரை வாரங்கல் நாட்டின் மீது படையெடுக்கும்படி ஆணையிட்டார். கி.பி.1321ஆம் ஆண்டில் உலூக்கான் வாரங்கல் கோட்டையை முற்றுகை யிட்டார். முதல் முற்றுகை வெற்றி பெறவில்லை. ஆகையால், தேவகிரிக் கோட்டைக்குப் பின்வாங்கிச் சென்று, பின்னர் மீண்டும் வாரங்கலை முற்றுகையிட்டார். ஐந்து திங்கள் வரையில் பிரதாபருத்திரன் உலூக்கானை எதிர்த்துப் போரிட்ட போதிலும் இறுதியில் அடிபணிய வேண்டிவந்தது. வாரங்கல் முற்றுகை முடிந்து பிரதாபருத்திரனும் கைதியாகி டெல்லிக்கு அழைத்துச் செல்லப் படுகையில் நடுவழியில் இறந்து போனதாக நாம் கேள்விப்படுகிறோம். வாரங்கல் கோட்டை இடிக்கப்பட்டு நகரமும் கொள்ளையடிக்கப்பட்டது. காகதீய நாடும் துக்ளக் பேரரசோடு சேர்க்கப்பட்டது. (1323)

1327ஆம் ஆண்டில் முகம்மது துக்ளக் தமிழ்நாட்டின்மீது படையெடுத்தமையால் இரண்டாவது முறையாகத் திருவரங்கம் கோவில் சூறையாடப்பட்டது. பாண்டிய நாடும் துக்ளக் சுல்தானின் படையெடுப்பிற்கு உள்ளாகிப் பராக்கிரம பாண்டிய தேவன் என்ற அரசன் டெல்லி நகரத்திற்குக் கைதியாக அழைத்துச் செல்லப்பட்டதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.* 1325இல் சுல்தான் பதவிக்குவந்த முகம்மது துக்ளக் தேவகிரி, வாரங்கல், மாபார் (பாண்டியநாடு) ஆகிய இடங்களை டெல்லிச் சுல்தானியப் பேரரசோடு சேர்த்துக் கொண்டார். சுல்தானியப் பேரரசின் இருபத்துமூன்று மாகாணங்களில் மேற்கூறப் பெற்ற மூன்று மாகாணங்களும் அடங்கியிருந்தன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஓர் ஆளுநர் நியமிக்கப்பட்டுத் தேவகிரிக்கு மாலிக்சாடா பகாவுதீன் கர்ஷாப் (Bahauddin Garshap) என்போரும், மாபார் அல்லது பாண்டியநாட்டிற்கு ஜலால்-உதீன் அகசன்ஷா என்பவரும் ஆளுநர்களாகப் பணியாற்றினர். துவார சமுத்திரமும், கம்பிலி நாடும் துக்ளக் முகம்மதுவின் பேரரசிற்கு உட்பட்டதாகத் தெரியவில்லை. தம்முடைய பேரரசு தெற்கே மதுரை வரையில் பரவியிருந்தமையால் 1327ஆம் ஆண்டில் தம்முடைய தலைநகரத்தை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு முகம்மது துக்ளக் மாற்றினார். தலைநகரத்தை மாற்றி மீண்டும் டெல்லி நகருக்கே குடிகளைப் போகும்படி செய்ததும், செப்பு நாணயங்களை அச்சடித்ததும் தேவையற்ற போர்களில் ஈடு

*No. 669 of Pudukkottai State Inscription

பட்டதுமாகச் செய்யத் தகாத செயல்கள் முகம்மது துக்ளக்கின் இறுதிக் காலத்தில் பெருங்கலகப் புயல்களை உண்டாக்கின. சாசர் என்ற இடத்தில் தேவகிரிக்குத் தலைவராக இருந்த பகாஉதீன் கார்ஷாப் என்பவர் முதன்முதலில் கலகம் செய்ததாகத் தெரிகிறது. துக்ளக் முகம்மதுவிற்குத் திரை செலுத்த மறுத்ததும் அன்றி டெல்லி அரசிற்கும் உரிமை கொண்டாடியதாகத் தெரிகிறது.

ஆகையால், முகம்மது துக்ளக் தேவகிரி நாட்டின் மற்றோர் ஆளுநராக இருந்த மசூர்-அபு-ரிஜா என்பவருக்குப் பகாவுதீன் கலகத்தையடக்கி அமைதியை நிலைநாட்டும்படி உத்தரவிட்டார். கோதாவரி நதிக் கரையில் நடந்த போரில் பகா-உத்தீன் தோல்வியுற்றுத் தம்முடைய உயிருக்கு அஞ்சிக் கம்பிலி நாட்டை ஆண்ட கம்பிலிராயனிடம் சரணடைந்தார். கம்பிலி நாட்டை அமைத்த கம்பிலிராயன் அல்லது கம்பிலிதேவன் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில், தேவகிரி இராமச்சந்திர தேவருக்கும் துவாரசமுத்திரத்து அரசனாகிய மூன்றாம் வல்லாள தேவனுக்கும் நடந்த போர்களில், தேவகிரி அரசருடன் சேர்ந்து கொண்டு அவருக்குப் பல உதவிகளைச் செய்துள்ளார். இஸ்லாமிய ஆட்சி தென்னாட்டில் பரவுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், கிருஷ்ணா, துங்கபத்திரை ஆறுகளுக்கு இடைப்பட்ட இடங்களிலும், அனந்தபுரி, பல்லாரி மாவட்டங்கள் அடங்கிய பகுதிகளிலும், கும்மாட்டா, கம்பிலி என்ற பாதுகாப்புள்ள இடங்களிலும் கோட்டை கொத்தளங்களை அமைத்துப் புகழ் பெற்றார். டெல்லிச் சுல்தானியப் பேரரசிற்கும், கம்பிலி ராயனுடைய நாட்டிற்கும் கிருஷ்ணாநதி வடக்கு எல்லையாக அமைந்தது. இந்தக் கம்பிலிராயனிடம் சரணடைந்த பகாஉதீன் கார்ஷாப் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டதற்கு இணங்கக் கம்பிலிராயனும் அவ்விதம் செய்வதாக வாக்கு அளித்தார். பகாஉதீன் கார்ஷாப் என்பவரை எவ் விதத்தில் ஆயினும் சிறையிலிடுவதற்குக் கும்மாட்டாக் கோட்டையையும், கம்பிலிராயனின் தலைநகரமாகிய ஆனேகுந்தியையும் இருமுறை முற்றுகையிட்ட போதிலும் வெற்றி பெற முடியவில்லை. இத் தோல்வியைக் கேள்வியுற்ற துக்ளக் முகம்மது தாமே நேரில் வந்து சேனையை நடத்திக் கும்மாட்டா என்னும் கோட்டையைக் கைப்பற்றினார். பின்னர்க் கம்பிலிராயனும் பகாஉதீனும், ஆனேகுந்திக் கோட்டைக்குள் புகுந்துகொண்டனர். பின்னர் ஆனேகுந்தியும் முகம்மது துக்ளக்கின் சேனைவீரர்களால் முற்றுகையிடப்பெற்றது.

துக்ளக் முகம்மதுவின் சேனைக்கு எதிராகத் தம்மால் போரிட முடியாது என்றுணர்ந்த கம்பிலிராயன் பகாஉதீனை அழைத்து

ஆனேகுந்தியைவிட்டுத் தப்பித்துத் துவாரசமுத்திரத்திற்குச் சென்று மூன்றும் வல்லாள தேவனிடம் சரணடையும்படி இரகசிய மாகக் கூறிவிட்டுத் தம்முடைய மனைவி மக்கள் எல்லோரையும் தீக்குளித்து இறக்கும்படி செய்து தாமும், தம்முடைய வீரர்கள் பலருடன் சேர்ந்து, துக்ளக் முகம்மதுவின் சேனையுடன் போர் புரிந்து வீரசுவர்க்கம் அடைந்தார். கம்பிலி நாடும், ஆனே குந்தியும் டெல்லிப் பேரரசுடன் இணைக்கப்பட்டன. ஆனே குந்தியில் போரிட்டு இறந்தவர்கள் தவிர மற்றவர்களைக் கைது செய்யும்படி சுல்தான் உத்தரவிட்டார். பகாஉதீன் தப்பித்துச் சென்று துவாரசமுத்திரத்து மூன்றும் வல்லாள தேவனிடம் சரணடைந்த செய்தியைக் கேள்வியுற்றுத் துக்ளக் முகம்மது ஹொய்சள நாட்டின்மீதும் படையெடுத்தார்.

கம்பிலிராயன் செய்தது போன்று பகாஉதீனைக் காப்பாற்று வதற்காகத் தம்முடைய நாட்டையும், உயிரையும் இழப்பதற்கு மூன்றும் வல்லாளதேவன் விரும்பவில்லை. பகாவுதீன் கைது செய்யப்பட்டுத் துக்ளக்முகம்மதுவிடம் ஒப்படைக்கப்பெற்றனன். சுல்தானும் அவனைக் கொல்லும்படி உத்தரவிட்டு அவனுடைய உடலைக் கண்டதுண்டங்களாக்கி அரிசியுடன் சேர்த்து மனிதப் புலால் உணவாக்கி யானைகளுக்கு வைக்குமாறு உத்தரவிட்டார். யானைகள் அதை முகர்ந்துக்கூடப் பார்க்கவில்லை. பின்னர் அந்தப் புலவுச்சோறு சிறுசிறு பொட்டலங்களாகக் கட்டப்பெற்றுப் பகாஉதீனுடைய உறவினர்களுக்கு அனுப்பப் பெற்றன என நாம்அறிகிறோம். பகாஉதீன் இறந்தபிறகு மூன்றும் வல்லாள தேவனும் துக்ளக் முகம்மதுவிற்கு அடிபணிந்து திரை செலுத்து வதற்கு ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. ஆகவே, இதற்கு முன் டெல்லிப் பேரரசிற்கு அடங்காத துவாரசமுத்திரமும், ஆனேகுந்தி - கம்பிலி நாடுகளும் இப்போது டெல்லிக்கு அடி பணியலாயின.

கம்பிலி நாட்டைப் பிடித்தும் துவாரசமுத்திரத்து மூன்றும் வல்லாள தேவனிடம் போரிட்டும் பகாஉதீன் கார்ஷாப் என்பவரைச் சிறைப்படுத்திக் கொலை செய்வித்த பிறகு முகம்மது துக்ளக் 1329ஆம் ஆண்டில் டெல்லிக்குத் திரும்பியதாகத் தெரிகிறது. இந்த ஆண்டிலிருந்து விஜயநகரம் அமைக்கப்பெற்ற 1336ஆம் ஆண்டிற்கிடைப்பட்ட காலத்தில் தக்காணத்தையும், தென்னிந்தியாவையும், வட இந்திய இஸ்லாமிய ஆட்சியினின்றும் விடுவித்துச் சுதந்திர இந்து ஆட்சியை ஏற்படுத்துவதற்கு ஓர் இயக்கம் தோன்றியது. அலாவுதீன் கில்ஜியால் முதலில் தொடங்கப்பெற்றுப் பின்னர்த் துக்ளக் முகமது ஆட்சிக்காலம்

வரையில் நடைபெற்ற இஸ்லாமியப் படையெழுச்சிகளால் தென்னிந்திய முக்கிய சமயங்களாகிய சைவ வைணவக் கோவில்களும் அக் கோவில்களைச் சேர்ந்த மடாலயங்களும் கொள்ளையடிக்கப் பெற்று அவற்றில் இருந்த விலையுயர்ந்த செல்வங்களும், கலைப்பொருள்களும் வடஇந்தியாவிற்கு யானைகள், ஒட்டகங்கள் குதிரைகளின்மீது ஏற்றி அனுப்பப்பெற்றன என இஸ்லாமிய வரலாற்றுசிரியர்களிடமிருந்து நாம் அறிகிறோம். மாலிக்கபூர் தென்னிந்தியாவில் தாம் செய்ய வேண்டியன என்ன என்பதைச் சில வார்த்தைகளில் கூறியுள்ளார். 'அல்லா ஒருவர்தான் உண்மையான கடவுள், அவரின்றி வேறு தெய்வமில்லை. அவருக்கு உருவமில்லை' என்ற உண்மையை எல்லோரும் உணர வேண்டும். இவ் வுண்மையைத் தென்னிந்திய மக்களும் அரசர்களும் உணர்ந்து நடந்துகொள்ள விரும்பாமற் போனால், அவர்கள் தலைவணங்கிச் சுல்தானுக்குக் கப்பம் செலுத்த வேண்டும். இவ் விரண்டு காரியங்களையும் செய்ய அவர்களுக்கு விருப்பமில்லையானால் அவர்களுடைய உடலுக்கும் தலைக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லாமல் செய்துவிடுவேன்.' இக் கூற்றிலிருந்து இஸ்லாமிய சமயத்தை வற்புறுத்திப் பரவச்செய்ய வேண்டும் என அவர் நினைத்தார் என்பது தெரிகிறது. இஸ்லாமியக் கொள்கைகளைப் பரவச்செய்ததோடு இந்துக்களுடைய வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள் முதலிய சுருதிகளும், வடமொழி, தெலுங்கு, தமிழ், கன்னடம் முதலிய நாட்டுமொழிகளும் மக்களிடையே பரவாதபடியும் தடுத்தார். பசுவையும் அந்தணர்களையும் கொலை செய்வதும், பெண்மக்களின் கற்பை அழிப்பதும் தங்களுடைய முக்கிய கொள்கைகளாகச் சில இஸ்லாமியத் தலைவர்கள் கருதினர். இவ்விதச் செயல்களால் இந்து சமயமும், சைவ வைணவக் கோவில்களும், மடாலயங்களும் அழிந்து தென்னிந்தியக் கலாசாரமும், பண்பாடும் மறைந்துவிடும் போல் தோன்றியது. இவ்வித அழிவினின்றும் மக்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு புதிய சைவ சமய இயக்கம் ஆந்திர நாட்டிலும், கன்னடத்திலும் தோன்றியது. இவ்வியக்கத்திற்குப் புரோலைய நாயக்கர், காப்பைய நாயக்கர் என்ற இருவர் தலைமையேற்றனர் என்றும், மேலும் இவர்களுக்கு உதவியாக எழுபத்தைந்து நாயக்கன்மார்கள் இருந்தனர் என்றும் கூறுவர்.*

1331ஆம் ஆண்டிற்குள் வடக்கே மகாநதி தீரத்திலிருந்து தெற்கில் நெல்லூர் மாவட்டத்திலுள்ள குண்டலகாமம் என்னும் இடம் வரையில் ஆந்திரநாட்டின் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து இஸ்லாமிய ஆட்சி மறைந்தது. இதே சமயத்தில் சாளுக்கிய

*K.A.N. Sastri. A History of South India. P. 226.

மரபைச் சார்ந்தவனும், பிற்கால ஹரவீட்டு அரச மரபிற்கு அடி கோலியவனுமாகிய சோமதேவன் என்ற தலைவன், ஆந்திர நாட்டின் மேற்குப் பகுதியில் இஸ்லாமிய ஆட்சியை அழிப்பதற்கு ஆவன செய்தான். கர்நூல், ஆனகுந்தி, இராய்ச்சூர், முதுகல் முதலிய இடங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டு, கம்பிலியில் ஆட்சி செலுத்திய மாலிக் முகம்மது அல்லது மாலிக் நிபி என்ற இஸ்லாமியத் தலைவனுக்கு எதிராகக் கலகம் செய்தனன். துக்ளக் முகம்மதுவின் மேலாண்மையை முதலில் ஒப்புக் கொண்ட ஹொய்சள மன்னனுகிய மூன்றும் வல்லாள தேவனும் கம்பிலி நாட்டின்மீது படையெடுத்தார். இவ்விதத் தீவிரமான எதிர்ப்புக்களுக் கிடையில் இஸ்லாமிய ஆட்சியை நிலைநிறுத்த முடியாதென உணர்ந்த மாலிக் முகமது, டெல்லியில் ஆட்சிபுரிந்த முகம்மது துக்ளக்கிற்குப் பின்வருமாறு செய்தியனுப்பினன். 'என்வசம் ஒப்புவிக்கப்பட்ட நாட்டு மக்கள் எல்லோரும் எனக் கெதிராகக் கலகம் செய்கின்றனர். அரசிற்குச் சேரவேண்டிய வரிகளைக் கொடுக்க மறுத்து, நான் வசிக்கும் கோட்டையை முற்றுகையிட்டு, உணவுப் பொருள்களும் நீரும் கிடைக்காமல் செய்து விட்டனர். எனக்கு உதவி செய்வார் ஒருவரு மில்லை. என்னைக் காப்பாற்றுங்கள்.' இச் செய்திகளைக் கேட்ட துக்ளக் முகம்மது தம்முடைய அமைச்சர்களை அழைத்து, இவ்விதக் கஷ்டமான நிலையில் செய்யக் கூடியது யாதென வினவ, அவர்கள் முன்னர்க் கம்பிலி நாட்டை ஆண்ட கம்பிலி தேவராயருடைய அலுவலாளர்கள் ஆறுபேர் சிறையில் இருப்பதைக் கூறி அவர்களுள் தகுதியுள்ள ஒருவனிடம் நாட்டை ஒப்படைக்கலாம் எனக்கூறினர். கம்பிலியிலிருந்து கைதிகளாகக் கொண்டுவரப்பட்ட அறுவருள் ஹரிஹரன், புக்கன் என்ற சகோதரர்கள் இருவராவர். இவ் விரு வரும் கம்பிலிராயனுடைய அமைச்சராகவும், கருவூல அதிகாரி யாகவும் இருந்தனர் எனக்கேள்வியுற்று. இவ்விருவரிடம் நாட்டை ஒப்படைப்பது செய்யத்தகுந்த செயல் என்ற முடிவிற்கு வந்தார்.

கைதிகளாக இருந்த ஆறு பேர்களும் விடுதலை செய்யப் பெற்றனர். ஹரிஹரன் கம்பிலி நாட்டு அரசனுகவும், புக்கன் கருவூல அதிகாரியாகவும் நியமனம் செய்யப்பெற்றனர். பின்னர்த் தக்க பாதுகாப்புடன் இவ் விருவரும் டெல்லியிலிருந்து ஆனை குந்திக்கு வந்து, கம்பிலி நாட்டின் ஆட்சியை மேற்கொண்டனர். முன்னர்க் கலகம் செய்த மக்களும் மனமுவந்து இவ் விருவரையும் தங்கள் தலைவர்களாக ஒப்புக் கொண்டு மகிழ்ச்சி எய்தினர். மாலிக் முகம்மதுவும் ஆட்சிப் பொறுப்புத் தம்மை விட்டு நீங்கி யதைக் குறித்து மகிழ்ச்சியடைந்து ஆனைகுந்தியை விட்டு டெல் லிக்குச் சென்றனன். இவ்விதச் செய்திகளை நூனிஸ் என்பாருடைய

வரலாற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளுகிறோம். ஆனால், இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள் ஹரிஹரனும், புக்கனும் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்திருக்கும்படி வற்புறுத்தப் பெற்றனர் என்று கூறுவர். ஆனால், நூனிஸ் என்பாருடைய வரலாற்றுக் குறிப்புகளில் இச் செய்தி காணப்படவில்லை. ஆனால், இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களிடம் இந்தியப் பரம்பரைச்செய்தி களும் ஒப்புக்கொள்ளும் ஒரு செய்தி என்னவென்றால், விஜயநகரம் என்ற புதிய அரசையும், நகரத்தையும் ஹரிஹரனும், புக்கனும் தோற்றுவித்தனர் என்பதாகும். ஹரிஹரனும், புக்கனும் ஆந்திர இனத்தைச்சேர்ந்தவர்களா, கன்னட இனத்தைச் சேர்ந்தவர்களா என்பதும் விளங்கவில்லை. அஃதெங்ஙன மாயினும் சங்கமனுடைய ஐந்து புதல்வர்களுள் முதலிருவராகிய ஹரிஹரனும், புக்கனும் முதலில் ஆனேகுந்திக்குத் தலைவராகிப் பின்னர் விஜயநகரப் பேரரசு தோன்றுவதற்குக் காரணமாக இருந்தனர்.

தென்னிந்தியாவில் மற்றப் பகுதிகளில் துக்ளக் பேரரசின் நிலைமை : புரோலிய நாயக்கருக்குப் பிறகு காப்பைய நாயக்கர் என்பவர் ஆந்திர நாட்டிலிருந்து இஸ்லாமிய ஆட்சியை முழுவதும் அழிப்பதற்கு ஏற்ற முயற்சிகளை மேற்கொண்டார்.

(1) தென்னிந்திய தேசிய இயக்கம் நிலையானதாக இருக்கவும், அன்னியநாட்டு இஸ்லாமிய அமீர்களும், இஸ்லாம் சமயத்தைத் தழுவிய இந்திய முஸ்லிம்களும், மேற்கூறப்பெற்ற இயக்கத்தை அழித்துவிடாமல் இருக்கவும், வாரங்கல் நாட்டிலும் இஸ்லாமிய ஆதிக்கம் நிலைபெறுதிருக்கவும் பல முயற்சிகளைக் காப்பைய நாயக்கர் மேற்கொண்டதாகத் தெரிகிறது.

(2) ஹொய்சள மூன்றாம் வல்லாள தேவனுடைய உதவி கொண்டு வாரங்கலில் ஆளுநராகப் பதவி வகித்த மாலிக் மக்புல் என்பாரைத் தோற்கடித்தார். அவரும் வாரங்கலை விட்டுத் தேவ கிரிக்குச் சென்று, பின்னர் டெல்லிக்குச் சென்று விட்டார். இச் செயலால் தெலிங்கானா நாடும் இஸ்லாமிய ஆட்சியினின்று விடு பட்டது. பின்னர் மூன்றாம் வல்லாள தேவனும், காப்பைய நாயக்கரும் சேர்ந்து, தமிழ்நாட்டில் தொண்டை மண்டலத்தில் சம்புவராயத் தலைவனாகிய வென்றுமண்கொண்ட ஏகாம்பர நாதச் சம்புவராயருக்கு உதவி செய்து, சம்புவராய அரசைத் தோற்றுவித்ததாக உயர்திரு K. A. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் கூறுவார். *

(3) ஆனால், சம்புவராயத் தலைவராகிய வென்றுமண் கொண்ட சம்புவராயர் பிறர் உதவியின்றித் தொண்டை

*K.A.N. Sastri. op. citusi P. 228.


தென்னிந்தியாவின்மீது
இஸ்லாமியப் படையெழுச்சிகள்
மாலிக்கபூர் —— முகம்மது துக்ளக்
எலிச்பூர்
தேவகிர்
யாதவ அரசு
காகதீய நாடு
வாரங்கல்
துவாரசமுத்திரம்
வீரஞ்சிபுரம்
பாலாறு
ஹொய்சள அரசு
பெண்ணை
தஞ்சாவூர்
ஸ்ரீரங்கம்
திருச்சிராப்பள்ளி
பிரதுல் (வீரதவளப்பட்டினம்)
மதுரை
ராமேச்வரம்
பாண்டியர்கள்
இந்தியப் பெருங்கடல்
இலங்கை
வங்காளக் குடாக்கடல்
76
80
84
20
16
12
8

படம்—2

மண்டலத்தில்இருந்த இஸ்லாமியப் படைகளை வென்று, 'வென்று மண்கொண்டான்', என்ற பட்டத்தைப் புனைந்துகொண்டதாகத் தெரிகிறது.

(4) ஏனெனில், வடஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்மின்னல் என்னுமிடத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டு அக் கிராமத்திலிருந்த இஸ்லாமியப் படைகளைத் துரத்திவிட்டு, அதை 'அஞ்சிஞுன் புகலிட'மாக (Refugee Colony) வென்றுமண்கொண்டான் செய்த தாகக் கூறுகிறது. படைவீடு என்னுமிடத்தைத் தலைமை யிடமாகக் கொண்டு, வென்றுமண்கொண்டான் 'ராஜகம்பீர ராஜ்யம்' என்ற சிற்றரசை ஏற்படுத்தினர். இச் சிற்றரசிற்கு வடக்குப் பகுதியில் யாதவராயர்கள் என்ற குறுநிலத் தலைவர்கள் திருப்பதியைத் தலைமையிடமாகக் கொண்டு யாதவராய சிற்றரசை அமைத்தனர்.*

மதுரைச் சுல்தானிய அரசு: 1327ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டின்மீது துக்ளக் முகம்மது படையெடுத்து வெற்றி பெற்றதன் பயனாக, மாபார் என்ற பாண்டியநாடு துக்ளக் பேரரசின் இருபத்துமூன்று மாகாணங்களில் ஒன்றாகியது. இம் மாகாணத்திற்கு முகம்மது நபியின் கால்வழியில் வந்தோனுகிய ஜலால்உதீன்-அகசன்-ஷா என்பவன் ஆளுநராக நியமிக்கப் பெற்றிருந்தான். 1330, 33, 34ஆம் ஆண்டுகளில் பொறிக்கப் பெற்ற முகம்மது துக்ளக்கின் நாணயங்கள் மதுரையில் கிடைக்கப் பெற்றன. ஆகையால், 1334ஆம் ஆண்டு வரையில் ஜலால் உதீன் அகசன் ஷா, துக்ளக் பேரரசிற்கு அடங்கியே ஆட்சி செய்த தாகத் தெரிகிறது. பஹாஉதீன் கர்ஷாப் என்ற தேவகிரி ஆளுநர் சுதந்திர ஆட்சி பெற முயன்றதையும், ஏகாம்பரநாதச் சம்புவ ராயன் தொண்டைமண்டலத்தில் தன்னாட்சி பெற்றதையும் கேள்வியுற்ற ஜலால்உதீனும் முகம்மது துக்ளக்கிற்கு எதிராகக் கலகம் செய்து, தன் பெயரில் நாணயங்களை அடித்து, இறைமை அதிகாரங்களை மேற்கொண்டார். 1335ஆம் ஆண்டில் ஜலால் உதீன் என்ற பெயருடன் வெளியிடப்பட்ட நாணயங்களிலிருந்து அவ் வாண்டு முதல் மதுரைச் சுல்தானிய அரசு தோன்றியதென நாம் உணர்ந்து கொள்ளலாம்.

சையாஉதீன் பரானியும் (Ziauddin Barani) முகம்மது காசிம் பெரிஷ்டாவும் இந்த ஜலால்உதீன் அகசன் ஷாவைச் சையது ஹாசன், சையது ஹுசேன் என்று அழைத்துள்ளனர். மதுரை யில் ஜலால்உதீன் சுதந்திரமடைந்ததைக் கேள்வியுற்ற முகம்மது துக்ளக் ஒரு சேனையை அனுப்பி, அவரைத் தண்டிக்க நினைத்த

*No. 35 of 1934.

போதிலும் அவ் வெண்ணம் ஈடேறவில்லை. தம்முடைய பேரரசின் பல பகுதிகளில் கலகங்கள் தோன்றியமையால் எப் பகுதிக்குச் சென்று, கலகத்தை யடக்குவ தென்று புரியவில்லை. ஜலான் உதீனுடைய மகன் இப்ராஹிம் என்பவர் முகம்மது துக்ளக்கிடம் கருவூல அதிகாரியாக அலுவல் பார்த்தார். தகப்பனுடைய அடங்காத்தனம் மகனுடைய உயிருக்கு உலை வைத்தது. இப்ராஹிம் கைது செய்யப்பட்டு, இரண்டு துண்டங்களாக வாள் கொண்டு அறுக்கப்பட்டான். மொராக்கோ நாட்டிலிருந்து துக்ளக் முகம்மதுவின் அரசவைக்கு வந்த இபன்-பதூதா என்ற இஸ்லாமிய வரலாற்றுசிரியர் ஜலால்உதீனுடைய மருமகனுவார்.

ஜலால்உதீன் அகசன் ஷா (1335-40) ஐந்தாண்டுகள் சுல்தான் பதவியை வகித்த பிறகு அலாவுதீன் உதாஜி என்ற இஸ்லாமியப் பிரபு ஒருவனுல் கொலை செய்யப்பட்டு உயிர் இழந்தார். அலாவுதீன் உதாஜி ஓராண்டு காலம் மதுரைச் சுல்தானுக ஆட்சி செய்தான். மதுரைச் சுல்தானிய அரசை எவ்வாறேனும் அழித்துவிட வேண்டுமென்று மூன்றும் வல்லாள தேவன் தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். அலாவுதீன் உதாஜிக்கும், மூன்றும் வல்லாள தேவனுக்கும் திருவண்ணுமலைக் கருகில் போர் நடந்ததெனவும் அப் போரில் வல்லாளனுடைய வாள் வன்மைக்கு உதாஜி பலியானுன் எனவும் திரு. S. கிருஷ்ண சாமி அய்யங்கார் கூறுவார். உதாஜி இறந்தபின் மதுரையிலிருந்த இஸ்லாமியப் பிரபுக்கள் அவனுடைய மருமகன் குத்புதீன் என்பானைச் சுல்தானுக ஏற்றுக்கொண்டனர். ஆயினும், பிரபுக்கள் வெறுக்கத்தக்க வகையில் குத்புதீன் தன்னுடைய வாழ்க்கையை நடத்தியதால், அவன் பதவியேற்ற நாற்பது நாள்களுக்குள் உயிரிழக்கும்படி நேர்ந்தது. குத்புதீனுக்குப் பிறகு கியாத்உதீன் தமகன்ஷா என்பவன் மதுரையில் சுல்தானுகப் பதவி ஏற்றான். (1341-1342) அவன் சாதாரணப் போர்வீரனுக இருந்து பின்னர் இப் பதவியைக் கைப்பற்றினன். இபன்-பதூதாவின் கூற்றுகளிலிருந்து இந்தக் கியாத்உதீன் தமகன்ஷா ஈவிரக்க மற்ற கொடுங்கோல் மன்னன் என்பது தெளிவாகிறது. திருச்சிக்கு அருகிலுள்ள கண்ணனூர்க் குப்பத்தில் தங்கியிருந்த இஸ்லாமியப் படைகட்கும், மூன்றும் வல்லாள தேவனுக்கும் பெரும்போர் நடந்தது. கண்ணனூர் முற்றுகை ஆறு மாதங்களுக்குமேல் நீடித்து, மூன்றும் வல்லாளன் வெற்றிபெறும் தறுவாயிலிருந்தார். ஆனுல், இஸ்லாமிய வீரர்களின் வார்த்தையை நம்பி, தன்னுடைய கவனக்குறைவினுல் உயிரிழக்கவேண்டி வந்தது. கியாத்உதீன், வல்லாளனுடைய சேனைகள், மற்றச் செல்வங்கள் முதலியவற்றையும் கைக்கொண்டு அநியாய முறையில் அவனைக்

கொலை செய்வித்தான். வயது சென்ற வல்லாளனுடைய தலையற்றஉடல் மதுரை நகரத்தின் சுவரொன்றில் தொங்கவிடப்பட்டு இருந்ததைத் தாம் பார்த்ததாக இபன்-பதூதா கூறியுள்ளார். தென்னிந்தியா இஸ்லாமிய ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்தர மடைய வேண்டுமென்று பெருந்தியாகம் செய்த வல்லாளன், விதி வலியால் பயன்பெறுமல் உயிரிழந்தார். கியாத்உதீனுக்குப் பெரிய வெற்றி கிடைத்த போதிலும், இவ் வெற்றிக்குப் பிறகு அவன் நீண்ட நாள்கள் உயிருடன் இருக்கவில்லை. கண்ண னூரில் இருந்து மதுரைக்குத் திரும்பிச் சென்ற அவனுடைய குடும்பத்தினர் விஷபேதி கண்டு இறந்தனர். இரண்டு வாரங்கள் கழித்துக் கியாத் உதீனும் உயிரிழந்தான்.

கியாத் உதீனுக்குப் பிறகு, டெல்லியில் துக்ளக் முகம்மதுவின் அணுக்கத் தொண்டனாக இருந்த நாசர்உதீன் என்பவன் மதுரைச் சுல்தானாகப் பதவி ஏற்றான். தான் சுல்தான் பதவியை அடை வதற்குஉதவியாக இருந்தவர்களுக்குப் பொன்மாரி பொழிந்து, தன்பதவியை நிலையுள்ளதாக ஆக்கிக்கொள்ள முயன்றான். அப்பொழுது மதுரையில் தங்கியிருந்த இபன்-பதூதாவிற்கும் முந்நூறு பொன் நாணயங்களும், விலையுயர்ந்த ஆடைகளும் இனமாகக் கிடைத்தன. இந்த நாசர்உதீனும் ஒரு கொடுங் கோல் மன்னனாக ஆட்சி புரிந்து தன்னுடைய உறவினன் ஒருவனைக் கொன்றுவிட்டுப் பின்னர் அவனுடைய மனைவியை மணம் செய்து கொண்டான்.

கி.பி. 1344 முதல் 1356 வரையில் மதுரையில் ஆண்ட சுல்தான்களுடைய நாணயங்கள் கிடைக்கவில்லை. நாசர் உதீனுக்குப் பிறகு குர்பத்ஹாசன்கங்கு என்பான் மதுரையில் சுல்தானாகப் பதவியேற்றான். இவன் சுல்தான் பதவியை வகிப்பதற்கேற்ற திறமையின்றித் தன்னுடைய பதவிக்குப் பெரிய தோர் இகழ்ச்சியைத் தேடிக் கொண்டான். 1352ஆம் ஆண்டில் விஜயநகரத்து அரசனாகிய முதலாம் புக்கன் மதுரை நோக்கிப் படையெடுத்துச் சென்று இவனுட்சியை அழித்ததாகக் கோமல் செப்பேடுகளிலிருந்து நாம் உணரலாம். ஆயினும், மதுரைச் சுல்தானிய அரசு உடனே அழிந்து விடவில்லை. 1371ஆம் ஆண்டில் முதலாம் புக்கதேவராயருடைய மகன் குமாரகம்பணன் என்பவர் எவ்வாறு மதுரையில் சுல்தான் பதவியை வகித்த பக்ருதீன் முபராக்ஷா என்பவனை வென்று, மதுரை மண்டலத்தை விஜயநகர அரசோடு இணைத்தார் என்பதைப் பின்வரும் பகுதிகளால் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

3. விஜயநகரத்தின் தொடக்கம்

விஜயநகரத்தை அமைத்துப் பின்னர் ஒரு பேரரசாக வளர்ச்சியுறும்படி செய்த சங்கம வமிசத்து ஹரிஹரனும், புக்கனும் கன்னட இனத்தைச் சேர்ந்தவர்களா, ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்களா என்பதுபற்றிப் பல வரலாற்று ஆசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் வாதம் புரிந்துள்ளனர். தொடக்கத்தில் விஜயநகர வரலாற்று நூலாகிய 'ஒரு மறைந்து போன பேரரசு' (A Forgotten Empire) என்ற நூலை இயற்றிய இராபர்ட் சிவெல் என்பவர் இந்த நகரம் அமைவதற்குக் காரணமாக இருந்த ஏழு வகையான வரலாற்று உண்மைகளையும், மரபு செய்திகளையும் தொகுத்துக் கூறியுள்ளார். அவையாவன :

(1) 1323ஆம் ஆண்டில் வாரங்கல் நாட்டின்மீது முகமது துக்ளக் படையெடுத்த போது ஹரிஹரனும், புக்கனும் இரண்டாம் பிரதாபருத்திரனுடைய அரசாங்க அலுவலில் இருந்தனர்; இஸ்லாமியர் வாரங்கல்கோட்டையைக் கைப்பற்றிய பிறகு அந்த நாட்டைவிட்டு நீங்கித் துங்கபத்திரை நதியின் வட கரையில் உள்ள ஆனேகுந்தி நகரத்திற்குத் தப்பித்துச் சென்றனர். அந்த நகரில் மாதவ வித்தியாரண்யர் என்ற மகானுடைய அருள் பெற்று விஜயநகரத்தை அமைத்தனர் என்பதாகும்.

(2) 1309ஆம் ஆண்டில் இஸ்லாமியர் வாரங்கல் நாட்டின் மீது படையெடுத்து, ஓர் இஸ்லாமிய ஆளுநரை நியமித்தனர். அவரிடம் ஹரிஹரனும், புக்கனும் அலுவல் பார்த்தனர். 1310ஆம் ஆண்டில் மூன்றாவது வல்லாள தேவனுக்கு எதிராக ஒரு சேனையுடன் அனுப்பப் பெற்றனர். ஆனால், இவ் விருவரும் மூன்றாம் வல்லாள அரசனிடம் தோல்வியுற்று, ஆனேகுந்திக்குத் தப்பிச் சென்று, பின்னர் மாதவாச்சாரியருடைய உதவியினால் விஜயநகரத்தை அமைத்தனர் என்பதாகும்.

(3) வாரங்கல் நாட்டில் இருந்த பொழுது ஹரிஹரனும், புக்கனும் இஸ்லாமிய சமயத்தைத் தழுவும்படி வற்புறுத்தப் பட்டனர் என்றும், அதனால், அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்று ஆனேகுந்தியை அடைந்து, மற்ற இந்துத் தலைவர்களோடு சேர்ந்து, தென்னிந்தியாவை இஸ்லாமியப் படையெழுச்சிகள்

அழித்துவிடாத வண்ணம் விஜயநகரத்தை அமைத்தனர் என்றும் கூறப்பெறுகின்றன.

(4) மாதவ வித்தியாரண்யர் பெரியதொரு புதையல் கண்டு எடுத்து, விஜயநகரத்தை அமைத்துத் தாமே ஆட்சி செலுத்தி வந்ததாகவும், தாம் இறக்கும் தறுவாயில் குறும்ப இனத்தைச் சேர்ந்த சங்கமன் என்பவனுக்கு இந்த நகரத்தை அளித்ததாகவும் ஒரு செய்தி வழங்கியது.

(5) கூட்டோ என்ற போர்த்துக்கீசியர் பின்வருமாறு கூறியுள்ளார். துங்கபத்திரை நதிக்கரையில் உள்ள காடுகள் நிறைந்த மலைப்பிரதேசத்தில் மாதவர் என்ற சந்நியாசி வசித்து வந்தார். புக்கன் என்ற ஆட்டிடையன் அவருக்குத் தினந்தோறும் உணவு கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். தென்னிந்தியா முழுவதற்கும் பேரரசனாக விளங்குவதற்கு மாதவர் அவனுக்கு ஆசி வழங்கினர். அவருடைய அருளினாலும், ஆதரவினாலும் புக்கன் அரசனாகிப் புக்கராயன் என்ற பட்டத்துடன் அரசாண்டான் என்பதாகும்.

(6) ஹரிஹரனும், புக்கனும் ஹொய்சள மன்னர்களுக்கு அடங்கிய மாணியக்காரர்கள் என்றும், மூன்றாவது வல்லாள தேவன் மறைந்த பிறகு ஹொய்சள நாட்டைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு விஜயநகரப் பேரரசை அமைத்தனர் என்றும் கூறப்படுகின்றன.

(7) 1474ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிற்கு வந்த இரஷ்ய நாட்டு வழிப்போக்கனாகிய அதேனேஷியஸ் நிகிடின் என்பவர் ஹரிஹர-புக்கன் இருவரையும் 'இந்து கடம்பச் சுல்தான்கள்' என்றழைத் துள்ளமையால், இவர்கள் வனவாசியை ஆண்ட கடம்ப அரசகுலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்பதாகும்.

மேலே கூறப்பெற்ற பலவிதமான செவிவழிச் செய்திகளையும் கதைகளையும் ஆராய்ந்து இராபர்ட் சிவெல் என்பவர் ஒருவிதமான முடிவிற்கு வந்துள்ளார். ஹரிஹரனும், புக்கனும் குறும்ப இனத்தைச் சேர்ந்தவர்கள்; வாரங்கல் நாட்டு அரசனிடம் அலுவல் பார்த்தவர்கள்; 1323ஆம் ஆண்டில் வாரங்கல் கோட்டை, துக்ளக் முகம்மதுவால் அழிவுற்ற பிறகு, ஆனெகுந்தி அல்லது கம்பிலிநாட்டுக் கம்பிலிராயனிடம் அலுவலில் அமர்ந்தனர். 1327ஆம் ஆண்டில் பகாவுதீன் என்ற இஸ்லாமியத் தலைவனுக்குப் புகலிடமளித்து, அவனுக்காகக் கம்பிலிராயன்

உயிர் நீத்த பிறகு, மாலிக்நிபி என்பாரிடம் ஆனைகுந்தியும், கம்பிலி நாடும் ஒப்படைக்கப்பெற்றன. ஆனால், அந்த நாட்டு மக்கள் மாலிக்நிபி என்பவனுக்கு அடங்காமல் கலகம் செய்தனர். ஆகையால், டெல்லிச் சுல்தானாகிய முகம்மது துக்ளக் ஹரிஹரன்-புக்கன் என்பவர்களிடம் ஆனைகுந்தி நகரத்தை ஒப்படைத்து அரசராகவும், அமைச்சராகவும் பதவி வகிக்கும் படி உத்தர வளித்தார் என்பதாகும்.

மேற்கூறியவாறு ஒரு முடிவிற்கு வந்த இராபர்ட் சிவெல், ஹரிஹரன், புக்கனாகிய இருவரும் ஆந்திரர்களா, கன்னடியர்களா என்பதைப்பற்றிக் கூறவில்லை. அவ் விருவரும் முதலில் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்து, பின்னர் மாதவ வித்தியாரண்யருடைய போதனையினால் இந்து சமயத்தில் சேர்ந்தனர் என்றும் கூறவில்லை. இராபர்ட் சிவெல் விஜயநகர வரலாற்றை எழுதுவதற்கு முக்கிய ஆதாரமாகக் கருதப் பெறும் தம் நூலிலும் நூனிஸ் இதைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை.

ஆனால், சிவெல்லுக்குப் பிறகு விஜயநகர வரலாற்றைக் கல்வெட்டுகள், இலக்கியச் சான்றுகள் முதலியவைகளின் துணை கொண்டு ஆராய்ச்சி செய்த இந்திய வரலாற்று அறிஞர்கள், விஜயநகரத்தை அமைத்த ஹரிஹரன், புக்கன் என்ற இருவரும் ஆந்திரர்களா, கன்னடியர்களா என்ற கேள்வியை எழுப்பினர். அவர்களுள் ஹீராஸ் பாதிரியார், B.A. சாலட்டூர், P B. தேசாய், திரு. சத்தியநாதய்யர் முதலியோர் ஹரிஹரன், புக்கன் என்ற இருவரும் கன்னட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், மூன்றாவது, நான்காவது வல்லாள தேவர்களுக்குப் பின் ஹொய்சள நாட்டிலும் மற்றப் பகுதிகளிலும் விஜயநகரப் பேரரசைப் பரவும்படி செய்தனர் என்றும் கூறுவர். இவர்களுக்கு முக்கிய ஊன்று கோலாக இருப்பது முகம்மது காசிம் பெரிஷ்டாவின் வரலாற்றில் கூறப்பெற்ற ஒரு செய்தியாகும். அதில் மூன்றாம் வல்லாள தேவன் தம்முடைய நாட்டின் வடக்கு எல்லையை இஸ்லாமியப் படையெடுப்புகளினின்றும் காப்பதற்குத் துங்கபத்திரை நதியின் தென் கரையில் தம்முடைய மகன் வீரவிஜய வல்லாளன் என்பவனுடைய பெயரில் விஜயநகரத்தை அமைத்தார் என்று கூறியுள்ளார். இந் நகரமே பிற்காலத்தில் விஜயநகரப் பேரரசாக வளர்ச்சியுற்றது. விருபாட்சபுரம், ஹொசப் பட்டணம், வித்தியாநகரம், விஜயநகரம் என்ற பல பெயர்கள் இப்பொழுது ஹம்பி என்று வழங்கும் இடத்தையே குறிக்கும். 1339ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற ஹொய்சள கன்னடக் கல்வெட்டு ஒன்று, மூன்றாம் வல்லாள தேவன்

விருபாட்ச புரத்திலிருந்து மகிழ்ச்சியுடன் ஆட்சி செலுத்தியதாகக் கூறுகிறது. ஹம்பி விருபாட்சர் கோவிலில் காணப்பெறும் சாசனம் ஒன்றில் அந்த நகரம் ஹொய்சள நாட்டில் அமைந்துள்ள தாகக் கூறப்பட்டுள்ளது. 1348ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற ஹரிஹரனுடைய சாசனமொன்றில் வித்தியாநகரம் அவருடைய தலைநகராகக் கருதப்பட்டது. முதலாம் புக்க தேவன் ஹொய்சள வமிசத்தையும், அரசையும் தாங்குவதற்குத் தோன்றிய தூண் போன்றவன் என்று 1352ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற கல் வெட்டில் கூறப்பட்டுள்ளது. சங்கம வமிசத்து அரசர்கள் தொடக்கத்தில் ஹம்பியிலுள்ள விருபாட்சர் கோவிலைத் தங்களுடைய குலதெய்வக் கோவிலாகக் கருதினர். அவர் களுடைய கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் 'விருபாட்சர்' என்ற பெயரே இறுதியில் எழுதப் பெற்றுள்ளது. மேற்கூறப் பெற்ற சில ஏதுக்களைக் கொண்டு சங்கம வமிசத்து ஹரிஹரனும், புக்கனும் கன்னட அல்லது கர்நாடக இனத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்பெறுகின்றனர்.

சங்கமனுடைய புதல்வர்கள் ஹொய்சள மன்னர்களுக்கு அடங்கி ஆட்சி செலுத்தியவர்கள் என்பதற்குப் பல கல்வெட்டு கள் சான்று பகர்கின்றன. முதலாம் புக்கன் ஹொய்சள மன்னர் களின் மகாமண்டலீசுவரனாக இருந்தமையும் தெரிகிறது. மதுரைத் தலவரலாறு என்னும் நூலில் குமார கம்பணன் மைசூர் ஹொய்சள வமிசத்து அரசர்களின் வாயிற்காவலன் என்று அழைக்கப்படுகிறார். மூன்றும் வல்லாள தேவனும், வாரங்கல் கிருஷ்ணப்ப நாயக்கனும் சேர்ந்து, இஸ்லாமியப் படையெடுப்பு களை முறியடிப்பதற்குத் திட்டங்கள் வகுத்தனர் என்று பெரிஷ்டா கூறுவார். சங்கம வமிசத்து அரசர்கள் ஹொய்சள மன்னர் களுடைய வாரிசுதாரர்கள் என்று தங்களைக் கருதினர்.

ஆனால், மேற்கூறப் பெற்ற கொள்கைகளை மறுத்து, ஹரிஹரனும், புக்கனும் கன்னட நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லரென்றும், மூன்றும் வல்லாள தேவனுக்கு வீரவிஜய விருபாட்ச வல்லாளன் என்ற மகனே இல்லை யென்றும், விஜய நகரம் அவரால் அமைக்கப்பெறவில்லை என்றும் வாதித்து, வேறு ஒரு கொள்கையைப் பல வரலாற்று அறிஞர்கள் மேற்கொண்டு உள்ளனர். இவர்களுள் முக்கியமானவர்கள் திரு. N. வெங்கட்ட ரமணய்யா, K. A. நீலகண்ட சாஸ்திரி, J.D.M. டெரட் (Derret) முதலியோர் ஆவர். N. வெங்கட்டரமணய்யா அவர்கள் எழுதிய 'விஜயநகரப் பேரரசின் தோற்றம்' என்னும் நூலில் பின்வரும் முடிவான கொள்கையை நிலைநாட்டி யுள்ளார். 'முதலாம் ஹரிஹரனுடைய பாட்டன் புக்கராயனு உடையார் 1314ஆம்

ஆண்டில் ஆந்திர அரசனுகிய இரண்டாம் பிரதாப ருத்திரனுக்கு அடங்கி, நெல்லூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் குறுநில மன்னனுக ஆட்சி புரிந்துள்ளார். அவருடைய தகப்பனுகிய சங்கமனுக்கு ஐந்து மக்கள் இருந்தனர் என்பதைத் தவிர வேறெரு செய்தியும் விளங்க வில்லே. 1344ஆம் ஆண்டில் ஆந்திரப் பகுதியில் ஆட்சி செலுத்திய கன்யாநாயக் என்பவருக்கு முதலாம் ஹரிஹரன் நெருங்கிய உறவினன் என்பது விளங்குகிறது. கம்பிலி நகரத்தை முகம்மது துக்ளக் தம் வசப்படுத்திய பிறகு ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர்களும் இஸ்லாமிய சமயத்தில் சேரும்படி வற்புறுத்தப் பெற்றனர். பின்னர், அவ் விருவரும் கம்பிலி நாட்டிற்குத் தலேவராகவும், அமைச்சராகவும் நியமனம் பெற்றனர். ஆனேகுந்தி என்ற இடத்தைத் தலேநகராகக் கொண்டு தொடக்கத்தில் கம்பிலி நாட்டை ஆண்டு வந்தனர். 1344ஆம் ஆண்டிற்குமுன் இஸ்லாமிய சமயத்தை விட்டு விலகி விஜயநகரத்தை அமைத்து மாதவ வித்தியாரண்யருடைய அருள் பெற்று ஆட்சி செலுத்தினர்'* எனக் கூறுவார்.

மேலும், ஹரிஹரனும், புக்கனும் தங்களுடைய கொடியில் ஹொய்சள மன்னர்களுடைய அரச சின்னங்களாகிய புலி உருவத்தையும் கண்ட பேரண்டப் பட்சியையும் கொள்ளாது, காகதீயர்களுடைய உருவமாகிய வராக உருவத்தையும், தலே கீழாக நிறுத்தப் பெற்ற வாளின் உருவத்தையும், சூரிய, சந்திர பிம்பங்களையும் வரைந்துள்ளனர். காகதீய மன்னர்கள் அமைத்த நாயக்கத்தான முறையையும், வராகன் என்ற நாணயத்தையும், அரசியல் முறையில் பல அம்சங்களையும் மேற்கொண்டனர். ஆகையால், விஜயநகரத்தைத் தோற்றுவித்த சங்கம வமிசத்தினர் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் எனக் கூறுவார்.

திரு. K.A. நீலகண்ட சாஸ்திரியாரும், சோமசேகர சர்மாவும் இவர் கூறியதை ஆதரிக்கின்றனர். ஹொய்சளர்களேப் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய J. D. M. டெரட் என்பவரும் இக் கொள்கையை வலியுறுத்திப் பின்வருமாறு கூறுவார். 'மூன்றும் வல்லாள தேவனுடைய மகன் விஜயன் என்பவருடைய பெயரால் விஜயநகரம் அமைக்கப் பெற்றது என்னும் கூற்று நம்பத் தகுந்ததன்று. ஏனெனில், 'சென்னபசவராய கால ஞானம்' என்ற கன்னட நூலில் கூறப்பட்டதையே பெரிஷ்டாவும் எடுத்தாண்டு

*N. Vengataramanayya. Vijayanagar; Origin of the City and the Empire PP. 100 - 101

விஜயநகரம் மூன்றும் வல்லாளனால் அமைக்கப் பெற்றது என்று கூறுவார். வல்லாள தேவனுக்கு விஜயன் என்ற மகன் இருந்ததற்கு ஏற்ற வரலாற்று ஆதாரங்கள் கிடையா. இராபர்ட் சிவெல் தொகுத்து அளித்துள்ள ஏழுவகையான ஆதாரங்களில் பெரும்பாலானவை ஹரிஹரனும், புக்கனும், வாரங்கல் நாட்டுக் காகதீய அரசனுடன் சம்பந்தமுடையவர்கள் எனக் கூறுகின்றன. கம்பிலி தேவனுடைய அரசவையில் இவர்கள் கருவூல அதிகாரி களாகவும் இருந்தனர் என்பதும் உறுதியாகின்றது*.'

ஹரிஹரனும், புக்கனும், கன்னடியர்களா, ஆந்திரர்களா என்பதைக் கல்வெட்டுகளின் உதவி கொண்டும், இலக்கியத்தின் உதவி கொண்டும் நிச்சயம் செய்துவிட முடியாது. ஏனெனில், அவ் விருவரும் கன்னடக் கலாசாரத்தையும், ஆந்திரக் கலாசாரத் தையும் பாரபட்சமின்றிப் போற்றி யுள்ளனர். ஹரிஹரனும், புக்கனும் ஆந்திரர்களா, கன்னடியர்களா என்பதைப் பற்றிய ஆராய்ச்சியே பயனற்றதாகும். ஆந்திரம், கன்னடம், தமிழ், துளு, மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் வழங்கிய தென் னிந்தியா முழுவதிலும் விஜயநகரப் பேரரசு பரவியிருந்தது. தென் னிந்தியக் கலைகளும், கலாசாரமும் விஜயநகர அரசர்களால் போற்றி வளர்க்கப்பெற்றன. சங்கம, சாளுவ வமிசத்து அரசர்கள், கன்னடம், தெலுங்கு ஆகிய இரு மொழிகளையுமே போற்றி வளர்த் துள்ளனர். தற்காலத்தில் உள்ளது போன்ற தீவிரமான மொழி வேற்றுமை பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தி யாவில் இடம் பெறவில்லை. ஆகையால், விஜயநகரத்தை யமைத்த சங்கம வமிசத்து ஹரிஹரனும், புக்கனும் ஆந்திர-கர்நாடகத்தை இஸ்லாமியர்களுடைய இரக்கமற்ற ஆட்சியினின்றும் பாதுகாக்க முன்வந்தவர்கள் என்று கொள்வதே அமைவுடைத்தாகும்.

விஜயநகரம் அமைக்கப்பெற்ற இடம் : விஜயநகரம் 1336ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்றது என்பதைப் பெரும்பாலான வர லாற்றாசிரியர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர். அந் நகரத்தை அமைத்தவர்கள் கன்னடியர்களா, ஆந்திரர்களா என்பதைப் பற்றித்தான் கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன. 1336ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற விஜயநகரம் எங்குள்ளது? என்று ஆராய்வது பயனுடைத் தாகும். தற்காலத்தில் துங்கபத்திரை நதியின் குறுக்கே பெரியதோர் அணைக்கட்டுக் கட்டப் பெற்று அந் நதியின் நீர் ஒரு பெரிய சமுத்திரம் போன்று ஹாஸ்பெட் என்ற ஊரில் தேங்கியுள்ளது. ஹாஸ்பெட் என்ற ஊர் ஹோசப் பட்டணம் என்பதன் தற்காலப் பெயராக இருக்க வேண்டும். ஹாஸ்பெட்டிற்குக் கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் விஜய

*J.D.M. Derret. Hoysalar. P.168.

நகரத்தின் அழிவுச் சின்னங்கள் துங்கபத்திரை நதியின் தென் கரையிலுள்ள ஹம்பி என்னு மிடத்தில் காணப்படுகின்றன. துங்க பத்திரையின் வடக்குக் கரையில் ஹம்பியில் காணப்பெறும் அழிவுச் சின்னங்களின் எதிர்ப்புறமாக ஆனெகுந்தி என்னும் ஊர் அமைந்துள்ளது. ஆனெகுந்திக்குக் கிழக்கே துங்கபத்திரையின் தென்கரையில் கம்பிலி என்னும் ஊர் அமைந்துள்ளது. கம்பிலிக்குத் தெற்கே துரைவாடி, கும்மாட்டாஎன்ற இடங்கள் உள்ளன.

விஜயநகரத்தை யமைப்பதற்குரிய ஒரு காரணத்தைப் பெர்ஞேநூனிஸ் என்பவர் தம்முடைய வரலாற்றில் கூறியுள்ளார். ஆனெகுந்தி என்னும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே விஜய நகரப் பேரரசு வளர்ந்தோங்கியது என்னும் கூற்றில் உண்மை யுள்ளதாகத் தெரிகிறது. ஹரிஹரனும், புக்கனும் ஆனெகுந்தியில் தங்கள் ஆட்சியைத் தொடங்கியபின் துங்கபத்திரை நதியைக் கடந்து, அதன் தென்கரையில் காடுகள் நிறைந்திருந்த இடத்தில் வேட்டை யாடுவதற்குச் சென்றனர். வேட்டை நாய்களைக் கொண்டு விலங்குகளை விரட்டிப் பிடித்து வேட்டையாடுவது வழக்கமாகும். அவர்களுடைய வேட்டை நாய்கள் புலிகளையும், சிங்கங்களையும் விரட்டிச் செல்லும் வன்மையுடையன. ஆயினும், ஒருநாள் அந்த வேட்டைநாய்களுக்கு எதிரில் சிறிய முயல் ஒன்று ஓடி வந்தது. அந்த முயல், வேட்டைநாய்களுக்கு அஞ்சி ஓடாமல் அவற்றை எதிர்த்து நின்று போரிடத் தொடங்கியது. வேட்டை நாய்களும் முயலுக்கு அஞ்சிப் பின்வாங்கின. இந்த அதிச யத்தைக் கண்ட ஹரிஹரன், அந்த முயலானது சாதாரணமான முயலன்று ; வல்லமை பொருந்திய வேட்டை நாய்களைஎதிர்த்துப் போர் புரிவதற்கு அதனிடத்தில் சில தெய்வீகச் சக்திகள் இருக்க வேண்டு மெனக் கருதினர்.* பின்னர் ஆனெகுந்திக்குத் திரும்பு கையில் துங்கபத்திரை யாற்றங்கரையில் முனிபுங்கவர் ஒருவரைக் கண்டு முயலின் வல்லமையைப் பற்றிக் கூறினர். அம் முனிவர் தமக்கு அவ் விடத்தைக் காட்டும்படி செய்து, அவ் விடத்தில் புதியதொரு நகரத்தை யமைத்து, அதற்கு விஜயநகரம் என்று பெயரிடும்படி ஆசீர்வதித்தார். பாமினி சுல்தான்களுடைய தலை நகரமாகிய பீடார் நகரத்திற்கும், தமிழ்நாட்டில் பாஞ்சாலங் குறிச்சியில் கட்டபொம்ம நாயக்கருடைய அரண்மனை அமைக்கப் பெற்றதற்கும் இவ் விதக் கதைகள் வழக்கத்தில் உள்ளன. ஆகையால், வேட்டைநாய்களை முயல் துரத்தியடித்த இடத்தில் கோட்டை கொத்தளங்களை அமைத்தால் அதை ஒருவராலும் பிடிக்கவும் அழிக்கவும் முடியா தென்பது வெறுங் கட்டுக்கதையே யாகும்.

*R. Sewell. op. Citus. Page. 287

இந்து சமயங்களையும், சம்பிரதாயங்களையும், 'பூர்வ மரியாதை பத்ததிகளையும்' காப்பாற்றுவதற்காகவே விஜயநகரம் தோன்றியது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஹரிஹர ராயருக்கு ஆசீர்வாதம் செய்த முனிவர் மாதவ வித்தியா ரண்யராக இருக்க வேண்டும். அவர் துங்கபத்திரை நதிக்கரையின் வரலாற்றுப் பெருமையையும், இதிகாசங்களின் பெருமையையும் நன்குணர்ந்தவராதலின் விஜயநகரத்தை அமைப்பதற்கு ஏற்ற இடமாக அதைக் கருதினர் போலும். ஏனெனில், இராமாயணத் தில் வாலி, சுக்ரீவன், ஹனுமான் முதலிய சிறந்த வீரர்கள் வசித்த கிஷ்கிந்தை என்ற இடமே விஜயநகரம் அமைக்கப்பெற்ற இடம் எனப் பலர் கருதுகின்றனர். துங்கபத்திரை நதியின் வட கரையிலுள்ள ஒரு சுனைக்குப் பம்பாசரஸ் என்ற பெயர் வழக்கத் திலுள்ளது. ஸ்ரீராமன் சீதையைத் தேடிக்கொண்டு வந்தபோது இந்தப் பம்பாசரஸ் குளக்கரையில் தங்கிப் பின்னர் ஹனுமானை யும், சுக்ரீவனையும் கண்டு அவர்களுடன் நட்புக் கொண்ட இடம் இந்தக் கிஷ்கிந்தையே. விஜயநகரத்தைச் சூழ்ந்துள்ள மலைகள், ரிஷ்யமூக பர்வதம், மதங்க பர்வதம், மலய வந்த குன்றுகள் என்ற இராமாயண இதிகாசத்தில் வழங்கும்பெயர் களால் அழைக்கப்படுகின்றன. வாலி, சுக்ரீவன் ஹனுமான் ஆகிய மூவரும் வசித்த இடமாகையாலும் மற்ற வானர வீரர்கள் இருந்த இடமாகையாலும் அங்கே காணப்படும் வானரங்கள், மேற்கூறப்பெற்ற இதிகாச வீரர்களின் வழியில் வந்தவைகளாக இருக்கலாமென்று இன்றும் சிலர் நினைக்கின்றனர். அங்குள்ள கிராமங்களில் ஆஞ்சநேயரை வழிபடு தெய்வமாகக் கொண்டு மக்கள் வணங்குகின்றனர். அங்குச் சிதறிக் கிடக்கும் கருங்கற்கள், இலங்கை செல்வதற்கு அணை அமைப்பதற்காக வானரங்களால் குவிக்கப்பட்டவை எனப் பலர் கருதுகின்றனர். ஆகையால், இந்த இடம் சிறந்த இதிகாசமாகிய இராமாயணத்தோடு மிகுந்த தொடர்புடையதாக இருப்பதால் இந்து மதத்திலுள்ள சைவ வைணவச் சமயங்களின் உணர்ச்சி மேம்பாட்டால் இவ் விடத்தை வித்தியாரண்யர் தேர்ந்தெடுத்து விஜயநகரத்தை அமைக்கும்படி கூறியிருக்கலாம். முயலானது வேட்டைநாய்களை விரட்டியடித்தது போன்று, இந்து அரசர்கள் இஸ்லாமியப் படைகளை விரட்டி யடித்து வெற்றிபெற வேண்டு மென்பதும் வித்தியா ரண்யருடைய உள்ளக் கிடக்கையாக இருந்திருக்கலாம்.

மேலே கூறப்பெற்ற இதிகாசச் சார்புடைய காரணத்தோடு அமைந்த இடம் விஜயநகரம் ஆகும். அந் நகரத்தை வடநாட்டு இஸ்லாமியர்களுடைய குதிரைப் படைகளின் தாக்குதல்களில் இருந்தும், படையெடுப்புகளிலிருந்தும் பாதுகாப்பதற்கு ஏற்ற

இடமாக வித்தியாரண்யரும், ஹரிஹரனும் கருதியிருக்கக்கூடும். விஜயநகரத்திற்கருகில் துங்கபத்திரையின் நீரோட்டம் மிக வேகமாக இருத்தலோடு, சுழல்களும், கற்பாறைகளும் நிறைந் துள்ளமையால் இஸ்லாமியர்களுடைய குதிரைப் படைகள் எளிதில் அதைக் கடந்துவர முடியாது. இந் நிலப் பகுதியில் மழை மிகக் குறைவாயிருந்த போதிலும் மழையே இல்லாமல் வளரக் கூடிய முட்செடிகளும், கொடிகளும் பாறைக்கற்களும் மிகுதியாக உள்ளன. ஆற்றில் மக்களே விழுங்கிவிடும் முதலை களும் நிரம்பியிருந்தன. இவ் வித இடர்ப்பாடுகளும், குன்று களும் நிறைந்த இடங்களைக் கடந்து விஜயநகரத்தின் விரோதிகள் எளிதில் அதைக் கைப்பற்ற முடியாது என்ற எண்ணமும் அவர்களுக்கு உதித்திருக்கலாம்.

மேலும், விஜயநகரத்தைச் சூழ்ந்துள்ள இடங்கள், பழைய கற்கால, புதிய கற்கால மக்கள் தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கிய இடங்களாகக் கருதப்பெறுகின்றன. தென்னிந்திய வரலாற்றின் தொடக்கத்தில் வாழ்ந்த சாதவாகனர்கள், பின்னர்ச் சாளுக்கியர், ராட்டிரகூடர், ஹொய்சளர், யாதவர்கள் முதலிய இந்திய அரச வமிசங்களுடைய ஆட்சிகளில் துங்கபத்திரை நதி தீரம் அடங்கி இருந்தமையும் நம்மால் கருதற்பாலதாகும். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இவ் விடத்தில் இந்துக்களின் வெற்றிக்கு அறிகுறியாக விஜயநகரம் அமைந்தது நம்மால் சிந்திக்கற் பாலதாகும். சங்கம வமிசத்து அரசர்கள் வள மிக்க இடங்களைத் தேர்ந்தெடுக்காது வளங் குறைந்த இடங்களை தேர்ந்தெடுத்தது அவர்களுடைய கடுமையான உழைப்பையும், பாலைவனத்தைச் சோலைவன மாக்கும் மனத் திண்மையையும் எடுத்துக்காட்டும்.

ஆதிசங்கராச்சாரியார் இந்திய நாட்டின் ஒற்றுமையையும், அத்வைத தத்துவத்தின் பெருமையையும் எடுத்துக்காட்ட ஐந்து இடங்களில் ஐந்து மடாலயங்களை அமைத்தார். அவற்றுள் இமயமலைச் சாரலில் அமைக்கப் பெற்ற ரிஷிகேசம் என்னுமிடம் இந்தியாவின் சிரசையும், துவாரகை, ஜெகந்நாதபுரி என்ற இடங்களில் அமைக்கப் பெற்றவை, இரண்டு தோள்களையும், சிருங்கேரி, காஞ்சி ஆகிய இடங்களில் அமைக்கப் பெற்றவை, வயிற்றின் விலாப் புறங்களையும் குறிக்கும் என அறிஞர்கள் கூறுவர். இவ் வைந்துள் ஒன்றாகக் கருதப்பெறும் சிருங்கேரி மடத்தின் தலைவராக விளங்கிய மாதவ வித்தியாரண்யருடைய அருளாசியும், ஹரிஹரனுக்கும், புக்கனுக்கும் கிடைத்தது. 1346-47ஆம் ஆண்டில் சங்கம சகோதரர்கள் ஐவரும் சேர்ந்து சிருங்கேரி மடாலயத்திற்குத் தானம் வழங்கி யுள்ளனர்.

ஆகையால், தென்னிந்தியா முழுவதும் இஸ்லாமிய ஆட்சி பரவ விடாமல் தடுப்பதற்கும், இந்து சமயத்தையும், கோவில் களையும், கலாச்சாரங்களையும் பேணிப் பாதுகாத்த தென்னிந்திய அரச வமிசங்கள் அழிவுற்ற நிலையினால் ஏற்பட்ட ஒரு வெற்றி டத்தைப் பூர்த்தி செய்து தென்னிந்தியச் சமூகத்தையும், மக்களையும் காப்பாற்றுவதற்கும் விஜயநகரமும் அதைச் சார்ந்த பேரரசும் தோன்றியதெனக் கூறுவதில் பெரிய உண்மை அடங்கி யுள்ளது.

4. சங்கம வமிசத்து அரசர்கள்

முதலாம் ஹரிஹரன் கி.பி. 1336-1355

சங்கமனுடைய புதல்வர்களாகிய ஹரிஹரன், புக்கன், கம்பணன், மாரப்பன், முத்தப்பன் என்ற ஐவரும், ஹொய்சள அரசன் மூன்றும் வல்லாள தேவனுக்கு அடங்கி ஆட்சி புரிந்த வர்கள் என்பதற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. முதலாம் புக்கன் ஹொய்சள அரசர்களுக்கு அடங்கிய மகாமண்டலீசுவரன் என்றழைக்கப்படுகிறான். முதலாம் புக்கனுடைய மகனாகிய குமார கம்பணன் ஹொய்சள மன்னர்களுடைய வாயிற்காவலன் என்று மதுரைத் தலவரலாறு என்னும் நூல் கூறுகிறது.* மூன்றும் வல்லாள தேவனும், வாரங்கல்நாட்டுக் கிருஷ்ணப்ப நாயக்கனும் சேர்ந்து, இஸ்லாமிய ஆட்சியை அழிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர் என்று பெரிஷ்டா கூறுவார். மூன்றும் வல்லாளன் 1343ஆம் ஆண்டில் கண்ணனூர்-குப்பம் என்னு மிடத்தில் மதுரைச் சுல்தான் கியாத்-உதீன் என்பவரால் அநியாய முறையில் கொலை செய்யப்பட்டார். அவருடைய மகன் நான்காம் வல்லாளன் திருவண்ணாமலையில் வாழ்ந்து சந்ததி யின்றி இறந்தார் என்று அருணாசல புராணத்தில் கூறப் பெறுகிறது. ஆகையால், மூன்றாவது, நான்காவது வல்லாளதேவ அரசர்கள் இறந்த பிறகு சங்கமனுடைய புதல்வர்களாகிய ஹரி ஹரனும், புக்கனும், ஹொய்சள மன்னர்களுடைய வாரிசுக ளாயினர்.

மூன்றாம் வல்லாள தேவன் திருவண்ணாமலையில் தங்கி அரசாண்டதற்குப் பல சான்றுகள் உள்ளன. இன்றும் திருவண்ணா மலையில் உள்ள அருணாசலேஸ்வரர் கோவிலில் பிராகார மதில் களில் மூன்றாம் வல்லாளன் தம்முடைய மகன் நான்காம் வல்லா ளனுக்கு முடி சூட்டிவிட்டு, மதுரைச் சுல்தான்களுடன் போரிடு வதற்குச் சென்ற காட்சிகள் சிற்பங்களாகப் பல இடங்களில் செதுக்கப் பெற்றுள்ளன. ஆகையால், வடக்கு எல்லையில் கலகம் நேராதவாறு மூன்றாம் வல்லாளன், முதலாம் ஹரிஹரனை ஹொசப் பட்டணத்திற்கு மகா மண்டலீசுவரனாக நியமித்திருக்கலாம். 1340ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற சாசனம் ஒன்றில் முதலாம்

*R. Sathianathaier. The Nayaks of Madura. P. 374.

ஹரிஹரனுக்கு அடங்கிய குறுநில மன்னன் ஒருவன், வாதாபி நகரத்தில் ஒரு கோட்டையை அமைத்ததாக நாம் அறிகிறோம். அராபிக் கடற்கரை யோரமாக ஆட்சி செலுத்திய ஜமாலுதீன் முகம்மது என்ற இஸ்லாமியத் தலைவன் முதலாம் ஹரிஹரனுக்கு அடங்கியிருந்தான் என்று இபன்-பதூதா கூறியுள்ளார். தம் முடைய தம்பி முதலாம் புக்கனுக்கு இளவரசு பட்டம் சூட்டி அனந்தப்பூர் மாவட்டத்திலுள்ள குத்தி (Gutti) என்னும் கோட்டையைப் பாதுகாக்கும்படி செய்தார். முதலாம் கம்பணர் என்ற மற்றொரு தம்பி உதயகிரிக்கு ஆளுநராக நியமனம் செய்யப்பெற்றார். மூன்றாவது தம்பியாகிய மாரப்பன் கொங்கண நாட்டைக் கடம்பர்களிடமிருந்து கைப்பற்றினார். சந்திரகுத்தி, ஷிமோகா முதலிய இடங்களில் அவருடைய ஆட்சி நிலவியது.

தஞ்சை ஜில்லாவில் மாயூரத்திற்கு அருகிலுள்ள கோமல் என்னும் ஊரில் கிடைத்த செப்பேட்டின்படி 1350ஆம் ஆண்டில் மதுரைச் சுல்தானிய அரசின்மீது முதலாம் புக்கன் படையெடுத் திருக்க வேண்டும் எனத் தெரிகிறது[1]. பிரோஸ்ஷா துக்ளக்கின் வரலாற்றை எழுதிய ஷாம்சி-சிராஜ்-அபிப் என்ற வரலாற் றாசிரியர் புக்கன் என்ற இந்துத் தலைவன், குர்பத் ஹாசன் என்ற மதுரைச் சுல்தான்மீது படையெடுத்து வந்தான் எனக் கூறுவர். இந்தப் படையெழுச்சியே கோமல் செப்பேட்டில் கூறப்பட்ட தாகும். ஆனால், முதலாம் புக்கனுடைய படையெடுப்பினால் தமிழ்நாடு முழுவதும் முதலாம் ஹரிஹரனுடைய ஆட்சியில் அடங்கவில்லை. 1346ஆம் ஆண்டில் சிருங்கேரி சங்கர மடாலயத் திற்குச் சங்கம சகோதரர்கள் சேர்ந்து அளித்த சாசனத்தில் முதலாம் ஹரிஹரன் மேற்குக் கடலிலிருந்து கிழக்குக் கடற்கரை வரையில் ஆட்சி செலுத்தினார் என்று கூறப்பெற்றுள்ளது. நூனிஸ் என்பவர் எழுதிய வரலாற்றுக் குறிப்பில் முதலாம் ஹரிஹரனைத் தேவராயோ என்று அழைத்து, ஏழு ஆண்டுகள் ஆட்சி செலுத்தி நாட்டில் அமைதியை நிலைநாட்டினார் என்று கூறுவர்[2]. பெரிஷ்டா, டபடாபா (Taba-Taba) என்ற இரு இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களும், பாமினி இராஜ்யத் தலைவனாகிய அலாவுதீன் ஹாசன் கங்குவிற்கும், முதலாம் ஹரிஹரனுக்கும் போர் நடந்த தென்றும் அப் போரில் பின்னவர் தோல்வியுற்றார் என்றும் கூறுவர். ஆனால், அப் போரையும், பாமினி சுல்தானுடைய வெற்றியையும் உறுதி செய்ய வேறு ஆதாரங்கள் இல்லை.

முதலாம் ஹரிஹரன் ஏழாண்டுகள் அரசாண்டார் என்ற நூனிசின் கூற்றில் உண்மையில்லை. ஏனெனில், இவ் வரசனுடைய கல்வெட்டுகள் 1355ஆம் ஆண்டு வரையில் கிடைத்துள்ளன.

[1] M. E. R. 1925. Para 29.

[2] A Forgotten Empire. P. 288.

முதலாம் புக்கன் (C 1355-1377)

முதலாம் ஹரிஹரனுக்குப் பிறகு இளவரசனாக நியமிக்கப் பெற்ற அவருடைய தம்பி, விஜய நகரத்து அரசுரிமை எய்தினார். தம்முடைய அண்ணனுடைய ஆட்சியில் அடங்காத பல நிலப் பகுதிகளை வென்று விஜயநகர அரசை விரிவாகப் பரவச் செய்தார் என நூனிஸ் கூறுவார். ஆனால், முதலாம் புக்கன் கலிங்க நாட்டையும் வென்று அடிமைப் படுத்தினார் என்று நூனிஸ் கூறுவதில் உண்மையில்லை. முதலாம் புக்கன் காலத்தில் பாமினி சுல்தானாக அரசாண்டவர் முதலாம் முகம்மது ஆவார். இவ் விரு நாடுகளுக்கும் கொடிய போர் தோன்றியது. பாமினி சுல்தான் தனக்குத் தெலிங்கானா நாட்டிலிருந்து கிடைத்த ஓர் அரியணையில் அமர்ந்து ஒரு திருவிழாக் கொண்டாடியதாகவும், அத் திருவிழாவில் இன்னிசை யளித்தவர்களுக்கு விஜயநகரத்து அரசன் சன்மானம் செய்ய வேண்டுமென்று ஒரு தூதனை அனுப்பியதாகவும் பெரிஷ்டா கூறுவர். புக்கதேவன் அத் தூதனை அவமானப்படுத்தி அனுப்பினார். முகம்மது காசிம் பெரிஷ்டா புக்கதேவனைக் 'கிஷன்ராய்' என்று அழைத்து, வரலாற்றாசிரியர்களை மிகவும் குழப்பத்திற் குள்ளாக்கி இருக்கிறார்.

புக்கதேவன் தம்முடைய பெருஞ்சேனையுடன் துங்கபத்திரை நதியைக் கடந்து முதுகல் கோட்டையை முற்றுகையிட்டார். பாமினி அரசன் முதலாம் முகம்மது பெருங்கோபங் கொண்டு விஜயநகரப் படைகளுடன் போரிட்ட பொழுது, புக்கன் தம் முடைய குதிரைப்படைகளுடன் அதோனிக் கோட்டைக்குள் புகுந்து கொண்டபடியால், அதோனியைச் சுற்றியுள்ள இடங்களை அழிக்கும் படியும், மக்களைக் கொன்று குவிக்கும் படியும் முதலாம் முகம்மது உத்தரவிட்டார். 1367ஆம் ஆண்டில் கௌத்தால் என்னும் இடத்தில் பாமினி சுல்தானுக்கும், விஜயநகரத்துச் சேனைத்தலைவன் மல்லிநாதனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. மல்லிநாதனை, பெரிஷ்டா ஹோஜிமால்ராய் என்று அழைத்து உள்ளார்.

இப் போரில் மல்லிநாதன் அல்லது ஹோஜிமல்ராயன் தோல்வியுற்ற பிறகு முதலாம் புக்கனின் சேனைகள் விஜயநகரத்திற்குள் புகுந்து கொண்டபடியால், அந் நகரத்தைப் பாமினிப் படைகள் முற்றுகையிட்டன. நகரத்தைச் சுற்றி வாழ்ந்த மக்கள் ஈவு இரக்கமின்றிக் கொலை செய்யப் பெற்றனர். புக்கதேவன் இசைவல்லுநர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகையைக் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டதாகப் பெரிஷ்டா கூறுவார். முதலாம் முகமது 1375ஆம் ஆண்டில் இறந்த பிறகு அவருடைய

மகன் முஜாஹித்ஷா, துங்கபத்திரை நதிக்கும், கிருஷ்ணை நதிக்கும் இடைப்பட்ட நாடு பாமினி இராஜ்யத்திற்கு உரியது என்று கூறி, மற்றொரு போர் தொடங்கினன். முஜாஹித்ஷா விஜய நகரத்தின் செல்வத்தையும், கோட்டை கொத்தளங்களையும் பற்றிக் கேள்வியுற்று அந் நகரத்தின்மீது படையெடுத்தான். நகரம் மிக்க பாதுகாப்புடன் இருந்ததால், அதை முற்றுகை யிடுவதற்கு அஞ்சி, விஜயநகரப் படைகளுடன் கோட்டைக்கு வெளியில் போரிட்டுப் புக்காரயனை விஜயநகரத்திலிருந்து சேது பந்தன ராமேஸ்வரம் என்ற இடம் வரையில் துரத்திச் சென்று, பின்னர் அங்கிருந்து மீண்டும் துரத்தியதாகப் பெரிஷ்டா கூறுவதில் உண்மை யுள்ளதாகத் தோன்றவில்லை. சேதுபந்தன ராமேஸ் வரத்தில் ஒரு மசூதியை அமைத்ததாகவும் கூறப்படுகிறது. மீண்டும் விஜயநகரத்தை முற்றுகையிட்டதில் வெற்றி பெறுமல் முஜாஹித் உயிருக்குத் தப்பித் தம்முடைய நாட்டிற்குத் திரும்பிச் சென்றார். இப்போர் முடிந்தபின் விஜயநகரத்தின் வலிமையைப் பற்றிப் பெரிஷ்டா கூறுவது நாம் கவனிக்கத் தக்கதாகும். 'பாமினி சுல்தான்கள் வாளின் வன்மையால் விஜயநகரத்தரசர் களை அடக்க முயன்ற போதிலும் செல்வத்திலும், நாட்டின் பரப்பிலும், அதிகாரத்திலும் விஜயநகரத்தரசர் மேன்மை யுற்றிருந்தனர்' என்பதாகும். இக் கூற்றிலிருந்து முதலாம் புக்கன் ஆட்சியில் விஜயநகரம் மிக்க சிறப்புற் றிருந்ததென நாம் அறிகிறோம்.

விஜயநகர ஆட்சி தமிழ்நாட்டில் பரவுதல்

முதலாம் புக்கனுடைய ஆட்சிக்குமுன் தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியில் சம்புவராய மன்னர் அரசும், தெற்குப் பகு தியில் மதுரைச் சுல்தானிய அரசும் நிலை பெற்றிருந்தன. இவ் விரு நாடுகளையும் வென்று விஜயநகரத்தோடு சேரும்படி செய்தது முதலாம் புக்கனுடைய முதல் மகனாகிய கம்பண உடையாருடைய செயற்கரும் செயலாகும். கம்பண உடையாருக்குக் குமார கம்பணர் என்ற பெயரும் வழங்கியது. குமார கம்பணர் முதலாம் புக்கனுக்குத் தேபாயி என்னும் அரசியிடம் பிறந்தவர். கோலார் என்னு மிடத்தில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின் படி குமார கம்பணர் முல்பாகல் இராச்சியத்திற்கு மகா மண்டலீசுவரராக நியமிக்கப் பெற்றுச் சம்புவ ராயருடைய நாட்டையும், மதுரைச் சுல்தானுடைய நாட்டையும் வென்று, விஜயநகர அரசோடு சேர்க்கும்படி முதலாம் புக்க தேவனால் ஆணையிடப்பட்டார்* என்று கூறுகிறது. குமாரகம்பணர் சம்பு வராயருடைய இராஜகம்பீர இராஜ்யத்தையும், மதுரைச் சுல்

*Epigraphia Carnatica. Vol X. Kolar No. 222. dated 8th Feb. 1358

தானிய அரசையும் வென்று அடக்கியதற்கும், தமிழ் நாட்டை விஜயநகர மகாமண்டலீசுவரனுக ஆட்சி புரிந்ததற்கும் தகுந்த வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. குமாரகம்பணருடைய முதல் மனைவியாகிய கங்கா தேவியார் எழுதிய 'மதுரா விஜயம்' என்னும் நூலும், இராஜநாத திண்டிமன் என்பவர் எழுதிய 'சாளுவ அப்யூதயம்' என்னும் நூலும், இலக்கிய வரலாற்று ஆதாரங்களாகும். சம்புவராயர்கள் ஆட்சிக் காலத்திலும், குமார கம்பணருடைய ஆட்சிக் காலத்திலும் பொறிக்கப் பெற்ற கல் வெட்டுகளும் மிக்க துணை செய்கின்றன. இராஜ நாராயண சம்புவராயருடைய 69 கல்வெட்டுகளும் குமார கம்பணருடைய 132 கல்வெட்டுகளும் சித்தூர், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னர்க்காடு, தஞ்சை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களில் கிடைக்கின்றன. மேற் கூறப் பெற்ற ஆதாரங்களின் துணைகொண்டு தமிழ் நாட்டில் குமார கம்பணருடைய வெற்றிகளையும், ஆட்சியையும் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களும் சம்புவராய மன்னர்களுடைய ஆட்சியில் அடங்கி யிருந்தன. விரிஞ்சிபுரம், படைவீடு, காஞ்சிபுரம் ஆகிய இடங்கள் சம்புவராயர்களுடைய முக்கிய நகரங்களாகும். வென்று மண் கொண்ட ஏகாம்பரநாதச் சம்புவராயரும், அவருடைய மகன் இராஜநாராயணச் சம்புவராயரும் இந் நிலப் பகுதியில் இருந்த இஸ்லாமியப் படைகளை வென்று இராஜகம்பீர இராஜ்யம் என்ற நாட்டை அமைத்தனர். 1363ஆம் ஆண்டில் குமார கம்பணர் முல்பாகல் அல்லது கண்டகானனம் என்னும் இடத்திலிருந்து தம் முடைய சேனையுடன் தமிழ்நாட்டை நோக்கிப் படையெடுத்தார். பாலாற்றைக் கடந்து விரிஞ்சிபுரம் என்னும் இடத்தைக் கைப் பற்றிப் படைவீட்டில் அமைந்திருந்த இராஜநாராயண சம்புவ ராயருடைய கோட்டையை முற்றுகையிட்டார். சம்புவராய மன்னனும் தோல்வியுற்று விஜயநகர அரசிற்குக் கப்பங் கட்டு வதற்கு ஒப்புக் கொண்டார்.

சம்புவராய நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிப் பல சீர்த் திருத்தங்களை இயற்றிக் காஞ்சிபுரத்தில் குமார கம்பணன் தங்கி யிருந்த பொழுது தமிழன்னை அவருடைய கனவில்தோன்றி, மதுரையில் கொடுங்கோலாட்சி புரிந்த சுல்தான்களை வென்று, தமிழ்நாட்டைக் காப்பாற்றும்படி அருள் செய்ததாகக் கங்கா தேவி, தம்முடைய மதுரா விஜயத்தில் கூறியுள்ளார். இஸ்லாமி யர்களுடைய படையெழுச்சிகளாலும், மதுரைச் சுல்தான்

களுடைய ஆட்சியினாலும், தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அவல நிலையைப் பின் வருமாறு கூறியுள்ளார். 'மதுரைச் சுல்தான்களுடைய ஆட்சியால் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயருடைய சிதம்பரம் உண்மையில் புலிகள் வசிக்கும் காடாக மாறி விட்டது; திருவரங்கம் அல்லது ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்க நாதருடைய ஆலயம் இடிந்த நிலையிலுள்ளது; ஆதிசேஷனுடைய படங்கள்தான் அரங்கநாதருடைய திருமேனியின்மீது வெயிலும், மழையும் படாமல் காப்பாற்றுகின்றன; முற்காலத்தில் கஜாசூரனை வென்று அவனுடைய தோலை ஆடையாக உடுத்திக் கொண்ட சிவபெருமானுடைய தலமாகிய திருவானைக்காவில் கோவில் கொண்டுள்ள பெருமான் எவ்வித ஆடையுமின்றியே காணப்படுகிறார்; மற்றும் பல தேவாலயங்களின் கர்ப்பக் கிரகங்களும் மண்டபங்களும், கோபுரங்களும் இடிந்து வீழ்கின்றன; அவற்றின்மீது முளைத்துள்ள செடி கொடிகளும், மரங்களும் அவற்றை இடித்துத் தள்ளுகின்றன; நித்திய நைவேத்தியங்கள் இல்லாமல் மூடிக் கிடக்கும் பல கோவில்களின் வாயிற் கதவுகள் எல்லாம் செல்லரித்த நிலையில் உள்ளன'.

'தென்னிந்திய ஆலயங்களில் பரதநாட்டியம் நடந்த பொழுது ஒலித்த மிருதங்கம், முழவு முதலிய கருவிகளின் இன்னிசைக்குப் பதிலாக நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்கிறது. காவிரி நதியின் நீர் (தகுந்த பாதுகாப்பின்மையால்) கரைகளை உடைத்துக் கொண்டு நீர்ப்பாசனத்திற்கு உதவாமல் வீணாகிறது. யாகங்கள் செய்வதனால் தோன்றும் நறும் புகையும், வேதங்களின் முழக்கமும் பரவிய அக் கிராமங்களில் பசு வதையும், குரானை ஓதும் கொடிய சப்தமும் நடைபெறுகின்றன. மதுரை நகரின் ஆலயத்தைச் சுற்றியிருந்த தென்னை மரங்கள் எல்லாம் வெட்டப் பட்டு, அவற்றிற்குப் பதிலாகக் கூர்மையான மரங்கள் நடப்பட்டு அவற்றின் உச்சியில் மக்களுடைய தலைகள் கோக்கப் பட்டுத் தென்னங் குலைகள் போல் தொங்க விடப்பட்டுள்ளன. தாமிர பரணியில் மக்கள் குளிப்பதால் அவர்கள் அணிந்த சந்தனத்தின் மூலமாக அதன் தண்ணீர் வெண்மை நிறமாக இருப்பது வழக்கம். ஆனால், இப் பொழுது பசுக்களையும், அந்தணர்களையும் கொலை செய்வதால் தாமிரபரணியின் நீர் செந்நிறமாக மாறிவிட்டது.'*

மேற் கூறப்பெற்றவாறு தமிழ்நாட்டின் நிலைமையை எடுத்துக் கூறித் தமிழன்னை ஒரு வாளையும் அளித்து. அதன் உதவி கொண்டு மதுரையை ஆண்ட சுல்தானுடைய ஆட்சியை அழிக்கும்படி

*Madhuravijayam. Introduction PP. 5-6

குமாரகம்பணருக்கு அருள் செய்ததாகக் கங்காதேவி கூறியுள்ளார். இச் செய்திகள் புராணக் கதை போல இருந்தாலும் தமிழ்நாடும், தமிழ் மக்களும் அக் காலத்தில் அனுபவித்த துன்ப நிலையைத் தெற்றென எடுத்துக்காட்டுகின்றன. சம்புவராய நாட்டைத் தம்வசப்படுத்திய பிறகு குமார கம்பணர் கொங்கு நாட்டையும் விஜயநகர ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்த செய்தி, மோடஹல்லி, சடையம் பாளையம் என்னும் இரு இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகளால் உறுதியாகின்றது. பின்னர்க் குமார கம்பணர் 1371ஆம் ஆண்டில் மதுரையின்மீது படையெடுத்தார்; அப்பொழுது மதுரைச் சுல்தானுக ஆட்சி புரிந்த ஃபக்ரூதீன் முபராக்ஷா (Fakhruddin Mubarak Shah) என்பவரைத் தோற்கடித்தார். சுல்தானும் போரில் உயிரிழந்தார். மதுரையும் அதைச் சார்ந்த இடங்களும் இராமேசுவரம் வரையில் விஜயநகர அரசோடு சேர்க்கப்பட்டன.

குமார கம்பணருடைய அலுவலாளர்கள்

தமிழ்நாட்டின்மீது படையெடுத்துச் சம்புவராய நாடு, கொங்கு நாடு, மதுரை முதலிய நாடுகளைக் கைப்பற்றி ஆட்சி புரிவதற்குக் குமார கம்பணருக்கு உதவியாகப் பல அலுவலாளர்கள் இருந்தனர். அவர்களுள் சோமப்பத் தண்டநாயகர், கண்டாரகுளி மாரய்ய நாயகர், ஆனெகுந்தி விட்டப்பர், சாளுவமங்கு, கோபண்ணியா முதலியோர் முக்கிய மானவர்கள். மதுரை, திருவரங்கம், திருவானைக்கா, தில்லை முதலிய தலங்களில் நித்திய நைவேத்திய வழிபாடுகளும், திருவிழாக்களும் மீண்டும் நடத்தப் பெற்றன. தமிழ்நாட்டில் கிடைத்த பல கல் வெட்டுகள் குமார கம்பணருடைய ஆட்சி முறையையும், கோவில்களிலும், மடாலயங்களிலும் ஏற்படுத்திய சீர்த்திருத்தங்களையும் எடுத்துக் கூறுகின்றன. குமார கம்பணரால் வென்று அடக்கப்பட்ட இராஜகம்பீர ராஜ்யம், பாண்டியராஜ்யம் என்ற இரு ராஜ்யங்களுக்கும் அவர் மகா மண்டலீசுவரராக முதலாம் புக்கரால் நியமிக்கப் பெற்றார். குமார கம்பணர் 1374ஆம் ஆண்டில் முதலாம் புக்கருக்கு முன் உயிரிழந்தார். திருவண்ணாமலையில் கிடைத்த ஒரு கல்வெட்டின்படி குமார கம்பணர் 1374ஆம் ஆண்டு வரையில் உயிரோடு இருந்ததாகத் தெரிகிறது. அவருக்குப் பிறகு அவருடைய மகன் ஜம்மண உடையார் என்பார் தமிழ்நாட்டின் மகாமண்டலீசுவரராகப் பதவி ஏற்றார்*.

மேற்கூறப் பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பிறகுதான் முதலாம் புக்கர் இராஜ பரமேஸ்வரன், பூர்வ, பச்சிம, சமுத்

*Dr. A. Krishnaswami, The Tamil Country under Vijayanager P. 66

திராதிபதி என்ற பட்டங்களைப் புனைந்து கொண்டார். நூனிஸ் என்பவர், 'கலிங்க நாட்டையும் முதலாம் புக்கர் கைப்பற்றினார்' என்று கூறியதில் உண்மை யில்லை. 1368ஆம் ஆண்டில் மைசூர் நாட்டில் வைணவர்களுக்கும், சமணர்களுக்கும் இடையே தோன்றிய சமய வேறுபாட்டை அமைதியான முறையில் புக்கன் தீர்த்து வைத்தார். 'இவ் விரு சமயங்களைப் பின்பற்றியவர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்றும் ஒரு சமயத்தைச் சேர்ந்த வர்களுக்கு நேர்ந்த துன்பத்தை மற்றொரு சமயத்தவர்களும் தங்களுடைய துன்பமாகக் கருத வேண்டும் என்றும் கூறி' அவர் களுடைய வேற்றுமைகளை நீக்கிக் கொள்ளும்படி உத்தரவிட்டார். புக்கனுடைய ஆட்சிக் காலத்தில் விஜயநகர அரசின் நிலைமை யைப்பற்றிப் பெரிஷ்டாவின் கூற்றுகள் விஜயநகர அரசின் பெருமையை உணர்த்துகின்றன. 'அதிகாரத்திலும். செல்வத் திலும் நிலப்பரப்பிலும் விஜயநகரத்து அரசர்கள் பாமினி சுல்தான் களைவிடச் சிறந்து விளங்கினர். மேலைக் கடற்கரையில் உள்ள கோவா, பெல்காம் முதலிய இடங்கள் அவர்களுக்குச் சொந்த மானவை. துளுநாட்டின் முழுப்பாகமும் அந் நாட்டைச் சேர்ந் திருந்தது. விஜயநகர அரசில் பெருவாரியான மக்கள் வாழ்ந்தனர். மக்களும் கலகம் செய்யாமல் வாழ்க்கை நடத்தினர். மலையாளம், இலங்கை முதலிய நாட்டரசர்கள் ஆண்டுதோறும் கப்பம் செலுத்தியதும் அன்றித் தங்களுடைய பிரதிநிதிகளை விஜயநகர அரசவையில் நியமித்திருந்தனர்.'*

இரண்டாம் ஹரிஹரன் (1377-1404)

முதலாம் புக்கனுக்குப் பின் அவருடைய மூன்றாவது மகன் இரண்டாவது ஹரிஹரன் என்பார் விஜயநகர அரசர்களைப் பட்ட மேற்றார். இவ் வரசனுடைய ஆட்சிக் காலத்தில் விஜயநகரம் ஒரு பேரரசாக வளர்ச்சி யடைந்தது. 1390ஆம் ஆண்டில் இரண்டாம் புக்கன் என்ற இளவரசன் வாரங்கல் நாட்டின்மீது படையெடுத்தார். இப் படையெழுச்சியால் பெரும்பயன் ஒன்றும் விளைய வில்லை. ஆனால், பாங்கல் (Pangal) என்னும் இடம் கைப் பற்றப் பெற்றது. பின்னர்த் தெலிங்கானா நாட்டில் விஜயநகரப் பேரரசு பரவுவதற்கு இவ் விடம் வசதியாக இருந்தது.

விஜயநகர அரசின் வடமேற்குப் பகுதியில் கோவா, சௌல் தபோல் முதலிய இடங்களிலும் விஜயநகர ஆதிக்கம் பரவியது. கிருஷ்ணாநதி, பேரரசின் வடக்கு எல்லை யாயிற்று. கொண்டவீடு என்னு மிடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த ரெட்டி களிடமிருந்து கர்நூல், குண்டூர், நெல்லூர் முதலிய இடங்கள்

*R. Sathianathaier Vol. II. P. 158.


குமார கம்பணனின் படையெடுப்பு
7½6
8½0
16
16
12
8
8
மல்பாகல்
சந்திரகிரி
திருப்பதி
சென்னை
வீரஞ்சிபுரம்
காஞ்சிபுரம்
வேலூர்
படைவீடு
திருவண்ணாமலை
சிதம்பரம்
கண்ணனூர்
கோங்குநாடு
ஸ்ரீரங்கம்
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
மதுரை
இராமேச்சுரம்
இலங்கை
இந்தியப் பேராழி

படம்—3

விஜயநகரப் பேரரசோடு சேர்த்துக் கொள்ளப் பெற்றன. 1378ஆம் ஆண்டில் மதுரை நாட்டின் தென்பகுதியில் கலகம் விளைவித்த அலாவுதீன் சிக்கந்தர்ஷா என்ற சுல்தான் அடக்கப் பெற்றார். அவருடன் மதுரைச் சுல்தான்களுடைய ஆட்சி முற்றிலும் மறைந்தது. தமிழ்நாட்டில் இரண்டாம் ஹரிஹர ருடைய கல்வெட்டுகள் முப்பதுக்குக் குறையாமல் காணப் படுகின்றன. அவற்றுள் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத்திரம் பதினேந்து காணப்படுகின்றன. அவை யன்றியும் நல்லூர், ஸ்ரீசைலம் ஆகிய இரண்டிடங்களிலிருந்தும் கிடைத்த செப்பேடு கள் இரண்டாம் ஹரிஹரருடைய பல விருதுகளைத் தொகுத்துக் கூறுகின்றன. 1399ஆம் ஆண்டில் வரையப்பெற்ற நல்லூர்ச் செப்பேடுகளில், 'வீரப்பிரதாபம் பொருந்தியவரும் அரசர்களுக் கெல்லாம் அரசராகியவரும் ஆகிய பூர்வ பச்சிம, உத்தர, தட்சிண சதுர்சமுத்திராதிபதி அரியண்ண உடையார்' என்று புகழப்பட்டுள்ளார்; வேதங்களுக்குப் பாஷியம் எழுதப் பெறு வதற்கு உதவி செய்தவர் என்றும், வேத மார்க்கத்தை உலகில் நிலைபெறும்படி செய்தவர் என்றும் கூறப்பட்டுள்ளார்.*

மேலே கூறப்பெற்றவற்றுள் 'உத்தர சமுத்திராதிபதி' என்ற வாக்குத்தொடர் ஆர்க்டிக் சமுத்திரத்தைக் குறிக்கிறதா என்று நாம் ஆராய்ந்தால், அத் தொடர் விஜயநகரப் பேரரசின் வடக்கு எல்லையாக அமைந்த கிருஷ்ணை நதியையே குறிப்பதாகத் தெரிய வரும். ஏனெனில், கடல்போல என்றும் வற்றுத ஜீவநதியாகிய கிருஷ்ணை இங்கு வடதிசைக் கடல் எனக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீசைலம் செப்பேடுகள் வடமொழியில் எழுதப் பெற்றுள்ளன. அவை இரண்டாம் ஹரிஹரன், மல்லீகார்ச்சுன தேவருடைய கோவிலின் முக மண்டபத்தை அமைத்த செய்தியைக்கூறுகின்றன. இச் செப்பேடுகளில் ராஜவியாசன், ராஜவால்மீகி என்ற விருதுகள் காணப் பெறுகின்றன. இவற்றிலிருந்து இரண்டாம் ஹரிஹரன் தான் முதல்முதலில் விஜயநகரப் பேரரசனைக் கருதப்பெற்றார் என்பது நன்கு விளக்கம் பெறுகிறது. சைவம், வைணவம், சமணம் ஆகிய மூன்று சமயங்களையும் சேர்ந்த மக்கள் பாரபட்சமின்றி நடத்தப்பெற்றனர்.

காளத்தி, ஸ்ரீசைலம், அகோபலம், திருப்பதி, சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய சைவ, வைணவ ஆலயங்களுக்கும் இன்னும் பல ஆலயங்களுக்கும் ஹரிஹரதேவர் ஆட்சியில் பல விதமான நன்கொடைகளும், கட்டளைகளும் வழங்கப் பெற்றன. நூனிஸ் என்பவர் எழுதிய வரலாற்றில் ஹரிஹர தேவராயர் என்னும் பெயரைப் 'புரியாரிதேவராயோ' (Puieoyre deoro) என்று எழுதி யுள்ளார்.

*Epigraphia Indica. Vol. III. P. 125.

'நானூர்த்த ரத்தின மாலே' என்ற வடமொழி அகராதி நூலை இயற்றிய இருகப்பர் என்ற சமணப் பெரியார் இரண்டாம் ஹரி ஹரருடைய சேனைத் தலைவராகவும், அமைச்சராகவும் பணியாற்றினார். 1422ஆம் ஆண்டு வரையில் அவர் விஜயநகரப் பேரரசர்களுக்கு அமைச்சராக விளங்கினர் என்றும் கூறப்பெறுகிறது. பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயுள்ள தென்னிந்திய நிலப்பகுதி முழுவதும் விஜயநகரப் பேரரசில் சேரப் பெற்று, அப்பேரரசு எட்டு இராச்சியங்களாகப் பிரிவுற்றிருந்தது. அவையாவன :

இராச்சியம்		தலைநகரங்கள்
(1)	துளு ராச்சியம்	- பரகூர், மங்களூர்
(2)	மலே ராச்சியம்	- (ஷிமோகா - வடகன்னடம்) வனவாசி
(3)	உதயகிரி ராச்சியம்	- நெல்லூர், உதயகிரி
(4)	பெனுகொண்டா ராச்சியம்	- பெனுகொண்டா
(5)	முலுவி ராச்சியம்	- முல்பாகல்
(6)	இராஜ கம்பீர ராச்சியம்	- (தொண்டைமண்டலம்) காஞ்சி
(7)	சோழ ராச்சியம்	- தஞ்சாவூர்
(8)	பாண்டிய ராச்சியம்	- மதுரை

இரண்டாம் ஹரிஹர தேவராயர், மல்லதேவி என்ற பெண்மணியை அரசியாகக் கொண்டிருந்தார் என்றும், அவள் யாதவகுல அரசனுகிய இராம தேவனுடைய கால்வழியில் வந்தவள் என்றும் ஒரு கல்வெட்டிலிருந்து நாம் அறிந்து கொள்ளுகிறோம். தமிழ்நாட்டில் இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளிலிருந்து, இரண்டாம் ஹரிஹர ராயருக்கு விருபண்ண உடையார், புக்க உடையார், தேவராயர் என்ற மூன்று குமாரர்கள் இருந்தனர் என்பதும் அவர்களுள் மூத்தவனுகிய விருபண்ண உடையார் 1377 முதல் 1400ஆம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் மகா மண்டலீசுவரனுக ஆட்சி செலுத்தினர் என்பதும் தெரியவருகின்றன. ஆலம்பூண்டி, சொரைக் காவூர் என்னும் இரண்டிடங்களில் கிடைத்த செப்பேடுகளிலிருந்து, பல வரலாற்றுண்மைகளை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆலம்பூண்டிச் செப்பேட்டில் விருபண்ண உடையார் தொண்டை மண்டலம், சோழநாடு, பாண்டியநாடு, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து


இரண்டாம் ஹரிஹரர் ஆட்சியில்
விஜயநகரப் பேரரசு ராஜ்யங்கள்.
(உத்தேசமானது)
7°6
8°0
8°4
20
16
12
8
பாமினி அரசு
விஜயநகரம்
வனவாசி
மலைராஜ்யம்
ஹம்பி ராஜ்யம்
பெனுகொண்டா ராஜ்யம்
உதயகிரி ராஜ்யம்
உதயகிரி
பெனுகொண்டா
இராஜகம்பீர ராஜ்யம்
படவீடு
காஞ்சிபுரம்
கோலார்
முல்பாகல் ராஜ்யம்
பரகூர்
மங்களூர் ராஜ்யம்
கதிரி
அரபிக் கடல்
சோழ ராஜ்யம்
தஞ்சாவூர்
பாண்டிய ராஜ்யம்
மதுரை
தென்காசி
திருவாங்கூர் தேசம்
இந்துப் பேராழி
இலங்கை
வங்காளக் குடா
7°6
8°0

படம் – 3 (a)

நிறைப் பொருள்களைத் திரட்டித் தம்முடைய தகப்பனிடம் ஒப்படைத்ததாக நாம் அறிகிறோம்.[1] சொரைக்காவூர் செப்பேடுகளில் விருபண்ண உடையார் இராமேசுவரத்தில் துலாபார தானம் செய்து புகழ் பெற்றதாகவும், ஆயிரம் பசுக்களை அந்தணர்களுக்குத் தானம் அளித்ததாகவும் கூறப்பெற்றுள்ளன. திருவரங்கம், தில்லை ஆகிய இரண்டு கோவில்களின் விமானங்களைப் பொன்னால் வேய்ந்ததாகவும் கூறப்பெற்றிருக்கிறது. ஆனால், இவை உண்மையான செய்திகள்தாமா என்று நம்மால் நிச்சயிக்க முடிய வில்லை.[2]

மேலே கூறப்பெற்ற செப்பேடுகளன்றியும் 1377ஆம் ஆண்டிலிருந்து 1400ஆம் ஆண்டு வரையில் விருபண்ண உடையார் ஆட்சியில்வரையப்பெற்ற 71 கல்வெட்டுகள், அக்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள கோவில்களுக்குப் பலவிதமான தானதருமங்கள் செய்ததைப் பற்றிக் கூறுகின்றன. திருவண்ணாமலைக் கோவிலில் காணப் பெறும் கல்வெட்டு ஒன்று, குமார கம்பணருடைய நினைவாக ஐந்து அந்தணர்கள் வேதபாராயணம் செய்வதற்குப் பிரம்மதேயமாக நிலம் விட்டதைப் பற்றிக் கூறுகிறது. தஞ்சை மாவட்டத்தில் வழுவூர்க் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டு, விருபண்ண உடையார் ஆட்சியில் உழவுத்தொழில் வளம்பெறுவதற்குக் குடிமக்கள் பெற்ற சலுகைகளைப் பற்றிக் கூறுகிறது[3]. குமார கம்பணருடைய மகாபிரதானியாகிய சோமய்யதண்ட நாயகரும் பிரதானி விட்டப்பருடைய மகன் அன்னப்ப சௌண்டப்பரும் விருபண்ண உடையாருடைய ஆட்சியில் அலுவலாளர்களாக இருந்தனர். அன்னப்ப சௌண்டப்பர் என்பவர் திருவரங்கம் கோவிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தைப் பழுது பார்த்ததாகவும் ஸ்ரீரங்க நாதருக்கு ஒரு திருவாசிகை செய்து வைத்ததாகவும் ஒரு கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. (No 72 and 1939)

விருபண்ண உடையாருக்குப்பின் நான்கு ஆண்டுகளுக்கு 1404ஆம் ஆண்டு வரையில் இரண்டாவது புக்கன் என்ற புக்கண உடையர் தமிழ்நாட்டில் மகாமண்டலீசுவரராக இருந்து, பின்னர்த் தம் தகப்பன் இரண்டாவது ஹரிஹர தேவராயருக்குப் பின் விஜயநகரப் பேரரசராகப் பதவியேற்றார். இரண்டாம் புக்கனுடைய ஆட்சிக் காலத்தில் வரையப்பெற்ற கல்வெட்டுகள் சுமார் 30க்குக் குறையாமல் தமிழ்நாட்டில் காணப்பெறுகின்றன.

[1]Epigraphia Indica. Vol III. P. 225.
[2]Ibid. P. 300. [3]No. 422 of 1912.

1336ஆம் ஆண்டிலிருந்து 1404ஆம் ஆண்டு வரையில் முதலாம் ஹரிஹரன், முதலாம் புக்கன், இரண்டாம் ஹரி ஹரன் ஆகிய மூன்று அரசர்கள் காலத்தில் விஜயநகரம் தோற்றுவிக்கப்பட்டுப் பின்னர் அது ஒரு பேரரசாக மாறி, வடக்கே கிருஷ்ணை நதிக் கரையிலிருந்து தெற்கே இராமேசு வரம் வரையில் பரவியது. ஆகையால், சங்கம வமிசத்து முதல் மூன்று மன்னர்கள், பல செயற்கருஞ் செயல்களைச் செய்துள்ளனர். அலாவுதீன் கில்ஜியின் படையெடுப்பிலிருந்து தென்னாட்டிற்கு ஏற்பட்ட துன்பங்களை நீக்கி, நிலையுள்ள ஓர் அரசை அமைத்து, மீண்டும் இஸ்லாமியப் படையெடுப்புகள் அடிக்கடி ஏற்படாத வாறு அவர்கள் செய்த நற்செயல்கள் வெற்றி பெறுவதற்கு ஏதுக்கள் எவை? இஸ்லாமியப் படையெழுச்சிகளால் துன்பமுற்ற ஹொய்சள, காகதீய வமிசத்து அரசர்களும், சம்புவராய மன்னர்களும், தெலுங்கு நாட்டு ரெட்டி இனத்துத் தலைவர்களும் சங்கம வமிசத்து அரசர்களுடன் ஒத்துழைக்க முன்வந்தனர். மூன்றும் வல்லாள தேவனால் தொடங்கப் பெற்ற சுதந்திர இயக்கம் சிருங்கேரி சங்கராச்சாரிய மடாலயத்தின் உதவியாலும், ஹம்பி விருபாட்சர் அருளினாலும் வேரூன்றி, ஹரிஹரன், புக்கன் ஆகிய சங்கம வமிசத் தலைவர்களின் முயற்சிகளினால் பெரும்பயனை அளித்தது எனக் கூறலாம். துக்ளக் முகமதுவின் பேரரசு கொள்கையும், செய்யத் தகாத செயல்களும், விஜய நகரமும், விஜயநகரப் பேரரசும் தோன்றுதவற்குக் காரணங் களாக இருந்தன என்றும் கூறலாம்.

5. இரண்டாம் புக்கனும் முதலாம் தேவராயனும்

(C 1404—1422)

1404ஆம் ஆண்டில் இரண்டாம் ஹரிஹராயர் இறந்த பிறகு விஜயநகர அரசிற்காக விருபண்ண உடையார், புக்கண்ண உடையார், முதலாம் தேவராயர் என்ற மூன்று புதல்வர்களும் போட்டியில் ஈடுபட்டனர் என்றும், முதலில் விருபண்ண உடையார் அல்லது விருபாட்சன் என்பவர் வெற்றி பெற்று ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றி யிருக்க வேண்டு மென்றும் திரு. நீலகண்ட சாஸ்திரியார் கருதுவர்.[1] ஆனால், விருபாட்சன் அல்லது விருபண்ண உடையாரை நீக்கிவிட்டு, இரண்டாம் புக்கன் அரசுரிமை எய்தி 1404-06 வரையில் அரசாண்டார். இறுதியாக மூன்றாவது மகனாகிய முதலாம் தேவராயர் அரசுரிமையைக் கைப்பற்றி, 1406ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விஜயநகரப் பேரரசராக முடி சூடிக் கொண்டார்[2]. இவ் விரு அரசர் களுடைய ஆட்சிக் காலத்தில் விஜயநகரத்தின் அரண்கள் முன்னரைவிட வலிமை செய்யப் பெற்றுப் புதிய மதிற்சுவர்களும், கோட்டை கொத்தளங்களும் அமைக்கப் பெற்றன. அவர்கள் ஆட்சியில் மிகவும் பயனுள்ள மற்றொரு வேலையும் முடிவுற்றது. துங்கபத்திரை நதியின் குறுக்கே அணையொன்று கட்டப்பட்டுப் பதினைந்து மைல் நீளமுள்ள கால்வாயின் மூலமாக விஜயநகரத் திற்கு நீர்ப்பாசன வசதி தோன்றியது. இந்த மன்னர்களால் அமைக்கப்பெற்ற அணைக்கட்டு மறைந்து விட்ட போதிலும், இன்றும் விஜயநகரக் கால்வாய் மூலமாகப் புதிய துங்கபத்திரை அணையிலிருந்து தண்ணீர் பாய்கிறது. இக் கால்வாய் கருங்கற் பாறை நிரம்பிய இடங்களை உடைத்து மிக்க பொருட் செலவில் அமைக்கப் பெற்றதாகும்.

முதலாம் தேவராயருடைய ஆட்சியின் தொடக்கத்தில் பாமினி சுல்தானாகிய பிரோஸ்ஷாவுடன் அற்ப காரணத் திற்காகப் பெரும் போர் உண்டாயிற்று என்று பெரிஷ்டா

[1] K.A.N.Sastri. A History of South India. P. 256
[2] Robert Sevewell. P. 54

கூறுவார். முதுகல் கிராமத்தில் வாழ்ந்த ஒரு குடியான வருடைய மகள் பெர்த்தா என்பவளின் எழில் நலங்களே ஒரந் தணன் மூலமாகக் கேள்வியுற்று, அவளை அடைவதற்காக முதலாம் தேவராயர், முதுகல் என்ற இடத்தை முற்றுகையிட்ட தாகவும், அதற்குப் பதிலாகப் பிரோஸ்ஷா விஜயநகரத்தின் மீது படையெடுத்ததாகவும் கூறுவர். முதுகல் என்ற இடம் விஜயநகர மன்னர்களின் ஆட்சியில் அப் பொழுது இடம் பெற்று இருந்தது. ஆகையால், தன்னுட்டுக் குடிமக்களைத் தேவராயன் துன்புறுத்தி யிருக்க முடியாது. பெர்த்தா என்ற பெண் விஜய நகர அரசனை மணந்து கொள்ள மறுத்ததாகக் கூறுவதும் நம்பத் தகுந்ததன்று. ஆகையால், விஜயநகர அரசர்களுக்கும், பாமினி சுல்தான்களுக்கும் இயற்கையாகவே உள்ள பொறுமை காரண மாகத்தான் இப் போர் தொடங்கியிருக்க வேண்டும். பாமினி சுல்தான்களுடைய படைகள் தோல்வியுற்ற போதிலும், வீணாக உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கு இரு நாடுகளுக்கும் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி விஜயநகர அரசன் முதலாம் தேவராயருடைய மகள் ஒருத்தியைப் பாமினி சுல்தான் மணந்து கொள்ளத் திருமணம் நடை பெற்ற தென்று பெரிஷ்டா கூறுவார். ஆனால், திருமணச் சடங்குகள் முடிவுற்ற பிறகு பாமினி சுல்தான் கோபங் கொண்டு மீண்டும் போரைத் தொடங்கியதாகவும் நாம் அறிகிறோம். இதனால், பெரிஷ்டாவின் இக் கதையை வரலாற்று உண்மை எனக் கொள்ள முடியவில்லை.

விஜயநகரப் பேரரசின் கிழக்குப் பகுதியில் கொண்ட வீட்டுப் பகுதியையும், கிருஷ்ணை, கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட நிலப் பகுதியையும் ஆண்ட சிற்றரசர்கள் ஆகிய ரெட்டிமார்களும் பிரோஸ்ஷாவுடன் சேர்ந்து கொண்டு தேவராயருக்கு எதிராக ஒரு முக்கூட்டு உடன்படிக்கையைத் தோற்றுவித்தனர். இதை எதிர்த்து இராஜமகேந்திரப் பகுதியை யாண்ட கட்டய்ய வேமன் என்ற ரெட்டித் தலைவனைத் தம்பக்கமாகத் தேவராயர் சேர்த்துக் கொள்ளவே, மீண்டும் பாமினி சுல்தானுக்கும் தேவ ராயருக்கும் போர் தொடங்கியது. 1419ஆம் ஆண்டில் நடந்த போரில் விஜயநகரப் படைகள், பாமினி சுல்தானுடைய படை களையும் அவனுடைய நண்பர்களுடைய சேனைகளையும் சேர்த்துத் தோற்கடித்துப் பெரும்வெற்றி கொண்டன. இப் போரில் நடை பெற்ற சண்டைகளில் தேவராயருடைய மகன் வீர விஜயராய னும், அமைச்சர் இலக்குமிதரனும் பெரும்பங்கு கொண்டனர். முதலாம் தேவராயருடைய மகன் வீரவிஜயராயருக்கு வீர புக்கன், விஜய புக்கன், வீர விஜய பூபதி என்ற பல பெயர்கள்

கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றன. ஆகையால், சில வரலாற்றாசிரியர்கள் இவரை இரண்டாம் புக்க தேவனின் மகன் எனப் பிழைபடக் கருதினர். திருவண்ணாமலைக் கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில், 'பூர்வ, தட்சிண, பச்சிம, சமுத்திராதிபதி இராஜாதி ராஜ ராஜபரமேஸ்வர ஸ்ரீவீரதேவராய மகாராயருடைய குமாரன் ஸ்ரீவீரவிஜயபூபதி உடையார்' என்று கூறுவதால் இவர் முதலாம் தேவராயருடைய மகன் என்பதில் ஐயமில்லை. 1408ஆம் ஆண்டிலிருந்து வீரவிஜயபூபதி தொண்டை மண்டலம், சோழமண்டலம் ஆகிய மாகாணத்திற்கு மகாமண்டலீசுவரராகப் பணியாற்றி யுள்ளார். அவருடைய ஆட்சியில் பொறிக்கப் பெற்ற 25 கல்வெட்டுகள் தமிழ்நாட்டில் வடவார்க்காடு, தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி முதலிய மாவட்டங்களில் காணப்பெறுகின்றன.

1422ஆம் ஆண்டில் முதலாம் தேவராயர் ஆயுட்காலத்திற்குப் பிறகு அவருடைய முதல்மகன் இராமச்சந்திர ராயர் என்பவர் சில திங்கள்களுக்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து பின்னர் மறைந்துவிட்டார். பின்னர் அவருடைய தம்பி வீரவிஜயபூபதி என்பவர் 1422 முதல் 1426ஆம் ஆண்டு வரையில் விஜயநகரப் பேரரசராகப் பதவி வகித்தார்.

முதலாம் தேவராயர் ஆட்சியில் விஜயநகரத்தின் நிலைமை :

முதலாம் தேவராயருடைய ஆட்சியினிறுதியில் இத்தாலியில் இருந்து இந்தியாவிற்கு வந்த நிகோலோ காண்டி (Nicolo Conti) என்னும் இத்தாலியர் விஜயநகரத்தைப் பற்றிக் கூறும் செய்திகளிலிருந்து விஜயநகரத்தின் பெருமையையும், மக்கள் கொண்டாடிய திருவிழாக்களையும், அவர்களுடைய வாழ்க்கையின் சில அம்சங்களையும் பற்றி நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. நிகோலோ காண்டி சூர்ஜர நாட்டிலுள்ள காம்பேயில் இறங்கி இருபது நாள்கள் தங்கியிருந்து, பிறகு பரசூர் என்ற இடத்திற்கும், எழில்மலைப் பிரதேசத்திற்கும் (Mount d Ely) வந்தார்; பின்னர் உள்நாட்டில் பயணம் செய்து விஜயநகரத்திற்கு வந்து சேர்ந்தார். காண்டி, விஜயநகரத்தைப் 'பிஸ்னகாலியா' என்றழைத்துள்ளார். 'விஜயநகரம் சிறிதும், பெரியதுமாகிய குன்றுகளிடையே அமைந்துளது. இந் நகரத்தின் சுற்றளவு அறுபது மைல் இருக்கும். இந் நகரத்திற்கு அமைக்கப் பெற்றிருக்கும் கோட்டைச்சுவர்கள் குன்றுகளோடு சென்று இணைகின்றன. குன்றுகளின் சரிவுகளிலுள்ள பள்ளத்தாக்குகளிலும் நகரத்தின் பகுதிகள் அமைந்துள்ளன. இதனால், இந் நகரத்தின் பரப்பளவு அதிகமாகிறது. இந் நகரத்தைப் பாதுகாக்கத் தொண்ணூறு ஆயிரம் வீரர்கள் இருப்பதாகத் தெரிகிறது.'

'விஜயநகரத்தில் வாழும் மக்கள் பலமுறை திருமணம் செய்து கொள்கின்றனர். கணவன்மார் இறந்தால் மனைவியரும் அவர்களுடன் சேர்ந்து உயிரிழக்கின்றனர். இந்த நாட்டரசர் இந்தியாவிலுள்ள மற்ற நாட்டரசர்களைவிட மிக்க செல்வமும், அதிகாரமும் பொருந்தியவராவார். இவ் வரசர் 12,000 மனைவியரைக் கொண்டுள்ளதாகக் கூறுகிறார்கள். அவர்களுள் 4,000 பேர் அரசனைப் பின் தொடர்ந்து அவர் எங்குச் சென்றாலும் செல்லுகிறார்கள். அவர்கள், அரண்மனையிலுள்ள சமையலறைகளில் வேலை பார்க்கின்றனர். சுமார் 4,000 பெண்டிர் சிறந்த ஆடையணிகளை அணிந்து குதிரைகளின் மீதமர்ந்து பிரயாணம் செய்கின்றனர். மீதமுள்ள பெண்டிர் பல்லக்குகளில் அமர்ந்து ஆண்மக்களால் சுமந்து செல்லப்படுகின்றனர். அரசன் இறந்தால் தாங்களும் உடன்கட்டையேறி உயிர்விட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் 2,000 அல்லது 3,000 பெண்டிர் அரண்மனையில் அனுமதிக்கப் படுகின்றனர். இவ்விதம் உடன்கட்டையேறி உயிர்விடுவதைக் கௌரவமான செய்கையெனக் கருதுகின்றனர்.'

'ஒவ்வோர் ஆண்டிலும் சில மாதங்களில் தாங்கள் வணங்கும் தெய்வங்களின் உருவச் சிலைகளை இரண்டு தேர்களின்மீது வைத்து, மக்கள் பின்தொடர்ந்துவர இழுத்துச் செல்கின்றனர். இத் தேர்களின்மீது பல தேவரடியார்கள் அலங்காரம் செய்துகொண்டு உட்கார்ந்து பல இன்னிசைகளை இசைக்கின்றனர். சில மக்கள் தேர்ச்சக்கரங்களில் விழுந்து உயிர் துறப்பதைத் தெய்வங்கள் விரும்புகின்றன எனக் கூறுகின்றனர். சிலர் தங்கள் உடலொடு கழிகளைக் கட்டிக்கொண்டு தேரின் ஒரு கயிற்றை அக் கழியின் முனையில்இணைத்துத் தொங்கிக்கொண்டு செல்கின்றனர்.'

'ஆண்டில் மும்முறை இந் நாட்டு மக்கள் பெரிய திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். ஒரு சமயம் ஆண்களும், பெண்களும், முதியோரும், இளைஞரும், ஆறுகளிலும், குளங்களிலும் குளித்துப் புத்தாடைகளணிந்து மூன்று நாள்களுக்கு விருந்து, நடனம், இசை முதலிய பொழுதுபோக்குகளில் காலத்தைக் கழிக்கின்றனர். மற்றொரு திருவிழாவில் கோவில்களிலும், வீடுகளின் கூரைகளிலும், வாயிற்படிகளிலும் நல்லெண்ணெய் விளக்குகளைக் கொளுத்தி இரவும் பகலும் எரிய விடுகின்றனர். மூன்றாவது திருநாள் ஒன்பது நாள்களுக்குக் கொண்டாடப் படுகிறது. மூன்றாவது திருவிழாவின்போது பலவிதமான வேடிக்கைகள் நடைபெறுகின்றன.... இன்னொரு திருவிழாவில் மக்கள் ஒருவர்மீது ஒருவர் மஞ்சள்நீர் தெளித்து விளையாடு

இன்றனர். அரசனும், அரசியும்கூட இவ் விழாவில் கலந்து கொள்கின்றனர்.'

விஜயநகரத்திற்குப் பதினைந்து நாள்கள் பயண தூரத்திற்கு வடக்கேயுள்ள ஒரு வைரச் சுரங்கத்தில் வைரங்கள் கிடைத்ததைப் பற்றியும் கூறியுள்ளார். விஜயநகரத்தில் வழக்கத்தில் இருந்த நாணயங்களையும், பீரங்கிகளில் உபயோகப்படுத்தும் கல்குண்டு களையும் பற்றிக் கூறுவார். விஜயநகரத்து மக்கள் அயல் நாட்டவர்களைப் பரங்கிகள் (Franks) என்றழைக்கின்றனர். தங்களுக்கு மாத்திரம் 'ஞானக் கண்' என்ற மூன்றாவது கண் உண்டென்றும், மற்ற நாட்டு மக்களைவிடத் தாங்கள் எல்லாவகையிலும் சிறந்த வர்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர். காம்பே நகரத்து மக்கள் மாத்திரம் காகிதத்தை உபயோகப் படுத்துகின்றனர். மற்றவர் பனை யோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதுகின்றனர். பிறரிடம் கடன் வாங்கித் திருப்பித்தர முடியாதவர்களைக் கடன் கொடுத்தவர்களுக்கு அடிமையாக்கும் வழக்கமும் இருந்தது.

வீரவிஜய ராயர் (1422-26)

முதலாம் தேவராயர் இறந்தபிறகு அவருடைய மகன் விஜய ராயர் என்பவர் விஜயநகரப் பேரரசராக அரியணையிலமர்ந்தார். நூனிஸ் தம்முடைய வரலாற்று நூலில், வீரவிஜயராயர் ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் என்றும், அவ் வாண்டுகளில் குறிப்பிடத்தக்க செயல்கள் ஒன்றும் செய்யவில்லை யென்றும் கூறுவார். தம்முடைய தகப்பனுடைய ஆட்சிக் காலத்தில் முல் பாகல் இராஜ்யத்திற்கு மகாமண்டலீசுவரராகப் பதவி வகித்த போது தண்டபள்ளிச் செப்பேடுகள் வரையப்பெற்றன. இச் செப்பேடுகள் வீரவிஜயராயர் தம்முடைய குருவாகிய கிரியாசக்தி என்பவருக்குக் கிரியாசக்திபுரம் என்ற பிரமதேயத்தை வழங்கிய செய்தியைக் கூறுகின்றன. 1404 முதல் 1424ஆம் ஆண்டு வரையில் வரையப்பெற்ற கல்வெட்டுகளில் வீரவிஜயராயர் முல் பாகலிலும், தமிழ்நாட்டிலும் மகாமண்டலீசுவரராகப் பணி யாற்றியமை விளக்கம் பெறுகிறது.

இவ் வரசன் ஆட்சியில் பாமினி சுல்தானாகிய அகமதுஷா என்பவர் விஜயநகரத்தின்மீது படையெடுத்துப் பல நாச வேலைகளைச் செய்தார் என்பதும் தெரிகிறது. துங்கபத்திரை நதியைக் கடந்து பாமினிப் படைகள் விஜயநகரத்தை முற்றுகை யிடத் தொடங்கியதாகவும், விஜயராயர் தம்முடைய கூடாரத் தில் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது பாமினி வீரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டதாகவும், பெரிஷ்டா கூறுவார்.

விஜயராயர் பாமினி வீரர்களிடம் இருந்து தப்பித்து ஒரு கருப்பந் தோட்டத்திற்குள் புகுந்து சாதாரண வீரனைப்போல் ஓட்டம் பிடித்தாகக் கூறப்படும் செய்தி எவ்வளவு உண்மையானது என்பது விளங்கவில்லை. பாமினிப் படைகள் விஜயநகரத்தை முற்றுகையிட்டு, நகரத்தின் சுற்றுப் புறங்களில் வாழ்ந்த மக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்ததாகவும், இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டால் அதற்காக அகமதுஷா தன்னுடைய வீரத்தைத் தானே புகழ்ந்து வெற்றிவிழா ஒன்று கொண்டாடுவது வழக்கமெனவும் பெரிஷ்டா கூறியுள்ளார். கோவில்கள் இடிக்கப்பெற்று அதிலிருந்த விக்கிரகங்கள் உடைத்து எறியப் பட்டன. மடாலயங்களுக்கும், கல்விச் சாலைகளுக்கும் பலவிதமான சேதங்கள் விளைந்தன. இவ்வித அழிவுச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு விஜயராயர் பாமினி சுல்தானுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டு, அவர் விரும்பியபடி கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டதாகவும் நாம் பெரிஷ்டாவின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

6. இரண்டாம் தேவராயர்

(C 1426—1449)

இரண்டாம் தேவராயர் தம் கல்வெட்டுகளில் 'கஜ வேட்டை கண்டருளிய' தேவராயர் என்று வழங்கப்பெறுகிறார். இத் தொடர்மொழியின் பொருள் இன்னதென்று தெளிவு பெறுமல் போனலும், இதற்கு இருவிதமாகப் பொருள் கூறப் படுகிறது. ஒன்று யானைகளை யொத்த வலிமை பொருந்திய பகையரசர்களை வென்றவர் என்பது; மற்றொன்று காட்டில் உள்ள யானைகளை வேட்டையாடிப் பிடித்துத் தன் சேனையில் வைத்துக் கொண்டார் என்பது. இவருடைய ஆட்சியின் தொடக்கத்தில் (1428) பெத்த கோமதி வேமன் என்பவருடைய சிற்றரசாகிய கொண்ட வீடு இராச்சியத்தை வென்று தம்முடைய பேரரசோடு சேர்த்துக் கொண்டார். இதனல், கலிங்க தேசத்துத் தென்னெல்லைக்கும், விஜயநகரப் பேரரசின் வட எல்லைக்கும் இடையில் ரெட்டி அரசர்களால் ஆளப் பெற்ற ராஜமகேந்திரச் சிற்றரசு அமைந்திருந்தது. 1435ஆம் ஆண்டில் கலிங்க நாடு கபிலீஸ்வர கஜபதி என்ற வீரமிக்க அரசரின் ஆட்சிக்குட்பட்டது. அவர் ராஜ மகேந்திரத்தின்மீது படையெடுக்கவே, அந் நாட்டுச் சிற்றரசன் இரண்டாம் தேவராயரின் உதவியை நாடினன். விஜயநகரப் படைகள் ராஜ மகேந்திர அரசனுகிய வீரபத்திர னுக்கு உதவியாக அனுப்பப் பெற்றன. கபிலீஸ்வரக் கஜபதியின் படையெடுப்பிலிருந்து ராஜ மகேந்திரம் விடுவிக்கப் பெற்றது. இரண்டாம் தேவராயர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசு திரு விதாங்கூரில் உள்ள கொல்லம் வரையில் பரவியது. ஆனல், கள்ளிக் கோட்டை அரசனுகிய சாமொரின் இரண்டாம் தேவ ராயருக்கு அடங்கியிருக்கவில்லை என்றும், விஜயநகரப் படைகள் தன்னுட்டையும் வென்று விடும் என்ற பயத்துடன் சாமொரின் இருந்ததாகவும் அப்துர்ரசாக் கூறுவார். தேவராயர் காலத்தில் தெற்கே இலங்கைத் தீவிலிருந்து வடக்கே குல்பர்கா வரையில் விஜயநகரப் பேரரசு பரவியிருந்ததெனவும் கூறுவார். கொல்லம், இலங்கை, பழவேற்காடு, பெகு, டெனசரிம், முதலிய நாடுகளும், மற்றும் பல நாடுகளும் தேவராயருக்குக் கப்பம் செலுத்தின என்று நூனிஸ் கூறுவார்*. பெகு, டெனசரிம் என்பன பர்மாப்

*R. Sewell. op. Citus. P. 289.

பகுதியைச் சேர்ந்தவை யாகையால், அவைகள் திறையளித் தனவா என்பது ஆராயத்தக்க தாகும்.

தேவராயர் ஆட்சிக் காலத்தில் பாமினி நாட்டின் சுல்தானுகிய இரண்டாவது அலாவுதீன் தம்முடைய முன்னோர் களின் வழக்கம் போல விஜயநகர மன்னரிடம் 'திறைப் பொருளைப்' பெறுவதற்குப் போர் தொடுத்தார். அலாவு தீனுடைய தம்பி முகம்மது என்பார் விஜயநகரத்தின்மீது படையெடுத்துப் பல அழிவு வேலைகளைச் செய்தான். இரண்டாம் தேவராயரும் பெரும்போரின் அபாயங்களை உணர்ந்து சந்து செய்து கொண்டார்.

1436ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்த அமைதி உடன்படிக்கை விஜயநகரப் பேரரசின் இராணுவ அமைப்பில் பல மாற்றங்களைச் செய்வதற்குக் காரணமாயிற்று. தேவராயர் தம்முடைய அமைச் சர்களைக் கலந்து பாமினி அரசர்கள் விஜயநகரத்துச் சேனை களின்மீது சுலபமாக வெற்றி கொள்வதற்குக் காரணங்களை ஆராயும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் தங்களுக்குள் ஆலோசனை செய்து பின்வரும் காரணங்களைக் கூறினர்.

(1) பாமினி தேசத்துப் படைகளில் குதிரைப் படைகள் சிறந்த பயிற்சி பெற்று விளங்குகின்றன.

(2) குதிரைப் படைகளைக் கைதேர்ந்த இஸ்லாமிய வீரர்கள் நடத்துகின்றனர்.

(3) பாமினிப் படையில் உள்ள வில் வீரர்கள் குறி தவறாது அம்புகளைச் செலுத்தும் முறையில் பழக்கப்பட்டுள்ளனர்.

மேற் கூறப் பெற்ற காரணங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவைகள் உண்மையானவை என்றுணர்ந்த தேவராயர், விஜய நகரப் படைகளைச் சீர்திருத்தி அமைக்கும் பணியில் தம் கவனத்தைச் செலுத்தினர். சிறந்த குதிரைகளை வாங்கி அவற்றை இஸ்லாமியக் குதிரை வீரர்களைக் கொண்டு பழக்கும்படி செய்தார். இஸ்லாமியர்களையும் சேனையில் பெருமளவில் சேர்த்துக் கொண்டார். இஸ்லாமிய வீரர்களுக்குத் தனியாகத் தங்குமிடங் கள் அமைக்கப் பெற்றன. அரசருடைய அரியணைக்கு முன் குரான் புத்தகத்தின் படியொன்று வைக்கப்பட்டது. ஏனெனில், இஸ்லாமிய வீரர்கள் அரசனுக்கு முன் மரியாதை செலுத்தும் பொழுது தங்களுடைய சமய வேதமாகிய குரானை அலட்சியம் செய்யவில்லை என்ற கொள்கையைப் பின்பற்றினர். வில்வீரர் களுக்கும் சிறந்த முறையில் பயிற்சிகள் அளிக்கப் பெற்றன.

இவ் விதம் இஸ்லாமிய வீரர்களைத் தம்முடைய சேனையில் சேர்த்துக் கொண்டதில் இரண்டாம் தேவராயர் வழிகாட்டியாக இருந்தார் எனக் கருத முடியாது. இவருக்கு முன் மூன்றும் வல்லாள தேவனும் இம் முறையைப் பின்பற்றி யிருந்தார்.

பாரசீகநாட்டுத் தூதுவராகிய அப்துர்ரசாக்கும், போர்த்துக் கீசிய வரலாற்றுசிரியராகிய நூனிஸ் என்பவரும் இரண்டாம் தேவராயருக்கு எதிராக நடந்ததொரு சதித்திட்டத்தைப் பற்றிக் கூறியுள்ளனர். தேவராயருடைய தம்பி ஒருவன் ஒரு விருந்திற்கு ஏற்பாடு செய்து அவ் விருந்து நடைபெறும் சமயத்தில் இரண்டாம் தேவராயரைக் கொலை செய்ய முயன்றதாகக் கூறுவர். ஆனால், நூனிஸ் இரண்டாம் தேவராயருடைய மகன் பீனராயர் என்பவரை அவருடைய உறவினன் ஒருவன் கொலை செய்ய முயன்று வெற்றியும் பெற்றதாகக் கூறுவார். இவ் விரு கூற்றுகளில் எது உண்மையானது என்று நம்மால் அறிய முடிய வில்லை, நூனிஸால் கூறப்பெற்ற பீனராயரும். இரண்டாம் தேவராயரும் ஒருவர்தாமா, இருவேறு நபர்களா என்பது இன்றும் சிக்கலாகவே உள்ளது. மேற்கூறப் பெற்ற சதித்திட்டம் உண்மையாகவே நடந்திருந்தால் அது பாமினி அரசனுகிய இரண்டாவது அலாவுதீனால் இரகசியமாக இரண்டாவது தேவ ராயரைக் கொலை செய்வதற்கென ஏற்பாடு செய்யப் பெற்ற தாக இருக்கக்கூடும். ஏனெனில், அப்துர்ரசாக்கின் வாக்கின்படி இரண்டாம் தேவராயர் கொலை செய்யப்பட வில்லை. அரண் மனையில் குழப்பமே தோன்றியது. இக் குழப்பம் மிகுந்த சமயத்தில் இரண்டாவது அலாவுதீன் படையெடுத்து, இராய்ச் சூர்ப் பகுதியைத் தம் வசப்படுத்த முயன்றார். தேவராயரும் பெரும்பொருள் கொடுத்து அமைதி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டி வந்தது.

இரண்டாம் தேவராயருடைய கல்வெட்டுகள் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் காணப்பெறுகின்றன. தமிழ் நாட்டில் மாத்திரம் இவ் வரசருடைய ஆட்சிக் காலத்தில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் 90க்கு மேல் காணப்பெறுகின்றன. இக் கல்வெட்டுகள் இவ் வரசருடைய ஆட்சியில் தமிழ் நாட்டில் உள்ள கோவில்களில் எவ் விதமான தான தருமங்கள், சீர் திருத்தங்கள் செய்யப் பெற்றன என்பதைப் பற்றிக் குறிப்பிடு கின்றன. இரண்டாம் தேவராயர் காலத்தில் விஜயநகரப் பேரரசு உன்னத நிலையை அடைந்ததெனக் கூறலாம். அவருடைய அமைச்சர்களாகிய இலக்குமிதரன் அல்லது இலக்கணன் அவருடைய தம்பி மாதணன் என்ற இருவரும் அரசனுக்குப் பெருதவி புரிந்து பேரரசைக் காப்பாற்றினர் என்று கூறலாம்.

இரண்டாம் தேவராயர் ஆட்சியில் விஜயநகரத்தின் நிலைமை :

1443ஆம் ஆண்டில், பாரசீக நாட்டுத் தூதராகிய அப்துர் ரசாக் என்பவர் இரண்டாம் தேவராயருடைய அரசவைக்கு வந்தார். விஜயநகரத்தில் தங்கியிருந்த பொழுது நாட்டு மக்களையும், அங்கு நடைபெற்ற வரலாற்றுச் செய்திகளையும், நகரத்தின் அமைப்பையும் பற்றித் தாம் நேரில் கண்டவாறும், கேள்வியுற்றவாறும் எழுதியுள்ளார். அவரால் எழுதப் பெற்ற பாரசீக நாட்டு வரலாற்றில் உள்ள ஒரு பகுதியில் விஜய நகரத்தின் இயற்கை அமைப்பும், ஆட்சி முறையும், மக்களுடைய வாழ்க்கை நிலையும் விரிவாகவும், தெளிவாகவும் கூறப் பெற்று உள்ளன. கள்ளிக் கோட்டையில் சாமொரினுடைய அரசவையில் அப்துர் ரசாக் தங்கியிருந்த பொழுது விஜயநகரத்திற்கு வரும் படி இரண்டாம் தேவராயரால் அழைக்கப் பெற்றார். அப் பேரரச ருடைய அழைப்பிற் கிணங்கிக் கள்ளிக் கோட்டையிலிருந்து கடல் மார்க்கமாக மங்களூரில் இறங்கி, அங்கிருந்து பெட்னூர் வழியாக விஜயநகரத்திற்கு வந்து சேர்ந்தார். மங்களூரில் பெரிய அரண் மனைகள் போன்ற இல்லங்களையும், வெண்கலத்தினால் அமைக்கப் பெற்ற கோவில் ஒன்றையும் தாம் கண்டதாகக் கூறுவார்.* 'வானளாவிய மலைகளையும், காடுகளையும் கடந்து பெட்னூர் என்னும் இடத்திற்கு வந்தேன். பெட்னூரிலும் அரண்மனை போன்ற இல்லங்களும், சிறந்த உருவச்சிலைகள் அமைந்த ஆலயங் களும் இருந்தன.' விஜயநகரத்திற்கு அப்துர்ரசாக் வந்து சேர்ந்தவுடன் இரண்டாம் தேவராயர் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்யப் பல வேலையாள்களை நியமித்து, அழகமைந்த இல்லம் ஒன்றில் தங்கியிருக்கும்படி செய்தார்.

'இரண்டாம் தேவராயருடைய பேரரசு (தெற்கே) இலங்கைத் தீவிலிருந்து வடக்கே குல்பர்கா வரையில் பரவி யிருந்தது. இப் பேரரசில் இரும்பு மலைகளை யொத்த ஆயிரக் கணக்கான யானைகளைக் காணலாம். விஜயநகரப் பேரரசில் பதினெரு லட்சம் போர் வீரர்கள் உள்ளனர். இப் பேரரசின் தலைவருக்கு ராயர்கள் என்ற பட்டம் வழங்கப்பட்டு வந்தது. இவருடைய அதிகாரங்கள் பல. இவரைப் போன்று மட்டற்ற அதிகாரங்களை உடைய வேறோர் அரசரை இந்திய நாட்டில் காண முடியாது.'

'விஜயநகரத்தைப் போன்ற நகரத்தை என்னுடைய கண்களால் இதற்கு முன் நான் கண்டதில்லை. உலகத்தில் இதற்கு ஈடாக ஒரு நகரம் இருந்ததென நான் கேள்விப் பட்டதும் இல்லை.

*R. Sewell. op. Citus. P. 85

ஏழு கோட்டைகள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப் பெற்று ஒவ்வொன்றும் மதிற்சுவர் ஒன்றால் சூழப்பட்டுள்ளது. முதலாவது மதிற்சுவருக்கு முன் ஓராள் உயரமுள்ள கருங்கற் பலகைகள் புதைக்கப்பட்டுள்ளன. இவ் வரண்களைக் குதிரைப் படைகளோ, காலாட்படைகளோ எளிதில் கடந்து செல்லாதவாறு இக் கருங் கற்கள் புதைக்கப்பட்டுள்ளன.'

'நகரத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஏழாவது அரணிற்குள் விஜயநகர அரசருடைய அரண்மனை அமைந்துளது. தெற்கு வடக்கில் இவ் வரண்களின் அகலம் இரண்டு பரசாங்குகள் (Parasang) இருக்கும்.* முதல் மூன்று கோட்டைகளின் இடை வெளிகளில் நஞ்சை நிலங்களும், தோட்டங்களும், வீடுகளும் நிரம்பியுள்ளன. மூன்றாவது அரணிலிருந்து ஏழாவது அரண் அமைந்துள்ள பகுதிகளில் கணக்கற்ற மக்களொடு, கடைவீதி களும், கடைகளும் காணப்பெறுகின்றன. அரண்மனைக்குப் பக்கத் தில் நான்கு கடைவீதிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு கடை வீதியின் நுழைவாயிலிலும் வளைவான விதானங்கள் அமைந் துள்ளன. இந்த விதானங்களின் அடிப்பாகத்தில் மக்கள் நுழைந்து சென்று உட்கார்வதற்குரிய வரிசைப் படிகள் அமைந்துள்ளன. அரசன் அமர்ந்து இருக்கும் சபாமண்டபம் உயரமான இடத்தில் அமைந்துள்ளது. கடைவீதிகள் நீளமாகவும், அகலமாகவும் உள்ளன.'

'மணம் நிறைந்த ரோஜா மலர்கள் நகரெங்கிலும் விற்கப் படுகின்றன. இந்நகரத்து மக்கள் ரோஜா மலர்களைத் தங்களுடைய உணவிற்கு அடுத்தபடியாக விரும்புகின்றனர். பொருள்களுக்கு ஏற்றவாறு கடைவீதிகள் காணப்பெறுகின்றன. ஆடைகளும், அணிகலன்களும் தனித்தனி வீதிகளில் விற்கப்படுகின்றன. அணிகல வியாபாரிகள் தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவற்றை எவ்வித அச்சமும் இன்றி வியாபாரம் செய் கின்றனர். கடைவீதிகளின் ஓரங்களிலும், அரண்மனையின் பகுதிகளிலும் காணப்பெறும் கற்கால்வாய்களில் தெளிவான தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது.'

விஜயநகரத்தில் அமைதியை நிலைநாட்டிக் குற்றங்கள் நடை பெறுதவாறு பாதுகாவல் செய்யப் போலிஸ் தலைவரின் கண் காணிப்பில் 12,000 காவலாளர்கள் இருந்தனர். இந்தப் போலிஸ் அலுவலாளர்களுக்கு அந் நகரத்து விலைமகளிர்களிடமிருந்து வசூல் செய்யப் பெற்ற தொகையிலிருந்து ஊதியங்கள் கொடுக் கப்பெற்றன. இந் நகரத்தில் வாழ்ந்த விலைமாதர்களின் ஆடை அலங்காரங்களும் அவர்கள் ஆடவர்களை மயக்கித் தங்கள் வசப்

*Parasang = $3\frac{1}{2}$ miles

படுத்தும் சாகசங்களும் வார்த்தைகளால் விவரிக்க முடியாதவை யாகும். அரசனுடைய அந்தப் புரத்தில் எழுநூற்றுக்கு மேற்பட்ட அரசிகளும், ஆசைநாயகிகளும் இருந்தனர்.*

அரண்மனையின் இடப் பக்கத்தில், அரண்மனைபோல் தோற்ற மளித்த 'திவான்காஞ' என்ற காரியாலயம் இருந்தது. இக் கட்டடத்தின் மத்தியில் ஒரு நீதி மன்றம் நடைபெற்றது. இம் மன்றத்தில் திவான் அல்லது தண்டநாயகர் அமர்ந்து குடிமக்க ளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று நீதி வழங்கிக் கொண்டு இருந்தார்.

பீயஸ் என்ற போர்த்துக்கீசியர் கிருஷ்ணதேவராயரை நேரில் கண்டு, அவருடைய தோற்றத்தை விவரித்திருப்பது போல் அப்துர்ரசாக்கும் இரண்டாம் தேவராயருடைய தோற்றத்தைப் பின்வருமாறு விவரிப்பர். 'அரசர்களுக்குரிய எல்லாவித இயல்பு களும் சூழ்ந்து, மிகப்பெரிய சபையில் அரசர் (இரண்டாம் தேவராயன்) அமர்ந்திருந்தார். அவருடைய இருக்கையின் இரு புறங்களிலும் பல அலுவலாளர்கள் வட்டவடிவமாக அமர்ந் திருந்தனர். வழவழப்பான பச்சை நிற ஆடைகளை அணிந்து கொண்டு அரசர் அமர்ந்திருந்தார். அவருடைய கழுத்தில் முத்துகளும், நவரத்தினங்களும் வைத்து இழைக்கப் பட்ட கழுத்தணி காணப்பட்டது. அரசர் மாந்தளிர் போன்ற நிறத் துடன் உயரமாகவும், சதைப்பற்று அதிகமில்லாமலும் இருந்தார். அவருடைய முகத்தில் வயது சென்றதற்குரிய அடையாளங்கள் காணப்பட்டன. ஆனால், தாடியோ, மீசையோ காணப்பட வில்லை. பிறரை வசப்படுத்தும் முகத்தெளிவுடன் காணப் பட்டார்.'

அப்துர்ரசாக் விஜயநகரத்திற்கு வந்து தங்கியிருந்த பொழுது மகாநவமி அல்லது தசராத் திருவிழா நடத்ததை நேரில் கண்டு பின்வருமாறு விவரித்துள்ளார்.

'மகாநவமித் திருவிழாவைக் கொண்டாடுவதற்குமுன் விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த (மகாமண்டலீஸ்வரர்களுக்கும் அமரநாயக்கர்களுக்கும், தண்டநாயகர்களுக்கும்) முக்கியமான அலுவலாளர்களுக்கும் ஓலைகள் போக்கப்பெற்றன. இந்த அலுவலாளர்கள் அரண்மனையின்முன் கூடியிருந்தனர். நன்முக அலங்கரிக்கப்பட்ட ஓராயிரம் யானைகளைக் கொண்டுவந்திருந் தனர். யானைகள் நின்று கொண்டிருந்த அகலமான இடம் மிக அழகாக அலங்காரம் செய்யப்பெற்றிருந்தது. யானைகள் நிறுத்தி

*Elliot and Dowson. Vol. IV. PP. 106-114


தென்னிந்தியா-1300-1500
716
810
814
20
16
12
8
84
பாமினி சுல்தானிய அரசு
தேவகிரி
துக்ளக்காபாத்
பீடார்
குல்பர்கா
விஜயபுரி
கடகம்
வால்டேர்
விசாகப்பட்டினம்
முதுகல்
ஆனகுந்தி
இராய்ச்சூர்
கொண்டபள்ளி
வனவாசி
கோவா
விஜயகரம்
பங்காபூர்
கம்பிலி
அநேகொண்டி
குத்தி
உதயகிரி
கோகர்ணம்
பெனுகொண்டா
ஹொனவார்
நெல்லூர்
துவாரசமுத்திரம்
திருப்பதி
சந்திரகிரி
பழவேற்காடு
யாதவராயர் நாடு
சென்னை
திருக்கோவிலூர்
மேல்கோட்டை
வேலூர்
மங்களூர்
உம்மத்தூர்
சம்புவராயர் நாடு
கண்ணனூர்
கொங்கு நாடு
படைவீடு
கள்ளிக்கோட்டை
மேற்குத் தொடர்ச்சி மலை
சுல்தானிய அரசு
மதுரை
கொச்சி
தென்காசி
பாண்டியர் நாடு
திருவனந்தபுரம்
இலங்கை
இந்துப் பேராழி
வங்காளக் குடாக்கடல்

படம்—4

வைக்கப்பட்டிருந்த காட்சியைக் கடல்களில் அலைவீசுகின்ற காட்சிக்கு ஒப்பிடலாம். இந்த இடத்திற்கு வலப்பக்கத்தில் மூன்று அல்லது நான்கு மாடிகள் கொண்ட கூடாரங்கள் பல அமைக்கப் பட்டிருந்தன. இக் கூடாரங்களின் வெளிப் புறங்களில் பலவித மான நிறங்கள் கொண்ட படங்களும், சிலைகளும் வைக்கப் பெற்றிருந்தன. இந்தக் கூடாரங்கள் சுழன்று சுழன்று புதிய தோற்றங்களை அளித்து மக்களுக்குக் களிப்பூட்டின.'

மேற்கூறப் பெற்றபடி யானைகள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு எதிர்ப்புறத்தில் ஒன்பது கூடாரங்கள் கொண்டதாக அமைக்கப்பெற்ற (தாற்காலிக) அரண்மனை யொன்று அமை வுற்று இருந்தது. ஒன்பதாவது கூடாரத்தில் அரசருடைய அரியணை வைக்கப்பட்டிருந்தது. ஏழாவது கூடாரத்தில் அப்துர் ரசாக்கிற்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அரசர் இருந்த கூடாரத்திற்கும் மற்றக் கூடாரங்களுக்கும் இருந்த இடைவெளி யில் இசை வல்லுநர்களும் கதா காலேட்சேபம் செய்பவர்களும் நிரம்பியிருந்தனர். அரசருடைய அரியணைக்கு எதிரே நன்கு அலங் காரம் செய்யப் பெற்ற ஆடல் மகளிர் திரைமறைவில் நின்று கொண்டிருந்தனர். யானைகளைப் பழக்கிப் பலவித விசித்திர செய்கைகளைச் செய்விக்கும் கழற் கூத்தர்கள் இருந்தனர் மகா நவமியின் முதல் மூன்று நாள்களில் பலவித வாண வேடிக்கை களும், மல்யுத்தங்களும், சிலம்ப விளையாட்டுகளும், காலைமுதல் மாலை வரையில் நடைபெற்றன. மூன்றாவது நாளன்று அப்துர் ரசாக் அரசனைக் காண முடிந்தது.

விஜயநகர அரசர் அமர்ந்திருந்த அரியணை தங்கத்திலால் செய்யப்பெற்று விலையுயர்ந்த நவரத்தினங்களால் இழைக்கப் பெற்றிருந்தது. அரியணைக்குமுன் மெத்தை வைத்துத் தைக்கப் பெற்ற சதுரமான மேஜை ஒன்று இருந்தது. இம் மெத்தையின் மீது மூன்று வரிசையில் முத்துகள் இணைக்கப்பட்டிருந்தன. மூன்று நாள்களுக்கு இந்த மெத்தையின்மீது அரசர் உட்காருவது வழக்கம். மகா நவமித் திருவிழா முடிந்த பிறகு, அரசருடைய கூடாரத்தில் அமைக்கப் பட்டிருந்த நான்கு மேடைகள் எனக்குக் காட்டப்பெற்றன. இந்த நான்கு மேடைகளின் நான்கு பக்கங் களிலும் தங்கத்திலான தகடுகள் வைத்து, நவரத்தினங் களால் இழைக்கப் பெற்றிருந்தன. இந்தத் தங்கத் தகட்டின் கனம், உடைவாள் தகட்டின் கனத்தை யொத்திருந்தது. தங்கத்திலான ஆணிகள் கொண்டு இத் தகடுகள் பொருத்தப் பட்டிருந்தன. இம் மேடைகளுள் ஒன்றன்மீது பெரிய அரியணை யொன்றும் வைக்கப்பட்டிருந்தது.*

*Robert Sewell. A Forgotten Empire. PP. 90-93.

'அரசாங்க ஆவணங்கள் எல்லாம் பத்திரமாகவும், இவாக் காக்களுக்கு ஏற்றூற் போலவும் அடுக்கப் பெற்றிருந்தன என்றும், ஆவணங்கள் பணையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதப் பெற்றன என்றும் அப்துர்ரசாக் கூறுவார். கொலைக் குற்றம் செய்த கொடியோர்கள் மதங் கொண்ட யானைகளின்முன் எறியப் பட்டு மிதித்துக் கொல்லும்படி செய்யப்பட்டனர். மக்கள் எப் பொழுதும் வெற்றிலை பாக்கு மென்று கொண்டிருந்தனர். இந்த வெற்றிலை பாக்குப் போடுவதனுல் விஜயநகர அரசர்கள் பெரு வாரியான அரசிளங் குமரிகளைத் தங்கள் அரண்மனையில் வைத்துச் சமாளித்தனர் போலும்' எனவும் கூறுவர்.*

*R. Sathianathair. Vol. II. P. 162.

7. சங்கம வமிசத்து அரசர்களின் வீழ்ச்சி

1446ஆம் ஆண்டில் மே மாதத்தில் இரண்டாம் தேவராயர் இறந்த பிறகு அவருடைய முதல் மகன் இரண்டாம் விஜயராயர் சிறிது காலம் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. பின்பு அவருடைய இரண்டாவது மகன் மல்லிகார்ச்சுனராயர் என்பவர் 1447ஆம் ஆண்டில் அரியணையில் அமர்ந்தார். அவருடைய ஆட்சிக் கால மாகிய (கி.பி. 1447-65) பதினெட்டு ஆண்டுகளில் விஜயநகர அரசு பலவித இன்னல்களுக்கு உட்பட்டது. அன்னியர் படை யெடுப்புகளும், உள்நாட்டுப் பூசல்களும் நிறையவே மல்லிகார்ச் சுனருடைய அரசியல் சீர்குலையத் தொடங்கியது. அரசருடைய திறமையின்மையும் அன்னியப் படையெடுப்புகளும் விஜயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டைக் குலைத்தன.

கபிலீஸ்வர கஜபதியின் படையெடுப்பு :

கபிலீஸ்வர கஜபதி என்பவர் கலிங்க நாட்டின் அரசன் நான்காம் பானுதேவன் என்பவரிடம் அமைச்சராகப் பணி யாற்றியபின் அந்த அரசனை நீக்கிவிட்டு, 1435ஆம் ஆண்டில் தம்முடைய சூரியவமிச ஆட்சியை வன்முறை மூலமாக நிலை நாட்டினார். 1437ஆம் ஆண்டில் இரண்டாம் தேவராயர் ஆட்சி யில் விஜயநகரப் பேரரசின்மீது படையெடுத்தார். ஆனால், இரண்டாம் தேவராயர், மல்லப்ப உடையார் என்ற சேனைத் தலைவரின் தலைமையில் ஒரு சேனையை அனுப்பிக் கபிலீஸ்வர கஜ பதியின் சேனையை முறியடித்துத் துரத்திவிட்டார். இத் தோல்வியை வெற்றியாக மாற்றுவதற்கு, இரண்டாம் தேவ ராயருக்குப்பின், மல்லிகார்ச்சுனர் ஆட்சியில் பாமினி சுல்தான் இரண்டாவது அலாவுதீனுடன் நட்புக் கொண்டு, மீண்டும் விஜய நகரப் பேரரசின்மீது படையெடுத்தார். இப் படையெடுப்பு 1447ஆம் ஆண்டில் நடந்ததெனத் திரு. N. வெங்கட்ட ரமணய்யா கூறுவார்.* கங்காதாசப் பிரதாப விலாசம் என்னும் வடமொழி நாடகத்தில் 'மல்லிகார்ச்சுனன், சிங்கமொன்று குகை யிலிருந்து கிளம்பி யானையைத் தாக்குவதுபோல் கபிலீஸ்வர கஜ பதியின் சேனையைத் தாக்கி வெற்றி கொண்டார்' என்று கூறப் பட்டுள்ளது. ஆனால், பிரதாபருத்திர கஜபதியின் அனந்தவரம்

*N. V. Ramanayya. Further Sources. Vol. II. P. 115.

கல்வெட்டில் கபிலீஸ்வர கஜபதி விஜயநகரத்தைக் கைப்பற்றி அந் நகரத்து அரசன் திறை கொடுக்கும்படி செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. இவ் விரு கூற்றுகளுள் எது உண்மையான தென்று நம்மால் துணிய முடிய வில்லை. ஒருகால் மல்லிகார்ச்சுனன் வெற்றி பெற்றிருக்கலாம்.

இந்த வெற்றிக்குப் பிறகு மல்லிகார்ச்சுனன் தம்முடைய அரசியலே நன்கு நடத்தாது அவல வாழ்க்கை நடத்தத் தொடங் கினான். இவ் வரசருடைய மடிமையினால் கபிலீஸ்வர கஜபதி மீண்டும் விஜயநகரப் பேரரசின்மீது படை யெடுத்தார். இராஜ மகேந்திரம், கொண்டவீடு, உதயகிரி முதலிய இடங்கள் கபிலீஸ்வர கஜபதியின் ஆட்சிக்கு உட்பட்டன. ஆந்திர நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசம் முழுவதையும் கபிலீஸ்வரன் தம்முடைய ஆட்சியில் கொண்டு வந்தாரெனத் திரு. R. D. பானர்ஜி என்பவர் கூறுவார்.* கோபிநாதபுரி என்னு மிடத்தில் காணப்பெறும் ஜெகந்நாதர் கல்வெட்டில் 'கோபிநாத மகாபத்திரன் என்ற சேனைத் தலைவரின் உதவி கொண்டு கர்நாடக தேசமென்னும் பூமி தேவியை வசப்படுத்தி, அவளுடைய செல்வத்தை யெல்லாம் அனுபவித்தான்; காஞ்சி மாநகரையும் கைப்பற்றினான்' என்று கூறப் பெற்றுள்ளது.

ஓட்டியன் கலாபை :

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள முன்னூர் என்னும் கிராமத்தின் பெருமாள் கோவிலில் காணப்பெறும் சாசனம் ஒன்றில், 'கபிலீஸ்வர கஜபதியின் மகனாகிய குமார ஹம்வீர தேவன் 1464ஆம் ஆண்டில் வழுதிலம்பற்று உசாவடி, சந்திரகிரி, திருவாரூர், திருமலாப்பள்ளி முதலிய இடங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்து முன்னூர்க் கோவிலுக்கு 'ஹம்வீரயோகம்' என்ற தர்மகட்டளையை ஏற்படுத்தினான் என்று கூறப்பட்டுள்ளது. திருக்கோவலூரைச் சுற்றியுள்ள சில கிராமங்களில் கிடைக்கும் கல்வெட்டுகள், ஓட்டியர்கள் என்ற கலிங்க நாட்டைச் சேர்ந்த படை வீரர்கள் படையெடுத்து வந்து கோவில்களை அழித்து மக்களைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்று கூறுகின்றன. விஜயநகரப் பேரரசைச் சேர்ந்த தமிழ்நாட்டில் திருக்கோவலூர் வரையில் ஓட்டியர்கள் படையெடுத்து வந்தனர் போலும்! திரு வாரூர், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களையும் கைப்பற்றினர் என்னும் கூற்றில் உண்மை யேதும் இல்லை. இந்த ஓட்டியன் கலாபை அல்லது கலிங்கதேசப் படையெடுப்பு 1463ஆம் ஆண்டில் மல்லிகார்ச்சுன ராயருடைய ஆட்சியில் ஏற்பட்டதாகும். திருக்

*History of Orissa. Vol. I. P. 291.

கோவலூருக்கு அருகிலுள்ள இடையாறு, அரகண்டநல்லூர், நெற்குணம் ஐம்பை முதலிய இடங்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாயின. ஆனால், அப்பொழுது சந்திரகிரியில் விஜயநகர மகாமண்டலீசுவரராயிருந்த சாளுவ நரசிம்மர் இந்த ஒட்டியப் படைகளைத் தமிழ்நாட்டைவிட்டுத் துரத்தி, மீண்டும் விஜயநகர ஆட்சியை நிலைநாட்டினார். இச் செய்திகளால் மல்லிகார்ச் சுனருடைய ஆட்சியில் விஜயநகர மத்திய அரசாங்கம் செயலற்று இருந்த நிலைமையை நாம் உணர்ந்து கொள்ளலாம். மல்லிகார்ச் சுனர் 'கஜவேட்டை கண்டருளிய மும்முடி தேவராயன்' என்ற பட்டத்தைக் கொண்டிருந்ததாகவும், சோதிட நூலில் மிக்க திறமை பெற்றிருந்ததாகவும் தெரிகிறது. மல்லிகார்ச்சுனர் 1465ஆம் ஆண்டு வரையில் அரசாண்டு பின்னர் இறந்து விட்ட தாகத் தெரிகிறது.

இரண்டாம் விருபாட்ச ராயர் (1465-85):

மல்லிகார்ச்சுன ராயருக்கு இராஜசேகரன் என்ற மகன் இருந்த போதிலும், அவருடைய இளமையைக் காரணமாகக் கொண்டு, அவருடைய சிற்றப்பன் பிரதாப தேவராயருடைய மகன் விருபாட்சன் என்பவன் வன்முறை வழியில் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டதாக நாம் அறிகிறோம். 1465ஆம் ஆண்டில் வரையப் பெற்ற ஸ்ரீசைலம் செப்பேடுகளில் இரண்டாம் விருபாட்சன் தன்னுடைய வாளின் வன்மையால் விஜயநகரப் பேரரசைக் கைப்பற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. பிரபன்னமிர்தம் என்னும் வடமொழி நூலில், விருபாட்சன் தனக்கெதிராக இருந்த தாயத்தார்களை எல்லாம் கொலை செய்வித்துவிட்டு விஜயநகரப் பேரரசின் அரியணையைக் கைப்பற்றியதாகக் கூறப் படுகிறது. ஆகையால், விருபாட்சன் அதர்மமான வகையில் அரசைக் கைப்பற்றியதாகக் கருதப்படுகிறான். விருபாட்சனால் கொலை செய்விக்கப்பட்டு அகால மரணமடைந்த தாயத்தார் களுடைய ஆவிகளெல்லாம் பிசாசுகளாகி அவனுக்குத் தூக்கம் இல்லாமல் அடித்தன. எட்டூர் நரசிம்மாச்சாரியர் என்பவர் இராமாயணத்தை அந்தப் பிசாசுகள் இருந்த இடத்தில் இரவில் பாராயணம் செய்து அவை நற்கதியடையும்படி செய்தார். இதைக் கேள்வியுற்ற விருபாட்சன் எட்டூர் நரசிம்மாச்சாரி யாரைத் தன்னுடைய குல குருவாகக் கொண்டு இராமாயணத் தையும், இராமனையும் தெய்வங்களாகக் கொண்டாடினான்; இதற்குமுன் தான் பின்பற்றிய சைவசமயத்தை விட்டு வைணவ சமயத்தைப் பின்பற்றினான். விஜயநகர மன்னர்களுடைய அரச சின்னத்தில் 'ஸ்ரீவிருபாட்ச' என்று எழுதுவதை விடுத்து 'ஸ்ரீராம' என்று எழுதப்பட்டது. இந்த வரலாறு வைணவ

சமயம் விஜயநகரப் பேரரசின் முக்கிய சமயமாவதற்குத் தோன்றியதெனக் கூறலாம்.

'இந்த அரசன் தன் ஆட்சிக்காலம் முழுவதிலும் அரசியல் காரியங்களில் கவனம் செலுத்தாது மயக்கப் பொருள்களே உண்டும், குடித்தும் சிற்றின்ப வாழ்வில் தன் காலத்தைக் கழித்தனன்; குடிகளுடைய நலன்களைச் சிறிதும் கருதாது சுக போகங்களே அனுபவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான். ஆகையால், இவனுடைய மூதாதையர்களால் அமைக்கப் பெற்ற பேரரசின் பெரும்பகுதியை இழக்க வேண்டி வந்தது.' என்று நூனிஸ் கூறுவார்.* மேற்கூறப்பட்ட காரணங் களால் பாமினி சுல்தானுகிய மூன்றும் முகம்மது என்பவன் விஜயநகரப் பேரரசைச் சேர்ந்திருந்த கோவா, சௌல்தபோல் என்ற இடங்களைக் கைப்பற்றிக் கொண்டான். உதயகிரி, கொண்ட வீடு என்ற அரணமைந்த இடங்களைக் கலிங்க நாட்டுக் கஜபதி யரசன் கைப்பற்றினன். மேற்குக் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த துளுவ கொங்கணத் தலைவர்களும் மத்திய அரசாங்கத்திற்கு அடங்காமல் கலகம் செய்தனர்.

காஞ்சிபுரத்தைப் புவனேகவீரன் கைப்பற்றியமை :

மல்லிகார்ச்சுனராயர் காலத்தில் கபிலீஸ்வர கஜபதியின் மகன் ஹம்வீரதேவன் திருக்கோவலூர் வரையில் படையெடுத்து வந்து, தமிழ்நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றியது போன்று 1469ஆம் ஆண்டில் மதுரைக்குத் தெற்கில் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கியிருந்தவர்களும், வாணர் குலத்தைச் சேர்ந்த தலைவர்களும் விருபாட்சனுக்கு எதிராகக் கலகம் செய்தனர். இக் கலகத்திற்குத் தலைமை வகித்தவன் புவனேகவீரன் சமர கோலாகலன் என்பவனுவன். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தில் 1469ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பொறிக்கப் பட்ட கல்வெட்டு ஒன்று புவனிக்கவச நல்லூர், சமரகோலாகல நல்லூர் என்ற பாண்டிய நாட்டுக் கிராமங்களை ஏகாம்பரேசுவரர் கோவிலுக்குத் தானம் வழங்கப் பெற்ற செய்தியைக் குறிக்கிறது. இன்னெரு கல்வெட்டுக் காஞ்சிபுரமும், அதைச் சுற்றியுள்ள இடங்களும் புவனேகவீரனுடைய ஆட்சியில் அடங்கியிருந்ததாகக் கூறுகிறது*. புவனேகவீரன் என்ற வாணர் குலத் தலை வனுக்கு மூவார்ய கண்டன், ராஜமீசர கண்டன், சமர கோலாகலன், வீரகஞ்சுகன், வீரப்பிரதாபன் திருமால் இருஞ் சோலை நின்றான். மாவலி வாணதிராயன் என்ற பட்டப் பெயர் களும் வழங்கின. தன்னுடைய கல்வெட்டுகளில் வடுகர்களைத்

*A Forgotten Empire. P. 292.

தோற்கடித்ததாகவும், காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதாகவும் கூறிக் கொண்டுள்ளான். விருபாட்சனைப் பேரரசனாக ஒப்புக் கொள்ளாமல் வடக்குத் திசையில் இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் அமைந்துள்ள நிலப்பகுதியில் சுதந்திர ஆட்சியை அமைத்தனன். 1462 முதல் 1475ஆம் ஆண்டு வரையில் புதுக் கோட்டைப் பகுதியில் விருபாட்சனுடைய கல்வெட்டுகள் காணப் பெறவில்லை. ஆகையால், தமிழ்நாட்டில் இருந்த சிற்றரசர்களில் பலர் விருபாட்சனுடைய தலைமையை உதறித் தள்ளித் தங்களுடைய சுதந்திர ஆட்சியை அமைத்தனர் என்றும் கூறலாம். ஆனால், சந்திரகிரியில் மகாமண்டலீசுவரனாக இருந்த சாளுவ நரசிம்மர் இந்தப் புவனேகவீரனுடைய கலகத்தை யடக்கி மீண்டும் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

பாமினி சுல்தான் மூன்றும் முகம்மது காஞ்சிபுரத்தைக் கொள்ளை யடித்தமை :

கலிங்க நாட்டில் கபிலீஸ்வரகஜபதி இறந்த பிறகு அவருடைய குமாரர்களாகிய ஹம்வீரதேவன், புருஷோத்தமன் என்ற இருவரும் அரசுரிமைக்காகப் போட்டியிட்டனர். ஹம்வீர தேவன், பாமினி சுல்தானாகிய மூன்றும் முகம்மதுவின் உதவியை நாடித், தனக்கு உதவி செய்தால், தன் தகப்பன் கபிலீஸ்வர கஜபதி பாமினி நாட்டிலிருந்து கைப்பற்றிக் கொண்ட இடங் களையும், மற்றும் கோதாவரி, கிருஷ்ணை நதிகளுக்கிடையே உள்ள வளமான இடங்களையும் சுல்தானுக்கு அளிப்பதாகக் கூறினன். மூன்றும் முகம்மது இத் தருணத்தைக் கைவிடாது ஹம்வீர தேவனுக்கு உதவி செய்ய முன்வந்தனன். கிருஷ்ணை-கோதாவரி நதிகளுக்கு இடையிலுள்ள நிலப்பகுதியைப் பாமினி சுல்தான் தன் வசப்படுத்திக் கொண்டால், விஜயநகரப் பேரரசிற்கு அஃது பேராபத்தாக முடியும். இந்தச் சிக்கலான அரசியல் உறவுகளை உணர்ந்து கொள்ள விருபாட்சனால் முடியவில்லை. ஆயினும், சாளுவ நரசிம்மன் இந்தச் சிக்கலை நன்கு உணர்ந்து ஹம்வீர தேவனுக்கும், மூன்றும் முகம்மதுவுக்கும் எதிராகப் புருஷோத்தம கஜபதிக்கு உதவியளிக்க முன்வந்தார். ஆகையால் 1471ஆம் ஆண்டில் கிருஷ்ணை-கோதாவரி இடைப்பட்ட நிலப்பகுதியில் பாமினி சுல்தான், கஜபதி அரசர்கள், சாளுவ நரசிம்மர் ஆகிய மூன்று பெரிய அரசியல் தலைவர்கள் போரிட்டுக் கொள்ள வேண்டிய நிலைமை தோன்றியது.

சாளுவ நரசிம்மர், ஹம்வீரதேவன், புருஷோத்தம கஜபதி யாகிய இருவருக்குமிடையே சமரசம்பேசிப் பாமினி சுல்தானுகிய

*South Indian Inscriptions. Vol. 4. Nos. 348 and 349.

மூன்றும் முகம்மதுவைப் போரில் ஈடுபடா வண்ணம் செய்து விட்டார். கொண்டவீடு என்னு மிடத்தில் இருந்த பாமினி சேனை, கலகத்தில் ஈடுபட்டது; சேனைத் தலைவன் கொலையுண்டனன். இவ்விதம் சாளுவ நரசிம்மர் தமக்கு எதிராக இருப்பதை யுணர்ந்த மூன்றும் முகம்மது விஜயநகரப் பேரரசின்மீது படையெடுத்தனன். இப் படையெழுச்சியைப் பற்றி முகம்மது காசிம் பெரிஷ்டாவும், பர்ஹாலிமாசிரின் ஆசிரியராகிய டபடாபாவும் இரு வேறு விதமான வரலாற்றுண்மைகளைக் கூறுவர். ஆயினும், அவ் விருவரும் மூன்றும் முகம்மது, தமிழ்நாட்டில் உள்ளதும், விஜய நகரப் பேரரசில் அடங்கியதுமாகிய காஞ்சிபுரத்தின்மீது படை யெடுத்து, அங்கிருந்த சில பெரிய கோவில்களில் காணப் பெற்ற பெருஞ்செல்வத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டனன் எனக் கூறுவர். சாளுவ நரசிம்மனும், அவனுடைய சேனைத் தலைவனுகிய ஈஸ்வர நாயக்கரும் மூன்றும் முகம்மது காஞ்சிபுரத்தில் இருந்து திரும்புகையில் கண்டுக்கூர் என்னு மிடத்தில் எதிர்த்து, அவன் வாரிக்கொண்டு சென்ற செல்வங்களைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

மேலே கூறப்பெற்றவாறு, விருபாட்சனுடைய ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுக் கலகங்களும், அயல்நாட்டுப் படை யெழுச்சிகளும் ஏற்பட்டன. விஜயநகரப் பேரரசு சீர் குலைந்து சிதைந்து போய்விடும் போல் தோன்றியது. மேலைக் கடற்கரை யோரத்தில் குதிரை வாணிபம் செய்வதற்கு வந்து, பாட்கல் என்னு மிடத்தில் தங்கியிருந்த இஸ்லாமிய வியாபாரிகளைக் கொலை செய்ததனால் அவர்கள் விஜயநகரப் பேரரசில் குதிரைகளை இறக்குமதி செய்ய மறுத்துப் பாமினி நாட்டிற்குச் சென்று விட்டனர். இவ் விதமாகச் செய்யத் தகாத காரியங்களைச் செய்த விருபாட்சன்மீது சினமுற்று, அவனுடைய மக்கள் இருவரில் மூத்தவன் தன் தகப்பனைக் கொலைசெய்து விட்டான். தன் தகப்பனைக் கொன்ற பாவத்திற்குக் கழுவாயாகத் தான் அரசு உரிமை வகிக்கத் தகுதியற்றவன் எனக் கூறித் தன்னுடைய அரசியல் உரிமையைக் கைவிட்டனன். ஆகையால், பெத்தேராயன் என்ற இரண்டாவது மகன் தன் தகப்பன் விருபாட்சனுக்குப் பிறகு விஜயநகர மன்னனுக முடி சூடிக் கொண்டான். இந்தப் பெத்தேராயனை நீக்கி விட்டுச் சாளுவ நரசிம்மன் அரச பதவியைக்கைக் கொண்டார். அச் செய்கையே சாளுவப் புரட்சி என வரலாற்றில் வழங்கப் பெறுகிறது.

8. சாளுவ நரசிம்மரின் வரலாறு

விஜயநகர வரலாற்றில் பேசப்படும் சாளுவர்கள் வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்தவராவர். மகாவிஷ்ணுவின் எதிரிகளாகக் கூறப்படும் சல்வர்கள் என்ற தென்னிந்திய இனத்தவர்களினின்றும் இவர்கள் வேறுபட்டவராவர். துளுவநாட்டில் வாழ்ந்த ஜைன சாளுவர்களிலிருந்தும் இவர்கள் வேறுவர். சாளுவ என்னும் சொல் மிகக் கூர்மையான் பார்வையுடன் வேகமாகப் பறந்து சென்று, தன்னுடைய இரைக்காக வேட்டையாடும் ராசாளி என்னும் பறவையைக் குறிக்கும். குமார கம்பணருடன் தமிழ்நாட்டின்மீது படையெடுத்து வந்து, சம்புவராயர்களுடனும் மதுரைச் சுல்தான்களுடனும் போர்புரிந்து வெற்றி பெற்ற சாளுவ மங்கு என்பாரின் கால்வழியில் வந்தவர் சாளுவநரசிம்மர். மதுரைச் சுல்தான் பக்ருதீன் முபராக் ஷாவின் படைகளின்மீது ராசாளிப் பறவை போன்று பாய்ந்து சென்று எதிர்த்து, அப் படையைச் சின்னபின்னமாக்கி வெற்றி பெற்றமையால் குமாரகம்பணர் அவருக்குச் 'சாளுவ' என்னும் அடைமொழி கொடுத்து அழைத்ததாகத் தெரிகிறது. இப் பட்டத்தை அடைந்த சாளுவமங்கு முதலில் குமாரகம்பணரின் ஓலை நாயகமாக அலுவல் பார்த்த போதிலும் பின்னர் மற்ற அலுவலாளர்களை விடச் சிறந்ததொரு பதவியை வகிக்கலானார்.

சாளுவ நரசிம்மரால் எழுதப் பெற்ற இராம அப்யுதயம் என்னும் நூலும் பில்லால மாரி பீன வீரபத்திரரால் எழுதப் பெற்றுச் சாளுவ நரசிம்மருக்கு அர்ப்பணம் செய்யப்பெற்ற சாளுவ அப்யுதயம் என்னும் நூலும் சாளுவ மங்குவின் முன்னோர்களின் வரலாற்றைப் பற்றிக்கூறுகின்றன. இவ் விரு நூல்களிலும், கலியாணபுரத்தில் வாழ்ந்த குண்டா என்பவர் சாளுவ வமிசத்தின் முதல்வராகக் கூறப் பெற்றுள்ளனர். பாமினி சுல்தான்கள் கலியாணபுரத்தைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு குண்டாவையும், அவருடைய மகன் மங்குவையும் நாட்டைவிட்டு ஓடும்படி செய்தனர். பின்னர் மங்கு, விஜயநகரத்தை அமைத்த சங்கம சகோதரர்களுடன் கூடிக்கொண்டு ஹரிஹரன், புக்கன் ஆகிய அரசர்களுக் கடங்கிய மானியக்காரராக வாழ்க்கை நடத்தினர். சாளுவ நரசிம்மருடைய தகப்பனுகிய சாளுவ திப்பன் என்பவர் இரண்டாம் தேவராயருடைய மூத்தசகோதரியை மணந்து, பிறகு

சந்திரகிரி ராஜ்யத்திற்கு மகாமண்டலீஸ்வரராக நியமனம் பெற்றார். இப் பதவி அவர்களுடைய குடும்பத்தினருக்குப் பரம்பரைப் பாத்தியமுள்ளதாக மாறியது. 1450ஆம் ஆண்டில் சாளுவ நரசிம்மன் தம் தகப்பனுக்குப் பிறகு சந்திர கிரியில் மகாமண்டலீசுவரர் பதவியை ஏற்றார். 1457ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற சாசனம் ஒன்றில் அவர் 'மகா அரசு' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். செங்கற்பட்டு ஜில்லா நகர் என்னு மிடத்தில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்று (1452) 'மகா மண்டலீஸ்வர மேதினி மீசுரகண்ட நரசிம்மதேவர் தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்தினர்' என்று கூறுகிறது.[1] இன்னும் இவருடைய கல்வெட்டுகள் விஜயநகரப் பேரரசின் மத்தியப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் காணப்பெறுகின்றன.

சாளுவ நரசிம்மர் 44ஆண்டுகள் அரசு புரிந்ததாகவும் தமக்கு முன்னிருந்த சங்கம வமிசத்து அரசர்கள் இழந்த நிலப்பகுதிகளை யெல்லாம் திரும்பப் பெற்றதாகவும் நூனிஸ் கூறியுள்ளார். ஆயினும், கிருஷ்ணதேவராயருடைய ஆட்சிக் காலத்தைப்பற்றி நன்கு ஆராய்ந்து எழுதிய ஒருகந்தி இராமச்சந்திரய்யா என்பார் சாளுவ நரசிம்மர் 1452 முதல் 1492 வரையில் நாற்பதாண்டுகள் பதவி வகித்தார் என்றும் இந்த நாற்பது ஆண்டுகளில் 1452 முதல் 1482 வரையில் முப்பதாண்டுகளுக்குச் சந்திரகிரி ராஜ்யத்திற்கு மகா மண்டலீசுவரராக இருந்தார் என்றும் பிறகு 1492ஆம் ஆண்டு வரையில் விருபாட்சனுக்குப் பிறகு விஜயநகரப் பேரரச ராகப் பதவி வகித்தார் என்றும் நிச்சயம் செய்துள்ளார்.[2] சாளுவ நரசிம்மருடைய அதிகாரம் படிப்படியாக வளர்ச்சி யுற்றதைப் பற்றி இஸ்லாமிய வரலாற்றுசிரியர்களாகிய பெரிஷ்டா, டபடாபா ஆகிய இருவரும் உறுதி கூறுகின்றனர். 'கர்நாடகப் பிரதேசத்திற்கும், தெலிங்கானா நாட்டிற்கும் இடையில் இருந்த விஜயநகரப் பேரரசின் நிலப்பகுதிகளைத் தம் வசப்படுத்திக் கொண்டும், பல அரண்களைக் கைப்பற்றியும் ஆட்சி புரிந்த மிக்க வல்லமை பொருந்திய அரசன்' என்று பெரிஷ்டா கூறியுள்ளார். 'தெலிங்கானத்தையும், விஜயநகரப் பேரரசையும் ஆண்ட அரசர்களுக்குள் மிக்க வல்லமையும், அதிகாரமும் பொருந்தியவ ரென்றும், இரும்பு மலையொத்த யானைப்படையையும், அலெக் சாந்தர் அமைத்த கோட்டைகள் போன்ற அரண்களையும் உடையவர் என்றும் டபடாபா கூறுவர். இவற்றால் விஜயநகரப் பேரரசைக் காப்பாற்றுவதற்குச் சாளுவநரசிம்மர் தகுந்த ஏற் பாடுகளைச்செய்து கொண்டிருந்ததை நாம் அறியக் கூடும்.

---

[1] R. Sathianathair. Vol. II. P. 165

[2] No. 295 of 1910.

தமிழ்நாட்டில் திருக்கோவலூர்ப் பகுதியில் தங்கியிருந்த கலிங்கப் படைகளைத் துரத்தியும், உதயகிரியைக் கஜபதி அரசர்களிடமிருந்து கைப்பற்றியும் விஜயநகர அரசைச் சாளுவ நரசிம்மர் காப்பாற்றினர். அவர் உதயகிரியில் கலிங்கப்படைகளின் எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டிருக்கும் சமயத்தில், பாண்டியநாட்டிலிருந்து பாணர் குலத்தலைவனாகிய புவனேகவீரன் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்து அந்நகரத்தைக் கைப்பற்றிய செய்தியை முன்னரே பார்த்தோம். சாளுவ நரசிம்மர் உதயகிரியிலிருந்து சந்திரகிரிக்குத் திரும்பினர்: சாளுவஅப்பூதயம் என்னும் நூலில் புவனேக வீரன் சமரகோலாகலனைக் காஞ்சி புரத்திலிருந்து பின்வாங்குபடி செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வெற்றிகளில் நாகம நாயக்கர், ஆரவிட்டி புக்கர், துளுவ ஈஸ்வர நாயக்கர் என்ற தலைவர்கள் சாளுவ நரசிம்மருக்கு மிக்க உதவியாக இருந்தனர். 1487ஆம் ஆண்டில் பாமினி சுல்தான் மூன்றும் முகமது காஞ்சிபுரத்திலுள்ள கோவில்களைக் கொள்ளையடித்துத் திரும்பிச் செல்லும்வழியில் கண்டுக்கூர் என்னுமிடத்தில் வழி மறித்துச் சாளுவ நரசிம்மரும் அவருடைய சேனைத்தலைவர் ஈஸ்வர நாயக்கரும் அக் கொள்ளைப் பொருள்களை மீட்டனர். வராகபுராணம், பாரிஜாதாபகரணமு என்ற இரு நூல்களிலும் இச் செய்திகள் காணப்பெறுகின்றன.

சாளுவப் புரட்சி :

விருபாட்சராயர் ஆட்சிக் காலத்தில் கலிங்க நாட்டிலிருந்து ஒட்டியர்கள் திருக்கோவலூர் வரையில் படையெடுத்து வந்து பல நாசவேலைகளைச் செய்ததும், வாணர்குலத் தலைவனான புவனேக வீரன் சமரகோலாகலன் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றியதும் பாமினி சுல்தான் மூன்றும் முகம்மது காஞ்சிபுரத்துக்கோவில்களைக் கொள்ளையடித்ததும் விஜயநகரப் பேரரசன் விருபாட்சனுடைய செயலற்ற தன்மையைத் தெற்றென எடுத்துக்காட்டுகின்றன. சாளுவ நரசிம்மர் மேற்கூறப்பெற்ற தீவிரமான செயல்களை மேற் கொள்ளாமல் போனால் விஜயநகரப் பேரரசு அழிந்து போய் இருக்கும். விருபாட்சன் 1485ஆம் ஆண்டின் மத்திவரையில் ஆட்சிப் பீடத்தில் இருந்தான். விருபாட்சனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவர்களுள் மூத்தவன் தன்னுடைய தகப்பன்மீது பெருங்கோபங் கொண்டு அவனைக் கொலை செய்து விட்டான். தகப்பனைக் கொலை செய்த பெரியதொரு பாவச் செயலைத் தான் செய்து விட்டபடியால் தனக்கு அரசுரிமை வேண்டுவதில்லை எனக்கூறி அரியணையில் அமர்வதற்கு மறுத்து

*O. Ramachandrayya. Studies on Krishnadevaraya. P. 3.

விட்டான். விருபாட்சனுடைய இளையமகன், பெத்தே ராயன் என்ற பெயருடன் முடி சூட்டிக் கொண்டான். பெத்தே ராயருடைய அமைச்சர்களும், நாயக்கன்மார்களும் அவனுடைய அண்ணனைக் கொலை செய்து விடும்படி ஆலோசனை கூறினர். அவர்களுடைய அறிவுரையின்படி பெத்தேராயன் தன்னுடைய தமையனைக் கொலை செய்துவிட்டான். பெத்தேராயனும் தன் னுடைய தகப்பனைப் போலவே சிற்றின்பங்களில் தன்னுடைய காலத்தைக் கழித்து அரச காரியங்களைக் கவனியாது வீண்காலம் கழித்தான்.

விஜயநகரப் பேரரசை எவ் வகையிலாவது காப்பாற்ற வேண்டுமெனச் சாளுவ நரசிம்மர் கங்கணங் கட்டிக் கொண்டார். விருபாட்சனுடைய மகன் பெத்தேராயர் அரசனாக இருந்தால் பேரரசு சீர்குலைந்து போகும் என்றுணர்ந்த சாளுவநரசிம்மர், அரச பதவியைத் தாமே மேற் கொள்ளுவதற்கு ஏற்ற வழிகளை வகுத்தார்; பேரரசில் முக்கியமான தலைவர்களையும், மகா மண்ட லீசுவரர்களையும் தம் வசப்படுத்திக் கொண்டு, விஜயநகரத்தைக் கைப்பற்றிப் பெத்தேராயனை நகரைவிட்டுத் துரத்துவதற்கு ஏற்ற தலைவனைத் தேர்ந்தெடுத்தார். சாளுவப் புரட்சி எவ் விதம் நடைபெற்றதென நூனிஸ் மிகத் தெளிவாகக் கூறியுள்ளதை நாம் உணரலாம். 'சாளுவ நரசிம்மருடைய சேனைத் தலைவன் விஜய நகரத்தை நோக்கிப் படையெடுத்த பொழுது அரண் மனையைக் காப்பாற்றுவதற்கு அங்கு ஒருவரு மில்லை. பெத்தே ராயனிடம் சில ஏவலாளர்கள், சாளுவ நரசிம்மருடைய படை யெடுப்பைப் பற்றி அறிவித்த பொழுது, அவ் விதம் ஒன்றும் நடை பெறுதெனக் கூறி வாளா இருந்தான். நரசிம்மருடைய சேனைத் தலைவன் அரண்மனைக்குள் தன் படைகளுடன் நுழைந்து அந்தப் புரத்திலுள்ள சில பெண்களைக் கொன்று அரசனையும் சிறைப் படுத்த முயன்றான். பெத்தேராயன் தன்னுடைய அரண்மனை யையும், உறவினர்களையும் விட்டுவிட்டு ஒருவரு மறியாமல் வேறு இடத்திற்குச் சென்றனன்.*

சங்கம வமிசத்துக் கடைசி அரசன் அரண்மனையை விட்டு ஓடிய பிறகு, சேனைத் தலைவன் அவ் வரசனைப் பின் தொடர்ந்து கைது செய்ய வில்லை. நகரத்தையும் அரண்மனையிலிருந்த கருவூலங் களையும் கைப்பற்றிய செய்தியைச் சாளுவ நரசிம்மருக்கு அறிவித்தார்.

அன்றுமுதல் சாளுவ நரசிம்மர் விஜயநகரப் பேரரசராகப் பதவி ஏற்றார். இந்தச் சாளுவப் புரட்சி எந்த ஆண்டில் நடை

*Robert Sewell. A Forgotten Empire. 293-94

பெற்றது என்பதை அறிஞர் ஒ. இராமச்சந்திரய்யா என்பவர் இரு கல்வெட்டுகளின் துணை கொண்டு நிச்சயம் செய்துள்ளார். முல் பாகல் என்னு மிடத்தில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில் 'சங்கம வமிசத்தின் கடைசி அரசராகிய தேவராய மகாராய விருபாட்ச பிரவுட தேவ மகாராயர்,' 1485ஆம் ஆண்டு சூலை மாதத்தில் ஆட்சி செய்ததாகக் கூறுகிறது. 1486ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல்தேதி எழுதப் பெற்ற கல்வெட்டு ஒன்று 'ஸ்ரீமன் இராஜாதி ராஜ இராஜ பரமேஸ்வர பிரவுட பிரதாப சாளுவ நரசிங்க ராயர் விஜயநகரத்திலிருந்து ஆட்சி செய்தார் என்று தும்கூர் என்னு மிடத்தில் கிடைக்கின்ற சாசனம் கூறுகிறது. ஆகையால், இந்த இரண்டு தேதிகளுக் கிடையில்தான் சாளுவப் புரட்சி நடைபெற்றிருக்க வேண்டும்.'* சாளுவநரசிம்மர் தம் முடைய தற்பெருமையையும், சுயநலத்தையும் கருதி விஜய நகரப் பேரரசைக் கைப்பற்ற வில்லை. விருபாட்சனும் அவனுடைய மகன் பெத்தேராயனும் வலிமையற்ற அரசர்களாக இருந்து, பேரரசை இழந்துவிடும் தருவாயில், சாளுவ நரசிம்மர் உற்றவிடத்துதவும் நண்பராக நின்று பேரரசைக் காப்பாற்றினர், அவருக்கு உதவி யாக இருந்தவர் நரசநாயக்கர் என்ற தலைவராவர். பேரரசின் நலத்தையும், அதில் வாழ்ந்த மக்களின் நலத்தையும் கருதி, இந்த அரசியல் புரட்சியைச் சாளுவ நரசிம்மர் நடத்தி வைத்தார்.

விஜயநகர ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு பாமினி சுல்தா னுடைய அமைச்சர் காசிம்பரீத் என்பாருடன் நட்புக் கொண்டு, பீஜப்பூர்ச் சுல்தான் யூசப் அடில் ஷாவிடமிருந்து, இராய்ச்சூர், முதுகல் ஆகிய இரண்டு இடங்களையும் சாளுவ நரசிம்மர் கைப் பற்றினர். புருஷோத்தம கஜபதியின் ஆளுகைக்குட்பட்ட கொண்டவீடு என்னு மிடத்தையும் திரும்பப் பெறுவதற்குச் சாளுவ நரசிம்மர் முயற்சிகளை மேற்கொண்டார். பாணர் குலத் தலைவனுகிய புவனேக வீரனை அடக்கிப் பாண்டிய நாட்டில் விஜய நகர ஆட்சி நிலை பெறும்படி செய்தார். நரசிம்மருடைய வெற்றிகள் கல்வெட்டுகளிலும் அவருடைய காலத்தில் எழுதப் பெற்ற இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம். விஜயநகரப் பேரரசிற்கு நரசிம்ம ராஜ்யம் என்று பெயர் வழங்கும் படி செய்து, சாளுவ நரசிம்மர் புகழ் அடைந்தார்; போர்த்து கீசியருடன் நட்புறவு கொண்டு அரேபிய நாட்டுக் குதிரைகளைப் பெரும்விலை கொடுத்து வாங்கித் தம்முடைய குதிரைப்படை வலிமை யடையும்படி செய்தார். ஆயினும், தம்முடைய இறுதிக் காலத்தில் இராய்ச்சூர், உதயகிரி, கொண்டவீடு என்ற மூன்றிடங் களையும் கைப்பற்ற முடியாது கவலை யடைந்தார்.

*O. Ramachandraiyya. op. Citus, P-1

தம்முடைய மரணத் தருவாயில் நரச நாயக்கர் என்ற துளுவ வமிசத் தலைவனை அழைத்துத் தம்முடைய இரண்டு குமாரர்களையும் அவருடைய பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்றி, அவ் விரு வருள் அரசியலை நடத்துவதற்குத் தகுதியுள்ள ஒருவருக்குப் பேரரசை வழங்கும்படி உத்தரவிட்டார். இராய்ச்சூர், உதயகிரி, கொண்டவீடு என்ற மூன்று முக்கியமான இடங்களை எவ்வாறு யினும் கைப்பற்றிக் கொள்ளும்படியும் வேண்டிக் கொண்டார். ஏழாண்டுகள்தான் நரசிம்மர் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. வைணவ சமயத்தைச் சார்ந்தவ ராயினும் மற்றச் சமயங்களைப் பின்பற்றியவர்களிடம் சமயப் பொறையோடு நடந்து கொண்டார். இராமாயணத்தின் கதாசங்கிரகமாகிய ராம ஆப்யூதயம் என்னும் வட மொழி நூல் சாளுவ நரசிம்மரால் எழுதப் பெற்ற தாகும். தெலுங்கு மொழியில் வல்ல ராஜநாத திண்டிமர், பீன வீரபத்திரர் என்ற இரு கவிகள் சாளுவ நரசிம்மரால் ஆதரிக்கப் பெற்றனர். 1491ஆம் ஆண்டு வரையில் சாளுவ நரசிம்மர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்ததாகத் தெரிகிறது.*

நரச நாயக்கருடைய ஆட்சி (1491-1503):

சாளுவர், துளுவர் ஆகிய இரு மரபுகளையும் பற்றி விஜயநகர வரலாற்றில் ஒருவிதமான தெளிவற்ற தன்மை யிருக்கிறது. 'சாளுவ' என்னும் பட்டம் சாளுவ நரசிம்மருடைய முன்னோர்களில் ஒருவராகிய மங்கு என்பவருக்குக் குமாரகம்பணரால் வழங்கப் பெற்ற தென முன்பு கண்டோம். மங்குவின் சந்ததியர்களும் இப் பட்டத்தை மேற்கொண்டனர். சாளுவ வமிசத்தைச் சேர்ந்த வர்கள் பாமினி ராஜ்யத்திலிருந்த கல்யாணபுரத்திலிருந்து விஜய நகரத்திற்கு வந்தவர்களாவர். சாளுவ நரசிம்மரும் அவருடைய மகன் இம்மடி நரசிம்மரும் சாளுவ மரபைச் சேர்ந்தவர்களாவர்.

துளுவர் என்ற மரபுபெயரைத் திம்மராஜனும் ஈஸ்வர நாயக்கரும் அவருடைய மகன் நரசநாயக்கரும் மேற்கொண்டனர். இந்தத் துளுவ வமிசத் தலைவர்களும் நரசிங்கர் அல்லது நரசிம்மர் என்ற பெயரையும், சாளுவ என்ற பட்டத்தையும் தங்களுடைய பெயருக்குமுன் வைத்துக் கொண்டனர். இதனால், சாளுவ வமிசத்து நரசிம்மதேவர்களுக்கும் துளுவ வமிசத்து நரசிம்ம தேவர்களுக்கும் வேற்றுமையறியாது வரலாற்று ஆசிரியர்களும், மாணவர்களும் இடர்ப்படுவதுண்டு, விஜயநகர வரலாற்றில் காணப்பெறும் நான்கு நரசிம்மர்களுள், முதலிருவர் சாளுவ நரசிம்மரும், இம்மடி நரசிம்மரும் சாளுவ வமிசத்தினர் ஆவர். பின்னர் வந்த நரச நாயக்கரும் அவருடைய மகன் வீர

*O. Ramachandraiyya. op Citus. P. 8.

நரசிம்மரும் துளுவ மரபைச் சேர்ந்தவராவர். மற்றும், சாளுவ, துளுவ அரசர்களுக் கடங்கிய அமைச்சர்களும், மகாமண்டலீசுவரர்களும்கூடச் சாளுவ என்ற பட்டத்தை மேற்கொண்டுள்ளனர். எடுத்துக் காட்டாகக் கிருஷ்ண தேவராயருடைய அமைச்சர்க்குச் சாளுவதிம்மர் என்ற பெயர் வழங்கியது. அச்சுத ராயருடைய ஆட்சியில் சோழ மண்டலத்தில் ஆட்சி புரிந்த செல்லப்பர் என்பவருக்குச் சாளுவ நாயக்கர் என்ற பெயர் வழங்கியது. துளுவர்களுக்கும், சாளுவர்களுக்கும் இடையே திருமண உறவோ, இனக் கலப்போ இருந்ததாகத் தெரிய வில்லை.

சாளுவ வமிசத் தலைவராகிய சாளுவ நரசிம்மருக்கு 1491ஆம் ஆண்டில் இறுதிக் காலம் நெருங்கியது. அவருடைய குமாரர்களாகிய திம்மன், நரசிம்மன் ஆகிய இருவரும் அரசுரிமையேற்று ஆட்சி செலுத்தக் கூடிய வயதினர் அல்லர். ஆகையால், விஜய நகரப்பேரரசின் ஆட்சிப் பொறுப்பையும், தம்முடைய குமாரர்கள் இருவரையும் பாதுகாக்கும் கடமையையும் அவர் துளுவ நரச நாயக்கரிடம் ஒப்படைத்தார். தம்முடைய இறுதிக் காலத்தில் சாளுவ நரசிம்மர் அமைச்சராகிய நரச நாயக்கரைத் தம்முன் அழைத்து, 'விஜயநகரப் பேரரசின் ஆட்சிப் பொறுப்பையும், என் மக்கள் இருவரையும் உங்களிடம் ஒப்படைக்கிறேன். நான் இந்தப் பேரரசை வாளின் வன்மையால் பெருமுயற்சி செய்து பாதுகாத்தேன். அரண்மனையிலுள்ள எல்லாவிதச் செல்வங்களும் இராணுவமும் உங்களுடையனவே என்று நீங்கள் கருதவும். என்னுடைய குமாரர்களுக்கு ஆட்சி புரிவதற்குரிய வயது வந்த பிறகு இருவருள் திறமையுள்ளவருக்கு முடிசூட்டவும். இராய்ச்சூர், உதயகிரி, கொண்டவீடு என்ற மூன்று இடங்களையும் எவ்வித மேலும் விஜயநகரப் பேரரசுடன் இணைத்துவிட வேண்டும். அக்காரியத்தை முடிப்பதற்கு எனக்கு அவகாசமில்லை. ஆகையால், பேரரசையும் அரசாங்கத்தின் செல்வங்களையும் என் குமாரர்களையும் உங்களிடம் அளித்துள்ளேன்' என்று கூறியதாக நூனிஸ் எழுதியுள்ளார்.* சாளுவ நரசிம்மர் இறந்த பிறகு நரசநாயக்கர் அவருடைய முதல் மகன் திம்மன் என்பவனை அரசனுக்கித் தாம் பதர ஆளுநராகப் பதவி மேற்கொண்டு விஜயநகரப் பேரரசை ஆட்சி புரிந்தார்.

சாளுவ நரசிம்மருடைய மகன் திம்மன், பெயரளவில் அரசனாக இருந்தான். அரசியல் அதிகாரங்களை உண்மையில் செலுத்தியவர் நரச நாயக்கரே. மகாபிரதானி, காரியகர்த்தா, ரக்ஷாகர்த்தர், சுவாமி என்ற பெயர்கள் அவருக்கு வழங்கின. விஜயநகரத்தில் நவரத்தின அரியணையில் அமர்ந்து அவர் ஆட்சி புரிந்தார்.

*Chronicle of Nuniz. A Forgotten Empire PP. 294-5

நரச நாயக்கருக்கு இவ்வித உன்னதமான பதவியும், அதி காரமும் கிடைத்ததைக் கண்டு, சில தலைவர்கள் அவரிடம் பொறுமை கொண்டு, அப் பதவியினின்றும் அவரை இறக்குவதற் குப் பெருமுயற்சியில் ஈடுபட்டனர். திம்மரசன் என்ற நாயக்கத் தலைவன் சாளுவ நரசிம்மனுடைய முதல் மகனுகிய அரசிளங் குமாரனைக் கொலை செய்துவிட்டு, நரச நாயக்கர்தாம் அவ் விதப் பாதகச் செயலைச் செய்வதற்குத் தன்னைத் தூண்டியதாகப் பறை சாற்றினன். உண்மையில் நரச நாயக்கர் அக் கொலையில் எவ் விதச் சம்பந்தமும் உள்ளவரல்லர். தம்முடைய நாணயத்தையும் அரச விசுவாசத்தையும் நிலை நாட்டுவதற்கு, இரண்டாவது அரச குமாரனுகிய இம்மடி நரசிம்மனை அரியணையில் அமர்த்தி, முன் போலவே ஆட்சியை நடத்தி வந்தார். திம்மப்பன் என்ற அரச குமாரனைக் கொலைசெய்த திம்மரசன் என்ற தலைவனைத் தண்டிக்க விரும்பினுரேனும் நரச நாயக்கரால் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஏனெனில், அவனுக்கு உதவியாக இருந்து பல தலைவர்கள் கலகம் செய்வதற்குத் தருணத்தை எதிர்பார்த்திருந்தனர். இம்மடி நரசிம்மன் என்ற அரசனும் தன் அண்ணனைக் கொலை செய்த பாதகனுக்கு ஆதரவாக இருந்ததாகத் தெரிகிறது. நரசநாயக்கர் இளவரசனைத் திம்மரசனுடைய பிடியில் இருந்து விடுவித்து, பெனுகொண்டா என்னும் கோட்டையில் கௌரவமாகச் சிறையில் அடைத்து நாட்டில் அமைதியை நிலைநாட்டினர்.

பாமினி சுல்தானுடன் போர் :

தலை நகரத்தில் தோன்றிய கலகத்தை அடக்கித் தம்முடைய நிலைமையைப் பத்திரப் படுத்திக் கொண்டபின், நரச நாயக்கர் ராய்ச்சூர் என்ற இடத்தை எவ் விதமாயினும் கைப்பற்றுவதென்று திட்டமிட்டார். பாமினிய சுல்தானிய அரசும் ஐந்து சிறிய நாடுகளாகப் பிரிந்து செல்லும் தருவாயில் இருந்தது. காசிம் பரீத் என்ற பாமினி அமைச்சர், சுல்தானைத் தம் வசப்படுத்தித் தாமே சர்வாதிகாரியாகப் பதவி வகித்தார். பீஜப்பூர் அரசை ஏற் படுத்திய யூசப் அடில் ஷாவை அடக்க எண்ணி, நரச நாயக்கரைத் தமக்கு உதவியளிக்கும்படி கேட்டுக் கொண்டார்; இச் சந்தர்ப் பத்தை நழுவ விடாமல் ராய்ச்சூரின்மீது படையெடுத்து அக் கோட்டையைக் கைப்பற்ற முயன்ருர். யூசப் அடில் ஷா தோல்வி யுற்று, மானவி என்ற கோட்டைக்குள் பதுங்கிக் கொள்ளவேண்டி வந்தது. அமைதி யுடன்படிக்கை செய்து கொள்ளுவது போல் நாடகம் நடித்து, நரச நாயக்கரையும், அவருடைய சேனையையும் தோற்கடித்தார். நரச நாயக்கர் மிக்க சிரமத்துடன் விஜய நகரத்திற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. ராய்ச்சூர், முதுகல்

என்ற இடங்கள் மீண்டும் பீஜப்பூர்ச் சுல்தானுக்குச் சொந்தம் ஆயின.

நரச நாயக்கருடைய மற்ற வெற்றிகள் :

இராய்ச்சூர், முதுகல் என்னும் இடங்களை நரச நாயக்கர் கைப்பற்ற முடியாமல் போனலும், விஜயநகரப் பேரரசின் மற்றப் பகுதிகளில் அவருக்குப் பெருவாரியான வெற்றிகள் உண்டாயின. மைசூர் நாட்டில் நகர் என்னு மிடத்தில் கிடைத்த ஒரு கல் வெட்டில் நரச நாயக்கருடைய வெற்றிகள் பின்வருமாறு புகழப்பட்டுள்ளன. 'புதுப்புனல் நிறைந்த காவிரி நதியைக் கடந்து, ஸ்ரீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றி வெற்றித்தூண் நாட்டினர்; சேர, சோழ நாட்டுத் தலைவர்களையும், பாண்டிய மாஞபரணனை யும் வெற்றி கொண்டார்; (பாமினி நாட்டுத்) துருக்கர்களையும், கஜபதி அரசர்களையும் வெற்றி கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து கிழக்குத் தொடர்ச்சி வரையிலுள்ள இடங்களை அடக்கி, விஜயநகர ஆட்சியைப் பரவச் செய்தார்.'[1] 'ஈஸ்வர நாயக்கரின் மகனன நரச நாயக்கர் விஜயநகர ஆட்சியைக் கைப் பற்றிக் குந்தள நாட்டரசனுக்குத் துன்பத்தை உண்டாக்கினர்; சோழ நாட்டுத் தலைவனைத் தோல்வியுறச் செய்து மதுரை நகரத்தைக் கைப்பற்றிய பிறகு இராமேசுவரத்தில் பதினறு மகா தானங்களைச் செய்தார்' என்று பாரிஜாதாபகரணமு என்னும் நூல் கூறுகிறது. அச்சுதராய அப்யுதயம் என்னும் நூலில், நரச நாயக்கர் மதுரையைக் கைப்பற்றி மறவபூபகன் என்பவனை வெற்றி கொண்டதாகவும் சோழநாட்டில் கோனேட்டி அல்லது கோனேரி ராஜன் என்பவனை வெற்றி கொண்டதாகவும் கூறப் பட்டுள்ளன.[2]

பாமினி சுல்தான் காஞ்சிபுரத்தின்மீது படையெடுத்த போதும், 1485ஆம் ஆண்டில் சாளுவப் புரட்சி ஏற்பட்ட போதும் பாணர் தலைவர்கள் மீண்டும் விஜயநகர ஆட்சியை உதறித் தள்ளிச் சுதந்திரமடைந்தனர். சோழநாட்டில் திருச்சிராப்பள்ளிச் சீமையை ஆண்ட கோனேரி ராஜன் என்பவன் விஜயநகர ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தனன். திருமழபாடியில் கிடைக்கும் ஒரு கல்வெட்டின்படி இந்தக் கோனேரி ராஜன் பசவ சங்கரன் என்பவனுடைய மகனென்றும், காஞ்சிபுரவரதீஸ்வரன், மகாமண்டலீசுவரப் பட்டுக் கட்டாரி என்ற பட்டப் பெயர்களைக் கொண்டிருந்தானென்றும் நாம் அறிகிறோம். இந்தக் கோனேரி ராஜன் சாளுவ நரசிம்மனையோ, இம்மரி நரசிம்மனையோ

[1] Epigraphia Carnatica. Vol. 8. Nagar 64.
[2] Sources of Vijayanagar History PP. 106 and 109.

தன்னுடைய தலைவனாக ஒப்புக் கொள்ளாது கலகம் செய்தான். கோயில் ஒழுகு என்னும் வரலாற்று நூலில் இந்தச் சோழ நாட்டுத் தலைவன் 'திருவரங்கம் கோவிலிலிருந்து புறவரிக் காணிக்கை, பரிவட்டம் முதலிய வரிகளை வசூலித்தும், வைணவர்களைத் துன்புறுத்திச் சைவர்களை ஆதரித்தும் சில கொடுமைகளைச் செய்தான். அவனை யடக்கி விஜயநகர ஆட்சியை நிலைபெறச் செய்வதும் நரச நாயக்கரின் கடமையாயிற்று. 1499ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின்மீது படையெடுத்து, சோழ நாட்டை ஆண்ட கோனேரி ராஜனை அடக்கித் தமிழ்நாட்டில் அமைதியை நிலை நாட்டினார்' என்று கூறப்பட்டுள்ளது. பாரிஜாதாபகரணமு, வரதாம்பிகா பரிணயம் என்ற நூல்களில் சோழ நாட்டரசன் என்று கூறப்பட்டுள்ளவன் இந்தக் கோனேரி ராஜனே யாவான்.

கோனேரி ராஜனை அடக்கிய பிறகு நரச நாயக்கர், பாண்டிய நாட்டில் மதுரைக் கருகில் சுதந்திர ஆட்சி செலுத்திக் கொண்டு இருந்த புவனேகவீரன் சமரகோலாகலன் என்பவனையும் வென்றார். இத் தலைவனே மறவபூபகன் என்று கூறப்பட்டுள்ளான். பின்னர் மதுரையிலிருந்து சேது நாட்டின் வழியாக இராமேசுவரத்திற்கும் நரச நாயக்கர் சென்றார். நரச நாயக்கருடைய படையெழுச்சிக்குப் பிறகுதான் திருப்பரங்குன்றத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புத்திரெட்டிப்பட்டியிலும் விஜயநகர அரசர்களுடைய கல்வெட்டுகள் காணப்பெறுகின்றன.*

தென்காசிப் பாண்டியரும், நரச நாயக்கரும் :

மதுரை நகரை விட்டகன்ற பாண்டியர்கள் தென்காசி நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தனர். 1422ஆம் ஆண்டு முதல் 1463ஆம் ஆண்டு வரையில் ஜடாவர்மன் அரிகேசரி பராக்கிரம பாண்டியர் என்பவர் ஆட்சி புரிந்தார். இவருக்கு மானுபரணன், மானக்கவசன், அரிகேசரி என்ற பட்டங்கள் வழங்கின. இவருடைய ஆட்சிக் காலத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டுகள், 'பூமிசை வனிதை' என்ற சொற்றொடருடன் தொடங்குகின்றன. இவ் வரசர் பெருமான் தென் காசியில் இன்றும் காணப்பெறும் விஸ்வநாதர் திருக்கோவிலை அமைத்தவராவார். இக் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டொன்று, இவ்வரசன் 1463ஆம் ஆண்டில் இறைவனது திருவடியை அடைந்ததாகக் கூறுகிறது. விஜயநகர வேந்தர்களாகிய இரண்டாம் தேவராயரும், மல்லிகார்ச்சுன ராயரும் இவருக்குச் சமகால அரசர்களாவர். அரிகேசரி பராக்கிரம பாண்டியனுக்குப் பிறகு, குலசேகர ஸ்ரீவல்லபன் (1464-1474) என்ற பாண்டிய மன்னன்

*Nos. 39 of 1908 and 155 of 1905.

தென்காசியில் ஆட்சி புரிந்தார். இவ் வரசருண்டய ஆட்சிக் காலத்தில் விருபாட்சனும் சாளுவ நரசிம்மனும் விஜயநகரத்தில் ஆணை செலுத்தினர். குலசேகர ஸ்ரீவல்லப பாண்டியனுக்குப் பிறகு, அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் என்பவர் 1486 வரையில் ஆட்சி புரிந்தார். பின்னர் ஜடாவர்மன் குலசேகர பராக்கிரம பாண்டியன் 1486 முதல் 1499 வரையில் தென் காசியில் அரசு புரிந்ததாகத் தெரிகிறது. இவருக்கு 'மான பூஷணன்' என்ற விருதுப் பெயரும் வழங்கியதாகத் தெரிகிறது. இந்தத் தென்காசிப் பாண்டிய மன்னன் நரச நாயக்கரிடம் தோல்வியடைந்து, விஜயநகர அரசருக்குக் கப்பங்கட்ட ஒப்புக் கொண்டான் என்று உய்த்துணரப்படுகிறது. இவன் 1497ஆம் ஆண்டிலிருந்து 1507ஆம் ஆண்டு வரையில் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கித் தென்காசியில் ஆட்சி புரிந்தான்.[1] இவ் வெற்றியால் தெற்கே கன்னியாகுமரி வரையில் விஜயநகரப் பேரரசு பரவியது எனக் கூறலாம்.

ஸ்ரீரங்கப்பட்டணத்து அரசன் நஞ்சராஜன் என்பவரும் விஜய நகரப் பேரரசிற்கு எதிராகக் கலகம் செய்தமையால் நரச நாயக்கர் காவிரியாற்றின்மீது புதிய பாலம் ஒன்றையமைத்து, ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டு, நஞ்சராஜனையும் பணி யும்படிசெய்தார்; பின்னர் மேலைக்கடற்கரையிலுள்ள கோகர்ணம் என்னு மிடத்திற்குச் சென்று இறைவனை வணங்கினர். 1496ஆம் ஆண்டில் கலிங்க நாட்டரசன் புருஷோத்தம கஜபதி இறந்த பிறகு அவருடைய மகன் பிரதாபருத்திர கஜபதி விஜயநகரப் பேரரசின் மீது படையெடுத்து வந்தார் (1499). ஆனால், நரச நாயக்கர், கலிங்கப் படைகள் கிருஷ்ணை நதியைக் கடந்து பேரரசிற்குள் புகா வண்ணம் அவற்றைத் தடுத்து வடவெல்லையைக் காப்பாற்றினர். மேற் கூறப்பெற்ற வெற்றிகளைக் குறித்தே 'விஜயநகரத்திற்கு அடங்காத பல நாடுகளை எதிர்த்து அழித்து அந் நாடுகளைப் பேரர சிற்குஉட்படச் செய்தார்' என்று நூனிஸ் கூறியுள்ளார் போலும்.[2]

நரச நாயக்கர் உரிமையின்றி அரசைக் கைப்பற்றினரா ?

நூனிஸ் எழுதிய விஜயநகர வரலாற்றில், சாளுவ நரசிம்ம ருடைய இரண்டாவது மகனாகிய இம்மடி நரசிம்மன் அல்லது தர்மராயன் என்பவரைக் கொண்டமராசன் என்ற நண்பருடைய தூர்ப்போதனையால் நரச நாயக்கர், பெனுகொண்டாக் கோட்டை யில் கொலை செய்வித்துவிட்டு, விஜயநகரப் பேரரசராக முடிசூடிக் கொண்டார் எனக் கூறுவார். 'அடுத்த நாளில் அரசன் அரண்

[1]The Tamil Country and Vijayanagar by Dr. A. Krishnaswami P. 160
[2]Robert Sewell. P. 296

மனைக்குள் இல்லாத்து கண்டு அலுவலாளர்கள் விஜயநகரத் திற்குச் சென்று இச் செய்தியை அறிவித்தனர். நரச நாயக்கர் மிக்க துயரத்தில் ஆழ்ந்தவர் போன்று பாசாங்கு செய்தார்; அரசனைக் கொலை செய்வதற்குக் காரணமாக இருந்த கொண்டம ராசன் என்பவனுக்குப் பல வெகுமதிகளை இரகசியமாக வழங் கினர். (இம்மடி நரசிம்மன்) கொலை செய்யப்பெற்றதை அறியாத மக்கள், அவன் எங்கேனும் தப்பிப் பிழைத்துச் சென்றிருக்க வேண்டுமென்று கருதிய போதிலும், அரச பதவியில் அமருவதற்கு ஏற்ற வேறு ஒருவரும் இன்மையால் நரச நாயக்கரை விஜயநகரப் பேரரசராக ஒப்புக் கொண்டனர்.[1]

ஆனால், விஜயநகரப் பேரரசைப் பற்றி ஆராய்ச்சிகள் எழுதிய அறிஞர்களாகிய H. கிருஷ்ண சாஸ்திரியார், S. கிருஷ்ணசுவாமி அய்யங்கார், அறிஞர் N. வெங்கட்டரமணய்யா முதலியோர் இம்மடி நரகிம்மன் அல்லது தர்மராயன் கொலை செய்யப்பட்டது நரச நாயக்கருடைய செயலால் அன்றென்றும் அவருடைய ஆயுட் காலத்தில் இக் கொலை நடைபெறவில்லை என்றும் கூறுவர். இக் கொலையும், விஜயநகரப் பேரரசை உரிமையின்றிக் கைப்பற்றிய செயலும் நரச நாயக்கருடைய முதல் மகனுகிய வீரநரசிம்ம புஜ பலராயர் என்பவர் ஆட்சியில், நரசநாயக்கர் இறந்த பிறகு நடைபெற்றிருக்க வேண்டுமென வாதிடுவர்.

விஜயநகரப் பேரரசை (உரிமையின்றி) நரச நாயக்கர் கைப் பற்றியிருந்தால் அத் துரோகச் செயல் 1503ஆம் ஆண்டிற்கு முன் நடந்திருக்க வேண்டும். ஏனெனில், 1503ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதியன்று மைசூர் நாட்டில் பச்சஹல்லி என்னும் இடத்தில் எழுதப்பெற்ற கல்வெட்டொன்றில், நரச நாயக்கர் இறந்த பிறகு அங்குள்ள கோவிலுக்கு ஒரு தானம் அளிக்கப் பெற்றமை குறிக்கப் பெற்றுள்ளது. வடவார்க்காடு மாவட்டத்திலுள்ள தேவிகாபுரத்துக் கோவிலில் 1503-04ஆம் ஆண்டில் எழுதப் பெற்ற மற்றொரு கல்வெட்டிலும், 'இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவலோக பதவியடைந்த 'சுவாமி' நரச நாயக்கரின் நிமித்தமாக இத் தர்மம் செய்யப் பெற்ற' தெனக் கூறப்பெற்றுள்ளது. ஆனால், இம்மடி நரசிம்மராயர் 1506ஆம் ஆண்டு வரையில் உயிருடன் இருந்திருக்கிறார். ஆகையால், நரச நாயக்கர் இம்மடி நரசிம்மரை நீக்கிவிட்டு அரச பதவியைக் கைப்பற்றியிருக்க முடியாது. பின்னர் நூனிஸ் என்பவர் விஜய நகரப் பேரரசை 'உரிமையின்றிக் கைப்பற்றியது நரசநாயக்கர்' என்று கூறியது எங்ஙனம்? என்ற கேள்வி எழுகிறது.[2] 'நூனிஸ்

[1] Ibid. P. 300.

[2] Dr. O. Ramachandrayya. Studies on Krishnadevaraya. P. 33

எழுதிய வரலாற்றில் நரச நாயக்கருக்கும், அவருடைய முதல் மகன் வீர நரசிம்மருக்கும் உள்ள வேற்றுமையை உணராமல், நரச நாயக்கர்தான் 'உரிமையின்றிக்' கைப்பற்றியிருக்க வேண்டுமெனக் கூறுவர். சாளுவ நரசிம்மர், நரச நாயக்கர், இம்மடி நரசிம்மர், வீர நரசிம்மர் என்ற நால்வருக்கும் நரசிம்மர் என்ற பெயர் பொதுவாக வழங்கியது. இவர்களுள் சாளுவ நரசிம்மரும், இம்மடி நரசிம்மரும் சாளுவ மரபைச் சேர்ந்த வர்கள். நரச நாயக்கரும், வீர நரசிங்கரும் துளுவ மரபைச் சேர்ந்தவர்கள். நரசிம்மன் அல்லது நரசன் என்ற பெயர் இருவருக்கும் பொதுவாக உள்ளமையால் அயல் நாட்டவராகிய நூனிஸ், வீர நரசிம்மன் ஆட்சியில் விஜயநகரப் பேரரசை 'உரிமையின்றிக் கைப்பற்றிய செய்தியை நரச நாயக்கர் செய்ததாகக் கூறியிருத்தல் கூடும்' என்று கூறுவர்.

நூனிஸ் எழுதிய வரலாற்றில் இரு வேறு மனோநிலைமை கொண்ட நரச நாயக்கர் சித்தரிக்கப்படுகிறார். ஒருவர் சாளுவ நரசிம்மருக்கும் அவருடைய புதல்வர்களுக்கும் நன்றியறிதலோடும், உண்மையோடும் நடந்து கொண்டவராகவும், மற்றொரு நரச நாயக்கர் சுயநலமும், தம்முடைய வமிசத்தை அரச பதவியில் அமர்த்த வேண்டுமென்ற எண்ணமும் உடையவராகவும் தோன்றுகிறார். இரு வேறு குணங்களையும், செயல்களையும் உடைய நரசர் ஒருவரே என்று கொள்ளாமல், நரச நாயக்கர் உடைய செயல்களையும், அவருடைய மகன் வீரநரசிம்மருடைய செயல்களையும் பிரித்து உணர வேண்டும். இம்மடி நரசிம்மனைக் கொலை செய்து அரச பதவியில் இருந்து நீக்கி விட்டு, 'உரிமையின்றி' அரச பதவியைக் கைப்பற்றியது வீர நரசிம்மருடைய செயலேயாகும். ஆகையால், இம்மடி நரசிம்மன் இறப்பதற்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் நரச நாயக்கர் இறந்து விட்டார். இம்மடி நரசிம்மன் இறப்பதற்கும், விஜயநகரப் பேரரசை உரிமையின்றிக் கைப்பற்றி யதற்கும் அவர் பொறுப்புடையவரல்லர். இச் செயல்கள் புஜபல வீர நரசிம்மன் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றிருக்க வேண்டுமென நாம் அறியக்கூடும்*.

துளுவ வீர நரசிம்மர் (1503—06) regent, (1506—1509) king :

சாளுவ வமிசத்து இரண்டாவது மன்னனாகிய இம்மடி நரசிம்மனைக் கொண்டம ராசய்யன் என்பவரைக் கொண்டு கொலை செய்வித்து, விஜயநகரப் பேரரசைக் கைப்பற்றியது, நரச நாயக்கரின் முதல் மகனாகிய வீர நரசிம்மரே என்பது நம்பத்

*Dr. O. Ramachandryya. Op. cites.P.34.

தருந்த செய்தியாக இருக்கக் கூடும். நூனிஸ் இந்த அரசனைப் 'புஸ்பால்ராயர்' என அழைத்துள்ளார். இவ் வரசனுக்குக் கல் வெட்டுகளில் 'புஜபலராய வீர நரசிம்மன்' என்ற பெயர் வழங்கு கின்றமையால் நூனிஸ் இப் பெயரைத் திரித்துப் 'புஸ்பால் ராயர்' என்று கூறியுள்ளார். வீர நரசிம்மன் ஆட்சி புரியத் தொடங்கிய திலிருந்து விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த பல சிற்றரசர்கள் கலகம் செய்யத் தொடங்கினர். இம்மடி நரசிம்மராயனைக் கொலை செய்து விட்டு, 'உரிமையின்றி' அரசைக் கைப்பற்றிய காரணத்தினால் பல சிற்றரசர்கள் இவருடைய ஆட்சிக்கு அடங் காமல் கலகம் செய்தனர் போலும்! மைசூர் நாட்டிலும், துளு நாட்டிலும் இக் கலகங்கள் ஏற்பட்டன. அவற்றை யெல்லாம் அடக்க வேண்டிய பொறுப்பு வீர நரசிம்மருடையதாயிற்று. வீர நரசிம்மருடைய ஆட்சியின் தொடக்கத்தில் பீஜப்பூர்ச் சுல் தானாகிய யூசப் அடில் ஷா துங்கபத்திரை நதியைக் கடந்து கர்நூல் என்னு மிடத்தை முற்றுகையிட்டார். விஜயநகரப் படைகளுக்குத் தலைமை வகித்த ஆரவீட்டு ராமராயரும், அவருடைய மகன் திம்மனும் பீஜப்பூர்ச் சுல்தானுடைய முற்றுகையை நீக்கி அவனுடைய சேனை பின்வாங்கிச் செல்லும்படி செய்தனர். ஆதோனிக் கோட்டையை ஆண்டு வந்த தலைவன் துரோகச் செயலில் ஈடுபட்டமையால் அவன் அப் பதவியினின்றும் நீக்கப் பட்டு, ஆரவீட்டுத் தலைவர்களிடம் அக் கோட்டை ஒப்படைக்கப் பட்டது.

உம்மத்தூர், ஸ்ரீரங்கப்பட்டணம் என்ற இடங்களில் ஆட்சி செய்த தலைவர்களும் கலகம் செய்தமையால் அவர்களை அடக்கு வதற்கு வீர நரசிம்மர் சென்ற பொழுது, தம்முடைய தம்பி கிருஷ்ண தேவராயரை விஜயநகரத்தைப் பாதுகாக்கும்படி செய்துவிட்டு உம்மத்தூரையும், ஸ்ரீரங்கப்பட்டணத்தையும், முற்றுகையிட்டார். ஆனால், இம் முற்றுகையினால் நிலையான வெற்றி உண்டாகவில்லை. துளு நாட்டில் தோன்றிய கலகங்கள் அடக்கப்பட்டன. போர்த்துகீசியத் தலைவனாகிய ஆல்மிதா (Almeida) என்பவருடன் நட்புக் கொண்டு, போர்த்துகீசியரிடம் இருந்து குதிரைகளை விலைக்குப் பெற்றுத் தம்முடைய குதிரைப் படையை வலிமையுறும்படி செய்தார். ஆனால், பட்கல் (பாழிக் கல்) என்னும் இடத்தில் ஓர் அரணை அமைத்துக் கொள்வதற்கு ஆல்மிதா முயற்சி செய்த பொழுது வீர நரசிம்மர் அதற்கு இணங்க வில்லை. கோவா நகரத்தையும் தம் வசப்படுத்துவதற்கு வீரநரசிம்மர் முயற்சி செய்ததாகவும், ஆனால், அம் முயற்சியில் வெற்றி பெறவில்லை என்றும் வார்த்திமா என்ற போர்த்து கீசியர் கூறுவார். வீர நரசிம்மர் ஆட்சியில் பொறிக்கப் பெற்ற

கிருஷ்ணதேவராயர் காலத்தில்
பாமினி அரசுகளும் விஜயநகரப் பேரரசும்
பீரார் அரசு
தேவ்கிர்
ஆதோனி
கோல்கொண்டா
கலிங்கம்
அரசு
வாரங்கல்
பீதர்
கோல்கொண்டா
பீதர் நாடு
கோவில்கொண்டா
பாங்கல்
கொண்டபள்ளி
விஜயவாடா
பத்தைலம்
மதுலிப்பட்டினம்
பெல்காம்
கோவா
தார்வார்
முத்கல்
இங்கோல்
விஜயநகர அரசு
விஜயநகரம்
ஆக்காளி
குத்தி
உதயகிரி
கண்டிக்கோட்டை
பேரரசு
நெல்லூர்
பெனுகொண்டா
பட்கல்
பழவேற்காடு
கத்திரிமலை
மங்களூர்
சென்னை
சாந்தோம்
செங்கற்பட்டு
மைசூர்
செக்கி
புதுச்சேரி
திருவண்ணாமலை
கண்ணனூர்
விருப்பாக்ஷபுரம்
சிதம்பரம்
கள்ளிக்கோட்டை
ஸ்ரீரங்கம்
நாகப்பட்டினம்
திருச்சி
தஞ்சை
மதுரை
கோச்சி
பரிவில்லிபுத்தூர்
இராமேஸ்வரம்
தென்காசி
கொல்லம்
கன்னியாகுமரி
இலங்கை
716
810
814
20
16
12
8

படம் - 5

கல்வெட்டுகளில் இராமேஸ்வரம், திருவரங்கம், காளத்தி, திருப்பதி, கோகரணம் முதலிய இடங்களில் உள்ள தேவாலயங்களுக்குப் பல தானதர்மங்களைச் செய்ததாகக் கூறப்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் வீரநரசிம்மருடைய ஆட்சிக் காலத்தில் பொறிக்கப் பெற்ற பதினைந்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவைகளில் வீரநரசிம்ம ராயர், புஜபல வீர வசந்தராயர் என்று அழைக்கப்படுகிறார். விக்கிரவாண்டி என்னும் ஊரில் கிடைத்துள்ள சாசனத்தால் அவ்வூர் விக்கிரம பாண்டியபுரம் என்னும் பெயருடையதாக இருந்தமை தெரியவருகிறது. காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோவிலில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டின்படி வீர நரசிங்கராயர் அக் கோவிலுக்கு 3,000 பணம் கொண்ட தொகையை மானியமாக அளித்ததாக நாம் அறிகிறோம். குருவிமலை (தென்ஆர்க்காடுமாவட்டம்) என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டு, 1509ஆம் ஆண்டில் டிசம்பர் 28ஆம் தேதி எழுதப் பெற்றதெனக் கூறுகிறது. சாளுவதிம்மர் என்ற அந்தணர் வீர நரசிம்மருடைய ஆட்சிக் காலத்தில் மகாபிரதானியாகவும், முக்கிய அமைச்சராகவும் இருந்தார் என்றும், தாம் இறக்கும் தருவாயில் தம்முடைய எட்டு வயதுள்ள மகன் ஆட்சி உரிமையைப் பெறுவதற்குத் தம்முடைய தம்பியாகிய கிருஷ்ண தேவருடைய கண்களைக் குருடாக்கி விடும்படி உத்தரவிட்டார் என்று வழங்கிய ஒரு கதையை நூனிஸ் கூறுவார்.

சாளுவதிம்மர் கிருஷ்ணதேவரிடத்தில் வீரநரசிம்மருடைய ஆணையைக் கூறித் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்படி கூறினார். கிருஷ்ணதேவராயருக்கு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து அரசு செலுத்த விருப்ப மில்லை. 'நான் துறவறம் பூண்டு அரசுரிமை வேண்டுவ தில்லையெனக் கூறப் போகிறேன்' என்று சொன்னார். கிருஷ்ண தேவராயருடைய வாழ்க்கையைப் பாழ்படுத்த நினைக்காத சாளுவதிம்மர் ஓர் ஆட்டின் இரண்டு கண்களைப் பிடுங்கி, அவை கிருஷ்ண தேவராயருடைய கண்கள் எனக் காட்டினார். வீர நரசிம்மனும் அதை நம்பிவிட்டார். அவர் இறந்த பிறகு சாளுவ திம்மர் கிருஷ்ண தேவராயரை அரியணையில் அமர்த்தினார்.

இக் கதையை வரலாற்றுண்மை யென்று நாம் நம்புவதற்கில்லை. ஏனெனில், கிருஷ்ண தேவருக்கும், வீர நரசிம்மருக்கும் விரோத மனப்பான்மை இருந்ததாகத் தெரிய வில்லை. வீர நரசிம்மரே தம்முடைய ஒன்றுவிட்ட சகோதரன் கிருஷ்ணதேவராயரைத் தமக்குப்பின் அரசராக நியமித்ததாக வழங்குகிற செய்தியே உண்மையாக இருக்கலாம்.

9. கிருஷ்ண தேவராயர்

(1509—1530)

வரலாற்று ஆதாரங்கள்

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் :

கி.பி. 1510ஆம் ஆண்டில் வடமொழியிலும், கன்னடத்திலும் எழுதப்பெற்று, ஹம்பி விருபாட்சர் கோவிலில் காணப் பெறும் கல்வெட்டு, கிருஷ்ண தேவராயர் கலிங்க நாட்டுக் கஜபதி அரசனுடன் போரிட்டதையும் வடநாட்டு போஜ ராஜன் போன்று இலக்கியத் திறமை பெற்றிருந்ததையும் பற்றிக் கூறுகிறது. 1515-16ஆம் ஆண்டில் பொறிக்கப் பெற்ற அமராவதிக் கல் வெட்டு, கொண்டவீடு என்னு மிடத்தைக் கிருஷ்ணதேவராயர் கைப்பற்றியதையும், மற்று முள்ள வெற்றிகளையும் பற்றித் தொகுத்துக்கூறுகிறது. ஆந்திரநாட்டில் குண்டூருக்கு அருகிலுள்ள மங்களகிரியில் காணப்பெறும் கற்றூண் கல்வெட்டு, சாளுவ திம்ம ருடைய பெருமைகளையும், கிருஷ்ணதேவராயர் கலிங்க நாட்டில் வெற்றித்தூண் நாட்டியதையும் பற்றி விவரிக்கிறது. கொண்ட வீடு என்னுமிடத்திலுள்ள வெற்றித் தூண் கல்வெட்டு, கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் வகுவிக்கப்பட்ட பலவிதமான வரிகளைத் தொகுத்துக் கூறுகிறது. வடவார்க்காட்டில் உள்ள கடலடி என்னு மிடத்தில் காணப்பெறும் கல்வெட்டு, அச்சுதராயர் அரசுரிமை எய்திய சமயத்தில் நடந்த சில வரலாற்றுச் செய்திகளைப்பற்றி விளக்கிக் கூறுகிறது. தமிழ் நாட்டிலுள்ள தேவாலாயங்களில் கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு களும், செப்பேடுகளும் சுமார் 216க்கு மேல் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகளில் தமிழ் நாட்டிலுள்ள பல கோவில்களுக்குக் கிருஷ்ணதேவராயர் செய்த திருப்பணிகளும், தான தர்மங்களும் குறிக்கப் பெற்றுள்ளன.

இலக்கிய ஆதாரங்கள் :

கிருஷ்ண தேவராயர் காலத்தில் எழுதப் பெற்ற ராயவாசகமு என்ற நூலும் பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கிருஷ்ண ராஜவிஜயமு என்ற நூலும் இவ் வரசருடைய இராஜ்ய வெற்றி களைப் பற்றி நிரம்பிய அளவில் கூறுகின்றன. கிருஷ்ணதேவராய

ருடன் சம காலத்தில் வாழ்ந்த திம்மண்ணு, பெத்தண்ணு என்ற இருவருடைய நூல்களும் பல வரலாற்றுண்மைகளைப்பற்றிக் கூறுகின்றன. கிருஷ்ண தேவராயரால் எழுதப் பெற்ற ஆமுக்த மால்யதா என்னும் நூலில் பெரியாழ்வார் சூடிக் கொடுத்த நாச்சியார் என்ற ஆண்டாள் ஆகியோர் வரலாறுகள் பற்றிக் குறிக்கப் பெற்றிருந்த போதிலும் அரசனுடைய கடமைகள், சேனையை வைத்துப் பாதுகாக்கும்முறை, அமைச்சர்களுடைய கடமைகள், வரி வசூல் முறை, அரசாங்கச் செலவு, அலுவலகங்கள் முதலியவை பற்றிய அறவுரைகளும் காணப்பெறுகின்றன.

இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள் :

விஜயநகர அரசர்களுடைய அயல்நாட்டுக் கொள்கைகளைப் பற்றிப் பெரிஷ்டா கூறியுள்ள போதிலும் இராமராயரைத் தவிர மற்ற அரசர்களுடைய பெயர்களை அவர் திரித்துக் கூறுகிறார். கிருஷ்ண தேவராயருடைய அரசியல் மேன்மையைப் பற்றிப் பெரிஷ்டாவின் கூற்றுகளிலிருந்து நாம் ஒன்றும் அறிந்து கொள்ள முடியாது. விஜயநகரத்தரசர்கள் எல்லோரும் பாமினி சுல்தான்களுக்குக் கப்பம் செலுத்தியவர்கள் என்றும், அவர்கள் கப்பம் செலுத்தாமற் போனால் பாமினி சுல்தான்களின் கோபத்திற் குள்ளானவர் என்றும் அவர் கூறுவர். விஜயநகரத்து அரசர்களையும், அவர்களுடைய சேனைத்தலைவர்களையும் இன்னரென்று அறியாமல் பெருங்குழப்பத்தை அவர் உண்டாக்கி யுள்ளார். 1564ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசிற்கு எதிராக அமைக்கப் பெற்ற இஸ்லாமியக் கூட்டுறவு பீஜப்பூர் அடில் ஷாவினால் தோற்றுவிக்கப் பட்டது என்று பெரிஷ்டா கூறுவார். ஆனால், டபடாபாவும் கோல்கொண்டா வரலாற்று ஆசிரியரும் அதை வேறு விதமாகக் கூறியுள்ளனர். இரண்டு இஸ்லாமியப் படைத்தலைவர்கள் விஜயநகரச் சேனையை விட்டு அகன்று, தலைக்கோட்டைப் போரில் சுல்தானியப் படைகளுடன் சேர்ந்து கொண்ட துரோகச்செயலைப் பற்றிப் பெரிஷ்டா கூறவேயில்லை. ஆயினும், 1522ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயர் பீஜப்பூர் சுல்தான்மீது கொண்ட வெற்றியையும் ராமராயர் மற்ற இஸ்லாமியத் தலைவர்களின்மீது கொண்ட வெற்றிகளையும் பற்றிக் குறிப்பிடுவார். டபடாபா ராமராயரையும், சதாசிவ ராயரையும் ஒருவராகக் கருதி ஆமது நகரத்துச் சுல்தான் நிஷாம்ஷா என்பவரே தலைக்கோட்டைப் போருக்குமுன் இஸ்லாமியக் கூட்டுறவை ஏற்படுத்தியவர் எனக் கருதுகிறார் ; தலைக் கோட்டைப் போரைப் பற்றி மிக விரிவாக வருணித்து ராமராயருடைய திறமையையும், சூழ்ச்சித் திறனையும் போரில் வெற்றியடைவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் கூறியுள்ளார்.

அயல்நாட்டவர் தரும் சான்றுகள் :

போர்த்துகீசிய வரலாற்று ஆசிரியர்களாகிய, பாரோஸ் (Barros), கூட்டோ (Couto), கொரியா (Correa), காஸ்டன் ஹெடா (Castan Heda) என்பவர்களுடைய குறிப்புகளும் துளுவ ஆரவீட்டு வமிசத்து அரசர்களுடைய வரலாற்றிற்கு ஆதாரமாக உள்ளன. விஜயநகரத்தில் தங்கியிருந்து பேரரசின் நிலையை நன்குணர்ந்த லூயி என்ற பாதிரியார் கிருஷ்ண தேவராயர் பீஜப்பூர்ச் சுல்தான் மீதும் கஜபதி அரசன் மீதும் போர்புரிவதற்குச் செய்த ஆயத்தங்களைப் பற்றி நன்கு உரைத்துள்ளார். துவார்த்தி பார்போசா, விஜய நகரத்தைப் பற்றிக் கூறும் செய்திகள் மிக்க துணை செய்கின்றன. நூனிஸ், பீயஸ் ஆகிய இரு போர்த்துகீசிய வியாபாரிகள் தரும் விவரங்களைப் பற்றி முன்னரே நாம் கண்டோம். இவ்விருவருடைய வரலாற்றுக் குறிப்புகள், பெரிஷ்டா, டபடாபா ஆசியோர் குறிப்புகள், கல்வெட்டுகள், தென்னிந்திய இலக்கியங்கள் முதலிய சான்றுகளைவிட உண்மையானவை என்று கூறுதல் சாலும். 1567ஆம் ஆண்டில் விஜயநகரத்தைக் கண்டு மனமுருகிய நிலையில் சீசர் பெடரிக் என்பார் எழுதிய குறிப்புகள் விஜய நகரத்தின் மறைந்த பெருமையை விளக்குகின்றன. பெனுகொண்டாவிற்குத் திருமலைராயர் ஆட்சிக் காலத்தில் விஜயம் செய்த இயேசு சங்கப் பாதிரியார் ஒருவருடைய குறிப்புகளிலிருந்து தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு விஜயநகரப் பேரரசு முற்றிலும் அழிந்துவிட வில்லை என்று நாம் அறிகிறோம். பெனுகொண்டாவிலிருந்து சந்திரகிரிக்கு விஜயநகரப் பேரரசின் தலை நகரம் மாற்றப்பட்ட பிறகு, சந்திரகிரியில் இரண்டாம் வேங்கட தேவராயர் இறந்த பிறகு, ஜெக்கராயன் என்பார் இரண்டாம் ஸ்ரீரங்கனையும் அவருடைய குடும்பத்தினரையும் கொன்று குவித்த கொடுஞ்செயலைப் பற்றிப் பாரதாஸ் பாதிரியார் தரும் வரலாறு நம்முடைய மனத்தைத் தொடும் உண்மை யாகும்.

கிருஷ்ண தேவராயரின் இளமை வரலாறு :

நரச நாயக்கருடைய இரண்டாவது மகன் கிருஷ்ணதேவராயர். அச்சுதராயர், அரங்கராயர் என்போர் அவருடைய ஒன்றுவிட்ட தம்பிமார்கள் ஆவர். அவர் பிறந்தது 1487ஆம் ஆண்டு பிப்ரவரி மீ 16தேதி என அறிஞர் ஒ. இராமச்சந்திரய்யா நிச்சயம் செய்துள்ளார். ஆகையால், கிருஷ்ண தேவராயர் தம் உடைய இருபத்திரண்டாவது வயதில் அரசுரிமை ஏற்றதாகக் கொள்ளலாம். வீரநரசிம்மர் இறக்கும் தருவாயில் கிருஷ்ணதேவராயரைக் குருடனுக்கிவிடும்படி ஆணையிட்ட செய்தி எவ்வளவு உண்மையானது என்று விளங்க வில்லை. ஆயினும், சாளுவ திம்ம

ருடைய சூழ்ச்சித் திறனால் கிருஷ்ணதேவர் அரியணையில் அமர்வது சாத்தியமாயிற்று.

கிருஷ்ண தேவருடைய ஆட்சியில் முதன்முதலில் எழுதப் பெற்ற சாசனம், 1509ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் தேதியோடு காணப்படுகிறது. ஹம்பி விருபாட்சர் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டின்படி அவருடைய முடிசூட்டுவிழா 1509ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டும். கிருஷ்ண பகவானுடைய அவதாரமாக அவர் கருதப்பெற்றமையால் ஒரு கிருஷ்ண ஜெயந்தியன்று அவருடைய முடிசூட்டு விழா நடை பெற்றதெனக் கூறுவர். கிருஷ்ணதேவராயர் அரியணையில் அமர்ந்த காலத்தில் உள்நாட்டுக் கலகங்களும், அயல்நாட்டு விரோத மனப்பான்மையும் நிரம்பியிருந்தன. அவருடைய ஒன்று விட்ட சகோதரர்களும், தமையன் மகனும் அவருக்கு எதிராகக் கலகம் செய்வதற்குத் தயங்க வில்லை. ஒன்றுவிட்ட சகோதரர் களாகிய அச்சுத ராயரும், சதாசிவ ராயரும் சந்திரகிரிக் கோட் டையில் பாதுகாவலுடன் சிறையில் வைக்கப்பெற்றனர். பேரர சின் வடக்கு எல்லையில் பீஜப்பூர்ச் சுல்தானுகிய யூசப் அடில் ஷா கிருஷ்ணை, துங்கபத்திரை நதிகளுக் கிடைப்பட்ட நிலப் பகுதியைத் தம் வசப்படுத்திக்கொள்ள ஏற்ற தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். பேரரசின் கிழக்குப் பகுதியில் கிருஷ்ணை நதி வரையில் கலிங்க தேசத்து மன்னன் பிரதாபருத்திர கஜபதியின் ஆதிக்கம் பரவியிருந்தது. அந்த நதிக்குத் தெற்கிலும், விஜயநகரப் பேரரசின் சில பகுதிகளைக் கைப்பற்ற அவ் வரசன் முனைந்து கொண்டிருந்தான். மேல் நாட்டிலிருந்து வியாபாரம் செய்வ தற்கு வந்த போர்த்துகீசியர் பேரரசின் மேற்குக் கடற்கரை யோரங்களில் தங்களுடைய வர்த்தகத் தலங்களை அமைத்துக் கொண்டிருந்தனர். பேரரசின் தெற்குப் பகுதியில் உம்மத்தூர்த் தலைவர்களும், காஞ்சிபுரம் பகுதியில் வாழ்ந்த காடவத் தலைவர் களும் வீரநரசிம்மராயர் ஆட்சிக் காலம் முதற்கொண்டு கலகம் செய்து கொண்டிருந்தனர்.

1509ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவராயர் முடிசூடிக் கொண்ட பிறகு ஒன்றரை ஆண்டுகள் வரையில் தம்முடைய தலைநகரத் திலேயே தங்கியிருந்து அரசியல் அலுவல்களின் உட்பொருள்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்தார்; சாளுவ நரசிம்மர் 'தம்முடைய சந்ததியார்கள் ராய்ச்சூர், முதுகல், கொண்டவீடு ஆகிய மூன்று இடங்களையும் விஜயநகரப் பேரரசோடு சேர்க்க வேண்டு' மென்ற கொள்கையின் உட்கிடக்கையை உணர்ந்து தம்முடைய வெளி நாட்டுக் கொள்கையைச் சீர்படுத்த எண்ணினார்.

தொடக்கத்தில் உம்மத்தூர்த் தலைவனுகிய கங்கராஜா என்பவன் வீரநரசிங்க ராயர் காலம் முதற்கொண்டு விஜயநகரப் பேரரசிற்கடங்காது கலகம் செய்து, பெனுகொண்டா என்னும் இடத்தையும் கைப்பற்றியிருந்தான். கிருஷ்ண தேவராயர் பெனு கொண்டாவின்மீது படையெடுத்துச் சென்று அக் கோட்டையைக் கைப்பற்றியபின் உம்மத்தூர், ஸ்ரீரங்கப்பட்டணம் என்ற இரண்டு இடங்களும் கைப்பற்றப்பட்டன. இந்த ஸ்ரீரங்கப்பட்டணமே நூனிஸ் என்பவர் கூறும் காட்டேர் என்ற இடமாக இருக்கலாம் என்று திரு. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் கூறுவார். ஸ்ரீரங்கப் பட்டணத்தை ஆண்ட கங்கராஜன் என்பவன் கோட்டையை விட்டு ஓடிக் காவிரி நதியில் மூழ்கி உயிர் துறந்தான். உம்மத் தூர்நாடு விஜயநகரப் பேரரசிற்கு உட்பட்டது. ஸ்ரீரங்கப் பட்டணத்தைத் தலைமை நகரமாகக் கொண்டு சாளுவ கோவிந்த ராசர் என்பார் ஆளுநராக நியமனம் செய்யப்பெற்றார்.

பேரரசின் தெற்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டிய பின்னர், பீஜப்பூர்ச் சுல்தான்மீதும், பாமினி சுல்தான் மீதும் கிருஷ்ண தேவராயர் படையெடுத்துச் சென்றதாகத் தெரிகிறது. ஆண்டுதோறும் வழக்கமாகப் படையெடுத்துவரும் இஸ்லாமியப் படைகள், திவானி என்ற இடத்தில் தோல்வியுற்றன. கோவில் கொண்டா என்ற இடத்தில் நடந்த போரில் பீஜப்பூர்ப் படைகள் தோல்வியுற்று யூசப் அடில் ஷாவும் உயிரிழந்ததாகத் தெரிகிறது. யூசப் அடில் ஷா உயிரிழந்தபிறகு பீஜப்பூரில் கலகமும், குழப்பமும் பரவியதால் கிருஷ்ண தேவராயர் ராய்ச்சூர், முதுகல் என்ற இடங்களைத் தம் வசப்படுத்தினர். பாமினி சுல்தான்களுடைய தலைநகரங்களாகிய குல்பர்காவையும், பீதார் நகரத்தையும் கைப் பற்றி முகம்மதுஷா என்ற பாமினி அரசனைச் சிறையிலிருந்து விடுவித்ததனால் கிருஷ்ணதேவராயர் 'யவன ராஜ்ய ஸ்தாபனாச் சாரியா' என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டார்.

பிரதாப ருத்திர கஜபதியுடன் போர்: விஜயநகரப் பேரரசின் வடகிழக்குப் பகுதிகள் கபிலேஸ்வர கஜபதியின் ஆட்சிக்காலத்தில் கலிங்க நாட்டின் பகுதியாக வென்று இணைக்கப்பட்டதை நாம் முன்னரே பார்த்தோம். கிருஷ்ணதேவராயர் காலத்தில் கலிங்க நாட்டரசனுக விளங்கியவர் பிரதாப ருத்திர கஜபதியாவார். பேரரசின் பகுதியாயிருந்த அப் பிரதேசங்களை மீண்டும் பெறு வதற்காகவும், கலிங்க தேசத்து அரசன் விஜயநகரப் பேரரசின் மீது அடிக்கடி படையெடுப்பதைத் தடுப்பதற்காகவும் கிருஷ்ணை நதியைப் பேரரசின் வடக்கு எல்லையாகக் கொள்வதற்கும் கிருஷ்ண தேவராயர் திட்டமிட்டார். 1513ஆம் ஆண்டில் கலிங்க நாட்டு

அரசனுடைய ஆதிக்கத்திலிருந்த உதயகிரியின்மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டார். இம் முற்றுகை ஒன்றரை ஆண்டுக்கு நீடித்த பொழுது கிருஷ்ண தேவராயர் திருப்பதி வெங்கடேசப் பெருமானையும், காளத்தீஸ்வரரையும் வணங்கிய பிறகு, மீண்டும் முற்றுகை தொடர்ந்தது. உதயகிரிக் கோட்டை பிடிபட்டுக் கொண்டவீடு வரையில் கஜபதியின் சேனைகள் துரத்திவிடப் பட்டன. உதயகிரி ஒரு மண்டலமாக்கப்பெற்று ராயசம் கொண்டம ராசய்யா என்பவர் ஆளுநராக நியமனம் பெற்றார். பிரதாபருத்திர கஜபதியின் உறவினன் ஒருவன் கைதியாக்கப் பட்டு விஜயநகரத்திற்குக் கொண்டுவரப் பெற்றான். உதயகிரிக் கோட்டையிலிருந்த பாலகிருஷ்ண விக்கிரகம் ஒன்று விஜயநகரத் திற்குக் கொண்டுவரப்பட்டது. விஜயநகரத்தில் ஆலயம் ஒன்று அமைத்து இவ் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பெற்ற சமயத்தில் வியாசராயர் என்ற பெருந்தகை இக் கோவிலின் பெருமையை விவரித்து ஒரு செய்யுள் இயற்றியுள்ளார்.

போரின் இரண்டாவது கட்டம்: உதயகிரியைத் தம் வசப்படுத் திய பிறகு கஜபதியின் வசமிருந்த கொண்டவீட்டுக் கோட்டை யையும் கைப்பற்ற மீண்டும் கிருஷ்ண தேவராயர் படைகளை ஆயத்தம் செய்து அனுப்பினார். செல்லும் வழியில் அமைந்திருந்த ஆதங்கி, வினுகொண்டா, வெல்லம்கொண்டா, நாகார்ச்சுன கொண்டா, தாங்கேதா, கேட்டவரம் முதலிய இடங்களும் விஜய நகரப் படைகளின் வசமாயின. பிரதாபருத்திர கஜபதியின் மகனுகிய வீரபத்திரன் என்பவருடைய தலைமையில் கலிங்கப் படைகள் விஜயநகரப் படைகளை எதிர்த்து நின்றன. சாளுவ திம்மருடைய விடாமுயற்சியாலும், ஊக்கம் நிறைந்த செயல்களி னலும் விஜயநகரப் படைகள் கோட்டைச் சுவரின்மீது ஏறிக் கொண்டவீட்டைக் கைப்பற்றின. 1515ஆம் ஆண்டில் கொண்ட வீடு, விஜயநகர ஆதிக்கத்தின்கீழ் வந்தது. வீரபத்திரன் என்ற கலிங்க இளவரசரும், மல்லுகான், உத்தண்டகான், ராசிராஜு, ஸ்ரீநாதராஜு, இலக்குமிபதிராஜு என்பவர்களும் மற்றும் பல கலிங்க நாட்டுச் சிற்றரசர்களும் கைதிகளாக்கப் பெற்றனர். கஜபதி அரசனுடைய அரசியொருத்தியும் கைதியாக்கப் பட்ட தாக நாம் அறிகிறோம். கொண்டவீடு தனி மரகாணமாக அமைக்கப்பட்டு அதற்குச் சாளுவதிம்மர் ஆளுநராக நியமிக்கப் பெற்றார். தரணிக் கோட்டையில் கோவில் கொண்டுள்ள அமரேசு வரப் பெருமானையும், ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனப் பெருமானையும் சேவித்த பிறகு, கிருஷ்ண தேவராயர் விஜயநகரத்திற்குத் திரும்பினார்.

போரின் மூன்றுவது கட்டம்: கொண்ட வீடு ராச்சியம் அமைதியுற்ற பிறகு 1516ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் மூன்றுவது முறையாகக் கலிங்க நாட்டின்மீது கிருஷ்ண தேவ ராயர் படையெடுத்தார்; சேனைகள் செல்லும் வழியில் அகோ பலம் நரசிங்கப் பெருமானை வணங்கி, விஜயவாடாவைக் கைப் பற்றினர்; விஜயவாடைக்கு வட கிழக்கில் உள்ள கொண்ட பள்ளிக் கோட்டையை முற்றுகையிட்டார். கொண்ட பள்ளிக் கோட்டையின் முற்றுகையைத் தவிர்ப்பதற்குப் பிரதாபருத்திர கஜபதியால் அனுப்பப் பெற்ற சேனை முறியடிக்கப்பட்டது. பின்னர், விஜயநகரத்துச் சேனைகள் அனந்தகிரி, உந்தரக் கொண்டை, அருவப்பள்ளி, ஜல்லிப்பள்ளி, நளகொண்டா, கனக கிரி, சங்கரகிரி, ராஜ மகேந்திரம் முதலிய பல இடங்களைக் கடந்து சிம்மாசலத்தை அடைந்தது. சிம்மாசலத்தில் கிருஷ்ண தேவராயர் பல மாதங்கள் தங்கியிருந்தும், பிரதாப ருத்திர கஜபதி, அவருடன் போரிடுவதற்கு முன் வரவில்லை. சிம்மாசலம் நரசிம்ம தேவர் கோவிலில் வெற்றித்தூண் ஒன்றைமைக்கப் பட்டது. சிம்மாசலத்திலிருந்து, கலிங்க நாட்டின் தலைநகராகிய கடகம் அல்லது கட்டாக் நகரமும் முற்றுகைக்கு உள்ளாயிற்று. விஜயநகரப் பேரரசரை எதிர்த்துப் போரிட முடியாத நிலையில் இருந்த பிரதாப ருத்திரன், கிருஷ்ண தேவராயருடன் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தார். இவ் வுடன்படிக் கையின்படி கிருஷ்ணை நதிக்கு வடக்கில் பிரதாபருத்திரருடைய நாட்டில் பிடிபட்ட இடங்கள் எல்லாம் அவரிடம் திருப்பித் தரப்பெற்றன. மீண்டும் இரு நாடுகளும் போரில் ஈடுபடுவதை நிறுத்திவிடுவதற்குப் பிரதாப ருத்திர கஜபதியின் மகளாகிய துக்கா அல்லது ஜெகன் மோகினி யென்ற இளவரசியைக் கிருஷ்ண தேவராயர் மணந்து கொண்டார்.

பிரதாப ருத்திர கஜபதியோடு போர் நடத்தியதில் கிருஷ்ணை நதியின் வடக்கிலுள்ள பிரதேசங்களைத் தம்முடைய ஆட்சியில் கொண்டுவர வேண்டும் என்பதில் கிருஷ்ண தேவராயருக்கு விருப்பமில்லை. என்றாலும் கிருஷ்ணை நதிக்குத் தெற்கிலுள்ள இடங்களை மீண்டும் கலிங்க நாட்டு அரசர்கள் படையெடுத்துத் தங்களுடைய அரசோடு சேர்ந்துக் கொள்வதற்கு முயற்சி செய்யாமல் இருப்பதற்காகவே ஆகும் என்பது, கிருஷ்ண தேவராயர் கட்டாக் அல்லது கடகம் வரையில் படையெடுத்துச் சிம்மா சலத்தில் வெற்றித்தூண் நாட்டியதாலும், மற்ற வெற்றிகள் பெற்றமையாலும் தெளிவாகின்றது. இராய் வாசகமு, கிருஷ்ணராய விஜயமு என்ற இரண்டு தெலுங்கு நூல்களும், கிருஷ்ண தேவராயர் கலிங்க நாட்டு இளவரசி

ஜெகன் மோகினியை மணந்து பொட்னூர்-சிம்மாசலத்திலிருந்து விஜயநகரத்திற்குத் திரும்பிய செய்தியைக் கூறுகின்றன. ஆனால், இத் திருமணம் கிருஷ்ண தேவராயர் சிம்மாசலத்தில் இருந்து விஜயநகரத்திற்குத் திரும்பிய பின்னர் நடந்ததென நூனிஸ் கூறுவார்.

ராய்ச்சூர்ப் போர்: கலிங்க நாட்டின்மீது படையெடுத்துக் கட்டாக் அல்லது கடகம் வரையில் விஜயநகரப் படைகள் சென்று பிரதாபருத்திர கஜபதியுடன் போரிட்டுவெற்றி பெற்ற சமயத்தில் ராய்ச்சூர்க் கோட்டையை இஸ்மேயில் அடில் ஷா என்ற விஜயபுரி சுல்தான் தம் வசப்படுத்திக் கொண்டான். 1512ஆம் ஆண்டில் விஜயநகரத்திற் குட்பட்ட ராய்ச்சூர் 1520ஆம் ஆண்டில் பீஜப்பூர்ச் சுல்தானுடைய ஆட்சியில் வந்தது. இக் கோட்டையைத் திரும்பவும் தம் வசத்திற்குக் கொண்டு வருவதற்குக் கிருஷ்ண தேவராயர் முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், ராய்ச்சூர் முற்றுகை 1520ஆம் ஆண்டில் நடந்ததா, 1522ஆம் ஆண்டில் நடந்ததா என்பது பற்றி வரலாற்றுசிரியர்களிடையே பெரிய மனக்குழப்பம் ஏற்பட்டுள்ளது.

விஜயநகர வரலாற்றைப் பற்றி எழுதிய போர்த்துகீசிய நூனிஸ் என்பவர் ராய்ச்சூர்ப் போர் 1522ஆம் ஆண்டில் மே மாதத்தில் (அமாவாசை) சனிக் கிழமையன்று நடந்ததென்று கூறியுள்ளார். நூனிஸ் எழுதிய வரலாற்றையும், பெரிஷ்டாவின் வரலாற்றையும் ஆராய்ந்து எழுதப் பெற்ற 'மறைந்த பேரரசு' (A Forgotten Empire) என்னும் நூலில், இப் போர் 1520ஆம் ஆண்டு மேமீ 17ஆம் தேதி நடந்திருக்குமெனத் திரு. ராபர்ட் சிவெல் என்பவர் கூறியுள்ளார். இவ் விரு கூற்றுகளுள் உண்மையானது எது? இரண்டும் ஒரே போரைப் பற்றியனவா, இரு வேறு போர்களைப் பற்றியனவா என்பதைப் பற்றி இப்பொழுது ஆராய்தல் நலமாகும். இதைப் பற்றித் தகுந்த ஆதாரங்களுடன் ஆய்வு நடத்திய உயர்திரு ஒ. இராமச்சந்திரய்யா என்பவர் பின் வரும் முடிவுகளைத் தீர்மானம் செய்துள்ளார்.

(1) 1520 ஆம் ஆண்டில் ராய்ச்சூர்க் கோட்டையைத் தன் வசப்படுத்த முயற்சிகளை மேற்கொண்ட இஸ்மேயில் அடில் ஷா, விஜயநகரப் படைகளால் கிருஷ்ணை நதிக் கரையில் தோற்கடிக்கப் பட்டுத் தம்முடைய சேனைத் தலைவன் அசாத்கான் என்பவனுடைய சொல்லின்படி பின்வாங்க நேரிட்டது.

(2) பின்னர், இஸ்மேயில் அடில் ஷா, ஓராண்டிற்குள் ராய்ச்சூர்க் கோட்டையைத் தம் வசப்படுத்திக் கொண்டார்.

(3) 1522ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயர் மீண்டும் ராய்ச்சூரின்மீது படையெடுத்து, இஸ்மேயில் அடில் ஷாவைத் தோற்கடித்து அக் கோட்டையைத் தம் வசப்படுத்தினர்.* ஆகையால், நூனிஸ் என்பவரால் விவரிக்கப் பெற்ற ராய்ச்சூர் முற்றுகை 1522ஆம் ஆண்டில் நடந்ததேயாகும். ராய்ச்சூர்க் கோட்டையைக் கிருஷ்ண தேவராயர் முற்றுகையிட்டு வெற்றி பெற்றதைப் பற்றி நூனிஸ் கூறும் செய்திகள் முற்றும் நம்பத் தக்கனவே யாகும். சுமார் 10 இலட்சம் வீரர்களும், 500 யானைகளும் கொண்ட பெரும்படையோடு பீஜப்பூர்ச் சுல்தானுடைய இராணுவத்தை அழித்து விடுவதற்குரிய திட்டங் களோடு ராய்ச்சூரை நோக்கிப் படையெடுக்கும்படி விஜய நகரத்து மன்னர் உத்தரவிட்டார். கிருஷ்ண தேவராயருடைய சேனைகளின் எண்ணிக்கையை ஊன்றிப் பார்த்தால் 'நரபதி' என்று அவருக்கு வழங்கும் பட்டம் உண்மையானதே யாகும் என்பது தெரியவரும். பீஜப்பூர், அகமது நகர் சுல்தான்களுக்கு ஹயாபதி (குதிரைகளுக்குத் தலைவர்கள்) என்றும், கலிங்க நாட்டரசர்களுக்குக் கஜபதி (யானைகளுக்குத் தலைவர்கள்) என்றும் பட்டங்கள் வழங்கின. ஆனால், தெலுங்கு, கன்னட இலக்கியங்களிலோ, கல்வெட்டுகளிலோ இந்த ராய்ச்சூர் முற்றுகை பெருமையுடன் விவரிக்கப்பட வில்லை. தமிழ் நாட்டில் திருக்கடையூர்த் திருக் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில் மாத்திரம் ஆபத்சகாயர் என்ற அந்தண வீரர், கிருஷ்ண தேவருடைய படையில் சேர்ந்து, ராய்ச்சூர், பீஜப்பூர் முதலிய இடங்களில் போரிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு 1522ஆம் ஆண்டிற்குப் பிறகு எழுதப்பட்டுள்ளது. ஆனால், 1520ஆம் ஆண்டில் கிருஷ்ணை நதிக்கரையில் நடந்த போரில் ஆபத்சகாயர் பங்கு கொண்டாரா, 1522இல் நடந்த ராய்ச்சூர் முற்றுகையில் பங்கு கொண்டாரா என்பதும் விளங்கவில்லை. ராய்ச்சூர், முதுகல் ஆகிய இரண்டு இடங்களும், விஜயநகரத்து அரசர்களுக்கும் பாமினி சுல்தான்களுக்கும் இடையே அடிக்கடி மாறி மாறி வந்தமையால் தெலுங்கு, கன்னட இலக்கியங்களில் அப் போரைப் பற்றி அதிகமாகக் கூறப்பெறவில்லை போலும்.

ராய்ச்சூர்ப் போர் 1520ஆம் ஆண்டு மேமீ 19ஆம் தேதி நடந்த தென்று ராபர்ட் சிவெல் கூறியுள்ள போதிலும், 1522ஆம் ஆண்டில் நடந்ததென்று நூனிஸ் கூறுவதுதான் பொருத்தமாக உள்ளது. தொடக்கத்தில் விஜயநகரப் படைகள் பீஜப்பூர்ச் சுல்தானுடைய வீரர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குத் துரத்தியடித்தன. ஆனால், பீஜப்பூர் அணியின் பீரங்கிப்படை

*Dr. O. Ramachandrayya. Op. Citus. P.151

மிக மும்முரமாக வேலை செய்யத் தொடங்கியவுடன் விஜயநகரப் படைகள் பின்வாங்கத் தொடங்கின. ஆயினும், கிருஷ்ண தேவ ராயர் மிகுந்த தைரியத்துடன் தம் படைகளின் நடுவில் நின்று ஊக்கமளித்து வீரர்களை உற்சாகப்படுத்தவே அவர்கள் மீண்டும் தாக்கத் தொடங்கினர். இம் முறை விஜயநகரப் படைகளின் எண் ணிக்கை மிகுந்த தெம்பையளித்துப் பெரும்வெற்றியை அளித்தது. பீஜப்பூர்ச் சுல்தானுடைய பாடிவீடு கைப்பற்றப்பட்டு மூல பலமும் இராணுவ தளவாடங்களும், உணவுப் பொருள்களும் விஜயநகரப் படைகளின் வசமாயின. இஸ்மேயில் அடில் ஷாவும் ஒரு யானையின் மீது ஏறிக் கொண்டு உயிருக்குப் பயந்து தம் தலை நகரத்திற்குச் சென்று விட்டார். சலபத்கான் என்ற சேனைத் தலைவர் கைது செய்யப்பட்டார். கிருஷ்ண தேவராயருடைய வெற்றி, முழு வெற்றியாயிற்று. ராய்ச்சூர்க் கோட்டை கிருஷ்ண தேவராயர் வசமான போதிலும், கோட்டைக்குள்ளிருந்த வீரர் களையும் மற்ற மக்களையும் விஜயநகரப் படைகள் துன்புறுத்தாது அன்புடன் நடத்தின. கிருஷ்ணதேவராயர் உயிருடன் இருக்கும் வரையில் பீஜப்பூர்ச் சுல்தான் ராய்ச்சூர்க் கோட்டையை மீண்டும் கைப்பற்றும் நினைவை அறவே விட்டொழித்தான்.

இவ் வெற்றிக்குப் பிறகு குல்பர்கா நகருக்குத் தம்முடைய சேனையுடன் சென்று, மறைந்து போன பாமினிப் பேரரசிற்கு மீண்டும் உயிர் கொடுக்க ராயர் நினைத்த போதிலும், அவருடைய எண்ணம் நிறைவேற வில்லை. கிருஷ்ண தேவராயருடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் கன்னியாகுமரி முனையை உச்சி யாகவும், கிருஷ்ணாநதியை அடிப்பீடமாகவும் கொண்டு விளங்கிய ஒரு முக்கோணத்தைப் போல விஜயநகரப் பேரரசு விளங்கிய தெனக் கூறலாம்.

ராய்ச்சூர்ப் போரின் பயன்கள்: ராய்ச்சூர்க் கோட்டையைக் கைப்பற்றிய பெருமிதமான வெற்றியினால் விஜயநகரப்பேரரசிற்கு உண்டான பயன்கள் எவை? இவ் வெற்றியினால் கிருஷ்ண தேவ ராயர் மிகுந்த கர்வம் கொண்டதாகவும் பூஜப்பூர்ச் சுல்தானையும் மற்ற இஸ்லாமிய மன்னர்களையும் துச்சமாக நினைத்ததாகவும் நூனிஸ்கூறுவார். அமைதியுடன்படிக்கை செய்து கொள்வதற்காக விஜயநகரத்திற்கு வந்த பீஜப்பூர்ச் சுல்தானுடைய தூதனை மாதக் கணக்கில் தங்கும்படி செய்து, பின்னர், பீஜப்பூர்ச் சுல்தான் தம்முடைய அடிகளை வருடினால், அவரிடமிருந்து கைப் பற்றப்பட்ட பொருள்களும், நாடுகளும் திருப்பித்தரப்படும் என்று கூறியதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால், பேரரசர் களுடைய திருவடிகளை வணங்கி முத்தமிடுவது அக்காலத்திய இஸ்லாமிய அரசர்களின் வழக்க மென்றும், அதனால், பீஜப்பூர்ச்

சுல்தானை அவமானப்படுத்தக் கிருஷ்ண தேவராயர் சிறிதும் கருதவில்லை யென்றும் அறிஞர் S. K. ஐய்யங்கார் அவர்கள் கூறுவார். பீஜப்பூர்ச் சுல்தான் தோல்வியுற்றது, மற்ற பாமினி சுல்தான்களுடைய மனத்தில் பெரும்பீதியை உண்டாக்கிய தென்றும் 1465ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசிற்கு எதிராகத் தோன்றிய இஸ்லாமியக் கூட்டுறவு, இப் போரினால் தோன்றிய தாகும் என்றும் சில வரலாற்றுசிரியர்கள் கருதுவர். இக் கருத்தை ராபர்ட் சிவெல் என்பவர் வற்புறுத்திக் கூறியுள்ள போதிலும், கிருஷ்ண தேவராயர் இறந்த பிறகு அச்சுதராயர் ஆட்சிக் காலத்தில் விஜய நகர அரசியலில் பீஜப்பூர்ச் சுல்தான் பங்கு கொண்டதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். 1560 முதல் 1565ஆம் ஆண்டு வரையில் விஜயநகரப் பேரரசின் தலைவராக இருந்த ராமராயர், பாமினி சுல்தான்களுடைய உள் நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து அவர்களை அவமரியாதையாக நடத்தி, இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தோரைத் துச்சமாக நடத்திய கொள்கைகளே தலைக் கோட்டைப் போருக்கு ஏதுவாயிற்று என்று பின்வரும் பகுதிகளில் நாம் அறிந்து கொள்ள லாம். ராய்ச்சூர் முற்றுகையும், அதனால் கிடைத்த பெருவெற்றி யும் சாளுவ நரசிம்மர், நரச நாயக்கருக்கு விடுத்த வேண்டு கோளையும், அவருடைய கனவையும் நனவாக்கி, விஜயநகரப் பேரரசின் பெருமையை நிலை நாட்டின வென்று கூறலாம். இரண்டாம் தேவராயர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசு அடைந் திருந்த நிலைமையை விட உன்னதமான ஒரு நிலையைக் கிருஷ்ண தேவராயர் காலத்தில் அடைந்தது எனக்கூறலாம்.

கிருஷ்ண தேவராயர் பதவியைத் துறந்த செய்தி C (1525-A.D.)

நூனிஸ் எழுதிய வரலாற்று நூலிலிருந்து கிருஷ்ணதேவ ராயர் ஆருண்டுகள் நிரம்பிய தம் மகனை அரியணையில் அமர்த்தி, அவனுக்கு அமைச்சராகப்பணியாற்றிய செய்தி ஒன்றைக் கூறுவர். இச் செய்தி எவ்வளவு உண்மையான தென்று நம்மால் நிச்சயிக்க முடிய வில்லை. ஏனெனில், 1530ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து அரச பதவியில் இருந்ததாகக் கல்வெட்டுகளில் கூறப் பெற் றுள்ளன. ஒருகால் தம்முடைய மகன் திருமலைராயன் என்னும் சிறுவனை இளவரசனாக நியமனம் செய்ததை நூனிஸ் பிறழ உணர்ந்து, இவ்வாறு கூறியிருக்கலாம். இன்னொரு செய்தி என்ன வென்றால், கிருஷ்ணதேவராயருடைய அமைச்சர் சாளுவ திம்மரும் அவருடைய மகனும் சேர்ந்து, திருமலைராயனுக்கு நஞ்சு கொடுத்து இறக்கும்படி செய்ததாகவும் இந்த அரச துரோகக் குற்றத்திற் காகச் சாளுவ திம்மரும், அவருடைய மகனும் சிறையில் அடைக்

கப்பட்டனர் என்றும் நூனிஸ் கூறுவார். மகன் செய்த குற்றத் திற்காகத் தகப்பனைத் தண்டித்ததும், சாளுவதிம்மர், வீரநர சிம்மருடைய ஆணைப்படி தம்முடைய கண்களைப் பிடுங்கி எறியா மல் தம்மை அரியணையில் ஏற்றியது, அரசத்துரோகமெனக் கூறியதும் நம்பத் தகுந்த செய்திகளாகத் தோன்ற வில்லை. ஆகையால், கிருஷ்ண தேவராயர் 1525ஆம் ஆண்டில் தம்முடைய பதவியைத் துறந்தார் என்பதும் நம்பத்தக்க தன்று.

கிருஷ்ண தேவராயரைப்பற்றிப் பீயஸ் என்பாரின் மதிப்பீடு :

'கிருஷ்ணதேவராயர் நடுத்தரமான உயரமுடையவர். அவருடைய நிறமும் தோற்றமும், வசீகரமாக இருக்கின்றன. அதிகச் சதைப்பற்று இல்லாமலும், ஒல்லியாக இல்லாமலும் இருக்கிறார். அவருடைய வதனத்தில் அம்மை வார்த்த குறிகள் காணப்படுகின்றன. முகமலர்ச்சியும், கண்ணிற்கு இனிமையான காட்சியும் உடையவர். அயல் நாட்டவர்களை அன்புடனும் மரியாதையுடனும் நடத்துகிறார். அவர்களுடைய விருப்பு வெறுப்புகளை உணர்ந்து பழகுகிறார். ஆட்சித் திறமையும், சமன் செய்து சீர் தூக்கும் தன்மையும் உள்ளவர். ஆயினும், முன் கோபமும் பின்னர் வருத்தப்படும் தன்மையுமுள்ளவர். 'கிருஷ்ண ராய மகாத்மா' என்று மக்கள் இவரை அழைக்கின்றனர். 'வீரப் பிரதாப, சதுர்சமுத்திராதிபதி' என்ற பட்டங்களும் வழக்கத்தில் உள்ளன. தென்னிந்தியாவில் உள்ள மற்ற அரசர்களை விட மிகுந்த பெருமையுடையவ ராகையால் மேற்கூறப் பெற்ற பட்டங்கள் அவருக்கு வழங்குகின்றன. இவருடைய பேரரசை யும், சேனை சமுத்திரத்தையும் நோக்கினால் இவர் மிகச் சிறந்த பேரரசர் என்று கூறுவதில் வியப் பொன்று மில்லை.*

கிருஷ்ண தேவராயரைத் தேரில் கண்டு களித்த பீயஸ், மேற் சொல்லியவாறு கூறுவதில் உண்மை யிருக்க வேண்டும். அரச பதவியை வகித்த போதிலும் தினந்தோறும் உடற்பயிற்சி செய்து தம்முடைய உடலையும் உள்ளத்தையும் நல்ல நிலையில் வைத்திருந்த தாகக் கூறுவதிலிருந்து இவ் வரசருடைய சேனை நடத்தும் திறமை யும், போரில் பங்கு கொள்ளும் ஆர்வமும் தெற்றென விளங்கு கின்றன. தம்மால் வென்று அடக்கப்பட்ட அரசர்கள், மக்கள் முதலியோரைக் கொடுமைப்படுத்தும் வழக்கம் கிருஷ்ணதேவ ராயரிடம் இல்லை.

நூனிஸ் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து, கிருஷ்ண தேவராயருடைய வாழ்க்கையில் மூன்று பெரிய குணக்கேடுகளைச் சிலர் தொகுத்துக் கூறுவர்.

*Robert Sewell. Chronicle of Paes. P. 247

1. ராய்ச்சூர் முற்றுகைக்குப் பிறகு இஸ்மேயில் அடில் ஷாவை நடத்திய முறை.
2. கஜபதி இளவரசன் வீரபத்திரன் என்பாரை அவருடைய நிலைமைக்கு ஈடில்லாத சாதாரண வீரன் ஒருவனுடன் மல்யுத்தம் செய்யும்படி உத்தரவிட்டது.
3. சாளுவ திம்மர் என்ற அமைச்சரை, அவர் மகன் செய்த குற்றத்திற்காகத் தண்டித்தது.

முதலில் கூறப்பட்ட குற்றச்சாட்டுப் பொருள் நிறைந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில், பாமினி சுல்தான்கள் எல்லோரும் விஜயநகரத் தரசர்களைப் போரில் தோல்வியுறும்படி செய்வதும், பின்னர், பழிவாங்குவதும் தங்களுடைய முக்கியக் கொள்கை களாகக் கொண்டிருந்தனர். விஜயநகரத் தரசர்கள்மீது படை எடுத்துச் சென்றதை யெல்லாம் 'பாவிகளாகிய இந்துக்களை அழிப் பதற்குச் செய்த போர்கள்' எனப் பெரிஷ்டாவும், டபடாபாவும் கூறுவர். பாமினி சுல்தான்கள் செய்த கொடுஞ்செயல்களையே கிருஷ்ணதேவ ராயர் திருப்பிச் செய்தார் என்று நாம் உணர வேண்டும். 15, 16ஆம் நூற்றாண்டுகளில் தோல்வியுற்ற அரசர் களைப் பழிவாங்குவது, அரசியல் தர்மமாகக் கருதப் பெற்றது போலும்!

இரண்டாவது குற்றம், கலிங்கநாட்டு இளவரசனைச் சிறைப் படுத்திய பிறகு, கொண்டவீடு என்னு மிடத்தில் அரச மரபைச் சேராத ஒரு மல்யுத்த வீரனுடன் மல்யுத்தம் செய்யும்படி கிருஷ்ண தேவராயர் ஆணையிட்டார் என்றும், அந்த அவ மானத்தைப் பொறுக்காத வீரபத்திரன் தற்கொலை செய்து கொண்டாராகையால், அந்தத் தற்கொலைக்குக் கிருஷ்ண தேவ ராயரே பொறுப்பாளியாவார் என்றும் கூறப்படுகின்றன. ஆனல், 1516, 1519ஆம் ஆண்டுகளில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகள் வீரபத்திரன் என்பார் கிருஷ்ண தேவராயரால் கொண்டவீடு மண்டலத்திற்கு மகா மண்டலீசுவரராக நியமிக்கப்பட்டதாகக் கூறுகின்றன. ஆகையால், நூனிஸ் கூறும் மேற்கண்ட குற்றங்கள் நம்பத் தகுந்தன வல்ல என்று சில வரலாற்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

மூன்றுவது குற்றத்தை உண்மையானது என்று உறுதி செய்வ தற்கு ஏற்ற உள்நாட்டு இலக்கிய ஆதாரங்கள் கிடையா. சாளுவ திம்மரும், அவருடைய மகனும் கிருஷ்ணதேவராயருடைய மகனை நஞ்சளித்துக் கொலை செய்தனர் என்பதும், அக் குற்றத் திற்காக அவ் விருவரும் கிருஷ்ண தேவராயரால் துன்புறுத்தப் பட்டனர் என்பதும் நம்பத் தகுந்தனவாக இல்லை.

கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசின் பரப்பளவும், பெருமையும், உன்னத நிலையும் உச்ச கட்டத்தை அடைந்தன என்று கூறலாம். அவருடைய அரசியல் அமைப்பு முறையும், வெளிநாட்டுக் கொள்கையும், பேரரசின் பொருளா தார, சமய, சமூக, கலாச்சார நிலைமைகளை மேன்மை யுறும்படி செய்தன. அவர் பெயரளவில் மாத்திரம் அரசராக ஆட்சி செய்ய வில்லை. ஓர் அரசனுடைய அதிகாரங்கள் யாவற்றையும் உண்மை யாகவே செலுத்தி மேன்மை பெற்றார். இரண்டாவது தேவராயர் ஆட்சிக்குப் பிறகு சீர்கேடுற்ற பேரரசின் நிலைமையைச் சாளுவ நரசிம்மருடைய விருப்பத்திற் கிணங்க மேன்மை யடையும்படி செய்த பெருமை கிருஷ்ண தேவராயரையே சேரும்.

கிருஷ்ண தேவராயரின் சமய கொள்கை: தென்னிந்திய வைணவச் சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவ ராயினும் சைவம், மாத்வம், சமணம் முதலிய சமயங்களைச் சார்ந்தோர்களைக் கிருஷ்ண தேவராயர் எவ் வகையிலும் துன்புறுத்த வில்லை. அஷ்ட திக்கஜங்கள் என்றழைக்கப்பெற்ற புலவர்களுள் ஐவர் கிருஷ்ண தேவராயரால் ஆதரிக்கப்பெற்றனர். அவர்களுள் மூவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள். அல்லசானி பெத்தண்ணா அத்து விதக் கொள்கையைப் பின்பற்றியவர். சாளுவ வம்சத்து அரசர் களாகிய சாளுவ நரசிம்மரும், இம்மடி நரசிம்மரும் ஆதரித்த வைணவ சமயத்தைக் கிருஷ்ணதேவரும் ஆதரித்தார். ஆயினும், விருபாட்சராயருடைய காலத்திற்குமுன் விஜயநகர அரசர்கள் தங்களுடைய குலதெய்வமாகக் கருதிய ஹம்பி விருபாட்ச தேவரையே விஜயநகரப் பேரரசின் தெய்வமாகக் கருதினர்; தெற்கு மராட்டிய நாட்டில் வழங்கிய விட்டோபா வணக்கத்தை விஜய நகரத்திலும் பரவும்படி செய்து வித்தளர் கோவில் என்ற பெரிய ஆலயத்தை அமைத்தனர். கிருஷ்ண தேவராயர் திருப்பதி வெங்கடேசப் பெருமானுக்கு அளித்த தான தருமங்களை நோக்கின், திருப்பதிப் பெருமானைத் தம்முடைய இஷ்ட தெய்வ மாகக் கொண்டிருந்த உண்மை நன்கு விளங்கும். தம்முடைய பல விதமான அலுவல்களிடையே ஏழு தடவைகள் திருவேங்கட முடையானைச் சேவித்துப் பலவித தருமங்கள் செய்தமையைக் கிருஷ்ண தேவராயருடைய கல்வெட்டுகளிலிருந்து நாம் உணரக் கூடும். திருப்பதியில் அவருடைய இரு முக்கிய அரசிகளுடன் காணப்பெறும் செப்பு விக்கிரகம் திருவேங்கடமுடையானிடத்தில் கிருஷ்ண தேவராயருக்கிருந்த பக்தியைக் காட்டுகிறது.

பிரதாபருத்திர கஜபதியுடன் போரிட்டுச் சமாதானம் செய்து கொண்ட பிறகு, சோழ மண்டலத்தில் உள்ள பல தேவா

லயங்களுக்கு நேரில் சென்று வணக்கம் செலுத்தியபின் அக் கோவில்களின் நித்திய நைவேத்தியங்களுக்காகப் பதினாயிரம் வராகன்களைத் தருமம் செய்துள்ளார். தென்னிந்தியக் கோவில் களில் காணப் பெறும் ராய கோபுரங்களும், நூற்றுக்கால், ஆயிரக் கால் மண்டபங்களும், கலியாண மண்டபங்களும், கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப் பெற்றன வாகும். திருவண்ணாமலை திருக்கோவிலில் காணப்பெறும் ஆயிரக்கால் மண்டபமும், திருக்குளமும், பதினைருநிலைக் கோபுரமும் கிருஷ்ண தேவராயர் காலத்தில் அமைக்கப் பெற்றன. இக் கோவிலின் கர்ப்பக்கிரகத்தின் கலசம் பொன் மூலாம் பூசப் பெற்றது. காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பர நாதர் கோவிலுக்கும், அருளாளப் பெருமாள் கோவிலுக்கும் பல தான தருமங்கள் வழங்கப் பெற்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள சேந்தமங்கலம் என்னும் ஊரில் கிடைத்த கல்வெட்டில் தென் பெண்ணாற்றிற்கும், தென் வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட நடுநாடு, சோழ மண்டலம் ஆகிய இடங்களில் காணப்பெறும் தீர்த்தநகரி (திருத்தினை நகர்), திட்டைக்குடி, திருமாணிக்குழி, பெண்ணாகடம், உடையார் கோவில், பந்தநல்லூர், திருவகீந்திர புரம், திருகாட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், முதலிய கோவில்களுக்குப் பதினாயிரம் வராகன்கள் தான தருமங் களுக்காக வழங்கப் பெற்றன என்று கூறப்பட்டுள்ளது. சிதம்பரத் திலுள்ள வடக்குக் கோபுரத்தில் கிருஷ்ண தேவராயருடைய கற்சிலை உருவம் காணப்படுகிறது. அக் கோபுரத்தில் காணப்படும் கல்வெட்டொன்று கலிங்க நாட்டை வென்ற பிறகு, இந்தக் கோபுரம் கிருஷ்ண தேவராயரால் கட்டப் பெற்றதெனக் கூறு கிறது. ஆனால், வடக்குக் கோபுரத்தின் கட்டட அமைப்பும், உருவச் சிலைகளும் சோழர் காலத்திய அமைப்பைப் பின்பற்றி யுள்ளன. சிதம்பரம் கோவிலில் காணப்படும் மற்றக் கோபுரங் களைவிட முற்பட்ட காலத்தில் அவை அமைக்கப்பட்டனவாகத் தெரிகிறது. சோழர் காலத்தில் தொடங்கப் பெற்று முடிவுறாமல் இருந்த இக் கோபுரத்தைக் கிருஷ்ணதேவராயர் முடித்துத் தம் முடைய சிலையை ஒரு மாடத்தில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய் திருக்க வேண்டும்.

கிருஷ்ண தேவராயருடைய இலக்கியப் பணி : வடமொழியிலும், தெலுங்கு மொழியிலும் பல நூல்களை இயற்றியதோடு பல கவிஞர்களையும் கிருஷ்ண தேவராயர் ஆதரித்தார். ஜம்பாவதித் திருமணம், உஷா பரிணயம் என்ற இரண்டும் வடமொழியில் எழுதப் பெற்ற நாடகங்களாகும். தெலுங்கு மொழியில் எழுதப் பெற்ற ஆமுக்த மால்யதா அல்லது விஷ்ணு சித்தமு என்ற நூலி

பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் ஆகிய இருவருடைய வரலாற்றைப் பற்றிய தாகும். தெலுங்குப் பிரபந்தங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த இந் நூல் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய அழகுகளுடன் திகழ்கின்றது; மனித இனத்தின் உள்ளுணர்வுகளை விளக்கிக் கூறுவதில் இணையற்ற நூலாகத் திகழ்கிறது. கிருஷ்ண தேவராயருடைய அரசியற்கொள்கைகளையும், அரசியல் அமைப்பு, அமைச்சர்களுடைய கடமை, இராணுவ அமைப்பு, பேரரசைப் பாதுகாக்கும் முறை முதலியவைகளையும் கிருஷ்ண தேவராயர் கூறியுள்ளார். இந் நூல் அல்லசானி பெத்தண்ணாவால் எழுதப் பெற்றது என்ற கொள்கை ஆதாரமற்ற தாகும்.

அஷ்டதிக்கஜங்கள் என்று அழைக்கப் பெற்ற புலவர்கள் அல்லசானி பெத்தண்ணா, திம்மண்ணா, ராமபத்திரன், துர்ஜாதி, மல்லண்ணா, சூரண்ணா, ராமராஜபூஷணன், தெனாலி ராம கிருஷ்ணன் என்போராவர். இறுதியில் கூறப்பட்ட மூவரும் கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்தவரல்லர். கிருஷ்ண தேவ ராயரின் ஆஸ்தான கவியாகிய பெத்தண்ணா வடமொழி, தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் வல்லவர். அவருடைய மனுசரிதம் என்னும் நூல் பதினென்கு மனுக்களில் இரண்டாவது மனுவாகக் கூறப்படும் சுவரோசிச மனு என்பாரின் புராணக் கதையாகும். தெலுங்கு இலக்கியம் வளர்ச்சியுறுவதற்குப் பெத்தண்ணாவின் இலக்கியம் வழிகாட்டியாயிற்று. ஆகையால், அவருக்கு, 'ஆந்திர கவிதா பிதாமகன்' என்ற பெயர் வழங்குகிறது. கிருஷ்ண தேவ ராயரிடத்தில் பெத்தண்ணா மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். பேரரசர் இவ்வுலக வாழ்வை நீத்த பொழுது 'பேரரசருடன் நானும் உயிர் துறக்காமல் இன்னும் உயிருடன் இருக்கிறேன். என்னுடைய நட்பின் திறம் இருந்தவாறென்னே! என்று வருத்த முற்றார். (நந்தி முக்கு) திம்மண்ணா என்ற சைவப் புலவர் எழுதிய பாரிஜாதாபகரணமு என்ற நூல், தெய்வ லோகத்திலிருந்து பாரி ஜாதம் பூவுலகத்திற்குக் கொண்டு வரப்பட்ட வரலாற்றைப் பற்றியதாகும். சகல கதா சங்கிரகம் என்னும் தெலுங்கு நூலை இயற்றியவர் ராமபத்திரன் என்ற புலவராவார். துர்ஜாதி என் பார் காளத்தி மகாத்மியம் என்னும் நூலையும், மல்லண்ணா ராஜ சேகர சரிதம் என்னும் நூலையும் இயற்றினர். நரசிம்ம கவி என்ற புலவர் தாம் எழுதிய கவிகர்ண ரசாயணம் என்னும் நூலைக் கிருஷ்ண தேவராயருக்கு அர்ப்பணித்துள்ளார். கிருஷ்ணதேவராயருடைய காலத்திற்குமுன் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட நூல்களே அதிகம் தோன்றின. இப்பொழுது மொழிபெயர்ப்பு நூல்கள் மறைந்து மூல நூல்கள் தோன்றலாயின. இக் காரணத் தினால் கிருஷ்ண தேவராயருடைய ஆட்சிக் காலம் தெலுங்கு மொழியின் பொற்காலம் என்று கூறப்படுகிறது.

கொண்டவீட்டு இலக்குமிதரன் என்பார் தெய்வ ஞான விலாசம் என்ற வடமொழி நூலை எழுதியுள்ளார். இசை நூல் ஆகிய சங்கீத சூர்யோதயம் என்னும் நூல் இலக்குமி நாராயணன் என்பாரால் எழுதப்பட்டது. அமைச்சர் சாளுவ திம்மரும், அவருடைய உறவினன் கோபன் என்பாரும் வடமொழியில் மிகுந்த பாண்டித்தியம் உள்ளவர்கள். கிருஷ்ண மிச்ரர் என்பாரால், எழுதப் பெற்ற பிரபோத சந்திரோதயம் என்னும் நூலுக்குக் கோபன் என்பார் உரை எழுதியுள்ளார். வியாசாமிர்தம் என்ற நூலை எழுதிய வியாசராயர் என்ற கவிஞரும் கிருஷ்ணதேவராயரால் ஆதரிக்கப் பெற்றார்.

தமிழ்ப் புலவர்கள் : கிருஷ்ணதேவராயர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களில் தலைசிறந்தவர் ஹரிதாசர் என்பவராவார். அவர் சித்தூர் மாவட்டத்தில் உள்ள நாகலாபுரம் அல்லது அரிகண்டபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவரால் எழுதப்பெற்ற இரு சமய விளக்கம் என்னும் நூலில் ஆரணவல்லி, ஆகமவல்லி என்னும் இரண்டு பெண்களின் உரையாடல்களின் மூலம் சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களின் தத்துவார்த்தங்கள் விளக்கம் பெறுகின்றன. இந் நூலின் முகவுரையில் கிருஷ்ண தேவராயர் கஜபதி அரசன்மீது படையெடுத்துச் சென்று சிம்மாத்திரி அல்லது சிம்மாசலத்தில் வெற்றித் தூண் நாட்டியதைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிருட்டிண ராயன்
தரைமீது சிங்காத் திரியில் செயத்தம்பம் நாட்ட
வரம்ஆ தரவால் அளித்தே வடகூவம் மேவும்
கருமா மணிவண் ணனீநீ டுகருத்தில் வைப்பாம்'

குமார சரஸ்வதி என்னும் தமிழ்ப் புலவர் கிருஷ்ண தேவராயர் கலிங்க நாட்டிளவரசியாகிய ஜெகன் மோகினியை மணந்து கொண்ட செய்தியைப் பின்வரும் வெண்பாவால் உணர்த்துகிறார்.

'கலிங்க மிழந்துதுதிக் கைச்சங்கம் தோற்று
மெலிந்துகட கம்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மா(ன)கிருஷ்ண பூபாலா உன்றனக்குப்
பின்னிட்ட ஓட்டியன்போற் பெண்'

கிருஷ்ண தேவராயரும் போர்த்துகீசியரும் : கிருஷ்ண தேவராயருடைய ஆட்சிக் காலத்தில் ஆல்புகர்க் என்பார் போர்த்துகீசிய ஆளுநராக அலுவல் பார்த்தார். ஆல்புகர்க் என்பாருடைய ஆட்சிக்கு முன்னரே கொச்சி, கண்ணனூர் என்ற இடங்களில்

தங்களுடைய வியாபாரக் கிடங்குகளைப் போர்த்துகீசியர் அமைத்திருந்தனர்; கள்ளிக்கோட்டை சாமொரீனுடைய கடற் படையையும், எகிப்து நாட்டுச் சுல்தானுடைய கடற் படையையும் தோற்கடித்து இந்துப் பேராழியில் தங்களுடைய கடலாதிக்கத்தை நிலை நாட்டினர்; பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளில் இருந்து குதிரைகளை இறக்குமதி செய்து பாமினி சுல்தான்களுக்கும் விஜயநகரத்து அரசர்களுக்கும் விற்றுப் பெரிய இலாபத்தை அடைந்தனர். விஜயநகரப் பேரரசில் உள்ள நகரங்களிலும், மற்ற இடங்களிலும் தங்களுடைய கிடங்குகளை அமைப்பதற்குப் போர்த்துகீசியர் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தனர். கிருஷ்ண தேவராயரும், போர்த்துகீசியரிடமிருந்து குதிரைகளைப் பெற்றுத் தம்முடைய குதிரைப் படையை வன்மையுடையதாகச் செய்து கொள்வதற்கு விரும்பினர்.

1510 ஆம் ஆண்டில் கள்ளிக் கோட்டை என்னும் இடத்தைச் சாமொரீன் அரசிடமிருந்து கைப்பற்றுவதற்கு முடியாமல் ஆல்புகர்க் தோல்வியுற்றார், ஆகையால், சாமொரீனுக்கு எதிராகக் கிருஷ்ண தேவராயருடைய உதவியைப் பெறுவதற்கும், அரேபிய நாட்டுக் குதிரைகளைக் கிருஷ்ண தேவராயரிடமே விற்பதற்கும் ஏற்ப ஒரு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு லூயிஸ் என்ற பாதிரியைத் தூதுவராக ஆல்புகர்க் அனுப்பி வைத்தார். ஆனால், கிருஷ்ண தேவராயர் தகுந்த பதிலுரைக்கவில்லை. இந்து அரசராகிய சாமொரீனுக்கு எதிராகப் போர்த்துகீரியருக்கு உதவி செய்யக் கிருஷ்ண தேவர் தயக்கம் கொண்டார். கிருஷ்ண தேவருடைய உதவியின்றியே ஆல்புகர்க் கோவா என்ற இடத்தைப் பீஜப்பூர்ச் சுல்தானிடமிருந்து கைப்பற்றி வியாபாரத் தலத்தை அமைத்தார். பட்கல் என்ற இடத்தில் ஒரு கோட்டையை அமைத்துக் கொள்வதற்கு ஆல்புகர்க் முயற்சி செய்த பொழுது கிருஷ்ணதேவராயர் அதற்கு இடங் கொடுக்கவில்லை. இறுதியாகக் கோவா நகரத்தைப் போர்த்துகீசியர் கைப்பற்றிய சமயத்தில், விஜயநகரத்துத் தூதர்கள் ஆல்புகர்க்கிடம் அனுப்பப் பெற்றனர். 1511ஆம் ஆண்டில் லூயி பாதிரியார் ஒரு துருக்கனால் விஜயநகரத்தில் கொலை செய்யப்பட்டார். அக் கொலை கிருஷ்ண தேவராயரால் தூண்டப்பட்டதா, பீஜப்பூர்ச் சுல்தானுடைய கையாட்களால் செய்யப்பட்டதா என்பது மர்மமாக உள்ளது. லூயி பாதிரியார் கொலையுண்டது கிருஷ்ண தேவராயருடைய சதித் திட்டமேயாகும் எனத் திரு. ஓ. இராமச்சந்திரய்யா கருதுவார்.*

*Dr. O. Ramachandrayya. op. cit. P. 85

லூயிஸ் பாதிரி கொலையுண்ட பிறகு விஜய நகரத்திற்கும், போர்த்துகீசியருக்கும் நிலவிய உறவு சுமுகமானதென்று கூறுவதற் கில்லை. ஆனால், படகல் என்னு மிடத்தில் ஒரு கோட்டையை அமைத்துக் கொள்ள கிருஷ்ண தேவராயர் இணங்கினர். 1514ஆம் ஆண்டில் விஜய நகரத்திற்கு மாத்திரம் ஆயிரம் குதிரைகளை இறக்குமதி செய்வதற்கு இருபதினாயிரம் பவுன் இனம் தருவதாகக் கிருஷ்ண தேவராயர் கூறியதை ஆல்புகர்க் ஒப்புக் கொள்ள வில்லை.

கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் பல போர்த்துகீசிய வியாபாரிகள் விஜய நகரத்திற்கு வந்து தங்கியிருந்தனர். லூயி பாதிரியாருக்குப் பிறகு காஸ்பர் கொரியா என்பார் ஆல்புகர்க்கின் தூதராக வந்தார். மெகலன் என்பவரின் உறவினராகிய துவார்த்தி பார்போசா என்பவர் விஜய நகரத்தில் தங்கியிருந்து, அந் நகரத்தின் பெருமையைப்பற்றி விவரித்துள்ளார். டாமிங்கோஸ்பீயஸ் என்ற போர்த்துகீசியர் கிருஷ்ண தேவராயரை நேரில் பார்த்து விவரித்துள்ளார். பெர்னே நூனிஸ் என்ற மற்றொரு போர்த்துகீசிய வியாபாரி கிருஷ்ணதேவராயர் காலத்திலும், அச்சுத தேவராயர் காலத்திலும் விஜயநகரத்திற்கு வந்து தங்கியுள்ளார். அவருடைய, வரலாறு விஜயநகர வரலாற்றிற்கு எவ்விதம் பயன்படுகிறது என்பதைப் பற்றி இந் நூலில் பல இடங்களில் நாம் காணலாம். இராய்ச்சூர் முற்றுகையிடப்பட்டபொழுது கிறிஸ்டோவோ என்ற போர்த்துகீசியர் விஜயநகரப் படைகட்கு உதவி செய்துள்ளார். போர்த்துகீசியப் பொறிவல்லுநர் ஜோவோ போன்டி என்பார் நாகலாபுரத்தில் ஒரு பெரிய ஏரியை அமைப்பதற்கு மிக்க உதவி செய்துள்ளார்.

கிருஷ்ண தேவராயரும், சாளுவ திம்ம அப்பாஜியும் :

சாளுவ என்ற அடைமொழியிருந்த போதிலும் சாளுவ திம்ம அப்பாஜி, சாளுவ நரசிம்மருடைய அரச பரம்பரையைச் சேர்ந்த தவரல்லர். அவர் கௌன்டினிய கோத்திரத்தைச் சேர்ந்த அந்தண ராவார். சாளுவ நரசிம்மர் ஆத்திரேய கோத்திரத்தைச் சேர்ந்தவ ராவார். புஜபல வீரநரசிம்மருடைய ஆட்சியில் இவர் அமைச்சராக அமர்ந்திருந்தார். இவருடைய உதவியினால் தான் கிருஷ்ணதேவ ராயர் அமைதியாக அரியணையில் அமர முடிந்தது. கிருஷ்ணதேவ ராயர் இவரை அப்பாஜி என்று அழைத்து இவருடைய அறிவுரை களின்படி ஆட்சி செலுத்தினர் என்பது உணரத் தக்க தாகும். சாளுவ திம்மர் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியில் ஒப்பற்ற தோர் அமைச்சர் பதவியை வகித்தமை பற்றிப் பீயஸ் என்பார் பின்வருமாறு கூறியுள்ளார். 'அரசனுக்கு மிகுந்த துணையாக

இருப்பவர் திம்மரசர் என்ற வயது சென்ற அறிஞராவார். விஜய நகர அரண்மனையிலுள்ள ஏவலாள்களும், மற்ற அரசியல் அலுவலாளர்களும் இவருடைய ஏவலின்படி நடக்கின்றனர். கிருஷ்ண தேவராயர் தம்முடைய தகப்பன்போல இவரை மதித்து நடக்கிறார். அவருக்கு 'அப்பாஜி சாளுவ திம்மர்' என்ற மற்றொரு பெயர் வழங்குகிறது.

சாளுவ திம்மரைப்பற்றிப் பல கல்வெட்டுகளும், செப்பேடு களும் பெருமையாகப் புகழ்ந்து பேசுகின்றன. பேரரசின் பல பகுதிகளுள் காணப்படும் கல்வெட்டுகளில் இவருடைய ஆணைகள் பொறிக்கப்பட்டுள்ளன. அரசியலில் போர் ஆயினும் சமாதான மாயினும் சாளுவ திம்மருடைய உத்தரவின்றி நடைபெறவில்லை. ராய்ச்சூர் முற்றுகையிடப்பட்ட பொழுதும், கலிங்கப்போர் நடைபெற்ற சமயத்திலும் கிருஷ்ணதேவராயருக்கு வலக்கை போல் விளங்கி உதவி செய்தார். கொண்டவீடு என்ற இடத்தைக் கைப்பற்றிய பிறகு கலிங்கப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் படி இவர் கூறிய போதிலும், கிருஷ்ணதேவாயர் அதற்கு இணங்க வில்லை. ஆயினும், கலிங்கப்போரில் தொடர்ந்து உதவி செய்து அரசன் வெற்றியுடன் திரும்புமாறு ஏற்பாடுகள் செய்தார். கொண்டவீடு ராஜ்யத்திற்குத் தலைவராக நியமிக்கப் பெற்றிருந்தாலும், பேரரசின் பல பகுதிகளில் அவருடைய செயல்களும், வார்த்தைகளும் வேண்டப்பட்டன. 1510-11ஆம் ஆண்டில் திருமணங்களின்மீது விதிக்கப்பட்ட வரிகளை நீக்கியது இவருடைய செயற்கரும் செயலாகும். அகத்தியருடைய பால பாரதம் என்னும் வடமொழி நூலின் உரையில் 'தண்டநாயக்கர்' அல்லது பிரதமசேனாதிபதி என்று இவர் அழைக்கப்படுகிறார். இவ ருடைய வியோதிக தசையில் கிருஷ்ண தேவராயரால் துன்புறுத்தப் பட்டார் என்ற செய்தியை உறுதி செய்வதற்கேற்ற ஆதாரங்கள் இல்லை. கல்வெட்டுகளில் இவருக்கு அய்யகாரு, அய்யங்காரு என்ற பட்டங்கள் காணப்பெறுகின்றன.

10. அச்சுத தேவராயர்

(1530-1542)

'கிருஷ்ண தேவராயர் தம் இறுதிக் காலத்தில் தம்முடைய (ஒன்றுவிட்ட) தம்பியாகிய அச்சுத ராயர் என்பவரை விஜயநகர அரசராக நியமித்து ஓர் உயில் எழுதி வைத்தார். கிருஷ்ணதேவ ராயருக்கு ஒன்றரை ஆண்டுகளே நிரம்பிய ஆண்குழந்தை ஒன்று இருந்த போதிலும், அச்சுத தேவராயரே ஆட்சிப் பீடத்தில் அமர் வதற்குத் தகுதியுள்ளவர் எனக்கருதி அவரைத் தேர்ந்தெடுத்தார்' என்று நூனிஸ் கூறியுள்ளார்.[1] கிருஷ்ண தேவராயருடைய ஆட்சிக் காலத்தில் அச்சுத ராயர் சந்திரகிரிக் கோட்டைக்குள் பாது காவலில் வைக்கப் பெற்றிருந்தார். சந்திரகிரியிலிருந்து அச்சுத தேவர் விஜயநகரத்திற்கு வந்து முடிசூட்டிக் கொள்வதற்குமுன் கிருஷ்ண தேவராயருடைய மருமகனுகிய ஆரவீட்டு ராமராயர் தம்முடைய மைத்துனச் சிறுவனே அரியணையில் அமர்த்தி, ஆட்சிப் பொறுப்பைத் தாம் ஏற்று நடத்துவதற்கு முன்வந்தார். ஆனல், அச்சுத தேவராயருடைய மைத்துனர்களாகிய சாலகராஜு சகோதரர்களும், சோழ மண்டலத்துத் தலைவராக இருந்த செல்லப்பச் சாளுவ நாயக்கரும் ராமராயருடைய எண்ணம் கைகூடாதவாறு செய்துவிட்டனர். சாலகராஜு சகோதரர்களும், செல்லப்பச் சாளுவ நாயக்கரும் அச்சுதராயருக்கு உதவியாக இருந்து விஜயநகர அரண்மனையைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டனர்.

சந்திரகிரியிலிருந்து விஜயநகரத்திற்கு வருவதற்குமுன் திருப் பதி வெங்கடேசப் பெருமான் சந்நதியிலும், காளத்தித்திருக் கோவிலிலும் அச்சுதராயர் விஜயநகரப் பேரரசராகத் தம்மைப் பிரகடனம் செய்து, இரண்டு தடவை முடிசூட்டிக் கொண்டார், காளத்தித் திருக்கோவிலில் காணப்படும் கல்வெட்டு, 1529ஆம் ஆண்டு டிசம்பர் மீ 20ஆ யன்று அச்சுத தேவராயர் முடிசூட்டிக் கொண்டதாகக் கூறுகிறது.[2] பின்னர், அச்சுததேவர் விஜய நகரத்திற்குச் சென்று 1530ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மூன்றுவது தடவையாக முடிசூட்டு விழாவை நடத்திக்

[1] R. Sewell. A Forgotten Empire. P. 348.
[2] No. 157 of 1924

அச்சுத தேவராயர் காலத்தில்
விஜயநகரப் பேரரசின் ராஜ்யங்கள்
(உத்தேசமானது)
7|6
8|6
16
16
12
12
8
8
7|6
8|0
கிருஷ்ணை நதி
ராய்ச்சூர்
கொண்டவீடு
முதுகல் ராஜ்யம்
குத்தி ராஜ்யம்
கந்தன வோலு ராஜ்யம்
ஸ்ரீசைலம்
ஹம்பி ஹஸ்தினாவதி
கதை ராஜ்யம்
பெனு கொண்டா ராஜ்யம்
உதயகிரி ராஜ்யம்
ஸ்ரீரங்கப் பட்டினம் ராஜ்யம்
சந்திர குத்தி
பரகூர்
சந்திரகிரி ராஜ்யம்
படைவீடு ராஜ்யம்
முல்பாகல் ராஜ்யம்
திருவதிகை ராஜ்யம்
கண்ணிக்கோட்டை
சோழ ராஜ்யம்
திருவடி ராஜ்யம்
பாண்டிய ராஜ்யம்
தொல்லம்
கெனகாதி பாண்டியர்
இந்தியப் பெருங்கடல்
வங்காள குடாக் கடல்
இலங்கை

படம்—6

கொண்டார் என்றும் நாம் அறிகிறோம்.[1] ஆகையால், அச்சுததேவ ராயர் ஆட்சியின் தொடக்கத்தில் அவருக்கு எதிராக ஆரவீட்டு ராமராயர் தம்முடைய மைத்துனனுடைய (1½ வயது) குழந்தை சார்பாக அரசுரிமையைக் கைப்பற்ற முயன்றார். ஆனால், அச்சுத ராயருக்கும், ராமராயருக்கும் ஒருவிதமான உடன்பாடு தோன்றி, அச்சுதராயரே விஜயநகரப் பேரரசராக ஒப்புக்கொள்ளப் பெற்றார்.

அச்சுதராயர் ஆட்சிக்கு எதிராக விஜயநகரப் பேரரசின் வெளிநாட்டிலிருந்து படையெடுப்புகளும், உள்நாட்டுக் கலகங் களும் தோன்றின.

கலிங்கநாட்டு அரசனுடைய படையெடுப்பு :

1. கிருஷ்ண தேவராயரிடம் தோல்வியுற்ற பிரதாபருத்திர கஜபதி, அப் பேரரசர் இறந்தவுடன் தாம் இழந்த நாடுகளைக் கைப்பற்றப் படையெடுத்து வந்தார். அல்லசானி பெத்தண்ண வால் எழுதப் பெற்ற தனிக் கவி ஒன்றில், 'திறந்து கிடந்த வீட்டில் குக்கல் ஒன்று திருட்டுத்தனமாக நுழைவது போல உத்கல நாட் டரசன் விஜயநகரப் பேரரசின்மீது படையெடுத்தான்' என்று கூறப்பட்டுள்ளது. தாராகப் பிரம்ம ராஜ்யம் என்னும் தெலுங்கு நூலை எழுதிய ராதாமாதவர் என்பார், 'உத்கலதேசத்து அரசன்மீது அச்சுதராயர் பெரும்வெற்றி கொண்டார்' எனக் கூறுவார். மேற்கூறப் பெற்ற ஆதாரங்களிலிருந்து கிருஷ்ண நதிக்குத் தெற்கில் தாம் இழந்த பகுதிகளை மீண்டும் பெறுவதற்குப் பிரதாப ருத்திரகஜபதி செய்த முயற்சிகள் வீண் முயற்சிகள் ஆயின என்பதை நாம் உணரலாம்.

2. கோல்கொண்டா நாட்டுச் சுல்தானுகிய கூலி குத்ப் ஷா என்பவரும் கொண்டவீட்டு ராஜ்யப்பகுதியைக்கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தார் என்று கோல்கொண்டா வரலாற்றில் கூறப் பட்டுள்ளது.[2] கோல்கொண்டாச் சுல்தான் கொண்ட வீட்டுக் கோட்டையைத் தொடக்கத்தில் தன்வசத்தில் கொண்டுவந்த போதிலும், வேலுகோட்டி திம்மப்பன் என்ற சேனைத் தலைவரை அனுப்பிக் கொண்ட வீட்டுக் கோட்டையை மீண்டும் அச்சுத ராயர் தம்வசப்படுத்திக் குத்ப் ஷாவின் படைகளை நாட்டை விட்டுத்துரத்தும்படி செய்தார். இதனால், பேரரசின் வடகிழக்குப் பகுதிக்குத் தோன்றிய துன்பம் நீங்கியது.

[1] Dr. N. Venkataramanayya, Studies P. 14.

[2] Ibid. P. 17

3. கிருஷ்ணதேவ ராயர் ஆட்சியில் 1522ஆம் ஆண்டில் நடந்த ராய்ச்சூர் முற்றுகைப் போரில் தாம் இழந்த ராய்ச்சூர், முதுகல் என்ற இடங்களைத் திரும்பப் பெறுவதற்குப் பீஜப்பூர்ச் சுல்தான் இஸ்மேயில் அடில் ஷா கிருஷ்ணை நதியைக் கடந்து, இடைதுறை நாட்டின்மீது படையெடுத்தார் என்று பெரிஷ்டா கூறுவர்.[1] இப் படையெடுப்பைச் சமாளிப்பதற்கு அப்பொழுது ராய்ச்சூர்க் கோட்டைப் பாதுகாவலனாக இருந்த அப்பாலராஜு என்பார் விஜயபுரிச் சுல்தானுடன் போரிட்டு உயிர் துறந்தார் என்று பால பாகவதம் என்னும் தெலுங்கு நூலில் கூறப்பட்டு உள்ளது. இதனால், ராய்ச்சூர்க் கோட்டையும், மற்றும் சில இடங்களும் பீஜப்பூர்ச் சுல்தான் வசமாயின. அச்சுதராயர் பீஜப்பூர்ச் சுல்தானிடமிருந்து ராய்ச்சூர், முதுகல் ஆகிய இடங்களைக் கைப்பற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். ஆனால், பேரரசின் தென்பகுதியில் வேறொரு கலகம் தோன்றியதால் ராய்ச்சூர்க் கோட்டையை மீட்பதைச் சிறிது காலத்திற்குத் தள்ளிவைக்க வேண்டி வந்தது.

4. காஞ்சி காமாட்சியம்மன் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டு, 1532ஆம் ஆண்டு ஜூலைமீ 27ஆ எழுதப்பெற்ற தாகும் இக் கல்வெட்டுச் செல்லப்பச் சாளுவ நாயக்கர், பரமக்குடி தும்பிச்சி நாயக்கர் ஆகிய இருவரும் சேர்ந்து செய்த கலகத்தை அடக்கித் திருவாங்கூர் நாட்டுத் திருவடிமீது அரசன் வெற்றி கொண்டு, தென்காசிப் பாண்டிய அரசனைப் பாதுகாத்துத் தாம்பிரபரணி யாற்றங் கரையில் அச்சுதராயர் வெற்றித்தூண் நாட்டிய செய்திகளைக் கூறுகிறது.[2] செல்லப்பச் சாளுவ நாயக்கர் என்பவர் சாளுவ திம்மஅப்பாஜியின் கால்வழியில் வந்தவ ரென்று ராபர்ட் சிவெல் நினைத்தார். ஆனால், அவர் தமிழ்நாட்டில் காணப்பெறும் கல்வெட்டுகளால் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் தேவ கன்மியாக அலுவல் பார்த்த தழுவக் குழைந்தான் பட்டன் என்பவருடைய மகன் என்றும், கிருஷ்ண தேவராயரிடம் 1510ஆம் ஆண்டில் அரசாங்க அலுவலில் அமர்ந்து சாளுவ வீர நரசிம்ம நாயக்கர் அல்லது செல்லப்பர் என்ற பட்டத்துடன் தமிழ்நாட்டில் மகாமண்டலீசுவரராக அலுவல் பார்த்தார் என்றும் நாம் அறிகிறோம். சோழமண்டலக் கரை, நாகப்பட்டினம், தஞ்சை, புவனகிரி, திருக்கோவலூர் முதலிய இடங்கள் அவருடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தன என்றும் மூப்பதினாயிரம் காலாட் படையும், 3,000 குதிரைகளும், 30 யானைகளும் அவருடைய சேனையில் இருந்தன என்றும் நூனிஸ்

[1] Bhriggs. Ferista. Vol. III. P. 66.

[2] S. I. I. Vol. VII. No. 52.

கூறுவார். கிருஷ்ணதேவராயர் இறந்தவுடன் சாளுகராஜு சகோதரர்களுடன் ஒற்றுமை கொண்டு, ராமராயருடைய சதித் திட்டம் நிறைவேறுதவாறு, அச்சுதராயர் சந்திரகிரியிலிருந்து வரும் வரையில் விஜயநகரத்தில் இருந்து, அவருக்கு உதவி செய்தார் என்றும் நாம் அறிய முடிகிறது. பின்னர் அச்சுததேவ ராயர் தம்முடைய மைத்துனர்களாகிய சாளுகராஜு சகோதரர் களுக்குக் காட்டிய பாரபட்சத்தைக் கண்டு மனம் வேறுபட்டுச் சோழமண்டலத்திற்குத் திரும்பிப் பேரரசிற்கு எதிராகக் கலகம் செய்தனர் போலும்! இக் கலகத்தில் சாளுவ நரசிம்மருக்கு உதவியாகப் பரமக்குடி தும்பிச்சி நாயக்கரும் சேர்ந்து கொண்டார்.

5. சோழ, பாண்டிய ராஜ்யங்களுக்குத் தெற்கே தென்காசிப் பகுதியில் ஜடில திரிபுவன ஸ்ரீ வல்லபதேவன் என்பார் விஜய நகரத்து அச்சுத தேவராயருக்கு அடங்கிய சிற்றரசராக இருந்தார். இவர் 1534 முதல் 1545 வரையில் தென்காசியில் இருந்து ஆட்சி புரிந்ததாக நாம் அறிகிறோம். திருவாங்கூர் நாட்டில் அச்சுதராயர் ஆட்சியில் அரச பதவியை வகித்தவர் உதய மார்த்தாண்ட வர்மன் என்பவராவர். உதய மார்த்தாண்ட வர்மன் தென்காசிப் பாண்டிய மன்னனுடைய நாட்டின்மீது படையெடுத்து அம்பா சமுத்திரம், மன்னர் கோவில், கழக்காடு, வேப்பங்குளம் முதலிய இடங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டு பாண்டிய மன்னனையும் தென்காசியை விட்டுத் துரத்தியடித்து விட்டதாகத் தெரிகிறது. இரண்டாம் தேவராயருடைய ஆட்சிக் காலத்தில் இருந்து விஜய நகரப் பேரரசிற்குச் செலுத்தி வந்த திறைப் பொருளையும் அளிக்க மறுத்துச் சோழமண்டலத்துச் சாளுவ நரசிம்மருடன் சேர்ந்து கொண்டார். பாண்டிய சிற்றர சனுகிய ஸ்ரீவல்லபன் விஜயநகரப் பேரரசனிடம் முறையிட்டுத் தமக்குதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

மேற்கூறப்பெற்ற கலகங்களை அடக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி பெரிய சாளுக்க ராஜு திருமலை தேவர் அச்சுதராயரிடம் வேண்டிக் கொண்டதாக அச்சுதராய அப்யுதயம் என்னும் நூலில் கூறப்பட்டுளது. அச்சுதராயரும், சேனைத் தலைவராகிய சின்ன திருமலை தேவருக்குத் தென்னாட்டை நோக்கிச் சேனையை நடத்தும்படி உத்தரவிட்டுத் தாமும் அச் சேனைக்குத் தலைமை வகித்துச் சென்றதியுடன்கிளம்பினர். விஜய நகரத்திலிருந்து கிளம்பிச் சந்திரகிரிக் கோட்டையை அடை வதற்குமுன் திருப்பதி வேங்கடநாதரையும், காளத்தீஸ்வரரை யும் வணங்கிப் பின்னர்ச் சந்திரகிரிக் கோட்டையில் தங்கினர்.

பின்னர்க் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேசுவரர், அருளாள நாதர், காமாட்சியம்மன் முதலிய தேவாலயங்களில் சேவை செய்து துலாபாரதானம் செய்து திருவண்ணுமலையை அடைந்தார். அண்ணுமலையையும், உண்ணுமுலைத் தேவியையும் வணங்கிய பின்னர்ச் சோழநாட்டிற்குள் புகுந்து திருவரங்கத்தில் தங்கியிருந்தார்.

பாண்டிய நாட்டில் கலகம் செய்து அடக்க மில்லாமல் நடந்து கொண்ட திருவடி ராஜ்யத்து அரசனையும், மற்றவர்களையும் தோற்கடிப்பதற்குப் பேரரசர் நேரில் வரவேண்டுவதில்லை என்று சேனுதிபதி வேண்டிக் கொள்ளவே, அச்சுதராயர் திருவரங்கத்திலேயே தங்கினர். சாளுவ நரசிம்மன், தும்பிச்சி நாயக்கன் ஆகிய இருவருடைய படைகளையும் துரத்திக் கொண்டு தாம்பிரபரணி நதிக்கரையைச் சின்ன சாளுக்க ராஜா அடைந்தார். தம்முடைய சேனையில் ஒரு பகுதியைத் திருவாங்கூர் நாட்டின் மீது செல்லும்படி ஆணையிடவே உதய மார்த்தாண்ட வர்மனின் படைகள், விஜய நகரப்படைகளை ஆரல்வாய்மொழிக் கணவாயில் சந்தித்து எதிர்த்துப் போர் புரிந்தன. தென்னிந்திய வரலாற்றில் இப் போர் தாம்பிரபரணிப் போர் என்று வழங்கிய போதிலும், இதற்கு ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போர் என வழங்குவது பொருத்த மாகும். இப் போரில் திருவாங்கூர்ப் படைகளும், செல்லப்பர், தும்பிச்சி நாயக்கர் படைகளும் சேர்ந்து, விஜயநகரப் படைகளை எதிர்த்த போதிலும் இந்த மூன்று படைகளும் பெருந் தோல்வி யடைந்தன. போரில் தோல்வியுற்றஉதய மார்த்தாண்ட வர்மன், செல்லப்ப சாளுவ நாயக்கர், தும்பிச்சி நாயக்கர் ஆகிய மூவரும் சரணடைந்து திறை செலுத்தவும், பேரரசிற்குக் கீழ்ப் படியவும் ஒப்புக் கொண்டனர். அவர்கள் அளித்த திறைப் பொருள்களைப் பெற்றுக் கொண்ட சின்ன திருமலை தேவர் தென் காசிப் பாண்டிய அரசனும் தான் இழந்த ராஜ்யத்தைத் திரும்பப் பெறும்படி செய்தார். பின்னர்த் திருவனந்தபுரத்திற்குச் சென்று பதுமநாபரை வணங்கி அங்கிருந்து கன்னியா குமரியையும் கண்டு, மீண்டும் திருவரங்கத்திற்குத் திரும்பினர் என அச்சுதராய அப்யுதயத்தில் விரிவாகக் கூறப் பெற்றுளது.

பின்னர், அச்சுத தேவராயரிடம் தம்முடைய படையெடுப்பையும், வெற்றிகளையும் எடுத்துக் கூறித் தோல்வியுற்ற உதய மார்த்தாண்டனும் செல்லப்பச் சாளுவ நாயக்கர், தும்பிச்சி நாயக்கர் முதலியோரும் அச்சுதராயரிடம் அடிபணியவே அவர்கள் மன்னிக்கப் பெற்றனர். தான் இழந்த ராஜ்யத்தை மீண்டும் பெற்ற தென்காசிப் பாண்டிய மன்னன் தன்னுடைய

குமரியை அச்சுத ராயருக்கு மணம் செய்து கொடுத்துத் தன் னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டதாகக் கல்வெட்டு களும் இலக்கியங்களும் சான்று அளிக்கின்றன. மேற்கூறப் பெற்ற தாமிரபரணிப் போர் அல்லது ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போர் 1532ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஆரல்வாய்மொழிக் கணவாய்ப் போரைப் பற்றிய விவாதம்: அச்சுத தேவராயர் காலத்தில் சாலகராஜு சின்ன திருமலை தேவர், திருவாங்கூர் உதய மார்தாண்ட வர்மனை ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போரில் தோல்வியுறும்படி செய்து வெற்றி பெற்று, மீண்டும் திருவாங்கூர் அரசன் அச்சுதராயருக்குத் திறை கொடுக்கும்படி செய்த வரலாற்றுச் செய்திகளைப் பற்றிப் பெரிய தொரு கருத்து வேற்றுமை தோன்றியுளது. திருவாங்கூர் சமஸ் தான வரலாற்றைப் புதியதாக எழுதிய T. K. வேலுப்பிள்ளை என்பவர் பல காரணங்களை ஆதாரமாக எடுத்துக்காட்டி மேற் கூறப்பட்ட ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போர் நடக்க வில்லை என்றும், திருவாங்கூர் சமஸ்தான சேனைகள் விஜயநகர சேனைகளிடம் தோல்வி யடையவில்லை யென்றும் சொற்போர் ஒன்றைத் தொடுத்துள்ளார். அவர் பின்வரும் வாதங்களைத் தொகுத்துக் கூறுவார்.

1. திருவாங்கூர் சமஸ்தானம் எக் காலத்திலும் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கித் திறை கொடுக்க வில்லை.

2. கொல்லம் நாட்டை ஆண்ட அரசர்கள் விஜயநகரப் பேரரசர்களுக்குத் திறை செலுத்தி வந்ததாக நூனிஸ் கூறும் செய்திகள் நம்புவதற் குரியன அல்ல.

3. அச்சுதராயர் போர் செய்யும் திறமையற்ற பயந்தாங் கொள்ளி என்பதை நூனிஸ் என்பார் ஒப்புக்கொண்டு அவருடைய வரலாற்றை எழுதியிருக்கும் பொழுது அச்சுதராய அப்யூதயம் என்னும் நூலில் கூறப்படும் செய்திகள் வெறும் பொய்க் கூற்றுகள் ஆகும்.

4. சாலகராஜு சின்ன திருமலை தேவர் திருவாங்கூர் அரசன்மீது அடைந்த வெற்றிகளைப் பற்றிக் கூறும் கல்வெட்டு ஆதாரங்கள் போர் நடந்த இடத்திற்கு அருகில் காணப் பெறுமல் மிக்க தூரத்திலுள்ள கோவில்களின் சுவர்களின்மீது பொறிக்கப் பெற்றுள்ளமையால் அவை நம்பத் தக்கன அல்ல.

5. அறிஞர் S. கிருஷ்ண சுவாமி அய்யங்கார் அவர்களால் இதாகுக்கப் பெற்றுள்ள, 'விஜய நகர வரலாற்று ஆதாரங்கள்'

என்னும் நூல் பல மொழிகளில் எழுதப் பெற்ற நூல்களின் சாரங்களை ஒன்று சேர்த்து எழுதப்பட்ட கருத்தரங்குக் கோவை யாகும். அதை உண்மையான வரலாற்று ஆதார நூல் என்று ஒப்புக் கொள்வதற் கில்லை.

6. ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போர் அல்லது தாமிர பரணிப் போரில் விஜய நகரச் சேனைகள் வெற்றி பெற வில்லை. அவர்கள் பெருந்தோல்வி பெற்றுப் போர்க்களத்தை விட்டு ஓடும்படி நேர்ந்தது.

திருவாளர் T. K. வேலுப்பிள்ளை அவர்கள் மேற்கூறிய படி எடுத்துக் காட்டும் வாதங்கள், வரலாற்றுண்மைகளை மறுத்துச் சில வரலாற்றுசிரியர்கள் பின்பற்றும் பொருமைக் கூற்றுகளா கும். திருவாங்கூரை ஆண்ட அரசர்கள் 1485ஆம் ஆண்டிற்கு முன்னர் விஜய நகரப் பேரரசர்களுக்கு அடங்கித் திறை செலுத் தாமல் இருந்திருக்கலாம். ஆனால், துளுவ மரபு பேரரசராகிய கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் திருவாங்கூர் அரசர் திறை செலுத்தியது உண்மையே யாகும். கிருஷ்ண தேவராயர், அச்சுததேவராயர் ஆட்சிக் காலங்களில் விஜயநகரத்தில் தங்கி யிருந்து பல வரலாற்றுச் செய்திகளை நேரில் கண்டறிந்து விஜயநகர வரலாற்றை எழுதிய நூனிஸ் என்பார் கூறுவது வெறும்பொய் என்று பறை சாற்றுவது வரலாற்று ஆராய்ச்சி யாகாது. சாளுவ நாயக்கச் செல்லப்பர் என்பவரைப் பற்றி எழுதிய நூனிஸ், 'சோழ மண்டலக்கரைப் பிரதேசங்கள், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புவனகிரி, தேவிப்பட்டினம், திருக் கோவலூர், கொல்லம் என்னும் பகுதிகளுக்கு அவர் தலைவராக இருந்தார்' என்று கூறியுள்ளார். கொல்லம், திருவாங்கூரைச் சேர்ந்த கொல்லம் பகுதியையே குறிப்பதாகும். இரண்டாம் தேவராயர் ஆட்சியிலும் கொல்லம் பகுதியை ஆண்ட அரசன் விஜயநகரத்திற்குத் திறை செலுத்தியதாக ராபர்ட் சிவெல் என்பார் கூறுவார். அச்சுத ராயர் ஆட்சியில் விஜயநகர வரலாற்றை எழுதிய நூனிஸ் என்பவருடைய வரலாற்று நூலில் பல குறைகள் இருந்த போதிலும் சமகாலத்தில் எழுதப் பெற்ற நூலில் கூறப்படும் செய்திகள் பொய்யானவை என்பதை எந்த வரலாற்று ஆராய்ச்சியாளரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் திருவாங்கூர் அரசர்கள் எக் காலத்திலும் விஜயநகரப் பேரரசர்களுக்குத் திறை செலுத்த வில்லை என்பது வரலாற்றைத் திரித்துக் கூறுவதே யாகும்.

இராஜநாத திண்டிமரால் எழுதப்பட்ட அச்சுதராய அப்யுதயம் என்னும் வரலாற்று நூலைப்பற்றி T. K. வேலுப்பிள்ளை

அவர்கள் கூறுவதும் நிதானமற்ற செய்தியாகும். 'இந் நூலின் ஆசிரியர் நடக்கக் கூடாத செய்திகளைப் பற்றிக் கூறுவார். அவருடைய நூலில் கனவில் நடக்கும் பொய்ச் செய்திகள் நிரம்பி யுள்ளன. அச்சுதராயர் திருவரங்கத்திலேயே தங்கித் திருவாங்கூர் நாட்டின்மீது படையெடுக்கும்படி தம்முடைய படைத் தலை வனுக்கு உத்தரவளித்ததாகக் கூறும் செய்திகள் வெறும்பொய் ஆகும்.'

இராஜநாத திண்டிமர் அச்சுதராயருடைய ஆஸ்தான கவி என்பது எல்லோரும் அறிந்ததே. ஆகையால், அவரால் எழுதப் பட்ட அச்சுதராய அப்யூதயம் என்னும் நூலில் அச்சுதராயரை இந்திரன், சந்திரன் என்று புகழ்ந்துள்ளார் என்பதை ஒருவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். அச்சுதராயரோடு அக் காலத்திய திருவாங்கூர் நாட்டு மன்னனை ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் எல்லா வகைகளிலும் மேம்பட்டவராவார். உதயமார்த் தாண்டன், விஜயநகரத்திற்கு எதிராகக் கலகம் செய்த சாளுவ நாயக்கச் செல்லப்பர், தும்பிச்சி நாயக்கர் முதலியோருக்கு ஆதர வளித்துள்ளார். மேலும், விஜய நகரப் பேரரசிற்கு அடங்கிய தென்காசிப் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனுடைய நாட்டில் ஒரு பகுதியையும் தம்வசப் படுத்திக் கொண்டு பேரரசனுடைய அதிகாரத்தை அலட்சியம் செய்துள்ளார். ஆகையால், அச்சுத ராயருடைய சேனைகள் திருவாங்கூர் நாட்டின்மீது படை எடுத்தது செய்யத்தகுந்த செயலேயாகும். அச்சுதராயரைப்பற்றி நூனிஸ் கூறியுள்ள சில செய்திகளை வரலாற்றாராய்ச்சியாளர்கள் இப்பொழுது மறுத்துக் கூறுகின்றனர். அச் செய்திகள் அவருடைய ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியைப் பற்றியனவாகுமே அன்றி முற் பகுதியைச் சேர்ந்தன வல்ல. அச்சுதராயர் பயந்தாங்கொள்ளி அரசர். ஆகையால், திருவாங்கூர் நாட்டின்மீது படையெடுத் திருக்க முடியாது என்பதும் பொருந்தாக் கூற்றாகும்.

மூன்றாவதாகத் திரு. T. K. வேலுப்பிள்ளை அவர்கள் விஜய நகர மன்னர்களுடைய கல்வெட்டுகள் பொய்க் கூற்றுகள் என்றும் கூறுவர். ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போரைப் பற்றியும், விஜயநகரத்துச் சேனைகளுடைய வெற்றியைப் பற்றியும் கூறும் கல்வெட்டுகள் திருவாங்கூருக்கு அருகில் காணப்படாமல் காஞ்சிபுரம், திருக்காளத்தி, எலவானசூர் முதலிய இடங்களில் காணப்படுகின்றன. ஆகையால், இந்தக் கல்வெட்டுகளில் கூறப் படும் செய்திகளை ஒப்புக் கொள்ள முடியாது என்றும் கூறுவர்.

இக் கூற்று வழிதப்பிய வரலாற்று ஆராய்ச்சிக் கூற்றாகும். தென்னிந்திய வரலாற்று உண்மைகளைக் கண்டறிவதற்குக் கல்

வெட்டுகளும் செப்பேடுகளும் மிக்க துணை செய்கின்றன என்பது வரலாற்றறிஞர்கள் கண்ட உண்மை யாகும். வெற்றி பெற்ற அரசர்கள் தங்களுடைய வெற்றிகளைப் பற்றிக் கோவில்களுக்கு மானியங்கள் அளித்த காலத்தில் அந்தக் கோவில்களின் சுவர் களில் எழுதும் படி உத்தரவிட்டனர். தாம்பிரபரணி நதிக்கரைக் கருகிலும், ஆரல்வாய் மொழிக் கணவாய்க் கருகிலும் கோவில் கள் காணப் பட்டமையால் சாளுகராஜ சின்ன திருமலை தேவருடைய வெற்றி அவ் விடத்தில் எழுதப்பெற வில்லை. வெற்றி பெற்ற அரசர்கள் போர்க்களத்திலேயே தங்களுடைய பிரதாபங்களைப் பற்றிக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் கூறவேண்டும் என்ற நியதி யில்லை. காஞ்சிபுரம், காளத்தி எலவானசூர் என்ற இடங்களில் காணப்படும் கல்வெட்டுகளில் மேற்கூறப்பட்ட வெற்றிகளைப்பற்றிய செய்திகள் காணப்பெறு வதால் அவைகளை நம்ப முடியாது என்பது நடுநிலைமையுள்ள ஆராய்ச்சியாளர்கள் கூற்றுகாது. 1532ஆம் ஆண்டில் சூலை மாதம் 27ஆ யன்று காளத்தியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டும், தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி ஏழாம் பகுதியில் 52ஆம் வரிசையுள்ள காஞ்சிபுரக் கல்வெட்டும் விஜயநகரப் படைகள் திருவாங்கூர்ப் படைகளை வெற்றி கொண்டதைப் பற்றிக் கூறுகின்றன. எலவானசூர்க் கோவிலில் காணப்படும் கல் வெட்டு அச்சுதராயருக்குத் 'திருவடி சப்தாங்க ஹரணர்' என்ற பட்டத்தைச் சூட்டியுள்ளது; அதாவது திருவாங்கூர் அரசருடைய 'ஏழுவகையாலை அரச சின்னங்களை வென்றவர், என்னும் பொருள்படப் பேசுகிறது. 'இவ் விதக் கல்வெட்டுச் சான்றுகளுக்கு எதிராக, 1532ஆம் ஆண்டில் நடந்த ஆரல்வாய் மொழிக் கணவாய்ப் போரில் திருவாங்கூர் நாட்டுப் படைகள் தோல்வி யடைய வில்லை என்று சாதிப்பது விரும்பத்தக்கதன்று' என்று அறிஞர் கனகசபாபதிப்பிள்ளை அவர்கள் கூறுவர்.*

நான்காவதாக, அறிஞர் S கிருஷ்ணசுவாமி அய்யங்கார் அவர்களால் தொகுக்கப்பட்ட 'விஜயநகர வரலாற்றுதாரங்கள்' என்ற வரலாற்று நூலைப் பல மொழிகளில் காணப்படும் கருத்து களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஒன்று சேர்க்கப்பட்ட கருத் தரங்குக் கலப்படம் என்று கூறுவதும் விரும்பத் தக்க தன்று. இந்திய வரலாற்றுதாரங்கள் பல மொழிகளிலிருந்தும், பல நூல் களிலிருந்தும் சேகரிக்கப்பட வேண்டியவை என்பதை எல்லா வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் நன்குணர்வர். வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் பல மொழிகளில் வல்லவராக இருப்பது இன்றியமையாத தகுதியாகுமே யன்றிக் குறைபாடு உள்ளதாகக்

*Dr. K. K. Pillai. The Sucindram Temple. P. 41.

கருத முடியாது. கிருஷ்ணசுவாமி அய்யங்காரும், அறிஞர் N. வெங்கட்டரமணய்யாவும் தொகுத்துள்ள 'விஜயநகர வரலாற்றுதாரங்கள்' மேற்படி வரலாற்றைப்பற்றி எழுதுவதற்கு மிக்க துணை செய்கின்றன. இவ் விரு நூல்களும் 'வெறும் கருத்தரங்குக் கலப்படங்கள்' என்று கூறுவது பொருத்தமில்லாப் பேச்சேயாகும்.

இறுதியாக, T. K. வேலுப்பிள்ளையவர்கள் கூறும் செய்திகளுள் இன்னெரு வேடிக்கையான அமிசமும் உள்ளது. திருவாங்கூர் நாட்டு நாயர் இனத்தைச் சேர்ந்த போர்வீரர்களை விஜயநகரச் சேனைகள் தோல்வியடையும்படி செய்திருக்க முடியாது என்பதாகும். நாயர் இனத்தைச் சேர்ந்த படைவீரர்கள் மிக்க திறமை யுள்ளவர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், விஜயநகரத்துச் சேனைவீரர்களுடன் ஒப்பிடும் பொழுது திருவாங்கூர்ச் சேனை மிகச் சிறியதாகவே இருந்திருக்க முடியும். இந்தச் சிறிய சேனை விஜயநகரச் சேனைகளைத் தோற்று ஓடும்படி செய்தன என்பது நம்பத் தகுந்ததன்று.

உம்மத்தூர்த் தலைவர்களை அடக்கியது : திருவரங்கத்திலிருந்து காவிரிக் கரையின் வழியாக அச்சுதராயர் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்குப் படையெடுத்துச் சென்றதாகக் கல்வெட்டுகளும், இலக்கியங்களும் கூறுகின்றன. விஜயநகரப் பேரரசின் தொடக்கத்திலிருந்து, உம்மத்தூர், விஜயநகரத்திற்கு அடங்கிய சிற்றரசு நாடாக இருந்தது. ஆனால், சாளுவ, துளுவ வமிசத்து விஜயநகரப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்தில் உம்மத்தூர்த் தலைவர்கள் சுதந்திரப் போரைத் தொடங்கினர். தழைக்கட்டு மேலைக்கங்கர் வமிசத்தில் தோன்றியவர்களாகத் தங்களை அவர்கள் அழைத்துக் கொண்டனர். உம்மத்தூர், ஸ்ரீரங்கப்பட்டணம், பெனுகொண்டா முதலிய இடங்களைத் தங்கள் ஆட்சியில் கொண்டு 'பெனுகொண்டாச் சக்ரேஸ்வரர்கள்' என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டனர். புஜபல வீர நரசிம்ம ராயர் மேற்கூறப் பெற்ற உம்மத்தூர்த் தலைவர்களுடைய கலகத்தை அடக்க முயன்றார். அப்பொழுது உம்மத்தூர்த் தலைவராக இருந்தவர் தேவண்ண உடையார் என்பவராவார். அவர் பேரரசிற்குச் செலுத்த வேண்டிய திறைப் பொருளைச் செலுத்தாது சுதந்திர மடைந்து விட்டதாகப் பிரகடனம் செய்தார். விஜயநகரத்தில் தம்முடைய தம்பி கிருஷ்ண தேவராயரை அரசியலைக் கவனிக்கும் படி பணித்து, வீரநரசிம்ம புஜபலராயர் உம்மத்தூரின்மீது படையெடுத்துச் சென்றார்; தேவண்ண உடையாரின் புதல்வர்களாகிய கங்கராஜா, மல்லராஜா என்பவர்களைத் தம் வசப்படுத்தி

முயன்றார். மூன்று மாதங்கள் வரையில் உம்மத்தூர்க் கோட்டையை முற்றுகையிட்ட போதிலும் வெற்றிகிட்ட வில்லை. ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டதும் தோல்வியில் முடிந்தது. மேற்கண்ட செய்திகள், 'கொங்கண தேசராஜுலு விருத்தாந்தமு' என்னும் நூலில் இருந்து தெரிய வருகின்றன.

1510ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயரும், உம்மத்தூர்த் தலைவன் கங்கராஜா எல்பவர்மீது போர் தொடுத்தார். 35 ஆயிரம் குதிரை வீரர்களும், பல்லாயிரக் கணக்கான காலாட் படைகளும் அடங்கிய பெருஞ்சேனையுடன் உம்மத்தூர், முற்றுகை யிடப்பட்டது. தேவண்ண உடையர் காலத்தில் காவிரி நதியின் நடுவிலுள்ள சிவசமுத்திரம் என்னும் அரங்கத்தில் பலம்மிகுந்த கோட்டைக்குள் கங்கராஜா தங்கி யிருந்தார். உம்மத்தூர்க் கோட்டை மிகச் சுலபமாகப் பிடிபட்ட போதிலும் சிவசமுத்திரக் கோட்டையைப் பிடிப்பது மிக்க சிரமத்தைத் தந்தது. காவிரி நதியின் இரு கிளைகளிலும் அணைகட்டி நீரை வடிகட்டிப் பின்னர் விஜயநகரப் படைகள் சிவசமுத்திரக் கோட்டையைப் பிடித்தன. கங்கராஜா, ஒரு சுரங்கத்தின் வழியாகத் தப்பியோடுகையில் காவிரி நதியின் மடுவொன்றில் மூழ்கி உயிர் துறந்தார். உம்மத்தூர் நாடும் கிருஷ்ண தேவராயரால் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் கம்பேகௌடா, வீரப்பகௌடா, சிக்கராஜா என்ற மூன்று பாளையக்காரர்களுக்கு அளிக்கப்பட்டது.

அச்சுத தேவராயர் ஆட்சியில் உம்மத்தூர்ச் சீமையை ஆண்டு வந்த பாளையக்காரர்களும், வேங்கடாத்திரி நாயக்கர் என்பவரும் அச்சுத ராயருக்குத் திறை கொடுக்க மறுத்துக் கலகம் செய்தனர். அவர்களை அடக்கவே திருவரங்கத்திலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணத் திற்கு அச்சுதராயர் படையெடுத்துச் சென்றதாகத் தெரிகிறது. காலத்தியில் காணப்பெறும் ஒரு கல்வெட்டின்படி விஜயநகரப் படைகள் உம்மத்தூர்ப் பாளையக்காரர்களின் கலகத்தை யடக்கிப் பேரரசிற்குத் திறை செலுத்தும்படி செய்தன. 1532ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இச் சம்பவம் நடந்திருக்க வேண்டும். அச்சுதராயர் தம்முடைய தலைநகரமாகிய விஜயநகரத்திற்குத் திரும்பிய பின்னர், இராய்ச்சூர்க் கோட்டையைப் பீஜப்பூர்ச் சுல் தானிடமிருந்து திரும்பக் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் பீஜப்பூர்ச் சுல்தானுக இருந்த இஸ்மேயில் அடில் ஷா இறந்த பிறகு அவருடைய புதல்வர்கள் மல்லு அடில் ஷா, இப்ராஹிம் அடில் ஷா என்ற இருவரும் சுல் தானிய உரிமைக்காகப் பெரும் உள்நாட்டுப் போர் ஒன்றைத்

தொடங்கினர். இந்த உள்நாட்டுப் போரில் மல்லு அடில் ஷா என்பார் வெற்றி பெற்றார். அவர் திறமையற்ற ஆட்சி புரிந்த மையால் அச்சுதராயர் இராய்ச்சூர்ப் பகுதியைக் கைப்பற்றுவது சுலப மாயிற்று.

அச்சுதராயர் ஆட்சியின் இரண்டாம் பகுதி (1536-42) :

மேலே கூறியவாறு விஜயநகரப் பேரரசைப் பாதுகாக்கவும், அதன் நிலைமையை மேன்மேலும் விருத்தி செய்யவும் அச்சுத ராயர் முயற்சிகள் எடுத்துக் கொண்ட போதிலும் அவருடைய ஆட்சியின் பிற்பகுதியைப் பற்றி நூனிஸ் தரும் விவரங்கள் மிக்க விசித்திரமாக உள்ளன. 'அச்சுதராயர் அரியணையிலமர்ந்த பிறகு, பல அடாத செயல்களைச் செய்து கொடுங்கோலாட்சி புரிந்தார். இவரிடத்தில் பெருந்தன்மையும், அரசற்குரிய பண்புகளும் சிறி தேனு மில்லை. தம்முடைய மைத்துனர்கள் இருவருடைய சொற் படி தீச்செயல்களைப் புரிந்து தம்முடைய பெயரைக் கெடுத்துக் கொண்டார். நாட்டில் பிரபுக்களும், மக்களும் இவரை வெறுத்தனர். இவருடைய மைத்துனர்கள் இவரைத் தங்களுடைய கைப்பொம்மையாக ஆக்கிவிட்டனர்'.*

இவ்வாறு நூனிஸ் தரும் செய்திகள் அச்சுத தேவராயரின் ஆட்சியின் பிற்பகுதியைப் பற்றியனவாகுமே யன்றி முற் பகுதியைச் சார்ந்தனவாகா. அச்சுத ராயருடைய அரசுரிமையில் சில சிக்கல்களிருந்தன. ஆரவீட்டு ராமராயர் கிருஷ்ணதேவராய ருடைய மருமகனுவார். கிருஷ்ண தேவராயருடைய அரசிகளின் துணை கொண்டு ஒன்றரை வயதே நிரம்பிய தம் மைத்துனனை (கிருஷ்ண தேவராயரின் புதல்வன்) அரியணையில் அமர்த்தித் தாமே அரசியல் அதிகாரங்களை அனுபவிக்க விரும்பினர். ஆனல், 1533ஆம் ஆண்டில் அந்தச் சிறு குழந்தை உயிரிழந்தமையால் அவருடைய திட்டம் நிறைவேற வில்லை. ஆகையால், அச்சுத தேவராயரின் அண்ணன் மகன் சதாசிவராயன் என்பவரை அரியணையில் அமர்த்தித் தம்முடைய விருப்பத்தை நிறைவேற்றத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ராமராயருடைய சதித்திட்டத்தை அறிந்த சாளுகராஜு சகோதரர்கள் அச்சுதராயரைத் தங்கள் வசப்படுத்தித் தாங்களே சகல அதிகாரங்களையும் அனுபவிக்கத் தொடங்கினர். ராம ராயரும் அவர்களை எதிர்த்து முறியடிக்க ஒரு புதிய சேனையைச் சேகரித்தார். பீஜப்பூர்ச் சுல்தானிடம் அலுவல் பார்த்த 3,000

*Robert Sewell. P. 349.

குதிரை வீரர்களை விஜயநகரத்திற்கு அழைத்துத் தம்முடைய சொந்த செலவில் பாதுகாத்துச் சாளுகராஜு சகோதரர்களுக்கு எதிராகச் சதி செய்து கொண்டிருந்தார். 1535ஆம் ஆண்டில் ஒரு சமயத்தில், அச்சுத ராயர் திருப்பதிக்குச் சென்றிருந்த பொழுது, விஜயநகர அரியணையைக் கைப்பற்றி, இளைஞர் சதாசிவராயரை அரசர் என்றும், தாம் பாதுகாவலன் என்றும் பிரகடனம் செய்தார். அச்சுத ராயர் திருப்பதியிலிருந்து திரும்பி வந்த பொழுது, அவரைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டுத் தாமே விஜயநகர அரசர்என்று கூறவும் செய்தார். இதைக் கண்ட விஜயநகரப் பேரரசின்பெருமக்கள் ராமராயரின் பேராசையையும், உள்ளக் கிடக்கையையும் கண்டிக்கவே மீண்டும் சதாசிவராயர் என்ற இளைஞரைப் பேரரசராக்கினர்.

ஆனல், அச்சுத ராயருடைய மைத்துனர்களும், அவர் களுடைய கட்சியைச் சார்ந்த பெருமக்களும் ஒன்று சேர்ந்து கொண்டனர். ராமராயர் விஜயநகரத்தில் இல்லாத சமயம் பார்த்து, அச்சுத ராயரைச் சிறையினின்றும் விடுதலை செய்து அவரை மீண்டும் பேரரசர் பதவியில் அமர்த்தினர். இவ்விதக் கட்சிப் பூசல்களினல் விஜயநகரத்தில் அமைதி குலைந்தது; பீஜப் பூர்ச் சுல்தான் படையெடுத்து, விஜயநகரத்தின் ஒரு பகுதியை அழித்துப் பாழ்படுத்துவதற்கும் சமயம் வாய்த்தது.

பீஜப்பூர்ச் சுல்தானுடைய படையெழுச்சி: இப்ராஹிம் அடில் ஷா என்ற பீஜப்பூர்ச் சுல்தான் விஜய நகரத்தில் உள் நாட்டுக் கலகம் மும்முரமாக நடைபெறுவது கண்டு அந் நகரத்தையும், அதன் செல்வத்தையும் தம் வசப்படுத்துவதற்கு ஏற்ற சமயம் அதுவேயெனக் கருதி நகரத்தின் மேற்குப் பகுதியாகிய நாகலா புரத்தின்மீது படை எடுத்து அதைத் தம் வசப்படுத்திக் கொண்டு இந்துக் கோவில்களையும், மற்றக் கட்டடங்களையும் இடித்துப் பாழாக்கினர். ராமராயரோ, சாளுக ராஜு சகோதரர்களோ பீஜப்பூர்ச் சுல்தானை எதிர்த்துப் போர் புரிய முன் வரவில்லை. தங்களுடைய சுயநலனைக் கருதி இரு கட்சியினரும் பீஜப்பூர்ச் சுல் தானுக்குஇலஞ்சம் கொடுக்க முன்வந்தனர். பீஜப்பூர்ச் சுல்தான் இவ் விரு கட்சிகளிடையே அமைதி உண்டாக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார் போலும்! தன்னுட்டின்மீது அகமது நகரத்துச் சுல்தான் படையெடுத்து வருவதைக் கேள்வியுற்ற பீஜப்பூர்ச் சுல்தான் விரைவில் திரும்புவதற்கு ஆயத்தம் செய்தார். ஆயினும், அச்சுதராயர் மீண்டும் பேரரசராக விடுதலை செய்யப் பட வேண்டும் என்றும், அவருடைய ஆயுள் தசைக்குப் பிறகு ராமராயர் தம்முடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள

லாம் என்றும் கூறி அமைதி ஏற்படச் செய்ததாகத் தெரிகிறது. இவ்வித உடன்பாட்டை உண்டாக்கியதற்காக விஜயநகரத்து இரு கட்சியினரும், ஏராளமான பொன்னையும், பொருள்களையும் பீஜப்பூர்ச் சுல்தானுக்கு அளித்தனர்.

அச்சுதராயர் காலத்தில் போர்த்துகீயர்: அச்சுத ராயர் ஆட்சிக் காலத்தில் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கிய சிற்றரசர் களுடன் போர்த்துகீசியர்கள் போரிட்ட போதிலும், பேரரசருடன் நட்புக் கொண்டிருந்தனர். 1536ஆம் ஆண்டில் கோவா நகரத்தின் ஆளுநராக இருந்த டாகுன்ஹா (Da Cunha) என்பவர் கோவா நகரத்தின் புறநகர்ப் பகுதிகளை அசாத்கான் என்பவரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார். ஆனால், அசாத் கான் மீண்டும் அவற்றைப் போர்த்துகீசியரிடமிருந்து தம் வசப் படுத்திக் கொண்டார். போர்த்துகீசியர்கள் பேரரசரிடம் நட்புக் கொண்டிருப்பது போல நாடகம் நடித்தனர் என்று சிலர் கூறுவர். 1545ஆம் ஆண்டில் கோவா நகரத்து ஆளுநர் 3,000 மாலுமிகள் அடங்கிய கப்பற்படை யொன்றை அமைத்து விஜயநகரப் பேரரசின் கிழக்கு, மேற்குக் கடற்கரை யோரங்களில் உள்ள முக்கிய இந்துக் கோவில்களைக் கொள்ளை யடிப்பதற்குத் திட்டம் வகுத்திருந்தார். சென்னையிலுள்ள மைலாப்பூர்க் கபாலீசுவரர் கோவிலும், திருச்செந்தூர், திருவனந்தபுரம், திருப்பதி முதலிய கோவில்களும் அத் திட்டத்தில் சேர்ந்திருந்தன. தெய்வா தீனமாக அவர் நினைத்த கொள்ளை நடைபெற வில்லை.

மதுரை, தஞ்சாவூர் ஆகிய இரண்டு நாயக்கர் ஆட்சிகளும் அச்சுத ராயர் ஆட்சிக் காலத்தில் அமைவுற்றிருக்க வேண்டு மென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். சாளுக ராஜ சின்ன திருமலை தேவன், செல்லப்ப நாயக்கர், தும்பிச்சி நாயக்கர், திருவாங்கூர் அரசன் முதலியவர்கள்மீது படையெடுத்துச் சென்ற பொழுது, விஸ்வநாத நாயக்கர் அப் படையெடுப்பில் பங்கு கொண்டிருக்க வேண்டுமெனத் திரு. நீலகண்ட சாஸ்திரியார் கருதுவார். விஸ்வநாத நாயக்கர் பாண்டிய இராஜ்யத்திற்கு ஆளுநராக நியமிக்கப் பெற்று, மதுரையில் 1533 முதல் 1542 வரை ஆளுநர் பதவியை வகித்தார்*. அச்சுத ராயருடைய சகலன் செவ்வப்ப நாயக்கர் தஞ்சாவூர்ச் சீமைக்கு நாயக்கராக நியமிக்கப் பெற்றார். செவ்வப்ப நாயக்கருடைய மனைவி மூர்த்தி மாம்பாள், அச்சுத ராயருடைய அரசி வரதாம்பாளின் தங்கை யாவள். தஞ்சாவூர் ஆந்திர அரசர்கள் சரிதம், தஞ்சாவூர் வரிசரிதம் என்ற நூல்களில் செவ்வப்ப நாயக்கர் தம்முடைய மனைவியின் சீதனமாகத் தஞ்சாவூர் நாயக்கத் தானத்தைப் பெற்றார் என்று கூறப்பட்டுள்ளது.

*K.A.N. Sastri. A. History of South India P. 288

அச்சுத தேவராயருடைய ஆட்சியில் பல எதிர்ப்புகளைச் சமாளித்துத் தம்முடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலைமை தோன்றியது. உள்நாட்டுக் கலகங்களும், அயல்நாட்டுப் படையெழுச்சிகளும், அரசுரிமைப் போட்டிகளும் கட்சித் தலைவர்களின் சுயநலத் தலையீடுகளும் அவருடைய ஆட்சிக் காலத்தின் அமைதியைக் குலைத்தன. அவரைப் பற்றி ஏளனமாக நூனிஸ் எழுதியுள்ளவை முற்றிலும் உண்மையானவையல்ல. அவருக்குச் சேர நடத்தும் திறமை இல்லை என்பதை ஒப்புக் கொள்வதற் கில்லை. ஆட்சியின் தொடக்கத்தில் தோன்றிய பல கலகங்களை அடக்கியமை அவருடைய வீரச்செயல்களைக் காட்டும். சாளுவ ராஜ சகோதரர்களுடைய சுயநலக் கொள்கைகளும், இராம ராயருடைய வீணை தலையீடுகளும் இல்லாமல் இருந்திருந்தால் அச்சுத ராயருடைய ஆட்சி இன்னும் மேன்மையடைந் திருக்கும். வைணவத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவராயினும் மற்றச் சமயத்தோர்களை அச்சுதராயர் துன்புறுத்த வில்லை.

11. சதாசிவராயர்

(1545-1570)

1542ஆம் ஆண்டில் அச்சுதராயர் இறந்த பிறகு அவருடைய மகன் வேங்கடதேவன் அல்லது வேங்கடாத்திரி என்னும் இளவரசனை அவனுடைய அம்மான் சாளுகராஜு திருமலை தேவர் அரச பதவியில் அமர்த்தித் தாமே பாதுகாவலனாக அமர்ந்தார். இளவரசனுடைய தாய் வரத தேவியும், அரண்மனையில் இருந்த மற்றப் பிரபுக்களும் திருமலை தேவரிடத்தில் எல்லா அதிகாரங்களையும் ஒப்படைக்காமல் இரண்டு அமைச்சர்களை நியமித்து அரசியல் காரியங்களைக் கவனிக்கும்படி செய்தனர். தம்முடைய அதிகாரங்கள் குறைவுற்றதைத் திருமலை தேவர் விரும்பாது அரசி வரத தேவியிடமும், மற்றப் பிரபுக்களிடமும் வெறுப்புக் காட்டினார்; தமக்கு உதவியாக இருந்த பிரபுக்களை எல்லாம் விஜயநகரத்தை விட்டுத் துரத்திவிட்டு எல்லா இறைமை அதிகாரங்களையும் தாமே மேற்கொண்டார். அரசி வரததேவி, தன்னுடைய தம்பி திருமலை தேவன்மீது சந்தேகங் கொண்டு பீஜப்பூர்ச் சுல்தான் இப்ராஹிம் அடில் ஷாவைத் தனக்கு உதவி செய்யும்படி வேண்டினாள்; அதற்குப் பதிலாகப் பெரும்பொருள் திரளை அளிப்பதற்கும் ஒப்புக் கொண்டாள். பீஜப்பூர்ச் சுல்தானும் விஜய நகரத்தின்மீது படை எடுத்து வந்தார். ஆனால், சாளுகராஜு திருமலை தேவர், சுல்தானை நடுவழியில் சந்தித்துப் பெருந்தொகையை இலஞ்சமாக அளித்துத் தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிச் செல்லுமாறு செய்துவிட்டார்.

திருமலை தேவருடைய யதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் முறையில் (அளிய) இராமராயர், சதாசிவராயர் என்ற இளைஞரைப் பேரரசர் பதவியில் அமர்த்தினார். இந்தச் சதாசிவராயர், கிருஷ்ணதேவராயருடைய தம்பியும், அச்சுததேவராயருடைய அண்ணனுமாகிய ரங்கராயர் என்பவருடைய புதல்வராவார்; குத்தி என்னுமிடத்தில் அச்சுதராயரால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இவரை விடுதலை செய்து, இவரே பேரரசர் என்று அறிக்கைவிட்டது மன்றிப் பீஜப்பூர்ச் சுல்தானைத் தமக்கு உதவி செய்யும் வகையிலும் அழைத்தார். இப்ராஹிம்

அடில் ஷாவும் இராமராயருக்கு உதவி செய்வது போல் விஜய நகரத்தின்மீது படையெடுத்தார். விஜயநகரப் பேரரசு பீஜப்பூர்ச் சுல்தானுடைய ஆட்சிக்கு உட்பட்டுவிடும் போல் தோன்றியது. இத் தருணத்தில் திருமலை தேவருடைய உதவியாளர்களும், விஜயநகரத்துப் பெருமக்களும் சேர்ந்து கொண்டு பீஜப்பூர்ச் சுல்தானுடைய படைகளைத் தோற்கடித்து நகரத்தை விட்டு ஓடும்படி செய்தனர். முதலாம் வேங்கட தேவரை (அச்சுத ராயர் மகன்) அரியணை ஏற்றிய திருமலை தேவரும் தம்முடைய அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றினர். திருமலை தேவன், வேங்கட தேவனுக்குப் பாதுகாவலனாயிருந்து அரச காரியங்களைக் கவனித்து வந்திருந்தால் அமைதியான முறையில் விஜயநகரப் பேரரசு இருந்திருக்கும். ஆனால், திருமலை தேவர் சுயநலம் கொண்டு தம் மூடைய மருகன் வேங்கடதேவனையும், அவருக்குதவியாக இருந்தவர்களையும் கொலை செய்துவிட்டுத் தாமே பேரரசர் பதவியைக் கைப்பற்றினர். இக் கொடுஞ் செயல் திருமலை தேவருடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. அவர் பெருமக்களுடைய மதிப்பை இழந்து பொதுமக்களை விரோதம் செய்து கொண்டார். இத் தருணத்தை இராமராயர் நன்கு பயன்படுத்திக் கொண்டு சதாசிவ ராயரைப் பேரரசராக்கும் முயற்சியில் வெற்றி பெற்றார். பெனு கொண்டாக் கோட்டையில் ஒரு மாநாடு கூட்டி, அங்குக் கூடியிருந்த பிரபுக்களிடம் திருமலை தேவருடைய சுயநல மிக்க கொடுஞ் செயல்களை எடுத்துக் கூறித் தமக்கும், சதாசிவ ராயருக்கும் உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டார். பெத்தகல்லு, ஆதோனி என்ற இடங்களைத் திருமலை தேவரிடமிருந்து கைப்பற்றிய பிறகு விஜயநகரத்தின்மீதும் படை யெடுத்தார். துங்கபத்திரை நதிக் கரையில் நடந்த பெரும்போரில் திருமலைதேவன் தோல்வியுற்றுக் கைதியானார். அவர் கொலை செய்யப்பட்டு இவ் வுலகத்திலிருந்து நீங்கினர், கிருஷ்ண தேவராயரின் மனைவியராகிய திருமலை தேவியும், சின்ன தேவியும் தங்களுடைய மருமகன் வெற்றி பெற்றதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தனர். 1542ஆம் ஆண்டு (சோபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்களில்) சதாசிவ ராயர் பேரரசராக முடிசூட்டப் பெற்றார்.

(அளிய) இராம ராயரின் அதிகார வளர்ச்சி :

சதாசிவ ராயருடைய ஆட்சியின் தொடக்கத்தில் இராம ராயர் அவருடைய பாதுகாவலனாக விளங்கிய போதிலும், நாளடைவில் அவரைத் தம்முடைய் கைப்பொம்மையாகக் கருதித் தாமே சகல அதிகாரங்களையும் செலுத்தி வந்தார். கல்வெட்டுகளும், செப்பேடுகளும் சதாசிவராயரைப் பேரரசராகக் கூறிய போதிலும் உண்மையில் ஆட்சிப் பீடத்தில் இருந்தவர் இராம

ராயரே ஆவர். ஆயினும், இராம ராயர் தாமே பேரரசர் என்று கூறி முடிசூட்டிக் கொள்ள வில்லை. அவருடைய பெயர் கொண்ட நாணயங்கள் மாத்திரம் வழக்கத்தி லிருந்தன. சிறிது காலம் சென்ற பிறகு சதாசிவ ராயர் பாதுகாவலில் வைக்கப்பட்டு ஆண்டிற்கு ஒரு முறை இராம ராயரும், அவருடைய தம்பியர் திருமலை, வேங்கடாத்திரி என்ற மூவரும் சதாசிவ ராயருடைய கால்களில் வீழ்ந்து வணக்கம் செலுத்துவது மாத்திரம் தவறாது நடந்து வந்தது. 1550ஆம் ஆண்டிலிருந்து 1563ஆம் ஆண்டு வரையில் பேரரசருக்கு வணக்கம் செலுத்தும் இந்த நாடகம் நடந்து வந்தது. பின்னர் இந்த நாடகமும் கைவிடப் பட்டது.

இராமராயருடைய மாதுலன் கிருஷ்ண தேவராயர் இறந்தார். அடுத்து அவருடைய இளங் குழந்தையும் மரணம் அடைந்தது. இதனால், தாமே விஜயநகரப் பேரரசைக் கைப்பற்ற வேண்டும்என்ற இராம இராயருடைய பேரவா நிறைவேறியது.

இராம ராயர் பேரரசனுக்குப் பாதுகாவலனாக இருந்த போதிலும், எல்லாவித அரசாங்க அலுவல்களிலும் தம்முடைய உறவினர்களையே நியமனம் செய்தார் என்ற பெரிஷ்டாவின் கூற்றுக் கல்வெட்டுகளாலும், மற்ற வரலாற்றாசிரியர்களுடைய சொற்களாலும் உறுதி பெறுகின்றது. பேரரசை இஸ்லாமிய சுல்தான்களுடைய படையெழுச்சிகளிலிருந்து பாதுகாக்க இராம ராயர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அவருடைய தந்நல மற்ற தியாகத்தைக் குறிப்பிடும் என்று ஹீராஸ் பாதிரியார் கூறுவார். ஆனால், சதாசிவ ராயருக்கு எவ்வித மதிப்பும் கொடுக்காமல் கைதிபோல் நடத்தியதைத் தந்நல மற்ற தியாகம் என்று சொல் வதற் கில்லை.

இராம ராயருடைய ஆட்சியில் தமிழ்நாட்டு நிலைமை:

1542ஆம் ஆண்டில் அச்சுத ராயர் இறந்ததற்கும், சதாசிவ ராயரும் அவருடைய பாதுகாவலர் இராம ராயரும் ஆட்சியைக் கைப்பற்றியதற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சிக்கு எதிராகப் பல கலகங்கள் தோன்றலாயின. சந்திரகிரி, புவனகிரி முதலிய நாடுகளை ஆண்டவர்களும், புதுக் கோட்டைப் பகுதியில் சிற்றரசர்களாக விளங்கிய கள்ளர், மறவர் தலைவர்களும் விஜயநகரப் பேரரசிற்கு அடங்காமல் இருந்ததாகத் தெரிகிறது. இரண்டாவதாகக் கன்னியாகுமரி முனையிலிருந்து இராமேசுவரம் வரையில் பரவியுள்ள நெய்தல் நிலக்கரையில் பரவியிருந்த பரதவர்களைக் கிறித்தவ சமயத்திற்கு

மாற்றுவதற்கும், திருச்செந்தூர் முருகன் கோவிலைக் கொள்ளை யடிப்பதற்கும் போர்த்துகீசியக் கிறித்துவப் பாதிரிமார்கள் திட்டமிட்டிருந்தனர் என்று ஜான் நீயோகாப் (John Niewhoff) கூறுவார். மேலும், மதுரை நகருக்குத் தெற்கே தென்காசி, கயத்தாறு என்ற இரு பாண்டியச் சிற்றரசுகள் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கியிருந்தன. தென்காசி நாட்டில் இப்பொழுது தென்காசி, செங்கோட்டை, சங்கரன் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் என்று அழைக்கப்படும் இடங்கள் அடங்கியிருந்தன. கோவில் பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி முதலிய இடங்கள் கயத் தாறு என்னும் நாட்டில் அடங்கி, வெட்டும் பெருமாள் ராஜா என்பவரால் ஆளப் பெற்று வந்தது. இவ் விரு நாட்டுத் தலைவர் களும் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

திருவாங்கூர் இராஜ்யத்தை வீர உன்னிக் கேரளவர்மன் என்பவர் ஆண்டு வந்தார். அச்சுதராயர் ஆட்சியில் உதய மார்த் தாண்டவர்மன் திறை கொடுக்காமல் இருந்ததுபோல் உன்னிக் கேரள வர்மனும் திறை கொடுக்காது மறுத்து வந்தார். இந்த உன்னிக் கேரள வர்மனை 'இனிக்குடிரிபெரிம்' (Iniquitriberim) என்று போர்த்துகீசியர்கள் அழைத்தனர். கேரள அரசனுகிய உன்னிக் கேரள வர்மன் கன்னியாகுமரிப் பகுதியைத் தன்னுடைய நாட்டோடு சேர்த்துக் கொண்டதும் அல்லாமல் ஜடிலவர்மன் ஸ்ரீவல்லபன் என்ற தென்காசிப் பாண்டிய அரசனுடைய நாட்டையும் தன் வசவப்படுத்த முயன்றான். தமிழ்நாட்டின் தென் பகுதியில் தோன்றிய இவ்விதக் கலகங்களை அடக்குவதற்குத் தம் முடைய நெருங்கிய உறவினர்களாகிய வித்தலராயன், சின்ன திம்மன் ஆகிய இருவருடைய தலைமையில் ஒரு சேனையை ராமராயர் அனுப்பி வைத்தார்.

விஜய நகரத்திலிருந்து புறப்பட்ட சேனையைச் சந்திரகிரி வரையில் இராமராஜவித்தலர் நடத்திச் சென்று அங்கே தம் முடைய தம்பி, சின்ன திம்மருடன் சேர்ந்து இருவரும் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர். வழியில் புவனகிரி என்ற கோட்டை யையும் எதிரிகளிடமிருந்து பிடித்ததாக வெங்கட்டரமணய்யா அவர்கள் கூறுவார். பின்னர்த் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகூர், நாகப்பட்டினம் முதலிய இடங்களின் வழியாகச் செல் கையில் நாகூரில் போர்த்துகீசியர் தங்கள் வசப்படுத்திக் கொண்டி ருந்த பெருமாள் கோவிலைக் கைப்பற்றி, அவர்கள் கவர்ந்து கொண்ட பொருள்களை அக் கோவிலுக்குத் திருப்பிக் கொடுக்கும் படி செய்தனர். காவிரி நாட்டைக் கடந்து தன்னரசுநாடு என்று அக் காலத்தில் வழங்கிய திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம்

மாவட்டங்களின் வழியாகப் பாண்டிய நாட்டை அடைந்தனர். கயத்தாறு என்னு மிடத்தில் அரசு செலுத்திய வெட்டும் பெருமாள் என்பவராலும், திருவாங்கூர் அரசன் உன்னிக் கேரள வர்மனாலும் துன்புறுத்தப்பட்ட தென்காசிப் பாண்டியனைப் பாது காத்தனர். வித்தளராயரிடம் தோல்வியுற்ற வெட்டும்பெருமாள் கயத்தாற்றிற்குத் தப்பிச் சென்ற பின்னர், உன்னிக் கேரள வர்மனிடம் சரண் புகுந்தார். வித்தளராயரை எதிர்த்த 'பஞ்ச திருவடிகள்' என்ற ஐந்து கேரளநாட்டரசர்களும் தோவாள கணவாய் என்னும் இடத்தில் நடந்த போரில் தோல்வியுற்றனர். பின்னர் உன்னிக் கேரள வர்மரும் விஜயநகரப் பேரரசிற்கு அடங்கித் திறை கொடுக்கச் சம்மதித்தார். சின்னதிம்மர் திரு வனந்தபுரத்தில் பதுமநாபரை வணங்கிக் குமரிமுனைவரை சென்று விஜயநகரத்திற்கு மீண்டதாக அறிகிறோம். வித்தளர் தமிழ் நாட்டில் மகாமண்டலீசுவரராகப் பணியாற்றினர்.*

வித்தள ராயருடைய தென்னிந்தியப் படையெழுச்சி :

திருவடி தேசம் என்று வழங்கப் பெறும் திருவாங்கூர் நாட்டின்மீது வித்தள ராயர் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதைக் குறித்து ஒன்றற் கொன்று மாறுபட்ட செய்திகளைக் கூறும் மூவகையான வரலாற்றுச் செய்திகள் நமக்குக் கிடைக் கின்றன. இவற்றுள் ஹீராஸ் பாதிரியார் அவர்கள் தரும் செய்தி களை நாம் முதலில் ஆராய வேண்டும்.

1. திருவாங்கூரில் உன்னிக் கேரள வர்மன் என்ற பூதல வீர கேரள வர்மன் ஆட்சி புரிந்த பொழுது வித்தளராயர் ஆரல் வாய் மொழிக் கணவாய் வழியாகப் பல அழிவு வேலைகளைச் செய்து கொண்டு திருவாங்கூர் நாட்டிற்குள் புகுந்தார். வித்தள ராயருடைய தலைமையில் வடுகச் சேனைகள் படை எடுத்து வருவதைக் கண்ட கிராம மக்கள் தங்களுடைய வீடு, வாசல்களை விட்டுத் தென்பகுதியிலிருந்து வடக்கு நோக்கி ஓடத் தொடங்கி னர். வித்தளராயருடைய சேனையை எதிர்த்துப் போர் புரி வதற்கு உன்னிக் கேரள வர்மனும், சேனை யொன்றைத் தயார் செய்தார்; ஆனால், வித்தளராயருடைய சேனை பலத்தையும், போர் புரியும் ஆற்றலையும் கண்டு மனமயங்கிப் போரில் ஈடுபடத் தயக்கம் கொண்டார். ஆகையால், அப்பொழுது திருவாங்கூர் நாட்டில் கிறித்தவ சமயத்தைப் போதித்துக் கொண்டிருந்த பிரான்ஸிஸ் சேவியர் (St. Francis Xavier) பாதிரியாரைக் கண்டு வணக்கம் செய்து எவ் வகையிலாவது வடுகர்களுடைய படை யெடுப்பினின்றும் தம்முடைய நாட்டையும், மக்களையும்

*K. A. N. Sastri. A History of South India. P. 279.

காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டார். ஆனால், சேவியர் 'நான் உங்களுக்கு வெற்றியுண்டாகும்படி கடவுளே வேண்டிக் கொள்ள முடியுமே யன்றி என்னால் போரிட முடியாது' எனக் கூறியதாகத் தெரிகிறது.

வித்தளராயருடைய சேனையும் கணவாயைக் கடந்து திருவாங்கூர் நாட்டிற்குள் புகுந்து பல அழிவுச் செயல்களில் ஈடுபட்டது. விஜயநகர வீரர்களின் கொடுஞ்செயல்களைக் கண்ட கிராம மக்கள் மலைகளிலும், காடுகளிலும் பதுங்கிக்கொண்டனர். கோட்டாறு என்னு மிடத்திற்கு மூன்று மைல்கள் தூரத்திலுள்ள ஓர் இடத்தை யடைந்த விஜயநகரச் சேனைகளின் தூசிப்படை திடும் என நின்றுவிட்டது. 'கருமை நிறம் பொருந்திய ஆடை யணிந்த, உயரமான ஒரு பெரியார் எங்களுக்கு முன் தோன்றி எங்களைத் திரும்பிச் செல்லும்படி கட்டளையிட்டார்' என விஜய நகர வீரர்கள் கூறினர். அவ்வாறு தோன்றிய பெரியார் பிரான்சிஸ் சேவியராகத்தான் இருக்க முடியும். வித்தள ராயருடைய சேனை வீரர்கள் சேவியருடைய ஆணையை மறுக்க முடியாமல் திரும்பி விட்டனர். இவ் விதமாக வீர உன்னி கேரள வர்மனும், திருவாங்கூர் நாட்டு மக்களும் சேவியர் பாதிரியாரால் பாதுகாக்கப்பட்டனர்.*

வித்தளராயர் திருவாங்கூர் நாட்டின்மீது படையெடுத்ததைப் பற்றி இயேசு சங்கத்தைச் சேர்ந்த ஷுர்ஹாமர் என்பவர், '1544ஆம் ஆண்டில் சதாசிவராயரும், ராமராயரும் விஜய நகரத்தை ஆட்சி புரிந்த காலத்தில் வெட்டும்பெருமாள் என்ற சிற்றரசனுக்கு எதிராகத் திருவடி தேசத்து வீர உன்னிக் கேரள வர்மனைக் காப்பாற்றுவதற்காக ஒரு சேனை அனுப்பப்பட்டது' எனக் கூறுவர். வித்தளராயரும், அவருடைய தம்பி சின்ன திம்மரும் தென்னாட்டின்மீது படையெடுத்துச் சென்று பொதிய மலைக்கருகில் வெற்றித் தூண் ஒன்றை நாட்டினர் என்று யாதவ அப்யூதய வாக்கியம் என்னும் நூல் கூறுகிறது. பாலபாகவதம் என்னும் நூலில் சின்ன திம்மர் என்ற தலைவர் திருவடி தேசத்து அரசனுகிய உன்னிக் கேரள வர்மனைக் காப்பாற்ற ஒரு பாண்டிய அரசன்மீது படையெடுத்து அவனைத் தோற்கடித்தார். ஆகையால், அவருக்குத் திருவடி ராஜ்யத் தாபனாச்சாரியார் என்ற பெயர் வழங்கியதெனக் கூறப்பட்டுள்ளது.

அறிஞர் N. வெங்கட்டரமணய்யா என்பவர் வேறு ஒரு விதமாக இந்தப் படையெழுச்சியைப் பற்றிக் குறிப்பிடுவார்.

*Father Heras, The Aravidu Dynasty, Pp. 141-45

சின்னதிம்மர் மதுரை நகரத்தை விட்டு நீங்கி மேலும் தெற்கு நோக்கிச் சென்ற பொழுது, தென்காசிப் பாண்டிய அரசன் அவரிடம் உதவி கோரி விண்ணப்பம் செய்தான். கயத்தாறு, தூத்துக்குடி என்ற இடங்களை ஆட்சி புரிந்த வெட்டும் பெருமாள் என்பவர் பாண்டிய அரசனை நாட்டைவிட்டுத் துரத்தி வன் முறையில் அவருடைய நாடுகளைப் பிடித்துக் கொண்டார். தம்மிடம் முறையிட்டுக் கொண்ட பாண்டிய அரசனைக் காப் பாற்றுவதற்காக வெட்டும் பெருமாள் என்ற தலைவரைத் தோற்கடித்துப் பாண்டிய அரசனுக்குச் சின்ன திம்மர் உதவி செய்தார். சின்ன திம்மருக்கும், வெட்டும் பெருமாளுக்கும் நடந்த போரில் பின்னவருக்கு உதவி செய்த திருவடி தேசத்துச் சிற்றரசர்களுடனும், சின்ன திம்மர் போர்புரிய வேண்டி யிருந்தது. பஞ்சதிருவடிகள் என்று கூறப்பட்ட திருவாங்கூர் நாட்டுச் சிற்றரசர்களும், சின்ன திம்மருக்கு எதிராக, வெட்டும் பெருமாளுக்கு உதவி செய்தனர். கோட்டாற்றுக் கருகில் நடந்த போரில் அவர்கள் எல்லோரும் தோல்வி யடைந்தனர். திருவாங் கூர் நாட்டு அரசரும் சின்ன திம்மருடன் அமைதியுடன்படிக்கை செய்து கொண்டார். வெட்டும் பெருமாள் என்ற சிற்றரசன் தோல்வி யடைந்த போதிலும் உடன்படிக்கை செய்து கொள் வதை வெறுத்துக் கன்னியாகுமரிமுனைப் பிரதேசத்தை ஆண்ட சிற்றரசனுடன் நட்புக் கொண்டு உன்னிக் கேரளவர்மன் என்ற திருவாங்கூர் அரசனுடன் போரிட்டார். சின்னதிம்மர் உன்னிக் கேரள வர்மனுக்கு உதவி செய்து, வெட்டும் பெருமாளைத் தோற் கடித்து, உன்னிக்கேரள வர்மனைக் காப்பாற்றி, ராமராயர் தமக்கு இட்ட ஆணையை நிறைவேற்றினர்.

இக் கூற்றுகளைப்பற்றி ஆய்வுரை :

வித்தளராயரும், சின்ன திம்மரும் தொடக்கத்திலேயே திருவாங்கூர் நாட்டின்மீது படை யெடுத்ததாக ஹீராஸ் பாதிரியார் கூறியுள்ளார். ஆனால், மேற்கூறப்பட்ட இருவரும் உன்னிக் கேரள வர்மனுடன் போர் புரிவதற்குமுன், வெட்டும் பெருமாள் என்ற கயத்தாற்றுச் சிற்றரசனைத் தோற்கடித்துள் ளனர். விஜயநகரச் சேனைகளுக்கும், உன்னிக் கேரள வர்மனுக்கு மிடையே போர் நடந்ததாக ஹீராஸ் பாதிரியார் கூற வில்லை. பிரான்சிஸ் சேவியருடைய தெய்வீக சக்தியைக் கண்ட விஜயநகர வீரர்கள் முன்னேறாது திரும்பிவிட்டதாகக் கூறுவார். வித்தள ராயரும், சின்ன திம்மரும் திருவாங்கூரின்மீது படையெடுத்துச் சென்றதன் முக்கிய நோக்கம் உன்னிக் கேரள வர்மனை விஜய நகரத்து அரசருக்குத் திறை கொடுக்கும்படி செய்வதற்கும் தென்

*Dr. N. Venkataramanayya. Further Sources. Vol. I. PP. 249-50


சாளுகராஜு, விக்கள ராயர், சின்னதிம்மர்
படையெடுத்துச் சென்ற வழிகள்
7|6
8|0
தலைக்கோட்டை
முதுகல்
ராய்ச்சூர்
கிருஷ்ணா நதி
விஜயநகரம்
பெண்ணாறு
திருப்பதி
காளத்தி
சந்திரகிரி
கோலார்
சித்தூர்
சென்னை
பங்களூர்
பாலாறு
காஞ்சிபுரம்
ஸ்ரீரங்கப்பட்டினம்
வேலூர்
உம்மத்தூர்
புவனகிரி
சிதம்பரம்
ஸ்ரீரங்கம்
நாகூர்
நாகப்பட்டினம்
புதுக்கோட்டை
மதுரை
பரமக்குடி
இராமேஸ்வரம்
கொல்லம்
தாம்பிரபரணி
திருவனந்தபுரம்
திருச்செந்தூர்
கன்னியாகுமரி
இலங்கை
இந்துப் பேராழி
வங்காள விரிகுடா
தென்பெண்ணை
வைகை
12
16
8

காசிப் பாண்டிய அரசனைக் காப்பாற்றுவதற்குமே யாகும். இவ் விரண்டு நோக்கங்களையும் வித்தளராயரும், சின்ன திம்மரும் நிறைவேற்றி வெற்றியும் பெற்றனர். ஆகையால், கோட்டாறு என்னு மிடத்தில் போர் நடக்க, அப் போரில் இவ் விருவரும் வெற்றி அடைந்திருக்க வேண்டும் என்பதில் ஐய மில்லை.

ஆனல், ஹீராஸ் பாதிரியார், கோட்டாறு என்னு மிடத்தில் போர் நடக்க வில்லை என்றும் பிரான்சிஸ் சேவியருடைய பெருமித மான தோற்றத்தைக் கண்டு, பயந்து, பின்வாங்கினர் என்றும் கூறுவதை நாம் நம்புவதற் கில்லை. கன்னியாகுமரிக் கரைப் பிரதேசத்திலிருந்து பிரான்சிஸ் சேவியர் எழுதிய கடிதங்களில் இச் செய்தியைப்பற்றி அவர் ஒன்றுமே கூற வில்லை. ஆகையால், இறித்தவ சமயத்தின் சிறப்பையும், பிரான்சிஸ் சேவியருடைய பெருமையையும் மிகைப்படுத்திக் கூறுவதற்காகவே இக் கதை கட்டி விடப்பட்டது போன்று தெரிகிறது. வித்தளரும், சின்ன திம்மரும் போர் செய்து உன்னிக் கேரள வர்மன்மீது வெற்றி பெற்றிராமல் போனுல், இந்தத் திருவாங்கூர் அரசர் திறை செலுத்துவதற்கு ஒப்புக் கொண்டிருக்க மாட்டார். மேலும், வித்தளராயருடைய சேனை திருவாங்கூர் அரசன்மீது வெற்றி கொண்டதற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன. 1545ஆம் ஆண்டிலும் 1547ஆம் ஆண்டிலும் சுசீந்திரம் கோவிலில் பொறிக் கப்பட்ட இரு கல்வெட்டுகள், இவ் வெற்றியைப் பற்றி மறை முகமாகக் கூறுகின்றன.

முதற் கல்வெட்டுச் சுசீந்திரம் திருவேங்கட நாதருடைய கோவிலின் கோபுரத்தையும், கோவிலின் சந்நிதிக்கு முன்னுள்ள கொடிக் கம்பத்தையும் வித்தளராயர் அமைத்ததாகக் கூறுகிறது. இரண்டாவது கல்வெட்டின்படி உன்னிக் கேரள வர்மனுக்குப் பின் வந்தவராகிய இராமவர்ம திருவடி என்பார் வித்தளராயருடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்காகத் திரு வேங்கடநாத எம்பெருமானுக்கு ஒரு கட்டளை அமைத்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

3. ஷூர்ஹாமர் பாதிரியார் (Rev. Schurhammer) என்பார், பிரான்சிஸ் சேவியருடைய மூலக் கடிதங்களைப் பிழைபட உணர்ந்த சிலர், அக் கடிதங்களின் உண்மைப் பொருள்களை உணர முடிய வில்லை என்றும் அவருடைய கடிதங்களிலிருந்து கீழ்க்கண்ட உண்மைகள் வெளியாகின்றன என்றும் கூறுவார்.

[1] Dr. K. K. Pillai. op. Cites. PP. 43-45

(a) பிட்டர்மிமால், பிட்டிபூமார், பிடிமுனுல், பிடிர்மீல், பிடிபெருமா என்று பலவிதமாக அழைக்கப்பட்ட ஓர் அரசன் இனிகுடிரிபெரிம் என்ற திருவாங்கூர் அரசனுடன் போர் புரிந்ததாகப் போர்த்துகீசியப் பாதிரிமார்கள் எழுதி யுள்ளனர்.

(b) இவற்றுள் முதலில் கூறப்பட்டுள்ள பெயர்கள் கயத்தாறு, திருச்செந்தூர்ப் பகுதிகளுக்கு அரசனுகிய வெட்டும் பெருமாள் என்பாரைக் குறிக்கும். ஹீராஸ் பாதிரியார் குறிப்பிட்டது போல் அப் பெயர்கள் வித்தளராயரைக் குறிப்பிடா. இனிக்குடிரிபெரிம் என்ற பெயர் உன்னிக் கேரள வர்மனைக் குறிக்கும்.

(c) வித்தளராயர், திருவடி தேசத்து அரசனுகிய உன்னிக் கேரள வர்மனைக் காப்பாற்றுவதற்காகத் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு பகுதியை ஆண்ட வெட்டும் பெருமாள் என்பார் மீது படையெடுத்தார் என்று கூறலாம்.

பிட்டர்மிமால் முதலிய பெயர்கள் வெட்டும்பெருமாள் என்ற பெயரின் திரிந்த உருவங்களாகக் கருதப்படவேண்டும். உண்மையில் அவை வெட்டும் பெருமாள் என்ற பெயரின் திரிபுகளேயாகும். வெட்டும் பெருமாள் தொடக்கத்தில் உன்னிக் கேரள வர்மனுடன் சேர்ந்து கொண்டு தென்காசிப் பாண்டிய அரசன்மீது போர் தொடுத்ததனுல்தான் வித்தளராயர் அவனைத் தோற்கடித்தார். வித்தள ராயரால் தோற்கடிக்கப்பட்ட பிறகு வெட்டும் பெருமாள் உன்னிக் கேரளவர்மனுடன் சேர்ந்து கொண்டார். ஆனுல், வெட்டும் பெருமாளைத் தண்டித்து உன்னிக் கேரள வர்மனைக் காப்பாற்றுவதற்காக வித்தளராயர் தென்னுட்டிற்கு வந்தார் என்று கூறுவதில் உண்மை யில்லை.

வெட்டும் பெருமாள் என்ற சிற்றரசன், திருவாங்கூர் உன்னிக் கேரளவர்மன் கண்டு அஞ்சத்தக்க பெருமை வாய்ந்தவனல்லன். தென்காசிப் பாண்டிய மன்னனைத் திருவாங்கூர் உன்னிக் கேரள வர்மனுடைய பிடியினின்றும் தப்பிக்கச் செய்யவும் உன்னிக் கேரள வர்மனிடம் திறைப் பொருளைப் பெறுவதற்குமே வித்தளராயனைத் தென்னுட்டிற்கு ராமராயர் அனுப்பி வைத்ததாகத் தெரிகிறது. இவற்றிற்கு மாருக வெட்டும் பெருமாள் என்பவருடைய தொல்லையிலிருந்து உன்னிக் கேரள வர்மனைக் காப்பாற்றுவதற்கு வித்தளராயர் தென்னுட்டிற்கு வந்தார். ஆகையால், அவர் 'திருவடி ராஜ்ய ஸ்தாபனுச்சாரியா' என்ற பட்டத்தைப் பூனைந்து கொண்டார் என்னும் கொள்கை வன்மையுடைய தன்று. திருவாங்கூர் அரசனைத் தோற்கடித்துப் பாண்டிய மன்னனைக் காப்பாற்றிய பிறகு திருவடி அரசனிடம் திறைப் பொருளையும்

பெற்றமையால் 'திருவடி ராஜ்ய ஸ்தாபனாசாரியார்' என்ற பட்டத்தைப் பூண்டுகொள்ள வித்தளராயருக்கு எல்லாவித மான உரிமைகளும் உண்டு.

3. யாதவ அப்யூதய வாக்கியம், பாலபாகவதம் ஆகிய இரு நூல்களின் துணை கொண்டு அறிஞர் N. வெங்கட்டரமணய்யா அவர்கள், திருவாங்கூர் நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற தலைவர் வித்தளராயர் அல்ல ரென்றும், அவருடைய தம்பி சின்ன திம்மர் என்றும் கூறுவார். சதாசிவ ராயருடைய ஆட்சியில் சின்ன திம்மர் சிறந்ததொரு பதவி வகித்தார். ஆயினும், அவர் மாத்திரம் திருவாங்கூர்மீது படையெடுத்துச் சென்றார் என்று கூறுவதில் உண்மை யில்லை. வித்தளராயரும் சேர்ந்துதான் படையெடுத்தனர்.

இதுகாறும் கூறியவற்றால் வித்தளராயரும், சின்ன திம்மரும் சேர்ந்து திருவாங்கூர் நாட்டின்மீது படையெடுத்துக் கோட்டாறு என்னு மிடத்தில் வீர உன்னிக் கேரள வர்மன்மீது வெற்றி கொண்டது உண்மையான செய்தி என்பது விளங்குகிறது. இதுவன்றியும் விஜயநகரப் படையில் இருந்த வீரர்கள் திருவாங் கூர் நாட்டு மக்களைக் கொள்ளை யடிக்கவும் துணிந்தனர். இந்த அக்கிரமச் செயல்களைக் கண்ட வீர உன்னிக் கேரள வர்மன் ஒரு தூதனை வித்தளராயரிடம் அனுப்பி, அமைதி உடன்படிக்கையும் செய்து கொண்டான். இந்த அமைதி உடன்படிக்கையைப்பற்றி 1544ஆம் ஆண்டு ஆகஸ்டுமீ 19உ தாம் எழுதிய கடிதம் ஒன்றில் பிரான்சிஸ் சேவியர் குறிப்பிட்டுள்ளார். உன்னிக் கேரள வர்மன் நேரில் தம்மை வந்து காண வில்லை என்பதற்காக வித்தளராயர் மேற்படி உடன்படிக்கைக்கு விரைவில் ஒப்புக் கொள்ள வில்லை. பிரான்சிஸ் சேவியர் பாதிரியார் திருவாங்கூர் அரசருக்கும் வித்தளராயருக்கும் இடையே சமரசம் பேசி அமைதி யுடன்படிக்கையை ஒப்புக்கொள்ளும்படி செய்ததாகத் தெரிகிறது. அவருடைய அறிவுரைகளின்படி உன்னிக் கேரளவர்மன் தூத்துக் குடிக்கு நேரில் சென்று வித்தளரையரைக் கண்டு உடன்படிக் கையில் கையெழுத்திட்டதாகத் தெரிகிறது. இவ் வுடன்படிக் கையின்படி உன்னிக்கேரள வர்மன் திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியை விஜயநகர அரசருக்குக் கொடுத்து, இனிமேல் தவறாது திறை செலுத்துவதற்கும் ஒப்புக்கொண்டதாகவும் தெரிகிறது.

வித்தளராயரின் இரண்டாவது படையெழுச்சி : வீர உன்னிக் கேரள வர்மன் ஆட்சி புரிந்த வரையில் விஜயநகரத்தரசர்களுக்கு

ஒழுங்காகத் திறை செலுத்தி வந்ததாகத் தெரிகிறது. ஆனால், அவருக்குப் பின்வந்த பூதல வீரராம வர்மன் என்பார் திறை கொடுப்பதை நிறுத்திவிட்டார். ஆகையால், 1558ஆம் ஆண்டில் மீண்டும் வித்தளராயர் ஆருயிரம் வீரர்கள் அடங்கிய சேனையுடன் திருவாங்கூரின்மீது படை யெடுத்தார். திருவாங்கூர்ச் சேனைகளுக்கும் வித்தளருடைய சேனைகளுக்கும் நடந்த போரில் வித்தள ராயர் தோல்வி யடைந்ததாகத் தெரிகிறது. அப் போரில் வித்தளராயர் உயிரிழந்ததாகவும் தெரிகிறது. ஏனெனில், இந்த ஆண்டிற்குப் பிறகு வித்தளராயரைப் பற்றிய செய்திகள் கிடைக்க வில்லை. திருவாங்கூர் நாடும் தன்னுரிமை பெற்று விளங்கியதெனக் கூறலாம்.

வித்தளராயர் முத்துக் குளிக்கும் கடற்கரையில் செய்த செயல்கள் :

அச்சுதராயருடைய ஆட்சியில் இராமேஸ்வரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிற் பரவியுள்ள முத்துக் குளிக்கும் கடற்கரை ஓரத்தில் வாழ்ந்த பரதவர்களைப் போர்த்துகீசிய ஆளுநர்களும், இயேசு சங்கத்துப் பாதிரிமார்களும் முயன்று கிறித்தவ சமயத்தில் சேரும்படி செய்தனர். முத்துக் குளிக்கும் கடற்கரையோரங்களில் பரதவர்களும் மதுரையிலிருந்து வந்து குடியேறிய பல இஸ்லாமியர்களும் வாழ்ந்தனர். இஸ்லாமியர் முத்துக் குளிக்கும் தொழிலைத் தங்கள் வசமாக்கிக் கொண்டனர்; இத் தொழில் தங்களுடைய ஏகபோகத்திற்கு உரியதென்றும், தங்களுடைய அனுமதியின்றிப் பரதவர்கள் இத் தொழிலில் ஈடுபட்டுப் போட்டிக்கு வரக்கூடா தென்றும் தடுத்தனர். 1532ஆம் ஆண்டில் பரதவர் ஒருவருக்கும் முஸ்லீம் ஒருவருக்கும் முத்துக் குளிக்கும் உரிமையைப் பற்றிச் சச்சரவு தோன்றியது. இந்தச் சச்சரவில் பரதவனுடைய காது, காயம் பட்டு அறுந்து தொங்கும்படி முஸ்லீம் கொடுமையாக அடித்து விட்டார். தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இவ் விதத் துன்பம் நேர்ந்ததைக் கண்டு பொறுமையிழந்து, பல பரதவர்கள் சேர்ந்து கொண்டு தூத்துக்குடிக் கருகில் இஸ்லாமியர் வாழ்ந்த குடியிருப்புகளை அழித்துப் பலரைக் கொலை செய்து விட்டனர். தூத்துக்குடியில் வாழ்ந்த முஸ்லீம்கள் திருநெல்வேலிப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களின் உதவி பெற்றுச் சேனையொன்றைச் சேகரித்துத் தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் பரதவர்களைத் துன்புறுத்தினர்; அவர்களுடைய குடிசைகளை அழித்து மீன் பிடிப்பதற்கும், முத்துக் குளிப்பதற்கும் ஏற்ற தளவாடங்களையும் கொளுத்தி இரக்கமின்றிப் பலரைக் கொலையும் செய்தனர்.

ஜோவா டாக்குரூஸ் என்ற மலையாளக் கிறித்தவர் பரதவர் களின்மீது இரக்கம் கொண்டு, கொச்சியிலிருந்த போர்த்துகீசியத் தலைவனுடைய உதவியை நாடும்படி அவர்களுக்கு யோசனை கூறினார். பரதவர்களின் நாட்டாண்மைக்காரர்களாகிய பட்டங் கட்டிகள் பதினைந்து பேரை, ஜோவா டாக்குரூஸ் என்பார், கொச்சியிலிருந்த போர்த்துகீசியத் தலைவனிடம் அழைத்துச் சென்றார். போர்த்துகீசியத் தலைவரும் அவர்களுடைய குறை களைக் கேட்டு அவர்கள் கிறித்தவ சமயத்தில் சேர்வதாக ஒப்புக் கொண்டால் முஸ்லீம்களிடமிருந்து காப்பாற்றுவதாக உறுதி கூறினார். மிகுல்வாஸ் என்ற பாதிரியாரின் போதனைகளைக் கேட்டு இருபதினாயிரம் பரதவர்கள் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தனர். இதைப்பற்றி ஒரு கிறித்தவப் பாதிரியார், 'ஒரு பரதவருடைய காது அறுபட்டதால் ஆயிரக் கணக்கான பரத வர்கள் கிறித்தவ சமயத்தில் சேர்ந்து நற்கதியடைந்தனர்' என்று கூறினார். இதனால், கிறித்தவ சமயத்தைச் சேர்ந்த பரதவர்களை இஸ்லாமியர்களுடைய கொடுங்கோன்மையிலிருந்து காப்பாற் றுவது போர்த்துகீசியர்களுடைய கடமை யாயிற்று.

டாம்நூனே குன்ஹா (Dom Nuno Cunha) என்ற மாலுமியின் தலைமையில் ஒரு கடற்படை தயார் செய்யப்பட்டு முத்துக் குளிக்கும் கடற்கரைக்கு அனுப்பப்பட்டது. போர்த்துகீசிய ருடைய கடற்படையின் வன்மைக்கு எவ்வாற்றானும் நிகரில்லாத இஸ்லாமியருடைய படகுகள் எல்லாம் அழிவுற்றன. ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் உயிரிழந்தனர். நல்ல நிலைமையில் இருந்த படகுகள் பரதவர்களுக்குக் கொடுக்கப்பட்டன, கடற்கரைப் பகுதிகளில் இருந்து முஸ்லீம்கள் துரத்தியடிக்கப்பட்டனர். இவ் விதமாகத் தென் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த பரதவர்கள் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்து போர்த்துகீசியருடைய அரசியல் ஆதிக்கத்திற்கு உட்பட்டனர். மதுரை நகரில் விஜயநகரப் பேரரசின் ஆளுநராக இருந்த நாயக்கத் தலைவர் போர்த்துகீசிய ருடைய அதிகாரத்திற்கு அஞ்சி, முத்துக் குளிக்கும் கடற்கரைப் பகுதியைப் போர்த்துகீசியரிடம் இருந்து மீட்பதற்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை.

ஆனால், சதாசிவராயருடைய அமைச்சராகவும், முக்கிய அதிகாரியாகவும் இருந்த இராமராயர் பரதவர்களைப் போர்த்து கீசியருடைய அதிகாரப் பிடியினின்றும் நீக்கி, மீண்டும் விஜய நகரப் பேரரசின் அதிகாரத்தை நிலைநாட்டும்படி வித்தல ராயருக்கு உத்தரவிட்டார். கோட்டாறு என்னு மிடத்தில் திருவாங்கூர் அரசனை அடக்கிய பிறகு 1544ஆம் ஆண்டில்

வித்தளராயர் தென் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த போர்த்துகீசியப் படைகளுடன் போரிட வேண்டிய தாயிற்று. முத்துக் குளிக்கும் கடற்கரை யோரங்களில் மணப்பாடு, புன்னைக்காயல், தூத்துக்குடி, வம்பார் முதலிய இடங்களில் போர்த்துகீசியர் நிலைபெற்றுத் தங்களுடைய அரசியல் சமய அதிகாரங்களைப் பரதவர்கள்மீது செலுத்தி வந்தனர். அவர்களுடைய அதிகாரப் பிடியினின்றும் பரதவர்களை மீட்டு, விஜயநகர அதிகாரத்தை நிலைநாட்டுவது வித்தளராயரின் கடமை யாயிற்று. வித்தள ராயருடைய வடுகச் சேனைவீரர்கள் போர்த்துகீசியர்களையும், பரதவக் கிறித்தவர்களையும் சிறைபிடித்தும், கொள்ளையடித்தும் பலவிதமான இன்னல்களை இழைத்தனர் என்று சேவியர் பாதிரியார் தாம் எழுதிய இரண்டு கடிதங்களில் தெரிவித்துள்ளார். பரதவர்கள் கடற்கரையில் வாழ்ந்த இடங்களை விட்டு, இந்துப் பேராழியில் உள்ள தீவுகளுக்குத் தப்பிச் சென்றனர்.

பரதவர்கள் தப்பித்துச் சென்ற தீவுகளில் குடிப்பதற்கும் தண்ணீர் கிடைப்பது அருமை யாயிற்று. புன்னைக்காயல், தூத்துக்குடி முதலிய இடங்களில் இருந்த போர்த்துகீசியப் பண்ட்சாலைகளும், பரதவர்களுடைய இருப்பிடங்களும் அழிக்கப் பட்டன. 1544ஆம் ஆண்டு செப்டம்பர் மீ 5ல மணப்பாடு என்ற இடத்திலிருந்து சேவியர், மான்சில்ஹாஸ் (Mansilhas) என்பாருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு கூறி யுள்ளார். 'தூத்துக்குடியில் இருந்த பரதவக் கிறித்தவர்களின் நிலைமை பரிதாபகரமாக உள்ளது. கொம்புத்துறை, புன்னைக் காயல் முதலிய இடங்களில் அகப்படும் படகுகளுடன் அநாதை யாகத் தீவுகளுக்குச் சென்று அங்குப் பதுங்கிக் கொண்டிருக்கும் பரதவர்களை உடனே திருச்செந்தூருக்கும், புன்னைக் கயலுக்கும் கொண்டு வரவும். வித்தளராயரும் அவருடைய வடுகவீரர்களும் பரதவக் கிறித்தவர்களைப் படாத பாடுகள் படுத்திவிட்டனர். முதலில் அவர்களுக்கு உண்ண உணவும், குடிநீரும் கொடுக்கப் படவேண்டும்.'*

விஜயநகரத்து வடுகவீரர்கள் மேற் கூறியவாறு பரதவக் கிறித்தவர்களைத் துன்புறுத்தியதற்குக் காரணங்களையும் பிரான்சிஸ் சேவியர் தாம் எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். வித்தளராயருடைய மைத்துனன் ஒருவரைப் பரதவக் கிறித்தவர்கள் சிறைப்படுத்தி விட்டனர். இதைக் கண்ட வடுக வீரர்கள் பரதவர்களை முன்னிலும் அதிகமாகத் துன்புறுத்தினர். ஆயினும், போர்த்துகீசியர்களுடைய தூண்டுதலின் பேரில்தான்

*Dr. A. Krishnaswami, The Tamil Country under Vijayanagar. P. 238

பரதவர்கள் இவ்விதம் செய்திருப்பர் என்று பரதவர்களை வடுக வீரர்கள் துன்புறுத்தியதாகத் தெரிகிறது. சிறைப்படுத்தப்பட்டிருந்த மைத்துனன் விடுதலையான பிறகு வித்தளராயர் முத்துக்குளிக்கும் கரைகளிலிருந்து திரும்பிவிட்டார்.

இரண்டாவது படையெழுச்சி : 1549ஆம் ஆண்டில் இராமேசுவரத்திற்கு அருகிலுள்ள வேடாலை என்னுமிடத்தில் போர்த்துகீசியர்கள் மட்சுவர்க்கோட்டை ஒன்றை யமைத்து ஜோவோ பெர்ணண்டஸ் கொரியா (Jova Fernandez Correa) என்பவருடைய தலைமையில் நாற்பது வீரர்கள் கொண்ட சிறு படை யொன்றை அமைத் திருந்தனர். கோட்டையைச் சுற்றி அகழி ஒன்றையும் அமைத்து, இராமேசுவரத்திற்குச் செல்லும் பாதையை அடைத்து விட்டு, இராமேசுவரம் கோவிலுக்குச் செல்லும் யாத்திரிகளிட மிருந்து சுங்கவரி போன்ற வரியை வசூலித்தனர். இதனால், இராமேசுவரம் கோவிலுக்குச் செல்லும் யாத்திரிகளுடைய எண் ணிக்கை மிகவும் குறைவுற்றது. இராமேசுவரக் கோவில் தானத் தார்கள், இராமநாதபுரம் சேதுபதி மூலமாக வித்தளராயரிடம் முறையிட்டுக் கொண்டனர்.

வித்தளராயர் வேடாலை என்னும் இடத்தைப் பிடிப்பதற்கு ஆறுயிரம் வீரர்கள் கொண்ட படையொன்றைப் போர்த்து கீசியரை அங்கிருந்து விரட்டியடிப்பதற்காக அனுப்பினர். போர்த்துகீசியரால்முன்னர்க் கடற்கரையிலிருந்து துரத்தப்பட்ட இஸ்லாமியர்களும் இப் படையில் சேர்ந்து கொண்டனர், இப் படையுடன் போர் புரிவதற்கு அஞ்சிய போர்த்துகீசியர் கடற் கரையோரமாக இருந்த தீவுகளுக்குச் சென்று மறைந்து கொண் டனர். அன்டோனியா கிரிமினுலி என்ற இத்தாலியப் பாதிரியார் ஒருவர், அப்பொழுது இராமேசுவரத்திற்கு அருகில் வசித்த பரதவர்களிடையே கிறித்தவ சமயப் பிரச்சாரம் செய்து கொண் டிருந்தார். வேடாலைமீது வித்தளருடைய வடுகச்சேனை படை எடுத்த செய்தியைக் கேட்ட அன்டோனியோ கிரிமினுலி அங்குச் சென்று கிறித்தவப் பரதவர்களைக் காப்பாற்ற முயற்சிகளை மேற் கொண்டார். பரதவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் தோல்வி யுற்று அவர் உயிரிழக்கும்படி நேரிட்டது. நூற்றுக் கணக்கான் பரதவர்கள் கொலையுண்டனர். மற்றும் பலர் கைதிகளாக்கப் பட்டனர். வேடாலையில் அமைந்திருந்த கோட்டையும், கோவிலும் இடிக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப் பட்டன. கோட்டையைச் சுற்றித் தோண்டப்பட்டிருந்த அகழியும், தூர்க் கப்பட்டது. இவ் விதமாக வெற்றியடைந்த வடுக வீரர்கள் பின்னர் இராமேசுவரத்திற்குச் சென்று கடல்நீரில் குளித்து

மகிழ்ச்சியுற்றனர் என்று இவரே சங்கத்தைச் சேர்ந்தவர்களுடைய சாசனங்கள் கூறுகின்றன.*

1551ஆம் ஆண்டில் மீண்டும் இராமேசுவரக் கடற்கரையில் போர்த்துகீசியர்களுடைய தொந்தரவு அதிகரித்தது. அப் பொழுது படையெடுத்துச் சென்ற வடுக வீரர்கள் பாலோ-டி-வாலே (Paolo de Valle) என்ற கிறித்தவப் பாதிரியாரைச் சிறை பிடித்தனர். ஆனல், பரதவக் கிறித்தவர்கள் பலர் வடுகர் களுடைய பாசறைக்குட் புகுந்து மேற்சொல்லப்பட்ட பாதிரி யாரைத் தூக்கிச் சென்று அவரைப் பாதுகாத்தனர். மீண்டும் பரதவர்களுக்கும், வடுகர்களுக்கும் போர் தொடங்கியது. இறுதியாகப் போர்த்துகீசியர்களும், பரதவர்களும் வித்தல ராயருடைய வெற்றியை ஒப்புக்கொண்டதோடு ஆண்டுதோறும் விஜயநகர அரசாங்கத்திற்கு எழுபதினாயிரம் வராகன்கள் திறை செலுத்துவதற்கும் ஒப்புக் கொண்டனர் என்று கூட்டோ (Couto) கூறி உள்ளார்.

வித்தளராயருடைய மூன்றாவது படையெடுப்பு : முத்துக் குளிக்கும் கரையில் இருந்த போர்த்துகீசியர்களும், பரதவர்களும் மேற் கூறப்பட்டவாறு திறை கொடுப்பதற்குச் சம்மதித்த போதிலும், வித்தளராயர் போர்த்துகீசியர்களுடைய அதி காரத்தை முற்றிலும் அழித்து அவர்களைத் தென் கடற்கரையை விட்டுத் துரத்துவதற்கு மற்றொரு திட்டத்தை வகுத்தார். இரப்பாழி என்ற இஸ்லாமியக் கடற் கொள்ளைக்காரனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு, வடுகச் சேனைகள் போர்த்து கீசியருக்குச் சொந்தமான இடங்களைத் தரைமூலமாக எதிர்ப்பது என்றும், இரப்பாழி கடல் மார்க்கமாக முற்றுகையிடுவ தென்றும் திட்டம் வகுக்கப்பட்டது. புன்னைக்காயல் என்ற இடத்தைக் கூட்டின்ஹோ (Coutinho) என்ற போர்த்துகீசியத் தலைவன் பாது காத்து வந்தான். அவனிடம் ஐம்பது வீரர்கள் கொண்ட ஒரு சிறிய படையிருந்தது. சுமார் 500 வீரர்களுக்கு மேற்பட்ட ஓர் இஸ்லாமியப் படையும் வித்தளராயருடைய சேனையுடன் சேர்ந்து கொண்டு புன்னைக்காயலை முற்றுகையிட்டது. போர்த்துகீசியர் தோல்வி யடைந்தனர். அவர்களுடைய தலைவர் கூட்டின்ஹோ என்பார் கைதியாக்கப்பட்டார். மற்றப்பேர்களும் கைது செய்யப் பட்டனர். புன்னைக்காயல், இரப்பாழி என்பார் வசமாகியது. இரப்பாழியும் 'போர்த்துகீசியருடைய ஆதிக்கம் தென் கடற் கரைப் பிரதேசத்திலிருந்து அழிக்கப்பட்டதெனப்' பிரகடனம் ஒன்றை விடுத்தார்.

*Father Heras. The Aravidu Dynasty. P. 158

புன்னைக்காயல் இஸ்லாமியருடைய வசமான செய்தியைக் கேள்வியுற்றுக் கொச்சியில் இருந்த போர்த்துகீசியத் தலைவர் இச் செய்கைக்குப் பழிக்குப்பழி வாங்க நினைத்தார். கில்பெர்ணண்டஸ் (Gil Fernandez) என்ற கப்பற்படைத் தலைவன் 170 மாலுமிகள் கொண்ட ஒரு கடற்படையைத் தயார் செய்து, கொச்சியிலிருந்து புறப்பட்டுப் புன்னைக்காயல் துறைமுகத்தை முற்றுகையிட்டார். போர்த்துகீசியருக்கும், இஸ்லாமிய வீரர்களுக்கும் நடந்த கடற் போரில் இஸ்லாமியருக்கு மிகுந்த நஷ்டங்கள் உண்டாயின. இரப்பாழி என்பாரும் உயிர் துறந்தார். ஆனால், போதுமான உணவுப் பொருள்களும் போர்த்தளவாடங்களும் இன்மையால் போர்த்துகீசியர் பக்கத்திலிருந்த தீவுக்குள் பின்வாங்க வேண்டி வந்தது. நாகப்பட்டினத்திற்குக் கடல் வழியாகச் சென்று கொண்டிருந்த இன்னொரு போர்த்துகீசியக் கடற்படையின் துணை கொண்டு மீண்டும் புன்னைக்காயலைக் கில்பெர்ணண்டஸ் முற்றுகை யிட்டார். இம் முறை போர்த்துகீசியருக்கு வெற்றி கிடைத்தது.

இவ் வெற்றிக்குப் பிறகு கில்பெர்ணண்டஸ், வித்தளராயரை அணுகிக் கூட்டின்ஹோவையும் அவருடைய குடும்பத்தாரையும் சிறைவாசத்திலிருந்து மீட்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டார். ஆனால், வித்தளராயர் ஓர் இலட்சம் பணம் மீட்புத் தொகையாகக் கொடுத்தால் கூட்டின்ஹோவையும், அவருடைய குடும்பத்தாரையும் விடுதலை செய்வதாகக் கூறினார். கில் பெர்ணண்டஸ் இதற்கு இணங்க வில்லை; பின்னர் விஜயநகரத்து இராமராயரிடம் ஒரு போர்த்துகீசிய நண்பர் மூலமாக முறை யிட்டுக் கொண்டார். இராமராயரும், கூட்டின்ஹோவையும் அவருடைய குடும்பத்தாரையும் விடுதலை செய்யும்படி உத்தர விட்டார். இராமராயருடைய மேலாணைக்குக் கீழ்ப்படிந்து கூட்டின் ஹோவைத் தூத்துக்குடிச் சிறையிலிருந்து வித்தளராயர் விடுதலை செய்தார்.

இராமராயரும் போர்த்துகீசியர்களும்: இராமராயருடைய ஆட்சிக் காலத்தில் கோவா நகரத்தில் போர்த்துகீசிய ஆளுநராக மார்ட்டின் ஆல்பன்சோ-டி-சௌசா (Martin Alfonso de Sousa) என்பார் அலுவல் பார்த்தார். பட்கல் என்ற விஜயநகரத் துறை முகத்தைக் கைப்பற்றி 1542-ல் அந் நகரத்தைக் கொள்ளை யடித்தார். சோழமண்டலக் கரையில் உள்ள பல இந்துக் கோவில் களையும், முக்கியமாகக் காஞ்சிபுரத்திலுள்ள கோவில்களையும் கொள்ளையடிப்பதற்குத் திட்டமிட்டவரும் இவரே யாவார். ஆல்பன் சோ-டி-சௌசாவிற்குப் பிறகு ஜோவோ-டி-காஸ்ட்ரோ (Joao-de-Castro) கோவாவின் ஆளுநராகப் பதவி ஏற்றார். இராம

ராயர் இந்த ஆளுநருடன் உடன்படிக்கை யொன்றைச் செய்து கொண்டார். அதன்படி போர்த்துகீசிய வியாபாரிகள் இந்தியா விற்குக் கொண்டுவரும் குதிரைகளை விஜயநகரப் பேரரசிற்கே விற்க வேண்டும் என்ற ஏகபோக உரிமை கிடைத்தது. இவ் உடன் படிக்கை 1558ஆம் ஆண்டு வரையில் நிலைபெற்றிருந்தது. இந்த ஆண்டில் சென்னை மைலாப்பூரிலுள்ள கோவிலைக் கொள்ளையடிப் பதற்குச் சாந்தோமிலுள்ள போர்த்துகீசியப் பாதிரிமார்கள் திட்டமிட்டிருப்பதாக இராமராயர் கேள்விப்பட்டார். சந்தோமி லிருந்த போர்த்துகீசிய வியாபாரக் கிடங்கைத் தாக்கிக் கைப் பற்றுவதற்கு ஒரு சேனையை அனுப்பி வைத்தார். இச் சேனை போர்த்துகீசிய வியாபாரக் கிடங்கை முற்றுகையிட்டு அங்கு இருந்தவர்களைக் கைதிகளாக்கிற்று. பதினாயிரம் வராகன்களை அபராதமாகப் பெற்றுக்கொண்ட பிறகு கைதிகள் விடுதலை செய்யப் பெற்றனர். இராமராயருடைய சேனாதிபதிகளாகிய வித்தளர், சங்கன்ன நாயக்கர் ஆகிய இருவரும் கோவாத் துறை முகத்தை முற்றுகை யிட்டதாகவும் நாம் அறிகிறோம்.

இராமராயருக்கும் தக்காணத்துச் சுல்தானுக்கும் இடையே நிலவிய உறவு

1347ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பாமினி சுல்தானிய அரசு, பதினேந்தாம் நூற்றாண்டின் முடிவில் பீஜப்பூர், ஆமதுநகரம், பேரார், பீடார், கோல்கொண்டா என்ற ஐந்து நாடுகளாகப் பிரிவுற்றது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் பீஜப்பூர் சுல்தான் இஸ்மேயில் அடில் ஷா எவ்விதம் தோல்வி யுற்றார் என்று கண்டோம். அச்சுதராயர் காலத்திலும் மேற் கூறப்பட்ட சுல்தானிய அரசுகளுக்கும், விஜயநகரப் பேரரசிற்கும் அடிக்கடி போர்கள் ஏற்பட்டன. முக்கியமாகக் கிருஷ்ணை, துங்கபத்திரை என்னும் இரு நதிகளுக் கிடைப்பட்ட ராய்ச்சூர், முதுகல் என்ற இடங்கள், இவ் விரு அரசுகளுக் கிடையே அடிக்கடி கைம்மாறுவதும் உண்டு. மேற்கூறப்பட்ட ஐந்து சுல்தானிய அரசுகளுள் பீஜப்பூர், ஆமதுநகரம், கோல்கொண்டா ஆகிய மூன்றும் முக்கியமானவை. பீடார், பேரார் ஆகிய இரண்டும் சிறிய இராச்சியங்கள். இந்த ஐந்து இராச்சியங்களுக்கு மிடையே நிலவிய அரசியல் உறவு நம்முடைய ஆராய்ச்சிக்கு உரியதாகும். இவ் வைந்தும் இஸ்லாமிய மன்னர்களால் ஆளப்பட்டு வந்த போதிலும் ஷியா, சன்னி சமய வேற்றுமையாலும், அரசியல் பேராசையாலும் இவற்றுக்குள் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுவது உண்டு. விஜயநகரப் பேரரசோடு அரசியல் உறவுகளும், போர் களும் ஏற்பட்டன. விஜயநகரத்தின்மீது ஏற்பட்ட படை

யெடுப்புகள் எல்லாம் இஸ்லாமியர்கள், இந்துக்களின்மீது தொடுக்கப்பட்ட சமயப் போர்கள் என்றே இஸ்லாமிய வரலாற்றுசிரியர்கள் கூறியுள்ளனர்.

மேற்கூறப்பட்ட ஐந்து நாடுகளுக் கிடையே ஒற்றுமையின்றிப் போர்கள் ஏற்படுவது வழக்கமாக இருந்தது. இவ் விதக் குழப்பமான அரசியல் நிலைமையை இராமராயர் தம் விருப்பத்திற் கேற்பப் பயன்படுத்திக் கொண்டார். கௌடில்யர், மாக்கிய வெல்லி என்ற அரசியல் தத்துவ ஆசிரியர்களால் கூறப்பெற்ற 'பிரித்தாளும்' சூழ்ச்சியில் இவர் வல்லவர். பாமினி சுல்தான் களுடைய ஒற்றுமை யின்மை தமக்குப் பயன் அளிக்கும் வகையில் சூழ்ச்சித் திறனே மேற்கொண்டார். ஒரு சமயத்தில் ஒரு சுல் தானுக்கு உதவியளித்தும், மற்றொரு சமயத்தில் எதிரியாக இருந்தும், பகைவனிடம் நட்புக் கொண்டும், நண்பனிடம் பகைமை கொண்டும் தம்முடைய அரசியல் சூட்சியை வெளியிட்டார். இந்தச் சூழ்ச்சித் திறமை நெடுநாள் நிலைபெற வில்லை. 1564ஆம் ஆண்டில் விஜயநகரப் பேரரசிற்கு எதிராகத் தோன்றிய இஸ்லாமியக் கூட்டுறவு, விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியுறுவதற்குக் காரணமாக இருந்தது.

1543முதல் 1564 வரை தக்காணத்துச் சுல்தான்களோடு இராமராயருக்கு எவ்வித அரசியல் தந்திர உறவு நிலவியது என்பதைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்.

1. விஜயநகரப் பேரரசிற்கும், பீஜப்பூர் சுல்தானுக்கு மிடையே ஏற்பட்ட மனவேற்றுமை சதாசிவராயருடைய ஆட்சி யின் தொடக்கத்தில் இருந்து தோன்றியதெனக் கூறலாம். இராம ராயருக்கும், சாளுக்கத் திருமலைக்கு மிடையே உள்நாட்டுக் கலகம் நடந்த சமயத்தில் பீஜப்பூர் சுல்தானுகிய இப்ராஹிம் அடில் ஷா, தம்முடைய சேனைத்தலைவன் அசாத்கானை அனுப்பி அதோனிக் கோட்டையைக் கைப்பற்றும்படி செய்தார். இராம ராயர் தம்முடைய தம்பி வேங்கடாத்திரியை அனுப்பி இப்ராஹிம் அடில்ஷாவுடன் அமைதி உடன் படிக்கையொன்றைச் செய்து கொண்டார். ஆனால், மிக விரைவில் இப்ராஹிம் அடில் ஷா ஆமதுநகரத்துப் புர்ஹான் நைசாம் ஷாவுடன் நட்புறவு கொண்டு விஜயநகரத்து இராமராயரை எதிர்த்தார். ஆனால், இராமராயர் வெற்றி பெற்றார்.

2. பீஜப்பூர் சுல்தான் இப்ராஹிம் அடில் ஷாவிற்கு உதவி செய்த ஆமதுநகரத்துச் சுல்தானுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க இராமராயர் விரும்பினார். ஆமதுநகரத்தின்மீது படையெடுப்

பதற்குப் பீடார், கோல்கொண்டா நாடுகளின் வழியாக விஜய நகரப் படைகள் செல்ல வேண்டும். இந்த இரண்டு நாட்டு அரசர்களையும் தம் கட்சியில் இராமராயர் சேர்த்துக் கொண்டார். கோல்கொண்டா நாட்டின் வழியாக இராமராயரும், பீடார் நாட்டின் வழியாகத் திருமலைராயரும் ஆமதுநகரத்தின்மீது படை யெடுத்துச் சென்றனர். ஹான்டே அனுமந்தப்பா என்பவர் தலைமையில் மற்றொரு சேனையும் அனுப்பப்பெற்றது. இந்த மூன்று சேனைகளும் ஆமதுநகரத்தில் ஒன்றுகூடி ஆமதுநகரத்துச் சுல் தானுடைய படைகள் சிதறியோடும்படி போர்செய்து பெரும் வெற்றி பெற்றன. ஆமதுநகரச் சுல்தான் புர்ஹான்-நைசாம் ஷாவும், பீடார் நாட்டுச் சுல்தானும் உடன்படிக்கை செய்து கொண்டு நட்புக் கொள்ளச் சம்மதித்தனர்.

3. 1544-ல் விஜயநகரத்து இராமராயர், ஆமதுநகரத்துச் சுல்தான், கோல்கொண்டாச் சுல்தான் ஆகிய மூவரும் சேர்ந்து கொண்டு பீஜப்பூர் நாட்டின்மீது படையெடுத்தனர். இராம ராயருடைய படைகள் தெற்குத் திசையிலிருந்தும், கோல் கொண்டாப் படையினர் கிழக்குத் திசையிலிருந்தும் ஆமதுநக ரத்துப் படைகள் வடக்குத் திசையிலிருந்தும் பீஜப்பூர்மீது படை எடுத்து வந்தன. அசாத்கான் என்பவருடைய யோசனையின்படி இப்ராஹிம் அடில் ஷா இராமராயரோடும், ஆமதுநகரத்து புர்ஹான் நைசாம் ஷாவோடும் அமைதியுடன்படிக்கை செய்து கொண்டார். பின்னர்ப் பீஜப்பூர் நாட்டுப் படைத்தலைவனுகிய அசாத்கான், கோல்கொண்டா நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அந் நாட்டுச் சுல்தானைத் தோல்வியுறும்படி செய்தான். இதனால், பீஜப்பூரும் கோல்கொண்டாவும் விரோதிகளாயின. 1545ஆம் ஆண்டில் பீஜப்பூர் சுல்தானும், ஆமதுநகரத்துச் சுல் தானும் போர் புரிந்து கொள்ளும்படி இராமராயர் அவ் விருவர் களையும் தூண்டிவிட்டார். புர்ஹான் நைசாம் ஷா தோல்வி யுற்று அவமானம் அடைந்தார். இவ் விதமாகப் பீஜப்பூர், ஆமது நகரம், கோல்கொண்டா ஆகிய மூன்று சுல்தானிய அரசுகளும் ஒற்றுமையின்றி ஒன்றோடொன்று போரில் ஈடுபடுமாறு இராம ராயர் சூழ்ச்சி செய்தார்.

4. 1548-ல் கலியாணபுரக் கோட்டையைப் பீடார் சுல் தானிடமிருந்து ஆமதுநகரத்துச் சுல்தானுகிய புர்ஹான் நைசாம் ஷா கைப்பற்றுவதற்கு இராமராயர் உதவி செய்தார். 1549இல் பீஜப்பூர் சுல்தானும், பீடார் சுல்தானும் நட்புக் கொண்டனர். இந்த நட்புறவினால் தமக்கு ஆபத்து நேரிடும் என்றுணர்ந்த இராமராயர் ஆமதுநகரத்துச் சுல்தானுடன் நட்புக்கொண்டார்.

பீஜப்பூர் சுல்தானுக்கும், ஆமது நகரத்துச் சுல்தானுக்கும் பெரும்போர் ஒன்று தொடங்கியது. இத் தருணத்தில் கிருஷ்ணை, துங்கபத்திரை ஆறுகளுக் கிடையில் உள்ள ராய்ச்சூர், முதுகல் பகுதிகளை இராமராயர் தம் வசப்படுத்திக் கொண்டார்.

5. 1558-ல் ஆமதுநகரத்தில் ஹுசேன் நைசாம் ஷா சுல்தானுகப் பதவி ஏற்றவுடன், கோல்கொண்டா நாட்டு இப்ராஹிம் குத்ப்-ஷாவுடன் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டார். பின்னர் இவ் விரு நாட்டுப் படைகளும் பீஜப்பூர் நாட்டின்மீது படையெடுத்துக் குல்பர்கா என்னு மிடத்தை முற்றுகையிட்டன. பீஜப்பூர் சுல்தான் அடில் ஷா இராமராயரை நாடித் தமக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டார். இராமராயரும் ஒப்புக்கொண்டு தம்முடைய படைகளுடன் குல்பர்காவிற்குச் சென்றார்; ஆயினும், பீஜப்பூர், ஆமதுநகரம், கோல்கொண்டா, விஜயநகரம் ஆகிய நான்கு நாட்டரசர்களும் அடிக்கடி போர் புரிந்துகொள்வதனால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற் படுவதைத் தடுப்பதற்கு ஒரு கூட்டுப் பாதுகாப்புத் திட்டத்தை (Collective Security) உண்டாக்குவது நலமெனக் கருதினார். இத் திட்டத்தை மற்ற அரசர்களும் ஒப்புக்கொள்ளவே பீமாநதி கிருஷ்ணைப் பேராற்றோடு கூடும் இடத்தில் ஒரு கூட்டுப் பாது காப்புத் திட்டம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. 'வலிமை மிக்க அரசு, வலிமை குன்றிய நாடுகளைக் காரணமின்றித் தாக்கினால் மற்றையோர்கள் வலிமை குன்றிய நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற திட்டம் உருவாயிற்று. ஆனால், இத் திட்டம் செயல்முறையில் வருவதற்கு ஒருவரும் உதவி செய்ய வில்லை.

6. அலி அடில் ஷா என்ற பீஜப்பூர் சுல்தான், இராம ராயருடைய மகள் இறந்த பிறகு துக்கம் விசாரிப்பதற்கு விஜய நகரத்திற்குச் சென்றார். அங்கே இவ் விருவருக்கும் ஒருவிதமான நட்புடன்படிக்கை தோன்றியது. ஆயினும், தாம் ஊருக்குத் திரும்பிய பொழுது இராமராயர் தம்மை வழியனுப்ப வில்லை என்ற அற்பக் காரணத்திற்காக அவருடன் கோபித்துக்கொண்டு விரோதம் பாராட்டினார் என்று பெரிஷ்டா கூறுவார்.

7. 1558-ல் தோன்றிய கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் காற்றில் பறந்துவிட்டது. 1560ஆம் ஆண்டில் ஆமது நகரத்துச் சுல்தான் ஹுசேன் நைசாம் ஷா பீஜப்பூர்மீது படை யெடுத் தார். ஆமது நகரத்துச் சுல்தானுக்கு எதிராகப் பீஜப்பூர், கோல் கொண்டா நாட்டுச் சுல்தான்களோடு இராமராயரும் சேர்ந்து கொண்டார். இந்த நேச நாடுகள் ஆமதுநகரத்தைத் தாக்கிப் பல இன்னல்களைப் புரிந்தன; கலியாணபுரக் கோட்டையை

ஆமது நகரத்துச் சுல்தானிடமிருந்து மீட்டுப் பீஜப்பூர் சுல்தானிடம் அளித்தன. வெற்றி அடைந்த சேனைகள் பீடார் நாட்டிலும் புகுந்து பல நாச வேலைகளைச் செய்தன.

8. கோல்கொண்டா நாட்டுடன் போர்: ஆமதுநகரப் போர் முடிந்தபின், ஹுசேன் நைசாம் ஷா, கோல்கொண்டாச் சுல்தான் இப்ராஹிம் குத்ப் ஷாவுடன் கூடிக்கொண்டு முன்னர் தாம் அடில் ஷாவிடமிழந்த கலியாணபுரம் என்னு மிடத்தை மீண்டும் பெற முயற்சிகள் செய்தார். இப்பொழுது இராமராயர் பீஜப்பூர் சுல்தானுடன் கூடிக்கொண்டார். ஹுசேன் நைசாம் ஷா கலியாணபுரத்தைக் கைப்பற்றுதவாறு தடுத்துச் சுல்தானுடைய தலைநகரமாகிய ஆமதுநகரத்தையும் முற்றுகையிட்டார். இராம ராயருடைய தம்பி வேங்கடாத்திரி கோல்கொண்டா நாட்டின் தென்பகுதிகளில் புகுந்து இஸ்லாமியர் வெறுக்கத் தக்க செயல் களைச் செய்தார்.

பீஜப்பூர் சுல்தான், அலி அடில் ஷா, இப்ராஹிம் குத்ப் ஷாவைத் தோற்கடித்துக் கலியாணபுரத்திலிருந்து துரத்தியடித்தார். இராமராயரும், வேங்கடாத்திரியும் சேர்ந்து கோல் கொண்டாவை முற்றுகையிட்டனர். கோல்கொண்டாச் சுல்தான் விஜயநகரப் பேரரசிற்குச் சொந்தமான கொண்டவீடு என்னு மிடத்தைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றார். அதனால், கோல் கொண்டா, கணபுரம், பாங்கல் முதலிய இடங்களை இழக்க வேண்டி வந்தது.

மேற்கூறப்பெற்ற இரண்டு படையெடுப்புகளிலும் விஜய நகரப் படைகள் ஆமதுநகரத்திலும், கோல்கொண்டாவிலும் பல அழிவு வேலைகளைச் செய்ததாகப் பெரிஷ்டா கூறியுள்ளார். "1560ஆம் ஆண்டில் விஜயநகரப் படைகள் ஆமதுநகரத்தைத் தாக்கிய பொழுது நாடு முழுவதும் பாழாகியது. பேரண்டா என்னும் இடத்திலிருந்து கிபர் என்னும் இடம் வரையிலும் ஆமது நகரத்திலிருந்து தௌலதாபாத் வரையிலும் உயிரினங்களையே காண முடியாதபடி வெற்றிடங்களாகத் தோன்றின. மசூதிகளை அழித்தனர்; பெண்களைக் கற்பழித்தனர்; குரானை மிதித்து அவமதித்தனர்; இரண்டாவது படையெடுப்பில் இஸ்லாமியருடைய வீடுகளைக் கொளுத்தினர். சில மசூதிகளில் தங்கள் குதிரைகளைக் கட்டி அவற்றைக் குதிரை லாயங்களாக மாற்றினர்; சில மசூதி களில் உருவச்சிலைகளை வைத்து வழிபடவும் துணிந்தனர்.'

இவ் வித அழிவுச் செயல்களைச் செய்ததும் அன்றிக் 'கேடு வரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே' என்னும் பழமொழிக்

கிணங்க இராமராயருக்குத் 'தான் எனும் அகந்தையும்' அதிகரித்தது. அவர் தக்காணச் சுல்தான்களுடன் அடிக்கடி கூடிக் கொண்டு அவர்களிடையே பகைமையை வளர்த்துப் போரிட்டுக் கொள்ளும்படி செய்து தாம் இலாபமடைவதைச் சாமர்த்தியம் எனக் கருதினர்; தக்காணச் சுல்தான்களே மதிக்காது இறுமாப்புடன் பேசியும், பழகியும் வந்தார்; இராமராயருடைய படைவீரர்களும் இஸ்லாமிய மக்களேயும், அவர்களுடைய சமயம், கலை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் அலட்சியப்படுத்தினர்.

12. தலைக்கோட்டைப் போர்

(இ.பி. 1565, ஜனவரி 23)

இராமராயர் தக்காணத்துச் சுல்தான்களுடைய அரசியல் உறவுகளில் எவ் விதமான பங்கு கொண்டார் என்பதை முன் னதிகாரத்தில் பார்த்தோம். ஆமதுநகரத்துச் சுல்தானும், பீஜப் பூர்ச் சுல்தானும் தங்களுக்குள் ஒற்றுமையின்றிப் போர் புரிந்து கொள்வதனாலும், கோல்கொண்டாவின்மீது அடிக்கடி படை யெடுத்துச் செல்வதனாலும் இராமராயர் தங்களுடைய அரசியல் விவகாரங்களில் தலையீடு செய்ய முடிகிறது என்பதை நன்கு உணர்ந்தனர். தங்களுடைய நாட்டின் பகுதிகளை இராமராயர் அடிக்கடி கைப்பற்றுவதும், தூதர்களை அவமானம் செய்வதும் அவ ருடைய செல்வச் செருக்கினால் ஏற்பட்டவை என்பதை நன்குணர்ந் தனர். எதிர்காலத்தில் இவ் விதமான செயல்கள் நடைபெறாமல் இருப்பதற்கு இராமராயருடைய அதிகாரத்தை யழிக்க வேண்டிய திட்டங்களைத் தீட்டுவதற்குப் பீஜப்பூர்ச் சுல்தான் அடில் ஷா தம்முடைய அமைச்சர்களுடன் ஆலோசனை புரிந்தார். அவ ருடைய அமைச்சர்கள் இராமராயருடையசேனபலமும், பொருள் வருவாயும் மிகுந்திருப்பதனால்தான் இவ் விதக் காரியங்களைச் செய்ய முடிகிறது. அவருடைய பேரரசிலுள்ள 60 துறைமுகங் களிலிருந்து கிடைக்கும் மிகுதியான வருவாயைக் கொண்டும், தமக் கடங்கிய சிற்றரசர்களின் சேனையின் பலத்தைக் கொண்டும் இஸ்லாமிய அரசர்களை அவர் மதிக்காது நடக்கிறார். சுல்தான்கள் எல்லோரும் சேர்ந்து எதிர்த்தால்தான் அவரை வெல்ல முடியும் என்று கூறினர். அவர்களுடைய உரையின் உண்மையை யுணர்ந்த பீஜப்பூர்ச் சுல்தான், கோல்கொண்டாச் சுல்தானாகிய இப்ராஹிம் குத்ப் ஷாவிற்கு இரகசியமாகத் தூதர் ஒருவரை அனுப்பினர். கோல்கொண்டாச் சுல்தானும், பீஜப்பூர்ச் சுல்தானுடைய கருத்து களை ஆதரித்து, ஆமதுநகரத்துச் சுல்தானையும், பீடார் சுல்தானை யும் சேர்த்துக் கொண்டால்தான் தங்களுடைய காரியம் வெற்றி பெறும் என்பதை நன்குணர்ந்தனர். இந் நான்கு அரசர்களும் சேர்ந்து விஜயநகரத்திற்கு எதிராக அரசியல் கூட்டுறவு ஒன்றை அமைத்தனர். இந்த அரசியல் உறவுகளின் மூலமும், பின்னர்த் தோன்றிய திருமண உறவுகளின் மூலமும் பீஜப்பூரும், ஆமது நகரமும் நெருங்கிய பிணைப்புடையவையாயின. ஆமது நகரத்தின்

சுல்தான் ஹுசேன் நைசாம் ஷாவின் மகள் சாந்தபீபீ என்பாளை அலி அடில் ஷா மணந்துகொள்வதாகவும் அப் பெண்ணிற்குச் சீதனமாக ஷோலாப்பூர்க் கோட்டையை யளிப்பதாகவும் திட்டங்கள் ஏற்பட்டன. ஆமதுநகரத்து இளவரசர் மூர்ததாசா என்பவருக்கு அலி அடில் ஷா தம் தங்கையை மணம் செய்து கொடுக்க முன்வந்தார். இவ் விரு திருமணங்கள் பீஜப்பூரையும், ஆமதுநகரத்தையும் ஒற்றுமையுடைய நாடுகளாகச் செய்தன. இப்ராஹிம் குத்ப் ஷாவும், பீடார் சுல்தானும் இந்த இஸ்லாமியக் கூட்டுறவில் பங்கு கொண்டனர்.

பின்னர், பீஜப்பூர்ச் சுல்தான் அலி அடில் ஷா தம்முடைய தூதர் ஒருவரை இராமராயரிடம் அனுப்பித் தம்மிடமிருந்து வன் முறையில் பெற்றுக்கொண்ட ராய்ச்சூர், முதுகல் என்ற இரண்டு கோட்டைகளையும் திருப்பித் தந்துவிடுமாறு செய்திகள் விடுத்தார். பீஜப்பூர்ச் சுல்தான் எதிர்பார்த்ததுபோல் பீஜப்பூரில் இருந்து அனுப்பப் பெற்ற தூதரை அவமானப்படுத்தி அவரை விஜயநகரத்திலிருந்து துரத்திவிட்டாரென்று பெரிஷ்டா கூறி யுள்ளார். தங்களுடைய விருப்பம் நிறைவேறியதைக் கண்ட சுல் தான்கள் பீஜப்பூர் நாட்டுச் சமவெளியில் தங்கள் சேனைகள் வந்து கூடும்படி உத்தரவிட்டனர். 1564ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சுல்தான்களுடைய குதிரைப் படைகளும். காலாட்படைகளும் பீரங்கிப் படைகளும் டான் நதி கிருஷ்ணை நதியோடு சேருமிடத் திற் கருகிலுள்ள தலைக்கோட்டை என்னு மிடத்தில் கூடின. தட்ப வெப்ப நிலைமை, சேனைகளை நடத்திச் செல்வதற்கு வசதியாக இருந்தது. கிருஷ்ணை நதியின் வடகரையிலுள்ள ராக்ஷசி - தாங்கடி என்ற இரு கிராமங்களுக் கிடையே இஸ்லாமியர்களுடைய படைகள் முகாம் இட்டிருந்தபடியால் இவ் விடத்தில் நடந்த போரை ராக்ஷசி - தாங்கடிப் போர் என அழைக்கலா மென்று ஹீராஸ் பாதிரியார் கூறுவார்.

விஜயநகரத்து அரசாங்கமும், மக்களும் தங்களுக்கு ஏற்படப் போகும் பெரியதோர் ஆபத்தை உணர வில்லை. இதற்குமுன் எத்துணையோ தடவைகள் பாமினி சுல்தான்கள் படையெடுத்து வந்தும் தலைநகரத்தைக் கைப்பற்ற முடியாது போனதுபோல இப் பொழுதும் நடைபெறும் என நினைத்தனர். இராமராயரும், சுல் தான்களுடைய மிரட்டலைக் கேலிசெய்தார்; இருபதாண்டுகளுக்கு மேல் போர் புரிவதிலேயே காலங் கழித்த தமக்குமுன், சுல்தான் களுடைய படைகள் பஞ்சுபோல் பறந்துவிடும் எனக் கருதினர்; ஆயினும், எதிரிப் படைகளை எதிர்த்துப் போர்புரிவதற்குத் தகுந்த பேரரசர் படைகளையும், சிற்றரசர் படைகளையும் திரண்டு

வரும்படி உத்தரவிட்டார்; கிருஷ்ணை நதியிலிருந்து தெற்கே இலங்கைத் தீவு வரையில் பரவியிருந்த விஜயநகரப் பேரரசின் அமர நாயக்கர்களுடைய சேனைகளெல்லாம் திரண்டுவரும்படி ஓலைகள் போக்கினர் எனவும் மூன்று இலட்சம் காலாட் படைகளும், ஓரிலட்சம் குதிரை வீரர்களும் அடங்கிய பெரிய தொரு சேனையைச் சேகரித்தா ரெனவும் பெரிஷ்டா கூறுவார்[1].

இராமராயரின் தம்பி திருமலைராயரை 'எல்தும்ராஜ்' என்று பெரிஷ்டா அழைத்துள்ளார். இருபதினாயிரம் குதிரைப் படையும், ஓரிலட்சம் காலாட் படையும், 500 யானைகளையும் கொண்ட தொரு படையைத் திருமலை ராயரின் தலைமையில் கிருஷ்ணை நதியைக் கடந்து விரோதிகள் வரமுடியாதபடி தடுக்க இராம ராயர் அனுப்பி வைத்தார். வேங்கடாத்திரி என்ற மற்றொரு தம்பியை இன்னொரு பெருஞ்சேனையுடன் கிருஷ்ணை நதியைக் கடந்து இஸ்லாமியச் சேனைகள் வாராதபடி பார்த்துக்கொள்ள அனுப்பினர். இறுதியாக இராமராயரும் இன்னொரு பெருஞ் சேனையுடன் தம்முடைய இரண்டு தம்பிகளுக் கிடையே முகாம் இடுவதற்குத் திட்டத்தை வகுத்தார். கூட்டோ (Couto) என்ற போர்த்துகீசியர், இந்த மூன்று சகோதரர்களுடைய சேனைகளில் ஆறு இலட்சம் காலாட் படைகளும், ஓரிலட்சம் குதிரை வீரர்களும் இருந்தனர் என்றும், இவற்றில் பாதி அளவிற்கும் குறை வாகச் சுல்தான்களுடைய சேனைகள் இருந்தன வென்றும் கூறி யுள்ளார்[2]. ஆனால், பெரிஷ்டா, இந்துக்களுடைய சேனையில் ஒன்பது இலட்சம் காலாட் படைகளும், 45 ஆயிரம் குதிரை வீரர்களும், இரண்டாயிரம் யானைகளும், 15 ஆயிரம் துணைப் படை விலங்குகளும் இருந்தன எனக் கூறுவார்[3]. இவற்றால் விஜய நகரப் படைகளில் கணக்கிட முடியாத அளவிற்குக் காலாட் படைகளும், குதிரை வீரர்களும், யானைகளும் இருந்தன என நாம் உணரலாம்.

கிருஷ்ணை நதியின் வடக்குக் கரையில் முகாம் இட்டிருந்த சுல்தான்களுடைய படைகளை அலி அடில் ஷா, ஹுசேன் நைசாம் ஷா, மற்றும் பரீட் ஷா, இப்ராஹிம் குத்ப் ஷா முதலிய தலைவர்களே முன்னின்று நடத்தினர். இஸ்லாமியக் கூட்டணிப் படை கிருஷ்ணை நதியைக் கடந்து வர முடியாத நிலையில் இருந்தது. ஏனெனில், கிருஷ்ணை நதியின் இறங்கு மிடத்தில் இராமராயரின் படைகள் தகுந்த பாதுகாப்புகளை அமைத்து

[1] Ferishta. Vol. III. PP. 413-14.
[2] A Forgotten Empire. P. 194.
[3] Ibid. P. 195.

இருந்தன. எப்படியாவது ஆற்றைக் கடந்து எதிரிகளின் படைகளைத் தாக்குவதற்கு இஸ்லாமியர் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டனர்; இரண்டு மூன்று தடவைகளில் தங்களால் ஆற்றைக் கடக்க முடியாதபடியால் பின்வாங்குவது போல் நாடகம் நடித்தனர்; விஜயநகரப் படைகள் இந் நாடகத்தை உணராது பாதுகாப்பில் அசட்டையாக இருந்த சமயத்தில் நதியைக் கடந்து முன்னேறினர். இஸ்லாமியப் படைகள் நதியைக் கடந்தது, இராமராயருக்குப் பெரிய திகிலை உண்டாக்கிய போதிலும் மனந்தளராது போரில் இறங்கினர். ஜனவரி 23ல் செவ்வாய்க் கிழமையன்று இரு சேனைகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

ஆமது நகரத்துச் சுல்தானுடைய படையின் முன்னணியில் அறுநூறு பீரங்கிகள் மூன்று வரிசைகளில் அமைக்கப்பட்டு இருந்தன. இந்தப் பீரங்கிப் படையை மறைத்துக்கொண்டு இரண்டாயிரம் வில் வீரர்கள் இருந்தனர். இராமராயருடைய சேனைகள் இந்த வில் வீரர்களை எதிர்த்துத் துரத்தியடித்து முன்னேறின. இப்பொழுது எதிரிகளின் பீரங்கிகள் நெருப்பைக் கக்கின. இராமராயரின் சேனையில் பெருஞ்சேதம் தோன்றியது. வயது சென்ற நிலைமையில் இருந்தபோதிலும் இராமராயர் மனந் தளராமல் போரிட்டார். தம்முடைய படைகள் தோற்று ஓடி விடாதவாறு பல்லக்கில் இருந்துகொண்டு போர் வீரர்களை உற்சாகப்படுத்தி வந்தார். இந்தச் சேனையின் இட, வலப் புறத்தில் இருந்த வீரர்கள் இஸ்லாமிய வீரர்களை மும்முரமாக எதிர்த்துப் போர் செய்தனர். இராமராயருக்கு வெற்றி கிட்டியது போல் தோன்றியது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல் பெரியதோர் இன்னல் இராமராயருக்கு ஏற்பட்டது. அவருடைய சேனையில் இருந்த இஸ்லாமிய வீரர்கள் கொண்ட இரு படைகள் சுல்தானியர்களுடைய சூழ்ச்சியினால் துரோகச் செயலில் ஈடுபட்டனர். விஜயநகரச் சேனையை விட்டு நீங்கிக் கிருஷ்ணை நதியைக் கடந்து அடில் ஷாவின் படைகளுடன் சேர்ந்து விட்டனர் என்று சீசர் பெடரிக் என்ற வரலாற்றாசிரியர் கூறுவார். சலாபிரூமிக்கான் தலைமையில் இருந்த இஸ்லாமியப் பீரங்கிப் படைகள் மும்முரமாக விஜயநகரப் படைகளின்மீது குண்டுமாரி பொழிந்தன. பின்வாங்கிய வீரர்களை உற்சாகப் படுத்துவதற்கு இராமராயர் பல்லக்கை விட்டு இறங்கி, நவரத்தின அரியணை ஒன்றில் அமர்ந்து தங்க நாணயங்களையும், வெள்ளிப் பொருள்களையும் வாரி வாரி இறைத்தார். இந் நாணயங்களைப் பொறுக்கிக் கொண்ட வீரர்கள் வீறுகொண்டு தாக்கத் தொடங்கினர். ஆனால், இராம ராயருடைய விதி அவருக்கு எதிராக வேலை செய்யத் தொடங்கியது.

இஸ்லாமியப் படையில் இருந்த யானை யொன்று எதிரிகளின் தாக்குதலால் காயமுற்றது. அது மிகுந்த கோபங்கொண்டு இராம ராயர் அமர்ந்திருந்த பல்லக்கை நோக்கி ஓடியது. பல்லக்கைத் தூக்கியவர்கள் யானைக்குப் பயந்து பல்லக்கோடு இராம ராயரைக் கீழே போட்டுவிட்டு உயிருக்குத் தப்பியோடினர். பல்லக்கில் இருந்து கீழே விழுந்த இராம ராயரை இஸ்லாமிய வீரர்கள் சிலர் பிடித்துக் கைதியாக்கினர்; அவருடைய வீரர்கள் மீட்பதற்கு முன் ஆமது நகரத்துச் சுல்தானுக்குமுன் அவரைக் கொண்டு சேர்த்தனர். இராமராயர்மீது மிகுந்த ஆத்திரங் கொண்டு இருந்த ஹுசேன் நைசாம் ஷா, சிறிதும் இரக்க மில்லாமல் இராம ராயரைப் பிடித்துக் கீழே தள்ளித் தன்னுடைய உடை வாளினால் அவருடைய கழுத்தை வெட்டியதாக நாம் அறிகிறோம். அவ்வாறு கொடூரத்துடன் வெட்டிய பொழுது, 'தெய்வம் என்னை எது வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்' என்று கூறியதாகவும் நாம் அறிகிறோம். ஆனால், இராமராயருக்கு எதிர்பாராத வகையில் ஏற்பட்ட மரணத்தைக் கண்டு விஜய நகரப் படையினர் மிக்க திகிலும் வருத்தமும் அடைந்தனர். உடலிலிருந்து வேறுக்கப்பட்ட தலையை ஓர் சட்டியில் செருகி விஜயநகரப் படைகளுக்குமுன் காட்டவே விஜயநகரப் படைகள் பின்வாங்கி ஓடத் தொடங்கின. அப்பொழுது தோன்றிய பெருங்குழப்பத்தில் பின்வாங்கி, மீண்டும் எதிர்த்துப் போர் புரிவதற்கு ஏற்ற தலைவர்கள் இல்லை. இராம ராயருடைய தம்பி திருமலை ராயருடைய கண்ணில் கூரிய அம்பொன்று பாயவே பார்வையிழந்து அவர் துன்புற்றார். வேங்கடாத்திரி, போர்க் களத்தில் உயிர் இழந்தாரா அல்லது உயிருக்குப் பயந்து ஓடி விட்டாரா என்பது தெளிவாக விளங்க வில்லை.

தலைக்கோட்டைப் போரில் இராம ராயரும் வேங்கடாத் திரியும் உயிரிழந்ததும் விஜயநகரப் படைகள் இலட்சக் கணக்கில் கொல்லப்பட்டதால் கிருஷ்ணை நதியில் இரத்த வெள்ளம் பெருக் கெடுத்து ஓடிய செய்தி, போர்க்களத்திலிருந்து தப்பி வந்தவர்கள் மூலம், மற்ற மக்களுக்குப் புரிந்தது. 1336ஆம் ஆண்டிலிருந்து மிக்க செழிப்புடனும் செல்வத்துடனும் விளங்கிய விஜயநகரத்தின் அழிவுக்காலம் நெருங்கி விட்டது என்பதைத் திருமலை ராயர் உணர்ந்தார். இஸ்லாமியர் நகரத்திற்குள் புகுந்து கொள்ளை யடிப்பதற்குமுன், இதுகாறும் பாதுகாக்கப் பட்ட அரசாங்கச் செல்வங்களைக் காப்பாற்றி வேறிடத் திற்குக் கொண்டுபோவதெனத் திருமலை ராயர் திட்டமிட்டார். ஐந்நூறுக்கு மேற்பட்ட யானைகளின்மீது, அதுவரையில் செலவழிக்காமல் இருந்த நவரத்தினங்களும், தங்கம், வெள்ளி

முதலிய விலையுயர்ந்த பொருள்களும் ஏற்றப்பட்டன. விழாக் காலங்களில் விஜயநகர அரசர்கள் அமர்ந்த நவரத்தின அரியணையும், மற்றும் அரச சின்னங்களும், விலையுயர்ந்த பொருள்களும் ஏற்றப்பட்டுப் பெனுகொண்டாக் கோட்டைக்கு அனுப்பப் பட்டன. இந்தச் செல்வங்களோடு சதாசிவராயரும் பத்திரமாகப் பெனுகொண்டாவிற்கு அனுப்பப் பெற்றார்.

விஜயநகரத்தின் அழிவு : விஜயநகரத்துப் பெருஞ்சேனை முற்றிலும் தோல்வியுற்றது. சேனைகள் தங்கியிருந்த இடத்தை இஸ்லாமியப் படைகள் கொள்ளையிட்டன. வெற்றியடைந்த சேனையில் இருந்த வீரர்கள் தங்கம், நவரத்தினங்கள், ஆடை ஆபரணங்கள், கூடாரங்கள், போர்க் கருவிகள், குதிரைகள் முதலியவற்றைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டனர். வெற்றியடைந்த சுல்தான்கள் யானைகளை மாத்திரம் தங்களுக்கு என வைத்துக் கொண்டு மற்றவைகளைப் போர் வீரர்களுக்கே கொடுத்து விட்டனர்.

திருமலைராயரும், சதாசிவராயரும் விஜய நகரத்தை விட்டு அகன்ற பின்பு அந்த நகரத்தில் ஒரு பயங்கரமான சூழ்நிலை தோன்றியது. தலைக்கோட்டைப் போரில் விஜயநகரம் அடைந்த தோல்வி, அந்த நகரமும் அதைச் சார்ந்த பேரரசும் அழிந்து நாளடைவில் சிதறுவதற்குக் காரணமாயிற்று. பெருமை மிக்க அந்த நகரத்தில் வாழ்ந்த மக்கள் தகுந்த பாதுகாப்பின்றித் தவிக்க லாயினர். போர்க்களத்திற்குச் சென்ற விலங்குகளும், வாகனங் களும் திரும்பி வாராமல் அழிந்தன. ஆகையால், வேறு இடங் களுக்குத் தப்பிச் செல்வதற்கு ஏற்ற வாகன வசதிகளில்லை. வியாபாரிகளும், பொதுமக்களும் தங்களுடைய செல்வங்களைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, 'வருவது வருக' என அஞ்சிக் கொண்டிருந்தனர். நகரத்தைப் பாதுகாப்பதற்கு ஏற்ற சேனைகளோ, காவல் படைகளோ இல்லாததனால், விஜய நகரத்தைச் சூழ்ந்திருந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த பிரிஞ் சாரிகள், லம்பாடிகள், குறும்பர் முதலிய கொள்ளைக் கூட்டத்தினர் நகரத்திற்குள் புகுந்து அரண்மனையையும், கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடித்து எல்லாப் பொருள் களையும் வாரிக் கொண்டு சென்றனர். 1565ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் தேதி மேற்கூறப்பட்ட கொள்ளைக்கூட்டத் தினர்கள் ஆறு தடவை நகரத்தின்மீது படையெடுத்துக் கொள்ளை அடித்தனர் எனக் கூட்டோ (Couto) கூறுவார்.

போரில் வெற்றி பெற்ற சுல்தான்கள் பத்து நாள்களுக்கு மேல் போர்க் களத்தில் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு,

துங்கபத்திரை நதியைக் கடந்து விஜயநகரத்திற்குள் புகுந்தனர். அன்று முதல் ஆறு மாதங்கள் வரையில் விஜயநகரம் அழிந்து படுவது நிச்சயமாயிற்று. நகரத்தை அழிக்க வேண்டு மென்று கங்கணங்கட்டிக்கொண்டு வந்தவர்கள், அக் கருத்தை நிறை வேற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். தக்காணத்துச் சுல்தான்களுடைய படைகள் விஜய நகரத்தை அழித்த கொடுஞ் செயல்களை இராபர்ட் சிவல் எழுதிய நூலில் காணப்பெறும் விவரப்படி அறிந்து கொள்ள வேண்டும். 'நகரத்தில் வாழ்ந்த மக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்தனர்; கோவில் களையும், அரண்மனைகளையும் இடித்துத் தரைமட்டமாக்கினர்; வானளாவ ஓங்கியிருந்த அரண்மனைகளும், தேவாலயங்களும், மதிற்சுவர்களும் இடித்து நொறுக்கப்பட்டன; அவை இருந்த இடங்களில் சிதறுண்ட கருங்கற்களும், செங்கற் குவியல்களுமே காணப்படுகின்றன; கோவில்களில் காணப்பெற்ற சிற்பத் திறமை வாய்ந்த சிலைகள் எல்லாம் உடைக்கப்பட்டு அழிந்தன; ஒரே கற்பாறையில் செதுக்கப்பட்டிருந்த நரசிம்ம மூர்த்தி உருவத்தின் சில பகுதிகளை உடைத் தெறிந்தனர். அவ் வுருவம் உடை பட்டுச் சிதைந்த நிலையில் இன்றும் காணப்பெறுகின்றது; உயர்ந்த மேடைகளில் அமைக்கப்பட்ட மண்டபங்கள் எல்லாம் இடிக்கப்பட்டன; இம் மண்டபங்களின்மீது அமர்ந்து விஜய நகரத்து அரசர்கள் நவராத்திரி, காமன் பண்டிகை, கார்த்திகைத் திருநாள் முதலிய விழாக்களைக் கண்டு களிப்பது வழக்கம். மண்டபங்களின் அடிப்பாகத்தில் சிற்பத் திறமையோடு அமைந்திருந்த சிலைகள் எல்லாம் மறைந்து அழிந்தன. துங்க பத்திரை நதிக்கரையில் மிக்க திறமை வாய்ந்த வேலைப்பாடு களுடன் அமைக்கப்பட்ட வித்தளசுவாமி கோவிலில் காணப் பெற்ற சிலைகளை எல்லாம் இடித்து நொறுக்கினர்; அக் கோவிலின் நடுவில் பெருந்தீ மூட்டி, எரியக் கூடிய பொருள்களை எல்லாம் எரித்தனர்; கருங்கல்லினால் செய்யப்பட்டு அதன் மேல் மரவேலை செய்யப்பட்டிருந்த கல்தேரின் மேற்பகுதி எரிக்கப்பட்டிருக்க வேண்டும்; இரும்புப்பாரைகளைக் கொண்டும், கோடரிகளைக் கொண்டும் இடித்துக் கோவில்களையும், அழகிய மண்டபங் களையும், தூண்களையும் நொறுக்கினர்; மரத்தினால் ஆய கலைச் செல்வங்களை நெருப்பிட்டுப் பொசுக்கினர். ஆறு மாதங்களுக்கு மேல் இந்த அழிவு வேலை தொடர்ந்து நடந்ததெனக் கூறலாம். ஆறு மாதங்களுக்குமுன் 'பொற்குடி மகளிரும், மைந்தரும் கூடி நெற்பொலி நெடுநகராக விளங்கிய விஜயநகரம், பெற்ற மும் கழுதையும் மேய்ந்திடும் பாழ்நகர்'மாயிற்று. அந்நகரத் தில் வாழ்ந்த தொழிலாளர்களும், வியாபாரிகளும், அரசாங்க அலுவலாளர்களும், மற்றையோர்களும் வெளியேறி வேறிடங்

களுக்குச் சென்றுவிட்டனர். உலக வரலாற்றில் இவ்வளவு கொடூரமான அழிவுச்செயல் வேறு எந்த நாட்டிலும் நடந்திருக்க முடியாது'*

மேற்கூறப்பட்ட விவரங்கள் சிறிது மிகைப்படுத்திக் கூறப்பட்ட போதிலும், இன்று விஜயநகரத்தின் அழிவுச் சின்னங்களாக இருக்கும் இடங்களை நாம் போய்ப் பார்த்தால், இராபர்ட் சிவெல் ஏன்பாருடைய நூலில் கூறப்படும் விவரங்கள் பெரும்பாலும் உண்மையானவை என்றே நாம் உணர முடியும். 1567ஆம் ஆண்டில் விஜயநகரத்திற்குச் சென்ற சீசர்பெடரிக் என்ற இத்தாலியர் கூறுவதையும் நாம் அறிந்து கொள்வது நலமாகும். தக்காணத்துச் சுல்தான்கள் விஜயநகரத்தை விட்டு அகன்றபிறகு, பெனுகொண்டாவில் தம்முடைய தலைநகரத்தை அமைத்த திருமலைராயர் மீண்டும் விஜய நகரத்திற்கு வந்து அந்த நகரத்தை முன்போல் சீரமைக்க முயன்றதாக அவர் கூறுவார். ஆனால், அழிக்கப்பட்ட நகரத்தில் வந்து குடியேறுவதற்கு மக்கள் விரும்பவில்லை. 'விஜயநகரம் முற்றிலும் அழிக்கப்படவில்லை; அங்குப் பல வீடுகளும், கோவில்களும், மண்டபங்களும் இருக்கின்றன. ஆனால், அவற்றில் மக்களைக் காண முடியாது. நகரத்தைச் சுற்றியுள்ள காடுகளில் வாழ்ந்த விலங்குகளே அவ் வீடுகளில் காணப்படுகின்றன.'

அழிக்கப்பெற்ற விஜயநகரத்தில் இருந்த ஏராளமான பொருள்களைத் தக்காணத்துச் சுல்தான்கள் வாரிக்கொண்டு சென்றிருக்க வேண்டும். பீஜப்பூர்ச் சுல்தான் அலி அடில் ஷா கோழிமுட்டை அளவினதாகிய ஒரு வைரத்தைப் பெற்றதாக நாம் அறிகிறோம்.

இராமராயரைப் பற்றிய மதிப்பீடு

1530ஆம் ஆண்டில் கிருஷ்ணதேவராயர் இறந்தது முதற்கொண்டு 1565ஆம் ஆண்டில் தலைக்கோட்டைப் போர் நடந்ததுவரை இடைப்பட்ட முப்பத்தைந்து ஆண்டு காலத்தை இராமராயருடைய அரசியல் சூழ்ச்சித்திறன் அமைந்த காலம் என்று கூறலாம். அச்சுதராயர் ஆட்சியின் பிற்பகுதியில் சர்வாதிகாரம் செலுத்திய சாளக ராஜு சகோதரர்களின் பிடியினின்று விஜயநகரப் பேரரசை விடுவித்துச் சதாசிவராயரை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியது இராமராயருடைய செயற்கரும் செயல் ஆகும். சதாசிவராயருடைய அதிகாரத்தையெல்லாம் தாமும், தம்முடைய சகோதரர்கள் இருவரும் அனுபவித்ததை நியாயமான செய்கை யென்று கூறுவதற்கில்லை. சதாசிவராயர்

*R. Sewell. A Forgotten Empire. P. 200.

நேரடியாக ஆட்சி முறையைக் கைப்பற்றி ஆண்டிருந்தால் விஜய நகரப் பேரரசு எவ்வாறு இருந்திருக்கும் என்று நாம் உணர்வதற்கு வாய்ப்புகளில்லை. தென்னாட்டில் தோன்றிய கலகங்களை அடக்கிப் போர்த்துகீசியர்கள் இந்தியக் கோவில்களைக் கொள்ளை யடிக்காமல் காப்பாற்றிய திறமை இராமராயரைச் சேரும். அவர் தக்காணத்துச் சுல்தான்களுடைய அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டது விரும்பத் தக்க தன்று. சுல்தான்களிடையே விரோத மனப்பான்மையை உண்டாக்காமலேயே இராமராயர் விஜய நகரப் பேரரசைக் காப்பாற்றியிருக்க முடியும். இஸ்லாமிய வீரர்களை நம்பித்தம்முடைய சேனையில் அவர்களுக்கு முக்கியஇடத்தைக் கொடுத்தது விஜயநகரச் சேனைக்கு ஆபத்தாக முடிந்தது. இராமராயரும், அவருடைய சேனைவீரர்களும் இஸ்லாமிய சமயத்தை அவமதித்து, மசூதிகளை அழித்து அவ்விடங்களில் உருவ வணக்கத்தைச் செய்வித்து, இஸ்லாமியருடைய ஆத்திரத்திற்கு ஆளானர் என்று பெரிஷ்டா கூறுவது எவ்வளவு உண்மையான செய்தி என்று தெரிய வில்லை.

தக்காணத்துச் சுல்தான்களுக்குள் பகைமையை வளர்த்துத் தான் விஜயநகரத்தைக் காப்பாற்ற முடியும் என்ற கொள்கையை வரலாற்றறிஞர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இராமராயர் பகைநட்டல், நட்புப் பிரித்தல் முதலிய கொள்கைகளைப் பின் பற்றாமல் இருந்திருந்தால் தலைக்கோட்டைப் போர் ஏற்படாத வாறு தடுத்திருக்கலாம். வன்முறையில் நம்பிக்கை வைத்து, வாளினால் வெற்றியடைந்தவர்கள் வாளினால் அழிவர்' என்ற உண்மைக்கு இராமராயருடைய வீழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும். சதாசிவராயரை மூலையில் தள்ளிவைத்து, அவர் அனுபவிக்க வேண்டிய அதிகாரங்களைத் தாமும், தம்முடைய சகோதரர்களும் அனுபவிக்கும்படி செய்ததன் பலனாக இராமராயர் தலைக் கோட்டைப்போரில் தம்முடைய உயிரையே இழந்தார். தெலுங்கு மொழி இலக்கியங்களையும், இசையையும் ஆதரித்த இராமராயர் வைணவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவராகவும் வாழ்ந்தார். இராமராயருடைய ஆட்சியில் மக்களுடைய பொருளாதார வாழ்வு சிறப்புற்றிருந்தமை அவருடைய ஆட்சியில் சதாசிவராயருடைய பெயரில் பொறிக்கப்பெற்ற சாசனங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

தலைக்கோட்டைப் போரினால் தோன்றிய பயன்கள் : தென்னிந்திய வரலாற்றில் 1565ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் தேதி ஒரு முக்கியமான நாள் எனக் கருதப் பெறுதல் வேண்டும். ஏனெனில், அன்றுதான் விஜயநகரம் அழிந்துபடுவதற்குக் காரணமாயிருந்த

தலைக்கோட்டைப் போர் நடைபெற்றது. தக்காண வரலாற்றை எழுதிய இஸ்லாமிய வரலாற்றுசிரியர்கள் சிலர் தலைக்கோட்டைப் போரை இஸ்லாமிய சமயத்தைக் காப்பாற்றுவதற்காக நடந்த போராகக் கருதினர். ஆனால், இக் கருத்தில் உண்மை யிருப்ப தாகத் தோன்ற வில்லை. ஆமதுநகரத்திலும், கோல்கொண்டா விலும் இராமராயரும், அவருடைய சேனைவீரர்களும் செய்த கொடுஞ்செயல்களுக்கேற்ற தண்டனை எனப் பெரிஷ்டா கூறுவார். தென்னிந்திய வரலாற்றில் தலைக்கோட்டைப்போர் பல மாற்றங் களை உண்டாக்கியதென இராபர்ட் சிவெல் கூறியுள்ளார். விஜய விஜயநகர வரலாற்றின் ஒரு திருப்புமுனையாகத் தலைக்கோட்டைப் போர் கருதப்பட்ட போதிலும் அது 'தலைசிறந்த' (Grand) திருப்பு முனையன்று என்று திரு. சத்தியநாதய்யர் கூறுவார்.[1] இந்துக் களுடைய ஆட்சிப் பெருமையிலிருந்து தென்னிந்தியாவில் எப்படி இஸ்லாமிய அதிகாரம் பரவிய தென்பதைக் குறிப்பதே தலைக் கோட்டைப் போர் என ஹீராஸ் பாதிரியார் உரைப்பார்.[2]

பாமினி சுல்தான்கள் விஜயநகரத்தை அழித்ததைக் கூறிய பிறகு, 'இதனுடன் விஜயநகர வரலாறு முடிந்துவிட்டதெனக் கூறலாம். 1565ஆம் ஆண்டுக்குப் பிறகு விஜயநகரப் பேரரசு மிக விரைவில் வீழ்ச்சி யடைந்தது.'[3] தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு ஆட்சி செய்த ஆரவீட்டு வமிசத்து வரலாற்றை இராபர்ட் சிவெல் முற்றிலும் அலட்சியம் செய்துவிட்டார். ஏனெனில், முகம்மது காசிம் பெரிஷ்டாவின் வரலாற்றைப் பின்பற்றி அவர் எழுதியுள்ளமையால், 'தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு விஜயநகரப் பேரரசு தன் முற்பகுதி நிலைமையை மீண்டும் பெறவே முடிய வில்லை' என்று பெரிஷ்டா கூறி யுள்ளார். பெரிஷ்டாவின் சொற்கள் விஜயநகரத்திற்குப் பொருந்துமேயொழிய விஜயநகர பேரரசிற்குப் பொருந்தாது. தலைக்கோட்டைப்போருக்குப் பிறகும் 1616ஆம் ஆண்டில் தோப்பூர் என்னு மிடத்தில் பெரும்போர் ஒன்று நடக்கும் வரையில் விஜயநகரப் பேரரசு தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்ததெனக் கூறலாம். ஆரவீட்டு வமிசத்து அரசர் களாகிய திருமலைராயர், ஸ்ரீரங்கராயர், இரண்டாம் வேங்கட தேவராயர், இராமதேவராயர் ஆட்சிக் காலங்களில் விஜயநகரப் பேரரசு நிலைகுலையாமல் இருந்ததென நாம் உணர்தல் வேண்டும்.

இராமராயரின் தம்பி, திருமலைராயர் விஜயநகரத்திலிருந்து பெனுகொண்டாவிற்குத் தம்முடைய தலைநகரத்தை மாற்றிய

[1] R. Sathianathaier. Vol. II. P. 295.
[2] The Aravidu Dynasty. P. 218.
[3] R. Sewell. P. 201.

போதிலும் பீஜப்பூர், ஆமதுநகர், கோல்கொண்டாச் சுல்தான்களுடன் அரசியல் விவகாரங்களில் பங்கு கொண்டு பிறர் குறை கூறுத வகையில் தம்முடைய அயல் நாட்டுறவை நிர்வாகம் செய்தார்.

தலைக்கோட்டைப் போருக்குமுன் பாமினி சுல்தான்களுக்கும், விஜயநகரப் பேரரசர்களுக்கும் இடையே பெரும்போர்கள் நிகழ்வதற்குக் கிருஷ்ணை - துங்கபத்திரை நதிகளுக்கு இடைப்பட்ட இடைதுறை நாடு காரணமாக இருந்தது. இப்பொழுது துங்கபத்திரை ஆற்றுக்குத் தெற்கேயுள்ள நிலப்பகுதி, விஜயநகரப் பேரரசர்களுக்கும். பீஜப்பூர், கோல்கொண்டாச் சுல்தான்களுக்கு மிடையே போர்கள் நடப்பதற்குக் காரணமாயிற்று. விஜய நகரத்தை விட்டு அகன்ற திருமலை ராயரும், அவருக்குப் பின் வந்தோரும் தொடக்கத்தில் பெனுகொண்டாவையும், பிறகு சந்திரகிரி, வேலூர் முதலிய இடங்களையும் தங்களுடைய தலை நகரங்களாகக் கொண்டனர். இவ் விரண்டிடங்களுக்கும் விஜய நகரம் என்ற பெயரும் வழங்கியது. விஜயநகரத்தின் வீழ்ச்சிக்குப் பின் பெனு கொண்டாவை முகம்மதியர்கள் கைப்பற்றிய பிறகு சந்திரகிரியும் வேலூரும் முக்கிய நகரங்களாயின. விஜயநகரத் தரசர்கள். கன்னடியர்களா, ஆந்திரர்களா என்ற ஆராய்ச்சியைக் கிளப்பாமல் தமிழ்நாடுதான் அவர்களுக்கு ஆதர வளித்தது.

கிருஷ்ண தேவராயரும், அச்சுத தேவராயரும் விஜய நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த காலத்தில் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய மூன்று நாயக்கத் தானங்கள் தோன்றின. செஞ்சியைத் துப்பாக்கிக் கிருஷ்ணப்ப நாயக்கரும், தஞ்சாவூரைச் செவ்வப்ப நாயக்கரும், மதுரையை விஸ்வநாத நாயக்கரும் அமைத்தனர் என வரலாற்றுராய்ச்சியாளர் கூறுவர். விஜயநகரம் தலைநகரமாக அமைந்திருந்த பொழுது, மேற்கூறப் பட்ட நாயக்கர்களுக்கும், பேரரசர்களுக்கு மிடையே சுமுகமான உறவு நிலைபெற்றிருந்தது. சந்திரகிரிக்கும், வேலூருக்கும் விஜய நகரப் பேரரசின் தலைநகரம் மாற்றப்பட்ட பொழுது, தமிழ் நாட்டிலுள்ள நாயக்கர்களுக்கும், பேரரசர்களுக்கும் இடையே விரோத மனப்பான்மை தோன்றியது.

தலைக்கோட்டைப் போரின் பயனைத் தெலுங்கு, கன்னடப் பகுதிகளைவிடத் தமிழ்நாடு விஜயநகரப் பேரரசின் இருதயத் தானம் போல் விளங்கியது. விஜயநகரப் பேரரசு மூன்று முக்கியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் திருமலை ராயரின் மூன்று குமாரர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். பெனுகொண்டா ஆந்திரப் பகுதிக்குத் தலைநகராக்கப்பட்டு முதலாம் ஸ்ரீரங்கன்

என்பார் ஆளுநராக நியமனம் பெற்றார். ஸ்ரீரங்கப் பட்டணம் கன்னடப் பகுதிக்குத் தலைநகராக்கப்பட்டு இன்னொரு மகன் இராமன் என்பார் ஆளுநராக நியமனம் பெற்றார். தமிழ் நாட்டிற்குச் சந்திரகிரி தலைநகராக்கப்பட்டு வேங்கட தேவராயர் ஆளுநராக நியமனம் பெற்றார்.

தக்காணத்துச் சுல்தான்கள் அடைந்த பயன்கள் :

தலைக்கோட்டைப் போருக்குச் சற்றுமுன்தான் இஸ்லாமியக் கூட்டுறவு இயக்கம் தோன்றியது. விஜயநகரப் பேரரசின் மீது இருந்த பொறுமையும், இராம ராயர் சுல்தான்களுக்கு இடையே போர் மூட்டி விட்டு வேடிக்கை பார்த்ததனால் ஏற்பட்ட மனவேகமும் அக் கூட்டுறவிற்குக் காரணங்களாயின என்று கூறலாம். விஜயநகரத்தை அழித்த பிறகு மேற்கூறப்பட்ட பொறுமையும் மனவேகமும் மறைந்தன. இதனால், தக்காணத்து நான்கு சுல்தான்களுக்குள் தோன்றிய ஒற்றுமையும், கட்டுப்பாடும் குலைவுற்றன. தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு இராய்ச்சூர், முட்கல் பகுதிகள் பீஜப்பூர்ச் சுல்தானுக்கு மாத்திரம் கிடைத்தன. மற்றவர்கள் அதுகண்டு அழுக்காறு கொண்டு ஒருவரோடு ஒருவர் சச்சரவு செய்து கொண்டனர்; ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டு தங்களுடைய கேடுகளைத் தாங்களே தேடிக் கொண்டனர். இதனால், பின்னர் மொகலாயப் பேரரசர்கள் தக்காணத்தின்மீது படையெடுத்த பொழுது இந்தச் சுல்தானிய அரசுகளை வென்று தங்களுடைய பேரரசில் சேர்த்துக் கொள்வது சுலபமாயிற்று.

போர்த்துகீசியருக்கு உண்டான பயன்கள் :

விஜயநகரம் வீழ்ச்சியடைந்து அப் பேரரசின் பெருமையும், அதிகாரமும் குறையத் தொடங்கியதால் அப் பேரரசுடன் வியாபாரம் செய்து வந்த போர்த்துகீசியரின் வாணிகமும் இலாபமும் குறையத் தொடங்கின. கோவாத் துறைமுகத்தில் இருந்து அராபிய நாட்டுக் குதிரைகளும், வெல்வெட்டுத் துணிகளும், தமாஸ்க், சாட்டின், டபீட்டா முதலிய துணிகளும், அணிகலன்களும், வராகன்களும் செய்வதற்குரிய தங்கமும் விஜய நகரத்திற்கு அனுப்பப்பட்டன என்று பெடரிக் என்ற இத்தாலியர் கூறுவார். விஜயநகரப் பேரரசு பெருமளவிற்குப் பரவியிருந்தது; அதில் வாழ்ந்த மக்கள் மிகுந்த செல்வர்கள்; நவரத்தினங்கள், முத்துகள் முதலிய விலையுயர்ந்த ஆபரணப் பொருள்களையும், அராபிய பாரசீக நாட்டுக் குதிரைகளையும் அதிகமாக வாங்கினர்; மேற்கூறப்பட்ட பொருள்களை விஜயநகரத்திற்கு அனுப்பிவைத்த

தால் கோவா நகரத்திற்கு ஓரிலட்சம்முதல் ஒன்றரை இலட்சம் வரை டியூகட்டுகள் (இத்தாலிய நாணயம்) கிடைத்தன. இப் பொழுது அஃது ஆருயிரமாகக் குறைந்து விட்டது என்று சாசெட்டி என்ற போர்த்துகீசியர் கூறுவர்.

'விஜயநகரப் பேரரசுடன் நாங்கள் ஏராளமான வியாபாரம் செய்து வந்தோம். பலவிதமான ஆபூர்வப் பொருள்களையும், குதிரைகளையும் வியாபாரம் செய்ததனால் எங்களுக்கு ஏராள மான இலாபம் கிடைத்தது. கோவா நகரத்து வியாபாரி களுடைய இலாபங்கள் எல்லாம் இப்பொழுது குறைந்து விட்டன' என்று கூட்டோ (Couto) கூறியுள்ளார்.

'போர்த்துகீசியருடைய தலைநகரமாகிய கோவா நகரத்தின் ஏற்றமும், தாழ்வும் விஜயநகரப் பேரரசின் ஏற்றத்தையும், தாழ்வையும் பொறுத்திருந்தன. விஜயநகரம் வீழ்ச்சியுற்றதால் பாரசீகத்திலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்ததால் கிடைத்து வந்த இலாபம் முற்றிலும் நின்று விட்டது.'

இரண்டாம் பகுதி

13. விஜயநகரப் பேரரசின் அரசியல் முறை

மத்திய அரசாங்கம்: விஜயநகரப் பேரரசின் அரசியல் முறையை மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம், கிராமங்களின் ஆட்சி முறை என்று மூவகையாகப் பிரிக்கலாம். மத்திய அரசாங்கம் (Central Govt.), பேரரசரும் அவருடைய அமைச்சர்களும், மற்றுமுள்ள அலுவலாளர்களு மடங்கிய தாகும். விஜயநகர அரசியல் அமைப்பு, நிலமானிய முறையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டதென ஆராய்ச்சி யாளர் கூறுவர். மொகலாயப் பேரரசில் அமைந்திருந்த மான்சப்தாரி முறையையும் ஐரோப்பாவில் மத்திய காலத்தில் அமைந் திருந்த நிலமானிய முறையையும் விஜயநகர அரசியல் அமைப் போடு ஒப்பிட்டுக் கூறுவர். ஆனால், அவ்வித ஒற்றுமை மாகாண அரசியலில் காணப்பட்டதேயன்றி மத்திய அரசியலில் காணப்பட வில்லை.

பேரரசரின் பதவி: விஜயநகரப் பேரரசர் பதவி பரம்பரைப் பாத்திய முள்ளது. தகப்பனுக்குப்பின் மூத்தமகனும், மூத்த மகன் இல்லாமற் போனால் மற்றப் புதல்வர்களும், அரச வமிசத்தைச் சேர்ந்த மற்றவர்களும் அரசுரிமை யடைவதற்கும், இளவரசர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கும் வாய்ப்புகள் இருந்தன. ஆகையால், விஜயநகர அரசு, பரம்பரைப் பாத்தியம் உள்ள முடியர சாகும். விஜயநகரப் பேரரசருக்குப் பலவிதமான ஒப்பற்ற அதிகாரங்கள் (Prerogatives) இருந்தன. அரசாங்கத்தின் வன்மை அரசனுடைய வன்மையைப் பொறுத்தே இருந்தது. முக்கிய அமைச்சர்களை நியமிப்பதும், போரில் ஈடுபடுவதும், அமைதி உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுவதும், அயல் நாட்டரசர்களோடு உறவு கொள்வதும் சேனைகளுக்குத் தலைமை வகிப்பதும் அரசனுடைய முக்கியக் கடமைகளாயின.

இந்துக்களின் அரசாங்கமாகிய விஜயநகரப் பேரரசில் அரசனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறுவது வழக்கம். முடிசூட்டு விழா நடந்த பிறகுதான் அரசனுடைய பதவி நிச்சயமாகக் கருதப்பட்டது. அயல்நாட்டு வரலாற்றறிஞர்கள் குறிப்புகளும் கல்வெட்டுகளும் முடிசூட்டுவிழா நடந்த விவரங்களைப்பற்றி அறிவிக்கின்றன. முடிசூட்டு விழாவின் பொழுது அமைச்சர்களும்

மற்ற அரசாங்க அலுவலர்களும், பேரரசருக்கு அடங்கிய சிற்றரசர்களும், சமூகத்தில் செல்வாக்குள்ள பிரமுகர்களும் அடங்கிய சபையொன்று கூட்டப்பட்டது. கிருஷ்ண தேவ ராயருடைய முடிசூட்டு விழாவின் போது ஆரவீட்டுப் புக்கராசும், நந்தியால் வேலுகோடு, அவுக் முதலிய நாட்டுச் சிற்றரசர்களும் கூடியிருந்ததாக நாம் அறிகிறோம். அரசனுடைய தலைமைப் புரோகிதர், அரசனுக்குப் புனிதமான நீரைக் கொண்டு மஞ்சன மாட்டி மந்திரங்களை ஓதி அரசமுடியைத் தலையில் சூட்டுவது வழக்கம். இரண்டாம் வேங்கட தேவராயருக்கு அவருடைய புரோகிதர் தாத்தய்யாரியா முடிசூட்டு விழாவை நடத்தி வைத்தார். அச்சுத தேவராயருடைய முடிசூட்டுவிழா திருப்பதி, காளத்தி ஆகிய இரண்டு தேவாலயங்களிலும் தெய்வ சந்நிதியில் நடைபெற்றது. வீர நரசிம்மர் இறந்த பிறகு கிருஷ்ண தேவ ராயருக்குச் சாளுவ திம்மர் என்ற அந்தண அமைச்சர் முடிசூட்டு விழாவை நடத்தினர். சதாசிவராயருக்கு முக்கிய அமைச்சராகிய இராமராயர் முடிசூட்டினர் என்று மைசூர் நாட்டில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கூறுகிறது. முடிசூட்டு விழாவின் போது அற நெறிப்படி அரசாள்வதற்கும், சமயங்களையும், தேவாலயங் களையும் பாதுகாப்பதற்கும் அரசர்கள் சூளுரைப்பது வழக்கம்.

இளவரசுப் பதவி : சோழ, பாண்டிய ஹொய்ச்சள மன்னர் களின் வழக்கப்படி ஆட்சியில் இருக்கும் விஜய நகரத்தரசன் தனக்குப்பின் ஆட்சியை அடைவதற்குரிய இளவரசன் அல்லது யுவராஜாவைத் தேர்ந்தெடுப்பதும் உண்டு. முதலாம் ஹரிஹரன் தமக்குப்பின் தம்முடைய தம்பி முதலாம் புக்கண யுவராஜனைத் தேர்ந்தெடுத்தார் என்று ஒரு செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. அச்சுதராயருடைய முடிசூட்டுவிழாவின் பொழுதே அவருடைய மகன் வேங்கடாத்திரி என்பார் யுவராஜனாக ஒப்புக் கொள்ளப் பட்டார் என்று அச்சுதராய அப்யுதயம் என்னும் நூலில் கூறப் பட்டுள்ளது. இளவரசனுக்குப் போதுமான வயது நிரம்பி அரசியலில் சிறிது அனுபவம் உண்டான பிறகே யுவராஜப் பட்டாபிஷேகம் நடப்பது வழக்கம். ஆனால், அரசபதவிக்குத் தீவிரமான போட்டி இருக்கும் என்று அரசன் கருதினால், மிக்க இளமைப் பருவத்திலேயே யுவராஜனாகப் பதவி யேற்பதும் உண்டு. கிருஷ்ணதேவ ராயருடைய மகன் திருமலை தேவனுக்கு அவனுடைய ஆறுவது ஆண்டிலேயே யுவராஜனாக முடிசூட்டப் பட்டது. இளவரசு பட்டம் பெற்றவர்களுக்கு அரசாளும் அனுபவம் உண்டாவதற்காகப் பல இடங்களில் மகாமண்டலீசு வரர்களாக அவர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

பதவி துறப்பு : ஆட்சிப் பொறுப்பிலிருந்து விடுபடுவதற்கு விரும்பும் அரசர்கள் தங்களுடைய பதவியைத் துறந்து விடுவதும் உண்டு. சாளுவத் தலைவராகிய குண்டா என்பார் தம்முடைய் மகன் சாளுவ நரசிம்மனை வாரிசாக நியமித்துக் காட்டிற்குச் சென்று வானப்பிரத்த வாழ்க்கையை மேற்கொண்டதாக இராஜ நாததிண்டிமர் கூறுவார். கிருஷ்ணதேவராயர் தம்முடைய மகன் திருமலைராயருக்கு முடிசூட்டிவிட்டு அரச பதவியிலிருந்து விலகிய தாக நூனிஸ் கூறும் செய்தி கல்வெட்டுகளில் உறுதி பெற வில்லை.

பாதுகாவல் பதவி (Regeney) : அரச பதவியைத் தகுந்த முறையில் வகிக்க முடியாதவாறு இளமையாக இருக்கும் அரசனுக்குப் பாதுகாவலர் அல்லது ரீஜன்ட் என்பாரும் நியமிக்கப்படுவ துண்டு. விஜயநகர வரலாற்றில் இந்தப் பாது காவலர்கள் பேரரசின் நன்மையை முன்னிட்டு அரச பதவியைக் கைப்பற்றுவதும் நடந்தது. சாளுவ நரசிம்மர் சங்கம வமிசத்து விருபாட்சராயனை (பெத்தேராயனை)த் துரத்திவிட்டு ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றினர். புஜபல வீரநரசிம்மர் இம்மடி நர சிம்மருடைய பாதுகாவலனாக இருந்து பின்னர் அவரை நீக்கி விட்டு அரச பதவியைக் கைப்பற்றினர். ஆனால், நரசநாயக்கர் தாம் உயிரோடு உள்ள வரையில் பாதுகாவலனாகவே பதவி வகித்தார். சதாசிவராயருக்கு இராமராயர் பாதுகாவலனாக இருந்து அரசியல் அலுவல்களை எல்லாம் தாமே கவனித்தார். ஆனால், இராமராயரும் அவருடைய தம்பிகளும், சதாசிவ ராயரைச் சிறையில் அடைத்து வைத்திருந்ததாகவும் பின்னர், பெனுகொண்டாவில் 1567ஆம் ஆண்டில் திருமலைராயரால் கொலை செய்யப்பட்டதாகவும் அயல் நாட்டு வழிப்போக்கர்கள் கூறுவர்.

அரசனுக்குரிய கடமைகள் : தென்னிந்தியாவை வடக்கில் இருந்து படையெடுத்த இஸ்லாமியப் படைகளிடமிருந்து காப் பாற்றுவதற்காகவே விஜயநகரமும் அதைச் சார்ந்த பேரரசும் தோன்றினவெனக் கூறுவதில் உண்மை உண்டு. ஆகையால், கிருஷ்ணை நதிக்குத் தெற்கில் உள்ள நிலப் பகுதியைப் பாமினி சுல்தான்களும், கலிங்க நாட்டுக் கஜபதி அரசர்களும் படை எடுத்து அழிக்காத வண்ணம் பாதுகாப்பது விஜயநகரத்தரசர் களுடைய முக்கியக் கடமை யாயிற்று. நாட்டில் அமைதி நிலவச் செய்து அரசாங்க அலுவலாளர்களும், கள்வர்களும் மக்களைத் துன்புறுத்தாமல் பார்த்து, எளியோரை வலியோர் வாட்டாமல், 'துட்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்' செய்வது மற்றொரு முக்கியக் கடமை யாகும். மூன்றாவதாக, நாட்டில் அறம் நிலைபெறுதற்காக

மறத்தை வீழ்ச்சியடையச் செய்வதும், அறநூல்களில் கூறப்பட்ட வாறு அமைதியை நிலை நாட்டுவதும் அரசனுடைய கடமைகள் ஆகும். உழவும், தொழிலும் மேன்மையுறும்படி செய்து, நாட்டில் உணவு, உடை, இல்லம் முதலியவைகளின் பற்றுக்குறை இல்லாத வாறு எல்லாவிதத் தொழில்களையும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். அபரிமிதமான வரிகளால் குடிமக்கள் அல்லல் உறுத வண்ணம் பாதுகாத்து உள்நாட்டு வெளிநாட்டு வாணிகத்தையும் பெருக்க வேண்டும். நாட்டில் சிவில், குற்றவியல், கிரிமினல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு எளியோரை வலியோர் வாட் டாமல் பாதுகாப்பதற்கு ஏற்ற நியாயம் வழங்கப்பட வேண்டும். விஜயநகர அரசின் கௌரவமும், செல்வமும், பரப்பளவும் குறை யாத வண்ணம் அயல் நாட்டு அரசர்களுடன் உறவு கொண்டு நாட்டின் பெருமையை நிலைநிறுத்துவதும் முக்கியக் கடமை ஆயிற்று.

முடியரசிற்கு ஏற்ற கட்டுப்பாடுகள் : முடியரசு நிலைபெறும் நாடுகளிலும் குடியரசு முறையில் அரசு நடைபெறும் நாடுகளிலும் அரசியல் தலைவர்களின் கட்டுப்பாடற்ற செயல்களைத் தவிர்ப் பதற்கு அரசியல் சட்டங்களும் நிதிச்சட்டங்களும், வரவு செலவுத் திட்டங்களும் அமைந்துள்ளன. இவ் விதச் சட்டங்கள் விஜய நகரப் பேரரசில் இருந்தனவாகத் தெரிய வில்லை. மக்களின் பிரதி நிதிகளால் சட்டங்கள் இயற்றப் பெறுவதும் அக் காலத்தில் இல்லை. ஆகையால், இந்திய வரலாற்றை எழுதிய மேல் நாட்டு ஆசிரியர்கள் விஜயநகரப் பேரரசர்களை 'எவ்விதக் கட்டுப் பாடுமில்லாத வரம்பற்ற ஆட்சி புரியும் மன்னர்கள்' எனக் கூறுவர். இக் கூற்றில் சிறிது உண்மையிருந்த போதிலும் விஜய நகர அரசர்களைக் கொடுங்கோல் மன்னர்கள் என்று கூறுவதற்கு இடம் இல்லை. அரசர்களாலும், மக்களுடைய பிரதிநிதிகளாலும் இயற்றப்பெற்ற சட்டங்கள் இல்லாமல் போனலும், வேதங்கள், சுமிருதிகள், தர்ம சாத்திரங்கள் முதலிய அறநூல்களின் துணை கொண்டே அரசியல் நடைபெற்றது.

இரண்டாவதாக, விஜயநகரப் பேரரசில் நானுதேசிகள், நாட்டுச் சபைகள், அய்யாவோல் சபைகள், தொழிற் சங்கங்கள், வலங்கை, இடங்கைச் சாதியார்களின் அமைப்புகள் முதலியவை நிலைபெற்றிருந்தன. இவ் விதச் சமூக அமைப்புகளின் விருப்பத் திற்கு எதிராக அரசன் எந்த வரிகளையும், தண்டனைகளையும் விதிக்க முடியாது. வடவார்க்காட்டில் உள்ள விரிஞ்சிபுரம் கோவிலில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில், பலவித அந் தணர்களுக்குள் திருமணம் நடைபெற வேண்டிய விதிகளைப்

பற்றிய பழக்க வழக்கங்கள் இன்னவை எனக் கூறப் பெற்று உள்ளன. இப் பழக்க வழக்கங்களை அரசாங்கம் ஒப்புக் கொண்டு அவற்றின்படியே சமூக அமைதி பாதுகாக்கப்பட்டது.

மூன்றுவதாக நிலஅளவு, கிரயம், விக்கிரயம், வரி விதித்தல் முதலியவற்றிலும் பல பழக்க வழக்கங்கள் நிலைபெற்றிருந்தன. பதினைந்து அடி நீளமுள்ள 'மூவராயன் கோல்' என்ற அளவு கோலின்படி நிலங்களை அளக்க வேண்டும். அதன்படி நிலத்தை அளக்காதவர்கள் சிவத் துரோகம், கிராமத்து ரோகம், நாட்டுத் துரோகம் முதலிய குற்றங்களைச் செய்தவராவர் எனக் கருதப் பெற்றனர். கல்வெட்டுகளில் தொகுத்துக் கூறப்பெற்ற வரிகள் எல்லாம் முற்காலத்தில் வழங்கிய வரிகளாகவே தெரிகின்றன. சமூகக் கட்டுப்பாட்டின் படியே நிலங்கள் கிரயம் செய்யப் பெற்றன. இவற்றிற்கு எதிராக அரசாங்க அலுவலாளர்கள் நடந்தால், மக்கள் தங்களுடைய இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்குக் குடிபெயர்ச்சி செய்து தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

நான்காவதாகப் பேரரசர்களுடைய அரசவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் அரசனுடைய எதேச்சாதிகாரத்தைக் கண்டிப்பதும் வழக்க மாகும். அரசவையில் முக்கிய அமைச்சராகிய பிரதானியைக் கலந்தே அரசர்கள் தங்கள் ஆட்சியை நடத்தினர். கிருஷ்ணராஜ விஜயமு என்ற நூலில், கிருஷ்ண தேவராயர் தம்முடைய அமைச்சர்களின் சொற்படியே போர், அமைதியுடன் படிக்கை, வரி விதித்தல், வரிகளை நீக்குதல் முதலிய அரசியல் காரியங்களைச் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

ஆகையால், விஜயநகரப் பேரரசர்கள் கட்டுப்பாடற்ற அரசர்கள் என்று கூறுவதில் உண்மை யில்லை. மக்களுடைய நலனுக்காகவே அரசாங்கம் நடைபெற வேண்டு மென்ற கொள்கையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு விஜயநகர முடியாட்சி நடந்ததெனக் கூறலாம். 'தாயொக்கும் அன்பில் தவமொக்கும் நலம் புயப்பில்' என்ற கொள்கையும் நிலைபெற்றிருந்தது. இரண்டாம் ஹரிஹரனுடைய கல்வெட்டு ஒன்றில், 'சமூகத்தின் பழைய வழக்கங்களை அனுசரித்துத் தன்னுடைய குடிகளைச் சேய்நலம் பேணும் தாய் போல்' பாதுகாத்தான் எனக் கூறப்பட்டுள்ளது. ஆமுக்த மால்யதா என்னும் நூலில், 'மக்களுடைய நலனையும், நாட்டின் நலனையும், பாதுகாக்கும் அரசனையே மக்கள் விரும்புவர்' என்று கிருஷ்ண தேவராயர் கூறுவார். அல்லசானி பெத்தண்ணாவும் சுவரோசிச மனுவைப் பற்றிக் கூறும் பொழுது, 'தன்னுடைய குடிகளைப் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தை

களைப் பாதுகாப்பது போல் பாதுகாத்தார்' எனக் கூறுவார். பேரரசர் அசோகர் தம்முடைய கல்வெட்டு ஒன்றில், 'என்னுடைய நாட்டுக் குடிகள், என்னுடைய குழந்தைகள் போன்றவர்கள். என்னுடைய குழந்தைகள் இம்மையிலும், மறுமையிலும் நலம் பெறவேண்டும் என்பது என்னுடைய பேரவா. அவர்களைப் போலவே என்னுடைய குடிமக்களும் இம்மையிலும், மறுமையிலும் நல்வாழ்வு பெறவேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும்.' எனக் கூறுவார். இக் கொள்கையைப் பின்பற்றியே விஜயநகரப் பேரரசர்களும் தங்களுடைய ஆட்சியை நடத்தினர் எனக் கூறலாம்.

பேரரசு சபை (Imperial Council):

மனுசரிதம் என்னும் நூலில் 'கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் அமைந்திருந்த பேரவையில் அமர நாயக்கர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும், சிற்றரசர்களும், இளவரசர்களும், தளவாய் முதலிய அரசியல் அலுவலாளர்களும், அயல் நாட்டுத் தூதர்களும் அங்கம் வகித்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. ஆமுக்த மால்யதாவில் இவ் விதப் பேரவையைப் பற்றிக் கிருஷ்ண தேவராயரும் கூறுவார். இந்தப் பேரவையை ஆங்கில அரசியலில் அமைந்துள்ள பிரிவிகௌன்சில் (Privy Council) என்னும் சபைக்கு ஒப்பிடலாம் எனத் திரு. T. V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார். நார்மானிய அரசர்கள் காலத்திய 'கம்மயூன் கன்சிலியம் (Commune Concilium) என்ற சபைக்கும் இதை ஒப்பிடலாம். நிலமானியப் பிரபுக்களின் ஆதரவைப் பெறுவதற்காக முதலாம் வில்லியம் மேற்கூறப் பெற்ற சபையை அமைத்தது போல, விஜயநகரப் பேரரசின் நிலமானியப் பிரபுக்களாகிய அமர நாயக்கர்கள், திறை செலுத்தும் சிற்றரசர்கள், அயல்நாட்டு அரச தூதர்கள் முதலியோருடைய ஆதரவைப் பெறுவதற்கு இச் சபையை அமைத்திருக்க வேண்டும்.

அமைச்சர்கள் சபை (Council of Ministers):

மேலே கூறப்பட்ட பேரவை அன்றியும். கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள மந்திரி பரீஷத் என்பதை யொத்த அமைச்சர் சபை யொன்றும் விஜயநகர மத்திய அரசாங்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அச்சுதராய அப்யூதயம் என்ற நூலில் இந்த அமைச்சரவை வேங்கடவிலாச மண்டபத்தில் அடிக்கடி கூடுவது உண்டு என்றும், இது நிலையான சபையென்றும் கூறப்பட்டுள்ளன. நூனிஸ், பார்போசா என்ற இருவரும் இந்த அமைச்சர்சபை கூடிய இடத்தைப்பற்றி விவரித்துள்ளனர். இந்த அவையில் எத்தனை அமைச்சர்கள் இருந்தனர் என்பதைப் பற்றி

உறுதியாகக் கூற முடிய வில்லை. இருபதுக்கு மேற்படாமல் எட்டுப் பேருக்குக் குறையாமல் இந்தச் சபையின் எண்ணிக்கை இருந்த தெனக் கூறலாம். மராட்டியசிவாஜி மன்னர் காலத்தில் அமைக்கப் பெற்ற அஷ்டப்பிரதான் சபை இதைப் பின்பற்றி அமைக்கப் பட்டது போலும்! பிரதானி என்ற அமைச்சர் இச் சபைக்குத் தலைமை வகித்தார். இந்தப் பிரதானிக்கு மகாப் பிரதானி, சிரப்பிரதானி, மகாசிரப்பிரதானி, தளாதிகாரி, தன்னுயகர், மகா சமந்தாதிபதி, சமந்தாதிகாரி என்ற பெயர்களும் வழங்கின. அரசாங்க இலாக்காக்களின் அதிகாரிகளும் இச் சபையின் அங்கத் தினர்களாக இருந்தனர். முக்கிய அமைச்சராகிய மகாப்பிர தானியும், அவருக்கு அடங்கிய அமைச்சர்களும், உபப்பிரதானி களும், இலாக்கா அதிகாரிகளும், அரசனுடைய நெருங்கிய உற வினர்களும் இக் குழுவில் இடம் பெற்றனர். அரச குரு அல்லது புரோகிதரும் இதில் அங்கம் வகித்தார். முக்கிய அமைச்சராகிய மகாப்பிரதானி இச் சபைக்குத் தலைமை வகித்தமையால் அவருக்குச் சபாநாயகர் என்ற பெயரும் வழங்கியது.

இந்த அமைச்சர் குழுவில் நடைபெற்ற விவகாரங்கள் மிக்க இரகசியமாக இருந்தன. இதில் அங்கம் வகித்த அமைச்சர்கள் நல்ல குடியில் பிறந்தவர்களாகவும், சொல்வன்மையும், செயல் ஆற்றும் திறமையும் உள்ளவர்களாகவும் இருந்தனர். சில அமைச் சர்கள் குடும்ப வாரிசு (Hereditary) முறையில் அமைச்சர்களாக இருந்ததாகவும் திரு. மகாலிங்கம் அவர்கள் கூறுவார். எடுத்துக் காட்டாக முத்தப்ப தண்டநாதர் என்பார் முதலாம் புக்கருக்கும் இரண்டாம் ஹரிஹரருக்கும் முக்கிய அமைச்சராக இருந்தார். இரண்டாம் ஹரிஹரர் தம்முடைய தகப்பன் முதலாம் புக்கர் இடமிருந்து கர்நாடக அரசையும் முத்தப்ப தண்டநாயகரையும் பெற்றதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த அமைச்சர்கள் ஆயுட்காலம் வரையில் நியமனம் செய்யப் பெற்றனரா, குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு நியமனம் பெற்றனரா என்பது விளங்க வில்லை. பிரதானி என்ற முக்கிய அமைச்சருக்குத் தண்ட நாயகர் என்ற பெயரும் வழங்கியதால் சேனாதிபதியின் அலுவலையும் பார்த்தார் என்று சிலர் கருதினர். சேனாதிபதிக்குத் தளாதிகாரி, தளவாய், சர்வ சைன்யாதிபதி என்ற வேறு பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றமையால், தண்ட நாயகர் என்னும் பெயர் அரசியல் அதிகாரம் செலுத்தும் அமைச்சரையே சேர்ந்த தாகும். சாளுவ திம்மருக்கு மகாப்பிரதானி என்ற பெயரோடு தந்திர நாயகர் என்ற பெயரும் வழங்கியது. தந்திரம் என்னும் சொல் நிருவாக அதிகாரத்தையும், மந்திரம் என்னும் சொல் அறிவுரை வழங்குவதையும் குறிக்கும். பிரதானிகளுக்குக்

காரிய கர்த்தர்கள் என்ற பெயரும் வழங்கியது. சிற்சில சமயங்களில் மகாப்பிரதானி அல்லது தண்ட நாயகர்கள் சேனைகளை நடத்தி, நாடுகளைப் பிடிப்பதிலும் ஈடுபட்டனர். இரண்டாம் தேவராயருடைய தண்ட நாயகராகிய இலக்கண்ணன் என்பார் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்றார். கிருஷ்ண தேவராயருடைய பிரதானி சாளுவ திம்மர் பிரதாபருத்திர கஜபதியோடு புரிந்த போர்களில் பெரும்பங்கு கொண்டார். போர்க் காலங்களில் காலாட் படைகளையும், குதிரை வீரர்களையும் யானைகளையும் கொடுத்தும் அரசருக்கு உதவி செய்தனர். பிரதானிகள் அரசர்களுக்கு இராணுவ சேவை செய்தமையை, மொகலாய மன்னர்களுக்கு மான்சப்தார்கள் செய்த இராணுவ உதவியோடு ஒப்பிடுவர் சில ஆராய்ச்சியாளர்கள்*. உபப்பிரதானி மகாப்பிரதானிக்கு உதவியாக இருந்தார். சாளுவ திம்மருக்குச் சோமராசர் என்பவர் உபப்பிரதானியாகவும், சாலகம் திருமலைராயருக்கு, வீர நரசிம்ம ராயர் என்பவர் உபப்பிரதானியாகவும் அலுவல் பார்த்தனர்.

விஜயநகர அரசு பணி அமைப்பு :

அரசுபணி அமைப்பில் பல இலாக்காக்கள் இருந்தமை பற்றிப் பல ஆதாரங்கள் உள்ளன. விஜயநகரத்தில் அரசு பணி அமைப்புகள் இருந்த இடத்தைப்பற்றி அப்துர் ரசாக் பின்வருமாறு கூறுவார். 'விஜயநகர அரண்மனையின் வலப் பக்கத்தில் திருவான்காஞ என்ற கட்டடம் இருந்தது. நாற்பது தூண்கள் அமைத்து அக் கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அதைச் சுற்றிப் படி அடுக்கு வரிசை மாடங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. அம் மாடங்களில் அரசாங்க ஆவணங்கள் அடுக்கப் பெற்று அவற்றிற்கு எதிரே எழுத்தர்கள் உட்கார்ந்திருந்தனர்.' அந்த அரசு பணி யமைப்பில் பின்வரும் அரசாங்க அலுவலாளர்கள் பணிபுரிந்தனர்.

(1) இராயசர் : இராயச சுவாமி என்னும் தலைமை அதிகாரியின் கீழ்ப் பல இராயசர்கள் அல்லது ஓலை எழுதுவோர் அலுவல் பார்த்தனர். இராயசம் கொண்டம ராசய்யாவும் அவருடைய மகன் திம்ம ராசய்யாவும் பேரன் அப்பய்ய ராசய்யாவும் இராயசம் வேலை பார்த்தமையால் இப் பட்டத்தை மேற்கொண்டனர்.

நூனிஸ் இவர்களைக் காரியதரிசிகள் என்றழைத்துள்ளார். சோழ மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் விளங்கிய திருவாய்க் கேள்வி என்னும் அலுவலாளர்களுக்கு இவர்களை ஒப்பிடலாம்.

(2) காரணீகம் : காரணீகர் அல்லது வரவு செலவுக் கணக்கு எழுதுவோர்கள் ஒவ்வோர் இலாக்காவிலும் இருந்தனர். அரச

*Dr. T.V.Mahalingam. Admn and Social. Life. Vol. I. P.36

னுடைய அந்தப்புரத்திற்குக் காரணீகம் என்ற கணக்கர் இருந்தார். இம்மடி நரசிம்மர், கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலங்களில் மாஞக ராசய்யா என்பவர் வாசல் காரணீகமாக அலுவல் பார்த்தார்.

(3) சர்வ நாயகர்: விஜயநகர அரண்மனையில் பலவித காரியங்களைக் கவனித்து வந்தவர் சர்வ நாயகர் என்ற அதிகாரி யாவார். அவருக்கு அடங்கி அடைப்பம், பஞ்சாங்கதவீரு, சாசனுச் சாரியர் முதலிய அலுவலர்கள் இருந்தனர். சுயம்பு, சபாபதி முள்ளந்திரம் திண்டிமர் என்போர் கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் எழுதுவிக்கும் சிறந்த கவிஞர்களாக விளங்கினர்.

(4) முகப் பாவாடை: இவர்கள் அரண்மனையில் இருந்த ஆடைகள், சமக்காளங்கள், திரைச் சீலைகள் முதலியவற்றைப் பாதுகாத்து அவை வேண்டிய சமயத்தில் கிடைக்கும்படி செய்யும் பொறுப்பு உடையவராவர்.

(5) முத்திரை கர்க்கர: அரசாங்க முத்திரையைப் பாது காத்து அரசாங்கப் பத்திரங்களில் அதன் பிரதியைப் பதிக்கும்படி செய்வது இவருடைய கடமையாகும். கல்வெட்டுகளில் இவருக்கு முத்திரை கர்த்தா அல்லது முத்திராதிகாரி என்ற பெயர் வழங் கியது. ஆக்ஞதாரகா, ஆக்ஞ பரிபாலகர் என்ற இருவர் முத் திரை கர்த்தாவிற்கு உதவியாக இருந்தனர்.

(6) வாசல் காரியம்: அரண்மனையின் நுழைவு வாயில்களைப் பாதுகாத்தவர் வாசல் காரியமாவர். பீயசும், நூனிசும் இவரைப் 'பாதுகாவல் தலைவர்' என்று கூறியுள்ளனர். இவர் போரிலும் ஈடுபடுவ துண்டு. கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் இராய்ச்சூர் முற்றுகையில் காம நாயக்கர் என்ற வாசல் காரியம் தம்முடைய மூப்பதினுயிரம் வீரர்களோடும், ஆயிரம் குதிரை வீரர்களோடும் பங்கு கொண்டார் என நூனிஸ் கூறுவர்.

(7) இராய பண்டாரம்: விஜயநகர அரண்மனையில் பெரிய பண்டாரம், சிறிய பண்டாரம் என்ற இரு கருவூலங்கள் இருந்தன வாகத் தெரிகிறது. பெரிய கருவூலத்திற்கு வைர பண்டாரம் என்றும், சிறிய கருவூலத்திற்குத் தங்கக் (Golden) கருவூல மென்றும் பெயர்கள் வழங்கின. இந்த இரண்டு கருவூலங்களின் வரவு செலவுக் கணக்குகளை ஆராய்வதற்குப் பண்டாரதர என்ற அலுவலாளர் இருந்தார்.

(8) தர்ம பரிபாலனத் தலைவர்: தர்மாசனம் தர்மய்யா என்ற அலுவலாளர் வீரநரசிம்ம ராயரிடம் அலுவல் பார்த்ததாக இராய வாசகம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. அந்தணர்

களுக்கும், தேவாலயங்களுக்கும், மடங்களுக்கும் அளிக்கப்பட்ட பிரமதேயம், தேவதானம், திருவிளையாட்டம், மடப்புறம் முதலிய இனம் நிலங்களைப் பற்றிய தகவல்களை வைத்திருந்தவர் தர்மாசன அதிகாரியாவர். இவருக்குத் தர்ம பாருபத்தியகாரர் என்ற பெயரும் வழங்கியது. அளிய ராமராயர் காலத்தில் தர்ம பாரு என்ற பத்தியகாரராக அலுவல் பார்த்தவர், வித்தள சுவாமி கோவிலுக்குக் கிருஷ்ண தேவராயரால் கொடுக்கப்பட்ட தான சாசனம் ஒன்றைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி அக் கோவில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்[1].

(9) அட்டவணை: விஜயநகர அரசு பணி அமைப்பில், அரசாங்கத்தின் வருமானத்தை மேற்பார்வை செய்த இலாக்கா விற்கு அட்டவணை என்ற பெயர் வழங்கியது. இந்த அலுவல கத்தில் பேரரசிலிருந்த இராச்சியங்கள், நாடுகள், சீமைகள், தலங்கள், கிராமங்கள் முதலியவற்றின் எல்லைகளும், தன்மை களும் இன்னவை என எழுதப் பெற்ற ஏடுகள் வரிசைக் கிரமமாக அடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கிராமத்தில் நிலம் உடையவர் களுடைய பெயரும், நிலத்தின் பரப்பளவும், விளைச்சலும், அந் நிலத்திற்குரிய வரியும் அவ் வேடுகளில் எழுதப் பெற்றிருந்தன. தேவதானம், பிரமதேயம், மடப்புறம் முதலிய சர்வமானிய இறையிலி நிலங்களுக்குத் தனி ஏடுகள் இருந்தன. அமர நாயக்கர் கள் வைத்திருக்க வேண்டிய கரி, பரி காலாட் படைகளின் விவரங் கள் தனியாக எழுதப் பெற்றிருந்தன. 1522ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு சாசனத்தின்படி இராயச சுவாமி என்ற அதிகாரி, அட்டவணை இலாக்காவிற்குத் தலைமை வகித்தார்[2].

(10) ஒற்றர்கள் இலாக்கா (Espionage Department): பதினாறும் நூற்றாண்டில் விஜயநகரத்து அரசர்களுக்கும், விஜயபுரி, ஆமது நகரம், கொல் கொண்டா, கலிங்கம் முதலிய நாட்டு அரசர் களுக்கும் இடையே அடிக்கடி போர்கள் நடைபெற்றன. இந் நாடுகளுக்கு மாறுவேடத்துடன் சென்று இந் நாட்டு இராணுவ பலத்தை அறிந்து கொள்வதற்கு விஜயநகரத்தரசர்கள் ஏராள மான ஒற்றர்களை நியமித்திருந்தனர். இன்னும், உள் நாட்டிலேயே அமர நாயக்கர்களுடைய நன்றியையும் அரச பக்தியையும் அறிந்து கொள்வதற்கு ஏற்ற ஒற்றர்களும் இருந் தனர். இவ் வொற்றர்கள் அன்றியும் அயல்நாட்டரசர்களுடைய பிரதிநிதிகளாகிய தூதர்களும் விஜயநகரத்தில் இருந்தனர். இவர்களுக்குத் தாணபதிகள் (Sthanapatis) என்ற பெயர் வழங்கியது. ஒற்றர்களும், தாணபதிகளும் பேரரசருடைய நேரடியான அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தனர்.

[1] N. Venkataramanayya. Studies. P. 110.
[2] Epigraphia carnatica. Vol. XII. P. 69.

14. மாகாண அரசியல்

(Provincial Government)

இரண்டாம் தேவராயர் காலத்தில் விஜயநகரப் பேரரசு தெற்கே இலங்கைத் தீவிலிருந்து வடக்கே குல்பர்கா வரையில் பரவியிருந்த தெனவும், வடக்கே வங்காளத்திலிருந்து தெற்கே மலையாளம் வரையில் பரவியிருந்த தெனவும் அப்துர் ரசாக் கூறியுள்ளார். முதலாம் புக்கருடைய மகனுகிய குமார கம்பணர் சம்புவராய நாடாகிய இராஜகம்பீர இராஜ்யத்தையும் (படைவீடு). மதுரைச் சுல்தானிய அரசையும் 1363 முதல் 1371-க்குள் விஜயநகர அரசோடு சேர்த்தார். 1385இல் இரண்டாம் ஹரிஹரனுடைய மகனுகிய விருபாட்சன் அல்லது விருபண்ண உடையார் இலங்கையை வென்றதாக நாம் அறிகிறோம். இரண்டாம் தேவராயர் ஆட்சியில் இலக்கண்ண தண்டநாயகர் மதுரையில் தென் சமுத்திராதிபதி என்ற பெயருடன் ஆட்சி புரிந்தார். இலங்கை, பழவேற்காடு, கொல்லம் முதலிய இடங்களிலிருந்து திறைப் பொருள்களைப் பெற்றதாகவும் நாம் கேள்விப்படுகிறோம். கிருஷ்ண தேவராயர் உம்மத்தூர்த் தலைவனையும், கஜபதியரசனையும் வென்றதனுல் கிருஷ்ணுநதி விஜயநகரப் பேரரசின் வடக்கு எல்லையாயிற்று. இராய்ச்சூர், முதுகல் பகுதிகளும் விஜயநகரப் பேரரசோடு சேர்க்கப்பட்டன. அச்சுத தேவராயர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசு பின்வரும் பதினேழு இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன : (1) ஹம்பி-ஹஸ்திஞபதி, (2) பெனுகொண்டா, (3) குத்தி, (4) கந்தனவோலு, (5) ஸ்ரீசைலம், (6) இராயதுர்க்கம், (7) பரசூர், (8) அரகா, (9) கொண்டவீடு, (10) உதயகிரி, (11) சந்திரகிரி, (12) முல்பாகல், (13) படைவீடு, (14) திருவதிகை, (15) ஸ்ரீரங்கப்பட்டணம், (16) இராய்ச்சூர், (17) முதுகல்.*

மேற்கூறப் பெற்ற இராச்சியங்களில் தமிழ்நாட்டிலிருந்தவைகளுக்கு மண்டலங்கள் என்ற பெயரும் சில சமயங்களில் வழக்கத்தில் இருந்தது. பேரரசின் வடகிழக்குப் பகுதியில் உதயகிரி இராச்சியம் அமைந்திருந்தது. இப்பொழுது நெல்லூர், கடப்பை மாவட்டங்கள் கொண்ட பகுதி உதயகிரி என வழங்கப்பட்டது. உதயகிரி இராச்சியத்திற்கு மேற்கில் பெனுகொண்டா

*N. Venkataramanayya. Studies. P. 150.

இராச்சியமும், அதற்குத் தெற்கில் சந்திரகிரி இராச்சியமும் அமைந்திருந்தன. வடவார்க்காடு மாவட்டமும், சேலம் மாவட்டங்களின் ஒரு பகுதியும் சேர்ந்து படைவீடு இராச்சியம் என வழங்கப்பட்டது. படைவீடு இராச்சியத்திற்குத் தெற்கே திருவதிகை இராச்சியமும், மேற்கில் முலுவிராச்சியம் அல்லது முல்பாகல் இராச்சியமும் அமைந்திருந்தன. மைசூர் நாட்டில் ஷிமோகா தென்கன்னடப் பகுதிகள் அடங்கிய பரகூர் இராச்சியமும், அதற்கு வடக்கில் சந்திர குத்தி அல்லது குத்தி இராச்சியமும் இருந்தன. மங்களூரைத் தலைநகரமாகக் கொண்டது துளு இராச்சியமாகும்.*

தென்னிந்தியாவில் மேற்குக் கடற்கரைப் பகுதியிலும், தென் பகுதியிலும் விஜயநகரப் பேரரசர்களுக்கு அடங்கிய கொல்லம், கார்கால், தென்காசிப் பாண்டி முதலிய சிற்றரசு நாடுகள் இருந்தன. கள்ளிக் கோட்டைச் சாமொரின் அரசர் விஜயநகரத்திற்கு அடங்கிய சிற்றரசராக இருந்ததாகத் தெரிய வில்லை.

மண்டலங்களும். இராச்சியங்களும் :

விஜயநகரப் பேரரசிற்கு முன்னிருந்த சோழப் பேரரசு ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவையாவன : (1) ஜெயங்கொண்ட சோழமண்டலம் (தொண்டைநாடு), (2) சோழமண்டலம், (3) மகதை மண்டலம், (4) அதிராஜ ராஜ மண்டலம் (கொங்கு நாடு), (5) இராஜராஜ பாண்டி மண்டலம் (பாண்டிய நாடு). விஜயநகர ஆட்சியில் மண்டலம் என்ற பெயருக்குப் பதிலாக இராச்சியம் என்ற பெயர் வழங்கலாயிற்று. இராச்சியத்தின் பரப்பளவு மண்டலத்தை விடச் சிறியதாகும். ஆனால், கல்வெட்டுகளில் மண்டலம் என்ற பெயரும் வழக்கத்தில் இருந்தது. இன்றும் தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம் என்ற பெயர்கள் வழக்கத்தில் இருந்தாலும் அவை அரசியல் பிரிவைக் குறிப்பதாகக் கொள்ள முடியாது. மண்டலங்களுக்குப் பதிலாகச் சந்திரகிரி இராச்சியம், படைவீடு இராச்சியம், திருவதிகை இராச்சியம், சோழ இராச்சியம், பாண்டிய இராச்சியம் என்று ஐந்து பிரிவுகளாகத் தமிழ் நாடு பிரிக்கப்பட்டிருந்தது. இராச்சியங்களில் சில மகாராச்சியங்கள் என வழங்கப்பட்டன. எடுத்துக்காட்டாகச் சந்திரகிரியும், படைவீடும் மகாராச்சியங்கள். திருவதிகை, இராச்சியம் என்று தான் வழங்கப்பட்டது. இராச்சியங்கள் வளநாடுகளாகவும், வளநாடுகள் நாடுகளாகவும் பிரிவுற்றிருந்தன. நாடுகளுக்குக் கூற்றம் அல்லது கோட்டம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டன.

*Dr. T. V. M. P. 185.

தொண்டை மண்டலத்தில் வள்நாடு என்ற பிரிவு கல்வெட்டுகளில் கூறப்படவில்லை. அங்குக் கோட்டம் என்ற பெயரே வழங்கப்பட்டது. கோட்டம் அல்லது கூற்றம் என்ற பிரிவைத் தற்காலத்தில் வழங்கும் வட்டத்திற்கு ஒப்பிடலாம். நாடு அல்லது கூற்றத்திலிருந்த கிராமப் பகுதிகளுக்குப் பற்று என்ற பெயரும் கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றது. எடுத்துக்காட்டாகச் செங்கழுநீர்ப்பற்று (செங்கற்பட்டு), அத்திப்பற்று (அத்திப்பட்டு), வரிசைப்பற்று (வரிசைப்பட்டு) முதலியன வாகும். கோட்டம் அல்லது நாடு என்னும் பகுதி ஐம்பது கிராமங்கள் அடங்கிய பகுதியாகவும் பிரிவுற்றிருந்தது. இப் பகுதிகளுக்கு ஐம்பதின் மேலகரங்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது. ஐம்பது கிராமங்களுக்குத் தலைமையிடமாக இருந்த இடத்தில் சாவடி என்ற அலுவலகம் இருந்ததாகத் தெரிகிறது. ஐம்பதின் மேலகரங்கள் சில கிராமங்கள் கொண்ட பிடாகை எனவும், தனிப்பட்ட அகரம் அல்லது மங்கலம் எனவும் பிரிவுற்றிருந்தன. ஐம்பதின் மேலகரங்கள் என்ற பிரிவில் பெரிய கிராமங்களாக இருந்தவை தனியூர் என வழங்கப்பெற்றன. எடுத்துக்காட்டாகத் தொண்டை மண்டலத்துக் காளியூர்க் கோட்டத்தில் உத்தரமேரூர் என்ற தனியூரும், படுவூர்க்கோட்டத்தில் காவிரிப்பாக்கம் என்ற தனியூரும், வாவலூர் நாட்டில் திருவாமாத்தூர் என்ற தனியூரு மிருந்ததாகக் கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளன. இந்தத் தனியூர்களில் அந்தணப் பெருமக்களடங்கிய மகாசபையும், தனியான அரசாங்கக் கருவூலமும் இருந்தனவாகத் தெரிகிறது.

விஜயநகரப் பேரரசில் தெலுங்கும், கன்னடமும் வழங்கிய பகுதிகளில் வேறுவிதமான அரசியல் பிரிவுகள் அமைந்திருந்தனவாகத் தெரிகிறது. மேற்கூறப் பெற்ற இரு பகுதிகளிலும் கருங்கல் அல்லது செங்கல் கொண்டு அமைக்கப்பட்ட கோட்டைகளே மையமாகக் கொண்டு இராச்சியங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. எடுத்துக்காட்டாகக் கொண்டவீடு, உதயகிரி, பெனுகொண்டா, சந்திரகுத்தி, இராயதுர்க்கம், இராய்ச்சூர் முதலியனவாகும். கன்னட மொழி வழங்கிய கர்நாடக தேசத்தில் சில கிராமங்கள் சேர்ந்த பிரிவிற்கு ஸ்தலம் என்ற பெயர் வழங்கியது. பல தலங்கள் சேர்ந்த பிரிவு சீமை எனப்பட்டது. பெரிய சீமை, சிறிய சீமை என்ற பிரிவுகளும் இருந்தன. பல சீமைகள் கொண்ட பகுதி நாடு எனவும் வனிதா அல்லது ஸ்ரீதா எனவும் வழங்கப் பட்டது. பல வனிதா அல்லது வலிதாக் கொண்ட பிரிவு இராச்சியம் எனப்பெயர் பெற்றது. தெலுங்கு நாட்டிலும் மேற்கூறப் பட்ட தலம், சீமை, நாடு, வனிதா அல்லது வெந்தே (Vente) இராச்

கியம் என்ற பிரிவுகள் இருந்தனவாக நாம் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

மகாமண்டலீசுவரர்கள் அல்லது மாகாண ஆளுநர்கள் : விஜயநகர அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இராச்சிய ஆளுநர்களாக அல்லது மகாமண்டலீசுவரர்களாக நியமனம் செய்யப் பெற்றனர். முதலாம் ஹரிஹரராயர் ஆட்சியில் அவருடைய தம்பியாகிய மாரப்பன், சந்திர குத்தி என்னும் இடத்தைத் தலை நகராகக் கொண்ட அரக இராச்சியத்திற்கு ஆளுநராக நியமிக்கப் பெற்றிருந்தார். கம்பணர் என்ற இன்னொரு தம்பி உதயகிரி இராச்சிய ஆளுநராக நியமிக்கப் பெற்றிருந்தார். முதலாம் புக்கருடைய மகன் குமார கம்பணன், முல்பாகல் இராச்சியத்திற்கும் ஆளுநராக இருந்து கொண்டு சம்புவராய நாட்டையும், மதுரைச் சுல்தானிய அரசையும் வென்று விஜயநகரப் பேரரசோடு சேர்த்தான். இரண்டாம் ஹரிஹர ராயருடைய மகனுகிய விருபண்ண உடையார் தொண்டை மண்டலம், சோழ, பாண்டிய மண்டலங்களுக்கு ஆளுநராகப் பணியாற்றி, இலங்கைத் தீவின்மீது படையெடுத்து வென்றதாகவும் அறிகிறோம். அவருடைய தம்பி தேவராயர்-I விஜயநகரப் பேரரசனுவதற்குமுன் உதயகிரி இராச்சியத்திற்கு மகாமண்டலீசுவரனுகப் பணியாற்றினர். வீரவிஜயராயரும், அவருடைய மகன் ஸ்ரீகிரிநாத உடையாரும் முல்பாகல் இராச்சியத்தின் ஆளுநராக இருந்தனர்.

சாளுவ, துளுவ வமிசத்து அரசர்கள் விஜயநகரத்தை ஆண்ட பொழுது போதிய அளவிற்கு அரசிளங் குமாரர்கள் இன்மையால் அரச குடும்பத்தைச் சேராதவர்களும் இராச்சியங்களின் ஆளுநர்களாக நியமனம் பெற்றனர். ஆரவீட்டு வமிசத்தைச் சேர்ந்த திருமலை ராயர், உதயகிரிக்கு ஆளுநராக இருந்த பொழுது கொண்டவீடு, வினுகொண்டா முதலிய இடங்களைப் பிடித்துத் தம்முடைய அதிகாரத்தைப் பெருக்கினர். திருமலைராயர் தம்முடைய குமாரர்களாகிய ஸ்ரீரங்கராயரைப் பெனுகொண்டா இராச்சியத்திற்கும், இராமன் என்பாரை ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கும், வேங்கடன் என்பாரைச் சந்திரகிரிக்கும் ஆளுநர்களாக நியமித்து இருந்தார். சங்கம வமிசத்து அரச குமாரர்கள் உடையார் என்ற பட்டத்தை மேற்கொண்டனர். இராச்சிய ஆளுநர்களாகிய மகாமண்டலீசுவரர்களுக்குத் தண்டநாயகர் அல்லது துர்க்க தண்டநாயகர் என்ற பட்டங்களும் வழங்கப் பட்டன.*

*N. Venkataramanayya. op. Citus. P. 151.

மகாமண்டலீசுவரர்களுடைய அதிகாரங்கள் :

1. விஜயநகரப் பேரரசில் மகாமண்டலீசுவரர்களாகப் பதவி வகித்தவர்களுக்குப் பலவிதமான அதிகாரங்களிருந்தன. மத்திய அரசாங்கத்தில் பேரரசருக்கு உதவி செய்ய அமைச்சர் குழு இருந்தது போன்று, மாகாண அலுவலாளர்க ளடங்கிய அமைச்சர் குழுவும், மாகாணத் தலைநகரில் இருந்ததாகத் தெரி கிறது. பேரரசருக்கு நன்றியுடனும், விசுவாசத்துடனும் ஆட்சி புரிந்தால் மகாமண்டலீசுவரர்களுடைய ஆட்சியில் மத்திய அரசாங்கம் தலையீடு செய்வ தில்லை. அரச குடும்பத்தைச் சேர்ந்த வர்கள் பலவிதமான பட்டப் பெயர்களைப் புனைந்து கொண்டனர். எடுத்துக்காட்டாக, இராஜகம்பீர இராஜ்யத்திற்கு ஆளுநராக இருந்த குமார கம்பணருக்குப் பின்வரும் பட்டங்கள் அவருடைய கல்வெட்டுகளுள் காணப்படுகின்றன. 'ஸ்ரீமன் மகாமண்டலீசுவர அரிராயவிபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன், மூவராய கண்டன், புக்கண உடையார் குமாரன் ஸ்ரீவீர கம்பண உடை யார்.'* கம்பண உடையார் குமாரன் எம்பண உடையாரும் மேற் கூறப்பட்ட பட்டங்களை மேற்கொண்டார். இலக்கண உடையார், மாதண உடையார் என்ற ஆளுநர்கள் 'தட்சண சமுத்திராதிபதி' என்றழைத்துக் கொண்டனர். சாளுவ வமிசத்து ஆளுநர்கள் 'கண்ட கட்டாரி சாளுவர் மேதினி மீசுர கண்டர்' என்ற பட்டங் களையும் மேற்கொண்டனர். மகாமண்டலீசுவரர்கள் நியமனம் விஜயநகரத்து அரசர்களால் செய்யப்பட்டு நியமனப் பத்திரம் அரசாங்க முத்திரையுடன் அனுப்பப்பட்டது. மகாமண்டலீசு வரர்கள் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு மாற்றுதலும் செய்யப்பட்டனர். ஆனால், அவர்களுடைய நியமன கால வரையறை இன்ன தென்று தெளிவாகத் தெரிய வில்லை.

2. மகாமண்டலீசுவரர்களுக்குச் சிறிய மதிப்புள்ள நாண யங்களைச் சொந்தமாக அச்சடித்துக் கொள்ளும் உரிமையும் இருந்தது. விஜயநகரப் பேரரசில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்த சீசர் ப்ரெடரிக் என்பார் தாம் சென்ற பல இடங்களில் பல விதமான சிறு நாணயங்கள் புழக்கத்திலிருந்தன வென்றும், ஒரு நகரத்தில் செலாவணியான நாணயம் மற்றொரு நகரத்தில் செலாவணியாக வில்லை என்றும் கூறுவார். மதுரையில் மகாமண்ட லீசுவரராக இருந்த இலக்கண்ண தண்டநாயகரால் வெளியிடப் பட்ட செப்புக்காசு ஒன்று இன்றும் கிடைக்கிறது. ஆனால், உயர்ந்த மதிப்புள்ள வராகன் என்ற தங்க நாணயத்தை அச்சடித்து வெளியிடுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கே உரிமை யிருந்தது.

*No. 27 of 1921. (Inscription)

3. தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட மாகாணங்களில் பழைய வரிகளை நீக்குவதற்கும், புதிய வரிகளை விதிப்பதற்கும் மகாமண்டலீசுவரர்களுக்கு அதிகாரங்கள் இருந்தன. வடவார்க்காடு மாவட்டம் வேடல் என்னு மிடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் அவ்வூரின் திருக்கோயிலுக்குப் பல பழைய, புதிய வரிகளைத் தானமாகக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. மேலும், தறியிறை, காசாயம், குடிமை, சூலவரி, அரசிக்காணம், விற்பணம், வாசல் பணம். அசவக் கடமை, நற்பசு, நற்கிடா முதலிய பழைய வரிகளைக் குமாரகம்பணர் நீக்கியதாக அறிகிறோம். குமார கம்பணருக்குப் பின் வந்த மகாமண்டலீசுவரர்களும் மேற்கண்ட விதத்தில் பல புதிய வரிகளை விதித்தும், பழைய வரிகளை நீக்கியும் ஆட்சி புரிந்துள்ளனர்.

4. தங்களுடைய ஆட்சிக்குட்பட்ட மாகாணங்களில் அமைதியை நிலைநாட்டி எளியோரை வலியோர் வாட்டாமல் பாதுகாவல் செய்வது மகாமண்டலீசுவர்களுடைய கடமையாகும். அரசர்களுக்குரிய பல விருதுகளையும் கௌரவங்களையும் அவர்கள் அனுபவிப்பதுண்டு. எடுத்துக்காட்டாக அரியணை, வெண்சாமரம், பல்லக்கு, யானை, குதிரை முதலிய அரச சின்னங்களையும் அவர்கள் மேற்கொண்டனர்.

5. மகாமண்டலீசுவரர் பதவியை வகித்தவர்களுக்கு மத்திய அரசாங்கத்தில் பல முக்கியமான அலுவல்களும் தரப்பட்டன. முதலாம் தேவராயர் ஆட்சியில் முல்பாகல் இராச்சியத்திற்கு மகாமண்டலீசுவரராயிருந்த நாகண்ண தண்டநாயகர், மகாப் பிரதானியாக அலுவல் பார்த்தார். திம்மண்ண தண்ட நாயகர் நாகமங்கலம் பகுதியில் ஆளுநராகப் பணியாற்றியபின் மல்லிகார்ச்சுன ராயருக்கு மகாப்பிரதானியாக இருந்தார். கொண்ட வீட்டு இராச்சியத்திற்கு ஆளுநராகப் பணியாற்றிய சாளுவ திம்மர், கிருஷ்ண தேவ ராயருடைய முக்கிய அமைச்சராக இருந்தார். உதயகிரி மகாணத்தில் ஆளுநராகிய கொண்டமராசய்யர், கிருஷ்ண தேவ ராயருடைய இராயசமாகப் பணியாற்றினர். சோழ இராச்சியத்தின் ஆளுநராக இருந்த வீர நரசிம்ம நாயக்கர் அச்சுத ராயர் காலத்தில் முக்கிய அமைச்சராகப் பதவி ஏற்றிருந்தார்.

மாகாணங்களில் ஆளுநராகப் பணியாற்றியவர்கள், விஜயநகரப் பேரரசு பதவியைக் கைப்பற்றியமைக்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. சங்கம சகோதரர்களாகிய ஹரிஹரனும், புக்கனும் ஹொய்சள அரசையே கைப்பற்றினர். விருபாட்ச ராயர் ஆட்சியில் சந்திர கிரியின் ஆளுநராக இருந்த சாளுவ நர

கிம்மர் பேரரசைப் பேணிக் காப்பதற்காக அரச பதவியைக் கைப் பற்றினர். இம்மடி நரசிம்மருடைய ஆட்சியில் நரச நாயக்கர் சிறந்த தலைவராக விளங்கினர். அவருடைய முதல் மகன் வீர நரசிம்ம புஜபல ராயர் அரச பதவியைக் கைப்பற்றிக் கிருஷ்ண தேவராயருடைய சிறப்பு மிக்க ஆட்சிக்கு வழி வகுத்தார்.

மகா மண்டலீசுவரர்களுடைய அலுவலாளர்கள் :

ஆந்திர நாட்டில் இராச்சியங்களுக்குச் சீமை என்ற பெயரும் வழங்கியது. ஒவ்வொரு சீமையிலும் இருந்த அமரநாயக்கர்கள் அங்கம் வகித்த சபையொன்றும் இருந்ததெனத் தெரிகிறது. சீமையின் நிருவாக அதிகாரியாகப் பாருபத்யகாரர் என்ற அதிகாரி இருந்தார். சீமையில் சாவடி என்ற அலுவலகத்தில் பாரு பத்யகாரருக்கு உதவி செய்யப் பல கணக்குப் பிள்ளைகள் இருந்தனர். இன்னும், இராயசம், அவசரம், இராசகர்ணம் என்ற அலுவலாளர்கள் இராச்சியத்தை ஆட்சி புரிவதில் மகா மண்டலீசுவரர்களுக்கு உதவி புரிந்தனர். இராயசம் என்னும் அதிகாரி மகா மண்டலீசுவரருடைய ஆணைகளை எழுதி நாடு, தனியூர், பற்று, சதுர்வேதி மங்கலம் முதலிய பிரிவுகளில் இருந்த அர்சாங்க அதிகாரிகளுக்கு அனுப்பினர். மகாமண்டலீசுவரர் களிடம் நேர்முகமாகத் தங்களுடைய குறைகளைக் கூறுவதற்கு அவசரம் என்ற அதிகாரி உதவி செய்ததாகக் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது. மகாமண்டலீசுவரர்கள் நாட்டைச் சுற்றிப் பார்க்கும் பொழுது இராயசமும், அவசரமும் உடன் செல்லுவது வழக்கம். ஆளுநர்களுடைய கோட்டையின் வரவு செலவுக் கணக்குகளை எழுதியவர்கள் இராச கர்ணங்கள் என்றழைக்கப் பட்டனர்.

அமர நாயக்கர்கள் அல்லது நாயன்கரா முறை :

இராய்ச்சூர்க் கோட்டையைக் கிருஷ்ணதேவராயர் முற்றுகை யிட்ட பொழுது. அப் பேரரசருடைய சேனையில் 40 ஆயிரம் காலாட் படைகளும், ஆறுயிரம் குதிரை வீரர்களும், முந்நூறு யானைகளும் இருந்தனவென நூனிஸ் கூறுவார். ஆனால், பேரரசருக்கு அடங்கிய நாயக்கன்மார்கள், 3,22,000 காலாட் படைகளையும் 21,600 குதிரை வீரர்களையும், 235 யானைகளையும், பேரரசருக்குக் கொடுத்து உதவியதாகவும் கூறுவர்*. நூனிஸ் கூறியுள்ளதை டாமிங் கோஸ் பீயஸ் என்பாரும் உறுதி செய்வார். 'பேரரசில் உள்ள பிரபுக்கள் (நாயக்கன் மார்கள்) பேரூர்களிலும், கிராமங்களிலும் வாழ்கின்றனர். பேரரசருடைய நிலங்களை இவர்கள் நிலமானிய முறையில் கொண்டுள்ளனர். சில பிரபுக்

*A Forgotten Empire. PP. 311-12.

களுக்கு 15 இலட்சம் வராகன் முதல் 10 இலட்சம் வாரகன் வரை வரும்படியுள்ளது. சிலருக்கு மூன்று, இரண்டு அல்லது ஒரு இலட்சம் வராகன் வரும்படி யுள்ளது. இவர்களுடைய நில வருமானத்திற்கு ஏற்ற வகையில் காலாட் படைகளையும், குதிரை வீரர்களையும், யானைகளையும் வைத்திருக்கும்படி பேரரசர் ஆணை யிட்டுள்ளார். பேரரசர் அச் சேனைகளை எங்கு வேண்டுமானலும் எப்பொழுது விரும்பினலும் தமக்கு உதவி செய்யும்படி ஆணை யிடுவது வழக்கம்'*. அச்சுத ராயர் காலத்தில் விஜயநகரத்திற்கு வந்த நூனிஸ் என்பவரும் பீயஸ் சொல்வதை ஒப்புக் கொண்டு பதினெரு முக்கிய நாயக்கன்மார்களின் வருமானத்தையும், கரி, பரி, காலாட் படைகளின் எண்ணிக்கையையும், ஆண்டுதோறும் அரசனுக்குச் செலுத்த வேண்டிய நிலவரியின் பகுதியையும் தொகுத்துக் கூறியுள்ளார்.

நூனிஸ் கூறும் நிலமானிய முறை, இந்திய ஐரோப்பிய வரலாற்றில் மத்திய காலத்தில் (Mediaeval Peri d) நிலை பெற்று இருந்த நிலமானியக் கொள்கையாகிய 'நாட்டிலுள்ள நிலங்கள் அரசனுக்குச் சொந்தமானவை' என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆகையால், 'நிலங்கள் அரசனுக்குச் சொந்த மானவை. பிரபுக்கள் அரசனிடமிருந்து நிலங்களைப் பெறு கின்றனர். பின்னர் அந் நிலங்கள் உழவர்களிடம் கொடுக்கப் படுகின்றன. உழவர்கள் நிலவருமானத்தில் பத்தில் ஒன்பது பங்கை நாயக்கன்மார்களிடம் அளிக்கின்றனர். உழவர்களுக்குச் சொந்தமான நிலங்கள் இல்லை' என்றும் கூறுவர். இந்த நில மானியக் கொள்கை விஜயநகரப் பேரரசு எங்களும் பின்பற்றப் பட்டு வந்தது. அரசனிடமிருந்து நிலங்களைப் பெற்றவர்களுக்கு அமர நாயக்கர்கள் என்றும், அவர்கள் பெற்ற நிலங்களுக்கு அமரம் அல்லது நாயக்கத் தானம் என்ற பெயர்களும் வழங்கப் பட்டன. விஜயநகர அரசர்களின் கல்வெட்டுகளில் நாயன்கரா முறை என்று வழங்கப் பெறும் சொற்றொடர், அமர நாயன்கரா என்பதன் குறுகிய உருவ மாகும். அமர, நாயக, கரா என்ற மூன்று சொற்கள் அதில் அடங்கியுள்ளன, அமரம் என்னும் சொல், நாயக்கர் அல்லது பாளையக்காரர்களுக்குப் படைப் பற்றுக்கு கொடுக்கப்பட்ட நிலத்தைக் குறிக்கும். படைதிரட்டும் தலைவனுக்கு நாயக்கர் என்ற பெயர் பொருத்தமாகும். கரா என்பது அவருடைய பணியைக் குறிக்கும். விஜயநகரத்தரசர் களிடம் குறிப்பிட்ட கரி, பரி, காலாட்படைகளைக் கொடுத்து உதவுவதாக ஒப்புக் கொண்டு நிலங்களைப் பெற்றுக்கொண்ட நிலமானியத் தலைவர்களுக்கு நாயக்கன்மார்கள் என்றும் அம்

*Ibid.

முறைக்கு அமரநாயன்கரா முறை என்றும் பெயர்கள் வழங்கப் பட்டன. பேரரசில் இருந்த முக்கால்பகுதி நிலங்கள் இவ் வகையான நிலமானிய முறையில் அளிக்கப்பட்டிருந்தன. அமர நாயக்க முறையில் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு அமரமாகாணி அல்லது அமர மாஹலே என்ற பெயர்களும் வழக்கத்தில் இருந்தன. பேரரசில் இருந்த கிராமங்களை, 1. பண்டார வாடை அல்லது அரசனுக்கே சொந்தமான நிலங்கள், 2. அமர நாயக்க கிராமங்கள், 3. இனம் கிராமங்கள் என மூவகையாகப் பிரிக்க லாம். நாயக்கன்மார்களுக்கு அளிக்கப்பட்ட கிராமங்களை அரச னுடைய விருப்பம்போல் மாற்றவும், திருப்பவும் முடியும். அதாவது அரசன் விரும்பினால் நாயக்கன்மார்களுடைய கிராமங் களைப் பண்டாரவாடையாக மாற்றவும், அல்லது வேறு நாயக்கன் மார்களுக்குக் கொடுக்கவும் அரசனுக்கு அதிகாரம் இருந்தது.

அரசாங்கத்திற்கும், பயிரிடுங் குடிகளுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக நாயக்கன்மார்கள் இருந்தனர். நாட்டைப் பாதுகாப்பதற்கு ஏற்ற படைகளைத் திரட்டி எப்பொழுதும் சித்தமாக வைத்துக் கொண்டிருப்பது நாயக்கன்மார்களுடைய கடமை யாயிற்று. நிலங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தில் சரிபாதியை மத்திய அரசாங்கத்திற்கு நாயக்கன்மார்கள் அளிக்க வேண்டும். மிகுந்த பாதியைக் கொண்டு கரி, பரி, காலாட்படை களை அரசன் குறிப்பிட்டபடி, தங்கள் செலவில் வைத்திருக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு எதிராக அன்னியப் படை யெழுச்சிகள் தோன்றிய காலத்தில் அப் படைகளைக் கொண்டு உதவி செய்தல் வேண்டும். இந்த நாயக்கன்மார்கள் தங்களுடைய நாயக்கத் தானங்களில் பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் கோட்டைகளையும் அமைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இராயவாசகம் என்னும் நூலில் சந்திரகிரி, மாத்தூர், சோணகிரி, திரிசிரபுரம், குன்றத்தூர், வல்லம்கோட்டை, மதுரை, பழையன் கோட்டை, சத்திய வீடு, நாராயண வனம் முதலிய இடங்களில் கோட்டைகள் அமைந்துள்ளமை பற்றிய செய்திகள் காணப் படுகின்றன.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் இருந்த அமர நாயக்கர்கள்:

1510ஆம் ஆண்டில் வடவார்க்காட்டுப் பகுதியில் இராமப்ப நாயக்கர் என்பார் தம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்ட கோவில்களில் ஜோடி என்ற இரட்டை வரியை வசூலித்துள்ளார். 1519ஆம் ஆண்டில் திருமலை நாயக்கர், ஹரிஹர நாயக்கர், சதா சிவ நாயக்கர் என்பவர்கள் தரிசாகக் கிடந்த நிலங்களைப் பண் படுத்திப் பயிரிடுவதற்கு. ஏற்ற நிலங்களாக மாற்றியதற்காகக்

கிருஷ்ண தேவராயரால் கௌரவப்படுத்தப் பட்டனர்.[1] திரு வண்ணுமலைப் பகுதியில் சின்னப்ப நாயக்கர் என்பாரும், பூவிருந்த வல்லியில் பாலய்யா நாயக்கர் என்பவரும், பொன்னேரிப் பகுதி யில் மிருத்தியுஞ்செய நாயக்கர் என் வரும் அமர நாயக்கர்களாக இருந்தனர் என்று கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிகிறோம். விழுப்புரம், செஞ்சி, திருக்கோவலூர், திண்டிவனம் பகுதிகளில் திருமலை நாயக்கர், அரியதேவ நாயக்கர், திம்மப்ப நாயக்கர் என்பவர் அமர நாயக்கர்களாகப் பதவி வகித்தனர். தென் மாவட்டத்தில் ஏரமஞ்சி துலுக்காண நாயக்கரும், சேலம் மாவட்டத்தில் திரியம்பக உடையார் என்பவரும் அமர நாயக்கர்களாக இருந்தனர். தஞ்சை மாவட்டத்தில் வீரய்ய தன்னயக்கரும், வாசல் மல்லப்ப நாயக்கரும் இருந்தனர். திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை மாவட்டங்களில் பெத்தப்ப நாயக்கர், இராகவ நாயக்கர் என்பவர் அமர நாயக்கர்களாக இருந்தனர். இராமநாதபுரத்தில் சிங்கம நாயக்கரும் மதுரையில் வைரய்யநாயக்கர் என்பவரும் அமர நாயக்கர்களாக இருந்தனர்[2].

அமர நாயக்கருடைய கடமைகள் :

1. அரசனிடமிருந்து தாங்கள் பெற்றுக் கொண்ட நிலத்திற் காக ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை நாயக்கர்கள் கொடுத்தனர் என்று பீயஸ் கூறியுள்ளார். ஆலை, நூனிஸ், மாதந்தோறும் கொடுத்தனர் என்றும் செப்டம்பர் மாதம், முதல் ஒன்பது தேதிகளுக்குள் நாயக்கர்கள் அரசனுக்குக் கட்ட வேண்டிய கட்டணம் நிச்சயம் செய்யப்பட்ட தென்றும் கூறுவர். இவ் விருவருடைய கூற்றுகளில் பீயஸ் கூறுவதே உண்மை யெனத் தெரிகிறது. மேலும், நாயக்கர்களின் வசத்திலிருந்த நிலங்களில் ஒருகோடியே இருபது இலட்சம் வராகன் வருமானம் வந்தது என்றும் அத் தொகையில் அறுபது இலட்சம் வராகனை நாயக்கர்கள் கொடுக்க வேண்டியிருந்தது என்றும் நூனிஸ் கூறி உள்ளார். நிலங்களைப் பயிரிட்ட குடியானவர்களிடமிருந்து நில வருமானத்தில் பத்தில் ஒன்பது பங்கை நாயக்கர்கள் வசூல் செய்தனர் என்று நூனிஸ் கூறுவதில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்று விளங்க வில்லை.

2. கரி, பரி, காலாட் படைகளை நாயக்கர்கள் அரசனுக்குக் கொடுத்துப் போர்க் காலங்களில் உதவி செய்ய வேண்டியிருந்தது. பேரரசில் இருந்த இருநூறு நாயக்கன்மார்களும் சேர்ந்து ஆறு

[1]Nos. 352 and 353 of 1912.

[2]Dr. A. Krishnaswami. The Tamil country under Vijayanagar PP. 185-186.

இலட்சம் காலாட் படைகளையும், 24,000 குதிரை வீரர் களையும் அனுப்ப வேண்டியிருந்த தென நூனிஸ் கூறியுள்ளார். சராசரியாகக் கணக்கிட்டால் ஒவ்வொரு நாயக்கரும் 3,000 காலாட் படையினரையும், 120 குதிரை வீரர்களையும் கொடுத்தனர் எனக் கருதலாம். ஆனல், இந்த எண்ணிக்கை, நாயக்கத்தானத்தின் பரப்பளவையும், வருமானத்தையும் பொறுத்திருக்க வேண்டும். தங்களுடைய சொந்தச் செலவிலேயே மேற்கூறப்பட்ட காலாட் படைகளையும், குதிரை வீரர்களையும் வைத்துக் காப்பாற்றினர். இந்த நிலமானியப் படைகள் போர் புரிவதில் மிகுந்த திறமையுடன் விளங்கின என்று நூனிஸ் கூறியுள்ளார்.

3. முக்கியப் பண்டிகை அல்லது விழாக்காலங்களிலும், அரசனுக்கு ஆண், பெண் குழந்தைகள் பிறந்த பொழுதும், அரசனுடைய பிறந்தநாள் விழாக் கொண்டாடப்படும் தினங் களிலும் பொன்னையும், பொருளையும் வெகுமதியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. தீபாவளிப் பண்டிகையின் பொழுது பதினைந்து இலட்சம் வராகனுக்குமேல் விஜயநகரப் பேரரசருக்கு வெகுமதி யாக நாயக்கர்கள் கொடுத்தனர் என்று பீயஸ் கூறுவர். அரண் மனையில் சமையல் நடப்பதற்கு வேண்டிய அரிசி, கோதுமை முதலிய உணவுப் பொருள்களையும் தினந்தோறும் நாயக்கர்கள் அளிக்க வேண்டியிருந்தது.

4. தங்களுடைய பிரதிநிதிகளாக இரண்டு அலுவலாளர் களை விஜயநகர அரண்மனையில் நாயக்கர்கள் அமர்த்தியிருந்தனர். ஒவ்வொரு நாயக்கரும் தாம் அனுப்பிய நிலமானியப் படையைக் கவனித்துக் கொள்ள ஓர் இராணுவப் பிரதிநிதியை நியமிப்பது வழக்கம். இந்த இராணுவப் பிரதிநிதி விஜயநகரத்தின் அரசவை நடவடிக்கையிலும் பங்கு கொண்டார். நாயக்கர்களுடைய இராணுவப் பிரதிநிதிகளை நாயக்கர்கள் என்றே நூனிஸ் பிழை படக் கருதி எழுதியுள்ளார். ஆனல், பீயஸ் இந்த அலுவலாளர்கள் நாயக்கர்களுடைய இராணுவப் பிரதிநிதிகள் என்றும், அவர் தலைநகரத்திலேயே தங்கியிருந்தனர் என்றும் கூறுவர்.

தானுபதி என்ற மற்றோர் அலுவலாளர் நாயக்கர்களுடைய பிரதிநிதியாக விஜயநகரத்தில் தங்கியிருந்தார். இவர்களை நாயக்கர்களுடைய காரியதரிசிகள் என்றழைக்கலாம். இவர்கள் தினந்தோறும் அரண்மனைக்குச் சென்று அங்கு நடக்கும் செய்தி களைப் பற்றித் தீவிரமாக விசாரணை செய்து, அவற்றுல் தம்முடைய தலைவருக்கு ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றி உடனுக்குடன் அறிவிக்க வேண்டிய கடமையுள்ளவர்கள். இவ்

விரண்டு அலுவலாளர்களும் விஜயநகரத்திலேயே தங்கியிருந்து தங்களுடைய நாயக்கர்களின் நன்னடைத்தைக்கும், அரசியல் விசுவாசத்திற்கும் பொறுப்பாளிகளாகக் கருதப் பட்டனர். மகாணங்களில் அமைந்துள்ள நாயக்கத் தானங்களில் நடை பெறும் அரசியல், பொருளாதார, சமூகச் செய்திகளைப் பற்றிய விவரங்களை இவர்கள் மூலமாகப் பேரரசர் அறிந்துகொண்டார்.

5. கிராமங்களில் குற்றங்களும், திருட்டுகளும் நடை பெறுதவாறு அமைதியை நிலைநாட்டி நியாயம் வழங்கும் கடமை களும் நாயக்கன்மார்களுக்கு இருந்தன. இக் கடமைக்குப் பாடி காவல் அல்லது அரசு காவல் உரிமை யென்ற பெயர்கள் கல் வெட்டுகளில் காணப்படுகின்றன. அமைதியை நிலைநாட்டிக் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்குவதோடு, காடுகளை யழித்துக் குளந்தொட்டு, வளம்பெருக்கி, உழவுத் தொழில் செம்மையுறுவதற்குச் செய்ய வேண்டிய பொறுப்பும் நாயக்கன்மார்களுக்கு இருந்தன. மேற்கூறப்பட்ட கடமை களிலிருந்து தவறிய நாயக்கர்களுடைய நாயக்கத் தானங்கள் அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு மற்றவர்களிடம் கொடுக்கப்பட்டன. சில கொடுமையான தண்டனைகளும் கொடுக்கப்பட்டன என்று பார்போசா கூறுவர்.

6. நாயக்கர்கள் பிரயாணம் செய்யும் பொழுது பல்லக்கு களில் ஊர்ந்து தங்களுடைய ஏவலாள்கள் முன்னும் பின்னும் தொடர ஊர்வலமாகச் செல்வதற்கும் உரிமைகள் அளிக்கப் பட்டனர். பேரரசரைக் காணச் சென்றால் தங்களுக்கு உரிய மரியாதையுடன் செல்வர். பேரரசர்களும் தங்களைக் காண வந்த நாயக்கர்களுக்கு உயர்ந்த ஆடைகளையளித்துக் கௌரவப் படுத்துவதும் வழக்கமாகும்.

மகாமண்டலீசுவரர்களும் நாயக்கன்மார்களும் :

விஜயநகரப் பேரரசில் அடங்கிய ஓர் இராச்சியத்தைப் பேரரசரின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்தவர் மகாமண்டலீசுவரர் ஆவார். ஆனால், ஓர் இராச்சியத்திற் குட்பட்ட பகுதியில் அமரம் என்ற நாயக்கத் தானத்தை அனுபவித்து இராணுவக் கீழாளாக (Vassal) பதவி வகித்தவர்கள் நாயக்கன்மார்கள். அவர்கள் தங் களுடைய நில வருமானத்தில் பாதியை அரசனுக்குச் செலுத்தக் கடமைப் பட்டவர்கள். அவர்கள் தங்களுடைய நாயக்கத் தானத்திற் கேற்பக் கரி, பரி, காலாட்படைகளைக் கொடுத்துப் போர்க் காலங்களில் மத்திய அரசுக்கு உதவி செய்தனர். மகா மண்டலீசுவரர்களுக்கு இவ் விதக் கடமைகள் இல்லை. நாயக்கன்

மார்கள் கலகம் செய்யாது அடங்கி ஆட்சி புரிந்து தாம் மத்திய அரசிற்குச் செலுத்த வேண்டிய வருமானத்தையும், இராணுவத் தையும் தடையின்றிச் செலுத்தும்படி செய்வது மகாமண்டலீசு வரர்களின் கடமையாகும். நாயக்கன்மார்கள் மாகாண அரசிய லுக்கும், மத்திய அரசாங்கத்திற்கும் கடமை தவறாது பாது காப்பளிக்க வேண்டும். அதைக் கவனிக்கும் பொறுப்பு மகா மண்டலீசுவரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

மகாமண்டலீசுவரர்கள் ஓர் இராச்சியத்திலிருந்து மற்றோர் இராச்சியத்திற்கு மாற்றப்பட்டனர். ஆனால், நாயக்கன்மார்கள் தங்களுடைய அமரமாகாணியிலிருந்து மாற்றப்படுவதில்லை. சில சமயங்களில் தங்களுடைய கடமை தவறியதற்காக நாயக்கத் தானத்தை இழந்துவிடும்படி செய்வதும் நடைபெற்றது. 'காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கி' நாட்டில் பொருளாதார உற்பத்தியைப் பெருக்குவது நாயக்கர்களுடைய முக்கியப் பொறுப்பாகக் கருதப்பட்டது. தங்களுடைய நாயக்கத் தானத்திலுள்ள நிலங்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கும் நாயக்கர்களுக்கு அதிகாரமிருந்தது. திண்டிவனம் என்னும் ஊரில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின்படி 1512ஆம் ஆண்டில் திருமலை நாயக்கர் என்பார் அப்பிலி என்ப வருக்கு நிலமானிய முறையில் ஒரு நிலத்தைக் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதே முறையில் அரகண்ட நல்லூர் சின்னப்ப நாயக்கர், அரசந்தாங்கல் என்ற கிராமத்தை ஏகாம்பரநாதன் என்பவருக்கு நிலமானிய முறையில் கொடுத்ததாக மற்றொரு கல் வெட்டுக் கூறுகிறது.

மகாமண்டலீசுவரர் பதவியைத் தகப்பனுக்குப்பின் அவ ருடையமகன் பரம்பரைப் பாத்தியமாகப் பெறமுடியாது ஆனால், கிருஷ்ண தேவராயர் ஆட்சிக்குப் பிறகு நாயக்கன்மார்களின் பதவி பரம்பரைப் பாத்திய முடையதாக மாற்ற மடைந்தது.*

*The Tamil Country under Vijayanagar. P. 193

15. விஜயநகரப் பேரரசு காலத்தில் அரசியல் முறை

விஜயநகரப் பேரரசு தென்னிந்தியாவில் அமைவதற்குமுன் சபை, ஊர், நாடு, என்ற கிராமச் சபைகள் கிராமங்களில் பல விதமான ஆட்சி முறையை மேற்கொண்டிருந்தன. சோழப் பேரரசு நிலைபெற்றிருந்த காலத்தில் கி.பி. 907 முதல் 1120 வரையிலுள்ள ஆண்டுகளில் 413 கல்வெட்டுகளில் மகாசபைகளைப் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. கி.பி. 1120 முதல் 1216 வரையிலுள்ள காலப் பகுதியில் 89 கல்வெட்டுகளும், 1216 முதல் முதல் 1279 வரையிலுள்ள காலப் பகுதியில் 40 கல்வெட்டுகளும் மகாசபைகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. சோழப் பேரரசில் மகாசபைகள் குடவோலை மூலம் வாரியப் பெருமக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏரி வாரியம், தோட்ட வாரியம், சம்வத்சர வாரியம், பஞ்சவார வாரியம், கழனி வாரியம் முதலிய வாரியங்கள் அமைக்கப்பெற்றன. இவ் வாரியங்களும், ஊர்ச்சபை, நாட்டுச்சபை முதலிய சபைகளும் விஜயநகரப் பேரரசில் எவ்வித மான நிலையிலிருந்தன என்று நாம் ஆராய்ச்சி செய்வது நல முடைத்தாகும்.

சோழ, ஹொய்சள ஆட்சிகளுக்குப் பிறகு தென்னிந்தியாவில் மகாசபை, ஊர்ச்சபை, நாட்டுச் சபை முதலிய மூவகையான கிராம அமைப்புகளைப் பற்றிய விவரங்களை அக் காலத்தில் எழுதப் பெற்ற கல்வெட்டுகளிலிருந்துதான் நாம் அறிந்து கொள்ள முடி கிறது. தமிழ்நாட்டில் சம்புவராயர்களும் விஜயநகரப் பேரரசர் களும் ஆட்சி புரிந்த காலத்தில் சுமார் 620 கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றதாக இதுவரையில் கருதப்பெற்றது. இவற் றுள் 45 கல்வெட்டுகளே கிராமச் சபைகளைப் பற்றிக் கூறுகின்றன. இந்த 45 கல்வெட்டுகளில் பதினைந்து மகா சபைகளைப்பற்றியும், 14 கல்வெட்டுகள் ஊர்ச் சபைகளைப்பற்றியும் 16 கல்வெட்டுகள் நாட்டுச் சபைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. இவற்றுல் 14, 15, 16ஆம் நூற்றுண்டுகளில் விஜயநகரப் பேரரசு நிலைபெற் றிருந்த காலத்தில் கிராமச் சபைகள் மறைந்து, வேறு விதமான ஆட்சிமுறை கிராமங்களில் ஏற்பட்டன என்பதை நாம் உணரலாம்.

விஜயநகர ஆட்சியில் மகாசபைகள் :

1336 முதல் 1363 வரை ஆட்சி செய்த இராஜ நாராயண சம்புவராயர் காலத்திய 89 கல்வெட்டுகளில் ஐந்தே கல் வெட்டுகள்தான் கிராமச் சபைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. தொண்டை மண்டலத்தில் காங்கேய நல்லூர், உக்கல், ஒசூர், காஞ்சிபுரம் என்ற நான்கு இடங்களில்தான் மகாசபைகள் இருந்தனவாகத் தெரிகிறது*. குமார கம்பணர் மகா மண்டலீசுவரராக ஆட்சி புரிந்த சமயத்தில் மூன்று கல்வெட்டுகளில் மகா சபையின் நடவடிக்கைகளைப்பற்றி நாம் உணர முடிகிறது. 1371ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் எழுதப் பெற்ற கல்வெட்டு ஒன்றில் காவிரிப் பாக்கத்து மகா சபையார் 400 வீரசம்பன் குளிகைகளைப் பெற்றுக்கொண்டு ஒரு நிலத்தைச் சில அந்தணர் களுக்குக் கிரயம் செய்துள்ளனர். 1374ஆம் ஆண்டில் எழுதப் பட்ட இன்னொரு கல்வெட்டில் உக்கல் கிராமத்து மகா சபையார் 600 பணம் பெற்றுக்கொண்டு பாம்பணிந்தார் பல்லவ ராயர் என்பவருக்கு அரசாணிப்பாலை என்ற கிராமத்தைக் கிரயம் செய்துள்ளனர். திருவண்ணாமலைக் கருகிலுள்ள ஆவூர் என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டின்படி சோமநாத சதுர் வேதி மங்கலத்து மகாசபையார், ஏர்ப்பாக்கம் என்னும் கிராமத்தைக் குமார கம்பணருடைய ஆணையின்படி சர்வமானிய இறையிலி யாகப் பெற்றுள்ளனர்.

பேரரசர் இரண்டாம் ஹரிஹர ராயர் ஆட்சியில் விருபண்ண உடையார் மகாமண்டலீசுவரராக இருந்த பொழுது உக்கல், திருமழிசை ஆகிய இரண்டிடங்களில்தான் பெருங்குறி மகா சபைகள் இருந்தனவாகக் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. பராந்தக சோழனுடைய ஆட்சியில் சீர்திருத்தி அமைக்கப்பட்ட உத்தரமேரூர் மகாசபை. 1434ஆம் ஆண்டில் இரண்டாவது தேவ ராயர் ஆட்சிக் காலத்திலும் அந்தச் சதுர்வேதி மங்கலத்தில் காரியம் பார்த்ததாக ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது*. திருவரத்துறை என்னும் கோவிலில் 1443ஆம் ஆண்டில் எழுதப் பட்ட கல்வெட்டு ஒன்று கரைப்போக்கு நாட்டுச் சபையார் பெரிய நாட்டான் சந்தி என்ற வழிப்பாட்டு வணக்கத்தை அக் கோவிலில் ஏற்படுத்தியதாகக் கூறுகிறது. நெற்குணம், அவியூர் என்ற இடங்களிலும், மகா சபைகள் இருந்தன. 1459ஆம் ஆண்டில் காவிரிப்பாக்கத்தில் மகாசபை இருந்ததாக மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது. ஆகவே, விஜயநகர ஆட்சியில் தமிழ் நாட்டில் வடவார்க்காடு மாவட்டத்தில் ஐந்து இடங்களிலும்,

*The Tamil Country under Vijayanagar. PP.84-85

செங்கல்பட்டு மாவட்டத்தில் மூன்று இடங்களிலும் தென்னார்க் காடு மாவட்டத்தில் இரண்டு இடங்களிலுமே மகா சபைகள் இருந்தனவென நாம் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

விஜயநகர ஆட்சியில் நிலைபெற்றிருந்த ஊர்ச் சபைகள் :

சம்புவராயமன்னர்களுடைய ஆட்சியில் விரிஞ்சிபுரத்திலும், இராஜ நாராயணன் பட்டினம் என்ற சதுரங்கப்பட்டினத்திலும் ஊர்ச் சபைகள் இருந்தனவாகக் கல்வெட்டுகளில் கூறப்பட்டு உள்ளன. 1353ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ஆந் தேதி எழுதப் பெற்ற கல்வெட்டு ஒன்றில் சதுரங்கப் பட்டினத்தில் வசூலாகும் சுங்கவரிகளை அவ் வூரிலுள்ள கோவிலுக்குத் தானம் செய்யும்படி இராஜ நாராயண சம்புவராயர் ஊரவருக்கும் வியாபாரிகளுக்கும் ஆணையிட்டுள்ளார்.[1] இந்தச் சம்புவராயருடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர்க் கிராமத்து ஊரவர் திருநாகேஸ்வரம் கோவிலுக்குச் சில நிலங்களை விற்றுள்ளனர். குமாரகம்பணர் மகாமண்டலீசுவரராக இருந்த சமயத்தில் தளவனூர், சம்புராய நல்லூர் என்னும் இரண்டு இடங்களில் ஊர்ச் சபைகள் இருந்தமை பற்றி அறிகிறோம். சாளுவமங்கு என்பவர் தளவனூர்க் கோவிலுக்குப் பதினறு மாநிலத்தைத் தேவதானமாக அளித்த செய்தியை அந்த ஊர்ச் சபைக்கு அறிவித்துள்ளார்.

1382ஆம் ஆண்டில் சம்புராய நல்லூர் விருபாட்சர் கோவிலுக்கு ஒரு வேலி நிலத்தைத் தேவதானமாக அளித்து அதை அவ்வூர்ச் சபையாரிடம், விருபண்ண உடையாரின் அலுவலாளர் மங்கப்ப உடையார் ஒப்படைத்துள்ளார். 1401ஆம் ஆண்டில் விருத்தாசலத்திற்கு அருகிலுள்ள வயலூர் ஊர்ச் சபையார் அவ் வூர்க் கோவிலுக்கு ஒரு மாநிலத்தைக் கிரயம் செய்துள்ளனர். 1406ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று புதுச் சேரிக் கருகில் உள்ள திருவாண்டார் கோவில் என்னும் ஊரில் 4,000 பேர் அங்கம் வகித்த ஊர்ச்சபை இருந்ததாகக் கூறுகிறது. இரண்டாம் தேவராயர் காலத்தில் திருக்கோவலூர் தாலுக்கா அவியூரில் இருந்த ஊர்ச் சபையாரும், மகா சபையாரும் சேர்ந்து ஒரு நிலத்தை விற்றதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[2]

தமிழ்நாட்டின் வடபாகத்தில் ஊர்ச்சபைகளின் நடவடிக்கைகளை அதிகமாகக் காண முடியவில்லை யாயினும், இப் பொழுது புதுக்கோட்டை மாவட்டமாக அமைக்கப் பெற்று

[1] No. 202 of 1923.

[2] No. 103 of 1933.

இருப்பதும், முன்னர்த் தொண்டைமான் அரசர்களால் ஆளப் பெற்றதுமாகிய புதுக்கோட்டைச் சீமையில் இருபது இடங்களில் ஊர்ச்சபைகள் இருந்தனவென அப் பகுதியில் கிடைத்த கல் வெட்டுகளில் கூறப்பட்டுள்ளது. திருவேங்கை வாசல், இரும் பாழி, கீழத்தானியம், ஒல்லையூர், மங்கலம், மேலத்தானியம், கார்குடி, மேல்மண நல்லூர், கீழ்மண நல்லூர் முதலிய இடங் களில் கிடைத்த கல்வெட்டுகளில் அவ்வூர்ச் சபைகள் கிராம சம்பந்தமுள்ள பலவித அலுவல்களில் பங்கு கொண்டனவென நாம் அறிகிறோம். 1518ஆம் ஆண்டில் திருவரன்குளம் என்னும் ஊரில் உள்ள கோவிலில் காணப்படும் கல்வெட்டின்படி பாலைக் குடி, களாங்குடி, கிளிநல்லூர் ஆகிய மூன்று கிராமங்களில் ஊர வர்கள் சேர்ந்து சுவாமி நரச நாயக்கருக்கு இறுக்க வேண்டிய கடமையைக் கட்டுவதற்காகத் திருவரங்குள நாதர் கோவிலுக்குச் சில நிலங்களை விற்றதாக நாம் அறிகிறோம்.

1518ஆம் ஆண்டிற்குப் பிறகு விஜயநகர ஆட்சியில் எழுதப் பெற்ற கல்வெட்டுகளில் தனிப்பட்ட ஊர்ச்சபைகளோ ஒன்றற்கு மேற்பட்ட சபைகளோ சேர்ந்து கோவில்களுக்கு நிலங்களை விற்பதும், வாங்குவதும் மற்றப் பொதுக் காரியங்களில் ஈடு படுவதுமாகிய நிருவாகச் செயல்கள் அதிகமாகக் காணப்பட வில்லை. ஊர்ச்சபைகளுக்குப் பதிலாகத் தனிப்பட்ட நபர்களே மேற்கூறப்பட்ட அலுவல்களைப் பார்த்தனர். ஆகையால், பதினைந்தும் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து. மகாசபைகளைப் போலவே ஊர்ச்சபைகளும் விஜயநகரப் பேரரசின் கிராம ஆட்சி முறையில் இடம் பெறவில்லை என்பதை நாம் அறியலாம்.

விஜயநகர ஆட்சியில் நாட்டுச் சபைகள் :

விஜயநகரப் பேரரசு பல இராச்சியங்களாகவும், இராச்சியங் கள் (சோழராச்சியத்தில்) வளநாடுகளாகவும், வளநாடுகள் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன என நாம் முன்னரே பார்த்தோம். நாடு என்ற பிரிவில் மக்களுடைய பிரதிநிதியாக அமைந்திருந்த சபைக்கு நாட்டுச் சபை எனப் பெயர் வழங்கியது. இச் சபையினர் தங்களை 'நாடாக இசைந்த நாட்டோம்' என்று கல்வெட்டுகளில் கூறிக்கொண்டனர். குமார கம்பணருடைய ஆட்சிக் காலத்தில் பொன்பட்டி (தஞ்சை மாவட்டம்), திருவாய்ப் பாடி, திருக்கோவிலூர், திருப்புல்லாணி ஆகிய நான்கு இடங் களில் நாடு என்ற சபை இருந்ததாகக் கல்வெட்டுகளில் கூறப் பட்டுள்ளது. பொன்பட்டி என்னு மிடத்தில் நாட்டுச் சபையாரின் சம்மதம் பெற்றுத் தெய்வச்சிலைப் பெருமாள் கோவிலுக்கு அணி

*No. 209 of 1935.

கல்வன் ஒன்றைக் குமார கம்பணர் அளித்துள்ளார்.[1] திருப்புல்லாணியில் காங்கேயன் மண்டபத்தில் நாட்டார் கூடியிருந்ததாக மற்றொரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. 1359ஆம் ஆண்டில் திருக்கோவலூர் நாட்டுச் சபையார் தவப்பெருமாள் என்பாருக்கு நிலமளித்த செய்தியை அரசுண்டநல்லூரில் கிடைத்த சாசனம் ஒன்று கூறுகிறது. மகதை மண்டலத்துத் திருவாய்ப்பாடி நாட்டவர் திருப்பாலப் பந்தல் சிவன் கோவிலில் ஏழாவது திருநாள் உற்சவத்தை ஏற்படுத்திய செய்தியை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.

முதலாம் தேவராயர் காலத்தில் ஆதனூர்ப்பற்று நாட்டவர் ஆட்கொண்டதேவன் என்பாரிடம் இருபது பணம் பெற்றுக் கொண்டு ஒரு நிலத்தை விற்பனை செய்துள்ளனர். இரண்டாம் தேவராயர் காலத்தில் பராந்தக நாட்டு நாட்டவரும் வலங்கை 98 சாதியாரும், இடங்கை 98 சாதியாரும் சேர்ந்து அரசாங்கத்திற்குரிய இராஜகரம் என்னும் வரியைக் கொடுப்பதற்கு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதைப்பற்றி 1429ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று கூறுகிறது. 1443ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகள் இரண்டில் ஸ்ரீமுஷ்ணத்திலும், திருவரத்துறையிலும் நாட்டவர் சபைகள் இருந்தமை பற்றிக் கூறப்படுகின்றன. மல்லிகார்ச்சுனராயருடைய ஆட்சியில் கோயம்புத்தூர் மாவட்டம் காங்கேய நாட்டு நாட்டவர் ஒரு விநாயகர் கோவிலுக்கு ஆறு பொற்காசுகளைத் தானமாக அளித்த செய்தியை 1449ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று எடுத்துரைக்கிறது.[2] தென்னார்க்காடு மாவட்டத்தில் பெண்ணைகடத்திலுள்ள இரண்டு கல்வெட்டுகள் 1499ஆம் ஆண்டு சுவாமி நரச நாயக்கருடைய தர்மமாக எழுதப்பட்டுள்ளன. அவை வடதுண்டநாடு, கரைப்போக்கு நாடு, ஆலத்தூர்ப்பற்று இவைகளில் அமைந்திருந்த நாட்டுச் சபைகளைப்பற்றிக் கூறுகின்றன. உலகநல்லூர் என்ற ஊரின் கோவிலுக்குக் கள்ளக் குறிச்சி நாட்டுச் சபையார் ஆண்டொன்றிற்குப் பன்னிரண்டு கலம் எண்ணெய் கொடுத்து நந்தாவிளக்கு வைப்பதற்கும் தீவட்டிகள் பிடிப்பதற்கும் செய்த தர்மத்தைப்பற்றி ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.[3]

தென்னிந்தியாவின் தெற்குப் பகுதியில் (புதுக்கோட்டைப் பகுதி) ஒன்பது இடங்களில் நாட்டவர் சபைகள் இருந்தனவெனக் கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிகிறோம். சாவன் உடையார்

[1] No 617 of 1912.
[2] No 59 of 1914.
[3] 177 of 1941.

என்பார் தமிழ்நாட்டில் மகாமண்டலீசுவரராக இருந்தபொழுது ஜெயசிங்க குலகால வளநாட்டு நாட்டவர் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியதற்காகத் திருக்கோகர்ணம் கோவிலுக்கு ஒரு நிலத்தை விற்றனர். விருதராஜ பயங்கர வளநாட்டு நாட்டவர் சூரைக்குடி விஜயாலய தேவனிடம் 1388இல் நிலம் ஒன்றை விற்றுள்ளனர். வடகோனாடு நாட்டுச் சபையார் 1391இல் நரசிங்க தேவனிடம் நிலமானிய முறையின்படி தங்களைக் காப்பாற்றும்படி (Commendation) வேண்டிக் கொண்டனர்; சில நிலமானிய வரும்படிகளையும் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர். இக் கல்வெட்டில் இருபது பேர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

1421ஆம் ஆண்டில் முதலாம் தேவராயர் ஆட்சியில் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டின்படி நாட்டவர் சபைக்குச் சில வரிகளைத் தள்ளிக் கொடுப்பதற்கு அதிகாரமும் இருந்ததாகத் தெரிகிறது. அதலையூர் நாட்டவர்கள் சூரைக்குடி விஜயாலய தேவனிடம் நூறு பணம் பெற்றுக்கொண்டு அவர் செலுத்த வேண்டிய கிராம வரிகளைத் தள்ளிக் கொடுத்துள்ளனர். 1462இல் கார்குறிச்சி நாட்டவர்கள் திருக்கட்டளைக் கோவிலுக்குப் பெருங்களூர் ஸ்ரீரங்கப் பல்லவராயனிடமிருந்து பல தானதருமங்களைப் பெற்றுள்ளனர். கிருஷ்ண தேவராயர் ஆட்சிக் காலத்தில் 1520, 1523ஆம் ஆண்டுகளில் எழுதப்பெற்ற கல்வெட்டுகளின்படி வல்லநாடு நாட்டவர், விஜயநகர அரசிற்குச் சேரவேண்டிய வரிகளைக் கொடுப்பதற்காகத் தங்களுடைய நிலங்களைத் திருவரங்குளம் கோவிலுக்கு விற்றுள்ளனர்.*

கிராமச் சபைகளின் நிலைமை :

மேலே கூறப்பெற்ற வரலாற்றுச் செய்திகளிலிருந்து 14, 15, 16ஆம் நூற்றாண்டுகளில் (விஜயநகர ஆட்சிக் காலத்தில்) மகாசபைகள், ஊர்ச்சபைகள், நாட்டுச் சபைகள் முதலியவற்றின் எண்ணிக்கைகளும், செயல்களும் குறைந்துகொண்டே வந்து பின்னர் மறைந்தன என்பதை நாம் உணரலாம். கி.பி. 907 முதல் 1120 வரையிலுள்ள காலத்தை மகாசபைகளின் 'பொற்காலம்' என்று கூறுதல் பொருத்த மாகும். இதற்கு அடுத்த கட்டங்களாகிய 1120-1216, 1216-1279 ஆகிய காலங்களில் கிராமச் சபைகளின் எண்ணிக்கைகள் குறையத் தொடங்கின. முதல் கட்டத்தில் 413 கல்வெட்டுகளில் மகாசபைகளைப்பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஆனால், அடுத்த இரண்டு காலப் பகுதிகளில் மகாசபைகளைப்பற்றிக் கூறும் கல்வெட்டுகள் 89-ம், 40-மாகக் குறைந்தன. 1336ஆம் ஆண்டிலிருந்து 1500ஆம் ஆண்டு வரையில்

*Nos 733 and 737 of Pudukkottai State Inscriptions.

விஜயநகர ஆட்சியில் எழுதப்பெற்று இதுகாறும் கிடைத்துள்ள 616 கல்வெட்டுகளுள் தென்னிந்தியாவின் வடபகுதியில் உள்ள 45 கல்வெட்டுகளில்தான் மகாசபை, ஊர், நாடு முதலிய கிராமச் சபைகளைப்பற்றி நாம் அறிந்துகொள்ள முடிகிறது. தமிழ்நாட்டில் காவிரி நதிக்குத் தெற்கிலுள்ள பகுதிகளில் கிடைத்த அறுபது கல்வெட்டுகளுள், முப்பது கல்வெட்டுகளில் ஊர்ச்சபை, நாட்டுச்சபை ஆகிய இரண்டு சபைகளைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. ஏனெனில், பிரம்மதேய கிராமங்களாகிய அக்கிரகாரங்கள் காவிரி நதிக்குத் தெற்கில் அதிகமாக இருக்க வில்லைபோல் தெரிகிறது. காவிரி, பாலாறு, பெண்ணையாறு முதலிய ஆறுகளால் வளம்பெற்ற பகுதிகளில்தான் அந்தணர்களுடைய இருக்கைகளாகிய பிரம்ம தேயங்களும், அவற்றில் அமைக்கப்பட்ட மகாசபைகளும் செழித்தோங்கின. ஆகையால், ஆற்றுப்பாசன மில்லாத இடங்களில் மகாசபைகள் இருந்தனவாகத் தெரிய வில்லை; காவிரி நதிக்குத் தெற்கில் அமைந்துள்ள இடங்களில் ஊர்ச் சபைகளும், நாட்டுச் சபைகளும் இருந்தனவாகக் கூறும் 30 கல்வெட்டுகளில் ஊர்ச்சபைகள் இருபத்து மூன்றிடங்களில் இருந்தன வெனவும், பத்து இடங்களில் நாட்டுச் சடைகள் இருந்தன வெனவும் நாம் அறிய முடிகிறது. சதுர்வேதி மங்கலம் அல்லது ஊரைவிடநாடு என்னும் பிரிவு அதிகப் பரப்பளவு உள்ளதாகையால் பத்து இடங்களில் நாட்டுச் சபைகளைப் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. தஞ்சை, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, வடவார்க்காடு ஆகிய மாவட்டங்கள் அடங்கிய வடக்குத் தமிழ்நாட்டில் மகாசபைகள் அதிக அளவில் செயலாற்றின. ஊர், நாடு ஆகிய இரண்டு சபைகளும் தெற்குத் தமிழ்நாட்டில் அதிகமாகக் காணப்பெறுகின்றன. வடக்குத் தமிழ் நாட்டில் பற்று என்ற பிரிவிலும் நாட்டுச் சபைகள் அமைவுற்று இருந்தனவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆகையால், திருக்கோவலூர்ப் பற்று, ஆதனூர்ப்பற்று, முடியனூர்ப்பற்று முதலிய பிரிவுகளில் நாட்டவர் சபைகளிருந்தன. தெற்குத் தமிழ் நாட்டில் வளநாடு என்னும் பிரிவிலும் நாட்டுச் சபைகளிருந்தன.

கிராமச் சபைகள் மறைவதற்குரிய காரணங்கள்: விஜயநகர ஆட்சிக்காலத்தில் மகாசபைகள், ஊர்ச் சபைகள் முதலியன மறைவதற்கேற்ற காரணங்களை ஆய்வது அமைவுடைத்தாகும். அலாவுதீன் கில்ஜி, மாலிக்கபூர், முபராக் ஷா, முகம்மது துக்ளக் முதலிய இஸ்லாமியத் தலைவர்கள் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து வந்ததும், தென்னிந்தியக் கோவில்களையும், அரண்மனைகளையும், மடங்களையும் அழித்ததும் தென்னிந்திய வரலாற்றில் பெரிய மாற்றங்களை உண்டாக்கின. தென்னிந்தியாவின்

பழமையைப் பாதுகாத்து வந்த ஹொய்சள, பாண்டிய மன்னர்களின் ஆட்சிகளின் அடிச்சுவடுகள் மறைவதற்கு இஸ்லாமியப் படையெடுப்புகள் காரணமா யிருந்தன. தேவகிரி, வாரங்கல், துவாரசமுத்திரம், மதுரை முதலிய தலைநகரங்களையும், சிறந்த தேவாலயங்கள் இருந்த விரிஞ்சிபுரம், ஸ்ரீரங்கம், திருவானைக்கா, மதுரை, காஞ்சிபுரம் முதலிய சைவ-வைணவக் கோவில்களையும் இஸ்லாமியப் படைகள் கொள்ளையிட்டன என்று இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்கள் மூலமாகவே நாம் கேள்விப்படுகிறோம். சோழ, பாண்டிய, ஹொய்சள மன்னர்களும், தேவகிரி, வாரங்கல் நாட்டு மன்னர்களும், தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்களாகச் சேகரித்துத் தங்களுடைய அரண்மனைகளில் வைத்திருந்தனர். கோவில்களில் இருந்த தெய்வ விக்கிரகங்கள் பொன்னாலும், மணிகளாலும், முத்துகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தமையோடு விக்கிரகங்கள், தங்கத்தினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்டிருந்தன. தென்னிந்திய அரண்மனைகளையும், கோவில்களையும் கொள்ளையடித்த வடநாட்டு இஸ்லாமியர் இவைகளை யெல்லாம் யானைகளின் மீதும், ஒட்டகங்களின்மீதும், வடநாட்டிற்கு வாரிக்கொண்டு சென்றனர். கோவில்களில் இருந்த செல்வங்களின் வருமானத்தைக் கொண்டு சதுர்வேதி மங்கலங்களில் இருந்த மகாசபைகளும், மற்றக் கிராமங்களில் இருந்த ஊர், நாடு முதலிய சபைகளும் தங்களுடைய கடமைகளை யுணர்ந்து மக்களுக்குப் பணி செய்துவந்தன. இந்தச் செல்வங்களெல்லாம் கொள்ளை போய் விட்டபடியாலும், சதுர்வேதி மங்கலங்களில் வாழ்ந்த அந்தணர்கள் துன்புறுத்தப் பட்டு மடங்களும், அக்கிரகாரங்களும் அழிவுற்றமையாலும் அங்கே செயலாற்றிய மகாசபைகள் அழியலாயின. 'மாலிக்காபூர் படையெடுப்பிற்குப் பிறகு தொடர்ந்த இருண்ட காலத்தில், தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்த சமய, சமூக, பொருளாதார அமைப்புகள் வேர் அற்ற மரங்கள் போல் வெம்பி வீழ்ந்தன' என்று திரு. K. V. சுப்ரமண்ய அய்யர் கூறுவார். தொண்டை மண்டலத்தில், சம்புவ ராயமன்னர்கள் சிறிது முயற்சி செய்து தென்னிந்தியக் கலாச்சாரத்தைப் பாதுகாக்க முயன்ற போதிலும் அவர்களுடைய சேவை பாண்டிய நாட்டிலும், சோழ நாட்டிலும் பரவ முடிய வில்லை.

(2) தக்காணத்தில் பாமினி சுல்தான்களுடைய அரசு தோன்றியதும் பாண்டிய நாட்டில் மதுரைச் சுல்தான்களுடைய ஆட்சி அமைவுற்றதும் தென்னிந்திய சமய, கலாச்சார, அரசியல் அமைப்புகளுக்குப் பெரிய தொரு சாபக்கேடாக முடிந்தன. மதுரையை ஆண்ட சுல்தான்கள் புரிந்த கொடுஞ் செயல்களைப்

பற்றி இபன்-பதூதா கூறியுள்ளவை உண்மையான செய்திகள் என்றே தெரிகின்றன. தென்னிந்தியக் கோவில்களை அழித்தும் அக்கிரகாரங்களைக் கொளுத்தியும், பசுவதை செய்தும், வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியவற்றைப் பயிலாதபடி தடுத்தும் பல இன்னல்களைப் புரிந்தனர். இக் கொடுஞ் செயல்களைப்பற்றிக் கல்வெட்டுகளும் உறுதி கூறுகின்றன. ஆதிசூரத்தன் என்ற இஸ்லாமியத் தலைவன் படையெடுத்து வந்த பொழுது விருதராச பயங்கர வளநாட்டில் குழப்பமும், கலகமும் தோன்றின வென்றும் ஆதிசூரத்தன் என்ற சுல்தானுடைய ஒன்பதாம் ஆட்சி யாண்டில் குளமங்கலம், பனையூர் என்ற கிராமத்து மக்கள் கூலிப்படையில் சேர்ந்து போர் புரிந்து வாழ்க்கை நடத்தினர் என்றும் அதனால், தென்னாட்டுக் கிராமங்கள் பாழடைந்து மக்கள் காடுகளில் பதுங்கிக் கொண்டனர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.* மேற்கூறப்பட்ட கொடுஞ்செயல்கள் நடைபெற்ற காலத்தில் தென்னிந்தியக் கிராமங்களில் அமைதி குலைந்து சபை, ஊர், நாடு முதலிய கிராம அமைப்புகள் மறைந்தமை வியக்கத் தக்க தன்று.

(3) பாமினி சுல்தான்களுடைய ஆட்சி கிருஷ்ணை நதிக்குத் தெற்கே பரவாமல் தடுத்தும், மதுரைச் சுல்தான்களுடைய ஆட்சியை அகற்றியும் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்திய விஜயநகர மன்னர்கள், சபை, ஊர், நாடு முதலிய கிராம ஆட்சி அமைப்புகளை ஆதரித்தனரா அல்லது அவற்றை அழித்தனரா என்ற கேள்விக்குப் பதில் காண்பது உசிதமாகும். அறிஞர் B.A. சாலட்டூர் என்பார் 'விஜயநகர மன்னர்கள், 'பூர்வ மரியாதைப் பத்ததியை'க் காப்பாற்ற முன் வந்தனர். அவர்கள் மகாசபைகள், ஊர்ச் சபைகள், நாட்டுச் சபைகள் முதலியவற்றைப் போற்றி வளர்த்தனர்' எனக் கூறியுள்ளார், ஆனால், அறிஞர் தே. வே. மகாலிங்கம் அவர்களும், உயர்திரு நீலகண்ட சாஸ்திரியாரும் இக் கொள்கையை மறுத்துப் பின்வருமாறு கூறுவர். 'விஜயநகர அரசர்கள் பூர்வ மரியாதைப் பத்ததியைக் காப்பாற்றியது சமயத் துறையிலும், மத்திய மாகாண அரசாங்கத்திலுமே யொழியக் கிராம ஆட்சி முறையில் அன்று. அவர்கள் கிராம சுய ஆட்சியை ஆதரிக்க வில்லை' என்று தே. வே. மகாலிங்கம் அவர்கள் கூறுவர். திரு. நீலகண்ட சாஸ்திரியாரும் 'விஜயநகரத் தரசர்கள் இந்து சமயங்களும், சமூகமும் சிதைவுறாமல் பாதுகாத்த போதிலும், கிராம அரசியல் அமைப்புகள் அழிந்து படாமல் இருப்பதற்கு ஒன்றும் செய்ய வில்லை. சோழர்களுடைய ஆட்சியில் மாட்சியுற்று விளங்கிய மகாசபைகளும்,

*Pudukottai State Inscription No. 670

மற்றக் கிராம அமைப்புகளும் நாயன்கரா என்ற நிலமானிய முறையால் சீர்கேடுற்றன. நாயன்கரா முறை, இராணுவ பலத்தை அதிகரிக்க அமைக்கப் பட்டமையால் தெலுங்கு, கன்னட இனத்தைச் சேர்ந்த நாயக்கன்மார்கள் அதிகார பீடத்தைக் கைப்பற்றினர். இவர்கள் சோழர்கள் காலத்தில் அமைத்திருந்த கிராமச் சபைகளை ஆதரிக்கவில்லை' என்று கூறுவர்.

(4) விஜயநகர ஆட்சியில் நிலமானிய முறை பரவியதோடு அல்லாமல் வரிவசூல் செய்தல், வரிகளை விதித்தல், செலவழித்தல், நியாயம் வழங்குதல் முதலிய அரசியல் அலுவல்களெல்லாம் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற அலுவலாளர்களால் மேற்கொள்ளப் பெற்றன. இரண்டாம் ஹரிஹரராயருடைய ஆட்சிக் காலம்முதல் தென்னாட்டை ஆண்ட மகாமண்டலீ சுவரர்கள் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பலமுறச் செய்வதில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். மகாசபைகளும் ஊர், நாடு முதலிய கிராம அமைப்புகளும் ஆற்றிய பணிகளைப் பிரதானிகள், தண்டநாயகர்கள், பண்டாரதரர் முதலிய மத்திய மாகாண அரசியல் அலுவலாளர்கள் மேற் கொண்டனர். சபை, ஊர், காடு முதலியவற்றை வளர்ப்பதற்குரிய 'விவஸ்தைகளை' மத்திய அரசோ, மாகாண அரசோ பின்பற்றுவதாகத் தெரிய வில்லை. ஒவ்வோர் இடங்களில் மகாசபைகள் இருந்த போதிலும் அவை வளர்ச்சிப் பாதையில் அடி எடுத்து வைக்கவில்லை.

(5) விஜயநகர ஆட்சிக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட நாயன்கரா முறையும், ஆயக்கார் முறையும் தென்னாட்டில் நிலவிய கிராம சுய ஆட்சி முறையின் அடிப்படையைத் தகர்த்து எறிந்தன என்றும் கூறலாம். சோழ மன்னர்கள் ஆட்சியில் கிராமங்களில் கணபோகம், ஏக போகம் என்ற இருவகையான நிலவுடைமை உரிமைகள் இருந்தன. கல்வியில் வல்ல அந்தணர்கள் எல்லோருக்கும் உரிமையாக அளிக்கப்பட்ட நிலங்கள் கடை யோகம் என்றும் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் ஏகபோகம் என்றும் வழங்கப்பட்டன. கணபோக நிலங்கள் எல்லாம் படைப்பற்று நிலங்களாக மாற்றப்பட்டு நாயக்கன்மார்களுக்கு அளிக்கப்பட்டன. சதுர்வேத மங்கலங்கள் நாயக்கர் மங்கலங்களாயின. நிலமானிய முறையில் படைப் பற்றுக நிலங்களைப் பெற்றுக் கொண்ட நாயக்கன்மார்கள் வரி வசூல் செய்வதிலும் படைவீரர்களைத் திரட்டுவதிலும் தங்கள் உடைய கவனத்தைச் செலுத்தினரே அன்றிக் கிராம சுய ஆட்சி அமைப்புகளை ஆதரிக்கவில்லை.

ஆயக்காரர் முறை :

தென்னிந்தியாவில் பதினேந்தாம் நூற்றாண்டின் இறுதியில் ஆயக்காரர் முறை என்ற கிராம அதிகாரிகள் முறை விஜய நகரத்து அரசர்களால் அமைக்கப்பட்டது. புராதன கிராம அரசியல் அமைப்புகளான சபைகள், ஊர், நாடு முதலியவைகள் ஆற்றிய பணிகளையும், அனுபவித்த உரிமைகளையும் இப்பொழுது ஆயக்காரர்கள் என்ற அதிகாரிகளும் தொழிலாளர்களும் அனுபவிக்கலாயினர். கிராமங்களில் இப்பொழுது வரிவசூல் செய்யும் மணியக்காரர், கர்ணம், வெட்டி, தலையாரி முதலிய சேவர்கள் விஜயநகர ஆட்சிக் காலத்தில் நியமிக்கப் பெற்றவர்களாகத் தெரிகிறது. ஆந்திர நாட்டில் இவர்களுக்குக் கௌடா அல்லது ரெட்டி, சேனுபோவா, தலையாரி என்ற பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. இந்த ஆயக்காரர் முறை ஆந்திரப் பிரதேசத்தில் காகதீய மன்னர்களுடைய ஆட்சிக்காலத்தில் தோன்றியிருக்க வேண்டுமெனத் திரு. N. வெங்கட்டரமணய்யா கூறுவர்.

விஜயநகர ஆட்சிக் காலத்திற்குமுன் தமிழ்நாட்டில் ஆயக்காரர் ஆட்சிமுறை இருந்ததாகத் தெரியவில்லை. விஜயநகர மன்னர்கள் காலத்தில் தோன்றிய இந்த ஆயக்காரர் முறை கிழக் கிந்தியக் கம்பெனியார் ஆட்சியிலும் தொடர்ந்து இன்றும் கிராமங்களில் நிலைபெற்றுள்ளது. கல்வெட்டுகளில் இந்த ஆயக்காரர்கள் பெயர்கள் குறிப்பிடப் படவில்லை. ஆயினும், மாகாண அரசாங்கத்தின் அலுவலாளர்களாக இன்றும் அவர்கள் பணியாற்றுகின்றனர். இந்த ஆயக்காரர்களுள் (1) கர்ணம் அல்லது சேனபோவா, (2) கிராமத் தலைவர் (மணியம்) ரெட்டி அல்லது கௌடா, (3) தலையாரி என்ற மூவரும் மாகாண அரசாங்கத்தால் நியமனம் செய்யப் பெற்றனர்.

சோழர்கள் காலத்தில் ஏரிவாரியம், தோட்ட வாரியம், பஞ்ச வார வாரியம் முதலிய வாரியங்கள் ஆற்றிய கடமைகளை இப்பொழுது கர்ணம் என்பவர் செய்ய வேண்டி வந்தது. கிராமத்தின் எல்லை, கிராமத்தில் உள்ள நன்செய், புன்செய், நிலங்கள், இனம் நிலங்கள், ரயத்துவாரி நிலங்கள், தோப்புகள், புறம்போக்கு, சுடுகாடு, மேய்ச்சல் நிலங்கள், ஒவ்வொரு நிலச் சுவான்தாரருக்கும் உள்ள நன்செய், புன்செய் நிலங்கள் முதலிய விவரங்களும் ஒவ்வொருவரும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலவரியும் அடங்கிய அட்டவணை அல்லது அடங்கல் என்னும் புத்தகமும் சிட்டா என்ற குறிப்பேடும் கர்ணத்திடம் இருக்க வேண்டும். இப்பொழுது ஊராட்சி மன்றத்திற்கு உரிய தொழில் வரி, வீட்டு வரி, வாகன வரி முதலியவைகளும்

கர்ணத்தால் தயாரிக்கப்படுகின்றன. இந்த வரிகள் இவ்வளவு என எழுதப் பெற்ற தண்டல் குறிப்பில் இருந்து கிராமத் தலைவர் அல்லது மணியக்காரர் நிலவரியையும், மற்ற வரிகளையும் வசூல் செய்கிறார். மணியக்காரருக்கு வசூல் செய்வதில் உதவியாக வெட்டி, தலையாரி என்ற அலுவலாளரும் உள்ளனர். இந்தக் கிராம அதிகாரிகளுக்கு மானதந்தோறும் அரசாங்கச் சம்பளம் கிடைக்கிறது.

பதினெரும் நூற்றாண்டில் ஆயக்காரர்களோடு சேர்ந்து கிராம மக்களுக்குச் சேவை செய்வதற்குப் புரோகிதர், பொற்கொல்லர், நீர்கண்டி, கொல்லன், தச்சன், குயவன், வண்ணான், நாவிதன், சக்கிலி முதலிய தொழிலாளர்களும் நியமனம் செய்யப் பெற்றனர். இவர்கள் அரசாங்க அலுவலாளர்களாகக் கருதப் படாமல் கிராம சமுதாயத்தின் பணியாளர்களாகக் கருதப் பெற்றனர். இந்தத் தொழிலாளர்களுக்கு இறையிலியாக நில மானியங்கள் விடப்பட்டன. பரம்பரைப் பாத்தியமாக இந்த நிலங்களை அனுபவித்துக் கொண்டு கிராம மக்களுக்குரிய சேவைகளைப் புரிந்தனர். அறுவடைக் காலங்களில் கிராமத்துக் குடியானவர்கள் தங்களுடைய மகசூலில் ஒரு பகுதியை இவர் களுக்கு அளிப்பதும் உண்டு. கிராமங்களில் நிலங்களின் கிரயம், அடைமானம் முதலியன கர்ணத்தின் சம்மதத்தோடு நடை பெற்றன. கிரய அடைமானப் பத்திரங்கள் எழுதுவதும் கிராமக் கர்ணமேயாவர்.

மேலே கூறப்பெற்ற நாயன்கரா, ஆயக்கார முறைகள் விஜய நகர ஆட்சிக் காலத்தில், தொடங்கப் பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இவ் விரண்டு புதிய முறைகளும் பழைய கிராம அமைப்புகளாகிய கிராமச் சபைகள் மறைவதற்குக் காரணங்களாக இருந்தன என்று கூறலாம்.

16. விஜயநகர அரசாங்கத்தின் வருமானங்கள்

விஜயநகர அரசின் பலவிதமான வருமானங்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கு அக் காலத்திய கல்வெட்டுகளே நமக்கு மிக்க துணை செய்கின்றன. அரசாங்கத்தார் நிலங்களைத் தானம் செய்வதும், புதிய வரிகளை விதிப்பதும், பழைய வரிகளை நீக்குவதும், நிலவரியை வஜா செய்வதுமாகிய பல செய்திகள் கல்வெட்டுகளில் கூறப்பெறுகின்றன. அக் காலத்திய வருவாய்த் துறைக்கே சிறப்பாக உரிய சில வரிகள் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. கடமை, மகமை, காணிக்கை, கட்டணம், காணம், வாரம், போகம், வரி, பாட்டம், இறை, கட்டாயம் முதலிய வரிகள் கல்வெட்டுகளில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ் வரிகளின் உண்மைத் தன்மைகளைப்பற்றி நாம் அறிந்து கொள்ள முடியவில்லை. விஜயநகரப் பேரரசில் பிரயாணம் செய்த அயல் நாட்டவர்களாகிய அப்துர் ரசாக், பீயஸ், நூனிஸ் என்ற மூவரும் அக் காலத்தில் அரசாங்க அலுவலாளர்கள் வசூல் செய்த பலவிதமான வரிகளைப்பற்றிக் கூறியுள்ளனர். கிராமங்களில் வசூல் செய்யப்பட்ட வரிகளைப்பற்றி அவர்கள் கூறவில்லை. ஆனல், ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின்மீது விதிக்கப்பட்ட சுங்க வரியையும், விபசார விடுதிகளின்மீது விதிக்கப்பட்ட வரிகளையும் பற்றிக் கூறியுள்ளனர். மத்திய அரசாங்கத்தின் வருமானங்கள் எவை, மாகாண அரசாங்கத்தின் வரிகள் எவை, கிராம அமைப்புகளின் வரிகள் எவை என்றும் நம்மால் அறிய முடியவில்லை.

அறிஞர் தே. வே. மகாலிங்கம் அவர்கள் விஜயநகரப் பேரரசின் வருமானங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுவார்.

(1) நிலவரி, *(2)* சொத்துகளின்மீது விதிக்கப்பட்ட வரி, *(3)* வியாபாரப் பொருள்கள் வரி, *(4)* தொழில் வரி, *(5)* பல விதமான தொழிற்சாலைகளின்மீது விதிக்கப்பட்ட வரிகள், *(6)* இராணுவச் சம்பந்தமான வரிகள், *(7)* சாதிகள், சமூகங்களின்மீது விதிக்கப்பட்ட வரிகள், *(8)* நியாயம் வழங்குவதில் விதிக்கப்படும் அபராதங்கள் முதலியன. *(9)* மற்றும் பலவிதமான வருமானங்கள்.

1. நிலத்தின்மீது விதிக்கப்பட்ட வரிகள்தாம் அக் காலத்திய அரசாங்கத்திற்கு மிகுந்த வருமானத்தைக் கொடுத்தன.

அந்த நிலவரியை நன்செய், புன்செய் நிலங்களின்மீது விதிக்கப் பட்டவை எனவும், மற்றும் இருவகையான வரிகள் எனவும் பகுத்துக் கூறலாம்.

நன்செய் நிலங்களின்மீது விதிக்கப்பட்ட வரிகள் : கிராமங் களில் உள்ள நன்செய் நிலங்கள் தேவதானம், பிரமதேயம், திரு விளையாட்டம், மடப்புரம், தளவாய், அக்கிரகாரம், காரக் கிராமம் என்று பலவிதமாகப் பாகுபாடு செய்யப்பெற்றிருந்தன. அவற்றிற்கு ஏற்றபடி வரிகள் விதிக்கப்பட்டன. மற்றும் கார்ப் பாசன நிலங்கள் என்றும், புன்செய்ப் பயிர் நிலங்கள் என்றும் பிரிக்கப் பட்டிருந்தன. கார்ப் பாசன நிலங்களில் நட்டுப் பாழானவை, சாவியாகப் போனவை, அழிந்து போனவைமீது நிலவரிகள் விதிக்கப்பெறவில்லை. நன்றாக விளைந்த நிலங்களுள் நெல்விளையும் வயல்கள், பயிரிடாத தரிசு நிலங்கள், காடாரம்ப நிலங்கள், கடைப்பூ நிலங்கள் என்ற பாகுபாடுகள் இருந்தன. வாய்க்கால் வழியாக நீர்பாயும் நிலங்கள், ஏற்றம் போட்டு இறைத்துப் பயிர் செய்யும் நிலங்கள் என்ற பிரிவுகளும் இருந்தன. நன்செய் நிலங்களில் வாழை, கரும்பு, நெல் முதலியவை விளைந்த நிலங்கள் எவை என்றும், படுகைத் தாக்குகள் எவை என்றும் பிரிக்கப்பட்டிருந்தன. கத்தரி, பரங்கி, மஞ்சள், இஞ்சி, வெங் காயம், பூண்டு, நெல்லுப் பருத்தி, ஆமணக்கு, வரகு பருத்தி, கடுகு, கடலை, கோதுமை, குசும்பை முதலிய பொருள்கள் விளை விக்கப்பட்ட நன்செய் நிலங்கள் எவை எனவும் பாகுபாடு செய்யப்பட்டன.

புன்செய் நிலங்கள் : கமுகு (பாக்கு), தென்னை, மா, பலா, வாழை, வேம்பு முதலிய மரத் தோட்டங்கள் புன்செய் நிலங் களாகக் கருதப்பட்டன. நீர் இறைத்துப் பாசனம் செய்து, மருக் கொழுந்து, வாழை, கரும்பு, மஞ்சள், இஞ்சி, செங்கழுநீர்ப்பூ முதலியவை பயிரிடப்பட்ட நிலங்களுக்குத் தோட்டப்புரவு என்ற வரி விதிக்கப்பட்டது. ஒன்றும் விளையாத புன்செய் நிலங்கள் சதுப்பு நிலங்களாகக் கருதப்பட்டன.

கிராம சம்பந்தமுள்ள வரிகள் : கிராமங்களில் ஆடு, மாடுகள் மேய்வதற்கேற்ற மேய்ச்சல் தரைகளில் ஆடு, மாடுகளை மேய்ப்ப தற்குத் தனியான மேய்ச்சல் வரிகள் விதிக்கப்பட்டன. கிராமங் களில் இருந்த வீடுகள், கூரை வீடுகளா, மாடி வீடுகளா, ஓட்டு வீடுகளா, அடைப்புத்தாழ் வீடுகளா என்பதற்கேற்ப வாசல் பணம் என்ற ஒருவித வரி வசூலிக்கப்பட்டது.

மற்ற அரசாங்க வரிகள் : அரசாங்க மேலாள்களுக்கும், கிராம அதிகாரிகளுக்கும் ஊதியம் கொடுப்பதற்காகப் பல விதமான்

வரிகளை நிலமுடைய மக்கள் கொடுக்க வேண்டி யிருந்தது. கல் வெட்டுகளில் பின்வரும் வரிகள் கூறப்பட்டுள்ளன. காரணீக ஜோடி, தலையாரிக் காணம், நாட்டுக் கணக்குவரி, இராயச வர்த்தனை, அவசர வர்த்தனை, அதிகார வர்த்தனை, நோட்ட வர்த்தனை, நிருபச் சம்பளம், ஆற்றுக்கு நீர்ப்பாட்டம், பாடிகாவல் முதலியன வாகும். மற்றும் கிராமங்களில் இருந்த சிறு கோவில் கள், சத்திரங்கள், மடங்கள் முதலியவற்றைப் பராமரிக்கப் பிடாரி வரி, விபூதிக் காணிக்கை, ஆடிப்பச்சை, கார்த்திகைக் காணிக்கை, திருப்புடியீடு, பிரசாத காணிக்கை எனப் பல வரி களைக் கிராம மக்கள் கொடுக்கவேண்டியிருந்தது.

வரிகள் விதிக்கப்பட்ட முறை: நிலங்களின்மீது வரிகள் விதிக்கப் படுவதற்குமுன் நிலங்கள் அளக்கப்படுதல் முறையாகும். 1513ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டின்படி விஜய நகரப் பேரரசின் நிலங்கள் எல்லாம் கிருஷ்ணதேவராயர் ஆட்சி யில் அளக்கப்பட்டன என்று நாம் அறிகிறோம். கிருஷ்ண தேவ ராயர் ஆட்சிக்குமுன் பல்வேறு இடங்களில் பலவிதமான நில அளவு கோல்கள் இருந்தனவெனத் தெரிகிறது. திருப்புட்குழி என்னும் இடத்தில் கிடைக்கப்பெற்ற ஒரு கல்வெட்டின்படி நாடளவு கோலென்றும், இராஜவிபாடன் கோலென்றும் இரண்டு அளவுகோல்கள் இருந்தன எனத் தெரிகிறது. 1390ஆம் ஆண்டில் திருப்பாலிவனம் என்னு மிடத்தில் எழுதப்பெற்ற ஒரு கல்வெட்டின்படி கண்டராயகண்டன்கோல் என்ற மற்றோர் அளவு கோல் இருந்தது. 1447ஆம் ஆண்டில் மகதை மண்டலத்தில் உள்ள நிலங்கள் 18 அடி நீளமுள்ள கோலால் அளக்கப்பட்டது என்றும், அதனால் நிலவரி விதிப்பதிலும், வசூலிப்பதிலும் பல சங்கடங்கள் தோன்றியதால், நில அளவுகோல் 20 அடி நீள மாக்கப் பெற்றது என்றும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. 1504-05ஆம் ஆண்டில் ஸ்ரீமுஷ்ணம் பகுதியிலுள்ள நிலங்கள் 34 அடி நீளமுள்ள கோலால் அளக்கப்பெற்றன என்று அறிகிறோம். இவற்றால் விஜயநகரப் பேரரசில் ஒரேவித அளவுள்ள அளவுகோல் கொண்டு நிலங்கள் அளக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

விஜயநகரப் பேரரசின் பல பகுதிகளில் இருந்த நிலங்களின் நீர்ப்பாசன வளத்திற்கும், விளைச்சலுக்கும் ஏற்றாற்போல் நிலவரி விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. நிலத்தின் மொத்த விளைச்ச லுக்கு ஏற்றாற் போலவும், நாற்றங்கால்களில் விடப்படும் விதையின் அளவிற்கு ஏற்றாற் போலவும் நிலவரி விதிக்கப்படுவதும் நடந்தது. புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள திருக்கட்டளைத் திருக் கோவிலுக்குச் சொந்தமான தேவதான திருநாமத்துக் காணி

நிலங்களில் விளைச்சலில் பத்தில் ஐந்து பங்கை (நன்செய், புன்செய்) அரசாங்கம் வரியாக விதித்தது. ஆந்திர நாட்டில் ஒரு தூம் (Tum) நிறையுள்ள விதை விதைக்கப்படும் நிலத்திற்கு எட்டு வராகன் நிலவரி விதிக்கப்பட்டது. புன்செய் நிலங்களுக்கு அந்நிலங்களை உழுவதற்குச் செலவாகும் ஏர்களின் கணக்குப்படியும் அல்லது நடவு நடுவதற்குச் செலவாகும் ஆள்களின் கணக்குப்படியும் வரிகள் விதிக்கப்பட்டன.

முதலாம் ஹரிஹர தேவனுக்கு உதவியாக இருந்து விஜயநகரத்தைத் தாபிப்பதற்கு உதவி செய்த மாதவ வித்யாரண்யர், தாம் எழுதிய பராசர ஸ்மிருதி உரையில் பின்வருமாறு நிலத்தின் விளைச்சல் பிரிக்கப்பட வேண்டுமெனக் கூறுவார். $2\frac{1}{2}$ குத்திகள் அளவுள்ள நிலத்தின் மொத்த மகசூல் 30 புட்டிகள் என்று கொண்டால்,

நிலவுடைமை உரியவருக்கு	$\frac{1}{4}$ பகுதி —	$7\frac{1}{2}$	புட்டி
பயிரிட்டவனுக்கு	$\frac{1}{2}$ பகுதி —	15	,,
அரசாங்கத்திற்கு	$\frac{1}{6}$ பகுதி —	5	,,
கோவில்களுக்கு	$\frac{1}{30}$ பகுதி —	1	,,
அந்தணர்களுக்கு	$\frac{1}{20}$ பகுதி —	$1\frac{1}{2}$	,,

பாரசர மாதவ்யம் என்ற நூலில் மேற்கண்டவாறு ஆறில் ஒரு பங்கு அரசாங்க வரியாக விதிக்கப்பெறுதல் வேண்டுமெனக் கூறப்பட்டிருந்த போதிலும் விஜயநகர அரசர்கள் இவ் விதியைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. 'மனுதர்ம நூலில் குறிப்பிடப்பட்ட ஆறில் ஒரு கடமையை இந்து அரசர்களும், முகம்மதிய சுல்தான்களும் பின்பற்றியதாகத் தெரியவில்லை. நிலத்தின் மொத்த வருமானத்தில் சரிபாதியை விஜயநகர அரசர்கள் வசூலித்ததனர் என்று பர்னல் (Burnell) என்பார் கூறுவார். 'விஜயநகர ஆட்சியில் 42 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மொத்த வருமானத்தில் வரியாக விதிக்கப்பட்டது என ஹயாவதானராவ் கூறுவார். எல்லிஸ் (Ellis) என்பார் வட மொழியிலுள்ள நீதி நூல்களில் கூறப்பட்ட ஆறில் ஒரு கடமை அல்லது நான்கில் ஒரு பகுதியை விட அதிகமாகவே விஜயநகரத்தரசர்கள் நிலவரி விதித்தனர் என்பார்.

நிலவரியின் மொத்த வருமானம்: கர்னல் மெகன்சி சேகரித்த கையெழுத்துப் பிரதிகளை நன்கு பரிசோதனை செய்த பிறகு லூயி ரைஸ் (Luis Rice) என்பவர் விஜயநகரத்து அரசர்களுக்கு நிலவரியின் மூலமாக 81 கோடி வராகன்கள் கிடைத்திருக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். கர்நாடக இராசாக்களின் சவிஸ்தார சரித்திரம் என்னும் நூலில் கிழக்குக் கர்நாடகப் பிரதேசத்திலிருந்து

மூன்று கோடி ரூபாய் நிலவரியாக வசூலாகியது என்று கூறப் பட்டுள்ளது. 'விஜயநகரத்தரசருக்குத் தினம் ஒன்றிற்கு 12,000 வராகன்கள் நிலவரி வருவதாகத் தாம் கேள்விப்பட்ட தாக' வார்த்திமா என்பவர் கூறியுள்ளார். விஜயநகரப் பேரரசில் இருந்த நாயக்கன் மார்கள் ஆண்டுதோறும் தங்களுடைய நில வருமானத்தின் சரிபாதியாகிய அறுபது இலட்சம் வராகன் நிலவரியாகச் செலுத்தினர் என்று நூனிஸ் கூறியுள்ளார். பர்ஹாளிமாசீர் என்ற வரலாற்று நூலின் ஆசிரியர் விஜயநகரப் பேரரசர் சதாசிவ ராயருக்கு ஆண்டுதோறும் 12 கோடி (ஹூன்) வராகன் நிலவரி வருமானம் வந்ததெனக் கூறியுள்ளார். மேற்கூறப்பெற்ற செய்திகளில் எது உண்மையானது என்றும், விஜயநகரத்தரசர்களின் மொத்த நிலவரி எவ்வளவு என்றும் அறுதியிட்டுக் கூறுவதற்கு ஏற்ற வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கவில்லை. நிலவரியிலிருந்து கிடைத்த வருமானத்தோடு அரசனுக்கே உரிய பண்டாரவாடை நிலங்களிலிருந்தும் நிலவரி கிடைத்தது.

2. சொத்து வரிகள்: நன்செய், புன்செய் நிலங்கள் தவிர மற்றச் சொத்துகளின்மீது விதிக்கப்பட்ட வரிகளைப் பற்றிய செய்திகள் விஜயநகர ஆட்சிக்காலத்துக் கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றன. அவைகளுள் முக்கியமானவை சிறிய கதவுகள் உள்ள வீடுகள் (அடைப்புத் தாழ்கள்) பூமிக்குள் இருந்த புதை பொருள்கள், நிலவறைகள், ஊற்றுப் பட்டம் (நீர்ச்சுனை), கோவில்கள், குருக்கள் வீடுகள் ஆகியவற்றின் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. வாசல்பணம், மனைக்கூலி, எருமைகள், எருமைக் கடாக்கள், குதிரைகள், வண்டி, உழவு மாடுகள், ஆடுகள் மற்ற வாகனங்கள், தென்னை மரங்கள் முதலியவற்றின் மீதும் சில வரிகள் விதிக்கப்பெற்றன. இவ் வரிகளைக் கிராமச் சபைகள் அல்லது ஆயக்காரர்கள் வசூலித்திருக்க வேண்டும்.

3. வியாபார வரிகள்: வியாபாரப் பொருள்கள்மீது சுங்கவரி கள் விதிக்கப் பெற்றதையும் கல்வெட்டுகளில் நாம் காண்கிறோம். இந்த வியாபார வரிகளைத் தல ஆதாயம், மார்க்காதாயம், மாமூல் ஆதாயம் என மூவகையாகப் பிரிக்கலாம். ஒரு சந்தையிலோ, கடைத்தெருவிலோ விற்பதற்காகக் கொண்டுவந்த பொருள் களின்மீது விதிக்கப்பட்ட வரிகளுக்குத் தலாதாயம் என்றும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பொருள்களை ஏற்றிச் செல்லும் பொழுது விதிக்கப்பட்ட வரிகளுக்கு மார்க்காதாயம் என்றும், அயல்நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் பொழுது விதிக்கப்பட்ட வரிகளுக்கு மாமூலாதாயம் என்றும் பெயர்கள் வழங்கின. கண்ணுடி வளையல்கள், செப்புக் குடங்கள்,

சவர்க்காரக் கட்டிகள் தவிர மற்ற எல்லாப் பொருள்களின்மீதும் மேற்கண்ட வரிகள் விதிக்கப் பெற்றன. விலைக்காணம், விற் பணம், கைவிலைக் காணம் முதலிய வரிகளைக் கடைக்காரர்கள் கொடுத்தனர். சந்தைகள் கூடும் இடங்களில் சந்தை முதல் என்ற வரி விதிக்கப்பட்டது.

புனிதமான இடங்களுக்குச் செல்லும் மார்க்கத்தில் விற்கப் படும் ஆடம்பரப் பொருள்களை வைத்துத் தோள்களில் சுமந்து செல்லப்படும் காவடிகள், பொதிமாடுகள், குதிரைகள், கழுதைகள்மீது ஏற்றிச் செல்லப்படும் பொருள்கள், தலைச் சுமைப் பொருள்கள் முதலியன வரிகளுக்குட்பட்டன. மீன்களை யும், ஆட்டுக்கடாக்களையும் விற்பதற்காக வசூலிக்கப்பட்ட வரி களுக்குப் பாசி விலை, ஆட்டுக்கடாச் சுங்கம் என்ற பெயர்கள் வழங்கின. ஆந்திர நாட்டின் பெருவழிகளில் காணப் பெற்ற சத்திரச் சாவடிகள், தண்ணீர்ப் பந்தல்கள், உப்பளங்கள் முதலிய வற்றின்மீதும் வரிகள் விதிக்கப்பட்டன எனத் தெரிகிறது. மேற் கூறப்பட்ட வரிகள் எல்லாம் விலையான பொருள்கள்மீதுதான் விதிக்கப்பட்டன. நாகலாபுரம் என்ற நகரத்தில் விலையான பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரிகள் மூலம் மாத்திரம் 42 ஆயிரம் வராகன்களுக்குமேல் வருமானம் வந்ததென நூனிஸ் கூறியுள்ளார்.

4. தொழில் வரிகள்: தொழிலாளர்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பரம்பரையாகத் தொழில் செய்தவர்களின்மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. ஆட்டு, மாட்டு இடையர்கள், தச்சர்கள், சலவை செய்வோர், குயவர், சக்கிலிகள், இசை வல்லுநர்கள், தங்கமுலாம் பூசுவோர், கள் இறக்குவோர், சித்திரம் எழுதுவோர், பொற் கொல்லர்கள், புரோகிதம் செய்யும் அந்தணர்கள் முதலியோர்கள்மீது தொழில் வரிகள் விதிக்கப்பட்டன. பறையடிக்கும் பறையர்கள், வண்ணி யர்கள், பரதேசிகள், விபச்சாரம் செய்வோர் முதலிய தொழி லாளர்கள் மீதும் வரிகள் விதிக்கப்பட்டன. தொழில் வரி செலுத்தியவர்களுக்குள் முடி திருத்தும் தொழிலாளர்கள் விஜய நகர ஆட்சியில் பல சலுகைகளை அடைந்தனர். ஆந்திர நாட்டில் கொண்ட ஜா என்ற தொழிலாளி சதாசிவராயருக்கும், அவரிய ராமராயருக்கும் தன்னுடைய கை வன்மையைக் காட்டி முடி திருத்தியமையால் சவரத் தொழிலாளர்கள்மீது விதிக்கப்பட்ட தொழில் வரிகள் பல நீக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட தொழில் வரிகள் ஆண்டுக்கு ஒரு முறை விதிக்கப்பட்டன என இரண்டாம் புக்கராயர் கல்வெட்டு ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

5. கைத் தொழில் வரிகள் : தொழில் வரிகள் தனிப்பட்ட தொழிலாளர்கள்மீதும் அரசாங்க அலுவலாளர்கள்மீதும் விதிக்கப்பட்டன. கைத் தொழில் வரிகள் சிறுகைத் தொழில்களாகிய துணி நெய்தல், எண்ணெய் எடுத்தல், நூல் நெய்தல், மரக்கலம் செய்தல் ஆகிய தொழில்களின்மீது விதிக்கப்பட்டன. கல்வெட்டுகளில் தறிக் கடமை, செக்குக் கடமை, அரிசிக் காணம், பொன்வரி, செம்பொன் வரி, புல்வரி, நூலாயம், பட்டடை நூலாயம், மரக்கல ஆயம் முதலியன தொகுத்துக் கூறப்பட்டு உள்ளன. கொல்லன் உலை வரி (Furnace tax) என்ற வரி. இரும்புத்தூள் நிறைந்த மணலை உருக்கி இரும்பைப் பிரித்து எடுக்கும் தொழிலுக்கு விதிக்கப்பட்டது. வைரக் கற்களை மலைப் பகுதிகளிலிருந்து எடுக்கும் தொழில் அடைப்ப நாயக்கர் அதிகாரத்தில் இருந்தது. அடைப்ப நாயக்கர் ஆண்டுதோறும் நாற்பதினாயிரம் வராகன்களை வைரக் கற்களை எடுக்கும் தொழில் வரியாக அரசருக்குச் செலுத்தியதாகவும் இருபது மாங்கலின்களின் எடைக்கு அதிகப்பட்ட வைரங்களை அரசருக்கு இனமாக அளித்ததாகவும் தெரிகிறது.

6. இராணுவ சம்பந்தமான வரிகள் : பேரரசில் இருந்த இராணுவ தளக் கோட்டைகளையும், கோட்டைகளுக்குள்ளிருந்த சேனைகளையும் பாதுகாக்கத் தனியான வரிகள் விதிக்கப்பட்டன. தளவிலி, தன்னுயக்கர் சுவாம்யம், தன்னுயக்கர் மகமை, படை காணிக்கை, சேனை ஆயம் முதலிய வரிகள் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன. இராணுவக் கோட்டைகளைப் பாதுகாக்கக் கோட்டை மகமை, பீரங்கி வரி, கோட்டைப் பணம் அல்லது கோட்டைப் பதிவு என்ற வரிகள் மக்களிடமிருந்து வசூலிக்கப் பட்டன. திருநெல்வேலி, கன்னியாகுமரி, கொல்லம் முதலிய தென்பிராந்தியங்களில் இருந்த அரசர்கள் கோட்டைகளைப் பாதுகாக்கக் கோட்டை ஒன்றிற்கு நூற்றிருபத்தைந்து பணங்கள் பெற்றதாகத் தெரிகிறது. பட்டாயக் காணிக்கை, வில்வரி, சூல வரி என்ற ஆயுத வரிகளும் மக்களிடமிருந்து வசூலிக்கப்பெற்றன.

7. சாதி - சமூக வரிகள் : தொம்பக் கூத்தாடிகள் என்ற சாதியினருக்காகத் தொம்பாரியர் பணம் என்றும், கோவில்களில் திருவிழாக்கள் நடத்துவதற்குச் சில சாதிகளிடம் மகமைக் காசு என்றும் வரிகள் வழங்கப்பட்டன. கண்ணுலக் காணிக்கை என்னும் கலியாண வரிகள் சோழப் பேரரசர்கள் காலத்திலிருந்து வாங்கப்பட்டது. கலியாண ஊர்வலங்கள் கலியாணப் பந்தர்கள், பல்லக்கில் ஊர்வலம் வருதல் முதலியவற்றிற்கும் வரிகள் இருந்தனவாகத் தெரிகிறது. சாதி சமூக அமைப்புகளாகிய இடங்கை,

வலங்கைப் பிரிவுகளுக்கும், ஐங்கமர், மதிகர், ஜீயர் என்ற இனப் பிரிவுகளுக்கும் சில வரிகள் விதிக்கப்பட்டன. சாதிக் கூட்டங்கள் நடத்துவதற்குப் பாட்டிறை, சம்மதம், சுங்க சாலை வரி என்ற வரிகள் விதிக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட சமூக வரிகளில் மக்களுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது கண்ணுலக் காணம் என்ற கலியாண வரியாகும். இந்தக் கலியாண வரி சமூகத்தில் இருந்த எல்லாவிதச் சாதிகளின் பெண்ணும், மாப்பிள்ளையும் கொடுக்க வேண்டியிருந்ததால் சமூகத்தில் இவ் வரிக்குப் பெரிய எதிர்ப்புத் தோன்றியது. கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் பேரரசின் பல மாகாணங்களில் இந்தக் கலியாணவரி நீக்கப்பட்ட தாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. சாளுவத் திம்மர், சாளுவ கோவிந்தய்யர், அடைப்ப நாயனங்கார் என்ற அமைச் சர்களின் அறிவுரையின்படி, கிருஷ்ண தேவராயர் இந்த வரியை நீக்கியுள்ளார்.*

8. நியாயம் வழங்குவதில் கிடைத்த வரிகள் : கிராமங்களில் மக்கள் குடிபோதையினல் ஒருவரோடொருவர் அடித்துக் கொள் வதற்கும், திருட்டு, விபசாரம், தீ வைத்தல் முதலிய குற்றங் களுக்கும் அபராதங்கள் விதிக்கப்பட்டன. கொலைக்குற்றங்களும் மிக்க தீவிரமாகத் தண்டிக்கப் பட்டன. கிராமத் தலைவர்கள் இக் குற்றங்களை விசாரித்து அபராதங்கள் விதித்து அபராதங்களில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்தினர். கற்புநிலை தவறிய சில பெண்களை அவர்களுடைய கணவன்மார்கள் தங்கள் சாதியைச் சேர்ந்த மற்றொருவனிடம் விற்றுவிட்டு ஒரு குறிப் பிட்ட தொகையைப் பெற்றுக் கொள்ளும் வழக்கமும் இருந்தது. தோட்டங்கள், பயிர் பச்சைகளை அழித்த ஆடு, மாடுகளைப் பட்டியில் அடைத்து, அவைகளின் சொந்தக்காரர்களிடமிருந்து அபராதத் தொகையும் பெறப்பட்டது.

மாமூல் வரிகள் : ஒராண்டின் முக்கியமான நாள்களிலும், சிறப்புக் காலங்களிலும் கார்த்திகை அவசரம், தோரணக் காணிக்கை, தரிசனக் காணிக்கை, காவல்காரனுக்கு உணவு, அதிகார வர்த்தனை, தாட்டையக் கோல், புறவட்டம், தாச வந்தம், வாரப்பற்று முதலிய இனம் புரியாத சில மாமூல் வரிகள் வாங்கப்பட்டன. ஏரி, குளங்கள், கால்வாய் முதலியவைகளைச் சீர்ப்படுத்துவதற்கு ஊழியம், ஆளமஞ்சி முதலிய சிரமதான வரிகள் விதிக்கப்படுவதும் உண்டு. அரசர்கள் கூடாரம் அடித்துக் கிராமங்களில் தங்கும் பொழுது விறகு சுமந்து செல்லும் வழக்கத்திற்கு வெட்டி முட்டி வேகரி, ஆள்தேவை ஏன்ற

*Dr. T. V. M. Arunathalar and Social life. P. 70.

பெயர்கள் வழங்கின. கன்னட நாட்டில் அரசாங்கக் கோட்டையைச் சீர்ப்படுத்த முடியாதவர்கள் கோட்டகே என்ற வரியைக் கொடுத்தனர்.

9 மற்றப் பல்வேறு விதமான வரிகள்: புத்திர சந்தான மில்லாத அந்தணர்களுடைய சொத்துகள் விஜயநகர அரசாங்கத் தாரால்சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவ் விதக் கட்டாயச் சேர்க்கைக்கு அதிக எதிர்ப்புகள் தோன்றியமையால் இவ் வழக்கம் சதாசிவராயர் காலத்தில் கைவிடப் பட்டது. பேரரசிற்கு எதிர் பாராத துன்பங்கள் தோன்றிய காலத்தில் மக்களிடமிருந்து கட்டாயக் கடன்கள் வசூலிக்கப் பட்டன. கல்வெட்டுகளில் கட்டாயம் என்றழைக்கப்படும் வரி இக் கட்டாயக் கடனைக் குறிப் பதாகும். கோவில்களைச் சீர்ப்படுத்துவதற்கும் கட்டாயம் என்ற வரி விதிக்கப்பட்டது. சென்னைத் திருவெற்றியூர்ச் சிவன் கோவிலுக்குக் கட்டாயம் என்ற வரியைக் கொடுக்கும்படி இரண் டாவது தேவராயர் ஆட்சியில் ஓர் ஆணை யிடப்பட்டிருக்கிறது. நீர் நிலைகளாகிய ஏரி, குளங்களைச் சீர்படுத்தி, அதனால், நிலங்களின் விளைச்சலைப் பெருக்குவதனாலும் அரசாங்கத்திற்கு எதிர்பாராத வருமானங்கள் கிடைத்தன. ஸ்ரீபெரும்பூதூரில் உள்ள நீர்ப் பாசன ஏரியைச் செம்மைப்படுத்தி அதிக விளைச்சலால் அரசாங் கத்திற்குக் கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஆதிகேசவ எம்பெருமானுக்குச் சில தான தருமங்களைச் செய்ய 1565இல் ஒரு மகாமண்டலீசுவரர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

வரிவசூல் முறைகள்: விஜயநகர ஆட்சியில் அரசாங்க வருமானங்கள் நாணயங்களாகவும், விவசாயப் பொருள் களாகவும் வசூல் செய்யப்பட்டன. தனியூர்களிலும், சதுர்வேதி மங்கலங்களிலும் விவசாயப் பொருள்களைச் சேமித்து வைப் பதற்குக் கிடங்குகள் இருந்தனவாகத் தெரிகின்றன. சோழப் பேரரசு நிலவிய காலத்தில் விவசாயப் பொருள்களுக்கு நெல் லாயம் என்றும், நாணயமாக வசூல் செய்யப்பட்டவைகளுக்குக் காசாயம் (காசு + ஆயம்) என்றும் பெயர்கள் வழங்கின. விஜய நகர ஆட்சியில் அவைகளுக்கு நெல்முதல், பொன்முதல் என்ற பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இரண்டாவது தேவராயருடைய ஆட்சியில் பொறிக்கப்பட்ட திருவரங்கம் செப்பேடுகளில் தானியங்களாகவும், பொற்காசுகளாகவும் நிலவரிகள் வசூலிக்கப்பெற்றன என்பது விளங்குகிறது. நன்செய் நிலங்களுக்குரிய வரிகள் தானியமாகவும், நாணயமாகவும் இரு வகையில் வசூல் செய்யப்பட்டன. புன்செய் நிலங்களுக்குரிய வரி, நாணயங்களாகவே வசூல் செய்யப்பட்டது. விஜயநகரப்

பேரரசின் வருமானங்கள் பின்கண்ட நான்கு வகைகளாக வசூலிக்கப் பெற்றன என அறிஞர் மகாலிங்கம் அவர்கள் கூறுவார்.

1. அரசாங்க அலுவலாளர்கள் நேரடியாக மக்களிடம் இருந்து நிலவரிகளையும், மற்ற வரிகளையும் வசூல் செய்தனர்.

2. பல வரிகள் தனிப்பட்ட குத்தகைதாரர்களிடம் கட்டுக் குத்தகையாக விடப்பட்டன.

3. சில இடங்களில் கிராமச் சபைகளும், நாட்டுச் சபைகளும் நிலவரியை வசூல் செய்து மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்தன.

4. நாயன்கரா முறையில் நாயக்கன்மார்கள் நிலவரிகளை வசூல் செய்து மொத்த வருமானத்தில் சரிபாதியை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அரசாங்க வருமானங்களில் சலுகைகள் : இயற்கைக் கோளாறுகளினால் ஏற்படும் மழையின்மை, பெருமழை, புயல் காற்று, பூச்சி வெட்டு முதலியவைகளால் உழவர்கள் நட்டமடைந்தால் நிலவரியை விதிப்பதிலும், வசூல் செய்வதிலும் பல சலுகைகளைத் தந்து விஜயநகர அரசாங்கத்தார் குடியானவர்களைக் காப்பாற்றினர். தஞ்சை மாவட்டத்தில் வழுவூர் என்ற இடத்தில் காணப்பெறும் கல்வெட்டு 1402ஆம் ஆண்டில் பொறிக்கப் பட்டது. இக் கல்வெட்டில் காவிரியாற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் நன்செய் வயல்களெல்லாம் மண்மூடி வாய்க்கால் தூர்ந்துபோய், வரப்புகள் இடம் தெரியாமல் எல்லைக் கற்களும் காணமுடியாமல் பாழாகி விட்டன என்று கூறப்பட்டுள்ளது. வழுவூரில் இருந்த நிலமுடையவர்கள் ஊரை விட்டே போகக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது விஜயநகர அரசாங்கத்தார் குடியானவர்களுக்குப் பல சலுகைகளை அளித்து, நிலவரியைக் குறைத்தும், தள்ளிவைத்தும் மீண்டும் நிலங்களைப் பயிரிடும்படி உதவி செய்தனர்.* 1450ஆம் ஆண்டில் எழுதப் பட்டுத் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள ஆடுதுறை என்னும் ஊரில் காணப்படும் கல்வெட்டின்படி உகலூர் சீமையைச் சேர்ந்த பன்னிரண்டு கிராமங்களில் வாழ்ந்த குடியானவர்கள் தாங்க முடியாத வரிச்சுமையால் கிராமங்களை விட்டுக் குடிபெயர்ந்தனர். வீரமராசர் என்ற அரசாங்க அலுவலாளர்

*Dr. T. V. M. of Citus. Vol I P. 83.

நன்செய், புன்செய் நிலங்களின்மீது விதிக்கப்பட்ட வரிகளைக் குறைத்து மீண்டும் அவர்களைக் குடியேறும்படி செய்தார்.

கிருஷ்ண தேவராயர் புதிதாக அமைத்த நாகலாபுரம் ஏரியில் நீர்ப்பாசனம் பெற்ற நிலங்களுக்கு முதல் ஒன்பது ஆண்டு களுக்குத் தண்ணீர்த் தீர்வை யில்லாமல் நிலங்களைப் பயிரிடும்படி உத்தரவிட்டார். பின்னர் அந் நிலங்களிலிருந்து 20 ஆயிரம் வராகன்களுக்குமேல் நிலவரி கிடைத்தது. 1514-15ஆம் ஆண்டில் செம்பிய மங்கலம் என்னும் கிராமம் நமசிவாய நாயக்கர் என்பவருக்கு உழவுக் காணியாட்சியாக வழங்கப்பட்டது. முதல் ஆண்டில் பத்துப் பணமும், பத்துக் கல நெல்லும் கொடுப்பதென் றும் ஐந்தாவது ஆண்டில் 50 பணமும் 50 கலநெல்லும் கொடுக்க வேண்டு மென்றும் நியதி உண்டாயிற்று. கிருஷ்ண தேவராயர் காலத்தில் அரசர்கோவில் என்ற இடத்தில் புதிதாகக் குடியேறிய மக்கள் ஒராண்டிற்கு எவ் விதமான வரியும் கொடுக்க வேண்டுவ தில்லை யென்றும், ஒராண்டிற்குப் பிறகு கொடுக்க வேண்டிய வரிகள் இன்னவையென்றும் நிச்சயம் செய்யப்பட்டன. நாரத்தம் பூண்டி என்னும் இடத்தில் உள்ள அண்ணுமலையார் கோவிலுக்குத் தேவதானமாக விடப்பட்ட கிராமத்தில் குடியிருந்த மக்கள் முதல் ஆருண்டுகளுக்கு நிலவரி செலுத்த வேண்டுவதில்லையென்ற சலுகை தரப்பட்டது. ஸ்ரீரங்கராயபுரம் என்னும் இடத்தில் எதிர்பாராத நிகழ்ச்சியினால் நடந்த கொள்ளையினால் துன்புற்ற நெசவாளர்களும், வியாபாரிகளும் மூன்று ஆண்டுகளுக்கு வரிகள் கொடுக்க வேண்டுவ தில்லை என்ற அரசாணை பிறந்தது. மக்கள் குடிபெயர்ந்து சென்றுவிட்ட கனகவீடு என்னும் கிராமத்தில் மீண்டும் குடியேறுவதற்காக அவர்கள் அரசாங்கத்திற்குத் தர வேண்டிய காணிக்கை 90 வராகன்களைக் கொடுக்க வேண்டுவது இல்லை யென்ற ஆணை பிறந்தது. மக்கள் குடியில்லாத கிராமங்கள் சர்வமானிய இறையிலி யாக்கப்பட்டுக் கோவில்களுக்குத் தானங்கள் செய்யப்பட்டன.*

வருமான இலாக்கா: விஜயநகர அரசின் வருமானங்களைக் கண்காணித்த இலாக்காவிற்கு அட்டவணை என்ற பெயர் வழங்கியது. இந்த இலாக்காப் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தனித்தலைவர் நியமிக்கப்பட்டிருந்தார். பலவிதமான வருமானங்களை வசூல் செய்வதற்குப் பல்வேறு அலுவலாளர்கள் நியமிக்கப் பெற்றிருக்க வேண்டும். புதிய வரிகளை விதிப்பதற்கும், பழைய வரிகளை நீக்குவதற்கும் இந்த அலுவலாளர்களுக்கு ஆணைகள் அனுப்பப்பெற்றன. குமார கம்பணருடைய மகாப்பிரதானியாகிய சோமப்ப உடையாரும்,

*Dr. T. V. M. op. citus. P. 84

பண்டாரநாயகராகிய விட்டப்பரும் சேர்ந்து கூர்மாலி என்னும் இடத்திலிருந்த எதிர்கொண்ட பெருமாள் கோவிலுக்கு ஒரு நந்த வனம் அமைப்பதற்கும், நந்தா விளக்கு எரிப்பதற்கும் புலிநாடு என்னும் பகுதியில் கிடைத்த சுங்க வரிகளைத் தானம் செய்தனர். இந்தத் தான ஆணை, புலிநாட்டில் சுங்க வரிகளை வசூல் செய்த அதிகாரியாகிய மெய்த்தேவர் என்பவருக்கு அனுப்பப்பெற்றது. முல்பாகல் இராச்சியத்திலும். எருமுறை நாட்டிலும் இருந்த சுங்க அதிகாரிகளைப்பற்றி ஹோசக்கோட்டை என்னு மிடத்தில் காணப்பெறும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூரிலுள்ள சாசனம் ஒன்று, நெச வாளர்களின் ஒவ்வொரு தறிக்கும் ஒரு பணம் வீதம் சுங்கவரி வசூல் செய்யும்படி ஸ்ரீகிரிநாத உடையர் சுங்க அதிகாரிகளுக்கு அனுப்பிய ஆணையைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

இரண்டாம் தேவராயர் ஆட்சியில் திருப்புட்குழி என்னும் கோவிலிலிருந்து சேரவேண்டிய 131 பொன் 6¼ பணம் தொகை யுள்ள (ஜோடி) இரட்டை வரியைப் போரேற்றின் பெருமாள் கோவிலுக்குத் தானம் செய்யும்படி, சந்திரகிரி ஸ்ரீகிரி நாத உடையாருக்கு ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் மூலப் படியோடு ஸ்ரீகிரிநாதரின் திருவாய்ச் சீட்டும் கோவில் தானிகர்களுக்கு அனுப்பப்பட்டது. இந்த ஆணையின் நான்கு படிகள் (Copies) நான்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டன. நாட்டுச் சபைகள் அல்லது நாட்டவர்கள் அரசாங்கத்திற்குரிய வரிகளை வசூல் செய்வதாக இருந்தால் அச் சபையினருக்கு இந்த அரசாங்க ஆணைகள் அனுப்பப் பெறும். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பேரையூர் என்னு மிடத்தில் கிடைக்கும் கல்வெட்டில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. 'சூரைக்குடி திரு மேனி அழகியார் என்பவர் தம் பெயரில் ஒரு தருமம் செய்வதற் காக 150 வாளால் வழிதிறந்தான் குளிசைப் பணத்தை அளித் தார். இந்தத் தொகை பாச்சை(பாசி)ப் பணத்தின் (மீன் வில்லை) வருமான மாகும். பேரையூர் நாட்டவர்கள் இத் தொகையைத் தங்களுடைய வரிப் புத்தகங்களிலிருந்து விலக்கி விட்டனர்.' ஆனால், பிற்காலத்தில் இந்த நாட்டுச் சபைகள் வேலை செய்யத் தவறியதால் ஆயக்காரர் என்ற அலுவலாளர்கள் நியமனம் செய்யப் பெற்றனர். மத்திய அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய வரிகளை, அந்த அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் நாட்டுச் சபைகள் தங்களுடைய வரிப் புத்தகங்களிலிருந்து விலக்க முடியும். கலியாண வரியும், தொழில் வரிகளும் இராச்சியங்கள் தோறும் அல்லது நாடுகள் தோறும் வேறுபட்டிருந்தன. இவ் விரண்டு வரிகளையும் மாகாண வருமான அதிகாரிகளே வசூல் செய்தனர்*.

*Dr T. V. M. op. Citus. P. 88.

மத்திய அரசாங்கத்திற்குரிய வரிகளை மத்திய அரசாங்கமே நீக்குவதற்கு அதிகாரம் இருந்ததாகத் தெரிகிறது. 1468ஆம் ஆண்டில் சாலிக்கிராமம் என்னு மிடத்தில் எழுதப் பெற்ற கல் வெட்டு ஒன்றில் கோட்டையில் வசித்த தலைவர்கள் விஜய நகரத்திற்குச் சென்று இரண்டாம் விருபாட்ச ராயரை நேரில் சந்தித்துச் சித்தாயம் என்ற வரியில் 300 வராகன்களைத் தள்ளிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அப் பகுதியில் ஆளுநராக இருந்த விட்டரசர் என்பவருக்கு இவ் வரியைத் தள்ளிக் கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை என விளங்கு கிறது. தென் கன்னட மாவட்டத்தில் கிடைக்கும் இன்னொரு கல்வெட்டின்படி தேவராய மகாராயர் விரும்பியபடி, பரசூர் இராச்சிய ஆளுநராகிய பானப்ப உடையார், அப் பகுதியில் சித்தாயத்திலிருந்து கிடைக்கும் 121 பொன்னை அங்குள்ள கோவிலுக்குத் தானம் செய்தாரெனத் தெரிகிறது. நிலமானிய முறையில் நிலங்களைப் பெற்ற நாயக்கன்மார்கள் தாங்கள் பேரரசிற்குச் செலுத்த வேண்டிய குறிப்பிட்ட தொகையைக் குறைத்துக் கொடுப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. பட்டா என்ற கணக்குப் புத்தகங்களில் நாயக்கன்மார்களுடைய பெயர்களும் அவர்கள் செலுத்த வேண்டிய தொகையும் வரிசைக் கிரமமாக எழுதப்பெற்று இருந்தன.

விஜயநகர அரசாங்கத்திற்குக் குடிமக்கள் செலுத்த வேண்டிய வரிகள் பலதிறப்பட்டவையாகவும், சிறுதொகை களாகவும் இருந்தால் அவற்றை யெல்லாம் சேர்த்து ஒரு பெருந் தொகையாக மாற்றி அமைப்பதும் உண்டு. எடுத்துக்காட்டாகத் திருவாமாத்தூர் அழகிய நாயனார் கோவில் தானிகர்கள், அங்கு வசித்த கைக்கோளர்களிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன்படி கைத்தறி ஒன்றிற்கு ஆண்டிற்கு ஆறுபணம் வீதம் மொத்தமாக (மற்ற வரிகளை நீக்கி)க் கோவிலுக்குக் கொடுத்து விட வேண்டும் என்பதாகும். மகதை மண்டலத்து ஆளுநராக இருந்த மாரய்ய நாயக்கர் ஓர் உத்தர வளித்துள்ளார். அதன்படி மகதை மண்டலத்து நாட்டுச் சபையாருக்கு மொத்தமாக அரசு காணிக்கை கொடுப்பதற்கு மக்கள் ஒப்புக்கொண்டனர். அடுத்த ஆண்டுகளில் காணிக்கை வசூலிப்பது சட்ட விரோதச் செயலாகும் என்பதாகும். 1404ஆம் ஆண்டில் இரண்டாம் புக்கர் ஆட்சியில் புலிப்பாரக் கோவிலில் வாழ்ந்த செட்டிகள், கைக்கோளர்கள், வணிகர் முதலியவர்கள் ஆள் ஒருவற்கு இரண்டு பணம் வீதமும், தறி ஒன்றிற்கு இரண்டு பணம் வீதமும் மொத்தமாகத் தர சம் மதித்துள்ளனர். மைசூர் நாட்டில் மாலவல்லித் தாலுக்காவில் புக்கணன் என்பார் பொப்ப சமுத்திரம் என்னும் கிராமத்தை

எல்லா வரிகளையும் நீக்கிக் கம்பணன், சௌடப்பன் என்ற இரு வருக்கும் மொத்தமாக 40 வராகன் குத்தகைக்கு 1388இல் கொடுத்துள்ளார். இராமநாதபுரம் மாவட்டத்தில் திருக்காளக் குடி என்னும் ஊரில் அழகிய மணவாளப் பெருமான் தொண்டை மானர் என்பார் நாத்திமங்கலத்தைச் சேர்ந்த ஒருவர் கொடுக்க வேண்டிய வரிகளுக்குப் பதிலாக நெல்லூதியமாகக் கொடுத்து விடவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். குடிகளும், நாயக்கன் மார்களும் கொடுத்த வரிகளுக்கு விஜயநகரத்து அரசாங்கத் தாரும், அரசனும் இரசீது கொடுப்பதில்லை என்ற நூனிஸ் கூற்றில் உண்மை யிருப்பதாகத் தெரிய வில்லை.

விஜயநகரப் பேரரசின் நிதியாண்டு (Financial year) மகாநவமி அல்லது மகாநோன்பு விழா ஒன்பது நாள்களுக்கு நடக்கும் பொழுது செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் தொடங்குவது வழக்கம். அப்பொழுது அரசாங்க வருமானத்தின் வரவு செலவுக் கணக்குகள் நேர் செய்யப்படுவது வழக்கம். செப்டம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதியன்று நிதியாண்டு தொடங்கி அக்டோபர் மாதம் முதல் தேதி வரையில் நீடித்தது என்று பீயஸ் கூறுவர். அக்டோபர் மாதத்தில் அமாவாசையன்று புதிய ஆண்டு தொடங்கிய தென்றும் சந்திரனுடைய வளர்பிறை, தேய் பிறையைச் சேர்த்து மாதங்களைக் கணக்கிட்டனர் என்றும் கூறுவர். நவராத்திரி அல்லது மகாநவமி பண்டிகையின் ஒன்பது நாள்களுக்குள் பேரரசிற்குரிய நிலமானிய முறை வருமானங்களை நாயக்கன்மார்கள் கொடுத்தனர். ஆனல் நூனிஸ் என்பார் ஆண்டு தோறும் நாயக்கன்மார்கள் கொடுக்க வேண்டிய நில மானியத் தொகை செப்டம்பர் மாதத்தில் நிச்சயம் செய்யப் பெற்று மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பேரர சிற்குக் கொடுத்து வந்தனர் எனக் கூறியுள்ளார்.

விஜயநகரப் பேரரசில் வரிக்கூறுகள் : விஜயநகர ஆட்சிக் காலத் தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுகளிலிருந்து அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட வரிகளின் சுமை குடிமக்களால் சுலபமாகத் தர முடியாமலிருந்ததெனப் பொதுவாகக் கூறலாம். பூங்குன்றப் பற்றைச் சேர்ந்த வேலங்குடி மறவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலவரிகளைச் செலுத்த முடியாமல் திருக் கோலக்குடி ஆண்ட நாயனருடைய கோவிலுக்குத் தங்களுடைய நிலங்களை விற்று இராசகரத்தைச் செலுத்தினர். 1519ஆம் ஆண்டில் திருவரங்குளம் பகுதியிலிருந்த குடியானவர்களும் பாடி காவல் உரிமை பெற்றவர்களும், சுவாமி நரசநாயக்கருக்கு இறுக்க வேண்டிய கடமைகளைக் கொடுக்க முடியாமல் தவித்தனர். திரு வரங்குளம் கோவிலுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய வேண்டு

கோள் விநியோகம், எற்சோறு, குற்றரிசி, வெட்டிமுட்டியல் முதலியவற்றையும் கொடுப்பதற்காகத் தங்களுடைய நிலங்களை மேற்படி கோவில் தானத்தாருக்கும், பண்டாரத்திற்கும் விலையாக விற்றனர்.

அரசாங்கத்தால் விதிக்கப்பெற்ற வரிச்சுமை தாங்க முடியாது எனக் கருதிய ஊர்ச் சபைகளும், வலங்கை, இடங்கை 98 ஜாதிகளும் சேர்ந்து இராசகரத்தின் அநியாயத்தை எதிர்ப்பதும் நடந்துள்ளது. 1429ஆம் ஆண்டில் பராந்தக நாட்டு வலங்கை, இடங்கைச் சாதிகளும் திருவைகாவூரில் வாழ்ந்த குடியானவர்களும் சேர்ந்து அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட வரிகளின் தன்மையைப் பற்றிப் பின்வரும் தீர்மான மொன்றை இயற்றியுள்ளனர். 'ஹொய்சள (கன்னடர்) அரசர்களுடைய ஆட்சிக் காலமுதல் இப் பகுதி (திருவைகாவூர்), கோவில் வேலைக்காரருக்கு ஜீவிதப்பற்றாக இருந்து வந்தது. எங்களிடம் இதுவரையில் ஒரு வரும் எவ் வித வரிகளையும் வசூலித்த தில்லை; இப்பொழுது எங்களுடைய நிலங்கள் பிறருக்கு அடைவோலை முறையில் தரப் பட்டுள்ளன; புரவு வரிகளும் வசூலிக்கப்பெறுகின்றன. இவற்றால் இந்த நாடு முழுவதும் பாழடைந்துவிட்டது.' இறுதியாக, இந்த மண்டலத்தில் மக்களுடைய சம்மதமின்றிப் புதிய வரிகளை விதிக்கக் கூடாது. முன்பிருந்த மாமூல்களே நிலைபெற வேண்டும் எனவும் தீர்மானித்தனர்.*

பழமலை என்ற விருத்தாசலத்தில் வாழ்ந்த வலங்கை, இடங்கை வகுப்புச் சாதியினர் மேலும் ஒருபடி கூடுதலாகச் சென்று ஒருவிதமான ஒத்துழையாமை இயக்கத்திலும் ஈடுபட்டனர். 'அரசாங்க அலுவலாளர்களும் ஜீவிதப்பற்றுடையவர்களும் மக்களைத் துன்புறுத்துகின்றனர். காணியாளர்களும், பிராமணர்களும் இராசகரத்தை வசூலிக்கின்றனர்.' ஆகையால், வலங்கை, இடங்கைச் சாதியினர் மேற்கூறப்பட்டவர்களுக்கு எவ் விதமான ஆதரவும் தரக்கூடாது. அவர்களுடன் ஒற்றுமையை விட்டு அவர்களுக்குக் கணக்குகள் எழுதவும் கூடாது. இத் தீர்மானங்களுக்கு இசையாதவர்கள் நாட்டிற்கும் சமூகத்திற்கும் துரோகம் செய்தவர்களாவர். அவர்களைக் கொலை செய்வதில் பாவமில்லை. இந்தத் தீர்மானத்திலிருந்து அரசாங்கத்தார் விதித்த வரிச் சுமைகளின் கொடூரத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கொறுக்கையில் கிடைத்த கல் வெட்டில் காணப்பெறும் தீர்மானம் ஒன்றும் மேற் கூறப்பட்ட

*Dr. T. V. M. op. citus. P. 92.

தோடு ஒற்றுமை யுடையதாகத் தெரிகிறது. அரசாங்கத்தார் 'நம்முடைய நிலங்களின் விளைச்சலுக்கு ஏற்றபடி வரி விதிக்காமல் தாறுமாறான முறையில் வரி விதித்துள்ளனர். ஆகையால், நாம் ஊரை விட்டு ஓட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இந்த மண்டலத்திலுள்ள இடங்கை வலங்கைச் சாதியினரும் மற்றையோரும் ஒற்றுமையின்றி இருப்பதால் அரசாங்க அலுவலாளர்கள் நம்மை நியாயம் இன்றி நடத்துகின்றனர். நிலங்களில் விளைந்த பயிர்களுக்கு ஏற்றவாறு வரி செலுத்துவதே நியாயமாகும். அநியாய வரிகளைச் செலுத்துவதற்கு எங்களால் முடியாது.' பின்னர் நன்செய், புன்செய், தோட்டங்கள் முதலியவற்றின்மீது விதிக்கப்படும் வரிகளையும், கமுகு, மா, பலா, வாழை, பனை, கரும்பு, செந்தாமரை, ஆமணக்கு, எள்செடி, மஞ்சள், இஞ்சி முதலிய விளைபொருள்களுக்கும், செம்பரதவர், குயவர், கைக்கோளர், நாவிதர், வண்ணார், எண்ணெய் வணிகர், கள் விறக்குபவர், ஓவியர் முதலிய தொழிலாளர்களுக்கும் விதிக்கப்படும் வரிகளையும் தாங்களே நிச்சயம் செய்து கொண்டனர்.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பெண்ணாகடத்தில் வாழ்ந்த வலங்கை இடங்கைச் சாதியார்களும் மேற்கூறியவாறே அரசாங்க அலுவலாளர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து ஒத்துழையாமை இயக்கத்தைப் பின்பற்றினர். விஜயநகரப் பேரரசில் சில பகுதிகளில் ஒற்றுமையுணர்ச்சியுடன் அரசாங்கத்தோடு ஒத்துழையாமை இயக்கத்தைப் பின்பற்ற முடியாதவர்கள், தங்களுடைய நிலங்கள், வீடு வாசல்களை விட்டு வேறிடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். அவர்களை மீண்டும் தங்களுடைய சொந்தக் கிராமங்களில் குடியேறச் செய்வதற்காக விஜயநகர அரசாங்கம் வரிகளைக் குறைத்ததாக நாம் அறிகிறோம். விருபண்ண உடையார் ஆட்சிக் காலத்தில் பெருநகர் என்ற இடத்தில் வாழ்ந்த நெசவாளர்கள் தாங்கள் வசித்த பகுதிகளை விட்டுக் குடிபெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்று விட்டனர். அரசாங்கம் விதித்த வரிகளைக் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் குடிபெயர்ந்து சென்றமையால், அவர்கள் கொடுக்க வேண்டிய வரிகளைக் குறைத்து மீண்டும் தங்களுடைய இருப்பிடங்களில் குடியேறுமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1419 ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மருங்கூர்க் கோவிலின் திருமட விளாகத்தில் வசித்த கைக்கோளர்களுக்கு விதித்த வரிகள், இடையாறு என்ற இடத்தில் வசித்த கைக்கோளர்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளுக்குச் சமமாகக் குறைக்கப்பட்டன.

1446ஆம் ஆண்டில் திருவதிகையில் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டின்படி இடங்கை வலங்கைச் சாதியார்களின்மீது விதிக்கப்பட்ட இனவரி, அளவிற்கு மிஞ்சியதாக இருந்தமையால் மேற்கூறப்பட்ட இனத்தவர்கள் தங்களுடைய இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். திருவதிகையில் அவர்கள் வாழ்ந்த இடங்கள் பொலிவிழந்து நின்றன. இரண்டாம் தேவராயர், நாகராசு உடையார் என்ற அலுவலாளருக்கு ஓர் ஆணையனுப்பி, மேற்படி சாதியார்கள் மீண்டும் தங்களுடைய இருப்பிடங்களில் குடியேறும்படி செய்தார். 1500ஆம் ஆண்டில் மகதை மண்டலத்தில் வாழ்ந்த மக்கள் வரிச்சுமை தாளாது இடம் பெயர்ந்து சென்றனர். மகதை மண்டலத்துத் தலைவனாகிய நியாகண்ண நாயக்கர் அம் மக்களின் குறைகளைத் தீர்ப்பதாக வாக்களித்தார். கன்னடிய அரசர்கள் ஆட்சிக் காலத்தில் தென்னூர்க்காடு மாவட்டத்திலுள்ள ஸ்ரீ முஷ்ணம் பகுதியில் வாழ்ந்த மக்களின்மீது விதிக்கப்பட்ட வரிகள் அதிகமாக இருந்த படியால் பள்ளி கொண்ட பெருமாள் கச்சிராயருடைய மகன் திரிநேத்திரநாத கச்சிராயர் என்பார் அவ் வரிகளைக் குறைத்துப் பல நன்மைகளைச் செய்தார்.

தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்த கொல்லர், தச்சர், பொற் கொல்லர், தபதிகள், கன்னார் என்ற பஞ்ச கம்மாளர்கள் மீது விதிக்கப்பட்ட 'காணிக்கைக் கட்டாயம், பாக்குக் கட்டாயம், தலையாரிக் காணம் முதலிய வரிகள் அதிகமான அளவில் விதிக்கப்பட்டன. இவ் வரிகளைக் கொடுப்பதற்குச் சக்தியற்ற மேற்கூறப்பட்ட பஞ்ச கொல்லர்களும் தங்களுடைய இருப்பிடங்களை விட்டுக் குடிபெயரத் தொடங்கினர். சின்னப்ப நாயக்கர் என்பவர் அந்த வரிகளைக் குறைத்து அவர்களுடைய இருப்பிடங்களிலேயே இருக்கச் செய்தார். அச்சுத தேவராயர் ஆட்சியில் மதியானி வடபற்றுப் பகுதியில் வாழ்ந்த மக்களின் மீது கடமை, காணிக்கை என்ற வரிகளை விதித்து மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, இராயப்ப நாயக்கர் என்பார் வசூலித்தார். இவ் வரிகளைக் கொடுப்பதற்குத் திருப்பூவாலிக்குடி உடைய நாயனார் கோவிலுக்குத் தங்களுடைய நிலங்களை விற்றனர். நிலங்களை விற்று வரி கட்ட முடியாத பலர் அக் கிராமத்தைவிட்டு அகன்றனர்.

விஜயநகரப் பேரரசின் வடகிழக்குப் பகுதியாகிய ஆந்திரப் பிரதேசத்திலும் மேற்கூறப்பட்ட வரிச் சுமையினால் மக்கள் துன்புற்ற வரலாற்றை நாம் காண முடிகிறது. கவதலாடச் சீமையில் வாழ்ந்த கௌடர்களும், மற்றையோர்களும் வரிச்

சுமையைத் தாங்க முடியாது மாசவீய சீமைக்குக் குடிபெயர்ந் தனர். இதைக் கேள்வி யுற்ற மகாமண்டலீசுவர சின்ன திருமலை தேவர் 1532இல் ஆதோனி என்னு மிடத்திற்கு நேரில் சென்று அந்த மக்களுடைய குறைகளை நீக்கி, மீண்டும் கவதலாடச் சீமை யில் தங்கி உழவுத் தொழிலைப் பின்பற்றும்படி செய்தார். 1534இல் கங்கணிப் பள்ளிச் சீமையில் வாழ்ந்த மக்களும், வரிச் சுமையைத் தாங்க முடியாமல், பகாலா, குந்திருப்பிச் சீமை களுக்குக் குடி பெயர்ந்தனர். விஜயநகர அரசாங்கம் தலையிட்டு அதிகப்படியான வரிகளை நீக்கி மக்களுடைய நல்வாழ்வை நிலை நாட்டியது.

மேற்கூறப்பட்ட கல்வெட்டுகளின் சான்றுகளிலிருந்து ஹொய் சள மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், சாளுவ மன்னர்களின் ஆட்சியில் பேரரசின் சில பகுதிகளிலும் வரிச்சுமை, மக்களால் தாங்க முடியாத அளவிற்கு இருந்த தென்பதை நாம் உணரலாம். வரிகளின் சுமையைவிட, மாகாண அரசியல் அலுவலாளர்கள் அவ் வரிகளை வசூலித்த முறையை மக்கள் வெறுத்தனர் என்பதையும் நாம் அறியலாம். விழுப்புரத்திற்கு அருகிலுள்ள திருவாமாத்தூர்க் கோவிலில் காணப்படும் ஒரு கல்வெட்டில் அக் கோவிலுக்குச் சொந்தமான தேவதான நிலங்களில் வசூலிக்கப்பட்ட பல விதமான வரிகளிலுல் மொத்த வருமானம் பன்னிரண்டு வரா கன்களுக்கு மேலில்லை எனத் தெளிவாகிறது. இதனுல், விஜயநகர ஆட்சியில் பலவிதமான வரிகளின் பெயர்கள் காணப்பட்ட போதிலும் அவற்றிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த தொகை மிகுந்த அளவுடைய தன்று என்பது தெளி வாகும்.

ஆனுல், விஜயநகர ஆட்சியில் வடமொழி நூல்களில் கூறப் பட்ட ஆறில் ஒரு கடமை வசூல் செய்யப்பெற்றது என்று கூற முடியாது. அரசாங்க வருமானங்களை அதிகரித்து அவற்றைக் கூடியவரையில் தீவிரமாக வசூல் செய்வதற்கு அரசாங்க அதி காரிகள் முயற்சி செய்தனர். விதிக்கப்பட்ட வரிகளின் நிலைமையை விட வசூல் செய்வதற்கு மேற்கொண்ட வழிகளை மக்கள் வெறுத் தனர் என்று கூறலாம்.

அரசாங்கச் செலவுகள் :

தென்னிந்திய அரசாங்கங்களில் அரசாங்க அலுவலாளர் களுக்கு நாணயங்களாக ஊதியங்கள் கொடுப்பது மிகக் குறைந்த அளவே. உயர்தர அலுவலாளர்கள் சர்வமானியமாக நிலங்களைப் பெற்று அனுபவித்தனர். கீழ்த்தர அலுவலாளர்களுக்கு மானியங் களும், இனும் நிலங்களும் கொடுக்கப்பட்டன. விஜயநகர

அரசாங்கத்தில் கடற்படை இருந்ததாகத் தெரிய வில்லை. அவ் விதம் கடற்படை இருந்திருந்தால் அதன் செலவு ஏராளமாக இருந்திருக்கும். நாடுகாவல் அல்லது பாடிகாவல் என்ற போலீஸ் அலுவல்கள் கிராமங்களில் செல்வாக்குள்ளவர்களுக்கு அளிக்கப் பட்டன. போலீஸ் படைகளை வைத்துப் பராமரிக்கும் செலவும், குறைவாக இருந்ததாகத் தெரிகிறது. மக்களுக்குச் சிவில், குற்ற வியல் நியாயம் வழங்குவதற்கு இப்பொழுதுள்ள மாதிரி நீதி மன்றங்கள் இருந்தனவாகத் தெரிய வில்லை. கிராமங்களில் தோன்றிய வழக்குகளைக் கிராமத் தலைவர்களும், சபைகளும், சாதிக் கூட்டங்களும் விசாரணை செய்து நீதி வழங்கியதாகத் தெரிய வருகிறது. அக் காலங்களில் மக்களிடையே கல்வி பரவு வதற்காக அரசாங்கம் எவ் விதமுயற்சியையும் எடுத்துக் கொண்டதாகத் தெரிய வில்லை. மக்கள் செய்து வந்த தொழில்கள் எல்லாம் சாதிகளின் பிரிவினைக் கேற்ப நடந்தபடியால் தொழிற் கல்வியையும், சமூக சம்பந்தமான கல்வி முறையையும் பரவச் செய்வதற்கு அரசாங்கம் கடமை ஏற்க வில்லை. பொதுநலச் சேவை களைச் செய்வதற்கும், சுகாதார, மருத்துவ சேவைகளைச் செய் வதற்கும் அரசாங்கம் எவ் விதப் பொறுப்பையும் ஏற்க வில்லை.

(1) அயல்நாட்டுப் படை எடுப்புகளிலிருந்தும், உள்நாட்டுக் கலகங்களிலிருந்தும் நாட்டைப் பாதுகாப்பதற்குக் கரி, பரி, காலாட் படைகளை வைத்துப் பராமரிப்பது அரசாங்கத்தின் முக்கியச் செலவாயிற்று. பாமினி சுல்தான்களும், கலிங்க நாட்டுக் கஜபதி அரசர்களும், அடிக்கடி படையெடுத்தமையாலும், உள் நாட்டில் சிற்றரசர்களும், அரசியல் சம்பந்தமுள்ள தலைவர்களும் அடிக்கடி கலகங்கள் செய்தமையாலும் வன்மை மிகுந்த இராணு வத்தை வைத்து ஊதியம் கொடுப்பது இன்றியமையாத அரசாங்கச் செலவாயிற்று. நாயக்கன்மார்கள் நிலமானியங் களுக்காக அரசாங்கத்திற்குக் கொடுத்த அறுபது இலட்சம் வரா கன்களில் 35 இலட்சம் வராகன்களுக்கு மேல் கரி, பரி, காலாட் படைகளை வைத்துப் பாதுகாப்பதற்குச் செலவாயிற்று என நூனிஸ் கூறுவார். பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளில் இருந்து குதிரைகளைப் பெரும்பொருள் கொடுத்துக்கிருஷ்ண தேவ ராயர் வாங்குவது வழக்கம். பேரரசின் தலைநகரத்திலும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கோட்டைகளிலும் நிலையான சேனைகளை வைத்து வீரர்களுக்கு ஊதியம் அளிப்பதும், குதிரை களையும், யானைகளையும் வைத்துப் பாதுகாப்பதும் விஜயநகர அரசாங்கத்தின் முதல்தரச் செலவாயிற்று.

(2) தென்னிந்தியக் கோவில்களில் காணப்படும் கல்வெட்டு களில் நூற்றுக்கணக்கானவைகள் விஜயநகரப் பேரரசர்களின்

தான தருமங்களையும், அறக்கட்டளைகளையும் விவரிக்கின்றன. இக் கல்வெட்டுகளின்படி விஜயநகரத்து அரசர்கள் பல கோவில்களைப் புதினவாக அமைத்தும், பழைய தேவாலயங்களைச் சீர்திருத்தியும், மானியங்களையும், அறக்கட்டளைகளையும் புதியனவாக ஏற்படுத்தியும் பழைய அறக்கட்டளைகளைப் புதுப்பித்தும் பல தருமங்களைச் செய்தனர். தேவாலயங்களைப் புதுப்பிக்கவும், திருவிழாக்களை நடத்தவும், நித்திய நைவேத்தியக் கட்டளைகளை அமைக்கவும் பல அறக்கட்டளைகளை அமைத்தனர். மல்லிகார்ச்சுனராயர் தம் முடைய வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதியைக் கோவில்களுக் காகச் செலவிட்டதாக நூனிஸ் கூறுவார். கிருஷ்ண தேவராய ருடைய கல்விப் பெருமையை அவரால் எழுதப்பெற்ற ஆமுக்த மால்யதா என்னும் நூலைக் கொண்டு நாம் உணரலாம். மற்ற விஜயநகர அரசர்கள் கிருஷ்ண தேவராயரைப் போன்று கல்வியில் வல்லவர்கள் அல்லர் என்றாலும், பொதுவாகக் கல்வியில் வல்ல அறிஞர்களை ஆதரித்தனர். விஜயநகர அரசவையில் கலை வல்லு நர்களும், மெய்க்கலை அறிஞர்களும் கூடிக் கலந்துரை யாடினர். கல்வி கற்ற பெரியோர்களை மதித்து அவர்களுக்குத் தகுந்த சன் மானங்கள் வழங்கியும். நிலமானியங்கள் கொடுத்தும் விஜயநகர அரசர்கள் ஆதரித்தனர். இவ் வகையில் அரசாங்க வருமானத்தி லிருந்து பெருந்தொகை செலவழிக்கப்பட்டது.

(3) பெருவழிகளையும், சிறுசாலைகளையும் அமைத்தும், ஆறு களின் குறுக்கே பாலங்களை அமைத்தும், அணைக்கட்டுகள், நீர்ப் பாசனக் குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் அமைத்தும் உழவுத் தொழிலும், வாணிகமும் பெருவகுற்கு விஜயநகர அரசர்கள் உதவி செய்தனர். நுண்கலைகளாகிய கட்டடக்கலை, சிற்பங்கள், ஓவியங்கள் முதலிய கலைகளுக்கும் ஆதரவளிக்கப்பட்டன. இவ் வகையிலும் விஜயநகர அரசாங்கத்திற்குச் செலவுகள் ஏற்பட்டன.

(4) விஜயநகர ஆட்சியில் பெரிய அந்தப்புரங்களை அமைத்து மகளிர்களை வைத்துக் காப்பாற்றுவது பெரிய கௌரவமாகக் கருதப்பட்டது போலும்! விஜயநகரத்தைச் சுற்றிப் பார்த்த எல்லா அயல்நாட்டு வழிப்போக்கர்களும், அரசர்களுடைய உவளகத்தைப் பற்றிக் கூறியுள்ளனர். ஆனால், அவர்களால் கூறப்படும் பெண்டிர்களின் எண்ணிக்கை நம்பத் தகுந்ததாக இல்லை. அந்த எண்ணிக்கை உண்மையானதாக இருந்தால் அவர் களைப் பராமரிப்பதற்கு அரசாங்க வருமானத்திலிருந்து பெருந் தொகை செலவழிக்கப் பெற்றிருக்க வேண்டும்.

(5) சேமிப்பு நிதிக்கருவூலம் : இருபதாம் நூற்றாண்டில் ரிசர்வ் பாங்குகளும், அரசாங்க பாங்குகளும் இருப்பதனால் அரசாங்க

வருமானத்தைச் சேமித்து வைப்பது எளிதாகிறது. பாங்குகள் இல்லாத மத்திய காலங்களில் தங்கம், வெள்ளி நவரத்தினங்கள் முதலிய விலையுயர்ந்த பொருள்களைச் சேமிப்பு நிதியாக அரசாங்கங்கள் காப்பாற்றி வைப்பது வழக்க மாகும். ஓர் அரசாங்கத்தின் வருமானத்தில் கால் பகுதி சேமிப்பு நிதியாக ஒதுக்கப்பட வேண்டு மென்று கிருஷ்ண தேவராயர் ஆமுக்த மால்யதாவில் கூறுவார். விஜயநகர அரசர்கள் தங்களுடைய வருமானத்தில் பெருந்தொகையைச் சேமிப்பு நிதியாக ஒதுக்கித் தனியான கருவூலத்தில் வைத்திருந்தனர் எனப் பீயஸ் கூறுவார். 'கிருஷ்ண தேவராயர் காலத்திற்கு முன்னிருந்தே விஜயநகர அரசர்கள் சேமித்து வைத்திருந்த விலையுயர்ந்த பொருள்கள் நிரம்பிய சேமிப்புக் கருவூலம் தனியாக இருந்தது. ஒவ்வரசன் இறந்தவுடன் அக் கருவூலம் பூட்டப்பட்டு முத்திரையிடப்பட்டது. பின்வரும் அரசர்களும் அக் கருவூலத்தில் என்ன பொருள்கள் உள்ளன என்று திறந்து பார்ப்ப தில்லை. அரசாங்கத்திற்குப் பெரிய முட்டுப்பாடு தோன்றினாலன்றி அக்கருவூலம் திறக்கப்படுவ தில்லை. கிருஷ்ண தேவராயர் ஆண்டு தோறும் ஒரு கோடி வராகன்களை அக் கருவூலத்தில் சேமித்து வைப்பது வழக்கம். அந்தச் சேமிப்புத் தொகை போகப் பாக்கியைக் கொண்டுதான் தம்முடைய அரண்மனைச் செலவுகளையும் அந்தப்புரச் செலவுகளையும் அவர் கவனித்தார்.' (பீயஸ்)

பாங்குகளிலிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் கடன் வாங்குவதற்கு வசதி யில்லாத காலங்களில் விலையுயர்ந்த பொருள்களாகிய தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவற்றைச் சேமித்து வைப்பது சிறந்த பாதுகாப்பு என அக் காலத்தில் கருதப்பட்டது போலும்! விஜயநகர அரண்மனையில் இரண்டு கருவூலங்கள் இருந்தன வென்று நாம் அறிகிறோம். ஒரு கருவூலத்தில் தங்க நாணயங்களும், மற்ற நாணயங்களும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. மற்றொன்றில் வைரம் முதலிய நவரத்தினங்கள் வைக்கப்பட்டிருந்தன.

(6) விஜயநகர அரசின் நாணயங்கள்: விஜயநகரப் பேரரசில் நாணயங்களை அச்சடித்து உருவாக்கும் முறை பின்பற்றப் பட்டது. வராகன் என்ற பொன் நாணயம் பேரரசு எங்கும் ஒரே அளவு, எடை உள்ள நாணயமாகப் பரவியது. அதற்குக் குறைவான மதிப்புள்ள வெள்ளி, செம்பு நாணயங்களும் புழக்கத்தில் இருந்தன. இரண்டாம் ஹரிஹர தேவர் ஆட்சியில் நிலவரியைத் தானியங்களாக வாங்குவதை விட்டு நாணயங்களில் வசூல் செய்யும் வழக்கம் தோன்றியது. இதனால்,

நாணயங்களில் அச்சடிக்கும் முறை பரவியது. தொடக்கத்தில் கன்னட மொழியின் எழுத்துகள் விஜயநகர நாணயங்களில் பொறிக்கப் பெற்றிருந்த போதிலும் பின்னர் நாகரி எழுத்துகளும் எழுதப் பெற்றன.

விஜயநகரப் பேரரசில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களில் இருந்து அரசர்கள் பின்பற்றிய சமயக் கொள்கைகளை ஒரு வகையில் நாம் உணர்ந்து கொள்ளலாம். சங்கம வமிசத்து முதலிரண்டு அரசர்களாகிய ஹரிஹரரும், புக்கரும் ஆஞ்சநேய ருடைய உருவத்தைத் தங்களுடைய நாணயங்களில் அச்சடிக்கும் படி செய்தனர் இரண்டாம் ஹரிஹரர் ஆட்சியில் விஜயநகரம் ஒரு பேரரசாக வளர்ந்தது. அவருடைய ஆட்சிக் காலத்தில் செய்யப் பெற்ற நாணயங்களில் நந்தி, சரஸ்வதி, பிரம்மன், உமா-மஹேஸ்வரன், இலக்குமி-நாராயணன் முதலிய உருவங்கள் அச்சடிக்கப் பட்டிருந்தன. இரண்டாம் தேவராயர் 'கஜ வேட்டை கண்டருளிய' என்ற பட்டத்தை மேற்கொண்டதை யொட்டி அரசர் யானையுடன் போரிடும் உருவம் நாணயங்களில் பொறிக்கப் பெற்றது. கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் ஸ்ரீவெங்கடேசர், பாலகிருஷ்ணர் முதலிய உருவங்கள் பொறிக்கப் பட்டன. அச்சுத தேவராயர் ஆட்சியில் கண்டபேரண்டப் பட்சியின் உருவமும், சதாசிவ ராயர் ஆட்சியில் இலக்குமி நாராயணன், கருட பகவான் முதலிய உருவங்களும் நாணயங் களில் அச்சடிக்கப்பட்டன. இவற்றால் துளுவ வமிசத்து அரசர்கள் வைணவ சமயத்தைப் பின்பற்றினர் என்பது விளக்க முறுகிறது.

விஜயநகரப் பேரரசில் வழங்கிய நாணயங்களைப் பின்வரு மாறு தொகுத்துக் கூறலாம்.

தங்க நாணயங்கள் : (1) கத்யானம், வராகன், பொன், (பகோடா) (2) பிரதாபம், (3) காதி, (4) பணம், (5) ஹாகா.

வெள்ளி நாணயம் : தாரா

செப்பு நாணயம் : (1) பணம், (2) ஜிதால், (3) காசு.

கன்னடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுகளில் கத்யானம் என்று கூறப்படும் நாணயம் வராகனையே குறிக்கும். இது 52 அரிசி எடையுள்ளது. ½ வராகனுக்கு ஹொன்னு என்ற பெயர் கன்னட நாட்டில் வழங்கியது. சாளுக்கியர்களும், கால சூரியர்களும் பின்பற்றிய வராக இலச்சினையை விஜயநகர அரசர்களும் பின்பற்றினர். சில வராகன்களில் துர்க்கை

உருவமும், வராக உருவமும் பொறிக்கப் பெற்றிருந்தன. பின்னர்த் தென்னாட்டுக் கோபுரத்தின் உருவமும் வராகன் நாணயத்தின் ஒரு பக்கத்தில் காணப் பட்டமையால், கோபுரத்தின் ஆங்கிலப் பெயராகிய பகோடா (P goda) என்ற பெயர் வாகனுக்கு வந்தது. வரான்களில் உள்ள தங்கத்தின் மதிப்பிற்கு ஏற்பக் கட்டி வராகன், தொட்ட வராகன், சுத்த வராகன் என்ற மூவகையான நாணயங்கள் வழக்கத்தில் இருந்தன. சக்கர கத்யாணம், சக்கர வராகன், காதி-கத்யானம் என்ற நாணயங்களும் கன்னட நாட்டில் வழங்கின. கத்யானம் என்னும் நாணயத்திற்கு ஹொன் அல்லது பொன் என்ற பெயர்களும் வழங்கின. பத்துப் பொன் பணங்கள் ஒரு வராகனுக்கு ஈடாகியது. பிரதாபர் அல்லது பர்த்தாப் என்ற நாணயம் அரை வராகனையும், காதி, கால் வராகனையும் குறித்தன. 1463ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்றில் ஒரு வராகனுக்கு நான்கு காதிகள் எனக் கூறப்படுகிறது. விஜயநகர நாணயங்களில் அதிகமாக வழக்கத்தில் இருந்தது பணம் அல்லது ஹனம் என்ற பொன் நாணய மாகும். பத்துப் பொன் கொண்டது ஒரு வராகன். பொன்னின் எடை 5·2 அரிசி எனக் கல்வெட்டுகள் கூறகின்றன. தெலுங்கு நாட்டில் சின்ன என்ற பெயருடன் வழங்கிய நாணயம் $\frac{1}{8}$ வராகன் மதிப்புள்ளது. ஹாகா என்ற நாணயம் $\frac{1}{4}$ பணத்தைக் குறித்தது.

தார் என்ற வெள்ளி நாணயம் பொன் பணத்தின் $\frac{1}{8}$ மதிப்பு உள்ளதாகக் கருதப்பட்டது. செப்புக் காசுகளில் பணம், ஜிடால், காசு என்பன வழக்கத்தில் இருந்தன. தெலுங்கு நாட்டில் இவைகளுச்குப் பைகம், தம்மா, காவல என்ற பெயர்கள் வழங்கின.

மேலே கூறப்பட்ட தென்னிந்திய நாணயங்கள் அன்றியும் போர்த்துகீசிய, எகிப்திய, இத்தாலிய நாட்டு நாணயங்களும் விஜயநகரப் பேரரசில் போர்த்துகீசியரால் வழக்கத்திற்குக் கொண்டுவரப் பெற்றன. குருசாடோ (Gruzado) என்ற போர்த்துகீசிய நாணயத்தில் ஒன்றும் அரையுமாக இரு நாணயங்கள் இருந்தன. எகிப்து நாட்டின் தினார் (Dinar), ஃபிளாரன்ஸ் (Florence) நாட்டு ப்ளோரின் (Florin), வெனிஸ் நகரத்துத் தியூகத் (Ducat) முதலிய நாணயங்களும் போர்த்துகீசியப் பகுதிகளில் வழக்கத்தில் இருந்தன.

17. நீதிமுறைகளும் நியாயம் வழங்குதலும்

விஜயநகர ஆட்சியில் மக்களுடைய பிரதிநிதி சபைகளால் இயற்றப்பட்ட சிவில், குற்றவியல் (Criminal) சட்டங்கள் இல்லை. சிவில், குற்றவியல் சட்டங்கள், அறநூல்கள், சமயக் கொள்கைகள் முதலியவற்றோடு பிணைவுற்றிருந்தன. இந்துச் சமூகத்தில் வழங்கிய தருமம் என்பதை அடிப்படையாகக் கொண்டு நீதி முறை நிருவாகம் நடைபெற்றது. தருமம் என்ற சொல், பழைய சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், சமய தத்துவங்கள், நாட்டு நடவடிக்கைகள், காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ற மரபுகள் முதலியவற்றை அடிப்படைகளாகக் கொண்டிருந்தது. அரசாங்கத்தின் அமைப்பும், அரசியலும் மேற்கூறப்பட்ட தருமத்தைக் குறிக்கோளாகக் கொண்டே அமைந்திருந்தன. ஆகையால், வேதங்கள், தரும சாத்திரங்கள், சூத்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியவற்றில் விவகாரம் அல்லது சட்டத்தின் நடப்பு என்பதைக் காண முடியாது. இந்துக்களின் விவகாரங்கள் அல்லது சட்டங்கள் மனிதனால் இயற்றப் பெறுமல், தெய்வங்களால் இயற்றப்பட்டன வாகக் கருதப்பட்டன. இந்து அரசர்கள், விவகாரங்கள் அல்லது சட்டங்களை இயற்றும் தலைவர்களாகக் கருதப்படவில்லை. கிருஷ்ண தேவராயர் தருமத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அரசு புரிய வேண்டு மென்ற கொள்கையைத் தாம் எழுதிய ஆமுக்த மால்ய தாவில் வற்புறுத்தியுள்ளார். இந்துக்களின் விவகாரங்களில் சிக்கலான விஷயங்களில் யக்ஞவல்கியருடைய ஸ்மிருதியையும், பராசர முனிவருடைய சட்டத்திற்கு மாதவ முனிவர் எழுதிய பராசர மாதவ்யம் என்ற நூலையும் இறுதி உரைகளாகக் கொள்வது மரபாயிற்று.

மேற்கூறப்பட்ட இந்து விவகாரங்களையும், சட்டங்களையும், பற்றி நூனிஸ் கூறியுள்ளவை வியக்கத் தக்கவை யாகும். 'கோவில்களும், குருக்கள்மார்களும் நிரம்பியுள்ள தென்னிந்தியாவில், பிராமணர்கள் இயற்றிய சட்டங்களைத் தவிர வேறு சட்டங்களைக் காண முடியாது' என்று அவர் கூறுவார். விஜயநகர ஆட்சியில் யக்ஞவல்கிய ஸ்மிருதியும் பராசர மாதவ்ய பழக்க வழக்கங்களும் நிலைபெற்றிருந்த போதிலும் மக்களுக்கு நியாயம் வழங்குவதற் கேற்ற சட்டங்களே இல்லை என்ற கூற்று அர்த்தமற்ற தாகும்.

விஜயநகர ஆட்சியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் மக்கள் புரிந்த குற்றங்கள் எவ்வாறு தண்டிக்கப்பட்டன என்று கூறப்பட்டுள்ளன. பீயஸ். நூனிஸ் என்ற போர்த்துகீசியர்களுடைய வரலாற்று நூல்களில் குற்றவியல் எவ்வாறு நடைபெற்றது என்பதையும் நம்மாலுணர முடிகிறது. சிவில் வழக்குகள் பெரும் பாலும் பஞ்சாயத்து முறையில் (Arbitration) தீர்க்கப்பட்டன என்றும், தலைநகரத்தில் இருந்த நீதிபதிகளும் தீர்ப்பளித்தனர் என்றும் நாம் கேள்விப்படுகிறோம். முடியரசு ஆட்சிகளில் அரசர் களே நீதிபதியின் இருப்பிடமாக இருந்தனரென்ற கொள்கை விஜய நகர ஆட்சியிலும் நிலைபெற்றிருந்தது. அப்துர்ரசாக் என்பவர், விஜயநகர அரசனுடைய பிரதானி என்ற அமைச்சர், தலைமை நீதிபதியாக விளங்கினர் என்று கூறுவார். 'பிரதானி தம்முடைய இருக்கையைவிட்டு அரசனுக்குமுன் செல்லும் பொழுது பல ஏவலாளர்கள் பலவித வண்ணக் குடைகளைப் பிடித்துக் கொண்டு செல்கின்றனர். அரண்மனையில் உள்ள ஏழு வாயில்களையும் கடந்து சென்று அரசனைக் கண்டு பேரரசில் நடக்கும் விவகாரங்களை அறிவித்துப் பின்னர்ப் பிரதானி திரும்புகின்றார்' என்று கூறி யுள்ளார். இந்த விவகாரங்கள் நீதி வழங்குவதைப் பற்றியதாக இருந்திருக்க வேண்டும். கிருஷ்ண தேவராயருடைய முக்கிய அமைச்சராகிய சாளுவ திம்மருக்குத் 'தரும பிரதிபாலகர்' என்ற பெயரும் வழங்கியதால் அவருக்கு நியாயம் வழங்கும் அதிகாரமும் இருந்திருக்க வேண்டும். 1665ஆம் ஆண்டில் ப்ரோயன்சா (Proenza) என்பவர் எழுதிய கடிதம் ஒன்றில் மதுரையில் ஆட்சி செய்த வீரப்ப நாயக்கரும் அவருடைய பிரதானி அரியநாத முதலியாரும் நியாயம் வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. ஆகையால், விஜயநகரத்தில் தண்டநாயக்கரும். பிரதானியுமாக விளங்கிய முக்கிய அமைச்சருக்கு நீதி வழங்கும் அதிகாரம் இருந் தமையால் அவரே பேரரசின் தலைமை நீதிபதியாகப் பணியாற் றினர் எனக் கூறலாம்.

பேரரசரும் சில சமயங்களில் பிரதானியோடு சேர்ந்தும், தனியாகவும் நீதி வழங்குவதுண்டு. கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் திருவாரூர்க் கோவிலில் நடந்த சீர்கேடுகளை விசாரித்துப் பேரரசரே நீதி வழங்கிய செய்தியை நாம் அறிகிறோம். 1546இல் சதாசிவராயர் தொண்டை மண்டலத்தில் தங்கியிருந்த பொழுது, கொண்டகி என்னுமிடத்தில் இரு கட்சிகளுக்கிடையே தோன்றிய வேற்றுமையைச் சாளுவ நாயக்கர் முன்னிலையில் தரும சாத் திரங்களை உணர்ந்த பெரியோர்கள் தீர்த்து வைக்கும்படி உத்தர விட்டுள்ளார். சில விவகாரங்களில் அரசாங்க அலுவலாளர்கள் மூலமாகத்தான் அரசரிடம் மேல்முறையீடு செய்ய முடிந்தது.

திருவாமாத்தூர்க் கோவில் தானீகர்கள், காரணீக மங்கரா சய்யர், சாளுவ அரியவ நாயக்கர் என்ற அரசாங்க அலுவலாளர் களின் துணை கொண்டு கிருஷ்ண தேவராயரிடம் மேல்முறையீடு செய்தனர். ஆகையால், பேரரசரும் பிரதானியும் சேர்ந்து நடத்திய மேல்முறையீட்டு (Appeal) நீதிமன்றம் விஜயநகரப் பேரரசின் தலைநகரத்தில் இருந்ததெனக் கொள்ளலாம்.

மாகாணங்களில் இருந்த நீதிமன்றங்களில் மாநில ஆளுநர் களும், பேரரசருடைய நீதிப் பிரதிநிதிகளும் சேர்ந்து நீதி வழங்கிய தாகத் தெரிகிறது. அரகலூர், திருக்காளீஸ்வரம் உடைய நாயனார் கோவிலில் உரிமைகளைப் பற்றிய தகராறு நேர்ந்த காலத்தில் திருமலைநாயக்கர் என்பவர் தலைமை வகித்து நியாயம் வழங்கியுள்ளார். அவுதூரு என்னும் கிராமத்தில் அக்கிரகாரத்தில் வசித்த அந்தணர்களுக்கும், கர்ணங்களுக்கு மிடையே தோன்றிய வழக்கில் ஆனகுந்தி வெங்காலப்பா என்ற அரசாங்க அலுவ லாளர் இரு கட்சிகளுக்கும் ஏற்ப நியாயம் வழங்கினர்.

விஜயநகரப் பேரரசின் கிராமப் பகுதிகளில் அரசாங்கத் தாரால் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் இருந்தனவா என்பதைப் பற்றிய சரியான விவரங்கள் கிடைக்க வில்லை. ஆனால், கிராமத்து மகாஜனங்கள் தலைமை வகித்த கிராம நீதி மன்றங்களும், பல விதச் சாதித் தலைவர்கள் தலைமை வகித்த நீதிமன்றங்களும், கோவில்களில் தானீகர்கள் நியாயம் வழங்கிய கோவில் நீதிமன்றங் களும், வியாபார, தொழிற் சங்கங்களின் நீதிமன்றங்களும் இருந்தனவாகத் தெரிகின்றது. ஆவுடையார் கோவில் அல்லது திருப்பெருந்துறையில் இருந்த நாட்டுச் சபையார் திருப்புத்தூர் ஆண்டான் பிள்ளை என்பார் இழைத்த குற்றங்களை விசாரித்து அவற்றுக்குத் தண்டனையாக இரண்டு நிலங்களைப் பறிமுதல் செய்தனர். பின்னர் அந்த இரண்டு வயல்களும் திருப்பெருந்துறை கோவிலுக்குத் திருநாமத்துக் காணிபாக வழங்கப்பட்டன. மேற் கூறப்பெற்ற கிராமச் சபைகள் மறைந்த பின்னர் அரசாங்கத் தாரால் நியமிக்கப்பட்ட ஆயக்காரர்கள் கிராமச் சபையாருக்குப் பதிலாக நீதி வழங்கலாயினர்.

அனந்தபுரி மாவட்டத்தில் அன்னதான கௌடர், சிகா முத்தையா என்ற இருவரிடையே கௌடிகப் பட்டத்தைப் பற்றிய வழக்கு உண்டாயிற்று. கிராமத் தலைவர்களும், பன்னிரண்டு ஆயக்காரர்களும் தருமாசனம் என்ற நீதி மன்றத்தில் அமர்ந்து அவ் வழக்கை விசாரித்துச் சிகாமுத்தையா என்பவருக்குக் கௌடிகப் பட்டத்தை அளித்தனர். விருதராஜ பயங்கர வளநாடு என்ற கான நாட்டில் (Forest region)

கோட்டையூர் என்னு மிடத்தில் வாழ்ந்த குயவர்களுக் கிடையே பெரிய வழக்கு உண்டாயிற்று. அவ் வழக்கைத் தீர்ப்பதற்குக் கட்சிக்காரர்களின் நெருங்கிய உறவினர்களும், நாட்டவர்களும் கோவில் தானிகர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும் சேர்ந்த நியாய மன்றம் நியாயம் வழங்கிற்று. திருக்கோவில்களில் பல்லவர் காலமுதற்கொண்டு நியாய மன்றங்கள் நிகழ்ந்து வந்தன. காடவர்கோன் கழற்சிங்கனது காலத்தில் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த கோவில் சபையில் சுந்தரமூர்த்தி நாயனுருக்கும் வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கும் ஏற்பட்ட வழக்குத் தீர்க்கப் பட்டது. விஜயநகர ஆட்சியில் நெய்வாசல் என்னு மிடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று, அவ் வூர்க் கோவிலில் திருட்டு நடந்ததைப் பற்றிய வழக்கைக் கோவில் தானத்தார் தீர்த்து வைத்ததைப் பற்றிக் கூறுகிறது. கோவிலுக்குரிய நகையைத் திருடியவனிடமிருந்து நிலங்கள் கைப்பற்றப்பட்டுக் கோவிலுக்கு அளிக்கப்பட்டன.

கோவில் வழக்குகளில் மேலாணையார்கள் நியமனம் பெறுதல்: சென்னை நகருக் கருகிலுள்ள திருவொற்றியூர்த் திருக்கோவிலில் இராச நாராயண சம்புவ ராயர் ஆட்சியில், அலுவல் பார்த்த பதியிலார், இடபத்தளியிலார், தேவரடியார் என்ற அலுவலாளர்களிடையே தோன்றிய வழக்கைப் பெரும்பற்றப் புலியூர் முதலியார் ஒருவர் தீர்த்து வைத்தார். ஆனால். அவ் வழக்கு மீண்டும் குமார கம்பணர் ஆட்சியிலும் தலையெடுத்தது. பதியிலார், இடபத் தளியிலார், தேவரடியார் ஆகிய மூன்று பிரி வினரும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு கோவில் வேலைகளைக் கவனிக்காது வேலைநிறுத்தம் செய்தனர். இவ் வழக்கைத் தீர்ப்பதற்கு ஆணைகுந்தி விட்டப்பர் என்பவர் மேலாணையாளராக நியமனம் செய்யப்பட்டார். கோவிலில் மற்ற அலுவல்களைப் பார்த்த வீரசோழ அணுக்கர், கைக்கோளர் முதலியவர்களை விசாரித்து வழக்கின் நிலைமையை விட்டப்பர் நன்கு உணர்ந்து கொண்டார். பின்னர், கோவில் அதிகாரி களாகிய ஸ்ரீருத்திரர், ஸ்ரீமஹேஸ்வரர் என்பவர்களையும் கூட்டி மேலே கூறப்பட்ட இடபத் தளியிலார், தேவரடியார், பதியிலார் என்ற கோவில் அலுவலாளர்களையும் வியாகர்ண மண்டபம் என்னு மிடத்தில் கூடும்படி செய்தார்.

1371ஆம் ஆண்டில் ஆணைகுந்தி விட்டப்பர் என்பவர் துணை யிருந்த நம்பி கொங்கராயர், கோவில் தானத்தார், நாட்டவர் முதலிய தலைவர்களுடைய முன்னிலையில் இந்தக் கோவில் தொண்டர்களுடைய வழக்கு விசாரணை செய்யப்பட்டது. பின் வரும் தீர்ப்பும் அளிக்கப்பட்டது. (1) இடபத்தளியிலார் சுவாமி

சந்நிதியில் பணி செய்ய வேண்டும். (2) தேவரடியார்கள் அம்மன் சந்நிதியில் பணிசெய்ய வேண்டும். கோவிலின் உருவச் சிலைகள் வீதியுலா வரும்பொழுதும், மண்டபங்களுக்கும், மற்ற இடங்களுக்கும் தூக்கிச செல்லபபடும் பொழுதும் வேறுவிதமான பணிகளையும் செய்ய வேண்டும். (3) மாணிக்க வாசகருடைய திருவெம்பாவை உற்சவத்தின் பொழுது பதியிலார் பணிபுரிய வேண்டும் என்ற நியதிகள் தோன்றின.

சமய, சமூக ஆசாரங்களையும், திருமணங்களையும் பற்றிய வழக்குகள் ஏற்பட்டால் அவற்றைச் சமயாச்சாரியார்கள் தீர்த்து வைப்பர். பெனுகொண்டாச் சீமை ரெட்டியார்களுக்கும், போதிப்பேட்டை ரெட்டியார்களுக்கும் இடையே திருமண சம்பந்தமான வழக்குகள் தோன்றின. இவ் வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்கும்படி இராமராயர் வேண்டிக்கொள்ளப் பட்டார். இராமராயர் தம்முடைய குலகுருவாகிய தாத்தாச்சாரியாரை அழைத்து அவ் வழக்கைத் தீர்த்து வைக்கும்படி வேண்டிக் கொண்டார். தாத்தாச்சாரியார் அவ் வழக்கைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்து, 'சுஜான குலத்துத்' தலைவர்களுக்குப் பல விதமான சலுகைகள் கொடுக்கப்பட வேண்டு மென்றும், அச் சலுகைகளின்படியே திருமணங்கள் நடைபெற வேண்டு மென்றும் தீர்ப்பளித்தார். கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் வேங்கட தாத்தய்ய ராஜா என்பவர் வடகலை வைஷ்ணவ சம்பிரதாயப்படி திருமணங்கள் நடைபெற வேண்டுமெனத் தீர்ப்பளித் துள்ளார்.

இறுதியாகப் பல நாயக்கத் தானங்களில் வசித்த அமர நாயக்கன்மார்கள் தங்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட நாயக்கத் தானங்களில் பாடிகாவல் அதிகாரங்களையும், நீதி வழங்கும் அதிகாரங்களையும் செலுத்தினர்,

சிவில் வழக்குகளைத் தீர்க்கும் முறைகள்: சிவில் வழக்குகளைச் சாட்சிகளின் வாக்கு மூலங்கள். ஆதாரமான ஆவணங்கள் மூதலியவற்றைக் கண்டு, தீர்ப்பு அளிப்பதைவிடப் பஞ்சாயத்துகள் மூலமாக விசாரணை செய்து நியாயம் வழங்குவது சிறப்பாகக் கருதப்பட்டது. 1533ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற செப்பேடு ஒன்றில், இரண்டு நபர்களில் மூத்தவர் யாரென்று தீர்மானம் செய்த பஞ்சாயத்து முறை கூறப்பட்டிருக்கிறது. இராம ராய தும்பிச்சி நாயக்கர் வடவாத தும்பிச்சி நாயக்கர் என்ற இரு சகோதரர்களுக் கிடையே மூத்தவர் யாரென்ற பிரச்சனை எழுந்தது. பதினெட்டுக் கோடங்கை நாயக்கர்களும், பாளையக் காரர்களும் கூடிய சபையொன்றில் வடவாத தும்பிச்சி நாயக்கர் தான் இளையவர் என்ற பஞ்சாயத்துத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

மைசூர் நாட்டில் ஹேடூர் நாட்டுக் கோவில் ஆசாரியர்களுக்கும், சூரிகள் என்ற மற்றொரு கட்சியினருக்கும் இடையே பார்சவதேவ கோவில் நிலங்களின் எல்லைகளைப் பற்றித் தோன்றிய வழக்கை அமைச்சர் நாகண்ணரும், சில அரசு தலைவர்களும், சைன மல்லப்பர் என்பவரும் சேர்ந்து பஞ்சாயத்துச் செய்து தீர்ப்பு அளித்துள்ளனர்.

அரசாங்க நீதிமன்றங்களில் பிராது செய்யப்பட்ட வழக்குகளுக்கு ஆவணங்களின் துணை கொண்டும், சாட்சிகளை விசாரணை செய்தும் நியாயம் வழங்கப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள சில நிலங்கள் சூடிக் கொடுத்த நாச்சியார் கோவிலுக்குச் சொந்த மானவையா? படிக்காசு வைத்த நாயனார் கோவிலுக்கு உரிமையானவையா? என்ற வழக்கைத் தீர்ப்பதற்கு 1577இல் வீரப்ப நாயக்கரும், அரியநாத முதலியாரும் நடுவர்களாக இருந்து நீதி வழங்கி யுள்ளனர். இரு கட்சியினர் வாதங்களையும், ஆவணங்களையும், சாட்சிகளையும் தீர விசாரணை செய்து இரட்டைக் கரிசல் குளம் நாச்சியார் கோவிலுக்கு உரிய தென்றும், மாலையிடான் குளமும், அடியார் குளமும் சிவன் கோவிலுக்கு உரிமையானவை என்றும் தீர்ப்புச் செய்து அந்த நிலங்களுக்குரிய எல்லைக் கற்களும் நாட்டப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் மருதப்பர் கோவிலுக்குச் சொந்தமான ஆவணம், சிற்றூடி என்ற இரண்டு கிராமங்களை அரசனுக்குரிய பண்டாரவாடை கிராமங்களாக மாற்றி விட்டனர். திருச்சிற்றம்பலப் பட்டர்மங்க மார்க்கத்தார் என்ற கோவில் பட்டர்கள் இதைப்பற்றி இராமராஜ வித்தள தேவனிடம் பலமுறை முறையிட்டனர். இவ் வழக்கைத் தீர்ப்பதற்குத் துளிநாயனூர் என்பாரும் முத்திரை வாங்கி வங்கியார் (Examiner of seals and documents) என்ற அலுவலாளரும் நடுவர்களாக நியமனம் செய்யப் பெற்றனர். இவ் விருவரும் அந்த இரண்டு கிராமங்களின் எல்லைக் கற்களின்மீது மருதப்பர் கோவிலின் சூலக் குறிகள் இருப்பதைக் கண்டு அக் கிராமங்களை மீண்டும் திருநாமத்துக் காணியாக மாற்றினர்.*

ஆட்சி, ஆவணம். அயலார் காட்சி என்ற மூவகையான ஆதாரங்களில் (Evidence) ஆவணங்களின் ஆதாரம் சிறந்ததெனக் கருதப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் கான நாட்டில் இருந்த பள்ளர்களுக்கும், பறையர்களுக்கு மிடையே தோன்றிய வழக்கில் தேக்காட்டூர், விராச்சிலை, இலம்பலக்குடி என்ற கிராமக் கோவில்களிலிருந்த கல்வெட்டுகளின் துணைகொண்டு

*South Indian Inscription. Vol. V. No. 704.

இரகுநாத ராய தொண்டைமான் தீர்ப்பளித்துள்ளார்.[1] காஞ்சி புரத்தில் 1576ஆம் ஆண்டில் வடுகர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே திருவிழாக்களில் சில விருதுகளைத் தாங்கிச் செல்லும் உரிமைகள் பற்றிய வழக்கு உண்டாயிற்று. இவ் வழக்கை வைணவப் பெரியார்களும், உடையார்களும், வாணிகத் தலைவர் களும் சேர்ந்து விசாரணை செய்தனர். ஒரு கல்வெட்டில் குறிக்கப் பட்டிருந்த பல விருதுகள் வடுகர்களுக்கு உரியவெனத் தீர்ப்பளித் தனர். கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உண்மையானவையா, பொய்யானவையா என்று விசாரணை செய்யும் வழக்கமும் இருந்தது.

கிராமச் சபைகளின் தீர்ப்புகளை எதிர்த்து அரசாங்க நீதி மன்றங்களில் மேல் முறையீடு (Appeal) செய்யும் வழக்கமும் விஜய நகர ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. அரகலூர் திருக்காமீசு வர நாயனார் கோவிலில் நித்திய வழிபாடு செய்யும் உரிமையைப் பற்றிய வழக்கு ஒன்று திருமல்லி நாயக்கர் என்பவரிடம் முறை யிடப்பட்டது. இந்த வழக்கிலிருந்து பின்வரும் நியாய முறை யீட்டை நாம் அறிந்து கொள்ளலாம்.

(1) தன்னுடைய உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்கு வாதி, அரசனிடமோ, மாகாண ஆளுநரிடமோ பிராது செய்வது உண்டு.

(2) மேற்கூறப்பட்ட இருவரும், அவ் வழக்கைத் தீர்க்க முடியாது போனால் நாட்டுச் சபையார்களுக்கு ஆணையனுப்பி அவ் வழக்கைத் தீர்க்கும்படி செய்யலாம்.

(3) நாட்டுச் சபையார்களும் அவ் வழக்கைத் தீர்க்க முடியாதபடி நியாயச் சிக்கல்கள் நிறைந்திருந்தால். மகா ஜனங் களின் பிரதிநிதிகள் அவ் வழக்கைத் தீர்த்து வைக்கும்படி செய்ய லாம்.

(4) மகாஜனங்களின் பிரதிநிதிகளின் தீர்ப்பை அரசனும், மகாண ஆளுநர்களும் ஒப்புக் கொண்டனர்.[2]

சில வழக்குகளில் தெய்வீகச் சோதனை முறை (Orideals):

ஆட்சிக்கும், ஆவணத்திற்கும் உட்பட்ட தீர்ப்புகளைப் பிரதி வாதிகள் ஒப்புக் கொள்ளாத நிலையில் தெய்வீகச் சோதனை முறை (Ordeal) பின்பற்றப் பட்டது. அயலார் காட்சியை அல்லது

[1] Inscriptions of Pudukkottai State. No. 976.
[2] Dr. T.V.M. op. citus. P. 127.

சாட்சிகளின்வாக்கு மூலங்களை நடுவர்கள் நம்புவதற்குத் தயங்கிய பொழுதும் தெய்வீகச் சோதனை முறை பின்பற்றப்பட்டது. தெய்வீகச் சோதனைக் குட்பட்ட வாதி பிரதிவாதிகள் பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கையில் எடுத்தோ, கொதிக்கும் எண்ணெய் அல்லது நெய்யில் விரல்களைத் தோய்த்தோ தங்களுடைய கட்சியின் நியாயத்தை நிலைநாட்டிக் கொள்ளலாம். புதுக் கோட்டை மாவட்டத்தில் உள்ள மேலத் தானியம் கிராமத்தில் வசித்த பறையர்களுக்கும், பள்ளர்களுக்கும் இடையே சில உரிமைகளைப் பற்றிய வழக்குத் தோன்றியது. வீரசின்னு நாயக்கர் என்பவர் இந்த இரு கட்சித் தலைவர்களையும் கொதிக்கும் நெய்யில் விரல்களை விடச் செய்து பின் துணியால் கட்டிவிடும்படி செய்தார். பள்ளர் தலைவனுடைய விரல்கள் காயமின்றி இருந்தன. ஆகையால், பள்ளர்கள் சார்பில் நியாயம் வழங்கப்பட்டது. மைசூர் நாட்டில் நாவிதர்களும், சலவைத் தொழிலாளர்களும், குயவர்களுக்குச் சவரம் செய்வதற்கும், கலியாண காலத்தில் தலைப்பாகை கட்டுவதற்கும் தங்களால் முடியாது என்று வாதிட்டனர். குயவர்கள் தலைவன் ஹர்தனஹல்லி திவ்யலிங்கேசுவரர் கோவிலின் முன்பு கொதிக்கும் நெய்யில் விரல்களை விட்டுக் காயம்படாமல் இருந்ததைக் கண்ட நடுவர்கள் குயவர்கள் சார்பாகத் தீர்ப்பளித்தனர்.

மேற்கூறப்பட்ட தெய்வீகச் சோதனை முறை விஜயநகரப் பேரரசில் நடைமுறையில் இருந்ததைப் பற்றி நிகோலோ காண்டி என்ற இத்தாலியரும் உறுதி கூறுவார். 'கோவிலில் உள்ள உருவச்சிலையின் முன்பு ஒரு பாத்திரத்தில் வெண்ணெய் வைக்கப்பட்டுக் கொதித்துக் கொண்டிருக்கிறது. தன்மீது குற்றமில்லை என்று கூறும் பிரதிவாதி தன்னுடைய இரண்டு விரல்களைக் கொதிக்கும் நெய்யில் விட்டார். பின்னர் அந்த இரண்டு விரல்களையும் சேர்த்து ஒரு துணியால் கட்டி அதன் முடிச்சில் முத்திரையிடப்பட்டது. மூன்றும் நாளன்று முத்திரையும் துணிக்கட்டும் நீக்கப் பெற்றன. விரல்களில் எவ்விதக் காயமும் இல்லாமல் போனால் அந்த நபர் குற்றவாளியல்லர். விரல்களில் காயமிருந்ததால் அவர் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டனை யடைந்தார்*.

குற்றவியல் வழக்குகளின் நடைமுறை (Criminal cases procedure): குற்றவியல் பற்றிய வழக்குகளை விசாரணை செய்து தண்டனை விதிப்பதற்குப் பேரரசருக்கு அதிகாரம் இருந்தது. அரசியல் குற்றமாகிய அரசத் துரோகத்திற்குக் கிருஷ்ண தேவராயரே தண்டனை விதித்ததாக வழங்கும் செய்தி எவ்வளவு

*Ibid. P. 129.

உண்மையான தென்று விளங்கவில்லை. தம்முடைய மகன் திருமலை தேனுக்கு நஞ்சு ஊட்டிக் கொன்றதற்காக அமைச்சர் சாளுவ திம்மரையும், அவருடைய குமாரர்களையும் குருடாக்கிச் சிறையில் இட்டார் என்ற செய்தி மிக்க கொடூரம் நிறைந்த தாகும். இக் குற்றத்தைச் சாளுவர் செய்திருந்தால் நியாய சபை ஒன்றை அமைத்து அதில் சாளுவ திம்மருடைய குற்றத்தை நிரூபணம் செய்த பின்னர்த் தண்டனை யளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆமுக்த மால்யதா என்ற நூலில் அரச தருமத்தை நன்கு விளக்கி உள்ள கிருஷ்ண தேவராயர், சாளுவ திம்மருக்கு மேற்கூறப்பட்ட கொடூர தண்டனையை விதித்திருக்க மாட்டார் என்றே நாம் நினைக்க வேண்டியுள்ளது.

குற்றவியல் வழக்குகளை அரசனிடம் முறையிடுவதற்கு மக்கள் பின்பற்றிய விதத்தைப்பற்றி நூனிஸ் கூறியுள்ளதை நாம் உணர்வது நலமாகும். 'அரசனிடம் முறையிட விரும்பியவர்கள் அரசவையில் அரசனுடைய அடிகளை வணங்குவது போன்று முகமும், மார்பும் தரையில் படும்படி வீழ்ந்து முறையிடுவதும் உண்டு. அரசன் நாட்டைச் சுற்றிப் பார்க்கும் பொழுதும் வேட்டையாடுதற்குச் செல்லும் பொழுதும் ஒரு நீளமான கழியில் வேப்பிலை அல்லது மற்றச் செடிகளின் தழைகளைக் கட்டிக் கொண்டு அரசனுக்கு முன் சென்று தங்கள் குறைகளைத் தெரிவித் தனர். தங்களுடைய பொருள்களைக் கொள்ளைக்காரர்களிடம் இழந்தவர்களும் அவ்விதம் செய்தனர். அரசர் தம்முடைய காவல்காரர்களை உடனே அழைத்துத் திருடர்களைக் கண்டுபிடித்து நியாயம் வழங்கும்படி செய்வார். சில சமயங்களில் மந்திர வாதிகளின் உதவி கொண்டும் திருடர்களைப் பிடிப்ப துண்டு.'

அரசனே நேரில் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்த தாக நாம் கூறுவதற் கில்லை. மாகாணங்களில் மகாமண்டலீசுவரர்களும், கிராம-நாட்டுச் சபையார்களும், கோவில் தானத் தார்களும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு அளித்ததாகத் தெரிகிறது. குற்றவியல் வழக்குகளையும் பஞ்சா யத்து முறையில் விசாரணை புரிந்து நியாயம் வழங்கப்பட்ட செய்திகள் கல்வெட்டுகளில் காணப் பெறுகின்றன, வீரசாயன உடையார் மகாமண்டலீசுவரராக இருந்த காலத்தில் கோவிலூர் என்னு மிடத்தில், தெற்கிலரையன், வடக்கிலரையன் என்ற இரு தலைவர்களுடைய கட்சிக்காரர்கள் கொலைக் குற்றங்களை மாற்றி மாற்றிச் செய்து வீண் கொலைக்குற்றத்திற்கு ஆளாயினர். பின்னர்த் தங்கள் குற்றங்களைத் தாங்களே உணர்ந்து இனி அவ் விதம் நடந்து கொள்வ தில்லை என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

திருக்கழுக்குன்றம் திருக்கோவிலில் நடந்த திருட்டுக் குற்றத்தை அக் கோவிலின் அதிகாரிகள் விசாரணை செய்து தண்டனை கொடுத்ததைப்பற்றி ஒரு கல்வெட்டில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஐந்தன் என்பவன் திருக்கழுக்குன்றத்துக் குன்றவனப் பெருமாள் கோவில் பண்டாரத்திற்குள் கன்னம் வைத்துப் புகுந்து ஒரு காசுமாலையில் இருந்த 150 பொற் காசுகளைத் திருடி விட்டான் என்று மெய்க்காவல் என்ற கோவில் அதிகாரி குற்றம் சாட்டினர். இத் திருட்டுக் குற்றத்தை விசாரிப்பதற்கு ஸ்ரீருத்ர மகேசுவரரும் சேங்கிலான் கிழான்; திருப்பலாவாயில் உடையார், வென்றுபரணன் ஆதித் தேவன், தனவான் அமராபதி காத்தார், காரைக்கிழான் பொன்னம்பலக் கூத்தன் முதலிய தனிப்பட்டவர்களும். கைக்கோளர்களும் அடங்கிய நடுவர் சபை அமைக்கப்பட்டது. விசாரணை நடக்கும் சமயத்தில் ஐந்தன் என்பவன் ஊரை விட்டே ஓடிப்போய் விட்டான். ஆகையால், அவனுக்குச் சொந்தமான நான்கு வயல்களும். கோவிலில் அவனுக்குரிய விசேஷ உரிமைகளும் தண்டேசுரப் பெருவிலையாக 850 பொற்காசுகளுக்கு ஏலம் விட்டுக் கோவில் பண்டாரத்தில் சேர்க்கப்பட்டன.

நெடுங்குடி என்னு மிடத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டின்படி நாட்டுச் சபையாரும் (நாடாக இசைந்த நாட்டார்கள்) குற்ற வியல் வழக்குகளை விசாரித்ததாக நாம் அறிகிறோம். உஞ்சாணைப் பற்று, நியமப் பற்று, கழனிவாசற் பற்று, அதலூர் நாடு முதலிய பகுதிகளில் வாழ்ந்த சபைத் தலைவர்கள் ஒன்று கூடி ஒரு குற்ற வியல் வழக்கை விசாரணை செய்ததாகப் புதுக்கோட்டைக் கல் வெட்டு ஒன்றில் கூறப்பட்டுள்ளது[1]. மழவராயன் என்பவ னுடைய சேனையுடன் சேர்ந்து கொண்டு மூன்று தனிப்பட்ட நபர்கள் நாட்டில் கலகம் விளைத்து இருபது பேர்களைக் கொன்ற குற்றத்திற்காகத் தகுந்த தண்டனைகள் விதிக்கப்பட்டனர். பூவாலைக்குடி என்னு மிடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் துவார் என்ற கிராமத்தில் வசித்தவர்கள் பொன்னமராவதி நாட்டில் புகுந்து அடாத செயல்களைச் செய்தனர் என்றும், பொன்னமராவதி நாட்டு மக்கள் பூவாலைக்குடிச் சபையாரிடம் பிராது செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளன. நியாயம் வழங்கப் பட்ட பிறகு குற்றத்திற்குள்ளான மக்கள் பூவாலைக்குடி கோவி லுக்குச் சில நிலங்களைத் தேவதானமாக அளித்தனர்[2].

---

[1]Pudukottai State Inscriptions. No. 818.

[2]Dr. T.V.M. Op. citus. P. 133.

குற்றங்களுக்குத் தண்டனைகள் :

விஜயநகரப் பேரரசில் குற்றங்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள் கொடூரமானவை என்று கூறவேண்டும். 'சிறிய திருட்டுக் குற்றங்களுக்கும் திருடனுடைய கை கால்கள் குறைக்கப்பட்டன. பெரிய திருட்டுக் குற்றங்களுக்குத் தாடையில் கூர்மையான கொக்கியை மாட்டித் தொங்கவிடுவது வழக்கம். கற்பழித்தல் முதலிய கொடிய குற்றங்களுக்கும் மேற்கண்ட தண்டனை வழங்கப்பட்டது'. அரசத்துரோகம் செய்தவர்களுடைய வயிற்றில் கூர்மையான கழியைச் செருகிக் கழுவில் ஏற்றினர். கொலைக் குற்றம் செய்தவர்களுக்குச் சிரச்சேதத் தண்டனை விதிக்கப்பட்டது. அரசனுடைய சீற்றத்திற்கு உள்ளானவர்கள் மதங்கொண்ட யானையின்முன் வீழ்த்தப்பட்டு அதன் கால்களால் மிதியுண்டு இறக்கும்படி செய்யப்பட்டனர்' என நூனிஸ் கூறியுள்ளார். இக் கூற்றை அப்துர் ரசாக் என்பவரும் உறுதி செய்கிறார்.

1616ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்றில் 'கோவிலுக்குச் சொந்தமான பொன் நகையைத் திருடிய ஒருவன் சிறையிலடைக்கப்பட்டுப் பின்னர் ஒரு கரத்தை இழந்தான். அவனுடைய நிலங்கள் கோவிலுக்குக் கொடுக்கப்பட்டன. அவனும் ஊரைவிட்டுத் துரத்தப் பட்டான்' என்று கூறப் பட்டுள்ளது. குற்றவாளிகள் பலவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாயினர். தும்பிச் சீமையில் குடியானவர்களுடைய குழந்தைகளைக் கொன்ற தானதார் திம்மர் என்ற கொலைகாரன் சித்திரவதை செய்யப்பட்டு உயிரிழந்தான். மேலே நூனிசும், அப்துர்ரசாக்கும் கூறியவாறு விதிக்கப்பட்ட தண்டனைகள் நாட்டிலுள்ள எல்லாக் குற்றவாளிகளுக்கும் அளிக்கப்பட வில்லை. விஜயநகரப் பேரரசில் சட்டத்திற்குமுன் எல்லா மக்களும் சரி நிகர் சமானமானவர்கள் என்ற கொள்கை நிலைபெற்றிருக்க வில்லை. கொலைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று முறையீடுகள் செய்து கொள்ள அனுமதியளிக்கப்பட வேண்டுமெனக் கிருஷ்ண தேவராயர் கூறுவார். அரசத் துரோகக் குற்றம் சாட்டப் பட்டவர்களுக்கு மேல்முறையீடு செய்துகொள்ள வாய்ப்புகள் இல்லை.

கொலைத்தண்டனை விதிக்கப் பட்டவர்களை நரபலியிடும் வழக்கமும் விஜயநகர ஆட்சியில் நிலவியது. கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் நாகலாபுரத்தில் வெட்டப்பட்ட நீர்ப்பாசன ஏரியின் மதகு, நிலைபெறுவதற்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் நரபலியாகக் கொலை செய்யப்பட்டனர்.

இரண்டாம் தேவராயரைக் கொலை செய்யத் திட்டமிட்ட துரோகிகளுக்குப் பல விதமான கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டன. அரசத் துரோகக் குற்றம் செய்தவர்கள் அந்தணர்களாக இருந்தால் சிறைத்தண்டனை மாத்திரம் விதிக்கப்பட்டது. சில சமயங்களில் கொலைக் குற்றம் புரிந்தவர்கள் பெயரளவில் தண்டனை விதிக்கப்பட்ட செய்திகளும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. 1444-45இல் மைசூர் நாட்டில் தருமப் பட்டணம் என்னுமிடத்தில் வசித்த வியாபாரிகள் செய்த கொலைக் குற்றத்திற்காக அவர்கள் சம்பாதித்த செல்வத்தில் பத்தில் ஒரு பகுதியைக் கோவிலுக்குத் தானமாக அளித்துள்ளனர். 1480இல் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மூவர் ஆளொன்றுக்கு ஒரு மா வீதம் தேவதான இறையிலியாகச் சிவன் கோவிலுக்குத் தானம் வழங்கிய செய்தியைப் பற்றி ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. சில வகையான குற்றங்களுக்குச் சாதிக் கட்டுப்பாடு செய்து சாதியை விட்டு விலக்கும் தண்டனையும் கொடுக்கப்பட்டது. மற்றும் சில குற்றங்களுக்கு அபராதங்கள் விதிக்கப்படுவதும் உண்டு. மைசூர் நாட்டில் கொப்பைத் தாலுக்காவில் வசித்த சிக்கண்ண நாயக்கர் என்பவர் தாம் செய்த குற்றத்திற்காக 30 வராகன் அபராதம் கட்ட வேண்டி வந்தது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இராங்கியம் என்னும் ஊரில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன. 'இராச்சிங்க மங்கலம் தென்பற்றுப் பொன்னமராவதி நாட்டில் கொலைக் குற்றம் செய்தவர்கள் பூமீசுவர நாயனூர் கோவிலுக்குத் தானமாக அபராதம் கொடுக்க வேண்டும். கொலையுண்டவர் ஆணாக இருந்தால் ஐந்து பணம் என்றும் பெண்ணாக இருந்தால் பத்துப் பணம் என்றும் நியதி உண்டாயிற்று.' நியாயமற்ற முறையில் அரசாங்கத் தண்டனை அடைந்தவர்களுக்கு இழப்பீடு கொடுப்பதும் உண்டு. 1583ஆம் ஆண்டில் புத்தனஹல்லி பத்ரிகௌடர் என்பவருடைய நெற்களத்தைக் கேலடி இராமராசய்யர் என்னும் நாயக்கத் தலைவர் எடுத்துக்கொண்டதற்கு ஈடாக ஐந்து கண்டுகை நிலங்கள் இழப்பீடாகக் கொடுக்கப்பட்டன.

விஜயநகர அரசில் பாதுகாவல் முறை (Police) :

விஜயநகர அரசில் இருவகையான பாதுகாவல் முறைகள் நிலைபெற்றிருந்தன. தலைநகரத்தைக் காவல் புரிவதற்கு மத்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருந்த காவல்படையினர் விஜயநகரத்தைப் பாதுகாத்தனர். இராச்சியங்களிலுள்ள கிராமங்களைப் பாதுகாப்பதற்கு நாயக்கன்மார்களாலும், கிராம மக்களாலும் அமைக்கப்பெற்ற காவல்காரமுறை அமுலில் இருந்து

வந்தது. இந்த இருவகையான காவல்காரர்களும், நகரங்களிலும் கிராமங்களிலும் அமைதியை நிலைநாட்டித் திருடுகளும், கொலைக் குற்றங்களும், சண்டை சச்சரவுகளும் நடைபெறுமல் கவனித்து வந்தனர்.

தலைநகராகிய விஜயநகரத்தில் இருந்த காவல் படையைப் பற்றி அப்துர் ரசாக் பின்வருமாறு கூறுவர். 'இந்தக் காவற் படையினர் விஜயநகரத்தின் ஏழு அரண்களுக்குள் நடைபெறும் எல்லா விதமான சம்பவங்களையும் பற்றி உடனுக்குடன் அறிந்து கொண்டனர். நகரத்தில் களவுகள் ஏற்பட்டால் களவு போன பொருள்களை மீட்டுக்கொடுப்பது இவர்களுடைய முக்கியக் கடமை யாகும். அவ்விதம் மீட்டுக் கொடுக்கத் தவறினால் இவர்கள்மீது அபராதங்கள் விதிக்கப் பெற்றன. அப்துர் ரசாக்கின் துணைவர் தம்முடன் சில வேலையாள்களைக் கொண்டு வந்திருந்தார். அடிமை களாகிய அந்த வேலைக்காரர்கள் தப்பி ஓடிவிட்டனர். தலைமைக் காவற்காரரிடத்தில் இத் தகவல் அறிவிக்கப்பட்டது. அப்துர் ரசாக்கும் அவருடைய துணைவரும் வசித்த பகுதியில் இருந்த காவல்காரர்கள் மேற்கூறப்பட்ட அடிமைகளைக் கண்டு பிடித்துக் கொண்டு வரும்படி உத்திரவிடப்பட்டனர். அவர்களால் ஓடிப் போன அடிமைகளைக் கண்டுபிடிக்க முடியாமற் போகவே குறிப் பிட்டதொரு தொகையை அபராதமாகச் செலுத்தினர்.

மேலே குறிப்பிட்ட காவல்படையைப் பற்றி நூனிஸ் என்பவரும் விவரித்துள்ளார். நகரத்திலும், கிராமங்களிலும் திருட்டுகள் நடைபெற்றால் அவற்றைப்பற்றி அரசனுக்குத் தகவல் கிடைத்தவுடன் தலைநகரத்திலிருந்த நாயக்கன்மார்களின் காரிய தரிசிகளுக்கு இச் சம்பவங்களைப் பற்றிய செய்திகள் அறிவிக்கப் பட்டன. அவர்கள் தங்கள் தலைவர்களுடைய நாயக்கன் மார்களுக்குத் தகவல் தெரிவித்துத் திருட்டுப்போன பொருள்களை மீட்குமபடி செய்தனர். அவ் விதம் மீட்டுக் கொடுக்காத நாயன் மார்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரண்டாம் தேவராயர் காலத்தில் விஜயநகரத்தில் பன்னிரண்டாயிரம் காவல் காரர்கள் இருந்தனர் என்றும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றிற்கு 30 பணம் ஊதியமாகக் கொடுக்கப்பட்ட தென்றும் அப்துர் ரசாக் கூறியுள்ளார்.

விஜயநகரப் பேரரசிலிருந்த இராச்சியங்கள் பல நாயக்கத் தானங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு நாயக்கத் தானத்திலும் இருந்த நாயக்கத் தலைவர்கள் பல காவல்காரர்களை நியமித்து அவர்களுடைய அதிகார எல்லைக்குட்பட்ட இடங்களில் திருடுகளும், கலகங்களும் நடைபெறுத வண்ணம் காவல் புரிந்

தனர். திருட்டுக் குற்றங்களும், கொலைக் குற்றங்களும் புரியும் இனத்தைச் சேர்ந்தவர்களே காவல்காரர்களாக நியமிக்கப் பெற்றனர். இந்தக் காவல் தலைவர்கள் தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்கள் களவு, கொலை, முதலிய குற்றங்களைச் செய்யாத வாறு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தக் காவல் தொழிலுக்கு நிலமானியங்கள் கொடுக்கப்பட்டன. காவல்காரர் கள் கிராமங்கள் தோறும் தலையாரிகளை நியமித்து மக்களுடைய செல்வங்களையும் இல்லங்களையும் பாதுகாவல் புரிந்தனர். தலை யாரி கள் தங்களுடைய கடமைகளைச் சரிவர ஆற்றுமல் போனால் தகுந்த அபராதமும் தண்டனையும் விதிக்கப் பட்டனர். சென்னைத் திரு வொற்றியூர்க் கோவிலில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'படவூர்த் தலைவனிடம் காவல்காரர்களாக அலுவல் பார்த்த 48 அகமுடை யார்கள் தொடக்கத்தில் பொறுப்புடன் தங்கள் பணிகளைச் செய்தனர். பின்னர்த் தங்களுடைய கடமையைக் கைவிட்டமை யால் அதற்கேற்ற தண்டனை யடைந்தனர்' என்று கூறப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் நியமிக்கப்பட்ட காவல் காரர்கள் கிராமத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் பொறுப் புள்ளவர்களாகப் பணியாற்றினர். காவல்காரர்களுடைய உரிமைக்குப் பாடிகாவல் உரிமை என்ற பெயர் வழங்கியது. இப் பாடிகாவல் உரிமையைப் பிறருக்குக் கிரயம் செய்வதற்கும் வாய்ப்புகள் இருந்தன. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வடகோனூட்டு அன்னவாசல் மக்கள் தங்களுடைய பாடிகாவல் உரிமையை 150 சக்கரப்பணத்திற்குக் கிரயம் செய்ததாக ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம் திருவானைக்காப் பகுதியில் இருந்த நாட்டுச் சபையாரிடம் சில கள்ள வேலைக் காரர்கள் காவற்காரர்களாக இருப்பதற்குச் சம்மதித்தனர். அப் பகுதியில் வாழ்ந்த பதினெண் பூமி சமயத்தார்களும், ஒவ் வொரு குடும்பத்திலிருந்தும் ஆண்டுதோறும் வரியாக ஒரு பணமும் திருமணங்கள் நடக்கும்போது ஒரு மோதிரமும் பெற்றுக் கொள்வதென்ற திட்டம் அமலுக்கு வந்தது. கிராமச் சமுதாயத் தார்கள் செல்வாக்கும், செயல்திறமையுமுள்ள நாட்டுத் தலைவர் களிடம் பாடிகாவல் உரிமையை விற்றுவிடுவதும் நடைபெற்றது. இந்தப் பாடிகாவல் உரிமை பெற்ற தலைவர்கள் தாங்கள் ஆற்றிய காவல் சேவைக்கு அரசு சுதந்திரம் என்ற கிராம வரியை வசூலிப்பது வழக்க மாயிற்று.*

கிராமங்களில் தலைமைப்பதவி வகித்த செல்வர்கள் பாடி காவல் உரிமையை வழங்கி வந்தனர். திருக்காளக்குடியில் வசித்த

*Dr. T. V. M. of Citus. P. 139.

நான்கு நிலக்கிழார்கள், மூன்று கிராமங்களின் பாடிகாவல் உரிமையைச் சிலருக்கு வழங்கியதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இப் பாடிகாவல் உரிமையின்படி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மா நிலத்திற்குக் குறுணி (ஒரு மரக்கால்) நெல்லும், ஒரு கட்டு வைக்கோலும் பெறுவர்; விசேஷ தினங்களில் பெறுவதற்குரிய சில வெகுமதிகளும் பெறலாம். திருக்காளக்குடியில் உள்ள இன்னொரு கல்வெட்டின்படி திருக்காளக்குடிக்கு அருகில் இருந்த ஒரு கிராமம் குடிகள் இல்லாத நிலையில் பாழடைந்து வந்தது. சாளுவ நாயக்கர், அப்பாப்பிள்ளை என்ற இருவரும்கூடிச் சக்க தேவர், சிறு காட்டுவன் என்ற சகோதரர்களை அழைத்து அக் கிராமத்தில் மக்கள் குடியிருப்பதற்கு ஏற்ற வசதிகளைச் செய்யும் படி கூறினர். அவ் விருவரும் அவ்விதம் செய்தமையால் அக் கிராமத்தின் பாடிகாவல் உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டது. அக் கிராமத்தில் உள்ள கோவிலுக்குச் சேரவேண்டிய காட்டு முக்கை, மீசம், ஆசுபோது மக்கள்பேறு முதலிய வரிகளை வசூலிக்க வும் அதிகாரம் பெற்றனர்.*

திருவேங்கை வாசல் கிராமத்துக் கோவில் தானிகர்களும் கிராம வாசிகளும் சேர்ந்து அக் கிராமத்தின் பாடிகாவல் உரிமையையும் கடமைகளையும் இரும்பாழிக் கிராமத்துத் தலைவனுக்கு அளித்துள்ளனர். தென்னிந்தியாவில் பாடிகாவல் உரிமையும், கடமைகளும் பெற்ற காவல்காரர்கள் காவல் முறையில் நிலங்களை அனுபவித்து வந்தனர். காவல்முறையில் நிலங்களைப் பெற்றவர்கள் பின்வரும் வரும்படிகளைப் பெற்றனர்.

(1) இறையிலி அல்லது அரசாங்க வரி விதிக்கப்படாத சில நிலங்கள்

(2) மற்ற இறையிலி நிலங்களிலிருந்து கிடைக்கும் வரு மானத்தில் ஒரு பகுதி

(3) நிலங்களை உழுது பயிரிடும் உழவர்களின் ஏர்களுக்கு ஏற்றதொரு வருமானம்

(4) வியாபாரிகளின் கடைகள், வீடுகள், துணிகள் நெய்யப் படும் தறிகள் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட சில வரிகள்

(5) வாரச் சந்தைகள், மாதச் சந்தைகள் கூடும் இடங்களில் வசூலிக்கப்படும் சில வரிகள்.

---

*Ibid.

விஜயநகரப் பேரரசில் இருந்த தலைமைக் காவல்காரர்களுக்கு அரசு காவல்காரர் என்ற பெயரும் வழங்கியது. திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் அரசு காவல்காரர்களாக இருந்த சில தலைவர்கள் பின்னர்ப் பாளையக்காரர்களாகப் பதவி வகித்தனர் என்று பல்லாரி மாவட்ட கெசட்டியர் என்னும் நூலில் கூறப்பட்டு உள்ளது. அவ்விதம் பாளையக்காரர்களாகப் பதவி வகித்தவர்கள் துறையூர், அரியலூர், உடையார் பாளையம் முதலிய பாளையங்களின் தலைவர்கள் ஆவர்*.

*Dr. T.V.M. op. citus P. 140.

18. விஜயநகரப் பேரரசின் இராணுவ அமைப்பு

விஜயநகரப் பேரரசை எதிரிகள் அடிக்கடி படையெடுத்து அழித்து விடாமல் பாதுகாப்பதற்கு வன்மை மிக்க இராணுவம் மிக்க அவசியமாக இருந்தது. பாமினி சுல்தான்கள் இராய்ச்சூர் இடதுறைநாட்டின்மீது படையெடுப்பதும் விஜயநகரத்தை முற்றுகை யிடுவதும் விஜயநகர வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சி களாக இருந்தன. அற்பக் காரணங்களுக்காக இருநாடுகளும் போர்களில் ஈடுபட்டுள்ளன. மேலும் பேரரசில் இருந்த நாயக்கன்மார்களும், சிற்றரசர்களும் கலகம் செய்வதை அடக்கு வதற்கும் பலமிக்க இராணுவம் இன்றியமையாத தாயிற்று. விஜய நகரத்திற்கு விஜயம் செய்த அயல்நாட்டு வழிப்போக்கர்கள் எல்லாரும் பேரரசின் சேனைகளின் எண்ணிக்கையைப் பிறர் நம்ப முடியாத அளவிற்குக் கணக்கிட்டுள்ளனர். ஆனல், இந்த எண்ணிக்கைகள் பேரரசர்களால் காப்பாற்றப்பட்ட சேனையா, நிலமானிய முறையைப் பின்பற்றிய நாயக்கன்மார்களின் சேனையா என்பது விளங்க வில்லை. துவார்த்தி பார்போசா என்பவர் விஜயநகரப் பேரரசின் சேனையில் ஓர் இலட்சம் வீரர்கள் இருந்தனர் எனவும் அவர்களுள் குதிரை வீரர்கள் மாத்திரம் இருபதினுயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் என்றும் கூறுவார். கிருஷ்ண தேவராயர் காலத்தில் 50 ஆயிரம் காலாட் படை வீரர்களும், ஆருயிரம் குதிரை வீரர்களும் இருந்தனர் எனவும், இவர்களுள் இருநூறு குதிரை வீரர்கள் எப்பொழுதும் அரச னுடன் இருந்தனர் எனவும், ஈட்டிகளும், கேடயங்களும் கொண்ட இருபதினுயிரம் வீரர்களும், யானைகளைப் பழக்குவதற்கு மூவாயிரம் பேர்களும், குதிரைகளைப் பாதுகாப்பதற்கு 1,600 பேர்களும் இருந்தனர் என்றும் நூனிஸ் கூறுவார். இவ்வளவு பெருந்தொகையான சேனை வீரர்களுள் நிலமானிய முறையில் பேரரசுக்கு அனுப்பப்பட்டவரும் அடங்குவர்.

விஜயநகரப் பேரரசின் சேனைவீரர்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

(1) அரசர்களால் நேரடியாக இராணுவத்தில் சேர்க்கப் பட்டும் ஊதியம் கொடுக்கப்பட்டும் பாதுகாக்கப்பட்ட சேனை.

(2) நிலமானிய பிரபுக்களாகிய நாயக்கன்மார்களால் அனுப்பப்பட்ட சேனை.

அரசர்களால் அமைக்கப் பெற்ற சேனையின் வீரர்கள் எவ்வாறு சேர்க்கப்பட்டனர் என்பதைத் துவார்த்தி பார்போசாவின் கூற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். 'சேனையில் சேர விரும்புகிறவர்களின் உடல் அமைப்பையும், உயரத்தையும் நன்கு பரிசோதனை செய்கின்றனர். பின்னர் ஒவ்வொருவருடைய பெயர், பிறந்த நாடு, பெற்றோர்களின் பெயர் முதலியவைகளை எழுதிக் கொள்ளுகின்றனர். சேனையில் சேர்ந்த பிறகு இவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு விடுமுறையில் செல்ல முடியாது. அரசாங்க விடுமுறையின்றிச் சேனையிலிருந்து தப்பித்துச் சென்றவர்கள் பின்னர்க் கடுமையான தண்டனை யடைந்தனர்.' சேனையில் சேர்ந்த வீரர்கள் ஒரே விதமான இராணுவப் பயிற்சிக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு இருந்தவராகத் தெரியவில்லை. ஏனெனில், இராய்ச்சூர்ப் போரில் ஈடுபட்ட வீரர்கள் தங்களுடைய தனிப்பட்ட முறைகளிலும் ஆடை அணிகளிலும் சிறப்புற்று விளங்கினர் என நூனிஸ் கூறியுள்ளார். இதனால், விஜயநகரத்து அரசர்களுடைய சேனையில் ஒற்றுமையும், தேச பக்தியும் கொண்ட வீரர்கள் இருந்தனர் எனக் கூறுவதற்கில்லை.

இரண்டாவதாகக் கூறப்பட்ட நிலமானியமுறைச் சேனைகள் பேரரசிடம் நாயன்கரா முறையில் நிலங்களைப் பெற்றுக் குறிப்பிட்ட கரி, பரி, காலாட்படைகளை அனுப்புவதாக ஒப்புக் கொண்ட நாயக்கன்மார்களால் அனுப்பப் பெற்றவையாகும். 'அச்சுத ராயருடைய நாயக்கன்மார்கள் 6 இலட்சம் காலாட் படை வீரர்களையும், 24 ஆயிரம் குதிரை வீரர்களையும் அரசனுக்கு அனுப்புவதாக ஒப்புக் கொண்டுள்ளனர். இந்த நாயக்கன்மார்கள் அரசாங்கத்தில் பெரிய அலுவல்களையும் பார்க்கின்றனர்' எனக் கூறுவார். நாயக்கன்மார்கள் வைத்திருக்க வேண்டிய காலாட்படைகளும், கரி, பரி முதலியனவும் இன்னவை எனப் பின்வருமாறு கூறுவார்.

நாயக்கரின் பெயர்	காலாட் படை வீரர்	குதிரைப் படை வீரர்	யானைகள்
1. சாளுவ நாயக்கர்	30,000	3,000	30
2. அஜபார்ச்ச திம்மப்ப நாயக்கர்	25,000	1,500	40
3. காப்ப நாயக்கர்	20,000	2,500	30

நாயக்கரின் பெயர்	காலாட் படை வீரர்	குதிரைப் படை வீரர்	யானைகள்
4. இலப்ப நாயக்கர்	20,000	1,200	28
5. நர்வரா நாயக்கர்	12,000	600	20
6. சின்னப்ப நாயக்கர்	10,000	800	இல்லை
7. கிருஷ்ணப்ப நாயக்கர்	700	500	இல்லை
8. வசவப்ப நாயக்கர்	10,000	800	15
9. மல்லப்ப நாயக்கர்	6,000	400	இல்லை
10. அடைப்ப நாயக்கர்	8,000	800	30
11. பாசப்ப நாயக்கர்	10,000	1,000	50
மொத்தம்	1,51,700	13,100	233

கிருஷ்ண தேவராயர் இராய்ச்சூர்க் கோட்டையை முற்றுகையிட்ட பொழுது பேரரசின் சேனையோடு சேர்ந்து போரிட்ட அமர நாயக்கர்களுடைய படைகள் எவை என்றும் இன்ன எண்ணிக்கை யுள்ளவை என்றும் நூனிஸ் கூறியுள்ளார்.

படையனுப்பியவரின் பெயர்	காலாட் படை வீரர்	குதிரைப் படை வீரர்	யானைகள்
1. விஜயநகரக் காவலர் களின் தலைவர்	30,000	1,000	6
2. திரிம்பிசாரன்	50,000	2,000	20
3. திம்மப்ப நாயக்கர்	60,000	3,500	30
4. அடைப்ப நாயக்கர்	1.00,000	5,000	50
5. கொண்டம ராசய்யா	1,20,000	6,000	60
6. குமரப்ப நாயக்கர்	80,000	2,500	40
7. ஒகம்திராகோ	30,000	1,000	10
8. (மற்றும்) மூன்று தலைவர்கள்	40,000	1,000	15
9. வெற்றிலைபாக்கு அடிமை	15,000	200	இல்லை
10. குமார வீரய்யா	8,000	400	20
மொத்தம்	5,33,000	22,600	251

மேலே குறிப்பிடப் பெற்ற காலாட் படைகள் முதலியவற்றை ஒவ்வொரு நாயக்கருக்கும் இவ்வளவு என்று பேரரசரே நிச்சயம் செய்வது வழக்கம். தேவைக்குத் தக்கவாறு உயர்த்தவும், குறைக்கவும் அரசருக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், எந்த அடிப்படையில் மேற்கண்ட படைகள் நிச்சயம் செய்யப் பெற்றன என்பது விளங்க வில்லை. அமர நாயக்கர்களுக்குள் பல விதமான ஏற்றத் தாழ்வுகள் இருந்திருக்க வேண்டும். அமர நாயக்கர்கள் அன்றியும் பேரரசருக்கு அடங்கிய சிற்றரசர்களும் போர்க் காலங்களில் கரி, பரி, காலாட் படை களைக் கொடுத்து உதவி செய்திருக்க வேண்டும். பங்காபூர், கெர்சோபா, தென் காசிப் பாண்டியர், திருவாங்கூர் அரசர் முதலியவர் பேரரசுக்கு அடங்கிக் கப்பம் கட்டினர். ஆனால், இந்தச் சிற்றரசர்கள், நாயக்கன்மார்களைப் போல் தலைநகரத்திற்குத் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்புவ தில்லை. நவராத்திரி விழாவின்போது தலைநகரத்திற்கு வந்து கப்பம் செலுத்த வேண்டுவ தில்லை. தங்க ளுடைய தலைநகரத்திலிருந்தபடியே திறைப் பொருள்களை அனுப்பி வைக்கலாம்.

மேலே கூறப்பட்ட பேரரசின் நிலையான சேனையும், அமர நாயக்கர்களாலும், சிற்றரசர்களாலும், போர்க் காலங்களில் அனுப்பப்பட்ட சேனைகளும் தவிர, அரசருக்கு ஆபத்துக் காலங் களில் உதவி புரியத் தனியான சேனை ஒன்று மிருந்ததென நூனிஸ் கூறுவார். இப் படையில் யானைகளோடு, கலாட் படையினரும், குதிரை வீரர்களும் இருந்தனர். இவர்களுள் தேர்ச்சியுள்ள இருநூறு குதிரை வீரர்கள் கிருஷ்ண தேவராயருக்கு அணுக்கத் தொண்டர்களாய்ப் பணியாற்றினர். இவர்களுக்கு அரசரே தனியாக ஊதியங்கள் கொடுத்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால், நிலமானியங்கள் கொடுக்கப்பட வில்லை. இவர்கள் அரசன் உலாப் போந்த பொழுதும், வேட்டையாடச் சென்ற பொழுதும் குதிரையில் அமர்ந்து கூடவே சென்றனர். மொகலாயப் பேரரசர் களுக்கு அணுக்கத் தொண்டர்களாக இருந்த அகாதிகள் (Anadis) என்பவர்களுக்கு இவர்களை ஒப்பிடலாம்.

விஜயநகரச் சேனை அமைப்பில் அந்தணர்களுக்குத் தனிச் சலுகைகள் கிடைத்தன. கோட்டைகளுக்குத் தலைவர்களாக நியமிக்கப் பெறுவதிலும் சேனையை நடத்திச் செல்வதிலும் மற்றவர்களைவிட அந்தணர்கள் சிறந்தவர்கள் எனக் கிருஷ்ண தேவராயர் தம்முடைய ஆமுக்த மால்யதாவில் கூறுவார். 'அரசர்களுடன் நெருங்கிப் பழகும் அந்தணர்களைச் சேனைத் தலைவர்களாக நியமித்தால் அரசர்கள் கவலை யின்றி இருக்கலாம்.

க்ஷத்திரியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் அடங்கியிருக்க நேர்ந் தாலும் அவர்கள் தங்களுடைய கடமை தவருது செயலாற்றுவர். பிராமணர்களே அரசாங்க அலுவலர்களாக நியமித்தால் அரசாங் கத்திற்கு எவ்விதக் கேடுகளும் வாரா.' விஜயநகர வரலாற்றில் அந்தணர்கள் பல உயர்ந்த அரசாங்க அலுவல்களைத் திறமை யுடன் வகித்ததற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. மாதவ வித்யாரண்யருடைய தம்பி சாயனர் சங்கம வமிசத்து அரசன் கம்பணனுக்கு அமைச்சராகப் பணியாற்றினர். இலக்கண்ணு, மாதண்ணு என்ற சகோதரர்கள் இரண்டாம் தேவராயர் ஆட்சியில் தென்சமுத்திராதிபதிகளாகப் பணி யாற்றினர். கிருஷ்ண தேவராயருடைய முக்கிய அமைச்சர் சாளுவ திம்மரும், அவருடைய தம்பி சாளுவ கோவிந்தரும் பல முக்கிய அரசியல் பதவிகளை வகித்தனர். திருக்கடையூர் (தஞ்சை மாவட்டம்) கோவிலில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் ஆபத் சகாயர் என்ற அந்தணர் இராய்ச்சூர், விஜயபுரி முதலிய இடங்களில் போரிட்டுக் கிருஷ்ண தேவராயருக்கு மிகுந்த நன்றியுடன் பணியாற்றினர் என்று கூறப்பட்டுள்ளது. அந்தணர்கள் அன்றியும் மற்றச் சாதி யினரும் விஜயநகரச் சேனையில் இடம் பெற்றிருந்தனர். இரண்டாம் தேவராயர் காலத்திலிருந்து இஸ்லாமியக் குதிரை வீரர்கள் விஜயநகரப் படைகளில் இடம் பெற்றனர். ஆனால், தலைக்கோட்டைப் போரில் இராமராயரும் விஜயநகரப் படை களும் தோல்வியுறுவதற்கு இந்த இஸ்லாமியப் படைவீரர் களுடைய துரோகச் செயலே காரண மாயிற்று.

விஜயநகர இராணுவத்தின் அங்கங்கள் :

இந்திய இராணுவம் கரி, பரி, தேர், காலாட் படை என்ற நால்வகையாகப் புராதன காலத்தில் பிரிக்கப் பட்டிருந்த போதிலும் ஹர்ஷர் பேரரசர் காலமுதற்கொண்டு தேர்ப்பகுதிப் படை வழக்கற்றுப் போயிற்று. 1347ஆம் ஆண்டில் எழுதப்பட்ட விஜயநகர அரசர்களின் கல்வெட்டு ஒன்றில் கரி, பரி காலாட் படை ஆகிய மூன்றுமே குறிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சங்கமருடைய பித்ரகுண்டாக் கல்வெட்டிலும் மேற்கூறப்பட்ட மூவகையான படைகள்தான் கூறப்பட்டுள்ளன. முதலாம் ஹரிஹர தேவருக்கு அடங்கிய ஹோனவார் சுல்தான் ஜமாலுதி னிடம் குதிரைப் படையும், காலாட் படைகளுமே இருந்தனவாக இபன்பதூதா கூறியுள்ளார். ஆயினும், பீரங்கிப்படை கிருஷ்ண தேவராயர் கால முதற்கொண்டு போர்க் காலங்களில் உபயோகத்திற்கு வந்தமையால் கரி, பரி, காலாட்படை, பீரங்கிப் படை என்ற நால்வகைப் படைகள் மீண்டும் தோன்றின. அறிஞர் B. A. சாலட்டோர் என்பவர் விஜயநகரச் சேனைகள் ஆறு

வகைகளாகப் பிரிக்கப்பட்டன வென்று கருதினர். போர்த் தள வாடங்களையும் உணவுப் பொருள்களையும் ஏற்றிச் செல்வதற்கு உபயோகப்பட்ட காளைமாடுகளையும், ஒட்டகங்களையும் சேர்த்து ஆறு விதப் படைகள் என்று கூறியுள்ளார் போலும்! காளை மாடுகளும், ஒட்டகங்களும் போர்த் தளவாடங்களாகிய பீரங்கி களையும், உணவுப் பொருள்களையும் ஏற்றிச் சென்றனவே யன்றிப் போரில் ஈடுபட வில்லை.

1. காலாட் படை: விஜயநகர இராணுவத்தின் பெரும் பகுதி காலாட் படைகளாகவே இருந்தது. இப் படையில் பிராமணர்களும், வைசியர்களும், சூத்திரர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். காலாட் படையினர் உடல் முழுவதும் நல்லெண்ணெய் தேய்த்துக் கொண்டு எவ் விதமான உடையு மின்றிப் போர் செய்தனர் என்று பெரிஷ்டா கூறியுள்ளார். ஆனல், பீயஸ் என்பவர் பல நிற ஆடைகளை அணிந்து கொண்டு போரிட்டனர் என்று கூறுவார். விசேஷ காலங்களிலும், அரசன் போர் வீரர்களுடைய அணி வகுப்பைப் பார்வையிட்ட போதும் அவ்வித ஆடைகளை அணிந்திருக்கக் கூடும். சாதாரணப் போர் வீரர்கள் இடுப்பில் மாத்திரம் கச்சை கட்டிக் கொண்டு போரில் ஈடுபட்டனர் போலும்! வாள், வில், அம்பு, போர்க் கோடரி, வேல், ஈட்டி, கைத் துப்பாக்கி, கேடயம், சிறு கத்திகள் முதலிய ஆயுதங்களைக் கொண்டு போர் செய்தனர். மதுரா விஜயம், சாளுவ அப்யூதயம் என்ற நூல்களில் அஸ்திர சஸ்திரங்களைக் கொண்டும், வாள், ஈட்டி, கார்முகம், கோதண்டம், எறிவளை முதலிய ஆயுதங்களைக் கொண்டும் போரிட்டதாகக் கூறப்பட்டு உள்ளன. உலோகங்களினலும் கடினமான தோல் பட்டை யினலும் செய்யப்பட்ட கேடயங்களைக் கொண்டு தங்கள் உடலில் காயம்படாதவாறு பாதுகாத்துக் கொண்டனர். போர்க் கோடரி களும், கூர்மையான வாளாயுதங்களும் உபயோகிக்கப்பட்டன வாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. வேல்களைக் கொண்டு தாக்கி வாள் கொண்டு கொலை செய்து எதிரிகள் முறியடிக்கப் பட்டனர்.

2. குதிரைப் படை: விஜயநகரத் தரசர்களுக்கு அசுவபதி கள் என்ற பெயர் வழங்கியதால் அவர்களுடைய குதிரைப் படை யின் வன்மை தெரிய வருகிறது. விஜயநகரப் பேரரசர்கள் போர்த்துகீசியர்களோடு நட்புறவு கொண்டது, பாரசிக அரேபிய நாட்டுக் குதிரைகளை அவர்களிட மிருந்து வாங்குவதற்கே யாகும். தென்னிந்தியாவில் பிறந்து வளர்க்கப்பட்ட குதிரைகள், போர்களில் உபயோகிக்கத் தக்கவை அல்ல. கிருஷ்ண தேவ

ராயர் காலத்தில் ஆண்டொன்றிற்குப் பதின்மூன்றாயிரம் குதிரைகளுக்குமேல் பாரசீக நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு அவைகளில் சிறந்தவைகளைத் தாமே வைத்துக் கொள்வது வழக்கம். சாளுவ நரசிம்மர் ஆயிரம் வராகன்களுக்கு மூன்று குதிரைகள் வீதம் வாங்கியதாகவும், கப்பல்களில் குதிரைகளைக் கொண்டு வரும் பொழுது இறந்துபோன குதிரைகளின் வால்களைக் காட்டினாலும், குதிரை வியாபாரிகளுக்குப் பணம் கொடுக்கப் பட்டதாகவும் நூனிஸ் கூறுவார். பாரசீக அரேபிய நாட்டுக் குதிரைகள் 400 முதல் 600 குரூசாடோக்கள் விலை போயின என்று பார்போசா கூறுவார். ஆனால், நூனிஸ் குதிரைகளின் விலைகளைப்பற்றி இருவிதமாகக் கூறியுள்ளார். ஒருவகைக் குதிரைகள் ஆயிரம் வராகன்களுக்கு ஐந்து குதிரைகள் என்றும், மற்றொரு வகைக் குதிரைகள் ஆயிரம் வராகன்களுக்குப் பன்னிரண்டு முதல் பதினைந்து வரையில் கிடைத்தன என்றும் கூறுவார். இலாங் வொர்த் டேம்ஸ் என்பவர் குதிரை ஒன்றின் விலை ரூ. 390 முதல் ரூ. 1,170 வரை இருந்த தெனக் கூறலாம் என்று எழுதுவார். கிருஷ்ண தேவராயர் தாம் எழுதிய ஆமுக்த மால்யதாவில் அரசாங்கத்தில் குதிரைப் படைகளை வைத்துப் பாதுகாப்பதற்கு இராணுவச் செலவில் சரிபாதியை ஒதுக்க வேண்டு மெனக் கூறியுள்ளார்.

குதிரைப் படைகளை மேற்பார்வை செய்து நன்முறையில் பயிற்சி அளிப்பதற் கெனத் தனி அலுவலாளர் இருந்தார். அரசாங்கக் குதிரைகளின்மீது ஒரு வித முத்திரை பதிக்கப்பட்டிருந்தது. குதிரைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய தீனிகள் மாதந் தோறும் கொடுக்கப்பட்டன. ஒவ்வொரு குதிரை வீரனுக்கும் உதவியாக வேலையாள் ஒருவனும், வேலைக்காரப் பெண் ஒருத்தியும் நியமனம் செய்யப்பட்டனர். உயர்ந்த இரகக் குதிரைகளை நன்கு பராமரிக்காத குதிரை வீரர்களுக்கு மட்ட இரகத்தைச் சேர்ந்த குதிரைகள் கொடுக்கப்பெற்றன. இறந்துபோன குதிரைகளின் மீதிருந்த அரசாங்க முத்திரையைக் குதிரைப்படைத் தலைவனிடம் காட்டி வேறு குதிரைகளைப் பெற்றுக் கொள்ளலாம். கிருஷ்ண தேவராயரிடம் குதிரைகளுக்குப் போர்ப்பயிற்சி கொடுக்கும் 300 பயிற்சியாளர்களும், 1,600 குதிரைச் சேவகர்களும் இருந்தனர் என்று நூனிஸ் கூறுவார். ஆறுயிரம் குதிரைகளைச் சிறந்த குதிரைப் படை வீரர்களுக்கு இனமாகக் கிருஷ்ண தேவராயர் அளித்து இருந்தார். போர்க் குதிரைகளின் நெற்றியில் பளபளப்பான பட்டயங்கள் கட்டப் பட்டிருந்தன. உடல் முழுவதும் துணிகளால் மூடப்பட்டிருந்தது. குதிரை வீரர்கள் இரண்டு, மூன்று அடுக்குகளுள்ள தோல் பாதுகாப்பு வைக்கப்பட்ட மேலங்கிகளை

அணிந்திருந்தனர். சில மேலங்கிகளில் மெல்லிய இருப்புப் பட்டைகளும் வைக்கப்பெற்றிருந்தன. வெயில், மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் குடைகளும் கொடுக்கப்பட்டன. குதிரைகளுக்குத் தீனி கொண்டுவரும் பணியாள்களுக்கு நிலமானியங்கள் அளிக்கப்பட்டன.

3. யானைகள் : இரண்டாம் தேவராயருடைய இராணுவத்தில் சிறுகுன்றுகளைப் போன்றும், பூதங்களைப் போன்றும் பதினாயிரத்துக்குமேல் யானைகள் இருந்தனவாக அப்துர் ரசாக் கூறியுள்ளார். யானைகளின் தந்தங்களில் இருபுறங்களிலும் கூர்மையுள்ள வாள்கள் கட்டப்பட்டிருந்தன. யானைகளின்மீது அம்பாரிகள் கட்டப் பட்டிருந்தன. அம்பாரிகளில் ஆறு முதல் பன்னிரண்டு வீரர்கள் அமர்ந்து துப்பாக்கி, வில், அம்பு முதலிய ஆயுதங்களைக் கொண்டு போரிட்டனர். யானைகளின்மீது மிருதுவான பட்டுத் துணிகள் போர்த்தப்பட்டு இருபுறங்களிலும் மணிகள் கட்டப்பட்டிருந்தன. போர்க் களிகளின் முகத்தில் பயங்கரமான பூத உருவங்கள் தீட்டப்பட்டிருந்தன.

4. பீரங்கிப் படை : விஜயநகர ஆட்சிக் காலத்தில்தான் தென்னிந்தியப் போர்களில் பீரங்கிப் படைகள் உபயோகத்திற்கு வந்தன வெனத் தெரிகிறது. கைக்குண்டுகளை வீசி நெருப்பை யுண்டாக்கிப் போர் புரிவதும், துப்பாக்கி கொண்டு சுடுவதும் இக் காலத்தில் தோன்றியன எனக் கூறலாம். 1441ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் மகாப்பிரபு பாச்சைய கௌடர் என்பவர் வெடிமருந்து தயார் செய்து நாதகிரி நாட்டு அரசனுக்கு விற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இராய்ச்சூர் முற்றுகையின் பொழுது பல பீரங்கிகளை உபயோகம் செய்ததாக நூனிஸ் கூறுவார்.

விஜயநகரப் பேரரசில் இராணுவக் கோட்டைகள் : விஜயநகரப் பேரரசின்மீது அயல் நாட்டவர்கள் படை யெடுத்து வருவதைத் தடுப்பதற்கும், உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதற்கும் இராணுவக் கோட்டைகள் பல அமைக்கப் பெற்றிருந்தன. விஜயநகரப் பேரரசின் கோட்டை அமைப்புகளைப் பின்பற்றியே பிற் காலத்தில் மராட்டியர்கள் இராணுவக் கோட்டைகளை அமைத்தனர். அனந்தப்பூர் மாவட்டத்துக் குத்தி என்னு மிடத்திலுள்ள இராணுவக் கோட்டையில் காணப்படும் கல்வெட்டுப் 'புக்க தேவருடைய நாட்டின் இறைமையைக் காப்பாற்றும் சக்கரத்தின் அச்சாணி போன்றது இக் கோட்டை' என்று கூறுகிறது. விஜயநகரப் பேரரசில் அமைக்கப்பட்ட கோட்டைகளை நான்கு விதமாகப் பிரித்துக் கூறலாம். அவை (1) தரை

துர்க்கம், (2) நீர்த் துர்க்கம் (3) கிரித் துர்க்கம், (4) வனதுர்க்கம் என்பன. பாதுகாப்பிற்குத் தகுதியான நிலவமைப்பில் அமைக்கப் பட்டவை தல துர்க்கங்கள் என்றும், ஆறு, குளங்கள், கடல் முதலியவைகளால் சூழப்பட்டவை நீர்த் துர்க்கங்கள் என்றும் மலைகளின்மீது அமைக்கப்பட்டவை கிரித் துர்க்கங்கள் என்றும், காடுகள் சூழ்ந்துள்ளவை வன துர்க்கங்கள் என்றும் பெயர் பெற்றன. புதிதாகப் பேரரசில் சேர்க்கப்பட்ட இடங்களில் உள்நாட்டுக் கலகங்களை அடக்க அமைந்த அமைப்புப் படைப் பற்றுகள் என்னும் கோட்டைகள் என்றும், அக் கோட்டைகளில் சேனை வீரர்கள் தங்கியிருந்த இடங்கள் படைவீடுகள் என்றும் வழங்கப்பட்டன. இக் கோட்டைகளையும், படைவீடுகளையும் நல்ல முறையில் பாதுகாப்பதற்குக் கோட்டைப் பணம் என்ற ஒருவரி, மக்களிடமிருந்து வசூலிக்கப் பட்டது. கோட்டையைச் சுற்றி அகழியும், மதிற்சுவர்களின்மீது நடைபாதையும், பீரங்கிகளை அமைப்பதற்கு ஏற்ற மேடுகளும், தடுப்புச் சுவர்களும், வீரர்கள் மறைந்து நின்று தாக்குவதற்குப் பதுக் கிடங்களும், கோட்டையின் மத்தியில் கொடிக்கம்ப மேடையும் இருந்தன. பல கோட்டைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட சுவர்கள் அமைக்கப்பட்டன. சில கோட்டைகளில் தூரக் காட்சிகளைக் காண்பதற் கேற்ற கோபுரங்களும் அமைக்கப்பட்டன. கண்ட ஹல்லி என்னும் கோட்டையில் நான்கு கோபுரங்கள் அமைக்கப் பட்டன என்று நாம் அறிகிறோம். சில கோட்டைகளுக்குள் அரண்மனைகளும், பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் வசிப்பதற் கேற்ற பல தெருக்களும், கோவில்களும், குளங்களும் அமைந் திருந்தன. தஞ்சையிலும், செஞ்சியிலும் காணப் பெறும் கோட்டைகள் அவற்றுக்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளாகும். சந்திரகிரிக் கோட்டையின் இடிந்து போன சுவர்களும், அரண் மனையும், குளமும், கோவில்களும் இன்றும் காணப் படுகின்றன. 1537ஆம் ஆண்டில் பொறிக்கப் பட்ட கல்வெட்டு ஒன்றில் சந்திரகிரிக் கோட்டைக்குள் இரண்டு கோவில்கள் இருந்தன என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

கோட்டை மூற்றுகை : ஒரு கோட்டையை மூற்றுகையிட விரும்பிய அரசன் முதலில் அக் கோட்டைக்குள் தன்னுடைய தூரசத்தை வீசி எறிந்து விட்டுப் பின் போரிட்டு அக் கோட்டை யைக் கைப்பற்றியபிறகு மீண்டும் அம்மூரசத்தைக் கண்டுபிடிப்பது வழக்க மாகும். கட்டாரி சாளுவர் இம் முறையைப் பின்பற்றிய தாக மைசூர் நாட்டில் காணப்படும் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. கிருஷ்ண தேவராயர் காட்டூர்க் (Cattur) கோட்டையையும், இராய்ச்சூர்க் கோட்டையையும் கைப்பற்றிய முறைகளைப் பற்றிய விவரங்களை நூனிஸ் எழுதிய வரலாற்றில் நாம் விரிவாகக் காண

முடிகிறது. கிருஷ்ண தேவராயர் ஆமது நகரத்தைக் கைப்பற்றிய செய்தியைப்பற்றி இராய வாசகம் என்னும் நூலில் கூறப்பட்டு உள்ளது. அவர் அகமது நகரத்தின் வெளிப்புற இடத்தை மிகச் சுலபமாகக் கைப்பற்றிய பிறகு 2,800 குதிரை வீரர்கள் கொண்ட படையைத் தோற்கடித்தார். கோட்டைக் குள்விருந்த மக்கள் வெளியேறினர். கோட்டையும் கைப்பற்றப்பட்டு அதன் மதிற் சுவர்களும் இடிக்கப்பட்டன. கோட்டையின் உட்பகுதிகளில் ஆமணக்கு விதைகள் விதைக்கப் பட்டன எனவும் நாம் அறிகிறோம்.

இராணுவ இலாக்காவின் அமைப்பு :

விஜயநகர இராணுவ இலாக்காவிற்குச் சேனாபதி, சர்வ சைன்யாதிகாரி, தளவாய் என்று அழைக்கப்பட்ட அதிகாரி தலைமை வகித்தார். அரசனுடைய அமைச்சர் குழுவில் அங்கம் வகிக்கும் உரிமையும் அவருக்கு இருந்தது. இந்தத் தளவாய் அல்லது சேனாதிபதிக்கு அடங்கிய அரண்மனைக் காவல்காரர் தலைவனும், குதிரைப்படைத் தலைவனும் இருந்தனர். யானைப்படைத் தலைவனைப் பற்றிய செய்திகளை நூனிஸ் கூற வில்லை. விஜயநகர இராணுவ அதிகாரிகளிடையே வரிசைக் கிரமமான பதவிகள் இருந்திருக்கலாம். ஆனால், அதைப் பற்றிக் கல்வெட்டுகளிலோ, அயல் நாட்டவருடைய கூற்றுகளிலோ ஒன்றும் காணப்பெற வில்லை.

மத்திய அரசாங்கத்தால் அமைக்கப் பெற்றிருந்த சேனை வீரர்களுக்கு அரண்மனைக் கருவூலத்திலிருந்து நேரடியாக ஊதியங்கள் வழங்கப்பட்டன. ஆனால், அவர்களுக்குத் தினந்தோறும் அல்லது மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் ஊதியங்கள் கொடுக்கப் பட்டனவா என்பது பற்றிக் கருத்துவேற்றுமை காணப்படுகிறது 'சிப்பாய்களுக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஊதியம் தரப் படுகிறது; நிலமானியங்கள் கொடுக்கப்பட வில்லை' என அப்துர் ரசாக் கூறுவார். 'ஆண்டிற்கு ஒரு முறை சேனை வீரர்களின் அமைப்பைப் பார்வையிட்டுக் கிருஷ்ண தேவராயர் ஊதியம் வழங்கினார்' என்று பீயஸ் கூறி யுள்ளார். ஆனால், நூனிஸ் என்பார் 'அரண்மனையில் இருந்த சேனை வீரர்களுக்கும், மற்றப் பணியாளர்களுக்கும் தினக்கூலி வழங்கப்பெற்றதெனக் கூறுவார். கிருஷ்ண தேவராயர் காலத்தில் மேலே கூறப்பெற்ற மூன்று விதமான ஊதிய அளிப்புகளும் இருந்தன என்று நாம் கருத வேண்டி யிருக்கிறது. சிலருக்கு ஆண்டிற்கு ஒருமுறை அளிக்கப் பட்டிருக்கக் கூடும். சிலருக்கு ஆண்டில் மூன்று முறைகளில் ஊதியங்கள் அளிக்கப் பெற்றிருக்கலாம். கீழ்த்தரப் பணி மக்களுக்குத் தினக்கூலியும் அளிக்கப் பட்டிருக்கலாம்.

விஜயநகர அரண்மனை வீரர்களுக்கு நான்கு முதல் ஐந்து வராகன்கள் ஊதியமாக அளிக்கப்பட்டதெனப் பார்போசா கூறுவார். அதாவது மாதம் ஒன்றற்கு ரூ. 15 முதல் ரூ. 20 வரையில் இருக்கலாம். விஜயநகர ஆட்சிக் காலத்தில் நாணயத்தின் மூலமாகப் பொருள்களை வாங்கும் சக்தியை ஒப்பிட்டால் வாழ்க்கைச் செலவிற்குப் போதுமான ஊதியமே யாகும். சேனையில் உயர்ந்த பதவிகளை வகித்த வீரர்களுக்கு ஆண்டு ஒன்றற்கு 600 முதல் 1,000 வராகன்கள் ஊதியங்களாகக் கொடுக்கப்பட்டன என்று பீயஸ் கூறுவார். சேனையிலிருந்த குதிரைகளுக்கும் யானைகளுக்கும் தீனியாகக் கொடுக்கப்பட்ட புல், தழை முதலிய தீவனங்களைக் கொண்டு வந்தவர்களுக்கு நிலமானியங்கள் அளிக்கப்பட்டு இருந்தன.[1]

ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தில் நடந்த மகாநவமி அல்லது நவராத்திரி விழாவின்போது பேரரசர் சேனைகளின் அமைப்பை மேற்பார்வையிடும் வழக்கம், விஜய நகர ஆட்சிக் காலத்திற்குமுன் இருந்த தில்லை என்றும், இஸ்லாமிய அரசர்களுடைய திட்டத்தைப் பின்பற்றி இவ் வழக்கம் விஜயநகர அரசர்களால் கையாளப் பட்டிருக்கலாம் என்றும் அறிஞர் T. V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார்.[2] கிருஷ்ண தேவராயர், சேனை வீரர்களின் அமைப்பைப் பார்வை யிட்டதை நேரில் கண்ட பீயஸ் என்பவர் பின்வருமாறு கூறி யுள்ளார். '(மகாநவமி) திரு விழா முடிந்த பிறகு கிருஷ்ண தேவராயர் தம்முடைய சேனைகளின் அமைப்பைப் பார்வையிட்டார். விஜயநகரத்திற்கு ஒன்றரை மைல் தூரத்திற்கு அப்பால் உள்ளதோர் இடத்தில் மக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட பட்டுத் துணியால் அமைக்கப் பட்ட ஒரு கூடாரம் அடிக்கப்பட்டு அதில் தூக்கையின் உருவச் சிலை வைக்கப்படுகிறது. அந்த இடத்திலிருந்து அரசனுடைய அரண்மனை வரையில் பரவி யுள்ள இடங்களில் அரண்மனைச் சேனைகளின் தலைவர்கள், தங்களுடைய பதவிக்கு ஏற்றவாறு கரி, பரி, காலாட்படைகளை நிறுத்தி வைத்துள்ளனர். சாலைகளிலும், உயரமான குன்றுகளின் சரிவுகளிலும், சமவெளியிலும் வரிசை வரிசையாகக் குதிரைப் படைகளும், காலாட் படைகளும் நின்று கொண்டிருந்தன. முதல் வரிசையில் காலாட் படைகளும், இரண்டாவது வரிசையில் குதிரை வீரர்களும், மூன்றாவது வரிசையில் யானைகளும் நின்றுகொண்டிருந்தன. நகரத்திற்குள் வாழ்ந்த இராணுவத் தலைவர்கள் பலமான கழிகளைக் கொண்டு மேடைகள் அமைத்து அவற்றின்மீது காலாட் படைகளை நிற்கும்

[1] Dr. T. V. M. Administration and Social Life. Vol. I. P. 167.
[2] Op. Citus. Vol. I. P. 168.

படி செய்தனர். எங்குப் பார்த்தாலும் வீரர்களும், குதிரைகளும் யானைகளும் நிரம்பி யிருந்தன.'[1]

'கிருஷ்ண தேவராயர் தம்முடைய அரண்மனையைவிட்டு நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரையின்மீது அமர்ந்து வெண் கொற்றக் குடைகளின் நிழலில் குதிரையை நடத்திச் செல்கிறார். அவர் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் மிக்க விலை மதிப்பு உள்ளவை யாகும். அரசருக்குமுன் செம்பினால் செய்து வெள்ளி யினால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு ஒன்றில் (துர்க்கையின்) உருவச் சிலை யொன்று பதினாறு பேர்களால் சுமந்து செல்லப் படுகிறது. அரசர் தம்முடைய சேனை வீரர்களைப் பார்த்துப் புன்னகை புரியும் பொழுது அவர்கள் தங்களுடைய கேடயங்களின் மீது வாள்களைத் தட்டி வீர ஆரவாரம் செய்கின்றனர்; குதிரைகள் வெற்றிக் கனைப்புக் கனைத்தன; களிறுகள் பிளிறின. இவ்விதச் சப்தங்கள் குன்றுகளிலும், பள்ளத்தாக்குகளிலும் எதிர் ஒலித்தன. வில்லீரர்களும், பீரங்கிப் படையினரும், துப்பாக்கி வைத்திருப்போரும் தங்களுடைய திறமைகளைக் காட்டினர். இவற்றால் பூமி அதிர்ந்து, பிளந்து விடும்போல் தோன்றியது. உலகம் முழுவதிலுமுள்ள வீரர்கள் விஜய நகரத்தில் கூடியிருப்பது போன்று இருந்தது. இக் காட்சி என் கண்களை விட்டு அகல வில்லை.'[2]

மேற்கூறப்பட்ட மேற்பார்வை முடிந்த பிறகு தனியான தேர் இடத்திற்குக் கிருஷ்ண தேவராயர் சென்று, யானையின் மீது அமர்ந்து வில்லை ஊன்றி மூன்று அம்புகளை விட்டார் என்று நூனிஸ் கூறுவார். அவற்றுள் ஒன்று அடில்ஷாவுக்கும், ஒன்று குத்புஷாவிற்கும், மற்றொன்று போர்த்துகீசியருக்கும் என்று குறிப்பிடப் பட்டன வாகும். இந்த மூன்றில் எந்த அம்பு அதிக தூரம் செல்கிறதோ அந்த அரசன்மீது போர் தொடுத்தால் வெற்றி நிச்சயம் என்று அரசனும் மக்களும் நம்பினார்கள் என்றும் கூறியுள்ளார். ஆனால், இச் செய்தி பீயஸ் எழுதிய நூலில் காணப் பெற வில்லை.

விஜயநகரச் சேனையில் இஸ்லாமிய வீரர்கள்:

விஜயநகர அரசர்களின் சேனைகள் எண்ணிக்கையில் மிகுந்து இருந்த போதிலும், பாமினி சுல்தான்களுடைய படைகளோடு போரிடும் பொழுது வெற்றி பெருமல் தோல்வியுற்றதாகப் பெரிஷ்டாவின் வரலாற்று நூலில் இருந்து நாம் அறிகிறோம்.

[1] R. Se. well. P. 264-5
[2] Ibid. P. 268.

இரண்டாம் தேவராயர் விஜயநகரச் சேனைகளின் குறைபாடுகள் இன்னவை என்றறிந்து அவற்றைப் போக்குவதற்கு மந்திரா லோசனை செய்தார் என்றும் பெரிஷ்டா கூறுவார். 'நிலப் பரப்பளவு, மக்கள் தொகை, வருமானம் முதலியவற்றிலும் சேனை வீரர்களின் எண்ணிக்கையிலும் பாமினி சுல்தான்களைவிட மிகுந்து இருந்த போதிலும், அடிக்கடி இஸ்லாமியப் படைகளால் தோல்வி யுறுதற்குரிய ஏதுக்களை ஆராயும்படி தம்முடைய அமைச்சர்களுக்குப் பணியிட்டார். அவர்களும் ஆலோசனை செய்து இரு வகையான காரணங்களை எடுத்தோதினர். ஒன்று பாமினி சுல்தான்களுடைய குதிரைப் படையில் பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்ந்த ரகக் குதிரைகள் உள்ளன. இக் குதிரைகளுக்குத் தகுந்த முறையில் போர்ப் பயிற்சி அளிப்பதற்கு ஏற்ற இஸ்லாமிய இராவுத்தர்கள் உள்ளனர். விஜயநகரப் பேரரசில் உள்ள குதிரைகள் போரில் ஏற்படும் களைப்பைத் தாங்கக் கூடியவை அல்ல. நம் சேனையில் போர்க் குதிரைகளைப் பழக்குவதற்குரிய இராவுத்தர்கள் இலர். மேலும், பாமினிப் படைகளில் இருப்பது போன்ற குறி தவறுது எய்யும் விற்போர் வீரர்கள் இல்லை' எனக் கூறினர்*.

தம்முடைய அமைச்சர்களின் அறிவுரைகளைக் கேட்ட தேவராயர் பின்வரும் சீர்திருத்தங்களை விஜயநகரச் சேனைகளின் அமைப்பில் ஏற்படுத்தினர்.

(1) இஸ்லாமியக் குதிரை வீரர்களுக்கு நிலமானியங்கள் கொடுத்து, விஜயநகரத்தில் மசூதி ஒன்றை அமைத்து அவர்களுடைய சமய வழிபாட்டில் யாரும் தொந்தரவு செய்யக் கூடாதென உத்தரவிட்டார்.

(2) பாரசீகம், அரேபியா முதலிய நாடுகளிலிருந்து உயர்ந்த ரகக் குதிரைகளை வாங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்தார்.

(3) இஸ்லாமியக் குதிரை வீரர்களும், வில் வீரர்களும் தமக்குமுன் நிற்கும் பொழுது ஓர் ஆசனத்தின்மீது குர்ஆன் வைக்கப்பட்டு, அவர்களுடைய சமயத்திற்கு விரோதமில்லாமல் வாழ்க்கை நடத்த உரிமை பெற்றனர்.

(4) இந்து வீரர்கள் இஸ்லாமியரிடமிருந்து வில் வித்தையைக் கற்றுக் கொண்டனர். இதனால், விஜயநகரப்

*Scott Fersihta Vol. I. P. 118

படையில் இரண்டாயிரம் இஸ்லாமிய வில் வீரர்களும், அறுபதினாயிரம் இந்து வில் வீரர்களும் இருந்தனர்.

(5) இன்னும், இரண்டு இலட்சம் காலாட் படை வீரர்களும், எண்பதாயிரம் குதிரை வீரர்களும் இருந்தனர்*.

விஜயநகரப் படையில் இஸ்லாமிய வீரர்கள் இருந்தமை பற்றிப் பீயசும் உறுதி கூறுகிறார். 'கிருஷ்ண தேவராயர் தம் முடைய சேனைகளை மேற்பார்வை செய்த பொழுது வில், வாள், கேடயம் முதலிய ஆயுதங்களுடனும், ஈட்டிகள், கைக்குண்டுகள், எறிபந்தங்கள் முதலிய தளவாடங்களுடனும் இஸ்லாமிய வீரர்கள் இருந்தனர். இந்த ஆயுதங்களை அவர்கள் உபயோகித்த திறமை மிகவும் போற்றத் தக்கது' என்பார். 1430ஆம் ஆண்டில் எழுதப் பெற்ற ஒரு கல்வெட்டின்படி இரண்டாம் தேவராய ருடைய சேனையில் பதினாயிரம் துருக்கக் குதிரைப் படை வீரர்கள் இருந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது. 1440-51ஆம் ஆண்டுச் சாசன மொன்றில், ஆமதுகான் என்ற இஸ்லாமியப் படைத் தலைவன், வீரபிரதாப இரண்டாம் தேவராயருடைய சேனையில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இராம ராயர் அயின்-உல்-முல்க் என்ற இஸ்லாமியத் தலைவரைத் தம்முடைய சகோதரன் போலப் பாவித்ததாகக் கோல்கொண்டா வரலாற்று ஆசிரியர் கூறுவார்.

இரண்டாம் தேவராயர் காலத்தில் இஸ்லாமியப் படை வீரர்களை விஜயநகரச் சேனையில் சேர்த்துக் கொண்டமை, பல விதங்களில் சேனையின் திறமைக்கு உதவி செய்த போதிலும், இறுதியில் தலைக்கோட்டைப் போரில் இராம ராயர் தோல்வி யடைந்து உயிரிழப்பதற்கும், பின்னர் விஜயநகரம் அழிவதற்கும் ஒரு காரண மாயிற்று. சில ஆயிரக் கணக்கான வீரர்களுக்கு இரண்டு இஸ்லாமியர், தலைவர்களாக இருந்தனர். போரில் இராம ராயருடைய சேனைக்கு வெற்றி கிடைக்க வேண்டிய தருணத்தில் இவ் விருவரும் பாமினி சுல்தான்களும் சேர்ந்து கொண்டு விஜயநகரப் படைகளுக்கு எதிராகப் போர் புரிய லாயினர். இந்த உண்மையைப் பெரிஷ்டாவும், மற்ற இஸ்லாமிய வரலாற்றாசிரியர்களும் மறைத்துக் கூறிய போதிலும் சீசர் பெடரிக் என்பவர் தெளிவாகக் கூறியுள்ளார். இந்தத் துரோகச் செயல் விஜயநகரத்தின் அழிவிற்கு அடி கோலிற்று.

போர்களைத் தொடங்குதவற்குமுன் விஜயநகர அரசர் களுக்கு யோசனை கூறுவதற்கு முக்கிய அமைச்சர்கள் அடங்கிய

*Sewell. op. Citus.

ஆலோசனைக் குழு வொன்று இருந்த தென நூனிஸ் கூறுவார். விஜயபுரிச் சுல்தான்மீது போர் தொடங்குவதற்குமுன் கிருஷ்ண தேவராயர் தம்முடைய முக்கிய அமைச்சர்களின் கருத்துகளை அறிய விரும்பினர். அந்த அமைச்சர் குழுவினர் சேதிமரக்காயர் என்பவரை மீண்டும் விஜயநகரத்திற்கு அனுப்பாத குற்றத்திற்குப் போர்த் தொடுப்பது நியாமன்று என்று கூறினர். கிருஷ்ண தேவ ராயர் அவர்களுடைய கருத்தை ஒப்புக் கொள்ள மறுத்ததைக் கண்டு அரசருடைய விருப்பப்படியே நடக்கும்படி விட்டுவிட்டனர். ஆயினும், சேனைகள் சென்று இராய்ச்சூரை எவ்விதம் முற்றுகை யிடலாம் என்ற யோசனைகளை மாத்திரம் அவர் ஒப்புக் கொண்டதாக நூனிஸ் கூறுவர்.

விஜயநகரச் சேனையில் தனிப்பட்ட வீரர்கள் மிக்க திறமை யுடன் போர் புரிந்த போதிலும், பொதுவாகக் கூறுமிடத்துப் பாமினி சுல்தான்களுடைய சேனைகளைவிட விஜயநகரச் சேனை குறைந்த ஆற்றலுடையது என்றுதான் கூறவேண்டும். விஜய நகரச் சேனையின் ஒரு பகுதிதான் சிறந்த போர்ப் பயிற்சி பெற்று விளங்கியது. மற்றொரு பகுதியாகிய நிலமானியச் சேனைகள் எவ்விதப் பயிற்சியும் இன்றிப் போரில் ஈடுபட்டன. உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களே போர் வீரர்களாகப் போர்க் களத்தில் கூடிய பொழுது, பயிற்சி பெற்ற இஸ்லாமிய வீரர்களைக் கண்டு பயந்து ஓடியதில் வியப்பொன்றும் இல்லை. நிலமானிய அடிப்படையில் சேனைகளை அமைப்பது சிறிதும் விரும்பத் தக்க தன்று. நிலமானியப் பிரபுக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட சரி யான எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்களை இராணுவப் பயிற்சி யளித்து வைத்துக் கொள்ளுவ தில்லை. செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் வேண்டா விருப்புடன் தங்களுடைய சேனைகளை அனுப்பி யிருந்தனர் தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு மத்திய அரசாங்கம் வலிமை இழக்கவே செஞ்சி, ஸ்ரீரங்கப் பட்டினம், மதுரை முதலிய நிலமானிய அரசுகள் பேரரசர்களை மதிக்காது, விஜயபுரி, கோல்கொண்டாச் சுல்தான்களுடன் சேர்ந்து கொண்டன. இவற்றால் விஜயநகரப் பேரரசு மிக விரைவில் மறையத் தொடங்கியது.

விஜயநகர ஆட்சியில் சேனைவீரர்கள் போர்த் தொழில்மேல் சென்றபொழுது வீரர்களின் குடும்பத்தினரும், பொதுமகளிரும், பாசறையில் கூடியிருந்ததாகப் பார்போசா முதலிய அன்னிய நாட்டு வழிப்போக்கர்கள் கூறுவர். பொது மகளிர் பாசறையின் ஒரு பகுதியில் இருந்தபோதும் நகரங்களில் வசித்ததைப் போலவே தீய வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டும். இதனாலும், விஜயநகரச் சேனையின் போர்த் திறமை குறைவுற்ற தெனக் கூறலாம்.

விஜயநகரக் கடற்படை :

விஜயநகரத் தரசர்கள், இலங்கை, பர்மா முதலிய கடல் கடந்த நாடுகளில் தங்களுடைய அதிகாரத்தைப் பரவச் செய்து, திறைப் பொருள்களைப் பெற்றனர் என்று அயல்நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளதால், கடற்படை யொன்று அவர்களிடம் இருந்திருக்க வேண்டு மென்று தெரிகிறது. சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட துறைமுகங்கள் விஜயநகரப் பேரரசில் இருந்தன வெனக்கேள்விப் படுகிறோம். ஆனால் மற்ற இந்து அரசாங்கங்களைப் போலவே விஜயநகரத்து அரசர்கள், கடற்படை அமைப்பில் அதிகக் கவனம் செலுத்தாது விட்டுவிட்டனர். போர்த்துகீசியர் களும், அவர்களுக்குப் பின்வந்த மேலைநாட்டு வாணிகக் கூட்டங் களும் மிகச் சுலபமாக இந்திய கடற்கரைப் பகுதிகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டியதும், முத்துக்குளிக்கும் சேதுசமுத்திரக் கரையில் வாழ்ந்த செம்பரதவர்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றியதும், அவர்களுடைய கடற்படை வன்மையையே குறிக்கும். விஜய நகரத்து அரசாங்கம் கடற்படையைக் கவனி யாது இருந்தமையால் தென்னிந்தியா அன்னிய அரசர்களின் வச மாயிற்று என்பதில் பெருமளவு உண்மை யுள்ளது. மேலைக்கடற் கரை யோரப் பகுதிகளில் கடற் கொள்ளைக்காரர்கள் அன்னிய நாட்டுக் கப்பல்களைக் கொள்ளை அடித்துத் துன்புறுத்திய செய்தி களைப் பற்றி நாம் கேள்விபுறுகிறோம். இவற்றால் விஜயநகரக் கடற்படை பெயரளவில் கூடப் பிற்காலத்தில் காப்பாற்றப் பட வில்லை என்று நாம் உணரலாம்.

போர்களின் தன்மை :

இதிகாசங்களில் கூறப்படும் தருமயுத்தம் இந்தியாவில் இராச புத்திர அரசர்களால் ஓரளவு பின்பற்றப்பட்டது. ஆனால், தென் இந்தியாவில் சோழப் பேரரசர்கள் யுத்த தருமத்தின்படி போர் செய்ததாகத் தெரியவில்லை. விஜயநகரத்து அரசர்களும், பாமினி சுல்தான்களும் எவ்விதமான தரும யுத்தத்தையும் பின்பற்றிய தாகத் தெரியவில்லை. பெரிஷ்டா, டபடாபா முதலிய இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள், முஸ்லிம்கள் அல்லாத மக்களை அந்தணர், அறவோர், பெண்டிர், குழந்தைகள் என்ற பகுபாடுமை பாராட்டாது கொன்று குவிப்பதையே தங்களுடைய அரச தருமம் எனக் கருதினர். கிருஷ்ண தேவராயர் மாத்திரம் போரின் கொடுமையை அதிகப் படுத்தாது நடுநிலைமையுடன் போர்களை நடத்தினர் என்று நாம் அறிகிறோம்.

1366ஆம் ஆண்டில் பாமினி சுல்தான் முகம்மது ஷாவிற்கும் விஜயநகரத் தரசர்களுக்கும் நடந்த போரில் முகம்மதுஷா,

பொதுமக்களைப் பெண்டிர், முதியோர், குழந்தைகள், அறவோர் என்ற வேற்றுமையின்றிக் கொன்று குவித்தார் என்று பெரிஷ்டா கூறியுள்ளார். இதே போன்ற கொடுமைகளை இந்து அரசர்களும் செய்திருப்பார்கள் என்று நாம் கருத வேண்டும். 1417ஆம் ஆண்டில் விஜயநகரப் படைகள் இஸ்லாமிய வீரர்களைக் கொன்று, அவர்களுடைய உடல்களை அடுக்கிப் போர்க்களத்தில் ஒரு பெரிய மேடையை அமைத்தனர் என்றும், பின்னர்ப் பாமினி இராச்சியத்தில் புகுந்து நாட்டை அழித்தனர் என்றும் நாம் கேள்விப் படுகிறோம். ஆமது ஷா சுல்தான் என்பார் விஜயநகரத்தின்மீது படையெடுத்துப் பொதுமக்களைக் கொன்று குவித்தார் என்றும் இருபதினாயிரம் வீரர்களுக்குமேல் கொலையுண்டதால் மூன்றுநாள் ஓய்வு கொண்டு பெரியதொரு திருவிழாக் கொண்டாடினார் என்றும் தெரிகிறது. ஆமதுநகர், கோல்கொண்டா, பீடார், விஜயபுரி முதலிய சுல்தானிய நாடுகளில் இராமராயர் பல அழிவு வேலைகளைச் செய்ததாகப் பெரிஷ்டா கூறியுள்ளார். மசூதிகளில் குதிரைகளைக் கட்டி வைத்ததாகவும், உருவ வணக்கம் செய்து கூர்ஆனை அவமதித்ததாகவும் கூறப்படுகின்றன. இவற்றால் விஜயநகர அரசர்களுக்கும், பாமினி சுல்தான்களுக்கும் இடையே நடந்த போர்களில் எவ் விதமான யுத்த தருமக் கொள்கைகளும் பின்பற்றப் படவில்லை என்பது நன்கு விளங்குகிறது.

ஆனால், கிருஷ்ண தேவராயர் மாத்திரம் தம்முடைய பெருமையைக் குறைக்காத அளவிற்குத் தரும யுத்தம் நடத்தியுள்ளார். 'விரோதிகளுடைய நிலப்பகுதிகளையும், கோட்டைகளையும் அரசர்கள் தங்கள் வசப்படுத்தலாம். அப்பாவிகளைப் பிடித்தால் அங்குள்ள பெண்மக்கள் துன்புறுத்தப் படக்கூடாது' அவர்களுடைய சுற்புநிலைக்கு எவ்வித இழுக்கும் ஏற்படக்கூடாது என்று ஆமுக்த மால்யதாவில் கூறுவார். கலிங்க நாட்டுக் கஜபதி அரசர்களுடன் கிருஷ்ணதேவர் புரிந்த போர்களில் மேற் கூறப் பெற்ற கொள்கையைப் பின்பற்றினார். இராய்ச்சூர் வெற்றிக்குப் பிறகு கோட்டைக் குள்ளிருந்த பொதுமக்கள் எவ் விதத்திலும் துன்புறுத்தப்பட வில்லை. சேனைவீரர்கள் மக்களைக் கொள்ளையடிப்பதையும், எளியவர்களை வாட்டுவதையும் மிக்க கடுமையாகக் கண்டித்தார். இராய்ச்சூரை விட்டு வெளியேற விரும்பியவர்களுக்குப் பல வசதிகள் செய்து தரப்பட்டன. வீரர்களால் சிறை பிடிக்கப்பட்ட பெண்டிர்களும், குழந்தைகளும், முதியோர்களும் விடுதலை யடைந்தனர். இவ்விதத் தருத யுத்தக் கொள்கைகள் பிற்காலத்தில் சத்திரபதி சிவாஜி மகாராசாவாலும் பின்பற்றப் பட்டன.

விஜயநகர அரசர்களின் அயல்நாட்டு உறவு :

விஜயநகரப் பேரரசின் வடக்கிலிருந்து பாமினி சுல்தான்களும், வடகிழக்குப் பகுதியிலிருந்து கஜபதி அரசர்களும், கிழக்கு மேற்குக் கடற்கரைகளிலிருந்து போர்த்துகீசியரும் பேரரசிற்கு அதிகத் தொந்தரவு கொடுத்தனர். இந்நாட்டரசர்களிடமிருந்து பேரரசைக் காப்பாற்றுவதற்கும், தங்களுடைய ஆட்சியை நிலைப்படுத்துவதற்கும் தகுந்த அயல்நாட்டுறவைப் பின்பற்றினர். சமய வேற்றுமையும், இன வேற்றுமையும் சேர்ந்து விஜயநகர அரசர்களுக்கும், பாமினி சுல்தான்களுக்கும் இடையே பகைமையை வளர்த்தன. ஆயினும், புராதன காலத்தில் இந்திய அரசர்கள் பின்பற்றிய அயல்நாட்டுறவிற்கு எவ் வகையிலும் தாழ்வுறாமல் தங்களுடைய கொள்கைகளை அமைத்துக் கொண்டனர். பேரரசின் எல்லைகளில் இருந்த சிற்றரசு நாடுகளை எதிரிகள் தாக்கி அழித்து விடாது, அவைகளை இடைப்பட்ட நாடுகளாகப் (Buffer States) பாதுகாத்தனர். மேற்குக் கடற்கரையில் பங்காப்பூர், கொர்சோபா, பாகனோர், பட்டிகலே முதலிய இடைப்பட்ட நாடுகளும், தெற்குப் பகுதியில் கொல்லம், தென்காசி, திருவிதாங்கூர் முதலிய நாடுகளும் இருந்தன. 'எல்லைகளைப் பாதுகாக்கத் திறமையில்லாத சிற்றரசர்களை நீக்கி விட்டுத் திறமையுள்ளவர்களை நியமிப்பதும், அல்லது பேரரசோடு சிற்றரசுகளைச் சேர்த்துக் கொள்ளுவதும் அரசியல் முறையாகும். எல்லைகளில் காட்டுப் பகுதியில் வாழும் மக்களால் அரசுக்குத் துன்பம் ஏற்படலாம். அவர்களை நன்முறையில் நடத்திப் பேரரசைப் பாதுகாக்கும் நண்பர்களாக்கிக் கொள்ளவேண்டும்' எனக் கிருஷ்ணதேவராயர் கூறியுள்ளார். விஜயநகரப் பேரரசில் குறும்பர்கள், பிரிஞ்சாரிகள், இலம்பாடிகள் முதலிய காடடுப் பகுதி மக்கள் இருந்தனர் என்றும் அவர்கள் தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு விஜயநகரத்தைக் கொள்ளை யடித்தனர் என்றும் சிவெல் கூறியுள்ளார்.* இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் படைப்பற்றுகளும் படைவீடுகளும் அமைக்கப் பெற்று மேற்கூறப்பட்ட காட்டுப்பகுதி மக்கள் அடக்கப்பட்டிருந்தனர்.

விஜயநகரப் பேரரசின் இராணுவ அமைப்பில் ஒற்றர்கள் (Spies) பகுதி யொன்றிருந்தது. அந்த ஒற்றர்கள். பேரரசின் எல்லாப் பகுதிகளுக்கும், விரோதிகளுடைய நாட்டிற்குள்ளும், மாறுவேடத்துடன் சென்று இராணுவ இரகசியங்களைச் சேகரித்துத் தங்களுடைய அரசனிடம் தகவல் கொடுப்பது

*R. Sewell. A Forgotten Empire. P. 199.

வழக்கம். ஒரரசன் தன்னுடைய அமைச்சர்களோயும் சோதிக்க ஒற்றர்களோ அனுப்ப வேண்டுமெனக் கிருஷ்ண தேவராயர் கூறுவார். 'ஒற்றர்கள் சேகரித்துக் கூறும் செய்திகளோ அலட்சியப் படுத்துதல் கூடாது; அவர்கள் கூற்றுகளில் பொய்ச் செய்திகள் கலந்திருந்த போதிலும் ஒற்றர்களோ அவமதிப்பது கூடாது. ஒற்றர்கள் தலைநகரத்தில் தங்கியிருக்க வேண்டும். அவர்கள் யாரும் எளிதில் ஒற்றர்கள் என்று கண்டுபிடிக்க முடியாதபடி இருக்க வேண்டும். ஒற்றர்களுக்குத் தாராளமாக ஊதியங்கள் அளிக்கப்பட வேண்டும்.' 'கிருஷ்ணதேவ ராயர் வடநாட்டு இஸ்லாமிய அரசர்களுடைய நாடுகளில் தம்முடைய ஒற்றர்களோ யனுப்பிப் பல இராணுவ இரகசியங்களோ அறிந்து கொண்டார்' எனக் கிருஷ்ண இராஜ விஜயமு என்ற நூலில் கூறப் பட்டுள்ளது. விஜயநகரச் சேனைகள் போருக்குச் செல்லும் பொழுது, செல்லும் வழிகளில் ஆபத்துகள் இருக்கின்றனவா எனச் சோதனை செய்யப் பல ஒற்றர்கள் இருந்தனர்.

புராதன காலத்திலும், மத்தியக் காலத்திலும் இந்திய அரசர் கள் போர் மேற்கொண்ட செய்தியை நடுநிலைமை வகிக்கும் அரசர் களுக்கும் அறிவிப்ப துண்டு. கிருஷ்ண தேவராயர் விஜயபுரிச் சுல் தான்மீது போர் தொடங்கும் செய்தியை ஆமதுநகர், கோல் கொண்டா, பீடார், பேரார் முதலிய நாட்டுச் சுல்தான்களுக்கு அறிவித்ததாக நாம் அறிகிறோம். அவருடைய முக்கிய நோக்கம் அந்நாட்டு மன்னர்கள் இராணுவ உதவி விஜயபுரிக்குக் கிடைக்கக் கூடாது என்பதே யாகும். விஜயநகரத்து அரசர்கள் நிலையான இராஜதந்திர நிபுணர்களோ அயல் நாடுகளுக்கு அனுப்பியதாகத் தெரிய வில்லை. ஆனால், தருணத்திற்கு ஏற்றாற்போலத் தூதர்களோ அனுப்பி யுள்ளனர். அயல்நாட்டுத் தூதர்களோக் கௌரவத்துடன் நடத்தினால் பகை யரசர்களோயும் நண்பர்களாக்கிக் கொள்ளலாம் எனக் கிருஷ்ண தேவராயர் கூறுவார். முகமது ஷா என்ற பாமினிச் சுல்தான் அனுப்பிய தூதரை முதலாம் புக்க தேவர் அவமானம் செய்ததால் பெரும்போர் மூண்டது. ஆனால், கிருஷ்ணதேவர் பேரார், பீடார், கோல்கொண்டா நாடுகளின் தூதர்களோக் கௌரவப் படுத்தி விஜயபுரிச் சுல்தான் அடில் ஷாவுடன் சேராத படி செய்தார். இரண்டாம் தேவராயருடைய சபைக்கு வந்த பாரசீக நாட்டுத் தூதரை மிக்க கௌரவத்துடன் நடத்தியதாக நாம் அறிகிறோம்.

1374இல் முதலாம் புக்கதேவர், சீனநாட்டுப் பேரரசர் டைட்சு (Taitsu) என்பவருடைய சபைக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பியதாக எலியட் என்பவர் கூறுவார். 1443இல் பாரசீக

நாட்டுத் தூதராகிய அப்துர் ரசாக் விஜயநகரத்திற்கு வந்தார். பாரசீகப் பேரரசர் ஷா ரூக் (Shah Ruk) என்பவருக்குப் பல வெகு மதிகளோடு ஒரு தூதரை அனுப்பியதாகத் தெரிகிறது. மலேயா நாட்டிலிருந்து கிருஷ்ண தேவராயர் காலத்தில் ஒரு தூதுக்குழு விஜயநகரத்திற்கு வந்ததாகத் திரு K. A. நீலகண்ட சாஸ்திரியார் கூறுவார்.

விஜயநகர அரசர்கள், கோவா நகரத்தில் வியாபாரத் தலத்தை அமைத்திருந்த போர்த்துகீசியருடன் இரு காரணங் களைக் கொண்டு நட்புறவுடன் இருக்க விரும்பினர். போர்த்து கீசியக் குதிரை வியாபாரிகளிடமிருந்து பாரசீக, அரேபியா நாட்டுக் குதிரைகளைத் தாங்களே ஏகபோகமாக வாங்க விரும்பினர். பாமினி இராச்சியத்துச் சுல்தான்களுக்கு எதிராகப் போர்த்துகீசியர்களுடைய உதவியைப் பெறுவதற்கும் விரும்பினர். ஆகையால், 1511ஆம் ஆண்டில் போர்ச்சுகல் நாட்டு அரசனுடன் நிலையான நட்புறவு கொள்வதற்குக் கிருஷ்ண தேவ ராயர் ஒரு தூதுக் குழுவை அனுப்பியதாகத் தெரிகிறது. ஆனால், போர்த்துகீசியப் பாதிரி லூயி (Fr. Luis) என்பவர் விஜய நகரத்தில் ஒரு துருக்கநாட்டு வீரனால் கொலை செய்யப்பட்டதை யொட்டிக் கருத்து வேற்றுமைகள் உள்ளன. திரு. இராமச் சந்திரய்யா அவர்கள் அக் கொலை கிருஷ்ண தேவராயருடைய இராச தந்திரத்தால் நடைபெற்ற தென்றும், விஜயபுரிச் சுல்தான்மீது அக் கொலைக் குற்றம் சாட்டப்படுவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைக் கிருஷ்ண தேவர் எடுத்துக் கொண்டார் என்றும் கூறுவார்*.

*Dr. O. Ramachandrayya Studies. P.85

19. விஜயநகர ஆட்சிக் காலத்தில் சமூக அமைப்பு

விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த மக்களில் பெரும்பான்மை யோர் இந்துக்களே யாவர். முகம்மதியர்கள், கிறித்தவர்கள், யூதர்கள் முதலியோர் வியாபாரத் தலங்களிலும், முக்கிய நகரங் களிலும் வாழ்ந்தனர். விஜயநகர அரசர்களுடைய சமயப் பொறையினால் இவர்கள் எவ்விதமான இடையூறுகளுமின்றி வாழ்க்கை நடத்தினர். பிராமணர்கள், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்கள் என்ற நால் வகையான வருணாசிரம தருமத்தை இந்துக்கள் பின்பற்றினர். வேதங்களில் கூறப் பெற்ற இந்த நால்வகை வருணங்கள் தவிரச் சூத்திரப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்பட்ட சாதிகளும் இருந்தன. மேற்கூறப்பட்ட வருணாசிரமச் சாதிகளில் அடங்காத சண்டாளர்கள் என்ற தீண்டாதவர்கள் தனியிடங்களில் வாழ்ந்தனர்.

பிராமணர்கள் : யாகங்களை வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், ஏற்றல், அளித்தல் முதலிய அறுவகைத் தொழில் களையும், மற்றத் தொழில்களையும் பிராமணர்கள் பின்பற்றினர். இவர்களுக்குள் பல பிரிவுகளும் இருந்தன. விஜயநகரத்தில் தங்கியிருந்த பார்போசா, பீயஸ், நூனிஸ் என்ற போர்த்து கீசியர்களும் விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த பிராமணர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளனர்.

பார்போசா : 'கோவில்களைப் பாதுகாத்து நித்திய வழி பாடுகளை நடத்தும் சாதியார்கள் பிராமணர்கள் என்போர். இந்தப் பிராமணர்களுக்குப் பலவிதமான தனிப்பட்ட உரிமைகள் உள்ளன. கொலைக்குற்றங்களுக்குக் கூட அவர்களுக்குக் கடுமை யான தண்டனைகள் விதிக்கப்படுவ தில்லை. அரசர்களும். சிற் றரசர்களும், பிரபுக்களும், பிராமணர்களுக்குப் பலவிதமான தானங்களை அளிக்கின்றனர். அரசர்களால் அளிக்கப்பட்ட பிரமதேயங்களில் அவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். பெரிய வருமானங்கள் உள்ள மடாலயங்களிலும் சில பிராமணர்கள் வாழ்கின்றனர். சில பிராமணர்கள் உண்பதும், உறங்குவதும் தவிர மற்றத் தொழில்களைச் செய்வ தில்லை. ஒருவேளை நல்ல

உணவு உண்பதற்கு ஆறுநாள் பிரயாணம் செய்யும் பிராமணர்களும் உள்ளனர்.'

பீயஸ் : 'விஜயநகரத்தில் வாழ்ந்த பிராமணர்களில் (வேதங்களையும் ஆகமங்களையும்) கற்றுணர்ந்து கோவில்களில் வழிபாடு செய்பவர்களை ஐரோப்பாவில் உள்ள குருமார்களுக்கு ஒப்பிடலாம். இவர்களில் பலர் பெரிய நகரங்களிலும், சிறிய நகரங்களிலும் அரசாங்க அலுவல்களைப் பார்க்கின்றனர். பல பிராமணர்கள் வியாபாரம் செய்கின்றனர். மற்றும் பலர் தங்களுடைய பரம்பரைச் சொத்துகளைப் பாதுகாத்து உழவுத் தொழில் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். கோவில்களைப் பராமரிக்கும் அந்தணர்கள் கல்வியிற் சிறந்து விளங்குகின்றனர்.'

நூனிஸ் : 'விஜயநகரப் பேரரசில் வாழும் அந்தணர்களில் பெரும்பான்மையோர் உயிருள்ள பிராணிகளைக் கொன்று உண்ணும் பழக்க முடையவரல்லர். எல்லா உயிர்களிடத்திலும் செந்தண்மை பூண்டு ஒழுகுகின்றனர். வியாபாரம் செய்வதிலும் மிக்க நாணயமாக நடந்து கொள்ளுகின்றனர். கணக்குகளை எழுதுவதில் சாமர்த்தியமும் கூர்த்த அறிவும் படைத்தவர்கள்; முகத்தில் தேசும் உடற்கட்டும் அமைந்தவர்களாயினும் கடுமையாக உழைக்கும் வேலைக்குத் தகுதியுள்ளவர்கள் அல்லர். அரசாங்க வேலைகளில் மிகுந்த பங்கு கொள்ளுகின்றனர்.'

மேலே கூறப்பட்ட மூன்று போர்த்துகீசியர்கள் தரும் குறிப்புகளிலிருந்து விஜயநகரத்தில் வாழ்ந்த அந்தணர்களை ஆறு வகையினராகப் பிரிக்கலாம் : 1. கோவில்களில் வழிபாடு செய்யும் குருக்கள்மார்கள், 2. பிரமதேயங்களில் உழவுத் தொழில் செய்வோர், 3. மடாலயங்களில் வாழ்க்கை நடத்துவோர், 4, அரசாங்க அலுவலாளர்கள், 5. வியாபாரம் செய்பவர்கள், 6. உண்டு உறங்குகின்றவர்கள்.

தமிழ்நாட்டில் சிவ, வைணவ ஆலயங்களில் வழிபாடு செய்யும் குருக்கள்மார்கள் சிறப்புக்குரியவர்களாயினும், அவர்களுடைய தொழிலை மற்ற அந்தணர்கள் இழிவாகக் கருதினர் என அறிஞர் வெங்கட்டரமணய்யா கூறுவார்.*

(1) 'சிவாலயங்களில் பூசை செய்யும் நம்பிகளும், தம்பலர்களும் சூத்திரர்களாகக் கருதப் பட்டமை தெலுங்கு நாட்டின் பழக்கம் போலும்!' இராமநுசர் காலத்திற்குப் பிறகு பெருமான் கோவில்களில் வழிபாடு செய்யும் வைணவர்கள் மிகுந்த செல்

*N. V. Ramanayya studies. P. 351.

வாக்குடையவர்கள் ஆயினர். வழிபாட்டு நூல்களைக் கசடறக் கற்று அவற்றின்படி வைணவக் கோவில்களில் வழிபாடு செய்து பெருமை பெற்றனர்.

(2) சைவ, வைணவ, மடாலயங்களில் பல பிராமணர்கள் அலுவல் பார்த்தனர். சங்கராச்சாரியார் அமைத்த சிருங்கேரி, காஞ்சி முதலிய அத்துவித மடங்களிலும், அகோபலம், ஸ்ரீசைலம், வானமாமலை முதலிய வைணவ மடங்களிலும், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய சைவமடங்களிலும், பல அந்தணர்கள் அலுவல்கள் பார்த்தனர். ஆனால், வீரசைவ மடங்களில் அந்தணரல்லாதாரே இருந்தனர். அக் காலத்தில் இருந்த மடங்கள் சமய-தத்துவக் கலைக்கூடங்களாக இருந்தன. இவற்றில் வாழ்க்கை நடத்திய அந்தணர்கள் மிகச் சிலராகவே இருந்தனர்.

(3) வேதங்களிலும், உபநிடதங்களிலும் வல்ல அந்தணர்களுக்கு அரசர்கள் இறையிலியாக (சிவாலயங்களுக்கு) அளித்த நிலங்களுக்குத் தமிழ்நாட்டில் பிரமதேயங்கள் என்றும், வைணவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களுக்குத் திருவிளையாட்டங்கள் என்றும் பெயர்கள் வழங்கின. இந்தப் பிரமதேயங்களில் ஏகபோகம், கணபோகம் என்ற இரு பிரிவுகள் இருந்தன. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களில் உழவுத் தொழில் செய்து இப் பிராமணர்கள் வாழ்க்கை நடத்தினர். இவர்கள் வேதங்களை ஓதியும், ஓதுவித்தும் யாகங்களையும் மற்ற இல்லற கருமங்களையும் செய்தும் நெறியான வாழ்க்கையில் ஈடுபட்டனர். இவர்களுக்கு மகாஜனங்கள் என்ற பெயரும், வாழ்ந்த இடங்களுக்கு அக்கிரகாரங்கள் என்ற பெயரும் இவர்களால் நடத்தப்பட்ட நீதிமன்றங்களுக்குத் தருமாசனங்கள் என்ற பெயரும் வழங்கின.

(4) கல்விகற்ற அந்தணர்களில் பெரும்பான்மையோர் அரசாங்க அலுவல்களில் ஈடுபட்டனர். பேரரசின் மத்திய அரசாங்கத்தில் பல இலாக்காக்களில் இவர்கள் எழுத்தர்களாகவும், கணக்கர்களாகவும் பணியாற்றினர். தெலுங்கு நாட்டில் இவர்களுக்கு நியோகிகள் (Niyogis) என்ற பெயர் வழங்கியது. இவர்கள் வேதங்களில் விதிக்கப்பட்டபடி வாழ்க்கை நடத்தவில்லை. மாகாண ஆளுநர்களாகவும், அமைச்சர்களாகவும், சேனைத் தலைவர்களாகவும் அரசாங்கப் பணியாற்றினர். சாளுவ திம்மர், கொண்டமராசய்யா, அய்யப்ப ராசர், சாளுவ நரசிங்க நாயக்கர், சந்திரகிரிச் சோம ராசர் முதலிய அந்தணர்கள் இவ் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

(5) பியசும் நூனிசும் கூறிய அந்தணவியாபாரிகளைப் பற்றிப் பார்போசா கூறவில்லை. அக் காலத்திய இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் இவர்களைப்பற்றிய செய்திகள் குறிப்பிடப் படவில்லை. ஆகையால், வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பிராமணர்கள் மிகச் சொற்ப எண்ணிக்கை யுள்ளவர்களாகத் தான் இருந்திருக்க வேண்டும்.

(6) தானம் வாங்குதலும், உண்பதும், உறங்குவது மாகியவை தவிர மற்றப் பணிகளில் ஈடுபடாத அந்தணர்களும் இருந்தனர் என நூனிஸ் கூறியுள்ளார். அச்சுத ராயருடைய அரண்மனையில் தானம் வாங்குவதற்காகப் பல பிராமணர்கள் காத்துக் கொண்டிருந்ததாகவும், அவர்களைக் காவல்காரர்கள் கழிகளைக் கொண்டு தாக்கித் துரத்தியடித்த போதிலும் மீண்டும் வந்ததாகவும் கூறுவார். அவர்கள் பொருள் சேர்ப்பதிலேயே நோக்கம் கொண்டு சிராத்தங்களிலும், திருமணங்களிலும் ஒரு வேளை உணவிற்குப் பல மைல்கள் தூரம் நடந்து சென்று உண்டு வருவதே தொழிலாக உடையவர்கள் எனவும் கூறுவர். கிருஷ்ண தேவராயருடைய ஆமுக்த மால்யதாவிலும் இவ்வாறு கூறப் பட்டுள்ளது. ஆனல், இக் கூற்றுகளில் எவ்வளவு உண்மையான தென்று விளங்க வில்லை.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் பல தாரங்களை மணந்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்துவது வழக்கமாக இருந்த போதிலும், பிராமணர்கள் பல தாரங்களை மணந்து கொண்ட செய்திகள் கல்வெட்டுகளிலோ இலக்கியங்களிலோ காணப்பட வில்லை.

க்ஷத்திரியர்கள் :

விஜயநகரப் பேரரசை அமைத்த சங்கம வமிசத்தினரும், அவர்களுக்குப்பின் வந்த சாளுவ, துளுவ, ஆரவீட்டு வமிசத்து அரசர்களும், நாட்டைப் பாதுகாத்தமையால் க்ஷத்திரியர்கள் என்றே கருதப்பட்டனர். சூரியன், சந்திரன், யது முதலிய தேவர்களின் சந்ததியில் வந்தவர்கள் எனத் தங்களை அழைத்துக் கொண்டனர். சோழர்கள் வழியில் வந்தவர்களும் கலிங்க நாட்டுக் கஜபதி யரசர்களும், அவர்களுடன் மணவுறவு கொண்ட துளுவ வமிசத்து அரசர்களும் சூரிய குலத்தைச் சேர்ந்தவர் களாவர். சங்கம, சாளுவ, ஆரவீட்டு வமிசத்தைச் சேர்ந்தவர்கள் சத்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கல்வெட்டுகளில் கூறப் பெறுகின்றன. ஆனல், விஜயநகரக் கல்வெட்டுகளில் அக்கினி குலத்தைச் சேர்ந்த அரசர்களைப் பற்றிய செய்திகள் கிடைக்க வில்லை.*

*Ibid., P. 358,

வைசியர்கள் :

உழவும், ஆடுமாடுகளைப் பராமரித்தலும் வைசியர்களுடைய தொழில்களாகக் கூறப்பட்ட போதிலும் இவ் விரண்டு தொழில் களையும் அவர்கள் மேற்கொண்டதாகத் தெரிய வில்லை. விஜய நகர ஆட்சிக் காலத்தில் எழுதப்பெற்ற பிரபந்தங்கள் எல்லா வற்றிலும் வைசியர்கள் வியாபாரத்தையும், தனவணிகத் தொழிலையும் மேற்கொண்டதாகத் தெரிகிறது. தென்னிந்தி யாவில் தனிப்பட்ட வைசிய சமூகம் ஒன்றிருந்த தென்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை.* கன்னட நாட்டிலும், தெலுங்கு நாட்டிலும் வாழ்ந்த கோமுட்டிச் செட்டிகள் வைசியர்கள் என்பதை மற்ற இனத்தவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். தமிழ் நாட்டில் பேரிச் செட்டிகள் வைசியர்கள் எனக் கூறிக் கொள் கின்றனர். முதலாம் தேவராயர் ஆட்சியில் கோமுட்டிகளும், பேரிச் செட்டிகளும் வைசிய இனத்தைச் சேர்ந்தவர்களா என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஓர் ஆய்வாளர் நியமனம் செய்யப்பட்டார். பேரிச் செட்டிகள் வைசியர்கள் என்பதைக் கோமுட்டிகள் ஒப்புக் கொள்ள வில்லை.

சூத்திரர்கள் :

விஜயநகரப் பேரரசில், பிராமணர், அரசர்கள், வைசியர்கள் என்று அழைக்கப்படாத மற்றையோர்கள் சூத்திரர்கள் எனக் கருதப்படலாம். இந்தப் பிரிவு பல்வேறுபட்ட சாதிகள் அடங்கிய தாகும், இவர்கள் முக்கியமாக உழவுத் தொழிலையே பின் பற்றினர். தெலுங்கு நாட்டில் ரெட்டிகள், வக்கலியர்கள், வேளாளர் என்ற உழவர்களும், கம்மர், வேலம்மர், பலிஜர்கள் என்ற சாதிகளும் இருந்தனர். தமிழ் நாட்டில் வேளாளர்கள், பலதிறப்பட்ட பிரிவினராக இருந்தனர். முதலியார், வேளாளர் கள், கைக்கோளர்கள், கள்ளர், மறவர், அகமுடையர், வன்னி யர், என்ற சாதிகளும் இருந்தன. பிற் கூறப்பட்டவர்கள் சேனை களில் வீரர்களாகப் பணியாற்றினர்.

சூத்திரர்கள் பிரிவைச்சேர்ந்த பல திறப்பட்ட சாதியினர், வலங்கையர், இடங்கையர் என்ற இரு பிரிவுகளாக இருந்தமை கல்வெட்டுகளிலும், இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

இவ் விரண்டு பிரிவிலும் 98 சாதிகள் இருந்தனவாகக் கூறப் பட்ட போதிலும், சாதிகளின் முழுப் பெயர்களை அறியக் கூட வில்லை. இந்த வலங்கை, இடங்கைப் பிரிவினர்களின் தொடக் கத்தைப் பற்றிப் பலவிதமான கருத்துகள் தோன்றி யுள்ளன.

*Ibid.

இப் பிரிவுகளில், பிராமண, க்ஷத்திரிய, வைசிய வகுப்புகளைச் சேர்ந்த வர்கள் இருந்தனராகத் தெரிய வில்லை. பலதிறப்பட்ட தொழிலாளர்களே இப் பிரிவுகளில் அங்கம் வகித்தனர். 'வலங்கையார் உழவுத் தொழிலைப் பின்பற்றிய பலதிறப்பட்ட சாதியினர் என்றும், இடங்கையார் மற்றத் தொழில்கள், வியாபாரம்முதலிய வற்றைப் பின்பற்றிய சாதிகள் என்றும் எல்லீஸ் (T. W. Ellis) என்பவர் கூறுவார். முன்னவர்கள் தங்களுடைய பழைய உரிமைகளைப் பாதுகாக்க முயன்றனர் என்றும் பின்னவர்கள் அவற்றைத் தடுக்க முயன்றனர் என்றும் கருதுவர். தாழ்ந்தவர்களாகக் கருதப் பட்ட சில சாதியினர், உயர்ந்தவர்கள் அனுபவித்த சில உரிமைளைப் பெற விரும்பினர். அவர்கள் அவற்றைப் பெறுதவாறு மற்றவர்கள் தடுத்தனர். இவ் வேற்றுமையால் வலங்கை, இடங்கைப் பிரிவுகள் தோன்றின' என M. சீனிவாச அய்யங்கார் கூறுவார்.

'கால்களில் செருப்புகள் அணிந்து கொண்டு நடப்பதும், திருமணங்களின் பொழுது பல்லக்கு, குதிரைகளின்மீது அமர்ந்து ஊர்வலம் வருவதும், மேளம், கொம்பு, இசைக்கச்சேரி முதலியவைகளை நடத்துவதும் ஆகிய உரிமைகளைப் பெற ஒரு கட்சியினர் விரும்பினர்; மற்றொரு கட்சியினர் தடுத்தனர். இதனால், இந்த இரு கட்சிகளும் தோன்றின' என அபிதுபாய் கூறுவார். ஆனால், வலங்கை, இடங்கை என்ற பிரிவுகள் போர்களில் சேனை வீரர்கள் இருந்த இடத்தைக் குறித்து எழுந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. போர் செய்யும் சேனைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிவுற்றன. மத்தியப் பகுதி சேனாதிபதியின் தலைமையில் இயங்கியது. சேனாதிபதியின் வலப் பக்கத்தில் போரிட்டவர்கள் வலங்கையர் என்றும், இடப் பக்கத்தில் போர் செய்தவர்கள் இடங்கையர் எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம்.

விஜயநகர ஆட்சியில் இந்த இரண்டு பிரிவினர்களும் தங்களுக்குள் அடிக்கடி சச்சரவு செய்து கொண்டனர். 1383ஆம் ஆண்டில் தோன்றிய இடங்கை வலங்கைக் கலகம் நான்கு ஆண்டுகள் வரை நீடித்த தென ஒரு கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. மலையப்பட்டு என்னு மிடத்தில் கிடைத்த கல்வெட்டின்படி வலங்கை, இடங்கைப் பிரிவினர்களிடையே ஏற்பட்ட கலகத்தினால் பெரும்உயிர்ச் சேதங்கள் உண்டாயின என்று மற்றொரு கல்வெட்டுக் கூறுகிறது. 1440-41ஆம் ஆண்டில் வலங்கை, இடங்கைச் சாதியார்களுக் கிடையே அமைதி நிலவுவதற் கேற்ற உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டதாகத் தெரிகிறது. இடங்கை வரி, வலங்கை வரி என்ற இருவித வரிகளை அரசாங்கம் இவர்களிடமிருந்து வசூலித்திருக்கிறது. இந்த இரண்டு பிரிவினர்களும்

தனித்தனியே ஒன்றுகூடி அரசாங்கத்தாரிடம் முறையிட்டு நியாய மற்ற முறையில் தங்கள்மீது விதிக்கப்பட்ட வரிகளைக் குறைத்துக் கொண்டனர். கைக்கூலி வாங்கும் அரசாங்க அலுவலாளர்களை இப் பிரிவினர்கள் எதிர்த்துள்ளனர்.

பலவித சமூகங்கள் :

விப்ர விநோதர்கள் : ஆந்திர நாட்டில் கஞ்சம், விசாகப் பட்டினம் மாவட்டங்களில் விப்ர விநோதர்கள் என்ற செப்படி வித்தைக்காரர்கள் வாழ்ந்தனர் என்று கல்வெட்டுகளில் கூறப் பட்டுள்ளது. பிராமண இனத்தைச் சேர்ந்திருந்த இந்தச் செப்படி வித்தைக்காரர்கள் பின்னர்ச் சூத்திரர்களாகக் கருதப்பட்டனர்; விஜயநகரம், பெத்த கோட்டை, கடகம், திராவிட தேசம் முதலிய பல இடங்களில் பரவி யிருந்து, தங்கள் தொழிலை நடத் தினர்; 1554-55இல் அரங்கனஹாலு என்ற இடத்தில் ஹனுமக் கடவுளுக்குக் கார்த்திகை பூசை என்ற திருவிழாவை நடத்தி யுள்ளனர். இவர்கள் பல உரிமைகளை வேண்டி அரசாங்கத்திற்கு மனுச் செய்து கொண்டு தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி யுள்ளனர்.

கைத்தொழிலாளர்கள் : இரும்புக் கொல்லர்கள், பொற் கொல்லர்கள், கன்னர், தச்சர், விக்கிரகங்கள் வார்ப்போர் ஆகிய இந்த ஐந்து வகுப்பினரும் தங்களைப் பாஞ்சாலர் என்று அழைத்துக் கொண்டனர். முதலாம் தேவராயர் காலத்திய கல் வெட்டு ஒன்றில் இவர்களுக்குள் 74 பிரிவுகள் இருந்தனவாகக் கூறப் பட்டுள்ளது. விப்ர விநோதர்களைப்போல் இவர்களும் பல உரிமைகளுக்காகத் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர். 1555இல் உழவர்களுக்கும், பாஞ்சாலர்களுக்கு மிடையே பெரிய தொரு பூசல் நேர்ந்தது. வேதாந்தி இராம ராஜப்பா என்பவர் இதைத் தீர்த்து வைத்துள்ளார்.

கைக்கோளர்கள் : கைக்கோள் என்ற ஆயுதத்தைத் தாங்கி யிருந்து போரில் ஈடுபட்டதால் இவர்களுக்குக் கைக்கோளர்கள் என்ற பெயர் வந்த தென ஒரு கருத்து நிலவுகிறது. போரில்லாத காலங்களில் இவர்கள் நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். கோவில்களுக் கருகிலுள்ள மடவளாகங்களில் இவர்கள் குடி யிருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோவில்களின் நிரு வாகத்தில் இவர்களுக்குப் பெரும்பங்கு இருந்தது. வலங்கை, இடங்கைச் சாதிப் பிரிவுகளில் இவர்கள் சேர்ந்திருந்தனரா என்பது விளங்க வில்லை. பாஞ்சாலர்களையும், விப்ர விநோதர் களையும்போல இவர்களும் பல உரிமைகளுக்காகப் போராட்டம்

செய்துள்ளனர். விரிஞ்சிபுரத்திலும், காஞ்சிபுரத்திலும் வாழ்ந்த கைக்கோளர்களுக்குப் பல்லக்கு, சங்கு முதலியவைகளை உபயோகப் படுத்தும் உரிமைகள் வழங்கப் பெற்றன.

நாவிதர்கள் : சதாசிவ ராயருடைய ஆட்சியில் (மருத்துவ) நாவிதர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. 1545இல் இராமராஜ உடையார் என்பவர் கொண்டோஜா என்பாரின் கை வன்மையை மெச்சித் தும்கூர் மாவட்டத்தில் இருந்த நாவிதர் களுக்கு விதிக்கப்பட்ட வரிகளை நீக்கி யுள்ளார். 1547-48இல் எழுதப்பட்ட சாசனம் ஒன்றில் திம்மோஜா, கொண்டோஜா என்ற நாவிதருக்கு அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய சில வரிகள் இனம் வழங்கப்பட்டன. கொண்டோஜா என்ற நாவிதருக்கு ஆரவீட்டு இராமராயரிடம் மிகுந்த செல்வாக்கிருந்தது. இதனால், ருத்திரய்யா என்ற தெலுங்குக் கவிஞர் சதாசிவ மகாராயரை நேரில் பார்ப்பதற்கு முடிந்தது. கொண்டோஜாவிற்கு இராமராயரிடத்திலும், சதாசிவராயரிடத்திலும் பெருஞ்செல்வாக் கிருந்தமையால் அம்பட்டர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டாய காணிக்கை மகாநவமி தீவட்டி வரி, பிரதா முதலிய வரிகள் நீக்கப்பெற்றன.

தொட்டியர்கள் : கம்பளத்தார் (கம்பிலியர்) என்றழைக்கப் பட்ட தொட்டியர்கள் தொடக்கத்தில் ஆடுமேய்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பின்னர்த் தென்னிந்தியாவில் திருநெல்வேலிப் பகுதியில் சிறு பாளையக்காரர்களாகப் பதவி வகித்தனர். ஒரு பெண், பலரைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கமும், பெண்ணைவிட இளமையாக உள்ள பையனுக்குத் திருமணம் செய்யும் வழக்கமும் இவர்களிட மிருந்தன. விதவைகளைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கமும், சக மணமும் இவர்களிடையே வழக்கத்தில் இருந்தன. வைணவ சமயத்தைச் சார்ந்திருந்த போதிலும் ஜக்கம்மா, பொம்மக்கா என்ற சிறு தெய்வங்களையும் வணங்கினர்.

சௌராட்டிரர்கள் : இவர்கள் சூர்ஜர நாட்டிலிருந்து விஜயநகரத்திற்கு வந்து குடியேறினர். விஜயநகர அரசர்களுக்கும், பிரபுக்களுக்கும் விலையுயர்ந்த ஆடைகளைத் தயாரித்துக் கொடுத்து மிகுந்த செல்வமும், செல்வாக்கும் பெற்றனர். விஜயநகரப் பேரரசு தென்னிந்தியாவில் பரவிய போது மதுரைக்குச் சென்று குடியேறினர். பிராமணர்களுக்குரிய பட்டங்களையும், பழக்க, வழக்கங்களையும் மேற்கொண்டு பிராமணர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் எனக் கூறிக் கொண்டனர். அந்தணர்களைப் போல் உபநயனம், சாம உபாகர்மம் முதலிய சடங்குகளை மேற் கொண்டனர். இதனால் பிராமணர்களுக்கும், சௌராட்டிரர்

களுக்கும் ஏற்பட்ட பிணக்கம் ஒன்றை இராணி மங்கம்மாள் தீர்த்து வைத்துள்ளார்.

சண்டாளர்கள்: நால்வகை வருணசிரமத்தைச் சேராதவர்களாகச் சண்டாளர்கள் கருதப்பட்டனர். தெலுங்கு நாட்டில் மாலர், ஹொலியர் என்றும் தமிழ்நாட்டில் பறையர், பள்ளர், மாதிகா, சக்கிலி என்றும் அழைக்கப்பட்டனர். தென்னிந்தியாவில் உழவுத் தொழில் செய்வதில் பெரும்பாலும் ஈடுபட்டு இருப்பவர்கள் மாலர்கள், ஹொலியர்கள், பறையர்கள் என்பவராவர். இவர்களுள் பலர் நெசவுத் தொழில் செய்வதும் உண்டு. இவ் விரண்டு தொழில்களிலும் ஈடுபட எண்ணமில்லாதவர்கள் வழிப்பறி செய்து கொள்ளை அடிப்பதும் உண்டு. மாலர்களும் ஹொலயர்களும் குற்றப் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். சக்கிலியர்கள் மாட்டுத் தோல்களைக் கொண்டு பலவித பொருள்களைச் செய்து மக்களுக்குச் சேவை செய்தனர்.

சமூகப் பழக்க வழக்கங்கள்:

இந்து தரும சாத்திரங்களில் எண்வகையான திருமணங்களைப் பற்றிக் கூறப்பட்ட போதிலும் விஜயநகர ஆட்சிக் காலத்தில் கன்னிகாதானத் திருமணம்தான் பெருமளவில் நடைபெற்றதாகத் தெரிகிறது. பெண்களுக்கு ஸ்ரீதனம் கொடுக்கும் பழக்கமும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. இரண்டாம் தேவராயர் ஆட்சியில் எழுதப் பெற்ற ஒரு கல்வெட்டில் கன்னிகாதான முறையில்தான் பிராமணர்களுக்குள் திருமணம் நடைபெற வேண்டும் என்றும், ஸ்ரீதனம் கொடுப்பதும், வாங்குவதும் விரும்பத் தகாத செயல்கள் என்றும் கூறப்பட்டுள்ளன. 'படை வீட்டு இராச்சியத்தில் வாழ்ந்த கன்னடிய, தமிழ, தெலுங்க, இலாட அந்தணர்கள், அர்க்க புஷ்கரணி கோபிநாதப் பெருமாள் முன்னிலையில் பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர். மேற் கூறப்பட்ட அந்தணர்களில் கோத்திரம், சூத்திரம் சாகம் முதலியவற்றைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் கன்னிகாதான முறைப்படிதான் திருமணங்களை நடத்த வேண்டும். ஸ்ரீதனம் என்ற பெயரில் பொருளைக் கொடுப்பவர்களும், வாங்குபவர்களும் அரசாங்கத் தண்டனைக்குள்ளாவர். பிராமண சமூகமும் அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும்.' இவ்விதச் சீர்திருத்தம் அரசாங்கத்தின் அதிகாரத்தினால் ஏற்பட்ட தன்று; ஸ்ரீதனம் கொடுப்பதன் கொடுமையை உணர்ந்து மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடே யாகும். கர்நூல் மாவட்டத்திலுள்ள நந்தவரம் என்னு மிடத்தில் வித்வான் மகாஜனங்களின் இச்

மானம் ஒன்று திருமணம் செய்து கொள்ளும் பொழுது ஸ்ரீதனம் பெறுவது கூடாது என்று கூறுகிறது. சதாசிவ மகாராயர் ஆட்சியிலும் இவ்விதத் தீர்மானம் செய்யப் பட்டது. பிராமண சமூகத்தில் ஏழு வயதாக இருக்கும் பெண்ணை ஒன்பது வயதுள்ள சிறுவனுக்கு மணம் செய்து கொடுக்கும் இளமைத் திருமணங் களும் நடந்தன.

சக கமணம் அல்லது சதி : விஜயநகர ஆட்சியில் தென்னிந்தியாவிற்கு வந்த அயல்நாட்டு வழிப்போக்கர்களாகிய பார்போசா (1514), நூனிஸ் (1535-36), சீசர் ப்ரெடெரிக் (1567), லின்ஸ்சோடன் (1583), பாரதாஸ் (1614), பீட்ரோ டெல்லா வாலி (1623) ஆகியவர்கள், சதி அல்லது உடன்கட்டையேறுதல் என்ற கொடிய பழக்கம் நிலைபெற்றிருந்ததாகக் கூறுவர்.

(1) உடன்கட்டை ஏறி உயிர் துறக்கும் வழக்கத்தைப் பற்றிப்பார்போசா பின்வருமாறு கூறுவார். 'சமூகத்தில் எளியவர் களாக இருந்தவர்கள் தங்களுடைய கணவனுடைய உடல் எரிக்கப்படும் தீமூட்டத்திலேயே விழுந்து உயிர் துறப்ப துண்டு. செல்வமும், வசதிகளும் படைத்த பெண்டிர்கள் உடன்கட்டை ஏறி உயிர் துறக்காமல் சில சடங்குகளைச் செய்து, அச் சடங்குகள் நடைபெறும்பொழுது பெரிய விருந்துகளை நடத்தித் தங்களுடைய செல்வ மனைத்தும் தங்களுடைய உறவினர்களுக்கும், நண்பர் களுக்கும் அளித்து விடுவர். பின்னர்ச் சாம்பல் நிறமுள்ள குதிரையின்மீது ஏறிக் கொண்டு மயானத்திற்குச் செல்வர். அங்கே தீ வளர்க்கப்படும். அத் தீக் குழியின் முன்னின்று தன் னுடைய கணவனிடத்தில் தனக்குள்ள அன்பினால் அவர் இறந்த பிறகு தான் உயிர் வாழ விரும்ப வில்லை என்றும், விதவைகள் தீயில் வீழ்ந்து இறப்பதால் தெய்வீகப் பதவி கிடைப்பது நிச்சயம் என்றும் சில சொற்களைக் கூறுவாள். பின்னர்த் தன் உடல்மீது எண்ணெய் ஊற்றிக் கொண்டு, தீக் குழியில் வீழ்ந்து உயிர் துறப்பாள்.

(2) நூனிஸ் கூறும் விவரம் வேறு விதமாக உள்ளது. கணவனுடைய உடலுக்குத் தீ மூட்டியபின், உடன் கட்டை ஏறும் விதவையை உட்கார வைத்துச் சில சடங்குகள் செய்யப் பட்டன. பின்னர் அவ் விதவை மஞ்சள் நிறப் புடவை அணிந்து தன்னுடைய அணிகலன்களை யெல்லாம் தன்னுடைய உறவினர்க்கு அளித்து விடுவாள். தீயில் விழுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்ட ஒரு பரண்மீது ஏறி நிற்பதற்குத் தீக் குழியை மூன்று முறை சுற்றி வருவாள். அவள் பரண்மீது ஏறி நிற்கும் பொழுது அப் பெண் உபயோகித்த சீப்பு, கண்ணாடி,

அரிசி, வெற்றிலை, பாக்கு, புஷ்பம் முதலியவற்றைத் தீக் குழியில் எறிந்து விடுவர். விதவையும் தன் உடல் முழுதும் எண்ணெய் ஊற்றிக் கொண்டு, முகத்தை ஒரு துணியால் மூடிக் கொண்டு தீயில் வீழ்ந்து உயிர் விடுவாள்.

(3) சீசர் ப்ரெடரிக் கூறும் முறை சிறிது மாறுபடுகிறது. 'கணவனை இழந்த விதவை மூன்று மாதங்களுக்குப் பிறகு தீயில் வீழ்ந்து இறப்பது வழக்கம். தீக் குளிக்கச் செல்லும் நாளன்று அவ் விதவை மணப்பெண் போல அலங்கரிக்கப் படுவாள். பின்னர், யானை அல்லது குதிரைமீதில் ஏறிக் கொண்டு மயானத் திற்குச் செல்வாள். சிலர் பல்லக்கில் சுமந்து செல்லப்படுவதும் உண்டு. மயானத்திற்கு அருகில் உள்ள ஆற்றில் அல்லது குளத்தில் குளித்த பிறகு மஞ்சள் நிற ஆடை அணிந்து அங்குக் கூடியிருந்தவர்களுக்கு ஒரு விருந்து நடத்துவாள். பின்னர்த் தன் உடல் முழுவதும் எண்ணெய் ஊற்றிக் கொண்டு ஒரு பரண்மீது ஏறித் தீக் குழிக்குள் வீழ்ந்து உயிர் துறப்பாள்.'

(4) இலிங்காயத்துகள் என்ற வீர சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் எவ்விதம் சக கமணம் செய்தனர் என்பதை நூனிஸ் என்பவர் பின்வருமாறு கூறுவார். 'சக கமணம் செய்து கொள்ள விரும்பும் (வீரசைவ) பெண்டிர் மிகுத்த வீர உணர்ச்சி யுடன் தங்களுக்கு என வெட்டப்பட்ட குழிக்குள் செல்லு கின்றனர். அங்கே, இறந்து போன கணவனுடைய உடலுக்கும், இறக்கப் போகும் மனைவிக்கும் இரு மண் மேடைகள் (நாற்காலி போல்) அமைக்கப்பட்டுள்ளன. அந்த மேடைகளின்மீது இருவர் உடல்களும் உட்கார வைக்கப் பெறுகின்றன. பின்னர்க் குழிக்குள் மண் தள்ளப்பட்டு மூடப்படுகிறது. மனைவியும், கணவனுடன் இறந்துபடுகிறாள்.

பார்போசா என்பவரும் இந்த வீர சைவ சக கமணத்தைப் பற்றிக் கூறியுள்ளார். 'கணவனை இழந்த பெண்களைப் புதைப்ப தற்கு ஆழமுள்ள செங்குத்தான குழிகள் வெட்டப்படுகின்றன. குழிக்குள் அப் பெண் நிற்க வைக்கப்படுகிறாள். பின்னர் அவளுடைய கழுத்தளவு வரையில் மண் தள்ளப்பட்டுக் கிடிக்கப் படுகிறது. குழிக்குள் நிற்கும் பெண்ணின் தலைமீது பெரியதொரு கருங்கல் வைக்கப்படுகிறது. அவளும் மூச்சுத் திணறி இறந்து விடுகிறாள்.' சீசர் பெடரிக்கும் இவ்விதக் கொடுஞ்செயல்கள் நடைமுறையில் இருந்தனவென ஒப்புக் கொள்ளுகிறார். 1682இல் இக் கொடுமையை நேரில் கண்ட காஸ்பரோ பால்பி (Gaspero Balbi) என்பவர், இவ் வழக்கம் பொற்கொல்லர்களிடையேயும் நடந்ததெனக் கூறுவார். 1405ஆம் ஆண்டில் பெனுகொண்டாபி

பாயிரி செட்டியின் மகள் கங்காசனி என்பவள் தன்னுடைய கணவன் இராமதேவ நாயக்கனுடைய உடலோடு சக கமணம் செய்து கொண்டதாகவும், இச் செய்கையின் நினைவாக வாண போலா என்னு மிடத்தில் ஒரு சதிக்கல் நாட்டப்பட்டதாகவும் ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட கொடிய பழக்கங்கள் விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த பிரபுக்களிடத்திலும், கௌடர்கள், நாயக்கர்கள் போன்ற தலைவர்கள் குடும்பங்களிலும் குடி கொண்டிருந்தன. பிராமணர்களில் சில வகுப்பினரும் இவ் வழக்கத்தைப் பின்பற்றினர். இனி இந்த உடன்கட்டை ஏறும் வழக்கம் கணவனையிழந்தவர்களால் மன விருப்பத்துடன் பின்பற்றப்பட்டதா, பிறரால் வற்புறுத்தப்பட்டதா என்பதை ஆராய்தல் நலமாகும். சக கமணம் செய்து கொண்ட பெண்கள் முக மலர்ச்சியுடன் காணப்பட்டனர் எனப் பார்போசா கூறுவார். 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்ற மூதுரையின்படி விதவையான பெண்கள் தன்னைக் கைப்பிடித்த கணவனைத் தவிர வேறு ஓர் ஆடவரையும் மறு மணம் செய்து கொள்ள விரும்பாமல், இறந்த கணவனோடு மறு பிறவியிலாவது கூடி வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் செய்யப்பட்டதெனக் கருதலாம். ஆனல், இவ்வித மறக் கற்புடைய பெண்டிர்கள் மிகச் சிலராகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆகையால் விஜயநகர ஆட்சியில் சக கமணம் செய்து கொள்ளும் வழக்கம் எல்லா மக்களிடையேயும் பரவியிருந்ததெனவோ, கட்டாயமாக இருந்ததெனவோ கூறுவதற் கில்லை.

மேற்கூறப்பட்ட முறைகளில் சக கமணம்செய்துகொண்டவர்களின் நினைவாக வீரக்கல் அல்லது சதிக்கல் என்ற சிலைகள் காணப்படுகின்றன. இந்தக் கற்களில் வலக்கை முழங்கையிலிருந்து (உயரமாகத்) தூக்கப்பட்டு இரண்டு விரல்களுக் கிடையில் எலுமிச்சம் பழம் போன்ற உருண்டை காணப்படுகிறது. சதிக் கற்களில் இரண்டு அடுக்குகள் உள்ளன. கீழே உள்ள அடுக்கில் இறந்த கணவனும், அவனுடைய மனைவிமார்களும் உருவச் சிலைகளாகச் செதுக்கப்பட்டுள்ளனர். மேல் அடுக்கில் இலிங்கத்தின் உருவம் அல்லது சங்கு சக்கரங்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்த்த நிலையில் கணவன் மனைவிகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுல் இறந்துபோன கணவனும், சக கமணம் செய்து கொண்ட மனைவியும் கைலாய பதவி அல்லது வைகுந்த பதவி அடைந்தனர் என்பதைச் சிற்பங்கள் விளக்குகின்றன எனக் கூறலாம். இச் சதிக் கற்களுக்கு 'மதனக்கல்' அல்லது கணவன் மனைவியிடையே நிலவிய இடையருத இல்லற

அன்பைக் குறிக்கும் கல் எனவும் பெயருண்டு என லூயி-ரைஸ் என்ற அறிஞர் கூறுவார்.

சமூகத்தில் நிலவிய போகங்கள் :

தென்னிந்திய அரசர்களும், பிரபுக்களும், மற்றச் செல்வர்களும் எட்டு வகையான போகங்களை அனுபவித்ததாக இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. இந்த எண் வகை போகங்களாவன : குடியிருக்கும் வீடுகள், ஆடைகள், அணிகலன்கள். நறுமணப் பொருள்கள், புஷ்ப மாலைகள், தாம்பூலம், படுக்கை, மகளிர் என்பன வாகும். இவற்றோடு ஸ்நானம், உணவு, பானம் என்ற மூன்று போகங்களையும் சேர்த்துப் பதினெரு வகைப் போகங்களாகவும் கூறுவ துண்டு.

குடியிருப்பு வீடுகள் : விஜயநகரத்தில் பேரரசருடைய அரண்மனையும், பிரபுக்கள், செல்வர்கள் வசித்த வீடுகளும், கருங்கற்களினாலும், செங்கற்கள் கொண்டும் மிக்க அழகாக அமைக்கப் பட்டிருந்தன என்று போர்த்துகீசிய வழிப் போக்கர்கள் கூறியுள்ளனர். அரண்மனையில் சேவகம் செய்த பொதுப் பெண்டிர் வீடுகளும் மிக்க ஆடம்பரத்துடன் அமைவுற்றிருந்தன. செல்வர்களுடைய வீடுகள், மாடிகள் இல்லாமல் ஒரே தளத்துடன் பல மக்கள் தங்கியிருப்பதற் கேற்றபடி கட்டப் பட்டிருந்தன. அரண்மனைகளைச் சுற்றிப் பெரிய மதிற்சுவர்களும், அகலமான தோட்டங்களும் இருந்தன. அரண்மனையின் சுவர்களில் அழகிய சிற்பங்களும், சித்திரங்களும் காணப்பட்டன. சுவர்களின்மீது எழுதப் பெற்றிருந்த சித்திரங்களில் இதிகாச புராணங்களில் கூறப் படும் காட்சிகளும், பலநாட்டு மக்களுடைய அன்றாட வாழ்க்கைக் காட்சிகளும் தீட்டப் பட்டிருந்தன. இன்றும் விஜயநகர அரண்மனைகளில் தனியான சித்திரச் சாலைகளில், திருபாற்கடலில் அமிர்தம் பெறுவதற்குத் தேவர்களும், அரசர்களும் கடைந்த காட்சியும், இலக்குமி, பார்வதி கலியாணங்கள், காமதகனம், தமயந்தியின் சுயம்வரம் முதலிய காட்சிகளும் வரையப்பட்டிருந்தன. பொதுமகளிருடைய இல்லங்களில் இரதி மன்மத லீலைகளும், கோபிகளும் கிருஷ்ணனும் விளையாடும் காட்சிகளும் காணப்பட்டன. கோட்டைச் சுவர்களுக்கும், அரண்மனைகளுக்கும் இடையில் பிரபுக்களும், செல்வர்களும் வாழ்ந்த பல தெருக்கள் இருந்தன. இங்கு அமைக்கப்பட்டிருந்த வீடுகளின் மாடிச் சுவர்களில் பல கலசங்கள் காணப்பெற்றன. கோட்டைச் சுவர்களின் நுழைவாயில்களில் காலங் காட்டுவதற்குரிய மணற் கடிகாரம் அல்லது நீர்க்கடிகாரம் அமைக்கப்பட்ட கோபுரங்கள் இருந்தன. அரசன் தங்கியிருந்து அரசாங்க அலுவல்களைக் கவனிப்

பதற்குரிய தனியிடங்களும் இருந்தன. இன்னும், சித்திரச் சாலை, நாட்டியச் சாலை, திருமஞ்சன சாலை போசன சாலை முதலிய வெவ் வேறு இடங்கள் இருந்தனவாகச் சில இலக்கியங்கள் கூறுகின்றன.

அரண்மனையில் இருந்த அரசிகளுக்குப் பொழுது போக்கிற் காக அன்னப் பறவைகள், கிளிகள், புறுக்கள் முதலியவைகள் வளர்க்கப்பட்டு அவை தங்கியிருப்பதற்கும் வசதிகள் செய்யப் பட்டன. அரண்மனைக்கு வெளியில் வாழ்ந்த மத்திய வகுப்பினர் ஓட்டு வீடுகளிலும், மட்சுவர் வைத்து அமைக்கப்பட்ட மொட்டை மாடிவீடுகளிலும் வாழ்ந்தனர். ஏழை மக்கள் கூரை வீடுகளில் வசித்தனர். ஓரினத்தை அல்லது தொழிலைச் சேர்ந்த வர்கள் சேர்ந்து வீடுகளை அமைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தினர்.

ஆடைகள் : விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த பொதுமக்களின் ஆடைகளைப் பற்றிப் பார்போசா என்பவர் பின்வருமாறு கூறு வார். 'இடுப்பில் வேட்டிகளைக் கட்டிப் பின்னர் துணியை மடக்கிச் சளுக்குக் கட்டியிருந்தனர். இடுப்பிற்குமேல் பட்டு, பஞ்சுத்துணி அல்லது அகலமான துணிகளைக் கொண்டு சட்டை யணிந்து கொண்டிருந்தனர். தலையில் முண்டாசும் கட்டிக் கொள்ளு கின்றனர். சிலர் ஒருவகையான குல்லா அணிந்திருந்தனர். கழுத்தில் ஒருவிதமான அங்கவஸ்திரம் இருந்தது. கால்களில் செருப்பும் போட்டுக் கொண்டனர்'. விஜயநகர அரசர்கள் ஆடையைப்பற்றிச் 'சுத்தமான பட்டுத் துணியில் பொன் சரிகை களுடன் சேர்த்து நெய்யப்பட்ட பட்டாடைகளையும், பட்டுத் துணியில் தைக்கப்பட்ட சட்டைகளையும் அரசர் அணிந்து கொண்டிருந்தார். அரசவையில் அமர்ந்திருக்கும் பொழுது தலையில் கிரீடம் போன்ற தலைப்பாகை அணிந்திருந்தார்' என்று கூறுவார்.

பிராமணர்கள் இடுப்பில் நீர்க்காவியுடன் கூடிய வேட்டி யும் உத்தரீயம் போன்ற அங்கவஸ்திரமும் அல்லது சால்வை களும் அணிந்திருந்தனர். உழவுத் தொழில் செய்தவர்கள் இடுப்பில் மாத்திரம் சிறிய துண்டுகளைக் கட்டிக் கொண்டிருந் தனர்.

விஜயநகரத்தில் வாழ்ந்த பெண்டிர் எவ்வித ஆடைகளை அணிந்து கொண்டனர் என்றும் பார்போசா கூறியுள்ளார். 'மெல்லிய வெண்மையான நூல் புடவைகளையும், பலநிறங் கொண்ட பட்டுப் புடவைகளையும் அணிகின்றனர். புடவைகள் ஐந்து கெஜம் அல்லது 16முழம் நீளமிருக்கும். முன்தானையை

மார்பின்மீது விரித்து ஒரு தோள் பட்டையை மூடி உடம்பை மறைத்துக் கொள்ளுகின்றனர். அரண்மனையில் வாழ்ந்த பெண்டிர் பாவாடை இரவிக்கை, மஸ்லின் துணி முதலியவற்றை அணிந்தனர். வெல்வெட் துணிகளாலும், மற்ற அலங்காரப் பொருள்களாலும் அலங்கரிக்கப் பெற்ற காலணிகளை அணிந்திருந்தனர்.' பலவிதச் சாயங்கள் தோய்த்த புடவைகளை வயல்களில் வேலை செய்த பெண்மக்கள் அணிந்திருந்தனர்.

அணிகலன்களும், நறுமணப் பொருள்களும் : விஜயநகரத்தில் வாழ்ந்த ஆடவரும், பெண்டிரும் பலவித அணிகலன்களை அணிந்திருந்தனராகப் போர்த்துகீசிய வரலாற்றுசிரியர்கள் கூறுவர். கழுத்தணி, காலணி, கைவங்கி முதலிய அணிகளை ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக அணிந்திருந்தனர். நவரத்தினங்கள் வைத்து இழைக்கப்பட்ட ஒட்டியாணங்களையும், காதணிகளையும் அணிவதும் உண்டு. மூக்குத்தி, கம்மல் முதலியன பெண்களுக்கு உரியன வாகும். வீரர்கள் தங்களுடைய கால்களில் வீரக்கழல்களை அணிந்திருந்தனராகஅறிகிறோம். கல்வியில்சிறந்தஅறிஞர்களுக்குக் 'கண்டபெண்டேரா' என்ற காலணியை அரசர்கள் அணிவிப்பது உண்டு. எடுத்துக்காட்டாகக் கிருஷ்ணதேவராயர், தம்முடைய ஆஸ்தான கவியாகிய அல்லசானி பெத்தண்ணாவிற்குக் 'கண்ட பெண்டேரா' என்ற காலணியைத் தாமே அணிவித்ததாக நாம் அறிகிறோம்.

கோடைக் காலங்களில் சந்தனம், கற்பூரம், கஸ்தூரி, புனுகு முதலியவற்றைக் கலந்து உடலில் பூசிக் கொண்டனர். சிலர் மேற் சொல்லப்பட்ட பொருள்களோடு, குங்குமப் பூவையும் சேர்த்துப் பன்னீருடன் கலந்து உடலில் பூசிக் கொண்டதாகப் பார்போசா கூறுவர். குளிர் காலத்தில் சந்தனக் கட்டைக்குப் பதிலாக அகில் கட்டைகள் உபயோகப் படுத்தப்பட்டன. அகிற்புகையைக் கொண்டு தங்கள் கூந்தலைப் பெண்கள் உலர்த்திக் கொள்ளுவதும் உண்டு. மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய மலர் மாலைகளைக் கூந்தலிலும், கழுத்திலும் அணிந்து கொண்டனர். ரோஜா மலர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அத்தர், பன்னீர் முதலிய பொருள்களுக்கு அதிக கிராக்கி யிருந்தது.

தாம்பூலமும், படுக்கையும் : விஜயநகர ஆட்சிக் காலத்தில் வெற்றிலை பாக்குப் போடும் வழக்கம் பொதுமக்களிடத்தில் அதிக மாகப் பரவி யிருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் வெற்றிலை பாக்குப் போடாதவர்கள் கௌரவமுள்ளவர்களாகக் கருதப்பட வில்லை. செல்வர்கள் வெற்றிலை பாக்குடன் ஏலம், கிராம்பு, சாதிக்காய், காசுக்கட்டி முதலிய நறுமணப் பொருள்களையும்

உபயோகித்தனர். விருந்தாக வந்தவர்களுக்கு வெற்றிலை பாக்குடன் கற்பூரத் துண்டுகளும் தாம்பாளங்களில் வைத்து வரவேற்கும் வழக்கமும் இருந்தது. சுகபோகப் பொருளாகவும், உண்ட உணவு சீரணிப்பதற்காகவும் வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு ஆகிய மூன்றும் உபயோகப்பட்டன. 'மிளகு கொடியின் இலை போன்ற இலை யொன்றையும், பாக்குச் சீவலையும் சுண்ணும்புடன் சேர்த்து மென்று வாயில் அடக்கிக் கொள்ளுகின்றனர்; இப்படி மெல்லுவதால் வாயில் உண்டாகும் நாற்றத்தை நீக்கிக் கொள்ளுகின்றனர். பற்களும் வலிமை யடைகின்றன. சீரண சத்தியும் அதிகரிக்கிறது.'

அரசனிட மிருந்து வெற்றிலை பாக்குப் பெறுவது சிறந்த கௌரவமாகக் கருதப் பட்டது. புதிதாகப் பெருந்தர அலுவல்களில் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கு வெற்றிலை பாக்கும், ஆடை, ஆபரணங்களும், பல்லக்கு, வெண்சாமரம் முதலியவைகளும் வழங்கப்பட்டன.

விஜயநகரத்தில் வாழ்ந்த அரச குடும்பத்தார்களும், பிரபுக்களும் இரு விதமான கட்டில்களை உபயோகித்தனர். ஒன்று ஊஞ்சல் கட்டில்; மற்றொன்று நிலையான கட்டில். எழில்நலம் வாய்ந்த இளம்பெண்கள் கயிற்றினாலும், கொடிகளினாலும் கட்டப்பட்ட ஊஞ்சல்களில் அசைந்தாடித் தோட்டங்களில் காலம் கழிப்பதுண்டு. விஜயநகர அரண்மனைக்குள் பல ஊஞ்சல் கட்டில்களைப் பார்த்ததாகப் பீயஸ் கூறுவார். அரண்மனைக்குள் இருந்த திறந்தவெளி மேடையில் நான்கு அல்லது இரண்டு தூண்களில் நான்கு சங்கிலிகள் கோக்கப்பட்டு அவற்றில் ஊஞ்சல் தொங்கிக் கொண்டிருப்பதை நூனிஸ் பார்த்துள்ளார். பொற்றகட்டினால் செய்யப்பட்டு, வெள்ளிச் சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்த மற்றோர் ஊஞ்சலும் இருந்ததாக நூனிஸ் கூறுவார். பொற்சங்கிலிகளிலிருந்து தொங்கும் கட்டில் ஒன்றும் ஓர் அறையில் காணப்பட்டது. நவரத்தினங்களும், பவழங்களும் வைத்து இழைக்கப்பட்ட கால்களில் அமைக்கப் பட்ட மற்றொரு கட்டிலும் காணப்பட்டது. இந்தக் கட்டில்களின் மீது வெல்வெட் துணிகளால் செய்யப்பட்ட தலையணைத் திண்டுகளும், பட்டுத் துணியால் செய்யப்பட்ட மெத்தைகளும் காணப்பட்டன. யானைத் தந்தங்களைக் கொண்டு செய்யப்பட்ட கால்களைக் கொண்ட கட்டில்களும் விஜயநகர அரண்மனையில் இருந்தன. அன்னத்தின் தூவிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட மெத்தைகளும், மலர் மெத்தைகளும் கட்டில்களின்மேல் விரிக்கப் பெற்றிருந்தன. எல்லாக் கட்டில்களின்மீதும் கொசுவலைகள் கட்டப்பட்டிருந்தன.

விஜயநகரத்துப் பிரபுக்களின் வீடுகளில் காணப்பெற்ற கட்டில்களும் மேற்கூறப்பட்ட கட்டில்கள் போல இருந்திருக்கலாம். ஆனல், நடுத்தர வகுப்பு மக்களும், தொழிலாளர்களும் கோரைப்பாய், மரக்கட்டில் அல்லது கயிற்றுக் கட்டில்களே உபயோகித்து இருப்பர்.

பெண்கள்: ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகக் கருதப்படுவது இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கொள்கை யாகும். விஜயநகர ஆட்சிக் காலத்தில் ஆண் மக்களுடைய சுகபோகப் பொருள்களில் ஒன்றுகவே பெண்டிர் கருதப்பட்டனர் என்று இலக்கியங்களிலும், அயல் நாட்டவருடைய கூற்றுகளிலும் இருந்து நாம் அறியலாம். அரண்மனைகளில் இருந்த ஏராளமான அரசிளங்குமரிகளும், ஏவல் செய்த பெண்களும் அரச குடும்பத்து ஆண்களுடைய வேலைக்காரர்களாகவே கருதப்பட்டனர். விஜயநகரத்தரசர்கள் பல தாரங்களே மணம் செய்து கொண்டனர் என்று அயல்நாட்டு வழிப்போக்கர்கள் எழுதியுள்ளனர். ஆனல், அவர்கள் கூறும் பெண்டிர் ஆயிரக் கணக்கிலும், நூற்றுக் கணக்கிலும் இருந்தனர் என்பதை நாம் நம்புவதற் கில்லை.

அரண்மனையில் நடக்கும் விருந்துகளிலும், திருவிழாக்களிலும் இசைக் கச்சேரிகளே நிகழ்த்துவதற்கும் பரத நாட்டியம் ஆடுவதற்கும் ஏராளமான தேவரடியார்கள் இருந்திருக்க வேண்டும். அரசன் தனக்குரிய அந்தப்புரத்தில் காலத்தைக் கழிக்கும் பொழுது பெண்மக்களே பலவித ஏவல் தொழில்களைப் புரிந்தனர். அரசனுக்கு வெற்றிலே பாக்கு மடித்துக் கொடுக்கவும், வெண்சாமரம் வீசவும், முகக் கண்ணாடி, வெற்றிலைக் காளாஞ்சி முதலியவைகளே ஏந்தவும் பெண்களே நியமனம் செய்யப்பட்டு இருந்தனர்.

விஜயநகர அரசர்கள் வேட்டையாடச் சென்ற பொழுதும், போர் மேற்கொண்டு சென்ற பொழுதும் நூற்றுக்கணக்கான பெண் ஏவற்காரர்களும் கூடவே சென்றதாகத் தெரிகிறது. அரசனையும், பிரபுக்களையும் பின்பற்றிய பொதுமக்களும் பல தாரங்களே மணந்து கொண்டனர். பலதார மணம் புரிந்து கொள்வதற்குத் தடையாக எவ்விதச் சட்டங்களோ சமூகக் கட்டுப்பாடுகளோ இருந்தனவாகத் தெரிய வில்லை.

உணவுப் பொருள்கள்: அரிசி, கோதுமை, சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு முதலிய தானியங்களும் உளுந்து, பயறு, துவரை, கொள், எள், கடலை முதலிய நவதானியங்களும்

விஜயநகர ஆட்சிக் காலத்தில் உணவுப் பொருள்களாக இருந்தன. தென்னிந்தியர்களின் முக்கிய உணவாகிய அரிசியும் விஜயநகர ஆட்சியில் நிரம்ப விளைந்ததாகத் தெரிகிறது. தற்காலத்தில் ஆந்திர நாட்டுப் பகுதியில் நெல்லூர் மாவட்டத்தில் விளையும் அரிசி மிகவும் புகழ் பெற்றிருப்பது போல் விஜயநகர ஆட்சியில் துளுநாட்டில் விளைந்த நான்கு வகையான அரிசிகள் மிகச் சிறந்தவை எனக் கருதப்பட்டன. வெண்மை நிறமான அரிசி உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த தென்றும் செம்மை அல்லது கருமை நிறம் உடைய அரிசி மட்டரகமான தென்றும் கருதப்பட்டன. விஜயநகரத்தின் சேனைகளில் இருந்த இஸ்லாமிய வீரர்கள் கோதுமையை விரும்பி உண்டனர். கிராமங்களில் நஞ்சை நிலங்கள் மிகுதியாக இருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அரிசியையும், மானாவாரி இடங்களில் வாழ்ந்த மக்கள் சோளம், கம்பு, கேழ்வரகு, வரகு முதலிய தானியங்களையும் உணவாகக் கொண்டனர்.

விஜயநகரத்து அரசர்கள் சைவர்கள் அல்ல ரென்றும், ஆட்டிறைச்சி, பன்றி மாமிசம், மானிறைச்சி முதலியவற்றையும், முயல், புறு மற்றும் பலவிதமான பறவைகளின் இறைச்சியையும் உணவாகக் கொண்டனர் என்றும் நூனிஸ் கூறுவார். கடல், ஆறு, குளம், ஏரிகளில் பிடிக்கப்பட்ட மீன்களும் உணவோடு சேர்க்கப்பட்டன. விஜயநகரத்துக் கடைத்தெருக்களிலும், சந்தைகளிலும் ஆடுகளும், உணவிற்காக விற்கப்படும் பறவைகளும் ஏராளமாய்க் கிடைத்தன என நூனிசும் பீயசும் கூறுவர் மிளகாய் விஜயநகரக் காலத்தில் உபயோகத்தில் இல்லை. மிளகாய்க்குப் பதிலாக மிளகுதான் மக்களுடைய தேவைகளை நிறைவு செய்தது. மா, பலா, வாழை, திராட்சை, மாதுளை முதலிய பழங்களும், வெள்ளரி, கொம்மட்டி முதலியவைகளும் ஏராளமாகக் கிடைத்தன. தென்னங்கள், பனங்கள் முதலிய போதை தரும் பானங்களும், சாராயம் என்ற போதைப் பானமும் இருந்தனவாகத் தெரிகிறது.

20. விஜயநகரப் பேரரசின் சமய - தத்துவ வரலாறு

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தக்காணத்திலும், தென்னிந்தியாவிலும் ஏற்பட்ட இஸ்லாமியப் படையெழுச்சிகள் தென்னிந்தியக் கோவில்களையும், மடங்களையும், சமய ஆசாரங்களையும் அழித்து விடுவன போல் தோன்றின. இவ்வாறு தென்னிந்தியாவின் பூர்வீக சமயங்களையும், கலாசாரத்தையும் போற்றிக் காப்பதற்கெனவே விஜயநகரமும், விஜயநகரப் பேரரசும் தோன்றின என்னும் கொள்கையில் பேருண்மை பொதிந்துள்ளது. விஜயநகரப் பேரரசர்கள் புராதன இந்து அரசர்களுடைய சுதந்திர வாழ்க்கையை மீண்டும் நிலைநாட்டவும், இந்து சமயங்கள் அழிந்துவிடாதவண்ணம் காப்பாற்றவும் கங்கணங் கட்டிக் கொண்டனர். தென்னிந்திய மரபு, தருமம் முதலியவற்றைக் காப்பாற்றவும் சமூக அமைப்பை இஸ்லாமியர் அழித்து விடாதவாறு பாதுகாக்கவும் விஜயநகரப் பேரரசு தோன்றியது. சமயத்தையும், கோவில்களையும் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள், தென்னிந்திய மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றில் சிறந்த இலக்கியங்களும் சமய சம்பந்தமான நூல்களும் பெருமளவில் தோன்றுவதற்குக் காரணமாயின. ஆகவே, இஸ்லாமியருடைய படையெழுச்சிகளைத் தடுக்கவும், இந்து சமயங்கள், கோவில்கள், மடங்கள் முதலியவற்றைப் பாதுகாக்கவும் இலக்கிய வளர்ச்சிக்கு உதவி செய்யவும் விஜயநகர அரசு தோன்றிய தெனக் கூறலாம்.

தமிழ்நாட்டை மதுரைச் சுல்தான்களிடமிருந்து கைப்பற்றிய குமார கம்பணர், தென்னாட்டுக் கோவில்களில் மீண்டும் நித்திய நைவேத்தியங்கள் நடைபெறுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார். முகம்மது துக்ளக் தென்னிந்தியாவின் மீது படையெடுத்த பொழுது ஸ்ரீரங்கநாதருடைய விக்கிரகத்தை உடைத்துவிடுவார்களோ என்று அஞ்சிய பிள்ளை லோகச் சாரியார் என்பவர், அரங்கநாத விக்கிரகத்தை ஒரு பல்லக்கில் வைத்து அழகர் கோவில் வழியாகத் தெற்கு நோக்கித் தூக்கிச் சென்றார் ; அங்கே ஓராண்டு வரையில் தங்கியிருந்து அரங்கநாத விக்கிரகத்தைக் காப்பாற்றினர். பிள்ளை லோகாச்சாரியார்

முதுமை எய்தி உயிரிழந்தார். ஆகையால், வேதாந்த தேசிகரும், அவருடைய நண்பர்களும் அழகர் மலையிலிருந்து திருக்கோட்டியூர், சோதியக்குடி முதலிய இடங்களைக் கடந்து எட்டயபுரம், ஆழ்வார் திருநகரி முதலிய இடங்கள் வழியாகத் திருவாங்கூர் நாட்டிற்குள் சென்றனர். அங்கிருந்த பல வைணவக் கோவில்களில் அரங்க நாதருடைய விக்கிரகத்தை வைத்துக் காப்பாற்றினர். பின்னர்க் கோழிக்கோடு (Calicut) என்னு மிடத்திற்குச் சென்று மைசூரில் உள்ள மேலக்கோட்டை அல்லது திருநாராயணபுரம் என்னும் வைணவத் தலத்தில் வைத்துப் பாதுகாத்தனர். பின்னர் மேலக் கோட்டையில் இருந்து திருப்பதிக்குக் கொண்டு வந்ததாகக் கோயிலொழுகு, பிரபண்ணமிர்தம் என்ற நூல்களில் கூறப்பட்டுள்ளன. குமார கம்பணருடைய அலுவலாளராகிய கோபணரியா என்பவர் அரங்கநாதருடைய விக்கிரகத்திற்கு ஏற்பட்ட துன்பங்களைக் கேள்விப்பட்டு அந்த விக்கிரகத்தைத் தம்முடைய தலைநகராகிய செஞ்சிக்குக் கொண்டுவந்து சிங்காவரம் என்னு மிடத்தில் உள்ள குடைவரைக் கோவிலில் வைத்துக் காப்பாற்றினர்.

குமார கம்பணர் மதுரையைக் கைப்பற்றிய போதிலும் திருவரங்கத்திற்கு அருகில் இஸ்லாமியத் தலைவன் ஒருவன் மட்டும் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அரங்கநாதருடைய கோவிலில் ஒரு பகுதியை இடித்து அக் கற்களைக் கொண்டு கண்ணனூரில் ஒரு மாளிகை அமைத்து வசித்தனன். ஸ்ரீரங்கம் கோவிலை முழுவதும் இடித்து விடாமல் இருக்குமாறு ஒரு தேவரடியாரும், சிங்கப்பிரான் என்ற வைணவரும் அந்த இஸ்லாமியத் தலைவனை வேண்டிக் கொண்டனர். இஸ்லாமியத் தலைவனும் நெறியற்ற வாழ்க்கை நடத்தித் தகுந்த பாதுகாப்பின்றி இருந்த சமயத்தில் திருமாநாட்டு நம்பி, உத்தம நம்பி என்ற இரு வைணவர்களும் செஞ்சியில் ஆட்சி புரிந்த கோபணரியருக்கு இரகசியமாகச் செய்தி அனுப்பித் திருச்சிராப் பள்ளிச் சீமையை இஸ்லாமியத் தலைவனிடமிருந்து மீட்பதற்கு அதுவே தக்க சமயமென விண்ணப்பித்தனர். கோபணரியரும் செஞ்சியிலிருந்து கண்ணனூரின்மீது படையெடுத்து இஸ்லாமியத் தலைவனைக் கொன்று திருச்சிராப்பள்ளிச் சீமையை விஜயநகர ஆட்சியில் கொண்டு வந்து, பின்னர் அரங்கநாதருடைய விக்கிரகத்தையும் அக் கோவிலில் பிரதிட்டை செய்தார். திருவரங்கம் கோவிலில் காணப்படும் அரங்கநாதர் கல்வெட்டுப் பின்வருமாறு இச் செய்தியைக் கூறுகிறது, 'மேகங்கள் தவழுகின்ற அஞ்சனத்திரி என்னும் திருப்பதியிலிருந்து அரங்கநாதரைக் கொண்டு வந்து செஞ்சியில் உள்ள குடைவரைக் கோவிலில் பத்திரமாகப் பாது

காத்த கோபண்ணரியா விற்போரில் வல்லவர்களாகிய துருக்கர் களைத் தோற்கடித்து, ஸ்ரீரங்கம் கோவிலைக் காப்பாற்றி, அக் கோவிலில் ஸ்ரீதேவி, பூதேவிகளின் விக்கிரகங்களுக் கிடையில் அரங்கநாதருடைய, விக்கிரகத்தையும் வைத்து, விஷ்ணுவி னுடைய நாபிக் கமலத்தில் தோன்றிய பிரம்ம தேவனைப் போல் வழிபாடுகள் செய்தார்.*

தமிழ்நாட்டில் மதுரை, சிதம்பரம் முதலிய இடங்களிலும் வழிபாடுகளும் திருவிழாக்களும் மீண்டும் தோன்றின. இடிந்து போன கோவில்கள் சீர்திருத்தம் செய்யப்பட்டன. நித்திய நைவேத்தியங்களும், பல வழிபாட்டுத் தானங்களும் வழங்கப் பட்டன.

குமாரகம்பணரும் அவருடைய மகன் எம்பண உடையாரும் தமிழ் நாட்டில் பல கோவில்களை முன்னிருந்த நன்னிலைக்குக் கொண்டு வந்தது போன்று சங்கமனுடைய மற்றப் புதல்வர்களும் பேரரசின் வடக்குப் பகுதியில் ஆந்திரநாட்டில் பல தேவாலயங் களைச் சீர்திருத்தினர். இந்தச் சமயப் பணியில் சிருங்கேரி மடத் துத் தலைவர்களாகிய வித்தியாதீர்த்தரும், வித்தியாரண்யரும் காளாமுக சைவப் பிரிவின் தலைவராகிய கிரியாசக்திப் பண்டிதரும் விஜயநகர அரசர்களோடு ஒத்துழைத்தனர். 1376இல் எழுதப் பெற்ற கல்வெட்டு ஒன்றில், 'வசுதேவருக்கும், தேவகிக்கும் பிறந்த அச்சுதன் (கிருஷ்ணன்) உலகத்தில் மறம் ஓங்கி அறம் அழி யும் நிலையில் மீண்டும் நான் அவதாரம் செய்வேன் என்று கீதையில் கூறியதுபோல், பம்பாபுரியில் கங்கமன் காமாம்பிகா என்ற இரு வருக்கும் பிறந்த புக்கமகிபதி (Bukka) பிறந்தார்' என்று கூறப் பட்டுள்ளது.* ஆகவே, சங்கம வமிசத்து விஜயநகர அரசர்கள் மேற்கொண்ட 'வேத மார்க்க பிரதிஷ்டாபனச்சாரியா, வைதீக மார்க்க பிரதிஷ்டாபனச்சாரியா' என்ற பட்டங்கள் வெறும் புனைந் துரையான வார்த்தைகளல்ல. பல்லவ வமிச மன்னர்கள் 'தரும மகாராஜாதிராஜா என்ற பட்டங்களைப் புனைந்து கொண்டாற் போல விஜயநகர அரசர்கள் வேத-வைதீக மார்க்கத்தைப் பாது காத்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்டனர்.

அத்வைத தரிசனத்தின் தலைவராகிய வித்தியாரண்யரும் துவைத தரிசனத்தின் தலைவராகிய அக்ஷோபய முனிவர் என் பவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களாகச் சிலர் கருதுவர். இவ் விருவரும் தங்களுடைய கொள்கைகளாகிய மாயை, தத்துவம் என்ற விஷயங்களைப் பற்றி விஜயநகர அரசர் மூலமாக ஸ்ரீரங்கத் திலிருந்த வேதாந்த தேசிகருக்கு விண்ணப்பம் செய்தனர் என்றும்

*Epigraphia Indica. Vol. 6. No. 33. P. 330.

விசிஷ்டாத்வைதத் தலைவரான வேதாந்த தேசிகர் அக்ஷோபய முனிவர் பக்கலில் தீர்ப்பளித்தார் என்றும் ஒரு செய்தி வழங்கு கிறது. இவ்வித மாறுபட்ட கொள்கைகள் பரவியிருந்த போதிலும் சமயத் தலைவர்கள் பலர் விஜயநகரத்தரசர்களுடன் ஒத்துழைத்தனர். எடுத்துக்காட்டாக முதலாம் புக்கருக்கும் இரண்டாம் ஹரிஹரருக்கும் உதவியாக இருந்து விஜயநகரத்தை அமைப்பதற்கு வித்தியாரண்யர் உதவி செய்தார்.

விஜயநகர மக்களின் சமயங்கள் :

1. **சுமார்த்தர்கள் :** விஜயநகரப்பேரரசில் வாழ்ந்த பெரும் பான்மையான மக்கள் ஸ்மிருதிகளைப் பின்பற்றிய சுமார்த்த - சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களாவர். கணபதி, சிவன், அம்பிகை, விஷ்ணு, சூரியன் என்ற பல தெய்வங்களை வணங்கினர். முருகனுடைய வணக்கத்தையும் சேர்த்து அறு வகைச் சமயங்கள் என்ற பெயர் வழங்கியது. வேதங்களில் சொல்லப்பட்ட சடங்குகளையும், யாகங்கள் செய்வதையும், வருணாசிரம முறையையும் இவர்கள் பின்பற்றினர். ஆதி சங்கரரால் போதிக்கப்பட்ட அத்வைத மெய்ஞ்ஞானத்தில் (Philosophy) பற்றுக் கொண்டிருந்தனர். புஷ்பகிரி, விருபாட்சம், சிருங்கேரி, காஞ்சிபுரம் முதலிய இடங்களிலிருந்த சங்கர மடங்களில் ஸ்மார்த்தக் கொள்கைகளும், அத்துவித (அத்வைத) மெய்ஞ் ஞானமும் போதிக்கப்பட்டன. அத்வைத கொள்கைகளைப் பின் பற்றிய வித்தியாரண்யருக்கும், துவைதக் கொள்கைகளைப் பின் பற்றிய அக்ஷோபய முனிவருக்கும் நடந்த வாக்குவாதத்தைப் பற்றி முன்னரே கேள்விப் பட்டோம். பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் அப்பய்ய தீட்சிதர் என்ற அத்வைதக் கொள்கை யினர் வாழ்ந்து, கும்பகோணத்திலிருந்த விஜயேந்திர தீர்த்தர் என்ற மத்வ சமயத் தலைவருடன் சொற்போர் நடத்தியதாக நாம் அறிகிறோம்.

2. **சைவ சமயம் :** சைவ சமயத்தைப் பின்பற்றியவர்களில் பாசுபதர், காளாமுகர் என்ற இரு பிரிவினரிருந்தனர். பாசுபதர் என்பவர் சைவ ஆகமங்களை அனுமானமாகக் கொண்ட போதிலும் வேதங்களைத் தள்ளிவிட வில்லை. இவர்களுள் வைதிகப் பாசுபதர், அவைதிகப் பாசுபதர் என இரு பிரிவினர் இருந்தனர். தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாசுபதர்கள் பரவி யிருந்தனராகத் தெரிகிறது.

விஜயநகர ஆட்சியின் தொடக்கத்தில் காளாமுகச் சைவம் பரவி யிருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் உருத்திரரை முழுமுதற்

*Epigraphia Carnatica. IV. yd. 46.

கடவுளாகக் கொண்டு, பதி, பசு, பாசம் என்ற மூவகைச் சைவ சித்தாந்தக் கொள்கைகளை நம்பினர். வேதங்களில் விதிக்கப் பட்டபடி நடப்பதிலும், வருணசிரம முறைப்படி வாழ்க்கை நடத்துவதிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். திருவானைக் காவில் மடம் ஒன்றைப் பாசுபத கிரகஸ்தர்கள் நடத்திய தாக அறிகிறோம். பாசுபதர், காளாமுகர் ஆகிய இரு பிரிவினர் களுக்கும் தனித்தனியே தலைவர்களும், குருமார்களும் இருந்தனர். சங்கம வமிசத்து அரசர்களில் பலர் காளாமுகச் சைவத்தை ஆதரித்தனர். காளாமுகப் பிரிவைச் சேர்ந்த கிரியாசக்திப் பண்டிதர் என்பவர், சங்கம வமிசத்து அரசர்களுக்குக் குல குருவாக அமர்ந்திருந்தார்.

3. வீர சைவம் : காலச்சூரி வமிச அரசன் விச்சவனுடைய அமைச்சர் வசவண்ணர் அல்லது பசவர் என்பவரால் இச் சமயம் போதிக்கப் பட்டது. வீர சைவர்கள் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்களாக இலிங்க வணக்கம் செய்து, வெள்ளிப் பேழை ஒன்றில் சிவலிங்கத்தை வைத்துக் கழுத்திலிருந்து மார்பில் தொங் கும்படி கட்டிக் கொள்ளுவர். வடமொழி வேதங்களைப் பிரமாண மென ஒப்புக் கொள்ளாமல், வேதத்தில் விதிக்கப்பட்ட கருமாக் களையும் சடங்குகளையும் வெறுத்து ஒதுக்கினர். இவர்கள் மறு பிறவி யுண்டு என்பதையும் மறுப்பர்; இளமை மணத்தை ஒதுக்கி, விதவைகளை மறுமணம் செய்வதிலும் ஆர்வம் கொண்டனர். இரண்டாம் தேவராயர் வீர சைவ சமயத்தை ஆதரித்து வீர சைவமா சம்பன்னர் என்ற விருதை மேற் கொண்டார். சென்ன பசவ புராணம் என்னும் கன்னட நூலில் இலிங்காயத்துக் குரு மார்களை இரண்டாம் தேவராயர் ஆதரித்தார் என்று கூறப்பட்டு இருக்கிறது. இன்றும் கர்நாடக இராச்சியத்தில் வியாபாரத் திலும், உழவுத் தொழிலிலும் ஈடுபட்டுள்ள பெரும்பகுதியான மக்கள் வீர சைவக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர்.

சைவ சித்தாந்தம் : 'சைவ சித்தாந்தம்' சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கையாகும். பதி, பசு, பாசம் என்ற மூன்று உண்மைகளைப்பற்றி மெய்கண்டதேவர் சிவஞான போதம் என்ற நூலில் கூறியுள்ளார். இதை ஒரு சமயம் என்று கூறுவதைவிடத் தத்துவம் என்பதே பொருத்த மாகும். மெய்கண்ட தேவருக்குப் பிறகு அருள்நந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமா பதி சிவாசாரியார் என்பவர்கள் இந்தச் சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பரவச் செய்தனர். சைவ சித்தாந்தம் இருபத் தெட்டுச் சைவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பதி, பசு, பாசம் ஆகிய மூவகை உண்மைகளை விளக்கி உண்மை

யான பக்தியினுலேதான் பிறவிப் பிணியை நீக்க முடியும் என்றும் கூறுகிறது.

சிவாத்துவிதம் : இக் கொள்கையில் பிரம்மம் என்ருல் என்ன வென்று விவரமாகக் கூறப்பட்டுள்ளது. பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்டது பிரம்மம். இக் கொள்கையைப் பதினேந்தாம் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் என்பவர் போதித்தார். இவரால் எழுதப்பட்ட சைவபாஷ்யம் என்ற நூலுக்கு அப்பய்ய தீட்சிதரால் எழுதப்பட்ட சிவார்க்கமணி தீபிகை என்ற உரை நூல் உள்ளது.

வைணவ சமயம் - தென்கலை, வடகலைப் பிரிவுகள் :

சைவமும், வைணவமும் இந்து சமயத்தின் இரு கண்கள் போலக் கருதப் பெறுகின்றன. விஜயநகர ஆட்சியில் தென்னிந்தியாவில் இவ் விரு சமயங்களும் மக்களிடையே பெருமளவில் பரவின. விசிஷ்டாத்வைதக் கொள்கையின் தலைவராகக் கருதப்படும் இராமானுஜர் காலமுதற்கொண்டு வைணவ சமயம் பாமர மக்களிடையேயும் பரவத் தொடங்கியது. தெய்வ பக்தியிலும், நன்னடத்தையிலும் வைணவக் கொள்கைகளைப் பெரும்பாலான மக்கள் பின்பற்றத் தொடங்கினர். ஆனல், இராமானுஜருடைய மறைவிற்குப்பின் தோன்றிய வைணவத் தலைவர்கள் அவருடைய போதனைகளிலும், கொள்கைகளிலும் சில மாற்றங்களைத் தோற்றுவித்தனர்.

இராமானுஜருக்குப்பின் வைணவ சமயத்தில் வடகலை, தென்கலை என்ற இரு பெரும்பிரிவுகள் தோன்றின. இவ் விரண்டு பிரிவுகளின் கொள்கைகளும், வழிபாட்டு முறைகளும் சமூக ஆசாரங்களும் வேறுபடலாயின.

(1) வைணவர்கள் திருமாலை வழிபடும் பொழுது வடமொழியில் மந்திரங்களைச் சொல்ல வேண்டுமா, தமிழ்மொழியில் உள்ள ஆழ்வார்களுடைய திவ்யப் பிரபந்தங்களைக் கூற வேண்டுமா என்பது முதல் கொள்கை யாயிற்று. இராமானுஜர் இவ் விரு மொழிகளுக்குள் எவ் வித வேற்றுமையும் பாராட்டாது போயினும் அவருக்குப் பின்வந்தோர் இம் மொழிப் பிரச்சனையில் மிகுந்த வேற்றுமை பாராட்டினர். வடமொழியிலுள்ள வேதங்களில் காணப்படும் சுலோகங்களையே திருமாலை வழிபடும்போது கூறவேண்டுமென வாதிட்டவர்கள் வடகலையார் எனப் பெயர் பெற்றனர். ஆழ்வார்களின் நிறைமொழியாகிய திவ்யப்பிரபந்தப் பாசுரங்கள் வடமொழிச் சுலோகங்களுக்கு எவ்வாற்றலும் குறை

பாடு உள்ளவை அல்ல என்றும், வடமொழியைப் பயிலாதவர் களும், பயின்றவர்களும் ஒருசேர உணர்ந்து அனுபவிக்கக்கூடிய பாசுரங்களைப் பாடி, இறைவனை வணங்குவதில் எவ் விதமான தாழ்மை உணர்ச்சியும் வேண்டுவ தில்லை என்றும் சிலர் கூறினர். திருமாலுக்கு மொழி வேற்றுமையும், இன வேற்றுமையு மில்லை எனவும் சாதித்தவர்கள் தென்கலையார் எனப் பெயர் பெற்றனர். வேதாந்தக் கொள்கைகளும், தருக்க நியாயங்களும் தமிழிலும் உண்டு எனவும் நம்பினர். வடகலையார் தமிழை வெறுக்க வில்லை. எடுத்துக்காட்டாக வடகலைச் சம்பிரதாயத்தின் தலைவர் என்று கருதப்பட்ட வேதாந்த தேசிகர் தமிழிலும் பல நூல்களை இயற்றி யுள்ளார். ஆனால், தென்கலையார் இவ் விதச் சலிப்புத் தன்மையைக் கொள்ள வில்லை.

(2) மேற்கூறப்பட்ட இவ் விரு பிரிவினர்க ளிடையே மற்றொரு முக்கிய வேற்றுமையும் தோன்றியது. ஆழ்வார்கள் இறைவனுடைய திருவடியை அடைவதற்குப் பிரபத்தி அல்லது சரணாகதி என்ற கொள்கையை ஆதரித்தனர். 'என் செயலால் ஆவது இனியொன்று மில்லை, எல்லாம் உன் செயலே' என்று உணர்ந்து தன்முனைப்பு நீங்கி இறைவனை வணங்குவது சரணா கதியின் சாரமாகும்.

வைணவ வேதாந்தியாகிய இராமானுஜர், சரணாகதியின் பெருமையை உணர்ந்து வேதாந்த சூத்திரங்களுக்கும், உப நிஷத்துகளுக்கும் உரைகள் வரைந்துள்ளார். ஆனால், இராமா னுஜருக்குப் பின்வந்தோர், இந்தச் சரணாகதித் தத்துவத்தின் உட் கருத்துகளை இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றவாறு மாற்றி யமைக்கலாயினர். தனக்குவமை இல்லாதான் தாள் சேர் வதற்குச் சொந்த முயற்சியையே முதலில் மேற்கொள்ள வேண்டு மென்றும், அம் முயற்சியின் திறத்தைச் சீர்தூக்கியே இறைவன் அருள் புரிவான் என்றும் சொந்த முயற்சிகள் சிறிதும் இல்லாதவர்கள் இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகிப் பிறவிப் பிணியை அறுப்பது இயலாத காரியம் என்றும் வட கலையார் கருதினர். ஆனால், தென்கலையார் இறைவனுடைய அருளைப் பெறுவதற்குச் சொந்த முயற்சியே வேண்டுவ தில்லை என்றும், இறையருள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருப்பதால் வானம் தானே மழை பொழிவது போல் அதுவே வந்து நம்மைக் காக்கும் என்றும். அதற்குத் தன் முனைப்பை விட்டு இறைவன் எது செய்யினும் செய்க என்று வாளா இருப்பதே அறிவுடைமை யாகும் என்றும் கருதினர்.

இவ்விரு கொள்கைகளுக்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் கூறப்பட்டன. 'தாய்க்குரங்கு தன்னுடைய குட்டியுடன் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்குப் பாயும் பொழுது, அந்தக் குட்டி தாயின் வயிற்றை இறுகப் பிடித்துக் கொள்ளுகிறது. கீழே விழுந்து விடாமல் இருப்பதற்குக் குட்டியே தகுந்த பாது காப்பைச் செய்து கொள்ளுகிறது. அதுபோல் இறைவனுடைய திருவடிகளை அடைவதற்கு நாமும் முயற்சி செய்தால் ஒழியப் பிறவிக்கடலைக் கடக்க முடியாது'. இக் கொள்கைக்கு 'மார்க்கட நியாயம்' அதாவது குரங்கு மார்க்கம் என்பது பெயர். இதை நம்பிய வடகலை வைணவர்கள் மார்க்கட நியாய வாதிகள் அல்லது குரங்கு மார்க்க வைணவர்கள் எனப் பெயர் பெற்றனர். தென்கலை வைணவர்களோ, 'மார்ச் சால' அல்லது பூனை நியாய வாதிகள் என அழைக்கப்பட்டனர். ஏனெனில், தன்னுடைய குட்டிகளைப் பாதுகாப்பதற்குத் தாய்ப் பூனை அவற்றைத் தன்னுடைய வாயில் கௌவி வேறிடங்களுக்குத் தூக்கிச் செல்வது போன்று, இறைவன் தன்னுடைய பேரருளினால் தன்னுடைய பக்தர்களைப் பரமபதத்திற்கு அழைத்துச் செல்வான் என்று இவர்கள் நம்பினர். இதனால், தென்கலை வைணவர்களுக்குப் 'பூனை வைணவர்கள்' என்ற பரிகாசப் பெயரும் வழங்கியது.

(3) வடகலை, தென்கலை வைணவர்களுடைய 'பாவச் செயல்' என்ற சொற்றொடருக்கு இருவிதப் பொருள்கள் கூறப்பட்டன. பாவம் செய்தவர்களைக் காப்பாற்றும்படி அம்மையாகிய இலக்குமி தேவி திருமாலிடம் எப்பொழுதும் வேண்டிக் கொண்டு இருப்பா ளென்றும், அவருடைய திருவருளினால் பாவம் செய்த உயிர்களை இறைவன் மன்னித்து விடுவான் என்றும் தென்கலையார் நம்பினர். ஆனால், வடகலையார், பாவம் செய்த உயிர்களை மன்னிப்பது இறைவனால் முடியா தென்றும், அவரவர்களுடைய கருமத்திற்கு ஏற்றவாறுதான் தெய்வீகத் தண்டனையோ, அருளோ கிடைக்கும் என்றும் நம்பினர்.

(4) திருமாலின் துணைவியாகிய இலக்குமி தேவியின் நிலைமையைப் பற்றியும் இரு வேறு கருத்துகள் நிலைபெற்றன. இலக்குமி தேவியும், ஸ்ரீமன் நாராயணனும் இருவர் எனக் கருதாமல் சக்தி - சிவம் என்ற இரண்டும் ஒன்றே எனக் கருதினர் வடகலையார். தென்கலையார்களோ இலக்குமியின் நிலை திருமாலின் உருவத்தோடு ஒன்றுபட்ட தில்லை என்றும், திருமாலின் கருத்தறிந்து பணிபுரியும் அடியாளாகக் கருதப் படவேண்டுமே யொழியத் தனக்கெனத் தனிப்பட்ட அதிகாரம் அவருக்கு இல்லை என்றும் கருதினர்.

(5) பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்றும், உயர்ந்த சாதியிற் பிறந்தவர்களும் தாழ்ந்த வகுப்பிற் பிறந்தவர்களும் சரி நிகர் சமானமாகக் கருதப்படக் கூடாது என்றும் வடகலையார் நம்பினர். தென்கலையார்களோ, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', என்றும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களும் திருமாலுடைய மெய்யடியார்களாக இருந்தால் உயர்ந்தவர்களாவர் என்றும், உயர் குலத்தவர்களும் திருமால் பக்தியில்லாது போனால் தாழ்ந்தவர்களாவர் என்றும் கருதினர். ஒரு வைணவனுக்கு உபதேசம் செய்வதில் தாழ்ந்த குலத்தில் தோன்றியவர்களும் பங்கு கொள்ளலாம் என்றும் கருதினர். வடகலையார் இக் கருத்தைக் கண்டித்தனர்.

(6) புண்ணியத் தலங்களுக்குச் செல்வதன் நன்மையை வடகலையார் நம்பினர். ஆனால், தென்கலையார் புண்ணியத் தலங்களுக்குச் செல்ல வேண்டுவ தில்லை எனக் கூறினர். சிரார்த்த தினங்களில் பிறருக்கு உணவளிப்பதிலும் இருவருக்கும் வேற்றுமைகள் இருந்தன. பசுவதை செய்து யாகங்கள் செய்வதைத் தென்கலையார் வெறுத்தனர். வடகலையார் பாதம் வையாத நாமத்தையும், தென்கலையார் பாதம் வைத்த நாமத்தையும் தங்கள் நெற்றிகளில் அணிந்து கொண்டனர். வடகலையார் விதவைகளுக்குச் சிகை நீக்கம் செய்வது அவசியம் எனக் கருதினர். தென்கலையார் இதை ஒப்புக் கொள்ள வில்லை. திருமாலுக்கு வழிபாடு செய்யும் பொழுது தென்கலையார் மணியடிப்ப தில்லை. வடகலையார் மணியடித்துப் பூஜை செய்தனர். ஒருவருக் கொருவர் வணக்கம் செலுத்துவதிலும் இவ் விரு பிரிவினர்களிடையே பல வேற்றுமைகள் தோன்றின.

வேதாந்த தேசிகர் :

பதினான்காம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வேதாந்த தேசிகர் வாழ்ந்தார். வருணாசிரம தருமத்தின்படி வைதீக சமயத்தைப் பாதுகாத்துப் பழமையைக் கைவிடாது சமய வாழ்க்கை நடத்த வேண்டு மெனப் போதித்தார். இராமானுஜர் போதித்த உண்மைகளையும், கொள்கைகளையும் வைணவர்கள் கடைப்பிடிக்க வேண்டு மென நிச்சயம் செய்து வடகலைச் சம்பிரதாயங்களைப் பாதுகாக்க முயன்றார். வேதாந்ததேசிகருக்குப்பின் அவருடைய மகன் வரதாச்சாரியார் அல்லது நைனர் ஆச்சாரியர் என்பவரும் தம்முடைய தகப்பனுடைய கொள்கைகளை நிலைநாட்டி வந்தார்.

திருவரங்கத்தில் வாழ்ந்த பிள்ளை லோகாச்சாரியாரும், அவருக்குப்பின் ஆழ்வார் திருநகரில் தோன்றிய மணவாள

மகாமுனியும் தென்கலைச் சம்பிரதாயத்தைப் போற்றி வளர்த்தனர். 1370 முதல் 1444 வரை மணவாள மகாமுனிவர் வாழ்ந்தார் எனக் கருதப்படுகிறது. இப் பெரியார் தென்கலை வைணவத்தைப் பாதுகாக்கவும் பரவச் செய்யவும் எண் வகை மடாலயங்களைத் தமிழ்நாட்டில் அமைத்ததாக நாம் அறிகிறோம். வடகலைப் பிரிவைவிடத் தென்கலைப் பிரிவின் கொள்கைகளும், அக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்களும் தமிழ்நாட்டில் பெரும் பான்மையராக இருப்பது அறியத் தக்கது.

வல்லபர் இயக்கம் :

வைணவ சமயத்தில் வல்லபாச்சாரியாரால் தோற்றுவிக்கப் பட்ட வல்லபர் இயக்கமும் விஜயநகரப் பேரரசில் ஓங்கி வளர்ந்தது. கிருஷ்ண பகவானுடைய அவதாரமாகக் கருதப் பட்ட வல்லபர், விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்றும், அவருடைய அவதாரமான கிருஷ்ண பகவானே இராதையின் கணவனாகவும், ஆசை நாயகனாகவும் வழிபட வேண்டு மெனவும் போதித்தார். படடினி கிடந்தும், ஐம்புலன்களை அடக்கியும் கிருஷ்ணனை வழிபடாமல் சகலவிதமான போகங்களையும் அனுபவித்து ஆடிப்பாடிப் பஜனை செய்து வழிபடுதல் சிறந்த வழிபாட்டு முறையாகும் எனக் கருதினர். வல்லபாச்சாரியாரை விஜயநகர அரண்மனைக்குக் கிருஷ்ண தேவராயர் வருந்தி அழைத்ததாகவும் அதன்படி அவர் அங்கே மத்வ சமய ஆச்சாரி யராகிய வியாசராய தீர்த்தருடன் சொற்போர் நடத்தியதாகவும் ஒரு செய்தி உலவுகின்றது. வியாசராய தீர்த்தருடன் செய்த வாதத்தில் வல்லபாச்சாரியார் வெற்றி பெற்றமைக்காகக் கிருஷ்ணதேவராயர் அவருக்குக் கனகாபிஷேகம் செய்ததாகவும் நாம் கேள்விப்படுகிறோம். பின்னர் வல்லபாச்சாரியார் இந்தியா முழுவதும் பயணம் செய்து, வாரணாசியில் தங்கிப் பதினேழு சமய-தத்துவ நூல்களை இயற்றியதாகச் செய்திகள் உலவுகின்றன. வல்லபர் மார்க்கத்தைப் பின்பற்றும் வைணவர்கள் பம்பாய் நகரத்திலும், கூர்ஜர தேசத்திலும், தமிழ் நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்தில் சில பகுதிகளிலும் காணப்படுகின்றனர். மகாராசர் கள் என்ற பெயருள்ள இல்லற வாசிகள் வல்லப இயக்கத்தைச் சேர்ந்த வைணவர்களுக்குக் குருமார்களாகச் சேவை செய் கின்றனர். இவர்கள் தெலுங்குப் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் களாவர். வல்லபருக்குப் பின்வந்த தலைவர்கள் இந்த இயக்கத்தை இன்ப வாழ்வின் உறைவிடமாகக் கருதிச் சிற்றின்பத்தை மிகைப் படுத்தி இயக்கத்தின் பெருமையைக் கெடுத்து விட்டனர்.

மத்வ சமயம்

பதின்மூன்றும் நூற்றாண்டில் துவைதக் கொள்கையை நிலை நாட்டிய மத்வாச்சாரியாரால் தோற்றுவிக்கப்பட்ட இச்சமயமும் விஜயநகரப் பேரரசில் நிலவியது. மத்வாச்சாரியாருக்குப் பின் பதுமநாப தீர்த்தர் என்பார் பாதராய மடத்தின் தலைவராகப் பதவி வகித்தார். இந்த மடத்தின் சிறப்பு மிக்க தலைவராக விளங்கிய ஸ்ரீபாதராயர் என்பவர் சாளுவ நரசிம்மருடைய சம காலத்தவர் ஆவார். மத்வாச்சாரியாரால் அமைக்கப்பட்ட உத்தராதி மடத்திற்கு மாதவ தீர்த்தரும், அக்ஷோபய தீர்த்தரும் தலைமை வகித்தனர். அக்ஷோபய தீர்த்தர் வித்தியாரண்யருடைய சம காலத்தவர் ஆவார். தருக்க நூல்களில் வல்லவர்களான ஜெயதீர்த்தர், இராசேந்திர தீர்த்தர் என்ற இருவரும் அக்ஷோபய முனிவரின் சீடர்களாவார்.

கிருஷ்ண தேவராயர் காலத்திய வியாசராயர் என்ற மத்வ சமயத் தலைவர் மிக்க சிறப்பு வாய்ந்தவராவார். மத்வ சமயக் கொள்கைகளைப் பரவச் செய்வதற்கு எட்டு மடாலயங்களை அமைத்ததாக நாம் கேள்விப்படுகிறோம். மைசூர் நாட்டில் பன்னூர் என்னு மிடத்தில் பிறந்த வியாசராயர், பிரமண்ய தீர்த்தர் என்பவரால் மத்வசமயத்தைச் சார்ந்த சந்நியாச வாழ்க்கையில் ஈடுபடுத்படி செய்யப்பட்டார். வேதாந்த சாஸ்திரங்களையும், தருக்க நூல்களையும் நன்கு கற்றுணர்ந்து துவைத சம்பிரதாயத்தைப்பற்றிப் பல அரிய நூல்களை எழுதியுள்ளார். தாத்பர்ய சந்திரிகா, தருக்க தாண்டவம், நியாயாமிர்தம் என்ற நூல்களுக்கு வியாசத்திரயம் என்ற பெயர் வழங்குகிறது. அத்வைத - துவைதக் கட்சி வாதத்திற்கு இவருடைய நூல்கள் வித்திட்டன எனச் சிலர் கருதுவர். வைணவ சித்தாந்த பிரதிஷ்டாபனச்சாரியர் என்றும் அவர் அழைக்கப்பட்டார்.

கிருஷ்ண தேவராயருடன் நெருக்கமாகப் பழகிய பெரியார் களுள் வியாசராயரும் ஒருவர் ஆவார். விஜய நகரத்திலிருந்த சோதிடர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் கிருஷ்ண தேவராயர் அரியணையில் அமர்ந்திருந்தால் பேரரசிற்குப் பெரிய இடைஞ்சல் தோன்று மெனக் கூறினர். அன்று வியாச ராயரை அரியணையில் அமர்த்தித் தாம் விலகி யிருக்கக் கிருஷ்ணதேவர் சம்மதித்து அவ் விதமே செய்தார். இதனால், பேரரசிற்குத் தோன்ற இருந்த ஆபத்து நீங்கிய தென்றும், வியாசராயருக்குக் 'கருநாடகச் சிம்மாசனாதீஸ்வரர்' என்ற பெயர் வழங்கிய தென்றும் கூறப் படுகிறது. வியாசராயருக்குப் பிரமதேய மாகப் பல கிராமங்கள் வழங்கப் பட்டன.

கிருஷ்ண தேவராயருடைய சபையில் வல்லபாச்சாரி யருக்கும், அவருடைய எதிரிகளுக்கும் நடந்த வாக்குவாதப் போரில் வியாசராயர் தலைமை வகித்துத் தீர்ப்பு வழங்கியதாகச் சம்பரதாய குலதீபிகை என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. கடாதரப் பட்டர், பக்ஷாதர மிஸ்ரர், பசவப் பட்டர் என்ற மத்வ சமயத் தலைவர்களும் வியாசராயருடைய தலைமையை ஒப்புக் கொண்ட னர். கிருஷ்ண தேவராயர் இவருக்கு இரத்தினபிஷேகமும் செய்ததாகக் கேள்வி யுறுகிறோம். ஹம்பியில் இயந்திரோத்தர ஹனுமான் உருவத்தை வியாசராயர் அமைத்த பிறகு விஜயநகரப் பேரரசில் ஆஞ்சநேய வணக்கம் 732 இடங்களில் பரவிய தெனத் தெரிகிறது. வியாசராயர் மத்வாச்சாரியாருடைய கொள்கை களைக் கீர்த்தனைகள், பஜனைகள், காலட்சேபங்கள் மூலமாக விஜய நகரப் பேரரசு எங்கணும் பரவச் செய்தார். இவருடைய பெருமையைக் கேள்வியுற்ற வதிராஜ புரந்தரதாசரும், கனக தாசரும் விஜயநகரத்திற்கு வந்து இவரைக் கௌரவப்படுத்தினர். வியாசராயர் விஜயநகரத்தில் உயிர் நீத்ததால் அவருடைய சமாதி ஆனேகுந்திக்குக் கீழே நவபிருந்தாவனம் என்ற துங்க பத்திரை நதியிலுள்ள ஒரு தீவில் அமைக்கப் பட்டுள்ளது.

அப்பய்ய தீட்சதரின் சம காலத்தவராகிய விஜயேந்திர தீர்த்தரும் சிறந்த மத்வப் பெரியாராவார். இவர் தம்முடைய இறுதி நாள்களைத் திருக்குடந்தையில் கழித்ததாக நாம் அறிகிறோம்.

21. புறச்சமயங்களின் வரலாறு

சமணமும் பௌத்தமும்

விஜயநகரப் பேரரசின் வடக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் சமணசமயத்தைச் சார்ந்தவர்கள் செல்வாக்குடன் வாழ்ந்தனர். விஜயநகரப் பேரரசர்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களாகையால் தங்களுடைய ஆட்சியில் வசித்த எல்லாச் சமயத்தவர்களையும் சமயப் பொறையுடன் நடத்தினர். முதலாம் புக்கருடைய ஆட்சிக் காலத்தில் 1368ஆம் ஆண்டில் சமணர்களுக்கும், வைணவர்களுக்கும் சமய வேற்றுமை காரணமாகப் பெரிய சச்சரவு தோன்றியது. முதலாம் புக்கர் இரு சமயத் தலைவர்களையும் அழைத்து அவர்களுக்குள் தோன்றிய வேற்றுமையை அமைதியான முறையில் தீர்த்து வைத்தார். திருவரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம், மேலைக் கோட்டை முதலிய வைணவத் தலங்களில் வாழ்ந்த ஆச்சாரியார்களையும், சமணத் தலைவர்களையும் அழைத்துப் பின்வருமாறு சமாதானம் செய்து வைத்தார். 'சமண சமயத்தவர்கள், எப்பொழுதும் போல ஐவகையான இசைக்கருவிகளுக்கும், கும்பகலசத்திற்கும் உரிமையுடையவர்களாவர். வைணவர்களால் சமணர்களுக்கு நேரிடும் இன்ப துன்பங்களைத் தங்களுடைய இன்ப துன்பங்களைப் போலவே கருத வேண்டும். சமணர்கள் வைணவர்களுக்கு இழைக்கும் இன்ப துன்பங்களும் அவ்விதமே கருதப் பெறுதல் வேண்டும். நாட்டில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் கல்வெட்டுகளில் இந்த உடன்பாட்டுச் செய்தி வரையப்பட வேண்டும். சூரிய சந்திரர் உள்ள வரையில் வைணவர்கள் சமணர்களைக் காப்பாற்ற வேண்டும். வைணவர்களும், சமணர்களும் ஒரே கடவுளால் படைக்கப்பட்ட மக்கள்தான் என்பதை எல்லோரும் உணர வேண்டும். திருப்பதி தாத்தய்யா அவர்கள் நாட்டிலுள்ள சமண இல்லற வாசிகளிடமிருந்து வசூல் செய்யும் தொகையைக் கொண்டு சிராவண பெல்கோலா கோமதீஸ்வரர் சிலையைக் காவல் புரிவதற்கு இருபது மெய்க் காப்பாளர்களை நியமனம் செய்ய வேண்டும். சீர்குலைந்துள்ள மற்றச் சமணக் கோவில்களையும் சீர்திருத்த வேண்டும். மேற்கூறப்பட்ட விதிகளுக்கு மாறுக நடப்பவர்கள், அரசனுக்கும், சங்கத்திற்கும், சமுதாயத்

திற்கும் துரோகிகளாவர்.'* மேற்கூறப்பட்ட கல்வெட்டின் தொடக்கத்தில் வைணவ ஆசாரியர் ஆகிய இராமானுஜருக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் திருநறுங்கொன்றை என்னு மிடத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் அம்மலையின் மீது அப்பாண்டார் சமணக் கோவில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் ஹரிஹர தேவராயருடைய அமைச்சர் இருகப்ப தண்டநாதர் சமண சமயத்தைச் சேர்ந்தவராவார். அவர் ஹம்பியிலுள்ள கணிகிட்டிச் சமணக் கோவிலையும், குத்தியிலுள்ள பார்சவ ஜின்னுடைய கோவிலையும் அமைத்தவராவார். காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருப்பருத்திக் குன்றம் என்ற சமணக் குடியிருப்பையும், கோவிலையும் அமைத்து அக் கோவிலுக்கு எதிரே ஓர் இசை மண்டபத்தையும் அமைத்துள்ளார். தம்முடைய குருவாகிய புஷ்பசேனர் என்பவரின் சொற்படி திரைலோகிக்ய நாதர் கோவிலுக்குச் சில நிலங்களைப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்துள்ளார். 1412ஆம் ஆண்டில் முதலாம் தேவராயருடைய மகன் ஹரிஹரன் என்பவன் விஜயமங்கலத்திலுள்ள சந்திரநாத பாசதி என்னும் சமணக் கோவிலுக்குச் சில நிலங்களைத் தானம் செய்து உள்ளார். விஜயநகரத்தில் காணப்பெறும் ஒரு கல்வெட்டில் பல சமண ஆசாரியர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அவர்களில் ஒருவர் கந்தனபோல் அல்லது கார்நூல் என்ற இடத்தில் சமண சைத்தியம் ஒன்றை அமைத்துள்ளார். விஜயநகரத்தில் வெற்றிலை பாக்குக் கடைத் தெருவில் அருகர் பார்சவநாதருக்கு ஒரு சுற்கோவிலை இரண்டாம் தேவராயர் அமைத்து உள்ளார். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள குன்றத்தூரில் அருக தேவருக்குக் கோவில் அமைக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது. 1463ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மீது படையெடுத்துவந்த ஒட்டியர்களால் அழிக்கப்பட்ட பல ஜினாலயங்களைச் சாளுவ நரசிம்மர் செம்மைப் படுத்தியுள்ளார். கிருஷ்ண தேவராயர் காலத்திலும், அதற்குப் பின்னரும் தமிழ்நாட்டிலும், பேரரசின் மற்றப் பகுதிகளிலும் சமணப் பெரியார்கள் பலர் வாழ்ந்துள்ளனர். தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திருநறுங்கொன்றையில் வடமொழியிலும், தமிழிலும் வல்ல குணபத்திர முனிவர் என்ற வித்தகர் வாழ்ந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. வீரசங்க பிரதிஷ்டாச்சாரியர் என்ற பெயரிலிருந்து அவர் ஒரு சமண சங்கத்தை அமைத்திருந்தார் எனக் கருதலாம்.

புஜபல வீர நரசிம்ம ராயருடைய ஆட்சியில் தாங்க முடியாத வரிச்சுமையால் வீரராசேந்திர சோழப் பெரும்பள்ளியைச்

*Epigraphia Carnatica. 11.Sb. 344.

சேர்ந்த பள்ளிச்சந்த நிலங்கள் பயிரிடப்படாமல் கிடந்தன. கிருஷ்ண தேவராயர் அரியணையிலமர்ந்த பிறகு சந்திரகிரி, படை வீடு இராச்சியங்களிலிருந்த தேவதான, சமண, பௌத்தப் பள்ளி களைச் சேர்ந்த நிலங்களுக்கு அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய வரிகளை நீக்கித் தேவதான இறையிலி நிலங்களாக மாற்றினர். காஞ்சியிலிருந்த திரைலோக்கிய நாதர் கோவிலும், சண்பை அனுமந்தக்குடி, கரந்தை, நாகர்கோவில் முதலிய இடங்களில் இருந்த சமண ஆலயங்களும் பல தானங்களைப் பெற்றன. செங்கற்பட்டு, வடவார்க்காடு, தென்னர்க்காடு மாவட்டங் களில் பல சமண குடியிருப்புகள் இருந்தனவாகக் கல்வெட்டுகளில் இருந்து நாம் அறிகிறோம்.

காஞ்சிபுரத்திலும் நாகப்பட்டினத்திலும், மைசூர் நாட்டில் கலாவதி என்னும் ஊரிலும் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய வர்கள் இருந்தனராகத் தெரிகிறது. காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் காணப்படும் பௌத்தச் சிற்பங்களில் பல விஜயநகர ஆட்சிக் காலத்தில் செதுக்கப்பட்டவை என்றறிகிறோம். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நாவலூர்க் கிராமத்தில் கச்சிக்கு நாயக்கர் என்றழைக்கப்பட்ட பௌத்த விக்கிரகம் இருந்த பௌத்த விகாரத்திற்கு மேற்படி கிராமம் பள்ளிச் சந்தமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இச் செய்தியைக் கூறும் கல் வெட்டு இருக்கும் கல்லின் பின்புறத்தில் பௌத்த சமயச் சின்ன மான தருமச் சக்கரம் செதுக்கப்பட்டுள்ளது. ஜாவாத் தீவில் வாழ்ந்த பிரபஞ்சன் என்ற கவிஞர் எழுதிய நாககிரிதாமா என்ற நூலில் பௌத்த சமயத்தின் இருப்பிடமாகக் காஞ்சிபுரம் இருந்த தாய்க் கூறப்பட்டுள்ளது (1365).

காஞ்சிபுரத்தைப் போலவே, பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் நாகப்பட்டினமும் பௌத்த சமயத்தின் இருப்பிடமாகக் கூறப்படுகிறது. கலியாணபுரத்தில் கிடைக்கும் சில கல்வெட்டு களின்படி பெகுநாட்டிலிருந்து (பர்மா) சில பௌத்தச் சந்நியாசிகள் நாகப்பட்டினத்திற்கு வந்தனராகத் தெரிகிறது. 'கௌதம புத்தருடைய பல் எனக் கருதப்பட்ட ஒன்றை இலங்கைக்கு எடுத்துச் செல்லும் பொழுது நாகப்பட்டினத்தின் கடற்கரை யோரமாகச் சீன தேசத்து அரசனால் அமைக்கப் பெற்ற ஒரு கோவிலில் இருந்த புத்த விக்கிரகத்தை வணங்கிய பிறகு தண்ட குமாரனும், ஹேமமாலா என்பவரும் இலங்கைத் தீவிற்குச் சென்றனர்.' இந்தக் கோவிலுக்குச் சீனர் கோவில் என்றும் புது வெள்ளிக் கோபுரம் என்றும் பெயர்கள் வழங்கின. கும்பகோணத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் திருவிளாந் துறை என்னுமிடத்தில் பௌத்தக் கோவில் இருந்ததாகக் கூறப்

பட்டுள்ளது. திருக்குடந்தையிலுள்ள பிள்ளையார் கோவில் ஒன்றிலும் திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம் முதலிய இடங்களிலும் புத்த விக்கிரகங்கள் இருந்தனவாகத் தெரிகின்றன. 1510ஆம் ஆண்டில் சைதன்ய மகாப்பிரபு தென்னிந்தியாவில் பிரயாணம் செய்த பொழுது ஆர்க்காட்டில் பௌத்தர்களோடு சொற்போர் செய்ததாய்த் தெரிகிறது.

விஜயநகர ஆட்சியில் கருநாடகப் பிரதேசத்திலும் பௌத்தம் பரவியிருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. 1397ஆம் ஆண்டில் எழுதப் பெற்றுப் பேலூர் தாலுக்காவில் காணப்படும் கல் வெட்டில் அந் நாட்டுத் தலைவர் கேசவன் என்பவர் பின்வருமாறு புகழப்படுகிறார். 'சைவர்கள் சிவன் என்றும் வேதாந்திகள் பிரம்மன் என்றும், பௌத்தர்கள் புத்தர் பெருமான் என்றும், நியாயவாதிகள் கர்த்தர் என்றும், சமணர்கள் அருகன்என்றும், மீமாம்சகர்கள் கர்மா என்றும் கேசவனைப் புகழ்ந்தனர்.' 1533ஆம் ஆண்டில் மைசூர் நாட்டிலுள்ள திப்தூர் வட்டத்தில் காணப்படும் கல்வெட்டு பைரவக் குன்றிற்கு அருகில் கலாவதி என்ற பௌத்தர் குடியிருப்பைப் பற்றிக் கூறுகிறது. இந்தக் கலாவதி என்னும் ஊர் கர்நூல் மாவட்டத்தில் இருக்கலாம் என்று அறிஞர் T. V. மகாலிங்கம் கூறுவர்.*

கிறித்தவமும், இஸ்லாமியமும் :

கி.பி. முதல் நூற்றாண்டில் தாமஸ் சுவாமிகள் (St. Thomas) தென்னிந்தியாவில் கிறித்தவ சமயத்தைப் போதித்ததாக ஒரு செய்தி நிலவுகிறது. கி.பி. 522ஆம் ஆண்டில் இந்தியாவிலும் இலங்கையிலும் பிரயாணம் செய்த ஆலக்சாந்திரியாவைச் சேர்ந்த காஸ்மாஸ் (Cosmos) என்பவர் கொல்லம், இலங்கை முதலிய இடங்களில் நெஸ்டோரியன் (Nestorian) கிறித்தவ சமயம் பரவியிருந்ததாகக் கூறுவார். கி.பி. 774இல் மலையாளத்தில் வாழ்ந்த கிறித்தவர்களுக்கு வழங்கப்பட்ட செப்பேடுகளில் தென்னிந்திய மக்கள் கிறித்தவ சமயத்தில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிகிறது. பின்னர் பாக்தாத், நினிவே, எருசலேம் முதலிய நாடுகளிலிருந்து பல கிறித்தவர்கள் மலையாள நாட்டில் வந்து குடியேறினர்*. சென்னையில் மயிலாப்பூரிலும், பரங்கி மலையிலும் (St. Thomas Mount) கிறித்தவர்கள் வாழ்ந்ததாகத் தெரிகிறது. 1293இல் தென் இந்தியாவிற்கு வந்த மார்க்கோபோலோ பரங்கிமலையில் தாமஸ் சுவாமியார் கொலையுண்ட செய்தியைப் பற்றிக் கூறுவார். பரங்கி மலையில்

*Dr. T.V.M. op. Citus Vol. II. P. 08.

*K.A.N. Sastri. op. Citus. P. 421.

தாமஸ் சுவாமியார் கோவிலைக் கிறித்தவர்களும், இந்துக்களும், இஸ்லாமியர்களும் புனித இடமாகக் கருதி வணக்கம் செலுத்தினர். மார்க்கோபோலோவிற்குப் பிறகு தென்னிந்தியாவிற்கு வந்த ஒடரிக் சாமியார் (Friar Odoric) பரங்கிமலைக் கோவிலில் பல விக்கிரகங்கள் இருந்தனவெனவும் நெஸ்டோரியக் (Nestorians) கிறித்தவர்களுடைய வீடுகள் பல பரங்கி மலையில் இருந்தன வெனவும் கூறுவார்.

பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற்கு வந்த நிகோலா - கான்டி என்பவர் மைலாப்பூரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெஸ்டோரிய வகுப்பினர் இருந்தனராகக் கூறுவார். இரண்டாம் தேவராயர் ஆட்சியில் 1445ஆம் ஆண்டில் விஜயநகரத்தில் ஒரு கிறித்தவர் திவான் பதவியில் அமர்ந்திருந்ததாக ஒரு செய்தி உலவுகிறது. ஆனால், தென்னிந்தியாவில் போர்த்துகீசியர்கள் வருகைக்குப் பின்னர்தான் இயேசு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவ (Jesuits) சமயத்தைத் தீவிரமாகப் போதிக்கலாயினர். 1534ஆம் ஆண்டில் முத்துக் குளிக்கும் கடற்கரையோரமாக வசித்த பரதவர்கள் கிறித்தவ சமயத்தில் சேர்க்கப்பட்டனர். முத்துக் குளிக்கும் தொழிலில் பரதவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் ஏற்பட்ட போட்டியினால் இஸ்லாமியர் பரதவர்களைத் துன்புறுத்தினர். பரதவர் கொச்சியில் இருந்த போர்ச்சுகீசியக் கிறித்தவத் தலைவர் பீரே-வாஸ்-டி-அமரால் (Pero-vaz-d Amaral) என்பவருடைய உதவியை நாடினர்; இஸ்லாமியருடைய கொடுங்கோன்மையில் இருந்து தங்களைக் காப்பாற்றினால் கிறித்தவ சமயத்தில் சேர்வதாக ஒப்புக்கொண்டனர்; ஆயிரக்கணக்கான பரதவர்கள் கிறித்தவ சமயத்தில் சேர்ந்தனர்.

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னிந்தியாவின்மீது படையெடுத்து வந்த இஸ்லாமியர்கள் இந்துக்களுடைய கோவில்களையும், மடங்களையும் கொள்ளையடித்தது மன்றி இந்து மக்களையும் தங்களுடைய சமயத்தில் சேருமாறு வற்புறுத்தியும் உள்ளனர். விஜயநகரப் பேரரசு அமைந்த பிறகு கோவில்களைக் கொள்ளையடிப்பதும், இஸ்லாமிய சமயத்தில் சேரும்படி வற்புறுத்துவதும் ஒருவாறு நின்றன. இஸ்லாமியருக்கும் இந்துக்களுக்கும் இடையே அமைதியான உறவு நிலைபெற்று அது இன்றளவும் நீடித்தும் வருகிறது. இரண்டாம் தேவராயர் விஜயநகரச் சேனையில் இஸ்லாமியக் குதிரை வீரர்களையும், வில் வீரர்களையும் சேர்த்துத் தம்முடைய சேனையைப் பலப்படுத்தியதை நாம் முன்னரே உணர்ந்தோம். 1430ஆம் ஆண்டுக் கல்வெட்டு

என்று விஜயநகரச் சேனையில் பதினாயிரம் துருக்கிக் குதிரைகள் சேவை செய்தன வெனக் குறிப்பிடுகிறது. மற்றொரு கல்வெட்டு அகமதுகான் என்ற இஸ்லாமியத் தலைவர் இரண்டாம் தேவராயருடைய சேனையில் பணியாற்றியதாகக் கூறுகிறது. விஜயநகரத்தில் தனியான ஒரு பகுதியில் முஸ்லீம்கள் வசித்ததாகப் பீயஸ் கூறுவார். கிருஷ்ணதேவராயர் இராய்ச்சூரின்மீது படையெடுத்துச் சென்ற பொழுது இஸ்லாமிய வீரர்களும் பங்கு கொண்டனர். 1537ஆம் ஆண்டில் முஸ்லீம்கள் தொழுகை நடத்துவதற்காக இந்து ஒருவர் மசூதி அமைத்துள்ளார்.

சதாசிவராயர் ஆட்சியில் பேரரசின் பாதுகாவலராகிய இராமராயர் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்களைத் தம்முடைய சேனையில் அமர்த்தி யிருந்தார். இஸ்லாமியப் படைத்தலைவர்கள் ஆமூர்கான், ஆயின்-உல் முல்க் என்ற இருவருக்கும் படைப் பற்றுகள் அளிக்கப்பட்டன. ஆயின்-உல்-முல்க், தில்வர்கான் என்ற இரண்டு இஸ்லாமியத் தலைவர்களைத் தம்முடைய சகோதரர்கள் போல இராமராயர் பாவித்தார். பாபா நாட்டார் இஸ்லாமியப் பெரியாரின் சமாதி ஒன்றற்கு விஜயநகர அரசர்கள் பல கிராமங்களைத் தானம் செய்துள்ளனர். தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகூர் தருக்கா, பிற்கால விஜயநகர ஆட்சியில் மேன்மை பெற்று விளங்கியது.

விஜயநகர அரசர்களின் சமயக் கொள்கை:

உயர்சமயங்களாகிய சைவம், வைணவம் ஆகிய இரண்டும் விஜயநகரப் பேரரசர்களால் ஆதரிக்கப் பெற்றன. பேரரசின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்த சங்கம, சாளுவ வமிசத்து அரசர்கள் சைவசமயத்தையும், அத்வைதக் கொள்கைகளையும் ஆதரித்தனர். துளுவர்களும், ஆரவீட்டு வமிசத்தவர்களும், வைணவக் கொள்கைகளையும், சைவ சமயத்தையும் வேற்றுமையின்றி ஆதரித்தனர்.

முதலிரண்டு ஹரிஹரதேவராயர்கள் காளாமுகம், பாசுபதம் என்ற இருவிதச் சைவக் கோட்பாடுகளையும் ஆதரித்தனர். இவ்விருவருக்கும் குலகுருவாக விளங்கிய காசிவிலாசகிரியா சக்திப் பண்டிதர் என்பவர் சிவபெருமானின் அவதாரம் எனக் கருதப் பட்டார். குமார கம்பண உடையாருக்குக் குலகுருவாக விளங்கியவரும் அவரே. சந்திரகுத்தி, அரகா கொங்கணம் முதலிய பகுதிகளுக்கு ஆளுநராக இருந்த மாதவ மந்திரி என்பவர், கிரியாசக்திப் பண்டிதரின் பெருமையை எடுத்துக் காட்டப் பெரியதொரு திருவிழாக் கொண்டாடினார். மாரம்

பன், மாதவன் என்ற இருவர் சைவாகம சாரசங்கிரகம் என்ற நூலை மாதவ மந்திரியின் விருப்பப்படி எழுதியுள்ளனர். மாதவ மந்திரியும் சூதசம்ஹிதை என்ற நூலுக்குத் தாத்பர்ய தீபிகை என்ற உரை யெழுதியுள்ளார்.

முதலாம் தேவராயருடைய கல்வெட்டுகளுள் பல, கிரியா சக்திப் பண்டிதரை இராயராஜகுரு பிதாமகன் என்று கூறுகின்றன. விஜயபூபதி என்ற அரசிளங்குமரனுடைய தண்டபள்ளிச் செப்பேடுகளில் கிரியாசக்திப் பண்டிதருக்கு அதே பெயருள்ள ஒரு கிராமத்தைத் தானம் செய்துள்ளார். மேற்கூறப்பட்ட கிரியா சக்திப் பண்டிதர் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவராயினும் மற்றச் சமயங்களை வெறுத்தவரல்லர். அவருடைய வேண்டுகோளின்படி இரண்டாம் புக்கதேவன் வித்தியாசங்கரர் கோவிலுக்கு நிலதானம் செய்துள்ளார். கிரியாசக்திப் பண்டிதரே பங்களூர் மாவட்டத்தில் உள்ள விஷ்ணு கோவில் ஒன்றற்கு நிலதானம் வழங்கியுள்ளார்.

காளாமுக, பாசுபத, சைவ சமயத்தை ஆதரித்த போதிலும் சிருங்கேரி சாரதாபீட அதிபர்களாகிய வித்தியா தீர்த்தரையும், வித்தியாரண்யரையும் சங்கம வமிசத்து அரசர்கள் மிகுந்த நன்றியுடன் போற்றியுள்ளனர். 1346ஆம் ஆண்டில் 'பஞ்ச சங்கமர்' களும் சேர்ந்து சிருங்கேரி மடாலயத்திற்கு நிலதானம் அளித்துள்ளனர். 1356இல் முதலாம் புக்கர் சிருங்கேரிக்குச் சென்று வித்தியா தீர்த்தருக்கு வணக்கம் செலுத்தினர். மாதவ வித்தியாரண்யருடைய அருளினால் 'ஞானம்' என்ற பேரரசை இரண்டாம் ஹரிஹரர் அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அவருடைய மகனுகிய விருபண்ண உடையார் நற்கதி பெறுவதற்காக வித்தியாரண்யருடைய திருவருள் நாடியுள்ளார். 1380இல் இரண்டாம் ஹரிஹர தேவருடைய உறவினனுகிய சென்னப்ப உடையார் வித்தியாரண்யருடைய சீடராகிய வித்தியாபூஷண தீட்சிதர் என்பவருக்கு ஒரு கிராமத்தைத் தானமாக வழங்கியுள்ளார். இரண்டாம் தேவராயர் ஆட்சிக் காலம் வரையில் விஜயநகரப் பேரரசர்கள் சைவ சமயத்தில் பற்றுள்ளவர்களாக இருந்தனர். இருந்தபோதிலும் மற்றச் சமயங்களை அவர்கள் வெறுக்கவில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து விஜயநகர அரசர்கள் சைவ சமயத்தை வெறுக்காமலேயே வைணவ சமயத்திலும் பற்றுக் கொண்டனர். சாளுவ வமிசத்து அரசர்கள் திருப்பதித் திருமாலையும், அகோபலம் நரசிம்ம தேவரையும் தங்களுடைய குல தெய்வங்களாகக் கருதினர். இரு சமயத்தைச்

சேர்ந்த கோவில்களுக்கும் தான தருமங்கள் செய்யப்பட்ட போதிலும் வைணவத் திருப்பதிகளுக்குப் பலவித சலுகைகள் அளிக்கப் பட்டன. ஆயினும், இரண்டாம் விருபாட்சன் ஆட்சிக் காலம் வரையில் ஹம்பி விருபாட்ச தேவரே விஜயநகரத்தின் காவல் தெய்வமாகக் கருதப்பட்டார்.

துளுவ வமிசத்து அரசர்களாகிய வீர நரசிம்மர், கிருஷ்ண தேவராயர், அச்சுத தேவராயர் முதலியோருடைய பெயர்களி லிருந்து அவர்கள் வைணவப் பற்றுள்ளவர்கள் என்பது தெளிவு. ஆயினும், இவ் வரசர் பெருமக்கள் சைவ - வைணவக் கோவில் கள் என்ற வேற்றுமை பாராட்டாமல் பல தான தருமங்களையும், திருப்பணிகளையும் செய்துள்ளனர்; 1517-18ஆம் ஆண்டில் சோழ மண்டலத்திலுள்ள சைவ - வைணவ ஆலயங்களுக்குப் பதினாயிரம் வராகன்களைத் தருமம் செய்துள்ளனர். சிதம்பரம் வடக்குக் கோபுரத்தின் மேற்புறச் சுவரில் காணப்படும் கிருஷ்ணதேவ ராயருடைய உருவச் சிலை சலவைக் கல்லால் ஆன தாகும். இக் கோபுரத்தை அவர் அமைத்ததாகக் கல்வெட்டில் கூறப்பட்டிருப் பினும் அதனுடைய அமைப்புச் சோழர் காலத்திய கட்டடக் கலையை யொத்துள்ளது. ஒரு சமயம் முடிவு பெறாமலிருந்த இக் கோபுரத்தைக் கிருஷ்ண தேவராயர் முடித்திருக்கக் கூடும். திருக் காளத்தியிலும், திருவண்ணாமலையிலும் உள்ள சிவாலயங்களில் காணப்பெறும் பல திருப்பணிகள் கிருஷ்ண தேவராயரால் அமைக்கப் பெற்றவை யாகும். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலின் பெரிய கோபுரமும் அவருடைய திருப்பணி எனக் கருதப்படுகிறது. விஜயநகரத்திலுள்ள கணேசர் கோவிலும், ஹம்பி விருபாட்சர் கோவிலின் அரங்க மண்டபம், கிழக்குக் கோபுரம் முதலியனவும் அவர் காலத்தில் அமைக்கப்பட்டனை யாகும். பொன்னால் செய்யப்பட்டு நவரத்தினங்கள் இழைக்கப் பட்ட தாமரைப்பூ ஒன்றையும், நாகாபரணம் ஒன்றையும் விரு பாட்சர் கோவில் அம்மனுக்குப் பூட்டியதாக நாம் அறிகிறோம்.

கிருஷ்ணதேவராயர் உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்றிய பிறகு அங்கிருந்த பாலகிருஷ்ணர் உருவத்தை விஜயநகரத்திற்குக் கொண்டு வந்து அழகிய கோவில் அமைத்துத் திருப்பணி செய் தார். விஜயநகரத்திலுள்ள வித்தளர் கோவிலும் அவரால் தொடங்கப் பட்ட தாகும். 1514ஆம் ஆண்டில் திருவேங்கடத் திற்குச் சென்று வேங்கடநாதரை வழிபட்டு 30 ஆயிரம் பொற் காசுகளைக் கொண்டு கனகாபிஷேகம் செய்தார். நவரத்தினங் கள் வைத்து இழைக்கப்பட்ட பல ஆபரணங்களையும் தானம் கொடுத்தார். சின்னதேவி, திருமலைதேவி என்ற இரு அரசிகளோடு

திருப்பதியில் காணப்படும் கிருஷ்ண தேவராயர் செப்புச்சிலை, மிக்க கலையழகுடன் இன்றும் இருக்கிறது. அகோபலம் நரசிம்ம தேவருக்குக் கழுத்தணி, வைரமாலை, மரகத மோதிரம், பொற் றும்பாளம் முதலியவற்றோடு ஆயிரம் வராகன்கள் கோத்த மாலை ஒன்றும் அளிக்கப்பட்டது. காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோவிலுக்கும் பல திருப்பணிகள் செய்யப்பெற்றன மகாராட்டிர நாட்டில் வணங்கப்பட்ட விட்டோபா தெய்வ வணக்கத்தில் ஈடுபட்ட கிருஷ்ணதேவர், அத் தெய்வத்திற்குத் தனியான கோவில் ஒன்றை விஜயநகரத்தில் அமைத்தார்.

வைணவ சம்பிரதாய நூல்களை எழுதுவதிலும், போதிப் பதிலும் மிகுந்த வல்லவராகிய வேங்கடநாதாரியர் என்பவர் பேரரசில் வாழ்ந்த வைணவர்களுக்குத் தலைவராக நியமனம் செய்யப்பட்டார். வைஷ்ண சம்பிரதாயத்திற்கு உட்பட்டு வாழ்க்கை நடத்தாதவர்களைத் தண்டிப்பதற் கேற்ற அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. துவைத தரிசனத்தில் சிறப்புற்று விளங்கிய வியாச தீர்த்த யதீந்திரர் என்பவரையும் கிருஷ்ண தேவர் கௌரவப்படுத்திப் பல மானியங்களை அளித்துள்ளார்.

கிருஷ்ணதேவரைப் போன்று அச்சுத தேவராயரும் சைவ சமயக் கோவில்களுக்கும், வைணவ சமயக் கோவில்களுக்கும் அதிக வேற்றுமை பாராட்டாது திருப்பணிகளும், தான தருமங்களும் செய்துள்ளார். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோவிலுக்கும், அருளாளப் பெருமாள் கோவிலுக்கும் பார பட்சமின்றி நிலமானியங்கள் அளிக்கும்படி அச்சுதராயர் ஆணை யிட்டார். காமாட்சியம்மன் கோவிலில் துலாபார, நிகழ்ச்சி நடத்தித் தம்முடைய நிறையுள்ள பொற்காசுகளை அருளாள னுடைய கோவிலுக்கு அளிக்கும்படி செய்தார். விஜயநகரத் திலுள்ள வித்தளர் கோவிலுக்கும் சுவர்ணதானம் செய்யப் பட்டது. 'ஆனந்த நிதி' என்ற சேமிப்பை ஏற்படுத்தி அதிலிருந்து கிடைத்த வருமானத்தை வேதங்களில் வல்ல அந்தணர்களுக்கு அளித்து, அவர்கள் குபேரச் செல்வம் பெறும்படி செய்தார் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. தில்லை திருச்சித்திரக்கூடம் என வழங்கும் சிதம்பரம் கோவிந்தராஜப் பெருமானுடைய மூல உருவத்தைச் சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் பெயர்த்துவிட்ட பிறகு, தில்லைக் கோவிந்தராஜப் பெருமான் கோவிலில் வழிபாடு இல்லாமல் இருந்ததாகத் தெரிகிறது. 1539ஆம் ஆண்டு வைகாசியில் சூத்திரவிதிப்படி அவ் வுருவம் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடுகள் நடப்பதற்கு 500 பொற் காசுகள் அச்சுதராயரால் அளிக்கப் பட்டன. அச்சுதராயர் 'திரு

நாளின் திருவடிகளை அடைந்தார்' என்னும் வாக்கியம் வைணவ சமயத்தில் அவர் கொண்டிருந்த பற்றைக் காட்டுகிறது.

பெயரளவில் சதாசிவ ராயரும், செயலில் இராமராயரும் ஆட்சி புரிந்த காலத்தில் சைவ சமயக் கோவில்களைவிட வைணவ சமயக் கோவில்களுக்கும், ஆசாரியர்களுக்கும் பேரா தரவு கிடைத்த செய்திகளைப் பற்றி நாம் கல்வெட்டுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். திருப்பதி-திருமலை கோவில்கள், ஸ்ரீபெரும் பூதூர், ஸ்ரீமுஷ்ணம், திருவரங்கம் முதலிய வைணவத் தலங் களுக்குப் பேராதரவுகள் கிடைத்தன. அண்ணமாச்சாரியா, திருமலாச்சாரியா, திருமலாச்சாரியா திருவேங்கடநாதர் முதலிய தல்லாப்பாக்கம் ஸ்ரீ வைணவக் குருமார்களுக்கு இராமராயர் ஆட்சியில் பெருமளவில் ஆதரவளிக்கப்பட்டது. கிருஷ்ணதேவர் ஆட்சியில் குலகுருவாயிருந்த கோவிந்த தேசிகருக்குப் பதிலாகத் தாத்தாச்சாரியர் என்ற ஸ்ரீ வைணவர் மேற்படி பதவியில் நிய மனம் செய்யப்பட்டார். இராமராயர் காலத்தில் தொட்டாச் சாரியர் என்ற வைணவத் தலைவர் சிதம்பரத்திலிருந்த அத்வைத வாதிகளை வாதில் வென்று தில்லைக் கோவிந்தராசருடைய கோவில் வழிபாட்டை நிலைபெறச்செய்தார் எனக்கூறப்படுகிறது. பஞ்சமத பஞ்சனம் என்ற நூலைத் தாத்தாச்சாரியாரும் அப்பய்ய தீட்சத ருடைய அத்வைத தீபிகம் என்ற நூலை மறுத்துக் கூறும் சண்ட மாருதம் என்னும் நூலைத் தொட்டாச்சாரியாரும் எழுதி யுள்ளனர். சோழசிங்கபுரத்திலுள்ள பெருமாள் கோவிலுக்குத் தொட்டாச்சாரியார் நில தானம் அளித்துள்ளார். கந்தாடை ஸ்ரீரங்காச்சாரியார் என்ற வைணவப் பெரியாரின் நன்முயற்சி யால் ஸ்ரீபெரும்பூதூரிலுள்ள இராமானுஜ கூடம் என்னும் திருக் கோவிலுக்கு 31 கிராமங்கள் திருவிளையாட்டமாகக் கொடுக்கப் பட்ட செய்தியை நாம் ஒரு கல்வெட்டிலிருந்து உணரலாம்.*

தேவாலயங்களும் மடங்களும்:

இந்திய வரலாற்றின் மத்திய காலத்தில் இந்து சமயக் கோவில்களும் மடாலயங்களும் இந்துக்களுடைய சமய - கலாசார் வாழ்க்கையில் பேருதவி புரிந்தன. மக்களுடைய சமய உணர்ச்சியையும், கலையுணர்வையும் அக் காலத்திய கோவில்களில் காணலாம். சைவ வைணவ, வீரசைவ சமயங்களின் உட் பொருள்களாகிய தத்துவங்களையும், சமய சம்பந்தமுள்ள நூல்களின் பொருள்களையும், வழிபாட்டு முறைகளின் உட் கருத்துகளையும் மக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கு ஏற்பட்ட அமைப்புகளே மடாலயங்களாகும். தேவாலயங்கள் சைவ,

*Epigraphia Indica. Vol. IV. P. 1-22

வைணவ சம்பிரதாயங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டன. சைவ, வைணவ ஆலயங்களில், வேத விதிப்படியும், ஆகமங்களில் கூறப்பட்ட முறைப்படியும் வழிபாடுகள் நடைபெற்றன. தேவாலயங்களின் நிலங்களையும், வீட்டு மனைகளையும், மற்றச் சொத்துகளையும் பரிபாலனம் செய்து, கோவில்களின் ஊழியர்களை அடக்கி ஆண்டு, கோவில்களில் நித்திய நைவேத்தியங்களையும், திருவிழாக்களையும் செவ்வனே நடைபெறும்படி பாதுகாத்தவர்களுக்கு ஸ்தானிகர்கள், மூலப்பிரகிருதியார் என்ற பெயர்கள் வழங்கின. கோவில்களின் முக்கிய அதிகாரிகள், கண் காணி, கோவில் கேள்வி, கோவில் கணக்கு, மெய்க்காவல் அல்லது திருமேனிக்காவல், அறைக் காவல், பொற் பண்டாரம் முதலியோர் ஆவர். திருவிளக்குக்குடி, அர்ச்சகர், மேளக்காரர், தேவரடியார், இடபத்தளியிலார், பதியிலார் முதலியோர் கோவில் ஊழியர்களாவர். மேற்கூறப்பட்ட ஊழியர்களுக்கு நில மானியங்களும், தினசரிக் கட்டளைகளும், கோவில் பிரசாதங் களில் ஒரு பகுதியும் அளிக்கப்பட்டன. வேத பாராயணம் செய்வதற்கும், திருப்பதிகங்கள் ஓதுவதற்கும், ஜெபதபங்கள் செய்வதற்கும், இதிகாச புராணங்களை எடுத்துக்கூறுவதற்கும் தகுந்தவர்கள் நியமனம் செய்யப்பட்டுச் சமயக் கல்வி, கோவில் களின் மூலம் பரவியது.

மங்களூரில் உள்ள திமிரீசுவரர் கோவிலில் ஜெபம் செய் வதற்கு மகாலிங்க தேவர் என்பவருக்கு நிலமானியம் அளிக்கப் பட்ட செய்தி ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. மைசூர் நாட்டில் மாத்தூர்த் தேசிநாத சுவாமி கோவிலில் தேசாந் திரிகளுக்கு உணவளிக்கவும், வேதங்களையும், புராணங்களையும் எடுத்துக் கூறவும் 1380ஆம் ஆண்டில் மகா ஜனங்களும், நாட்டாரும் சேர்ந்து நிலமானியம் அளித்துள்ளனர். 1433ஆம் ஆண்டில் திருவேங்கடத்தில் 24 அந்தணர்கள் வேத பாராயணம் செய்வதற்குச் சித்தக் குட்டை என்னும் கிராமத்து நில வருமானம் வழங்கப்பட்டது. நரசிங்கபுரத்துக் கோவிலில் பக்தி சஞ்சீவினி என்ற புராணத்தை விரித்துரைப்பதற்கு இரண்டு வைணவப் பிராமணர்களுக்கு நிலங்களும், வீடுகளும் மானியமாக வழங்கப்பட்டன. 1523ஆம் ஆண்டில் தேவக்காபுரத்து விச்வேசு வர சிவாச்சாரியாரும், கைக்கோள முதலியார்கள் கோவில் தானத்தார்களும் சேர்ந்து வடமலையார் என்ற அத்துவன்பாடி வித்துவானுக்கு நிலமானியம் அளித்தனர். திருப்புடை மருதூரில் இராமநாதன் என்பவருக்கு மதுரவாணகவிராயன் என்ற பட்டம் அளித்து இறையிலி நிலமும், வீடும் கொடுத்துக் கோவிலின் ஆஸ்தான கவியாக 1565இல் கோவில் தானத்தார் நியமனம்

செய்துள்ளனர். கேட்டை நட்சத்திரத் திருநாளன்று விழாவில் பங்கு கொண்டு அவ் விழாவைப் பற்றிக் கவிகள் இயற்ற வேண்டு மென அவர் பணிக்கப்பட்டார். கோவில்களில் மருத்துவ சாலை களும், இசைக் கூடங்களும் இருந்தன. திருவரங்கம் கோவிலில் இருந்த மருத்துவசாலை இஸ்லாமியர்களுடைய படையெடுப்பால் சீர்கேடுற்றது. கருடவாகனன் என்பவர் அம் மருத்துவ சாலையைச் சீர்திருத்தித் தன்வந்திரி முனிவரின் உருவச் சிலையையும் அமைத்தார். கோவிலின் நான்காவது பிராகாரத் தில் இன்றும் அச் சிலை காணப்படுகிறது.

விஜயநகர மன்னர்கள் கோவில்களுக்குச் சென்று வணக்கம் செய்து அக் கோவில்களிலிருந்து நிலதானங்கள் வழங்குவது வழக்கம். ஹம்பி விருபாட்சர் கோவிலிலுள்ள தானமண்டபத் திலிருந்து மல்லிகார்ச்சுன மகாராயர் பல தானங்களை வழங்கி யுள்ளார். அச்சுத ராயர் திருப்பதியிலும், காளத்தியிலும் முடிசூட்டு விழாவை நடத்தி யுள்ளார். சில கோவில்களில் ஏழைகளுக்கு உணவளிப்பதற்கு ஆதுலர் சாலைகளும் இருந்தன. இன்று போல விஜயநகர ஆட்சியிலும் மக்கள் புனித இடங் களுக்குப் புனித யாத்திரைகளும் செய்தனர். இன்றும் அவ் விடங்கள் புனித யாத்திரைக்குப் பெயர் பெற்றுள்ளன.

மடாலயங்கள் :

மைசூர் நாட்டில் உள்ள சிருங்கேரி அல்லது ரிஷ்ய சிங்ககிரி என்னு மிடத்தில் துங்கா நதிக்கரையில் ஆதிசங்கரரால் அமைக்கப் பட்ட அத்வைத மடாலயத்திற்குச் சாரதா பீடம் என்ற பெயர் வழங்குகிறது. ஆதிசங்கரரால் பத்ரிநாத், துவாரகை, ஜெகந் நாதபுரி, சிருங்கேரி, காஞ்சி ஆகிய ஐந்து இடங்களில் அமைக்கப்பட்ட அத்வைத மடங்களில் இது நான்காவதாகும். பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்து இம் மடத்திற்குப் பல சிறப்பு வாய்ந்த தலைவர்கள் தலைமைப் பீடாதிபதிகளாக வீற்றிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் பரமஹம்ச சந்நியாசி களின் தலைமை ஆச்சாரியா, பாதவாக்கிய பிரமாண ப்ரவார பரீண என்ற பட்டங்களை மேற்கொண்டனர். இயமம், நியமம், எண் வகை யோகங்கள் வைதீக அத்துவித சித்தாந்த நூல்களைப் பயின்ற திறமை முதலிய சித்திகளில் வல்லவராகவும் விளங்கினர். சிருங்கேரி மடத்துத் தலைவர்கள் எங்குச் சென்றாலும் பல்லக்கில் செல்லுவது வழக்கம். விஜயநகரத்து அரசர்களுக்கும், சிருங் கேரி மடத்துத் தலைவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. வித்தியாதீர்த்தர், வித்தியாரண்யர் என்ற இரு சிருங்கேரி மடத்து ஆதிபர்கள் விஜயநகரத்தை அமைப்பதற்கும் விஜயநகரம்

பேரரசாக அமைவதற்கும் மிக்க உதவி செய்தனர். சங்கம வமிசத்து அரசர்கள் சிருங்கேரி மடத்திற்குப் பல நிலமானியங்களையும் மற்றத் தான தருமங்களையும் செய்துள்ளனர்.

காஞ்சிபுரத்தில் ஆதிசங்கரரால் அமைக்கப் பெற்ற மடாலயத்திற்குக் காம கோடிப் பீடம் என்ற பெயர் வழங்குகிறது. 1293ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிய தெலுங்குச் சோழ அரசனுகிய விஜயகண்ட கோபால தேவன் இம் மடத்திற்கு மானியம் அளித்ததை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. விஜயநகர ஆட்சிக் காலத்தில் பல சிறப்பு வாய்ந்த பெரியோர்கள் காஞ்சி காமகோடி பீடத்திற்குத் தலைமை வகித்துள்ளனர். அவர்களுள் பூரணனந்தர், சதாசிவேந்திரர், வியாசாசல மகாதேவேந்திரர், அருணகிரி சந்திர சூடேந்திரர், சர்வக்ன சதாசிவபோதேந்திரர், பரம சிவேந்திரர் என்பவர் மிக்க புகழ் வாய்ந்தவர்களாவர். பரமசிவேந்திரர் என்பவர் நெரூர் சதாசிவ பிரம்மத்திற்குக் குருவாகக் கருதப்படுகிறார். ஆத்ம போதேந்திரர் என்பவருடைய அருளினால் குருரத்ன மாலை என்ற நூலைச் சதாசிவப் பிரம்மம் இயற்றியுள்ளார். 1506 முதல் 1512ஆம் ஆண்டு வரையில் சந்திர சூடேந்திரர் என்பவரும், 1512 முதல் 1538 வரையில் சதாசிவேந்திரர் என்பவரும் காஞ்சிபுரம் காம கோடி பீடத்துச் சங்கராச்சாரியார்களாக இருந்தனர். கிருஷ்ண தேவராயருடைய தமையன் வீர நரசிம்மர் மகாதேவ சரஸ்வதி என்பவருக்கு இரண்டு கிராமங்களை மடப்புறமாக அளித்துள்ளார். மகாதேவ சரஸ்வதியின் மாணவர் சந்திரசூட சரஸ்வதிக்கு 1522இல் இரண்டு கிராமங்களை மடப்புறமாகக் கிருஷ்ண தேவராயர் அளித்துள்ளார். சந்திரசூட சரஸ்வதிக்குச் சிவசேதாரியதிராஜர், திமாத் (Philosopher) என்ற பட்டங்களும் மாயை என்னும் இன்மையை விவரித்து விளக்குவதில் வல்லவர் என்ற புகழும் உண்டு. சந்திரசூட சரஸ்வதிக்கு அடுத்தாற் போல் பட்டம் வகித்தவர் சதாசிவ போதேந்திரர் ஆவர். 1528ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உதயம்பாக்கம் என்னும் கிராமத்தை இவருக்குத் தானமாகக் கிருஷ்ண தேவராயர் அளித்துள்ளார். காஞ்சி காமகோடி பீடத்து மடாதிபதிகளின் வரன்முறை (Succession list) வரலாற்றைத் தொகுத்துப் புண்ணிய சுலோக மஞ்சரி என்னும் நூலை இயற்றியுள்ளார்.

1608ஆம் ஆண்டில் மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கர் திருவானைக்காவில் இருந்த சங்கராச்சாரியார் மடத்திற்குப் பிராமணர்களுக்கு உணவளிப்பதற்காக நிலதானம் செய்து உள்ளார். அவரால் அளிக்கப்பட்ட செப்பேடுகளில் இந்த மடம்

பொன்மாரி கொண்டான் தெருவிலிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், திருவானைக்காவில் எப்பொழுது அமைக்கப்பட்டது என்பது விளங்க வில்லை. இது காஞ்சிகாமகோடி பீட மடத்தின் கிளையாக இருக்கலாம். கருநாடகத்தில் நடந்த போர்களின் விளைவாகக் காஞ்சிபுரத்தில் அமைதியற்ற நிலைமை தோன்றிய காலத்தில் சந்திரசேகர சரஸ்வதி என்பவர் பங்காரு காமாட்சி விக்கிரகத்துடன் உடையார் பாளையத்திற்குச் சென்று வசித்தார். 1739 முதல் 63 வரை தஞ்சாவூரை ஆட்சி புரிந்த மராட்டியப் பிரதாபசிம்ம மகாராஜா அவர்கள் சந்திரசேகர சரஸ்வதியைத் தஞ்சாவூருக்கு வந்து தங்கும்படி அழைப்பு விடுத்தார். காஞ்சிபுரம் சங்கராச்சாரியாரும் பங்காரு காமாட்சி கோவில் ஒன்றைத் தஞ்சையில் பிரதிட்டை செய்தார். பின்னர் இக் கோவிலும், மடமும் திருக்குடந்தைக்கு மாற்றப்பட்டுக் காவிரியின் தென்கரையில் இன்றும் நிலைபெற்று வருகிறது.

விஜயநகர ஆட்சியில் பாசுபத சைவப் பிரிவின் சுத்தசைவ பிரிவின் மடங்களுக்குக் கோளகி மடம் என்ற பெயர் வழங்கியது. கோளகி என்னும் சொல் கங்கை நதிக்கும், நருமதை நதிக்கும் இடையில் உள்ள மத்தியப் பிரதேசத்தில் இருந்த கோளகிரி மடத்தின் திரிந்த பெயராகும். ஆந்திரநாட்டில் பல்லாரி, கோலார், வாரங்கல், அனந்தபுரி, சித்தூர், கடப்பை, கர்நூல், குண்டூர் முதலிய இடங்களிலும் தமிழ்நாட்டில் வடவார்க்காடு, இராமநாதபுரம், மதுரை முதலிய மாவட்டங்களிலும் இம் மடங்கள் இருந்தன. ஆந்திர நாட்டில் ஸ்ரீசைலம், புஷ்பகிரி திரிபுராந்தகம், தமிழ்நாட்டில் திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் இதன் கிளைமாவட்டங்கள் அமைவுற்றிருந்தன. விஜயநகர ஆட்சியில் புஷ்பகிரி அகோர சிவாச்சாரியார், காளத்திபில் இம்மடி ருத்ர சிவாச்சாரியார் என்ற இரண்டு கோளகி மடத்துத் தலைவர்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். தேவிகாபுரத்தில் இருந்த கோளகி மடத்தில் ஈசான சிவாச்சாரியார் அம் மடத்திற்குப் பொருளாளராக இருந்ததாகக் கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிய முடிகிறது. தேவிகாபுரத்தில் இன்றும் சந்தானசிவாச்சாரியார்கள் என்ற மடாதிபதிகள் சைவ பேரிச்செட்டி வகுப்பினர்க்கு ஆசாரியர்களாக இருக்கின்றனர். தமிழ்நாட்டிலுள்ள எண்ணெய் வணிகர்களுக்கு ஞானசாரியர்களாக உள்ள முள்ளந்திரம் ஞான சிவாச்சாரியர்களும் இவர்களும் சம்பந்த முடையவர்களாவர். இந்த ஞானசிவாச்சாரியார்கள் வடமொழி வல்லுநர்களாகிய திண்டிமக் கவிகளுக்கு மூதாதையர்களாகக் கருதப்படுகிறார்கள். இராமநாதபுரம் திருப்பத்தூரில் கல்மடம் என்றழைக்கப்பட்ட கோளகி மடத்திற்கு ஈசான சிவன் என்பவர் தலைமை வகித்தார்.

இவர் கோளகி தருமத்து இலட்சதியாயி பிட்சா மடத்தைச் சேர்ந்தவ ரென்றும் கூறப்படுகிறார்; யஜுர் வேத, போதாயண சூத்திர, காயத்திரி கோத்திரத்தைச் சேர்ந்தவரென்றும் பாண்டி மண்டலாதிபதி, பாண்டிநாட்டு முதலியார் என்றும் அழைக்கப் படுகிறார்; திருக்கொடுங்குன்றம் என்றழைக்கப்பட்ட பிரான் மலையில் இருந்த அறுபத்துமூவர் திருமடத்திற்குத் தலைவராக இருந்தார். பதினாறும் நூற்றாண்டிற்குப் பிறகு இந்தக் கோளகி மடங்களைப் பற்றிய செய்திகள் கிடைக்க வில்லை. சங்கராச்சாரிய மடங்களும் சைவ மடங்களும், தோன்றிய பிறகு கோளகி மடங்கள் தங்கள் செல்வாக்கை இழந்தன.

ஞானசக்தி, சாம்பசக்தி, கிரியா சக்தி என்ற பெயருள்ளவர் கள் காளாமுக சைவ மடங்களின் தலைவர்களாக இருந்தனர். புஷ்பகிரி, ஹூலி முதலிய இடங்களில் இம் மடங்கள் இருந்தன.

விஜயநகரப் பேரரசில் மத்வசமய மடங்களும் சிறப்புடன் விளங்கின. மத்வாச்சாரியாரால் அமைக்கப்பட்ட உடுப்பி கிருஷ்ண மடம் மிக முக்கியமானது. பின்னர்க் கன்னட நாட்டில் பலிமார், அத்மார், கிருஷ்ணபூர், புட்டிகை, சிறூர், சோதி காஞூர், பேஜவார் முதலிய மடங்கள் தோன்றின. சோதிமடத்துத் தலைவர் வதிராஜா என்பவர் துவைத தரிசனத்தைப் பற்றி யுக்தி மல்லிகா என்னும் நூலை எழுதி யுள்ளார். கிருஷ்ண தேவராய ருடைய சம காலத்தவராகிய வியாசராயரால் அமைக்கப்பட்ட வியாசராய மடத்திற்கு விஜயநகர அரசர்கள் பல தானதருமங் களைச் செய்தனர். வித்தியாநிதித் தீர்த்தர் என்பவரால் அமைக்கப் பட்ட உத்திராதி மடத்திற்குப் பல கிளை மடங்கள் இருந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் ஸ்ரீ விபுதேந்திர தீர்த்தரால் அமைக்கப் பட்ட இராகவேந்திர சுவாமி மடத்திற்கு விஜயநகர அரசர்கள் பல மானியங்களை அளித்தனர். ஸ்ரீ சுரேந்திர தீர்த்த ஸ்ரீ பாதரும், விஜயேந்திர தீர்த்த ஸ்ரீ பாதரும் மிக்க புகழ் பெற்றவராவர். விஜயேந்திர தீர்த்த ஸ்ரீ பாதர் அப்பய்ய தீட்சிதரின் சம காலத்தவர் ஆவர். விஜயேந்திர தீர்த்தர், சுதீந்திர தீர்த்தர், இராகவேந்திர தீர்த்தர் என்ற மூவரும் மத்வாச்சாரியாருடைய துவைத தரிசனத்தைப் பற்றிச் சுமார் 50 நூல்களை எழுதி யுள்ளனர்.

தமிழ்நாட்டில் தஞ்சைமாவட்டத்திலுள்ள தருமபுரம் மடம், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் குரு ஞானசம்பந்த தேசிகர் என்பவரால் அமைக்கப் பட்டதாகும். இவர் உமாபதி சிவாசாரி யாருடைய சந்தான மரபில் வந்த ஆறுவது சமயாச்சாரியார் ஆவார். உமாபதி சிவாச்சாரியார் 1313ஆம் ஆண்டில் வாழ்ந்தவ

ராவார். இவருடைய மாணவர் மச்சுச் செட்டியார் என்ற அருள் நமச்சிவாயர் ஆவார். ஞான பூசை விருத்தம், துகளறு போதம், சிவப்பிரகாச சூத்திரம் என்ற சைவ சித்தாந்த நூல்கள் சிற்றம் பலநாடிகள் என்பவரால் இயற்றப்பட்டன. சிவானந்த போதம், சிவபூசை அகவல், பிரசாதக் கட்டளை, அத்துவக் கட்டளை என்ற நூல்களைத் திருவாரூர் ஞானப் பிரகாசர் என்பவர் இயற்றினர். தருமபுர மடத்தை அமைத்த குருஞான சம்பந்த தேசிகர், சிவ போக சாரம், பரமானந்த விளக்கம், முத்தி நிச்சய விளக்கம், திரிபதார்த்த அகவல் முதலிய சைவசித்தாந்த நூல்களை இயற்றினர். வெள்ளியம்பலத் தம்பிரான் சம்பந்த சரணாலய சுவாமிகள் வைத்தியநாத நாவலர் என்பவரும் தருமபுரத்தில் தம்பிரான்களாக இருந்தனர். தருமபுரம் மடம் தமிழ்நாட்டில் பல சைவ தேவாலயங்களைப் பராமரித்து வருகிறது; சைவ சித்தாந்த சாத்திரங்களும், சைவ சமயமும் பரவுவதற்கு ஆவன செய்து வருகின்றது.

திருவாவடுதுறை ஆதீனத்தை அமைத்தவர் சித்தர் சிவப் பிரகாசர் என்பவருடைய மாணவர் நமச்சிவாய மூர்த்தி தேசிக ராவார். அவருக்குப் பின் மறைஞான தேசிகர், அம்பலவாண தேசிகர், தக்ஷிணமூர்த்தி தேசிகர் என்பவர்கள் தம்பிரான்களாக இருந்தனர். தக்ஷிணமூர்த்தி தேசிகர் தசகாரியம், உபதேசப் பஃறொடை என்ற இரண்டு சைவ சித்தாந்த நூல்களைப் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றினர். சன் மார்க்க சித்தியார், சிவாக்கிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபய நிஷ்டை வெண்பா, உபதேச வெண்பா, நிஷ்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்ற நூல்களை அம்பலவாண தேசிகர் என்பவர் இயற்றியுள்ளார். ஈசான தேசிகர் என்பவர் தசகாரியம் என்ற நூலுக்கு, வேலப்ப தேசிகர் பஞ்சாட்சரப் பஃறொடை என்ற நூலையும் இயற்றினர். இப் பதினைந்து நூல்களும் பண்டார சாத்திரங்கள் என்று வழங்குகின்றன.

திருப்பனந்தாளில் உள்ள காசிமடம், குமர குருபரர் என்பவரால் அமைக்கப் பட்டதாகும். திலதையில் பெரிய தேவ நாயனார் மடமும், புளியங்குளம் என்னு மிடத்தில் திருவேங்கட நாதன் மடமும் இருந்தன. தென்னார்க்காடு மாவட்டம் திருநாவ லூரில் மெய்ஞ்ஞான மாமுனிவர், அச்சுத தேவராயர் காலத்தில் ஒரு மடம் அமைத்ததாகத் தெரிகிறது. காஞ்சிபுரத்தில் ஞானப் பிரகார சுவாமிகள் மடமும், திருவொற்றியூரில் அங்கராயன் மடமும் விஜயநகர ஆட்சியில் இருந்தனவாகத் தெரிகிறது.

விஜயநகரப் பேரரசில் கொண்டாடப்பட்ட திருவிழாக்கள்

இந்திய மக்கள் கொண்டாடும் திருவிழாக்களும், பெருநாள்களும் அவர்களுடைய சமய வாழ்க்கையோடு பிணைந்துள்ளன. விஜயநகரத்தில் கொண்டாடப்பட்ட மகாநவமி அல்லது தசராப் பண்டிகை மகிஷ சங்காரி என்ற துர்க்கை மகிஷாசுரனைக் கொல்வதற்காக ஒன்பது நாள் விரதமிருந்து பத்தாம் நாள் அவனுடன் போரிட்டு வெற்றி பெற்றதைக் குறித்துக் கொண்டாடும் திருவிழாவாகும். இந்த மகாநவமிக் கொண்டாட்டத்தின் பொழுது விஜயநகரப் பேரரசர்கள் அரசவையைக் கூட்டுவதும் நாயக்கன்மார்கள் திறை செலுத்துவதும் நடந்தன. மகாநவமித் திருவிழாவில் ஒவ்வொரு நாளிலும் துர்க்கை அல்லது வெற்றித் திருமகளின் விக்கிரகம் அகலமான மைதானத்தில் உயர்ந்த மேடையின்மீது வைத்து அரசர்கள் வழிபாடுகள் செய்தனர். இரவில் எருமைகளும் ஆடுகளும் பலியிடப்பட்டன. முதல் நாளன்று இருபத்து நான்கு எருமைகளும் நூற்றைம்பது ஆடுகளும் பலியிடப்பட்டன எனப் பீயஸ் கூறியுள்ளார். ஆனல், நூனிஸ் வேறு விதமாகக் கூறுவார். முதல் இரவில் ஒன்பது எருமைக் கடாக்களும், ஒன்பது ஆட்டுக் கடாக்களும், ஒன்பது ஆடுகளும் பலியிடப்பட்டன என்றும் அடுத்தடுத்த நாள்களில் இதைப் போல் இரண்டு மடங்கு எண்ணிக்கையுள்ள விலங்குகள் பலியிடப்பட்டன என்றும் கூறுவார். கடைசி நாளன்று 250 எருமைகளும் 4,500 ஆடுகளும் பலியிடப்பட்டன என்றும் பீயஸ் கூறுவார்.

மகாநவமித் திருவிழாவின் ஒன்பது நாள்களிலும் பலவிதமான விளையாட்டுகளும் கலாநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஒவ்வொரு நாளும் பேரரசின் பல பகுதிகளிலிருந்து வந்த பிரபுக்கள் அரசன்முன் தோன்றி வணக்கம் செய்தனர். பரத நாட்டியம், மல்யுத்தம், வாட்போர், விற்போர் முதலிய விளையாட்டுகளும் நடைபெற்றன. இவ் வித விளையாட்டுகள் நடைபெற்ற இடங்களைச் சுற்றித் தீவட்டிகள் கொளுத்தப்பட்டதால் இரவு, பகலாகத் தோன்றியது. குதிரைகளின்மீதமர்ந்து குதிரை வீரர்கள் விளையாட்டுப் போர்களை நடத்தினர். சிலர் பலமான கயிறுகளைக்கொண்டு செய்யப்பட்ட வலைகளை வீசி, மேடையில் அமர்ந்திருந்த மக்களைப் பிடித்தனர். பட்டாசு போன்ற வெடிகளையும், எறிபந்தங்களையும், வெடிபாணங்களையும் எறிந்தனர். நாயக்கன்மார்களுடைய வாகனங்கள் பவனியாக வந்தன. அவற்றைத் தொடர்ந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரைப் படைகள் வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. இக்

குதிரைப் படை வரிசைகளைச் சுற்றித் தாம்பாளங்களில் அரிசியும், தேங்காயும், மலர்களும் கொண்டு வந்து மலர்களைத் தூவி நீரைத் தெளித்தனர். பின்னர், அரண்மனையில் இருந்த ஆடல் மகளிர் நன்முறையில் ஆடையணிகளை அணிந்து பவனி வந்தனர். ஒவ்வொரு பெண்ணும் பொற்செம்பின்மீது கைவிளக்கை ஏற்றி வைத்து இரண்டையும் பிடித்துக் கொண்டு வந்தனள். பொற்பூண் கட்டப்பட்ட பிரம்பு ஒன்று ஒவ்வொருத்தியின் கையிலும் காணப்பட்டது. இவர்களுக்கு வழிகாட்டப் பலர் தீவட்டிகளைப் பிடித்துச் சென்றனர். இறுதியாகக் குதிரைப் படைகளின் பவனியை அரசர் மேற்பார்வை செய்தபிறகு மக்கள் கலைந்து சென்றனர். இவ்விதக் காட்சிகளை நேரில் கண்ட பீயஸ், 'நான் விஜயநகரக் குதிரைப் படைகளின் அணிவகுப்பைப் பார்த்த பொழுது ஒரு கனவுலகக் காட்சியைக் காண்பதாக எண்ணினேன்' எனக் கூறியுள்ளார்.

நிக்கோலோ கான்டியும் இந்த மகாநவமித் திருவிழாவைக் கண்டு களித்துச் சில வியக்கத்தக்க செய்திகளைக் கூறுவார். 'ஒன்பது நாள் திருவிழாவின் மூன்றுவது நாளில் பெருவழிகளில் கப்பல் பாய் மரம்போன்று பெரிய மரங்களை நட்டுவைக்கின்றனர். அதன் உச்சியில் பலவித வண்ணங்கள் கொண்ட பட்டுச் சரிகைத் துணிகளைக் கட்டிவைக்கின்றனர். இத் துணிகள் கட்டப்பட்டிருக்கும் உச்சிக்குச் சிறிது கீழே ஒரு பலகை அமைக்கப்பட்டிருக்கிறது. அப் பலகையின்மீது பொறுமையே அவதாரம் செய்தது போன்ற யோகிகள் அமர்ந்துள்ளனர். மரங்களைச் சுற்றிக் கூடியுள்ள மக்கள் எலுமிச்சை, வாழை, ஆரஞ்சி முதலிய பழங்களை யோகிகளின்மீது வீசிஎறிந்து அவர்களுடைய பொறுமையைச் சோதிக்கின்றனர்.'

நிக்கோலோ கான்டி விஜயநகரத்து மக்கள் புத்தாண்டுவிழாக் கொண்டாடியதாய்க் குறித்துள்ளார். அவ் விழாத் தீபாவளிப் பண்டிகையே யாகும். 'இந்தப் புத்தாண்டு (தீபாவளி) விழாவில் ஆடவரும், மகளிரும், இளையோரும், முதியோரும் ஆறுகளிலும், குளங்களிலும், கடலிலும் நீராடிப் புதிய ஆடைகளை அணிந்து மூன்று நாள்களுக்கு இசை, நடனம், விருந்து முதலியவற்றில் ஈடுபடுகின்றனர்.' தென்னிந்திய மக்கள் அமாவாசையன்று புத்தாடைகளை அணிந்து பெரும்விருந்து நடத்துகின்றனர். செல்வர்கள் தங்களுடைய வேலையாள்களுக்கு விதவிதமான நிறங்களுள்ள புத்தாடைகளை இனமாக அளிக்கின்றனர். அமாவாசைதோறும் மாதங்களைக் கணக்கிடுகின்றனர் என்று பீயசும் கூறியுள்ளார். மகாவிஷ்ணு, வாமனவதாரம் எடுத்து மாபலிச் சக்கரவர்த்தியைத்

தம் காலடியில் அழுத்திய புராணக் கதையை நினைவுபடுத்திக் கார்த்திகைத் திருநாளும் கொண்டாடப்பட்டது. இத் திரு விழாவில் கோவில்களிலும் வீடுகளிலும் எண்ணிறந்த அகல் விளக்குகளைப் பொருத்தி அவற்றில் நல்லெண்ணெய் ஊற்றி விளக்குகளை ஏற்றி இரவில் அலங்காரம் செய்தனர்.

விஜயநகரத்தில் நடந்த தேர்த் திருவிழாவைப்பற்றி நிக்கோலோ கான்டியும் லின்ஸ்சோட்டன் (Linschoten) என்பவ ரும் கூறியுள்ளனர். 'இரண்டு இரதங்களில் இந்துக்களுடைய தெய்வங்களின் உருவச் சிலைகள் வைத்துக் கட்டப்படுகின்றன. இந்த இரதங்களில் தேவரடியார்கள் ஆடையணிகளை அணிந்து கொண்டு இசைபாடிக் கொண்டிருக்கின்றனர். இவற்றைச் சூழ்ந்து மக்கள் செல்லுகின்றனர். தேர்கள் இழுக்கப்பட்டு வீதிகளில் ஓடும்பொழுது பலர் தங்களுடைய பக்தி மேலீட்டால் கீழே விழுந்து சக்கரங்களால் நசுக்கப்பட்டு உயிர் துறக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் உடலில் கயிறுகளைக் கட்டிக் கொண்டு தேரின் கால்களிலிருந்து தொங்கிக் கொண்டு செல்கின்றனர்'. இவ்விரு வகையாக உயிரிழந்தால் தாங்கள் மோட்ச மடைவது திண்ணமென்ற ஒரு வகையான கொடிய மூடநம்பிக்கை அவர் களிடம் குடிகொண்டுள்ளது. ஆனால், இவ்விதக் கொடியனவும், பிறர் பார்த்து நகையாடக் கூடியனவுமான செய்கைகள் உண்மை யில் நடைபெற்றனவா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். தேர்த் திருவிழாக்கள் பல நாள்களுக்கு நடப்பது வழக்கம். தெப்போற் சவங்களும் காமன் பண்டிகையும் நடைபெற்றதற்குச் சான்று கள் உள்ளன. சிவபெருமான் காமனை எரித்து மீண்டும் உருவ மில்லாமல் இயங்க உயிர்ப்பிச்சை கொடுத்த புராணக் கதையை நினைவுபடுத்துவதே காமன் பண்டிகையாகும்.

22. கல்விக்கூடங்களும் இலக்கியமும்

விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த மக்களுக்குப் பொதுக்கல்வி போதிப்பது அரசாங்கத்தின் கடமையாகக் கருதப்பெறவில்லை. தொழிற் கல்வியையும் பொதுக் கல்வியையும் அரசாங்கங்கள் ஏற்றுப் பல்கலைக்கழகங்களை அமைப்பது தற்காலத்திய குடியரசு அரசாங்கங்களின் கடமையாக உள்ளது. இவ்விதக் கொள்கை விஜயநகரப் பேரரசில் நிலைபெறவில்லை. சமூகத்தில் நிலைபெற்று இருந்த சாதி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், சாதிக்கும் தொழிலுக்கும் ஏற்ற கல்வி முறைகளை அமைத்து நடத்தி வந்தன. விஜயநகர அரசாங்கம் மேற்கூறப்பட்ட கல்வி நிலையங்களில் எவ்விதமான தலையீடும் செய்யவில்லை. ஆனால், சிலைகளில் வல்ல கல்வியாளர்களை அரசர்கள் போற்றிப் பல வழிகளில் ஆதரவு அளித்தனர்.

கிராமங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் தனிப்பட்ட ஆசிரியர்கள் எழுதுதல், படித்தல், கணக்குப் போடுதல் முதலிய அடிப்படையான கல்வியைப் போதித்தனர். புத்தகங்களும் காகிதங்களும் இல்லாத அக் காலத்தில் மணலின்மீது எழுதுவதும் வாய்பாடு முதலியவற்றை மனப்பாடம் செய்வதும் பழக்கத்தில் இருந்தன. இவ்விதப் பழக்கத்தால் காகிதம், எழுதுகோல், பேனு, மை முதலியவற்றிற்குரிய செலவுகள் இல்லை. ஓலைச்சுவடி களே புத்தகங்களாக உபயோகப்பட்டன. ஹோனவார் என்னு மிடத்தில் ஆண்பிள்ளைகளுக்கு இருபத்துமூன்று பள்ளிகளும் பெண்பிள்ளைகளுக்குப் பதின்மூன்று பள்ளிகளும் இருந்தன வென இபன்பதூதா கூறியுள்ளார். தனிப்பட்ட தொழிலாளர்களும் தொழிற்சங்கத்தினரும், அவரவர்களுக்குரிய தொழில்களில் பல இளைஞர்களைப் பயிற்றுவித்து வந்தனர்.

விஜயநகரப் பேரரசில் கிறித்தவ சமயத்தைப் பரவச்செய் வதற்கு இயேசு சங்கத்தைச் சேர்ந்த பாதிரிமார்கள் (Jesuit Fathers) பல கல்விக்கூடங்களை அமைத்தனர். மதுரை நகரில் ஃபெர்ணண்டஸ் (Fernandes) என்பவர் அமைத்த அடிப்படைக் கல்விக்கூடத்தில் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் சிறுவர்களுக்கு எழுத்தறிவித்துவந்தார். இப் பள்ளிக்கு விஜயம்செய்த பிமென்டா பாதிரியார் (Father Pimenta)

அங்குக் கல்வி பயின்ற சிறுவர்களுக்குச் சில பரிசுகளைத் தந்து உள்ளார். சென்னை மயிலாப்பூரில் பிமென்டா பாதிரியாரால் அமைக்கப்பட்ட ஒரு பள்ளியில் தெலுங்கும் தமிழும் போதிக்கப் பட்டன. புன்னைக்காயல் என்ற இடத்தில் கிறித்தவச் சமய போதகர்களுக்குத் தமிழ் மொழியைப் போதிப்பதற்கு ஹென்ரிக் பாதிரியார் ஒரு கல்விக்கூடத்தை 1567-ல் அமைத்தார். இப் பள்ளியில் லூயி என்ற இந்தியக் கிறித்தவர் ஆசிரியராகப் பணியாற்றினர். சந்திரகிரியில் இருந்த விஜயநகரப் பிரபுக்களின் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க ஒரு கல்விக்கூடம் அமைக்கப் பெற்று, அதில் ஓர் இந்து ஆசிரியராக நியமனம் செய்யப் பட்டார்.

அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பண்டிதர்களும் கல்விமான் களும் வேதங்களையும் அவற்றோடு சேர்ந்த கலைகளையும் போதிப் பதற்குப் பல பாடசாலைகளை அமைத்தனர். வடவார்க்காடு மாவட்டத்திலுள்ள அடையபாலம் என்னுமிடத்திலுள்ள காளகண்டேசுவரர் கோவிலில் ஸ்ரீகண்ட பாஷியம் என்னும் நூலைப் போதிப்பதற்கு ஒரு பாடசாலை அமைத்தார். காஞ்சி அருளாளப் பெருமாள் கோவிலில் வேதங்களைப் போதிப்பதற்கு என வேத மடம் ஒன்றிருந்தது. கம்பண உடையார் காலத்தில் வேப்பூர் என்னுமிடத்தில் வேத அத்யயனம் செய்தவர்களுக்கு அத்தியயன விருத்தியாக நிலம் அளிக்கப்பட்டது. கம்பம் பள்ளி என்ற கிராமத்தில் கோவிந்த தீட்சிதர் மகன் பெத்த கிருஷ்ண மாச்சார்லு என்பவர் உபவேதங்களைப் போதிப்பதற்காக அச்சுத ராயர் காலத்தில் நில மானியம் அளிக்கப்பட்டுள்ளது. 1535ஆம் ஆண்டில் திம்மப்பன், வசந்த ராயன் என்ற இரு அந்தணர்கள் ரிக் வேதத்தையும் யஜுர் வேதத்தையும் போதிப் பதற்காக விரிஞ்சிபுரத்தில் நில மானியம் அளிக்கப் பெற்றனர். நெல்லூர் மாவட்டத்தில் பொதிலிச் சீமையில் பட்டவிருத்தி மானியமாக 1579-ல் நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

மதுரை நகரில் வேதாந்த சாத்திரங்களைப் போதிப்பதற்காகக் கல்விக்கூடங்கள் இருந்தனவாக நொபிலிப் பாதிரியார் கூறுவார். அவர் 1610ஆம் ஆண்டில் எழுதிய கடிதம் ஒன்றில், மதுரையில் பதினாயிரம் மாணவர்களுக்குமேல் பல்வேறு பேராசிரியர்களிடம் பல துறைகளில் கல்வி பயின்றனர் எனக் கூறுவார். இரண்டாம் வேங்கட தேவராயர் காலத்திலும் மதுரை முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியிலும் வேத பாடசாலைகளில் பயின்ற மாணவர் களுக்கு உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றை வழங்கவும் ஆசிரியர்களுக்கு ஊதியங்கள் கொடுக்கவும் பல தருமக்

கட்டளைகளை ஏற்படுத்தியிருந்தனர். வைணவக் கோவில்களில் வடமொழி வேதங்களையும், திராவிடப் பிரபந்தங்களையும், வேதாந்த சாத்திரங்களையும் பாராயணம் செய்வதற்கு 1523ஆம் ஆண்டில் கிருஷ்ணராயர் ஆட்சியில் நிலங்கள் வழங்கப்பட்டு உள்ளன. நரசிங்கபுரத்தில் நரச நாயக்கருடைய தருமமாகப் பக்தி சஞ்சீவினி என்ற புராணத்தை விரித்துரைத்த வைணவ அந்தணர்களுக்கு 1534ல் நிலங்களும் வீடுகளும் அளிக்கப் பட்டன. வேதங்களும் புராணங்களும் மடாலயங்களிலும் போதிக்கப்பட்டன.

வானநூல், சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளையும் விஜயநகர அரசர்கள் ஆதரித்தனர். 1556-ல் சர்வபட்டர் என்ற சோதிடருக்குச் சர்வமானியமாக ஒரு கிராமம் வழங்கப்பட்டது. நாகுலவரம் என்னும் கிராமத்தில் வான நூலிலும் இயந்திரங் களை அமைத்துத் தெய்வ வழிபாடு செய்யும் கலையிலும் வல்ல அந்தணர் ஒருவருக்கு 1515ஆம் ஆண்டில் 2,250 குழி நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆயுள் வேதத்திலும், மற்ற வேதாந்த சாத்திரங்களிலும் வல்ல, கோவிந்த பண்டிதருடைய மகனுக்குப் பல நிலமானியங்கள் அளிக்கப்பட்டன. வேதங்கள், சாத்திரங் கள், புராணங்கள், ஆறுவகையான தரிசனங்கள் முதலியவற்றில் வல்ல ஆதித்தராயன் என்ற அந்தணனுக்குத் தேவராயபுரம் என்ற கிராமத்தை மல்லிகார்ச்சுனராயர் பட்டவிருத்தியாக அளித்துள்ளார். யஜுர் வேதத்திலும் ரிக்வேதத்திலும் மற்றோர் அந்தணனுக்குத் திருமலை தேவமகாராயர் நிலத்தானம் கொடுத் துள்ளார். மாதவ வித்தியாரண்யர், வேதாந்த தேசிகர், திண்டிமக்கவி, தாத்தாச்சாரியார், வியாசராயதீர்த்தர், அப்பய்ய தீட்சிதர் முதலிய கல்வியிற் சிறந்த பெரியோர்களுக்கு விஜயநகர அரசர்கள் பலவிதமான தானங்களைக் கொடுத் துள்ளனர்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்ற செப் பேடுகள், கல்வெட்டுகளின் சொல்லமைப்பு, எழுத்திலக்கணம், வரிவடிவம் முதலியவற்றைக்கொண்டு அக் காலத்திய கல்வியின் நிலைமையை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. வடமொழி, தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் கல்வெட்டு களும் செப்பேடுகளும் எழுதப்பட்டன. தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டுகளின் சொல்லாட்சியிலும் எழுத்திலக்கணத்திலும் ஒருவிதத் தரக்குறைவை நாம் காணமுடிகிறது. சோழர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிலவிய கல்வெட்டுகளின் சொல்லாட்சியும் சொற்களின் நடையும் விஜயநகர காலத்தில் மாறுபட்டுள்ளன.

சில அரபு சொற்களும் போர்த்துகீசிய வார்த்தைகளும் விஜய நகர காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுகளில் கலந்துள்ளன. வடமொழியில் கல்வெட்டுகளின் இலக்கணத்தை வகுத்தவர் களுக்குச் சூதர், மாகதர் என்ற பெயர்கள் வழங்கின. அரசர் களுடைய வெற்றிகளையும், வீரச் செயல்களையும், மற்றப்பெருமை களையும் தொகுத்துக்கூறி, அவர்கள் மேற்கொண்ட பட்டங்களை மிகைப்படுத்திக் கூறுவதிலும் அவர்கள் வல்லவர்கள். இவ்விதம் அரசர்களுடைய வெற்றிகளையும், அவர்களுடைய மூதாதையர் களுடைய வெற்றிகளையும் சில சமயங்களில் மிகைப்படுத்திக் கூறி அரச பரம்பரையைக் கூறுவதிலும் வல்லவர்களுக்குச் சாசனச் சாரியர்கள் என்ற பெயர் வழங்கியது. பொதுவாகக் கல்வெட்டு களையும் செப்பேடுகளையும் வரைந்தவர்கள் பொற்கொல்லர் அல்லது தச்சுவேலை செய்த சாதிகளைச் சேர்ந்தவர்களாவர். ஆனால், கல்வெட்டுகளின் வாசகங்களை அமைத்தவர்கள் அந்தண வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். சில சமயங்களில் அரச பரம் பரையைச் சேர்ந்தவர்களும் சாசனச்சாரியர்களாக நியமிக்கப் பட்டனர்.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் காகிதமும் காகிதங்களைக் கொண்டு செய்யப்பட்ட புத்தகங்களும் கிடையா. பனையோலையின்மீது எழுத்தாணி கொண்டு எழுதப் பெற்ற ஓலைச் சுவடிகளே புழக்கத்திலிருந்தன. அப்துர் ரசாக் பனையோலையின் மீது இருவிதமாக எழுதப்பெற்ற முறைகளை விவரித்துள்ளார். 'இரண்டு முழம் நீளமும், மூன்று விரல்கடை அகலமும் உள்ள பனை யோலையின்மீது எழுத்தாணிகொண்டு எழுதுகின்றனர். இம் மாதிரி எழுதப்படும் எழுத்துகளின்மீது எவ்விதமான வண்ணங் களும் பூசுவதில்லை. ஆகையால், அவை விரைவில் மறைந்து விடுகின்றன. மற்றொரு விதத்தில் வெண்மையான ஓலைகளின்மீது கறுப்பு மையைப் பூசுகின்றனர். அவற்றின்மீது எழுதப்பெற்ற எழுத்துகள் தெளிவாகத் தெரிகின்றன. அந்தச் சுவடிகள் நெடுங் காலத்திற்கு நீடிக்கின்றன.' கள்ளிக்கோட்டைக்கு வருகை தந்த பார்போசாவும் இவ்விதப் பனையோலைச் சுவடிகளைப்பற்றிக் கூறுவார்.

விஜயநகரப் பேரரசில் நிலைபெற்றிருந்த பெரிய ஆலயங்களில் சரஸ்வதி பண்டாரம் என்ற நூல்நிலையங்கள் இருந்தன. 1359ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற கல்வெட்டு காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோவிலிலிருந்த மடாலயம் ஒன்றில் ஓலைச் சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன என்று கூறுகிறது. சிருங்கேரி மடாலயத்திலிருந்த புத்தகப் பண்டாரத்தின் பாதுகாவலராக

இருந்த கவி கிருஷ்ணபட்டர் என்பவருக்கு 1407ஆம் ஆண்டில் இரண்டாம் புக்கதேவர் நிலமானியம் அளித்துள்ளார். விஜயநகர ஆட்சிக்காலத்தில்தான் தமிழ் எழுத்துகளுக்கு அச்சுக்கோத்து, காகிதங்களின்மீது அச்சடிக்கும் பழக்கம் தோன்றியதாகத் தெரிகிறது. 1577-ல் இயேசு சங்கத்தைச் சேர்ந்த கியோவன்னி கன்சால்வஸ் (Giovanni Consalves) என்பார் கிறித்தவ சமயக் கொள்கைகளைப் புத்தக வடிவில் வெளியிட்டார். அப் புத்தகங்களைக் கண்ட இந்தியக் கிறித்தவர்களும் மற்றையோர்களும் அவற்றை ஓர் அதிசயப் பொருளாகக் கருதினர்.'[1]

வடமொழி இலக்கிய வரலாறு

தென்னிந்திய வரலாற்றில் பல்லவ, சோழ, விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் வடமொழியிலும் மற்றத் திராவிட மொழிகளிலும் இலக்கிய வளர்ச்சி பெருமளவில் காணப் பெறுகிறது. ஐரோப்பிய வரலாற்றில் சமய சீர்திருத்தத்திற்கு இலக்கியம் துணை செய்ததுபோல் தென்னிந்திய வரலாற்றிலும் இந்தியச் சமயங்களுக்கும், தத்துவக் கொள்கைகளுக்கும் இலக்கிய வளர்ச்சி பேருதவி புரிந்துள்ளது. விஜயநகர ஆட்சியில் தோன்றிய இலக்கியங்கள், பிரபந்தங்கள், காவியங்கள் முதலியன பல வரலாற்றுண்மைகளைக்கொண்டு விளங்குகின்றன.

விஜயநகர அரசர்கள் சமய வேற்றுமை பாராட்டாது இலக்கியத்தில் வல்ல பெரியோர்களை ஆதரித்தனர். இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ள இரண்டாம் ஹரிஹரதேவர், நாஞர்த்த ரத்தின மாலை என்ற வடமொழி நூலை இயற்றிய இருகப்ப தண்ட நாதர் என்ற சமண சமயத்தைச் சேர்ந்த பெரியாரை ஆதரித்துள்ளார். அத்வைத தரிசனத்தில் மிகுந்த ஆர்வமுள்ள அப்பய்ய தீட்சிதரை வைணவ சமயத்தில் பற்றுள்ள இரண்டாம் வேங்கட தேவர் ஆதரித்தார். விஜயநகரப் பேரரசர்களும், அவர்களுடைய சிற்றரசர்களும் இலக்கியப் புலமை வாய்ந்த புலவர்களாக விளங்கியுள்ளனர். கிருஷ்ண தேவராயரும் தஞ்சை இரகுநாத நாயக்கரும் பல புலவர்களை ஆதரித்ததோடு சிறந்த நூல்களையும் இயற்றியுள்ளனர். வேலூர் சின்ன பொம்ம நாயக்கர் அப்பய்ய தீட்சிதருக்குக் கனகாபிஷேகம் செய்து ஆதரித்தார். இராஜ வியாசர், இராஜ வால்மீகி, கர்நாடக வித்யா விலாசர் என்ற பட்டப் பெயர்களை இரண்டாம் ஹரிஹரர் மேற்கொண்டது அவருடைய இலக்கியப் புலமையை எடுத்துக்காட்டும். குமார கம்பணருடைய அரசி கங்காதேவியும், வரதாம்பிகா பரிணயம் என்ற

[1]Father Heras. Aravidu Dynasty I, pp. 530-31.

காவியத்தை இயற்றிய திருமலாம்பாளும், இரகுநாத அப்பூதயர் என்ற நூலை இயற்றிய இராமபத்திராம்பாளும் இலக்கியச் செல்வம் படைத்த அரசிகளாவர். விஜயநகர ஆட்சிக் காலத்தில் வடமொழியாகிய ஆரியம் வழக்கு ஒழிந்த மொழியாகக் கருதப் படவில்லை. தலைசிறந்த சமயக் கொள்கைகளும், காவியங்களும், இலக்கியங்களும் ஆரிய மொழியில் எழுதப்பட்டன.

வேதாந்த தேசிகர் (1269—1368)

வைணவ சமயத்தில் தலைசிறந்தவராக விளங்கி விசிஷ்டாத்து விதக் கொள்கையைப் பரவச் செய்தவர் இராமானுஜராவார். அவருடைய மாணவராகிய பிரணதார்த்திகரர் சந்ததியில் தோன்றிய அனந்தசூரி சோமயாஜி, தோதராம்பாள் என்ற பெற்றோர்களுக்கு வேதாந்த தேசிகர் 1269-ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள துப்பில் என்னுமிடத்தில் பிறந்தார். திருவேங்கடமுடையானுடைய திருவருளால் பிறந்தவராகையால் வேங்கடநாதன் என்ற பெயரும் அவருக்கு வழங்கியது. இளவயதில் ஆத்திரேய இராமானுஜர் என்பவரிடம் கல்வி பயின்று பின்னர்த் திருவரங்கம் கோவிலின் தலைவராகப் பதவி வகித்தார். குமார கம்பணர் மதுரைச் சுல்தானை வென்று தமிழ்நாட்டை விஜயநகர ஆட்சியில் கொண்டுவந்த பிறகு ஸ்ரீரங்கநாத விக்கிரகத்தைச் செஞ்சியிலிருந்து கோபண்ணரியருடைய உதவியினால் ஸ்ரீரங்கத்திற்குக் கொண்டுவரச்செய்து, மீண்டும் வழிபாடுகள் நடைபெறும்படி ஏற்பாடுகள் செய்தார். ஸ்ரீரங்கத்திற்குச் செல்வதற்கு முன் திருப்பாதிரிப் புலியூருக்கு அருகில் உள்ள திருவகீந்திரபுரத்தில் தங்கியிருந்து தேவநாதப் பெருமானுடைய திருவருளைப் பெற்றுப் பல நூல்களை இயற்றினர்.

வடமொழியிலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்ற வேதாந்த தேசிகர் தமிழ், பிராக்கிருதம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் 120-க்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 90 நூல்கள் வடமொழியிலும் பிராக்கிருதத்திலும் எழுதப்பெற்றன. ஆனால், அவரால் இயற்றப்பட்ட பல வடமொழி நூல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

(1) ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய வாழ்க்கையை இருபது பகுதிகளாக வகுத்துக் கூறுவது யாதவ அப்பூதயம் என்னும் வடமொழிக் காவியமாகும். இதன் பெருமையை உணர்ந்த அப்பய்ய தீட்சிதர் இதற்குச் சிறந்த உரையொன்று இயற்றியுள்ளார்.

(2) காளிதாசருடைய மேகதூதம் என்னும் நூலைப் பின் பற்றி எழுதப்பட்டது வேதாந்த தேசிகருடைய 'ஹம்ச சந்தேசம்' ஆகும்.

(3) ஸ்ரீராமபிரானுடைய திருவடியைப்பற்றி ஆயிரம் சுலோகங்களில் புகழ்ந்து கூறும் நூல் 'பாதுகா சகஸ்ரம்' ஆகும்.

(4) விசிஷ்டாத்வைத தரிசனத்தின் பெருமையை விளக்கு வதற்கு எழுதப்பட்ட இதிகாச நாடகம் 'சங்கல்ப சூர்யோதம்'. ஆகும். இது சங்கராச்சாரியாருடைய அத்வைதக் கொள்கைகளை விளக்கிய கிருஷ்ணமிசிரருடைய பிரபோத சந்திரோதயத்தைப் போல் ஸ்ரீராமானுஜருடைய விசிஷ்டாத்வைதக் கொள்கைகளை விளக்குகிறது ; மக்களுடைய விருப்பு வெறுப்புகளையும், அறிவை யும், அறிவின்மையையும், பண்புகளையும், தீய செயல்களையும் நாடக மூலமாக எடுத்துக் காட்டுகிறது.

(5) சுபாஷிதநிவி என்ற நூல் 144 சுலோகங்களுடன் இரு விதப் பொருட் செறிவுடன் கடினமான வடமொழிப் பதங்களைக் கொண்டு இயற்றப்பட்டது. அறக் கொள்கைகளை அகப் பொருளாக உடையது.

(6) அத்வைதக் கொள்கைகளைக் கண்டித்து நூறு காரணங் களைக் காட்டி எழுதப்பட்ட நூல் 'சததூஷணி' யாகும்.

(7) இராமானுஜருடைய ஸ்ரீபாஷியத்திற்கு ஓர் அகராதி போன்று விளங்குவது 'தத்துவதீகா' என்னும் நூலாகும்.

(8) தாத்பர்ய சந்திரிகா, நியாய சித்தாஞ்சனம், அதிகரண சாரார்வளி, சஸ்வர மீமாம்சை, நியாய பரிசுத்தி, தத்துவ மூல கற்பம் என்ற நூல்கள் விசிஷ்டாத்வைதக் கொள்கைகளை நன்கு விளக்குகின்றன.

(9) இரகசியதிரயசாரம் என்னும் தமிழ் நூலில் அறநூல் (Ethics), சமய விஞ்ஞானம் (Theology), நுண் பொருள் விளக்கம் (Metaphyses) என்பவற்றை விளக்கி வைணவ சம்பிரதாயமாகிய 'சரணாகதி' அல்லது 'பிரபத்தி' என்பதன் உட்பொருளை விளக்கி யுள்ளார். இந்நூல் சமய சாதி பேதமின்றி எல்லோராலும் பயிலப்பட வேண்டியதாகும்.

(10) ஹயக்ரீவ தோத்திரம், வரதராஜ பஞ்சசத், அஷ்ட புய சதகம், சுதர்சன அஷ்டகம், சோடஸபாத தோத்திரம் முதலியன சிறு சிறு தோத்திரப்பாக்களாகும்.

(11) பன்னிரு ஆழ்வார்களுடைய பிரபந்தங்களைப்பற்றியும் திருப்பாணாழ்வாருடைய 'அமலன் ஆதி பிரான்' என்ற தலைப்பைப்பற்றியும் இன்னும் பல வைணவ சித்தாந்தங்களைப் பற்றியும் எழுதப்பட்டது எழுபத்து நான்காயிரம் என்னும் உரை வளமாகும்.

(12) பஞ்சராத்திர ரக்ஷா, சச்சரித ரக்ஷா என்னும் நூல்கள் பஞ்சராத்திர ஆகம வழிபாட்டை விளக்குவதாகும். இரகசியங்கள் என்னும் தலைப்புள்ள சுலோகங்கள் அமர வாழ்க்கை பெற விரும்பும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகும். பரமத பஞ்சனம் என்னும் நூலில் விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு எதிர்ப்பான சமயங்களைக் கண்டித்துள்ளார்.

வித்தியாரண்யர்

விஜயநகரத்தையும் விஜயநகரப் பேரரசையும் தோற்றுவித்து இந்து சமயமும், பண்பாடும், கலாசார அமைப்புகளும் அழிவு படாமல் காப்பாற்றியது மட்டுமன்றிப் பல சமய - தத்துவ நூல்களையும் இயற்றியவர் வித்தியாரண்யராவர். (1) அனுபூதி பிரகாசிகை என்னும் நூல் உபநிடதங்களின் சாரமாக அமைந்துள்ளது, (2) அபரோக்ஷானுபூதி தீபிகை என்பது சங்கராச்சாரியாருடைய நூலிற்கு உரையாக எழுதப்பட்டது. (3) ஐத்தரேய தீபிகை, தைத்திரீய தீபிகை, (4) விவரண பிரமேய சங்கிரகம், பஞ்சதசி என்பன பாரதி தீர்த்தரும் வித்தியாரண்யரும் சேர்ந்து இயற்றிய நூல்கள் எனக் கருதப்படுகின்றன. பஞ்சதசி என்னும் நூல் விவேக பஞ்சகம், தைப பஞ்சகம், ஆனந்த பஞ்சகம் என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது, (5) ஜீவன் முக்தி விவேகம், (6) தீர்க்க தரிசன விவேகம் என்ற நூல்களையும் மேற்கூறப்பட்ட இருவரும் சேர்ந்து இயற்றியதாகக் கருதப்படுகின்றது. வித்தியாரண்யர், சங்கீத சாரம் என்ற இசை நூலை இயற்றியதாக ரகுநாத நாயக்கர் இயற்றிய சங்கீத சுதா என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

மாதவாச்சாரியார்

இவர் மாயனருடைய மகன் என்றும் போதாயன சூத்திரம், பரத்துவாச கோத்திரம், யஜுர் சகம் முதலிய அடைமொழிகளை உடையவர் என்றும் கூறப்படுகிறார். வித்தியாரண்யரும் மாதவாச்சாரியரும், மாதவ வித்தியாரண்யர் என்ற ஒருவரா இருவரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், திரு. T. V. மகாலிங்கம் அவர்கள் இரு வேறு புலவர்கள் என்று கூறுவார்.

மாதவாச்சாரியருடைய முக்கிய நூல் பராசர ஸ்மிருதியின் உரையாகிய பராசரஸ்மிருதி வியாக்கியமாகும். இஃது இந்து சமயத்தைச் சார்ந்தவர்களுடைய நித்திய அனுஷ்டானங்களைக் கூறுவதாகும். இந்துக்களுக்குள் நிலைபெறவேண்டிய விவ காரங்களைப் பற்றியும் ஓர் அத்தியாயம் இந்த உரை நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு விவகார மாதவ்யம் என்ற பெயர் வழங்குகிறது. மாதவ்ய கால நிர்ணயம் என்ற நூல் சமூகத்தில் நிலவவேண்டிய தருமத்தைப் பற்றிக் கூறுகிறது. ஜீவன் முக்தி விவேகம் என்ற நூல் அத்வைதக் கொள்கை களின்படி பரமஹம்சர்கள் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளைப் பற்றிக் கூறுகிறது. ஜைமினி சூத்திரங்களின் உட்பொருள்களை விளக்கி யாகங்கள் செய்வதன் பயனையும் செய்முறைகளையும் பற்றிக் கூறும் நூலுக்குக் கர்மமீமாம்ச நியாயமால விஸ்தாரம் என்ற பெயர் வழங்குகிறது. இந்நூல் புக்க தேவராயருடைய சபையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இந் நூலின் பின்னணி யுரையில் (Colophon) மீமாம்ஸ சாத்திரத்தில் வல்லவரும் வசந்த காலத்தில் சோமயாகம் செய்தவரும் ஆகிய மாதவாச்சாரியார் என்று இவர் புகழப்பட்டுள்ளார்.

மாதவாச்சாரியார் வேத விதிப்படி இல்லறம் நடத்தியவர். வித்தியாதீர்த்தர், பாரதி தீர்த்தர், ஸ்ரீகண்டர் என்ற சிருங்கேரி சங்கராச்சாரியார்களைத் தம்முடைய குருபீடங்களாகக் கொண் டிருந்தார். இவரைச் சிருங்கேரி மடத்து மாதவ வித்தியாரண் யராகக் கருதுபவரும் உளர். ஆனால், மாதவாச்சாரியார் இல்லற வாழ்க்கையைக் கைவிடாது முதலாம் புக்கருக்கும், இரண்டாம் ஹரிஹரதேவருக்கும் குலகுருவாக இருந்து சேவை செய்துள்ளார்[1].

சாயணாச்சாரியார்

மாதவாச்சாரியாருடைய தம்பியாகிய சாயணாச்சாரியாரும் கல்வியறிவும் அரசியல் தெளிவும் பெற்ற அறிஞராவார். அவர் தாம் எழுதிய அலங்கார சுதநிதி என்னும் நூலில் முதலாம் கம்பணருக்கும் அவருடைய மகன் சங்கமனுக்கும் அமைச்சராகப் பணியாற்றிப் பின்னர் முதலாம் புக்கருக்கும் இரண்டாம் ஹரிஹரருக்கும் பணியாற்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் சங்கமன் இளைஞனாக இருந்தபொழுது சிறிதுகாலம் அரசு பதவியையும் வகித்தார். இல்லற வாழ்வு நடத்திக் கம்பணன், மாயணன், சிங்கணன் என்ற மூன்று குமாரர்களுக்குத் தந்தையானார்; முதலாம் கம்பணருடைய சபையில் அமைச்சி

[1] Dr. T.V.M., Administration and Social Life, Vol. II, p. 260.

ராக விளங்கிச் சுபாஷித சுதநிதி என்ற வடமொழி நூலை இயற்றியுள்ளார். இந் நூலில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்கள் எவை என்று விளக்கப் பட்டுள்ளன. தாது விருத்தி என்ற நூலில் வட மொழியில் காணப்படும் வினைச் சொற்களும், அவற்றின் விகற்பங்களும் கூறப்பட்டுள்ளன. கர்மவிபாகம் என்னும் நூலில் மக்கள் அறிந்தோ அறியாமலோ செய்யும் பலவிதமான பாவச் செயல் களுக்குப் பிராயச்சித்தங்களும், யக்ஞதந்திர சுதநிதி என்னும் நூலில் யாகங்களைச் செய்யும் முறைகளும், அலங்கார சுதநிதி என்னும் நூலில் ரசம், குணம், தொனி, அலங்காரம் முதலிய உவமை, உருவகம் முதலிய அணி இலக்கணங்களும் கூறப்பட் டுள்ளன. மேற்கூறப்பட்ட நூல்கள், இரண்டாம் சங்கமனுடைய சபையில் அரங்கேற்றப்பட்டன.

இரண்டாம் புக்கருடைய சபையில் வேதங்களுக்கு உரை நூல்களும் நால்வகைப் புருஷார்த்தங்களைப்பற்றிப் புராணங் களில் கூறப்படும் செய்திகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆயுள்வேத சுதநிதி என்ற நூலையும் சாயணாச்சாரியார் இயற்றிய தாகத் தெரிகிறது. சாயனரால் பின்வரும் உரை நூல்கள் எழுதப்பெற்றனவாகத் தெரிகிறது. அவை தைத்தீரிய ஆரண்யக பாஷியம், சுக்ல யஜுர் வேத பாஷியம், வம்ச பிராமண பாஷியம், தைத்திரீய சம்கீத பாஷியம், சாமவேத சம்கீத பாஷியம், அதர்வவேத சம்கீத பாஷியம், இருக்குவேத பாஷியம் என்பனவாகும். ஆனால், மேற் கூறப்பட்ட பாஷியங்கள் எல்லாம் சாயணாச்சாரியால் தனியாக எழுதப் பெற்றனவா, மாதவாச்சாரி யரும் சேர்ந்து எழுதினரா, இவ் விருவருடைய தலைமையில் பல வேதவிற்பனர்கள் சேர்ந்து எழுதியதை இவ் விருவரும் சேர்ந்து பதிப்பித்தனரா என்ற கேள்விகளை வடமொழி நூல் களின் ஆராய்ச்சியாளர்கள் எழுப்பியுள்ளனர். இக் கேள்வி களுக்குப் பதில் கூறும் முகத்தால் மாதவாச்சாரியாருடைய உதவி யுடன் சாயணாச்சாரியாரும், இன்னும் பலரும் சேர்ந்துதான் வேதங்களுக்கு உரைகள் எழுதியிருக்கக்கூடும் என்று கூறலாம். சாயனர் 1377ஆம் ஆண்டு வரையில் உயிர் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

போகநாதர்

மாதவாச்சாரியாருடைய மற்றொரு தம்பி போகநாதர் என்பவராவார். இரண்டாம் சங்கமனுடைய பித்திரகுண்டூர்க் கல்வெட்டுகளில் இவர் சங்கமனுடைய நர்மசச்சிவர் என்று கூறப் பட்டுள்ளளார். அலங்கார சுதநிதி என்னும் நூலில் இருந்து போக

நாதர், பிற்கூறப்படும் நூல்களை இயற்றியதாகத் தெரிகிறது. அவை இராமோல்லாசம், திரிபுர விஜயம், உதராணமாலை, மகா கணபதி சத்வம், சிருங்கார மஞ்சரி, கௌரிநாத சதகம் என்பன வாகும். இவற்றுள் முதலிரண்டு நூல்களும், இதிகாசங்களையும் புராணங்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளன.

கங்காதேவி

குமார கம்பணருடைய மனைவியாகிய கங்காதேவி மதுர் விஜயம் என்ற வடமொழிக் காவிய வரலாற்று நூலை இயற்றியதைப்பற்றி முன்னரே கூறப்பட்டுள்ளது. மகா காவியத்தின் முறையையும், வைதர்ப்ப நாட்டு மொழியின் நடையையும் பின்பற்றி அழகிய உவமை உருவகங்களோடு இந் நூல் எழுதப்பட்டுள்ளது. இலக்கணச் சிக்கல்கள் இல்லாமலும் ஆடம்பரமான விவரணைகள் இல்லாமலும், காளிதாசருடைய இயற்கை வருணனைகளைப் பின்பற்றி இந் நூலைக் கங்காதேவி இயற்றியுள்ளார்.

அக்ஷோபய தீர்த்தர் என்பவர் மாதவ தத்துவசார சங்கிரகம் என்ற வடமொழி நூலை இயற்றியதாகக் கருதப் படுகிறது. இவருடைய மாணவர் ஜெயதீர்த்த திக்காச்சாரியார் இருபத்து மூன்று நூல்களை இயற்றினர், அவற்றுள் தத்துவப் பிரகாசிக சுதா, நியாய விவரணம், பிரமேய தீபிகை, நியாய தீபிகை, பிரமாண பத்ததி முதலியன முக்கியமானவையாகும்.

துவைதக் கொள்கைகளில் சிறந்த அறிஞராகக் கருதப்பட்ட நரஹரி தீர்த்தர், யாம்லக பாரதம், உபநிஷத்துகள் ஆகிய வற்றிற்கும், ஆனந்த தீர்த்தருடைய சூத்திர பாஷியங்களுக்கும் உரைகள் எழுதியதாக நாம் அறிகிறோம். மாதவ தீர்த்தர் என்ற மற்றொரு துவைத அறிஞர், இருக்கு, யஜுர், சாம வேதங்களுக்கு உரைகள் எழுதியதாக நாம் கேள்விப்படுகிறோம். இரண்டாம் ஹரிஹர தேவருடைய அமைச்சராகிய இருகப்ப தண்டநாதர் நானூர்த்த ரத்தினமாலை என்ற வடமொழி அகராதியை எழுதினர். இரண்டாவது ஹரிஹரருடைய மகன் உதயகிரி விருபண்ண உடையார் நாராயணி விலாசம் என்ற வடமொழி நாடகத்தை இயற்றி யுள்ளார். வித்தியாரண்யருடைய மாணவ ராகிய நாராயணன் என்பவர் வடமொழியில் உள்ள நைடதத் திற்கு நைடத தீபிகை என்ற உரை நூலை எழுதியுள்ளார். இரண்டாம் புக்க தேவருடைய அவைப் புலவராகிய இலக்குமண பண்டிதர் வைத்திய ராஜ வல்லபம் என்ற மருத்துவ நூலை வட மொழியில் இயற்றினர்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழிப் புலவர்கள்

முதலாம் தேவராயருடைய மகனாகிய இராமச்சந்திரன் என்பவரால் ஆதரிக்கப்பட்ட சென்னுபட்டர், கிருஷ்ணமிஸ்ர ருடைய நூலுக்கு உரை எழுதியுள்ளார். வானநூலில் வல்லவ ராகிய வித்தியாமாதவ சூரி என்பவர், குமார சம்பவம், கிராதா அர்ஜுனியம் என்பவைகளுக்கு உரையும், முகூர்த்ததரிசனம் என்ற சோதிட நூலும் இயற்றினார். இவருடைய மகன் விஷ்ணு சூரி என்பவரை மல்லப்ப உடையார் என்பவர் ஆதரித்தார். முகூர்த்த தீபிகை என்ற சோதிட நூலை இயற்றியவர் விஷ்ணு சூரியாவார். வட மொழியிலும், தமிழிலும் வல்லவராகிய மணவாள மாமுனிகள் இந்நூற்றாண்டில் வாழ்ந்தார். இவரால் எழுதப் பெற்ற தத்துவத்திரையம், இரகசியத் திரையம், ஸ்ரீ வசன பூஷணம், ஞானசாரம் என்பன வடமொழியில் இயற்றப்பட்ட தத்துவ நூல்களாகும். இரண்டாம் தேவராயர் பல மொழி வல்லுநர்களை ஆதரித்ததோடு பல வடமொழி நூல்களை இயற்றிய தாகவும் தெரிகிறது. இரதிரத்ன தீபிகை, பிரம்ம சூத்திரவிருத்தி என்ற நூல்கள் பதராயணருடைய பிரம சூத்திரங்களின் உரை நூல்கள் எனக் கருதப்படுகின்றன. இரண்டாம் தேவராய ருடைய மருமகன் கோபதிப்பன், காவியாலங்கார காமதேனு, தாளதீபிகை என்ற நூல்களின் ஆசிரியர் எனக் கருதப்படுகிறார். பவபூபதியின் மாலதி - மாதவம் என்ற வடமொழி நாடகத்தைப் பின்பற்றி மல்லிகா - மாருதி என்ற நாடகத்தை உத்தண்டர் என்பவர் இயற்றியுள்ளார். ஆனந்த பூரணர் என்பவர் நியாய சந்திரிகா என்ற நூலையும், கண்டன கண்டகத்யம், பிரம்மசித்தி, விவரணம் முதலிய உரைகளையும் இயற்றியுள்ளார். தோலப்பர் என்பவர் சுமிருதி ரத்னகரம் என்ற தருமசாத்திர நூலை இயற்றி யுள்ளார்.

சாளுவ வமிசத்தை மேன்மைக்குக் கொண்டுவந்த நரசிம்மர் வடமொழியில் இராம அப்யுதயம் என்ற நூலை இயற்றி யுள்ளார், சாளுவ நரசிம்மருடைய ஆட்சிக் காலத்தில் திண்டிமக் கவிகள் பரம்பரையில் பல ஆசிரியர்கள் தோன்றினர். இராஜநாத திண்டிமர் என்பவர் சாளுவ நரசிம்மருடைய ஆஸ்தான கவியாகப் பதவி வகித்துச் சாளுவ அப்யுதயம் என்னும் நூலை இயற்றினார். இராஜநாத திண்டிமருடைய மகன் சர்வபௌம திண்டிமர் இராம அப்யுதயம் என்ற நூலின் உண்மையான ஆசிரியர் எனத் தெரிகிறது. சோமவல்லி யோகானந்த பிரகசனம் என்னும் நாடகத்தையும் சங்கராச்சாரியாருடைய சௌந்தர்யலஹரிக்கு ஓர் உரையையும் அருணகிரி நாதர் என்பவர் இயற்றினார்.

வியாக்கிய நிகண்டு என்ற அகராதி நூல் தேவராசர் என்பவரால் எழுதப்பட்டது. வைணவ ஆழ்வார்கள், ஆசாரியர்களுடைய சமயப் பணிகளைக் கூறும் திவ்யசூரி சரிதம் என்ற நூலைக் கருட வாகனன் என்ற ஆசிரியர் இயற்றி யுள்ளார். மல்லிகார்ச்சுன விஜயம் என்ற நூலைக் கள்ளரசர் என்பவரும், கங்காதாசப் பிரதாப விலாசம் என்பதைக் கங்காதரனும் மல்லிகார்ச்சுன ராயர் காலத்தில் இயற்றினர்.

பதினெரும் நூற்றாண்டுப் புலவர்கள்

பேரரசர் கிருஷ்ண தேவராயருடைய ஆட்சியில் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் முதலிய மொழிகளில்வல்ல பல புலவர்கள் இருந்தனர். வடமொழியிலும், தெலுங்கு மொழி யிலும் சிறந்த புலமை வாய்ந்த அரசர் கிருஷ்ண தேவராயர். ஆமுக்த மால்யதா என்ற தெலுங்குப் பிரபந்தத்தை இயற்று வதற்குமுன் மதலாச சரித்திரம், சத்தியவாது பரிணயம், சகல கதாசார சங்கிரகம், ஞானசிந்தாமணி, ரசமஞ்சரி முதலிய நூல்களை இயற்றியதாக நாம் அறிகிறோம். கிருஷ்ண தேவ ராயரால் எழுதப்பட்ட ஜம்பாவதி திருமணம் என்னும் நாடகம் ஹம்பி விருபாட்சர் கோவிலில் வசந்தகால உற்சவ காலத்தில் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் நடித்துக் காட்டப்பெற்றது.

கிருஷ்ண தேவராயருடைய முக்கிய அமைச்சராகிய சாளுவ திம்மர் வடமொழியில் பாலபாரத வியாக்கியம் அல்லது மனோரமா என்ற நூலை இயற்றினர். இந்த நூலின் பின்னணி உரையில் தம்மைப் 'பிரதான சகலாகம பிரவார தண்ட நாயகர்' என்று அழைத்துக்கொண்டுள்ளார். கிருஷ்ணமிசி ரருடைய புகழ்மிக்க பிரபோத சந்திரோதயம் என்னும் நாடக நூலுக்குக் கோபன்ன என்பவர் சந்திரிகா என்ற விரிவுரை எழுதினர். உலோல இலக்குமிதரன் என்ற வடமொழிப் புலவர் வான நூல், சோதிடம், மந்திர சாஸ்திரம், அறுவகைச் சமய நூல்கள், நீதி நூல்கள் முதலியவற்றில் வல்லவராக இருந்தார். இப் புலவர் தொடக்கத்தில் கலிங்க நாட்டுப் பிரதாபருத்திர கஜபதியின் ஆஸ்தானக் கவியாக இருந்து பின்னர், விஜய நகரத்தில் ஆஸ்தான கவியாக அமர்ந்தார். இலக்குமி நாராயணன் என்பவர் சங்கீத சூரியோதயம் என்ற நூலை இயற்றிக் கிருஷ்ண தேவராயருக்கு அர்ப்பணம் செய்துள்ளார். ஹரிபட்டர் என்பவர் வடமொழியில் இரதி ரகசியம் என்ற இன்ப நூலை இயற்றியுள்ளார். ஈஸ்வர தீட்சிதர் என்பவர் வடமொழி இராமாயணத்திற்கு இரண்டு உரைகளை 1517ஆம் ஆண்டில் எழுதினர்.

அச்சுத தேவராயரும் தம்முடைய தமையன் கிருஷ்ண தேவராயரைப் போன்று பல கல்விமான்களைப் போற்றினர். அச்சுத ராயரால் இயற்றப்பட்ட தாளமஹோததி என்னும் நூலிற்குச் சோமநாதகவி என்பவர் உரையெழுதி யுள்ளார். அச்சுத ராய அப்யுதயம் என்ற வரலாற்று நூலை இராஜ நாத திண்டிமர் (11) என்பவர் இயற்றி அச்சுத ராயருக்கு அர்ப்பணம் செய்தார். இந் நூலில் அச்சுத ராயருடைய தகப்பன் நரச நாயக்கருடைய வீரச் செயல்கள் புகழப்பட்டுள்ளன. வர தாம்பிகா பரிணயம் என்னும் நூலை இயற்றிய திருமலாம்பாள் என்னும் கவியரசியும் அச்சுத ராயருடைய சபையில் இருந்தார். ஹம்பி வித்தளர் கோவிலில் உள்ள வடமொழிக் கல்வெட்டு ஒன்றில் அச்சுத ராயர் சுவர்ணமேரு தானம் செய்ததைப் பற்றிக் கூறுகிறது. இச் செய்யுளும் திருமலாம்பாள் இயற்றியதாகக் கருதப்படுகிறது. மோகனங்கி என்ற பெயருள்ள கவியரசி மாரீசி பரிணயம் என்ற அகப் பொருட்டுறை இலக்கியத்தை இயற்றிய தாகத் தெரிகிறது. அச்சுத ராயர் காலத்தில் இருந்த ஸ்ரீனி வாசன் என்ற புலவன் தமிழ்நாட்டில் வழங்கிய அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய வரலாற்றை வடமொழியில் சிவபக்த விலாசம் என்ற பெயருள்ள நூலில் விளக்கியுள்ளார். செஞ்சியில் சூரப்ப நாயக்கர் என்பவர் ஆட்சிபுரிந்த காலத்தில் இரத்தினகேட ஸ்ரீனிவாச தீட்சிதர் பவன புருஷோத்தமன் என்ற வடமொழி நாடக நூலை இயற்றிச் சூரப்ப நாயக்கருக்கு அர்ப்பணம் செய்து உள்ளார்.

கன்னட மொழிப் புலவர்கள் :

விஜயநகர ஆட்சிக் காலத்தில் கன்னடமொழியில் தோன்றிய இலக்கியங்கள் பெரும்பாலும் வீரசைவ, சமண, வைதீக சமய சம்பந்தப் பட்டவையாக இருந்தன. சில இலக்கியங்கள் சமயச் சார்பில்லாமலும் இருந்தன. ஆராத்திய அந்தண வகுப்பைச் சேர்ந்த பீமகவி கன்னடத்திலும் தெலுங்கு மொழி யிலும் மிக்க புலமை வாய்ந்திருந்தார். சோமநாதர் என்பவர் தெலுங்கில் எழுதிய பசவ புராணத்தைக் கன்னடத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூலில் நந்தி பகவானுடைய திருவவதார மாகத் தோன்றி வீரசைவ சமயத்தைப் பசவர் நிலை நாட்டினர் என்ற கொள்கை வலியுறுத்தப் படுகிறது. பாகுபலி என்ற கவிஞர் பதினேந்தாவது சமண தீர்த்தங்கரர் தருமநாதர் என்பவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். தரும பரீட்சை, சாஸ்திர சாரம் என்ற வடமொழி நூல்களின் சாரத்தைக் கன்னடத்தில் விருத்த விலாசர் என்பவர் எழுதிப் போந்தார். இரண்டாம் ஹரிஹரர் கன்னட மொழியில் புலமை பெற்றிருந்தமை

'கர்நாட்க வித்யா விலாசர்' என்ற அடைமொழியால் புலனு கின்றது. சமண சமயத்தைச் சேர்ந்த மதுர மாதவர் பதினேந்தாவது தீர்த்தங்கரர் வரலாற்றைத் தருமநாதர் புராணம் என்னும் நூலிலும், சிராவண பெல்கோலாவில் உள்ள கோமதீஸ் வரரைப் பற்றிக் கோம்மதஸ்துதி என்ற நூலிலும் எழுதினர்.

இரண்டாம் தேவராயர் ஆட்சியில் சமண, வீரசைவ சமயங் களைப் பற்றிய வசன நூல்கள் பெருமளவில் எழுதப் பெற்றன. வீரசைவ சித்தாந்த தந்திரம் என்ற சிறந்த தத்துவ நூலை இலக்குவ தண்டநாதர் என்பவரும் நூற்றொரு ஸ்தலம் என்ற நூலை ஜக்கணரியரும் இயற்றினர். இலக்குவ தண்டநாதர் என்பவர் குமாரபங்க நாதர், மகாலிங்க தேவர் என்ற இரு கவிஞர்களை ஆதரித்தார். ஆயதவர்மன் என்பவர் இரத்தின கரண்டகம் என்ற சம்பு காவியத்தை இயற்றிச் சமண சமயக் கொள்கைகளாகிய சரியான நம்பிக்கை, நல்ல நம்பிக்கை, நல்ல நடத்தை என்ற மூன்று இரத்தினங்களின் தன்மைகளை விவரித்துள்ளார். காமராசர் என்பவர் பாரத இதிகாசத்தின் முதல் பத்துப் பருவங்களைக் கன்னட மொழியில் எழுதினர். பிரபு லிங்க லீலை என்னும் வீரசைவ காவியத்தை எழுதி அல்லமர் அல்லது பிரபு தேவர் என்பவருடைய வாழ்க்கை வரலாற்றையும் இயற்றினர். பிரபுலிங்க லீலை என்னும் வீரசைவ நூல் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளிலும் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. மாகிய மகிதேவர், வீர சைவ சமயத்தின்படி ஞானமார்க்கம், பக்தி மார்க்கம், வைராக்கிய மார்க்கம் ஆகிய மூன்று வழிகளையும் விளக்குகின்ற 'சதகத்திரயம்' என்ற நூலை எழுதி யுள்ளார். ஹம்பி விருபாட்ச தேவருடைய கோவிலைப் புகழ்ந்து சந்திரகவி என்பவர் ஒரு நூலை எழுதி யுள்ளார்.

மல்லிகார்ச்சுனர், விருபாட்சர் என்ற விஜயநகர அரசர் களுடைய ஆட்சியில் பல வீரசைவப் புலவர்கள் கன்னட மொழியில் சமய நூல்களை இயற்றி யுள்ளனர். பொம்மராசா என்ற புலவர் எழுதிய சுந்தர புராணம் என்னும் நூலில் சுந்தர மூர்த்தி நாயனருடைய வரலாற்றைக் கூறுகிறார். கல்லரசர் என்பவர் எழுதிய மல்லிகார்ச்சுன விஜயம் என்னும் நூலில் வாத்ச யாயனருடைய காமசூத்திரத்தின் சாயலைக் காணலாம். சித்தேசு வரர் என்பவர் வீரசைவ சமயத்தை விளக்குவதற்குப் பல நூல்களை இயற்றி யுள்ளார். மல்லிகார்ச்சுன பண்டிதரின் வாழ்க்கை வர லாற்றை ஆராத்தியச் சரித்திரம் என்ற பெயருடன் நீலகண்ட சிவாச்சாரியார் என்பவர் இயற்றி யுள்ளார்.

பதினைந்தும் நூற்றாண்டில் வாழ்ந்த கன்னடப் புலவர்கள் :

பாஸ்கர கவியின் மகனாகிய திம்மண்ண கவி என்பார் கிருஷ்ண தேவராயருடைய விருப்பத்திற் கிணங்க மகாபாரதத்தின் பிற பகுதியை எழுதியதாகத் தெரிகிறது. இந்த நூலின் பின்னணி உரையில் நரச நாயக்கருடைய மகனாகிய கிருஷ்ணராயரின் புகழ் என்றும் நிலவ வேண்டுமென்னத் தம்முடைய நூலை இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது. சமண சமய நூலாகிய சாந்திநாத சரிதம் என்ற நூலைச் சாந்தி கீர்த்தி என்பவர் இயற்றியுள்ளார். இரண்டு வீரசைவப் புலவர்கள் அரிச்சந்திர புராணத்தைக் கன்னட மொழியில் எழுதினர். பஞ்சாட்சர மந்திரத்தின் பெருமையை உணர்த்துவதற்கு ஒடுவகிரியா என்னும் ஒரு நூலை யாத்துள்ளார். தக்கனுடைய யாகத்தைப் பற்றிக் கூறும் வீரபத்திர விஜயம் என்ற நூலை வீரபத்திர ராஜா என்பவர் எழுதினர். குமார வால்மீகி எழுதிய கன்னட இராமாயணம், குமார வியாசர் எழுதிய மகாபாரதத்தை யொட்டி அமைந்துள்ளது. பல மருத்துவ நூல்களும், சமையற்கலை நூல்களும் கன்னட மொழியில் இக் காலத்தில் இயற்றப்பட்டன.

விஜயநகர ஆட்சியில் தெலுங்கு இலக்கியங்கள்

விஜயநகர ஆட்சியில் தெலுங்கு மொழி இலக்கிய வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சி தோன்றிய தெனக் கூறலாம். தெலுங்குப் புலவர்களும், கவிஞர்களும் ஆதரவு பெற்றனர். தெலிங்காணா நாட்டில் நிலை பெற்றிருந்த சிற்றரசுகள் இஸ்லாமியப் படையெடுப்புகளால் அல்லல் அடைந்த பொழுது அங்கு வாழ்ந்த தெலுங்கு மொழி வல்லுநர்கள் விஜயநகர அரசர்களால் ஆதரிக்கப் பெற்றனர்.

14 - 15ஆம் நூற்றாண்டுகளில் தெலுங்குப் புலவர்கள் :

முதலாம் புக்கருடைய சபையில் நாச்சன் சோமநாத கவி என்ற புலவர் இருந்தார். வடமொழியில் உள்ள ஹரிவமிசம் என்னும் நூலைத் துணையாகக் கொண்டு உத்தர ஹரிவமிசம் என்ற நூலை இயற்றினர். இப் புலவருக்குப் புக்கராயப் பட்டணம் என்ற கிராமத்தை விஜயநகர மன்னர் முதலாம் புக்கர் தானம் கொடுத்துள்ளார். சோமநாதகவி எட்டு மொழியில் வல்லவ ரென்றும் ஆகமங்களையும் பதினெண் புராணங்களையும் நன்கு கற்றுணர்ந்தவ ரென்றும் ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன. முதலாம் தேவ ராயர் ஆட்சியில் விக்கிர மார்க்க சரிதத்தை எழுதிய ஜக்கண என்ற புலவர் வாழ்ந்தார். அவர் தாம் எழுதிய நூலைச் சித்தர் என்ற அமைச்சருக்கு அர்ப்பணம் செய்துள்ளார்.

பதினேந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த புலவர் ஸ்ரீநாதர் என்பவராவார். கொண்டவீட்டு ரெட்டிகளுடைய வித்தியாதிகாரியாக இருந்த இப் புலவர் விஜயநகர அரசர்களுடைய சபைக்கு அடிக்கடி வருகை தந்தார். இளைஞராக இருக்கும் பொழுதே மருத்திராத சரிதம், சாலிவாகன சப்தசதி என்ற நூல்களை இயற்றினர். பின்னர் ஸ்ரீஹர்ஷதேவருடைய நைடதத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்துப் புகழ் பெற்றார். இந் நூல் எட்டுக் காண்டங்களும், 1337 செய்யுள்களும் கொண்டுள்ளது. தெலுங்குப் புலவர்களுக்கு வழிகாட்டியாகக் கருதப்படும் இந் நூல் பஞ்ச மகா காவியங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது; ஓதுவதற்கும், கேட்பதற்கும் இனிமையான பாக்களைக் கொண்டு மனத்தைக் கவரும் உவமை உருவகங்களோடு விளங்குகிறது. நைடதம் என்ற நூலோடு பண்டித அராத்ய சரிதம் பீம காண்டம், காசிகாண்டம், விதி நாடகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். காசிகாண்டம் கந்த புராணத்தில் ஒரு பகுதியாகும். விதி நாடகத்தில் அக் காலத்திய தெலுங்கு மக்களின் சமூக வாழ்க்கை பிரதிபலிக்கிறது. சிவபெருமானுடைய திருவிளையாடல்களை ஏழு காண்டங்களில் தொகுத்துக் கூறும் நூல் ஹரவிலாசம் ஆகும். இதில், குமார சம்பவம், கிராதா அர்ஜுன்யம், காதம்பரி முதலிய வடமொழி நூல்களில் காணப்படும் சம்பவங்கள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இது திப்பையசெட்டி என்ற செல்வருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

கந்தபுராணத்தில் உள்ள ஈசான சங்கிதையின் சாரத்தைக் கொண்டு எழுதப்பட்ட நூல் சிவராத்திரி மகாத்மியமாகும். சிருங்கார தீபிகை என்ற அணி யிலக்கண நூலும் ஸ்ரீநாதகவி எழுதிய தெனக் கருதப்படுகிறது. பலநாட்டு வீரசரிதம் என்ற நூலும் ஸ்ரீநாதர் எழுதியதாகக் கருதப்படுகிறது, மேற்கூறப்பட்ட நூல்களின் சொல் நடையில் ஸ்ரீநாதருடைய தனிப்பட்ட எழுத்து முறையைக் காணலாம். இவர் கௌட தேசத்துப் புலவராகிய திண்டிமபட்டர் என்பவரை வாதில் வென்று கவி சார்வபௌமர் அல்லது கவிரத்தினம் என்ற பட்டத்தைப் பெற்றார். ஸ்ரீநாதருடைய இளைய தலைமுறையைச் சேர்ந்த பொம்மேர போதனர் பாகவத புராணத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்துள்ளார்.

இரண்டாம் தேவராயருடைய சபையில் சாரதா என்ற தெலுங்குக் கவியரசி பெருமை பெற்று விளங்கிப் பதினெட்டு நாடகங்களையும், இரண்டு பிராக்கிருத நூல்களையும் இயற்றியுள்ளார். ஜக்கண்ண என்ற புலவர் விக்கிரமார்க்கச் சரிதம்

என்ற நூலை இயற்றிச் சித்தண மந்திரி என்பவருக்கு அர்ப்பணம் செய்துள்ளார். பீன வீரபத்திரர் என்பவர் ஜெய்மினி பாரதம் என்ற நூலை இயற்றிச் சாளுவ நரசிம்மருக்கு அர்ப்பணித்தார். காளிதாசருடைய அபிஞான சாகுந்தலத்தையும், பாரதக் கதைகள் சிலவற்றையும் தொகுத்துச் சிருங்கார சாகுந்தலம் என்ற நூலை இயற்றி யுள்ளார். இன்னும் நச்சிகேத உபாக்கி யத்தைத் துக்குப் பள்ளித் துக்கையா என்பவரும் பஞ்சதந்திரக் கதைகளைத் துப்ப குண்டா நாராயணரும், விஷ்ணு புராணத்தை வெண்ணல கண்டி சூரண்ணவும், அரிச்சந்திர உபாக்கியா னத்தைக் கௌராணு என்பவரும் இயற்றிப் புகழடைந்தனர். வீரபத்திர விஜயம், நாராயண சதகன்னு, போகினி தண்டகன்னு மகாபாக வதனு என்ற நூல்களைப் பம்மார போதனு என்பவர் இயற்றினர். நரச நாயக்கர் காலத்தில் நந்தி மல்லையா, கண்ட சிங்கையா என்ற இரு புலவர்கள் சேர்ந்து கிருஷ்ண மிஸ்ரர் என்பவருடைய பிரபோத சந்திரோதயம் என்னும் நாடக நூலை எளிதான வசன முறையில் எழுதினர், வராக புராணம் என்ற நூல் நரச நாயக்கருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. வரலட்சுமி புராணம், நரசிம்ம புராணம் என்ற நூல்களையும் இவ் விரு புலவர்களும் சேர்ந்து இயற்றி யுள்ளனர்.

பதினெறும் நூற்றாண்டில் வாழ்ந்த தெலுங்குப் புலவர்கள் :

பதினெறும் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கிருஷ்ண தேவராயர் காலத்தைத் தெலுங்கு இலக்கியங்களின் பொற்கால மென வரலாற்று ஆசிரியர்கள் கருதுவர். பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற புலவர்களை ஆதரித்தும், தாமும் ஒரு பெரும் புலவராக விளங்கியும் கிருஷ்ணதேவராயர் புகழடைந் தார். பிரபந்தங்கள் என்ற பெயர் வாய்ந்த இலக்கியம் கிருஷ்ண தேவராயர் காலத்தில் தெலுங்கு மொழியில் தோன்றியது.

கிருஷ்ண தேவராயர் 1521ஆம் ஆண்டில் ஆமுக்த மால்யதா அல்லது விஷ்ணுசித்தமு என்ற நூலை எழுதித் திருப்பதி வெங்க டேசப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்தார். இந் நூல் ஸ்ரீ வில்லி புத்தூரில் வாழ்ந்த பெரியாழ்வார் அல்லது விஷ்ணுசித்தர் என்பவ ருடைய வரலாற்றையும், அவருடைய வளர்ப்புக் குழந்தையாகிய ஆண்டாள் அல்லது சூடிக்கொடுத்த நாச்சியார் திருவரங்கத்து அரங்கநாதப் பெருமானை மணாளனைக் கொண்டு அவருடன் ஒன்று சேர்ந்ததையும் கூறுகின்றது. இந் நூலை எழுதுவதற்கு 1519ஆம் ஆண்டு நவம்பர் மூன்றும் தேதியன்று கிருஷ்ண தேவராயர் ஸ்ரீகா குளத்தில் ஹரிவாசர தினத்தன்று விரத மிருந்ததாகவும், அன்று இரவு அவருடைய கனவில் இந் நூலை எழுதும்படி தெய்வ அருள்

கிடைத்ததாகவும் திரு. ஒ. இராமச்சந்திரய்யா கூறுவார்.* தெலுங்கு மொழியிலுள்ள பஞ்ச மகா காவியங்களுள் ஆமுக்த மால்யதா மிக்க சிறப்புடையதாகக் கருதப் படுகிறது. பழக்கமான தெலுங்கு நடையில் இந்த் நூல் எழுதப்பட்டிருந்தாலும், வழிநூல் என்று கூறமுடியாத வகையில் தெலுங்கு மொழியில் தோன்றிய முதல் நூலாகும். சில வரலாற்றுராய்ச்சியாளர்கள் ஆமுக்த மால்யதாவை அல்லாசானி பெத்தண்ணு என்பார் இயற்றியதாகக் கூறுவார். ஆனால், பெத்தண்ணுவின் மனுசரித நூலின் நடைக்கும், ஆமுக்தமால்யதாவின் நடைக்கும் மிகுந்த வேற்றுமைகள் உள்ளன. பெத்தண்ணுவின் மனுசரித்தில் வட மொழிச் சொற்களும், திசைச் சொற்களும் நிரம்பி யுள்ளன. ஆமுக்த மால்யதாவில் வட சொற்களும், திசைச் சொற்களும் குறைவாக உள்ளன. பெத்தண்ணுவின் நூலில் காணப்படும் இலக்கண வரம்புகள் ஆமுக்த மால்யதாவில் காணப்பட வில்லை. கிருஷ்ண தேவராயருடைய வெற்றிகளும், படை யெடுப்புகளும் மனுசரித்தில் கூறப்பெற்றவாறே ஆமுக்த மால்யதாவில் கூறப் பட்டிருப்பதால் இவ் விருவர் கூற்றுகளும், உண்மையானவை என்று. கருதற்பாலனவாகும். மனுசரித்தில் காணப்படும் பின்னணி, உரைநடையில் உள்ளது. ஆமுக்த மால்யதாவில் காணப் படுவது செய்யுள் நடையில் உள்ளது. ஆகையால், இந் நூல் பெத்தண்ணுவால் எழுதப்பட்டது என்பதில் உண்மை யில்லை.

அஷ்டதிக் கஜங்கள் :

கிருஷ்ண தேவராயருடைய ஆஸ்தானத்தில் எண்பெரும் புலவர்கள் இருந்தனராக மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. அல்லசானி பெத்தண்ணு, நந்தி திம்மண்ணு. துர்ஜாதி, மல்லண்ணு, தெனாலி ராமகிருஷ்ணு, பிங்காளி சூரண்ணு. இராம பத்திரையா இராமராஜ பூஷணு, என்பவர் அஷ்டதிக் கஜங்கள் எனக் கருதப் படுகின்றனர். தெனாலி ராமகிருஷ்ணன் என்ற மற்றொரு புலவர் பிற்காலத்தில் இருந்தவராகக் கருதப் படுகிறார். இவர்கள் எழுதிய நூல்களை கிருஷ்ண தேவராயருக்கும், அவருடைய சிற்றரசர்களுக்கும் அர்ப்பணம் செய்துள்ளனர்.

அல்லசானிபெத்தண்ணு: இவர் பெல்லாரி மாவட்டம் துபாத் வட்டம் தோரனலா என்னும் கிராமத்தில் பிறந்தார். கிருஷ்ண தேவராயருடைய ஆஸ்தான கவியாக உயர்ந்த பதவியை வகித்தார். அவரால் எழுதப் பெற்ற சவரோசிஸ மனுசரிதம் என்னும் நூல் மார்க்கண்டேய புராணத்தின் ஒருபகுதியாகும். இது பிரபந்தங்கள் என்னும் நூல்களுக்கு இலக்கணமாக அமைந்துள்ள நாடு,

*Dr. O. Ramachandrayya Studies. P. 121.

நகரம், மலைகள், கடல், பருவ காலங்கள், சூரியோதயம், சந்திரோதயம், உய்யானவனம், திருக்குளம், திருமணம், குழந்தை பிறப்பு போர் முதலிய பதினெட்டு உறுப்புகளை அமைத்து எழுதப் பட்ட நூலாகும். மார்க்கண்டேய புராணத்தில் இதற்கு ஆதார மிருந்த போதிலும் வேண்டிய விகற்பங்களைக் கூறி முதனூல் போலவே இஃது எழுதப்பட்டுள்ளது. ஸ்ரீநாதர், கிருஷ்ண தேவராயர் முதலிய புலவர்களுடைய நடைகளின் சாயலும் இதில் காணப்படுகின்றது. வடசொற்களும், திசைச் சொற்களும் காணப் படுகின்றன. பெத்தண்ணாவின் பிரபந்த முறையையும், சொல் நடையையும் பல தெலுங்குப் புலவர்கள் பின்பற்றியமையால் அவருக்கு 'ஆந்திர கவிதா பிதாமகன்' என்ற பெயர் வழங்க லாயிற்று. கிருஷ்ண தேவராயருக்கு ஆருயிர்த் தோழராக விளங்கிய இவருக்குப் பல மானியங்களும், வரிசைகளும் வழங்கப் பெற்றன.

நந்தி திம்மண்ணா : இவர் பாரிஜாதாப கரணமு என்ற செய்யுள் நூலைத் தெலுங்கில் எழுதிக் கிருஷ்ண தேவராயருக்கு அர்ப்பணித்தார். இது ஸ்ரீ கிருஷ்ணபகவான் இந்திரலோகத் திலிருந்து பாரிஜாத மலரைச் சத்தியபாமாவுக்காகக் கொண்டு வந்த கதையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நூல் கிருஷ்ண தேவராயருடைய அரசிகளில் ஒருத்தியாகிய சின்ன தேவியால் எழுதப் பட்டது என்ற செய்தி நம்பத் தகுந்த தன்று. ஆற்றொழுக்குப் போன்ற நடையும், கருத்தாழமும், மனத்தைக் கவரத்தக்க உவமைகளும், உருவகங்களும் நிறைந்து, 'சான்றோர் கவிகளுக்கு' இலக்கணமாக அமைந்த நூலாகும். வடசொற்கள் குறைந்த அளவிலேயே விரவி யுளளன. கதைகளில் இவருக்கு மூக்கு திம்மண்ணா என்ற பெயர் வழங்கியதற்கு இரு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று இவரது நாசி சிறிது நீண்டிருந்தமை; மற்றொன்று இராமராஜ பூஷணர் எழுதிய வசுசரித்தத்தில் இணைந் துள்ள செய்யுள் ஒன்றில் அழகிய நாசி எப்படி இருக்க வேண்டு மென்று இவர் கூறியமை.

துர்ஜாதி : கிருஷ்ண தேவராயருடைய அஷ்டதிக் கஜங்களில் ஒருவராகிய இவர் ஆழ்ந்த சைவப் பற்றுள்ளவர். இவரால் எழுதப்பெற்ற காளத்தி மகாத்மியம், காளத்தீஸ்வரர் சதகம் என்ற இரு நூல்களும் இவருடைய சமயப் பற்றை உறுதி செய் கின்றன. சதத்தியாய என்னும் வடமொழி இலக்கியத்தைப் பின் பற்றி எழுதப்பெற்ற போதிலும் அமைப்பும், நடையும் இலக்கியக் குறைகளின்றிக் காணப்படுகின்றன. இலக்கண விதிகளை அதிக மாகப் பின்பற்றாது கன்னடம், தமிழ் முதலிய திராவிடமொழிச் சொற்களையும் பயன்படுத்தி யுள்ளார். கிருஷ்ண தேவராயர்

விஜயம் என்ற நூலை எழுதிய குமார துர்ஜாதி என்பவர் இவருடைய பெயரராவார்.

பிங்காலி சூரண்ணு : பிங்காலி சூரண்ணு பதினேழாம் நூற்றாண்டிவ் வாழ்ந்து நந்தியாலா சிற்றரசனுகிய கிருஷ்ணராஜா என்பவரால் ஆதரிக்கப் பட்டார். இவர் காலபூர்ணோதயமு என்ற தெலுங்கு நூலை இயற்றி யுள்ளார். இது பிரம்மதேவன் ஒரு கிளியின் மூலமாகச் சரஸ்வதி தேவிக்குக் கூறிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த நூல் ஷேக்ஸ்பியர் எழுதிய 'Comedy of Errors' என்ற நாடகத்தை ஒத்துள்ளது என்று T V மகாலிங்கம் அவர்கள் கூறுவார். இராகவ பாண்டவீயமு என்ற நூல் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களில் கூறப்பட்ட செய்திகளுக்குப் பொருத்தமாகச் சிலேடை நடையில் எழுதப் பட்டது எனக் கருதலாம். தெலுங்கு மகா காவியங்களுள் ஒன்றுகக் கருதப்பட்ட இந்த நூல் ஆருவிதி வேங்கடாத்திரி என்பவருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. பிரபாவதி, பிரத்யும்னன் என்ற இருவருடைய திருமணத்தைப் பற்றிக் கூறும் நூல் பிரபாவதி பிரத்யும்னம் என்பதாகும். இந்த நூலைத் தம்முடைய தகப்பன் அமரய்யா என்பவருக்குச் சூரண்ணு அர்ப்பணம் செய்துள்ளார். முதலாம் திருமலைராயர் ஆட்சியிலும், உயிருடன் இருந்ததால் இந்த நூலாசிரியர் நீண்டநாள் வரையில் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

தெனுலிராம கிருஷ்ணன் : தெனுலிராம கிருஷ்ணனுடைய வரலாற்றைப் பற்றிய செய்திகள் வரலாற்றுசிரியர்களிடையே ஒரு குழப்பத்தை உண்டாக்கி யுள்ளது. இவர் கிருஷ்ண தேவராயருடைய சபையில் விகடகவியாக இருந்ததாகவும், பின்னர் இரண்டாம் வேங்கடதேவர் ஆட்சி வரையில் உயிரோடு இருந்ததாகவும் கூறப்படுகின்றன. கிருஷ்ண தேவராயர் கி.பி. 1487 முதல் 1530ஆம் ஆண்டு வரையில் 43 ஆண்டுகள்தான் இவ்வுலகில் இருந்தார். அவருடைய சபையில் விகடகவியாக இருந்த இராமகிருஷ்ணன் ஏறக்குறைய கிருஷ்ணதேவருடைய வயதுடைய வராகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், இராமகிருஷ்ணன் 1487 முதல் 1614ஆம் ஆண்டு வரையில் அதாவது இரண்டாம் வேங்கட தேவனுடைய ஆட்சி வரையில் நூற்றிருபத்தேழு ஆண்டுகள் உயிருடன் இருந்தார் என்பது நம்பத்தக்க செய்தியாக இல்லை. தம்முடைய முதுமைக் காலத்தில் பாண்டுரங்க மகாத்மியம், இலிங்க புராணம், கடிகாசல மகாத்மியம் என்ற நூல்களை இயற்றி யிருக்க முடியாது. ஆகையால், கிருஷ்ணதேவராயர் காலத்தில் விகடகவியாக இருந்த இராமகிருஷ்ணன் தகப்பன் எனவும், பின்னர் இரண்டாம் வேங்கடதேவன்

காலத்திலிருந்த இராமகிருஷ்ணன் மகன் எனவும் கொள்ளுதல் பொருத்தமானதாகத் தெரிகிறது. கிருஷ்ண தேவராயருடைய சபையில் இருந்த தெனுலிராமன் வெறும்விகடகவியாக மாத்திரம் இருந்தார். ஆனால், அவருடைய மகன் இரண்டாவது தெனுலிராமன் சிறந்த நூலாசிரியராகவும், விகட கவியாகவும் இருந்ததாகக் கொள்ளலாம். சந்திர கிரியில் உள்ள விஜயநகர அரசர்களின் அரண்மனைக்கு எதிரே இடிந்து பாழடைந்த நிலையில் உள்ள வீடு, தெனுலிராமன் வீடு என்று அழைக்கப் படுகிறது. ஆகையால், கிருஷ்ண தேவராயர் காலத்திய தெனுலிராம கிருஷ்ணன் தகப்பன் என்றும் இரண்டாம் வேங்கட தேவராயர் காலத்திய தெனுலிராம கிருஷ்ணன் மகன் என்றும் கொள்வதில் பிழையில்லை என்று கருதலாம்.

இராமபத்திரய்யா : பதினேழும் நூற்றாண்டின் பிற்பகுதியில் அய்யலராஜு இராமபத்திரய்யா, இராமராஜ பூஷணர் என்ற இரண்டு தெலுங்குப் புலவர்கள் வாழ்ந்தனர். 1570ஆம் ஆண்டில் திருமலை தேவர் காலத்தில் இராமபத்திரய்யா, இராம அப்பூதயம் என்ற நூலையும் சகல கதாசார சங்கிரகம் என்னும் நூலையும் தெலுங்கு மொழியில் இயற்றியுள்ளார்.

இராம ராஜ பூஷணர் : பட்டு மூர்த்தி அல்லது இராமராஜ பூஷணர், ஆரவீட்டு இராம ராயருடைய ஆஸ்தான கவியாக விளங்கினர். இவரால் இயற்றப்பட்ட வசு சரித்திரமு தெலுங்கு மொழியில் உள்ள பிரபந்தங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது; எதுகை மோனைகள் நிறைந்து, பலவித பொருட் செறிவு கொண்டு படிப்பதற்கும், மனனம் செய்வதற்கும் இனிமையாகவும், எளிமையாகவும் உள்ள செய்யுள்களைக் கொண்டுள்ளது. மனத்தை உருக்கும் உயர்ந்த கருத்துகளைக் கொண்டுள தேனும், சிற்றின்பச் சுவையுள்ள செய்யுள்களும் இடையிடையே காணப்படுகின்றன. அரிச்சந்திரன், நளன் ஆகிய இருவருடைய கதைகளையும் ஒருங்கே கூறும் அரிச்சந்திர - நளோபாக்கியானம் என்ற நூலும் இக் கவிஞரரால் இயற்றப்பட்டுள்ளது. வித்யா நாத கவியால் இயற்றப்பட்ட வடமொழிப் பிரதாபருத்திரீயம் என்னும் நூலைப் பின்பற்றி ஏரசபூபாலயமு என்ற அணியிலக் கணத்தையும் பட்டுமூர்த்தி இயற்றினர். இந் நூலின் ஆசிரியரைப் பற்றிய கொள்கைகள் வேறுபட்ட போதிலும் இந் நூலில் காணப்படும் அகச் சான்றுகள் பட்டுமூர்த்தியின் கைவன்மையை நன்கு தெரிவிக்கின்றன.

மற்றத் தெலுங்குப் புலவர் :

பால பாகவதமு என்ற நூலை இயற்றிய கேனேருநாதர் அந் நூலை வித்தள ராயலுடைய தம்பி சின்ன திம்ம ராஜன்

என்பவருக்கு அர்ப்பணித்துள்ளார். பாகவதக் கதைகளை இந்நூல் எளிய, இனிய நடையில் கூறுகிறது. பன்னிரு ஆழ்வார்களுடைய வரலாற்றைக் கூறும் 'பரமயோக விலாசம்' என்னும் நூலே முதலாம் திருமலை ராயரின் உறவினராகிய சித்தராஜ திம்மராஜ பூபாலர் என்பவர் இயற்றினர். வேமனர் என்ற புலவரும் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். இவரியற்றிய நூல்களில் மக்களுடைய மூடப் பழக்க, வழக்கங்களையும் சாதி, குலம், பிறப்பு என்னும் குறுகிய நோக்கங்களையும், மற்ற தீய செயல்களையும், எண்ணங்களையும் கண்டித்து மக்களை நல்வழிப் படுத்துவதற்கு முயன்றார். மேல் நாட்டு அறிஞர்களுடைய பொதுவுடைமைக் கொள்கைகளும் இவருடைய நூல்களில் காணப் பெறுகின்றன. இவர் தனிப்பட்ட பெருஞ்செல்வர்கள் தம் நலங் கருதாது சமூக நலன்களைக் கருதித் தங்களுடைய பெரும் பொருளைச் செலவழிக்க வேண்டுமெனக் கூறுவார்; இன்பத்தில் வெறுப்பும், பிராமணர்களைப் பரிகசிக்கும் கொள்கையும் உடையவர்; கிராம மக்களைச் சீர்திருத்தி நல்வாழ்வு நடத்தும்படி செய்வதற்கு முயன்றார்.

இராதா மாதவ விலாசம், விஷ்ணுமய விலாசம் என்ற நூல்களைச் சிந்தாலபூடி எல்லையா என்பவர் எழுதியுள்ளார். மொல்லா என்ற கவியரசி தெலுங்கு இராமாயணத்தை இயற்றினர். ருத்திரய்யா என்பவர் நிராங்குச உபாக்கியானம் என்பதையும் மானுமானுபட்டர் ஹயலட்சண சாத்திரம் என்ற நூலையும் இயற்றினர். சித்தவட்டம் மதிலி அனந்தரும், அவருடைய பெயரனும் காகுத்த விஜயம், குமுதவதி கலியாணம் என்ற இரு நூல்களை எழுதினர். கோதண்டராமன் என்ற அரசிளங்குமாரன் வெங்கையா என்ற புலவரை ஆதரித்தார். இராம ராச்சியமு அல்லது நரபதி விஜயமு என்ற வரலாற்று நூலில் ஆரவீட்டு வமிச மன்னர்களின் விஜயநகர வரலாற்றை வரைந்துள்ளார். பிற்காலத்தில் தோன்றிய வரலாற்று நூலாயினும் அதில் கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் அக்காலத்திய இலக்கியங்களாலும், கல்வெட்டுகளாலும் உறுதி பெறுகின்றன.

23. தமிழ் இலக்கிய வரலாறு

பதினைன்காம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வன்மை பொருந்திய அரசாங்கமோ, பேரரசோ நிலைபெற்றிருக்க வில்லை. 1363ஆம் ஆண்டில் குமார கம்பணர் தொண்டை மண்டலத்தைச் சம்புவராயர்களிட மிருந்தும், 1371ஆம் ஆண்டில் மதுரை இராச்சியத்தை மதுரைச் சுல்தான்களிட மிருந்தும் கைப்பற்றி விஜயநகரப் பேரரசோடு சேர்த்தார் என்று நாம் முன்னரே பார்த்தோம். தொண்டை மண்டலத்தில் ஆட்சி புரிந்த சம்புவராய மன்னர்களாகிய வென்று மண்கொண்ட ஏகாம்பரநாத சம்புவராயரும், அவருடைய மகன் ராஜ நாராயண சம்புவராயரும் இரட்டைப் புலவர்கள் என்ற தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். தொண்டை மண்டலத்திற்கும், சோழ மண்டலத்திற்கும் இடைப்பட்ட நடுநாடாகிய திருக்கோவலூர்ப் பகுதியைக் கொங்கர் குலத் தலைவராகிய வரபதியாட் கொண்டான் என்ற சிற்றரசர் ஆண்டு வந்தார். இவ் வரசர் பாரதம் பாடிய வில்லிபுத்தூர் ஆழ்வாரை ஆதரித்துத் தமிழில் பாரதத்தை இயற்றும் படி ஆணையிட்டார்.

இரட்டைப் புலவர்கள் :

சில மரபுவழிச் செய்திகள் இரட்டைப் புலவர்களைச் சகோதரர்கள் என்றும், தஞ்சை மாவட்டத்திலுள்ள இலந்துறை என்ற ஊரில் பிறந்தவர்கள் என்றும் கூறுகின்றன. இவர்களுக்கு முதுசூரியர் இளஞ்சூரியர் என்னும் பெயர்களும் வழங்கின. தமிழ் நாவலர் சரிதை என்னும் நூலில் முதுசூரியர் முடவர் என்றும், இளஞ்சூரியர் குருடர் என்றும், முடவர் வழிகாட்டக் குருடர் அவரைச் சுமந்து செல்லத் தமிழ்நாட்டில் பிரயாணம் செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளன. இச் செய்திகளுக்கு ஏற்ற அகச் சான்றுகள் இரட்டையர்களால் எழுதப்பட்ட நூல்களிலோ, கல்வெட்டுகளிலோ கிடைக்க வில்லை. இவர்கள் முடவர், குருடர்களாக இருந்திருப்பின் இவர்களை ஆதரித்த சம்புவராய மன்னர்கள் இவர்கள் பிரயாணம் செய்வதற்கேற்ற மற்ற வசதிகளைச் செய்திருப்பர்.

தொண்டைமண்டல சதகம் என்னும் நூலில், இரட்டைப் புலவர்களை, வென்று மண்கொண்ட ஏகாம்பரநாத சம்புவராயர் ஆதரித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஏகாம்பரநாத சம்புவ

ராயர் 1321 முதல் 1339 வரையில் ஆட்சி புரிந்தார். இவருடைய மகனுகிய இராஜ நாராயண மல்லிநாத சம்புவராயர் 1339 முதல் 1363 வரை ஆட்சி புரிந்துள்ளார். இரட்டைப் புலவர்கள் எழுதிய காஞ்சி ஏகாம்பர நாதருலாவில் ஏகாம்பர நாதருக்கு நவரத்தினக் கீரிடம், பொன்மயமானதேர் முதலியவற்றைத் தானம் செய்ததாகவும் துலாபார மண்டபம், துலா மண்டபம் என்ற இரண்டு மண்டபங்களை அமைத்ததாகவும் கூறியுள்ளனர். மேலும், திருவண்ணுமலையில் ஒரு மடத்திற்குத் தலைவனுக இருந்த சம்பந்தாண்டான் என்பவரைப் பற்றியும் இரட்டைப் புலவர்கள் கூறுவர். ஹொய்சள அரசனுகிய மூன்றும் வல்லாள தேவருடைய 1340ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் இந்தச் சம்பந்தாண்டான் என்பவரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இந்தச் சம்பந்தாண்டானைப் பற்றி இரட்டைப் புலவர்களும் கூறியுள்ளனர். ஆகையால், இரட்டைப் புலவர்கள் 1320 முதல் 1360 வரையில் வாழ்ந்தவர்களாவர்.

இரட்டைப் புலவர்கள், கலம்பகம் என்ற பிரபந்த நூலைப் பாடுவதில் வல்லவர்கள் என்று தனிப் பாடற்றிரட்டுச் செய்யுள் ஒன்றில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், காஞ்சி ஏகாம்பர நாதர் உலா முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளனர். தில்லைக் கலம்பகத்தில் தில்லைக் கூத்தப் பெருமானின் திருக்கூத்தின் பெருமையையும், உட்கருத்தையும் விளக்கி யுள்ளனர். திருவாமாத்தூர்க் கலம்பகத்தில் ஹரி அல்லது விஷ்ணு, சிவபெருமானுடைய சக்தி (Female Power) ஆக விளங்குகிறார் எனக் கூறுவர். ஏகாம்பர நாதருலா, 1110 வரிகள் கொண்ட உலா நூலாகும். இந் நூலில் சம்புவராய மன்னர்கள் காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரருக்குச் செய்த தானதருமங்களும், திருவிழாக்களும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. சைவ சமய நூல்களுக்குத் திருமுறை என்ற பெயர் வழக்கத்தில் இருந்த தாகவும் கூறுவர்.

வில்லிபுத்தூராழ்வார்:

வில்லிபுத்தூரர் நடுநாடு அல்லது திருமுனைப்பாடி நாட்டில் திருக்கோவலூருக்கு அருகிலிருந்த சனியூரில் வாழ்ந்த வீரராகவர் என்ற வைணவ அந்தணருடைய புதல்வராவார். வீரராகவர் ஸ்ரீ வில்லிபுத்தூர் பெரியாழ்வாரிடத்தில் பேரன்பு கொண்ட பெரியாராகையால் தம் மகனுக்கு வில்லிபுத்தூரார் என்ற பெயரிட்டார் போலும்! திருக்கோவலூருக்கு அருகில் இருந்த வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்ற சிற்றரசர் இவரை ஆதரித்து வியாச பாரதத்தைச் செய்யுள் வடிவத்தில் இயற்றும்

படி கேட்டுக்கொண்டார் எனத் தெரிகிறது. இரட்டைப் புலவர்களும் இந்த வரபதி ஆட்கொண்டானைப்பற்றிப் பின் வருமாறு கூறுவார்.

'சாணர்க்கு முன்னிற்கும் ஆட்கொண்ட நாயகன் தமிழ்க்
கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே
ஊணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி உயர்வானிலே
வீணுக்கு நின்னுகம் மெலிகின்ற தெவ்வாறு
வெண்டிங்களே'.

இரட்டைப் புலவர் 1320 முதல் 1360 வரை வாழ்ந்தவர்கள் என முன்னரே கண்டோம். ஆகையால், வரபதி ஆட்கொண்டானால் ஆதரிக்கப் பெற்ற வில்லிபுத்தூராழ்வாரும் இக் காலத்தில் வாழ்ந்திருத்தல் வேண்டும். ஹொய்சள மன்னர்களாகிய மூன்று, நான்காம் வல்லாள தேவர்களுடைய ஆட்சியிலும் பின்னர் விஜயநகர சங்கம அரசர்களுடைய பிரதிநிதியாகிய குமார கம்பணருடைய ஆட்சிக் காலத்திலும் வில்லிபுத்தூர் ஆழ்வார் இருந்தவராவார். வில்லிப்புத்தூராரும், அருணகிரி நாதரும் சம காலத்தவர் என்பதற்கு ஏற்ற ஆதாரங்கள் இல்லை. அருணகிரிநாதர் பிற்காலத்தவராகத் தெரிகிறது. வில்லிபுத்தூரார் எழுதிய பாரதம் 4,339 செய்யுள்களை உட்கொண்டு பத்துப் பருவங்களாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது. இவர் வைணவத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவரேனும் சிவதூஷணை இன்றிச் சைவ - வைணவ ஒற்றுமையைக் கருத்திற் கொண்டு தம்முடைய நூலை இயற்றியுள்ளார். பாரதத்தில் நான்கு இடங்களில் வரபதி ஆட்கொண்டானுடைய கொடைத் திறமையைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். இன்றும் தமிழ்நாட்டில் உள்ள திரௌபதை அம்மன் கோவில்களில் வில்லிபுத்தூர் பாரதமே பிரவசனம் செய்யப் படுகிறது. ஆட்கொண்ட தேவன் வில்லிபுத்தூராரை ஆதரித்துப் பாரதத்தைத் தமிழில் இயற்றும்படி செய்த பிறகு தான் தமிழ்நாட்டில் திரௌபதை அம்மன் வணக்கம் பெரும் பான்மையான கிராமங்களில் பரவிய தெனக் கூறலாம்.

வேதாந்த தேசிகர் :

வேதாந்த தேசிகர் வடமொழியிலும், தமிழிலும் பல நூல்களை இயற்றினர் என்று நாம் முன்னரே கண்டோம். வேதாந்த தேசிகர் தமிழ் மொழியில் சுமார் 25 நூல்களை இயற்றியுள்ளதாக நாம் அறிகிறோம். தமிழ்நாட்டைக் குமாரகம்பணர் வென்று விஜயநகரப் பேரரசை விரிவாக்கிய காலத்தில் இவர் வாழ்ந்தார்.

ஆனால், குமார கம்பணர் இவரை ஆதரித்ததாகத் தெரியவில்லை. குமாரகம்பணருடைய பிரதானியாகிய கோபணரியர் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதப் பெருமாளுடைய உருவச் சிலையை நிலைபெறச் செய்து பிரதிட்டை செய்த பொழுது தாம் இயற்றிய ஸ்ரீரங்கநாதர் கல்வெட்டில் கோபணரியாரைப் பற்றிப் புகழ்ந் துள்ளார். வேதாந்த தேசிகரால் எழுதப் பெற்ற 25 தமிழ் நூல்களில் தற்காலத்தில் பத்தொன்பதுதான் கிடைத்துள்ளன. அந் நூல்கள் வடமொழிச் சொற்களைப் பெருமளவில் கலந்து மணிப்பிரவாள நடையில் எழுதப் பட்டுள்ளன.

தொல்காப்பியதேவர் என்பவர் எழுதிய திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகமும் கப்பல்கோவை என்னும் நூலும் இக் காலத்தில் தோன்றியவை யாகும். திருப்பாதிரிப்புலியூர்க் கலம் பகத்தைப் பற்றி இரட்டைப் புலவர்கள் கூறியுள்ளனர். கப்பல் கோவை என்னும் நூல் அச்சேறாது ஏட்டுச் சுவடியாக அடையாறு உ. வே. சுவாமிநாத அய்யர் நூல் நிலையத்தில் காணப்படுகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய தமிழிலக்கியங்கள்:

அருணகிரி நாதர்: திருப்புகழ் என்ற சிறந்த பக்திப் பாடல் களை முருகப் பெருமான்மீது இயற்றிப் புகழடைந்த அருணகிரி நாதர், 'பிரபுடதேவ மாராசன் உளமுமாட வாழ்தேவர் பெருமாளே,' என்று விஜயநகர அரசன் பிரபுடதேவ மகாராஜன் என்பவரைப்பற்றிக் கூறியுள்ளார். பிரபுடதேவ மகாராஜன் என்ற அடைமொழியுடைய விஜயநகர மன்னர்கள் மூன்று பேர் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் முதலாம் தேவராயர் 1406 முதல் 1422 வரையிலும், இரண்டாம் தேவராயர் 1422 முதல் 1447 வரையிலும் மல்லிகார்ச்சுன பிரபுடதேவராயர் 1447 முதல் 1465 வரையிலும் ஆட்சி புரிந்தனர். இவர்களுள் இரண்டாம் தேவராயர் பல வடமொழிப் புலவர்களையும், கன்னடப் புலவர் களையும் ஆதரித்ததாக அறிகிறோம். இரண்டாம் தேவராயர் திருவண்ணாமலைக்கு வந்து அண்ணாமலையார் கோவிலில் தரிசனம் செய்து பல தான தருமங்களைச் செய்ததாகச் செவிவழிச் செய்தி கள் உலவுகின்றன. அருணகிரி நாதருடைய பெருமையைக் கேள்வியுற்று இரண்டாம் தேவராயர் திருவண்ணாமலைக்கு வந் திருக்கக்கூடும். அவர் முன்னிலையில் முருகப் பெருமான் மயிலின் மீது அமர்ந்து பக்தர்களுக்குக் காட்சி தரும்படி அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ் பாடியதாகக் கதையொன்று வழங்குகிறது. திருவண்ணாமலையில் உள்ள கம்பத்திளையனூர் கோவிலில் இத் திகழ்ச்சி நடைபெற்றதாகவும் கூறுவார். ஆகையால், அருணகிரி

நாதர் இரண்டாம் தேவராயருடைய ஆட்சிக்காலமாகிய 1422-1447க்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கலாம்.

அருணகிரிநாதருடைய நூல்களில் அவருடைய ஆழ்ந்த கல்வியும், இசைப் புலமையும் நன்கு தெளிவாகின்றன. இவர் இளமையிலேயே இல்லற வாழ்க்கையைத் தொடங்கிய போதிலும், ஊழ்வினைப் பயனால் விலைமகளிரின் வலையிற்பட்டுத் தம்முடைய செல்வத்தையும், உடல் நலத்தையும் இழந்து பெருநோய் வாய்ப்பட்டுத் துன்புற்றார். நோயின் கொடுமை தாங்க முடியாது திருவண்ணாமலைக் கோவிலில் உள்ள வல்லாள கோபுரத்தின்மீது ஏறிக் கீழே விழுந்து தற்கொலை செய்துகொள்ள முயன்றார். ஆனால், முருகனுடைய அருளினால் உயிர் போக வில்லை. பெரு நோய் மறைந்து மீண்டும் உடல் நலம் உண்டாகியது. பின்னர்த் துறவறத்தை மேற்கொண்டு தமிழ்நாடெங்கிலும் புனித யாத்திரைகள் செய்து ஆயிரக்கணக்கான திருப்புகழ் என்ற சந்தக் கவிகளைப் பாடி, முருகபக்தி மார்க்கம் நாடெங்கிலும் பரவும்படி செய்தார். தற்காலத்தில் அருணகிரி நாதரால் பாடப்பெற்ற திருப்புகழ்களில் 1,307 பாடல்கள் தான் கிடைத்துள்ளன. திருப்புகழ்ப் பாடல்களோடு கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், அனுபூதி, திருவகுப்பு என்ற சிறந்த நூல்களையும் இயற்றியுள்ளார்.

காளமேகப் புலவரும் அதிமதுரக் கவியும் : சாளுவ திருமலை ராயர் என்பவர் 1447 முதல் 1457 வரையில் தமிழ்நாட்டின் மகா மண்டலேசுவரராக ஆட்சி புரிந்தார். இவர் சோழ மண்டலத்தில் ஆட்சி புரிந்தமை பட்டீசுவரம், பாபநாசம், திருவானைக்கா முதலிய இடங்களில் கிடைக்கும் கல்வெட்டுகளால் உறுதி பெறுகின்றது. சாளுவ திருமலைராயர், குமார கம்பண ருடைய சேனாதிபதியாகிய சாளுவ மங்குவின் பெயரராவார். இந்த மகா மண்டலீசுவரரைக் 'கல்யாணிச் சாளுவ திருமலை ராயன் மந்தரப் புயனும் கோப்பயன் உதவும் மகிபதி விதரண ராமன்' என்று காளமேகம் புகழ்ந்துள்ளார். இவர் காளமேகப் புலவரையும், அதிமதுரகவி என்ற தமிழ்ப் புலவரையும் ஆதரித்த தாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் காரைக்காலுக்கு அருகில் உள்ள திருமலை ராயன் பட்டினமும், திருமலை ராயன் கால்வாயும் இவர் காலத்தில் தோன்றின வெனக் கூறலாம்.

நந்திபுர விண்ணகரம் என்னு மிடத்தில் வைணவக் குடும்பத்தில் பிறந்தவர் காளமேகம். பின்னர்த் திருவரங்கம் அரங்கநாதர் கோவிலில் பணியாற்றித் திருவானைக்காவில் இருந்த

தேவரடியாளை மணந்துகொள்வதற்காகச் சைவசமயத்தைச் சார்ந்ததாகச் செய்திகள் உலவுகின்றன. திருவானைக்காவில் அகிலாண்டேசுவரியின் அருள் பெற்று வசை பாடுவதிலும் தூது, சந்தமாலை, அந்தாதி, மடல், கோவை, பரணி முதலிய செய்யுள் வகைகளைப் பாடுவதிலும் வல்லவராஞர். திருமலைராய ருடைய சபையில் இருந்து பல சிலேடைப் பொருள் கொண்ட தனிக் கவிகளையும் நிந்தாஸ்துதிகளையும் இயற்றியதாகக் கூறப் படுகிறது. திருவானைக்கா உலா என்ற நூலையும் இயற்றியுள்ளார். அதிமதுர கவியும், அவருடைய 64 சீடர்களும் திருமலை ராயருடைய சபையில் இருந்ததாகவும், காளமேகப் புலவருக்கும், அதிமதுரக் கவிக்கும் கவிதைப் போட்டி நடைபெற அதில் காளமேகம் வெற்றி பெற்றதாகவும் செய்திகள் உலவுகின்றன.

திருவம்பலமுடையார் என்பவர் இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள திருப்புத்தூரின் பெருமையைப்பற்றி ஓங்குகோவில் புராணம் என்ற நூலை இயற்றி யுள்ளார். இவர் சிவஞான போதத்தை இயற்றிய மெய்கண்டாருடைய மரபைச் சேர்ந்தவர்.

கிருஷ்ண தேவராயர் காலத்திய தமிழ்ப் புலவர்கள் :

கிருஷ்ண தேவராயருக்குத் தமிழில் எவ் விதப் புலமையும் இல்லாத போதிலும், அவருடைய ஆட்சியில் பல தமிழ்ப் புலவர் கள் வாழ்ந்து தமிழ் மொழிக்குச் சேவை செய்துள்ளனர்.

1. புராணத் திருமலை நாதர் : இவர் சிதம்பரத்தில் சைவ வேளாளக் குலத்தில் பிறந்து காஞ்சிபுரத்தில் இருந்த ஞானப் பிர காசர் மடத்தில் கல்வி பயின்றார். இவர் சைவப் புராணங்களை எடுத்துக் கூறுவதில் மிக்க திறமையுள்ளவராதலின் புராணத் திரு மலைராயர் எனப் பெயர் பெற்றார். தொடக்கத்தில் தென்காசிப் பாண்டி அரசனுகிய பராக்கிரம பாண்டியரால் (1473-1502) ஆதரிக்கப்பட்டு மதுரைச் சொக்கநாதக் கடவுள்மீது சொக்க நாதருலா என்ற பிரபந்தத்தை இயற்றி யுள்ளார். பின்னர்ச் சிதம்பரத்திற்குத் திரும்பி வந்தபொழுது சிதம்பரம் கோவில் பொதுத் தீட்சிதர்கள் சிதம்பர புராணத்தை இயற்றும்படி கேட்டுக் கொள்ளவே சகம் 1430 (1508 கி.பி.) சிதம்பர புராணத்தை எழுதினர்.

2. பரஞ்சோதியார் : இவர் புராணத் திருமலைநாதருடைய புதல்வராவார். சந்தான ஆச்சாரியர்களுடைய மரபில் வந்த குருவிடம் சைவ சித்தாந்த நூல்களைப் பாடங் கேட்டுச் சிதம்பரப் பாட்டியல் என்ற 51 செய்யுள்கள் கொண்ட நூலை இயற்றி யுள்ளார்.

3. செவ்வைச் சூடுவார் : இவர் மானுமதுரைக்கு அருகில் உள்ள வேம்பத்தூர் என்னு மிடத்தில் பிறந்தார்; வடமொழி யிலும், தமிழிலும் சிறந்த புலமைபெற்று, வடமொழியில் இருந்து பாகவத புராணத்தைத் தமிழில் மொழி பெயர்த் துள்ளார்; சக ஆண்டு 1465இல் கிருஷ்ண தேவராயர் காலத்தில் வாழ்ந்தவ ராவார்.

4. தத்துவப் பிரகாசர்: இவர் திருக்குடந்தைக்கு அருகிலுள்ள சிவபுரம் என்னு மிடத்தில் பிறந்தார்; சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் என்பவரிடம் சமயக் கல்வி பயின்றார்; பின்னர்த் திருவாரூரில் தியாகராஜர் கோ லுக்கு மேற்பார்வையாளராக நியமனம் பெற்றார்; திருவீழி மிழலையிலிருந்து வந்து திருவாரூரில் ஸ்ரீ பட்டர்கள் கோவில் காரியங்களைச் சரிவர நடத்தத் தவறியமையால் அக் காரியங்களைச் சீர்திருத்த முயன்று வெற்றி பெற முடிய வில்லை. ஆகையால், தம்முடைய கவித் திறமையைக் காட்டிக் கிருஷ்ண தேவராயருக்கும், அவருடைய காரியதரிசியாகத் தமிழ்நாட்டில் அலுவல் பார்த்த வடமலை யாருக்கும் கீழ்க்கண்ட செய்யுள்களை இயற்றிப் பிராது செய்தார் எனத் தெரிகிறது. திருவாரூர்க் கோவிலின் ஆண்டுத் திருவிழா விற்குக் கொடி ஏற்றித் திருவிழா முடிந்தபின் கொடி யிறக்குவது வழக்கம். திருவீழிமிழலை ஸ்ரீபட்டர்கள் கொடியிறக்கத் தொடங்கிய பொழுது, கோவில் காரியங்களைச் செய்யாது கொடி யிறக்கக் கூடாது என்று அரசன்மீது ஆணையிட்டதாகப் பின்வரும் வெண்பாக்களில் இருந்து நாம் உணர்ந்து கொள்ளலாம்.

'ஊழித் துலுக்கல்ல ஒட்டியன் தானுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டு - ஆழி
சிறந்த திருவாரூர்த் (தி)யாகருடை பூசை
இறந்ததே (கி)ருட்டினரா யா.
மருவுபுகழ்க் (கி)ருஷ்ண மகாராயர் ஆணை
அரிய வடமலையார் ஆணை - திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதம் திருவாணை
(தி)யாகக் கொடியிறக்கா தே.'

மேற்கூறப்பட்ட செய்யுள்களின் பிராதுகளைக் கேட்ட கிருஷ்ண தேவராயர், வடமலையார் என்ற காரியதரிசிக்கு மேற் கூறப்பட்ட திருவீழி மிழலைப் பட்டர்களைக் கோவில் அலுவல்களி லிருந்து விலக்கும்படி உத்திரவிட்டார். நியாயம் பெற்ற தத்துவப் பிரகாசர் பின்வருமாறு ஒரு செய்யுளியற்றித் திருவீழி மிழலை ஸ்ரீபட்டர்களை ஏளனம் செய்தார்.

'உண்ட வயிற்றில் உமிக்காந்தல் இட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே - பண்டெல்லாம்
அப்பம் அவல்வெள் ளதிரசமும் தோசைகளும்
கப்புவதும் போச்சே கவிழ்ந்து.'

தத்துவப் பிரகாசர், கிருஷ்ண தேவராயரையும், அவருடைய தண்ட நாயகர் சாளுவ நாயக்கரையும் நேரில் பல தடவை கண்டு திருவாரூர்க் கோவில் விவகாரங்களைச் சீர்திருத்தும்படி கேட்டுக் கொண்டார்; தத்துவப் பிரகாசம் என்ற சைவ சித்தாந்த நூல் ஒன்றையும் இயற்றி யுள்ளார்.

5. அரிதாசர்: இரு சமய விளக்கம் என்ற நூலை எழுதிய அரிதாசர், கிருஷ்ண தேவராயர் காலத்தில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப் புலவராவர்; அவனிகால களப்பாளர் இனத்தைச் சேர்ந்த திருவேங்கடமுடையார் என்பவருடைய புதல்வராகச் சித்தூர் மாவட்டத்திலுள்ள நாகலாபுரம் அல்லது அரிகண்டபுரம் என்ற ஊரில் பிறந்தவர். வடமலையார், தேவர்கள் பெருமாள், திருமலையப்பர் என்ற உடன் பிறந்தார்கள் மூவரில் இளையவரான திருமலையப்பரே அரிதாசர் எனப் புகழ் பெற்றார். திருமலையப்பர், திருப்பதி திருவேங்கடமுடையாரின் திருவாணைப்படி நாகலாபுரத்தில் ஒரு திருக்கோவிலை அமைத்து அதில் இறைவனைப் பிரதிட்டை செய்தார். கிருஷ்ண தேவராயர் பிரதாபருத்திர கஜபதியின்மீது படையெடுத்துச் சென்ற பொழுது நாகலாபுரத்தில் அரிதாசர் அமைத்த கோவிலில் எம் பெருமானை வணங்கிப் போர்மேற் சென்றதாகத் தெரிகிறது. கஜபதி அரசன் மீது வெற்றி கொண்டு திரும்புகையில் அரிதாசர் அமைத்த கோவிலுக்குப் பல தான தருமங்களைச் செய்தார்; தம்முடைய தாயின் நினைவாக அவ்வூருக்கு நாகலாபுரம் என்றும் பெயரிட்டார். அதற்கு அரிகண்டபுரம் என்ற பெயரும் வழங்கியது. தமிழ்நாட்டில் இருந்த பல தேவாலயங்களுக்கு மேற்பார்வையாளராக அரிதாசர் நியமானம் செய்யப் பெற்றார்.

அரிதாசரால் இயற்றப்பெற்ற சிறந்த தமிழ் நூல் இரு சமய விளக்க மாகும். அதில் ஆரணவல்லி, ஆகமவல்லி என்ற இரு பெண்கள் உரையாடும் முறையில் வைணவத்தையும், சைவ சமயத்தையும் ஒப்பிட்டுள்ளார். அந் நூலில் 2,119 செய்யுள்கள் உள்ளன. அரிகண்ட புரத்தில் தாம் அமைத்த தேவாலயத்தில் கோவில் கொண்ட கருமாமணி வண்ணன் திருமுன்னர் இந் நூலின் அரங்கேற்றம் நடைபெற்றது. இந் நூலின் பாயிரத்தில், கிருஷ்ண தேவராயர், கஜபதி அரசரை வென்ற வரலாற்றுச் செய்தியும் கூறப்பட்டுள்ளது.

'கிரிபோல் விளங்கிக் கிளரும்புயக் கிருட்டின ராயர்
தரைமீது சிங்காத் திரியில்செயத் தம்பம் நாட்ட
வரம்ஆ தரவால் அளித்த வடகூவம் மேவும்
கருமா மணிவண் ணகூநீடு கருத்தில் வைப்பாம்.'

6. குமாரசரஸ்வதி : இவ் வந்தணப் புலவர் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் முதலிய பல மொழிகளைக் கற்றுத் தமிழ்க் கவிகள் இயற்றும் திறமை பெற்றிருந்தார். இவருடைய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய செய்திகள் தெளிவாக விளங்க வில்லை. ஆனால், கிருஷ்ண தேவராயருடைய போர்களையும் பிரதாபருத்திர கஜபதியின் தலைநகரமாகிய கடகத்தை முற்றுகை யிட்டதையும், கஜபதி அரசருடைய மகள் துக்கா என்ற ஜெகன் மோகினியை மணந்து கொண்ட செய்தியையும் பற்றிப் பின்வரும் செய்யுளை இயற்றியுள்ளார்.

'கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கம் தோற்று
மெலிந்துகட கம்நழுவ விட்டாள்— மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மான(கி)ருஷ்ண பூபாலா உன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்.'

7. மண்டல புருடர் : தொண்டை மண்டலத்தில் வீரபுரம் என்னும் ஊரில் வாழ்ந்த சமணப் புலவர் மண்டல புருடர், திருநறுங்கொன்றையில் இருந்த குணபத்திராசாரியாரிடம் கல்வி பயின்றார். தமிழிலக்கியங்கள், சோதிடம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றுச் செய்யுளியற்றும் திறமையும் பெற்றார். தமிழ் மொழியில் இருந்த திவாகரம், பிங்கலந்தை என்ற நிகண்டுகள் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு எளிதாக விளங்காமல் இருந்ததை யுணர்ந்து சூடாமணி நிகண்டு என்ற நூலை இயற்றினார். இந் நிகண்டைத் தமிழிலக்கியத்தில் முதன்மை பெற விரும்புபவர் இன்றும் விரும்பிக் கற்கின்றனர். இது பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 1,195 செய்யுள்களைக் கொண்டுள்ளது. செய்யுள்கள் எளிதாக மனப்பாடம் செய்வதற்கேற்ற முறையில் அமைந்து உள்ளன. சூடாமணி நிகண்டைத் தவிர, இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களைப் பற்றிய திருப்புகழ்ப் புராணம் என்ற சமண சமயக் காவியத்தையும், மண்டல புருடர் இயற்றியதாகத் தெரிகிறது.

குணபத்திரரும், மண்டல புருடரும் கிருஷ்ண தேவராயர் காலத்தில் வாழ்ந்ததற்குச் சூடாமணி நிகண்டில் 'கொடைமடம்' என்ற சொல்லிற்கு விளக்கம் கூறும் ஒரு செய்யுள், ஆதாரமாக அமைந்துள்ளது.

'படைமயக் குற்றபோதும் படைமடம் ஒன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கொடிமன்னர் வணங்கும் தாளான் கிருட்டின ராயன்
கைபோல்
கொடைமடம் என்றுசொல்ப வரையாது கொடுத்த லாமே.'

8. காஞ்சி ஞானப்பிரகாசர்: இப் புலவர் பெருமானைக் கிருஷ்ண தேவராயர் ஆதரித்ததாகத் தெரிகிறது. சைவ சித்தாந்த முதனூலாகிய சிவஞான போதத்தை இயற்றிய மெய்கண்டதேவரால் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்ட சைவமடத்தின் தலைவராக இருந்து புராணத் திருமலைநாதருக்கும், அவருடைய மகன் பரஞ்சோதிக்கும் ஞானசாரியராக இருந்தார். இவர் மஞ்சரிப்பா என்ற நூலையும், கச்சிக் கலம்பகம் என்ற நூலையும் இயற்றியுள்ளதாகத் தொண்டை மண்டல சதகம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

'வானப் பிரகாசப் புகழ்க்கிருஷ்ண ராயருக்கு மஞ்சரிப்பா
கானப் பிரகாசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகம்செய்
ஞானப் பிரகாசக் குருராயன் வாழ்ந்து நலம்சிறந்த
மானப் பிரகாச முடையோர் வளர்தொண்டை
மண்டலமே.'

தம்மீது மஞ்சரிப்பா என்ற நூலை இயற்றிய ஞானப்பிரகாசருக்குப் பதினெட்டு வகையான இசைக் கருவிகளையும், பொன்னாலாகிய பல்லக்கையும், பொன்னுடைகளையும் அளித்துக் கிருஷ்ணதேவ ராயர் கௌரவித்ததாகத் தெரிகிறது.

9. நல்லூர் வீரகவி ராசர்: இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நல்லூர் என்னும் ஊரில் பிறந்தவர் வீரகவிராசர். பொற் கொல்லர் வகுப்பில் பிறந்த இவர் காளிதேவியின் அருளால் ஆசு கவியாகிச் சக ஆண்டு 1446இல் (கி.பி. 1524) அரிச்சந்திர புராணம் என்னும் நூலை இயற்றித் திருப்புல்லாணி ஜெகந்நாதப் பெருமாள் சந்நிதியில் அரங்கேற்றம் செய்துள்ளார். இந்த அரிச்சந்திர புராணம் பன்னிரண்டு காண்டங்களாகப் பிரிக்கப் பட்டு 1225 செய்யுள்களை உட்கொண்டுள்ளது. வடமொழியில் உள்ள அரிச்சந்திர காதை என்ற நூலும், தமிழிலுள்ள அரிச்சந்திர வெண்பா என்ற நூலும் இதற்கு முதல் நூல்களாகக் கருதப்படுகின்றன. இந் நூலின் சிறப்பைப் பூண்டி அரங்கநாத முதலியாரும் மகாமகோபாத்தியாரும் போற்றி யுள்ளனர்.

10. வரதன் என்னும் அருளாளதாசர்: இவர் பாகவத புராணத்தைத் தமிழில் எழுதியுள்ளார். திருக்குருகை என்னும்

இடத்தில் வாழ்ந்த கவிராயர் என்பவர் ஆழ்வார் திருநகரியில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானைப் பற்றி மாறன் அகப் பொருள், திருப்பதிக் கோவை, மாறன் அலங்காரம் என்ற நூல்களை இயற்றினர். கவிராஜ பண்டிதர் சௌந்தரியலகரி, வராகிமாலை, ஆனந்த மாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். திருக்காளத்தி நாதர் கட்டளைக் கலித்துறை, திருக்காளத்தி நாதருலா, திரு வண்ணுமலையார் வண்ணம், சேயூர் முருகன் உலா, இரத்தினகிரி உலா முதலிய பிரபந்தங்களும் இக் காலத்தில் தோன்றின. அதிவீர ராமபாண்டியனுடைய அண்ணனுகிய வரதுங்க ராமபாண்டியன் கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி, பிரமோத்திர காண்டம், கொக்கோகம் முதலியவற்றை இயற்றி யுள்ளார். சிதம்பரத்தில் வாழ்ந்த மறைஞான சம்பந்தர் அச்சுத ராயர், சதாசிவ ராயர் காலத்தில் பதி பசு பாசப் பனுவல், சங்கத்ப நிராகரணம், பரம உபதேசம், முந்திநிலை, சிவசமய நெறி, பரமத திமிர பானு, சகலாகம சாரம் என்ற சைவ சமய நூல்களை இயற்றினர்.

தஞ்சை மாவட்டத்தில் சூரியனர் கோவிலில் இருந்த சிவ ராஜ யோகிகள் என்பவர் சைவ சந்நியாச பத்ததி, சைவ பரி பாடை, சிவஞான சித்தியார் உரை, சிவநெறிப் பிரகாசம் என்ற சைவ சித்தாந்த நூல்களை இயற்றினர். மாசிலாமணி சம்பந்தர், மாணிக்க வாசகருடைய வரலாற்றைக் கூறும் உத்தர கோச மங்கைப் புராணத்தை இயற்றியுள்ளார். திருவொற்றியூர் ஞானப் பிரகாசர், திருவொற்றியூர்ப் புராணம், சங்கற்ப நிராகரண உரை, சிவஞான சித்தியார் பரபக்க உரை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். சேதுபுராணம், திருப்பாங்கிரிப் புராணம், திரு வையாற்றுப் புராணம், சிவஞானசித்தியர் உரை, திருவருட்பயன் உரை என்ற நூல்களை நிரம்ப அழகிய தேசிகர் என்பவர் எழுதி யுள்ளார்.

தென்காசியை ஆட்சி புரிந்த அதிவீரராம பாண்டியன் வட மொழியிலும் தமிழிலும் சிறந்த புலமை பெற்று விளங்கினர். இவர் நைடதம், காசிக் காண்டம், கூர்மபுராணம், இலிங்க புராணம், வெற்றிவேற்கை முதலிய நூல்களுக்கு ஆசிரியராகக் கருதப் படுகிறார். திருவிளையாடற் புராணத்தை இயற்றிய பரஞ் சோதியாரும் இக் காலத்தவரே. அருணை அந்தாதி, திருவாரூர்க் கோவை, அருணசல புராணம், திருவிரிஞ்சை புராணம், சௌந்தரியலகரி உரை முதலிய நூல்கள் சைவ எல்லப்ப நாவலரால் இயற்றப்பட்டன.

24. விஜயநகரப் பேரரசில் நிலவிய கட்டடக்கலை, உருவச் சிலைகள் அமைப்பு முதலியன

ஒரு சமூகத்தின் கலைச்செல்வங்களின் வரலாறு, அரசியல்-சமூக வரலாற்றைப் போன்று மிகவும் சிறப்புடைய தாகும். மக்களுடைய நாகரிக, பண்பாட்டு வளர்ச்சிகளை அவர்களால் இயற்றப் பெற்ற கலைச் செல்வங்களைக் கொண்டு அறிந்துகொள்ள முடியும். ஒரு நாட்டில் காணப்பெறும் கோவில்கள், அரண்மனைகள், குடியிருப்பு வீடுகள், தெய்வ விக்கிரகங்கள் முதலியவற்றைக் கொண்டு அந்நாட்டு மக்களின் மனோவளர்ச்சியும், சமய உணர்ச்சியும், தத்துவக் கொள்கைகளும் எவ்வகையான நிலையில் இருந்தன என்பதை நாம் அறிய முடியும். விஜயநகரப் பேரரசின் பல பகுதிகளில் காணப்பெறும் பழம்பொருட் கலைகள் மேற்கூறப் பட்ட நாகரிகப் பண்புகளை நன்கு உணர்த்துகின்றன.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பெற்ற கோவில்களில் அக் காலத்திய கட்டடக் கலையில் நிலைபெற்றிருந்த சில தனிப்பட்ட சிறப்புகளைக் காணலாம். சோழ மன்னர்கள் காலத்தில் கோவிலின் கருப்பக்கிரகத்தின் மேலுள்ள விமானமே சிறந்து விளங்கியது. அந்நிலை மறைந்து கோவில்களில் நடைபெறும் வழிபாடுகளுக்கும், திருவிழாக்களுக்கும் ஏற்பக் கலியாண மண்டபங்களும், நூற்றுக்கால், ஆயிரக்கால் மண்டபங்களும், பரிவாரத் தெய்வங்களுக்கு ஏற்ற சிறுகோவில்களும், அம்மன் கோவில்களும் அமைக்கப்பட்டன. இப்பொழுது அமைக்கப்பட்ட கோவில்களின் வடமேற்குப் பகுதியில் அம்மன் கோவில்கள் அமைவுற்றன. விஜயநகர ஆட்சிக் காலத்தில் தோன்றிய கலியாண மண்டபங்கள், அவற்றின் நடுவில் மேடைகள் அமைக்கப்பட்டு அம் மேடைகளில் சுவாமி, அம்மன் சிலைகளை வைத்துத் திருக்கல்யாண வைபவங்கள் நடைபெறுவதற்கேற்ற முறையில் கட்டப் பட்டன. அவை தேர் போன்ற உருவத்துடன் குதிரைகள் அல்லது யானைகள் இழுத்துச்செல்வதற்கேற்ற அமைப்புடன் விளங்கின. ஆயிரக்கால் மண்டபங்களும், கலியாண மண்டபங்களும் முகப்புக் கோபுரங்களும் கருவறையான கருப்பக் கிரகத்தைவிட மிக்க பெருமிதமான தோற்றத்துடன் பொலிவுற்றன.

கலியாண மண்டபங்களிலும், ஆயிரக்கால் மண்டபங்களின் முகப்புகளிலும் அமைக்கப்பெற்ற கருங்கல் தூண்கள் மிக்க வேலைப்பாடு அமைந்தவையாகும். தூண்களில் முன்கால்களைத் தூக்கிப் பாய்ந்து செல்வது போன்ற குதிரைகளும், யாளிகளும் காணப்படுகின்றன. தனிப்பட்டதொரு கருங்கல்லைக் கொண்டு பெரிய தூண்கள் மிக்க வேலைப்பாடுகளுடன் அமைக்கப் பட்டன. தூண்களின் உச்சிகளில் அலங்காரத்துடன் தொங்குகின்ற தாமரை மொட்டுகளும் காணப்படுகின்றன. சில கோவில்களில் ஏழிசைகளாகிய ச, ரி, க, ம, ப, த, நி என்ற சப்தங்கள் தோன்று வதற்கு ஏற்ற முறையில் தூண்கள் அமைக்கப்பட்டன. தூண் களில் காணப்படும் நாகபந்தம் என்ற அமைப்பு விஜயநகர ஆட்சிக் காலத்தில் அதிகமாகப் பின்பற்றப்பட்டது. கூடு என்ற கட்டு மானத்தில் வரையப்பட்ட செடி கொடிகள் முதலியவை இக் காலத்தில் தோன்றிய போதிலும் அவை விரைவில் மறைந்தன. பல்லவ, சோழ மன்னர்கள் ஆட்சியில் தோன்றிய மாடங்களில் அதிக வேலைப்பாடுகள் இருந்தன. ஆனால், விஜயநகர ஆட்சிக் காலத்தில் அந்த மாடங்கள் வேறுவிதமான உருவத்தை அடைந்தன.

கோபுரங்களின் நுழைவாயில்களில் ஒரு காலை வளைத்துப் படுத்துக் கொண்டிருக்கும் யாளிகளின்மேல் துவார பாலகிகளின் உருவம் அமைக்கப்படும் வழக்கமும் தோன்றியது. இந்த யாளி களுக்கு யானையின் முகமும், சிங்கத்தின் உடலும் அமைக்கப் பட்டன. இந்தத் துவாரபாலகி உருவங்கள் கங்கை, யமுனை ஆகிய இரண்டு ஆறுகளைக் குறிப்பனவாகும் என T.V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார். கோபுரத்தின் புறச் சுவர்களில் ஒன்றே டொன்று பிணைந்துள்ள வட்ட வடிவங்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் சிவபெருமானுடைய திருவிளையாடல்களும், மகா விஷ்ணுவின் தசாவதார உருவங்களும் செதுக்கப் பட்டன. தசாவதார உருவங்களில் யோக நரசிம்ம உருவங்களும், பிரக லாதனுக்கு உதவி செய்ய நரசிம்மர் தூண் பிளக்க வெளி வந்து இரணியனுடைய மார்பைப் பிளக்கும் நரசிம்மாவதாரமும் விஷ்ணு கோவில்களில் வரையப் பட்டன. சமூகத்தில் மக்க ளிடையே நடைபெற்ற பரதநாட்டியம், கோலாட்டம் முதலிய பொழுதுபோக்குகளும் சித்திரங்களாகக் காணப்பட்டன. பலவித விலங்குகளின் உருவங்களும், படர்ந்து செல்லும் செடி, கொடி களின் உருவங்களும் கோபுரத்தின் பக்கச் சுவர்களில் செதுக்கப் பட்டன.

விஜயநகர ஆட்சியில் அமைக்கப்பட்ட கருப்பக்கிரக விமானங் களில் பலவித வேற்றுமைகள் தோன்றின. பேரரசின் வடமேற்குப்

பகுதியில் படிப்படியாக அமைக்கப்பட்ட கடம்ப நாகர முறை பின்பற்றப்பட்டது. இதற்குத் திரிகூடாசல முறை என்ற பெயர் வழங்கியது. இரண்டாவதாகத் தமிழ்நாட்டைத் தவிர மற்றப் பகுதிகளில் சுகநாச முறை என்ற அமைப்பு முறையும் பின்பற்றப் பட்டது. மூன்றாவதாகச் சுகநாச முறையில்லாத நிரந்தர முறை என்பதைப் பின்பற்றி முதல் பிராகாரத்தில் திருமாளிகைகள் அமைக்கப்படும் முறையும் வழக்கத்திற்கு வந்தது. கோபுரங் களின் அமைப்புகளிலும் தமிழ்நாடு, ஆந்திரம், கன்னட நாடு ஆகிய மூன்று இடங்களுக்கும் வேற்றுமைகள் இருந்தன. கரு நாடகத்தில் கோபுரங்களின் நுழைவாயில்கள் மிக்க அகலமாக இருந்த போதிலும் கோபுரங்கள் அதிக உயரமாகக் காணப்பட வில்லை. தமிழ்நாட்டில் காணப்படும் கோபுரங்கள், ஏழு, ஒன்பது, பதினொரு தளங்களோடும், சிகரங்கள், நாசிகை, முகப்பட்டி, சக்திதுவஜம், சிம்மலதா முதலிய அலங்காரங்களோடும் காணப் படுகின்றன. கருநாடகத்திலும், ஆந்திரத்திலும் காணப்படும் கோபுரங்களில் இவ் வித அலங்காரங்களைக் காண முடியாது.

விஜயநகரத்தில் உள்ள இந்து சமயச் சார்புள்ள கட்டடங்கள்

விஜயநகரப் பேரரசின் அழிந்த சின்னங்கள் காணப்படும் ஹம்பி என்னும் கிராமத்தைப் பார்த்தால், அன்னியர்களால் வியந்து போற்றப்பட்ட கோட்டைகளும், அரண்மனைகளும், கோவில்களும் நிறைந்த தலைநகரம் இவ் வித நிலைக்கு வந்தது என்று நாம் கருத வேண்டியிருக்கிறது. குன்றுகள் நிரம்பி மலை களால் சூழப்பட்ட ஒரு கடினமான இடத்தைப் பொற்றெடி மகளிரும், மைந்தரும் கூடி வாழ்ந்த பெரிய நகரமாக அமைத்த விஜயநகர அரசர்களின் செயற்கரிய செயல்களை நாம் உணர வேண்டியிருக்கிறது. கற்பாறைகளை வெட்டியும், குடைந்தும், முட்புதர்களை அழித்தும், துங்கபத்திரை நதியிலிருந்து நீர்ப் பாசனத்திற்கு வழிசெய்தும், ஐரோப்பாக் கண்டத்தில் காண் பதற்கரிய பெரிய நகரத்தை அமைத்த மக்களுடைய திறமையை நாம் மறப்பதற் கில்லை. இவ் விதக் கடினமான உழைப்பும், எதிர்ப்புகளைச் சமாளிக்கும் திறமையும் மறைந்த பொழுது, மனித முயற்சியினுலுண்டான இந் நகரமும் மறைந்து போயிற்று எனக் கூறுவதில் உண்மை உள்ளது. ஹம்பியில் சிதறிக் கிடக்கும் சின்னங்களைக் கொண்டு அப்பதியை விஜயநகரத்தையும், பேரரசையும் பற்றிய வரலாற்றுச் செய்திகளை ஆய்வதற்கேற்ற திறந்த வெளிக் கலைக்கூடம் எனக் கூறலாம்.

விஜயநகரத்தில் காணப்படும் கட்டடங்களின் சின்னங்களை மூவகையாகப் பிரித்து அவற்றின் பழம்பெருமைகளை நாம்

அறியலாம். அவையாவன : (1) சமய சம்பந்தமுடைய கோவில் கள். (2) அரசாங்க சம்பந்தமுள்ள அரண்மனைகள், அலுவ லகங்கள், (3) இராணுவ சம்பந்தமுள்ள கட்டடங்கள்.

1. சமய சம்பந்தமுடைய கட்டடங்கள்

ஹம்பியிலுள்ள விருபாட்சர் கோவில் : விருபாட்சர் அல்லது கண்ணுதல் கோவிலின் அமைப்பு, விஜயநகரம் தோன்றுவதற்கு முன் ஹொய்சளர் ஆட்சிக் காலத்தில் இருந்ததெனக் கருதலாம். முதலாம் ஹரிஹர தேவர், விஜயநகரத்தை அமைப்பதற்கு உதவி செய்த வித்தியாரண்யரின் நினைவாக ஒரு கோவிலை அமைத்ததாகச் சில கல்வெட்டுகள் கூறுகின்றன. தம்முடைய முடிசூட்டு விழா வின் நினைவாக இக் கோவிலின் அரங்க மண்டபத்தைக் கிருஷ்ண தேவராயர் அமைத்ததற்குக் கல்வெட்டுகளின் சான்றுகளுள்ளன. இக் கோவிலில் காணப்படும் புவனேஸ்வரி ஆலயம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் சாளுக்கிய கட்டடக் கலையை ஒத்திருக்கிறது. அதிலுள்ள தூண்களும், கல்லாலாகிய பலகணிகளும், வாயிற் கதவுகளும் சாளுக்கியர் காலத்துக் கைத்திறமைகளை நினைவுபடுத்து கின்றன. கோவிலின் மேற்குப் பகுதியில் காணப்படும் முற்றத்தை யும், கிழக்குப்பகுதியில் காணப்படும் திறந்த வெளியையும் ஒரு கற் சுவர் இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. மேற்குப் பகுதியில் கருப்பக் கிரகமும், அம்மன் சந்நிதியும், பரிவார தெய்வங்களின் கோவில் களும் உள்ளன. துங்கபத்திரை நதிக்கரையிலிருந்து ஒரு சிறிய கோபுர வாயிலின் வழியாக இக் கோவிலுக்குள் வர முடியும். கிழக்கிலுள்ள கோபுரம் புறங்குவிந்த (Convex) முறையில் கட்டப் பட்டிருக்கிறது.

உத்தான வீரபத்திர சுவாமி கோவில் : 1546ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற இக் கோவிலில் தக்கன் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் வீரபத்திரருடைய உருவச்சிலை காணப்படுகிறது. இது வீர சைவ சமயத்தினரால் அமைக்கப்பட்டிருக்கக் கூடும். மூன்று பட்டையாக, மூன்று முகங்களுடனும், மூன்று சக்கரங் களின் உருவங்களுடனும் சிவலிங்கம் காணப் படுகிறது. வீரசைவ சமயத்தின் சத்ஸ்தல சித்தாந்தத்தை விளக்குவதற்காக இக் கோவில் அமைக்கப் பட்டிருக்கலாம் என T. V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார்.*

கிருஷ்ணசுவாமி கோவில் : 1513ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயர் உதயகிரிக் கோட்டையைக் கைப்பற்றிய பிறகு அங்குக் கிடைத்த பாலகிருஷ்ண உருவச் சிலையை விஜயநகரத்

*T. V. M. Admn and Social Life. Vol. II. P. 306.

திற்குக் கொண்டுவந்து, அந்த விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்வதற்காக இக் கோவில் அமைக்கப்பட்ட தாகும். இக் கோவிலின் கருப்பக் கிரகத்தைச் சுற்றி ஒரு பிரதட்சணப் பாதையுள்ளது. கருப்பக் கிரகத்திற்குமுன் அர்த்த மண்டபமும், மகா மண்டபமும் உள்ளன. கருப்பக் கிரகம், அந்தராளம் முதலியவற்றின் சுவர்களில் செதுக்கு உருவங்கள் (Bas - reliefs) காணப்படுகின்றன. கருவறை விமானத்திற்கு வடக்கிலும், தெற்கிலும் சிறுகோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோவிலின் கட்டமைப்புச் சிறந்த வேலைப்பாடு உள்ளதாகத் தெரிய வில்லை. மகாமண்டபத்தில் மாத்திரம் சில அலங்கார வேலைகள் காணப்படுகின்றன.

ஹசார இராமவாமி கோவில் : விஜயநகர அரண்மனைக்கு மிக அருகில் அமைக்கப்பட்டிருப்பதால் அரசர்களும், அரசிகளும் தனியாக வணக்கம் செலுத்துவதற்கு இக் கோவில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். இதைச் சுற்றியுள்ள 24 அடி மதிற் சுவரும், அது அமைக்கப்பட்டிருக்கும் முறையும் இக் கருத்தை வலியுறுத்துகின்றன. இக் கோவிலைக் கிருஷ்ண தேவராயர் கட்டியதாகக் கூறப்பட்டாலும் தேவராயர் என்ற பெயர் இக் கோவிலின் அடிப்பாகத்தில் எழுதப்பட்டிருப்பதால் தேவராயர் ஆட்சியில் தொடங்கப் பெற்ற இக் கோவிலைக் கிருஷ்ண தேவராயர் முடித்திருக்க வேண்டும் எனவும், கிருஷ்ண சுவாமி கோவிலைவிட இக் கோவிலின் அமைப்புச் சிறப்புற்று விளங்குவதால், அக் கோவிலைக் கட்டிய பிறகு இக் கோவில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனவும் கருதலாம். கிழக்கு மேற்கில் 200 அடி நீளமும் தெற்கு வடக்கில் 110 அடி அகலமும் உள்ள இக் கோவிலுக்குக் கிழக்குப் பார்த்த சந்நிதியுள்ளது. விஜயநகர ஆட்சிக் காலத்துக் கோவில் அமைப்புகளில் இது மிகச் சிறப்பு வாய்ந்த தெனக் கருதப்படுகிறது. கறுப்புச் சலவைக் கல்லால் செய்யப்பட்டதும், சித்திர வேலைப்பாடுகள் அமைந்ததுமான நான்கு தூண்களுக்குமேல் அர்த்தமண்டபம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அர்த்த மண்டபத்தின் கொடுங்கைகளும், தளமும் சுத்தமான கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. கருவறையின் மேல் மூன்று தளங்களுடன் கட்டப்பட்ட விமானம், செங்கல்லும், சுண்ணும்பும் சேர்த்துச் செய்யப்பட்டுச் சுதை வேலைகளுடன் காணப்படுகிறது. கருவறையின் வெளிப்புறச் சுவர்களிலும், முகப்பு மண்டபங்களிலும் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. சுவரில் வெளிப்புறத் தூண்களிலும், மாடங்களிலும் உருவச் சிலைகள் வைப்பதற்குரிய வசதிகள் காணப்படுகின்றன. உட்புறச் சுவர்களிலும், முற்றத்தைச் சுற்றியுள்ள சுவர்களிலும் பலவிதச் சிறப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

இராமாயணத்திலும், பாகவதத்திலும் வரும் கதைகளைச் சிற்ப வடிவில் நாம் இங்கே காணலாம். ரிஷிய சிருங்க முனிவர் புத்திர காமேட்டி யாகம் செய்வது, தாடகையை இராமன் கொல்லுவது, இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் கங்கை நதியைக் கடப்பது, சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனைத் தடுப்பதற்கு ஜடாயு போர் புரிவது, இராமன் ஏழு மராமரங்களைத் துளைத்து அம்பு விடுவது, அனுமன் இலங்கையில் வால் கோட்டையில் அமர்ந்து இராவணனுடன் உரையாடுவது, இராவணனுடைய இறுதிக் காலம் முதலிய காட்சிகள் கற் சிற்பங்களாகக் காணப்படுகின்றன. பாகவதத்தில் கூறப்படும் கிருஷ்ண பகவானுடைய திருவிளையாடல்களும் காணப்பெறு கின்றன. மதிற்சுவரின் வெளிப்புறத்தில் மகாநவமித் திரு விழாவில் நடைபெறும் யானைகளின் ஊர்வலம் முதல் வரிசை யிலும், குதிரைப் படையின் ஊர்வலம் இரண்டாவது வரிசை யிலும், மூன்றுவது வரிசையில் காலாட் படைகளும், ஐந்தாவது வரிசையில் இசை வாணர்களும், நடன மாதர்களும் செல்வதாகக் கற்சிற்பங்கள் காணப்படுகின்றன. மகாவிஷ்ணு, கல்கி அவதாரம் செய்து குதிரைமீது செல்வது போன்ற சிற்பமும், சுப்பிரமணியர், விநாயகர், கௌதம புத்தர் முதலிய உருவச் சிலைகளும் கோவிலில் உள்ள தூண்களில் காணப் பெறுகின்றன.

வித்தளர் கோவில்: விஜயநகர அரசர்களுடைய கோவில் கட்டடங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வித்தளர் கோவில் அமைந்துள்ளது. மராட்டிய நாட்டில் கிருஷ்ண பகவானே வித்தளர், விட்டோபா, பாண்டுரங்கன் என்ற பெயர் களுடன் வழிபட்ட முறைக்கு வித்தளர் வணக்கம் என்று பெயர். இக் கோவில் இரண்டாம் தேவராயருடைய காலத்தில் தொடங்கப் பட்டிருக்க வேண்டுமெனத் திரு. T. V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார். இரண்டாம் தேவராயருடைய அலுவலாளர் திப்பண்ண என்பவர் இக் கோவிலின் போக மண்டபத்தையமைத் ததாக ஹரிபட்டர் என்னும் புலவர், தாம் இயற்றிய நரசிம்ம புராணத்தில் கூறியுள்ளார். அது கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் விரிவான முறையில் அமைக்கப்பட்ட போதிலும் முழுமை பெற்ற தாகத் தெரிய வில்லை. ஆயினும், அக் கோவிலில் வழிபாடு நடந்துள்ளது. 1513ஆம் ஆண்டிலிருந்து 1564ஆம் ஆண்டுவரை பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன, தலைக் கோட்டைப் போருக்குப்பின் விஜயநகரத்தை விட்டு அரசர்கள் நீங்கியமையால் அக் கோயில் முழுமை பெருது நின்று விட்டது. 538 அடி நீளமும் 310 அடி அகலமும் கொண்ட நீண்ட சதுர வடிவில் சுற்று மதில்களால் சூழப் பெற்ற இக் கோவிலுக்கு

மேற்குத் திசையைத் தவிர மற்றத் திசைகளில் கோபுரங்கள் உள்ளன. கருப்பக் கிரகம், திறந்த மகா மண்டபம், மூன்று பக்கங்களில் மூடப்பட்ட அர்த்த மண்டபம் முதலிய மூன்று முக்கியப் பாகங்களைக் கொண்டுள்ளது. 100 அடிகள் கொண்ட சதுர மேடையின்மீது மகாமண்டபம் அமைந்துள்ளது. அது கருங்கல் மடிப்பு வேலைப்பாடுகளுடன் கூடிய ஐந்தடி உயரமுள்ள தூண்கள் பொருத்தப்பட்ட மேடையின்மீது கட்டப்பட்டுள்ளது. மூன்று பக்கங்களில் யானைகளின் உருவத்துடன் கூடிய படிக் கட்டுகள் அமைந்துள்ளன. கைப்பிடிச் சுவர்களிலிருந்து இரண்டு மடிப்பு உள்ள கொடுங்கைகள் இம் மண்டபத்திற்குள் வெயில் அடிக்காமல் நிழலைத் தருகின்றன. கைப்பிடிச் சுவர்களின்மீது மணிக்கோபுர வரிசை அமைந்துள்ளது. ஆகையால், இக் கோவில் அமைப்புக்களில் மிகச் சிறந்த அலங்கார வேலைப்பாடு உள்ள தாகும் எனப் பெர்குஷன் (Fergussion) கூறுவார்.

மகாமண்டபத்தில் 12 அடி உயரமுள்ள 56 தூண்கள் நிறுத்தப்பட்டு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் நாற்பது தூண்கள் வரிசையாக இரு பக்கங்களிலும் அமைந்து உள்ளன. நடுவில் பதினாறு தூண்கள் நிறுத்தப்பட்டு நீள்சதுர மான முற்றம் போல் காணப்படுகிறது. இந்த ஐம்பத்தாறு தூண்களும் ஒரே கருங்கல்லினால் மிகுந்த வேலைப்பாடுகளுடன் அமைவுற்றன. தூண்களின் உச்சிப் பகுதியில் உள்ள அடுக்குப் பேழைகளில் (Brackets) நாக பந்தமும், தாமரை மொட்டுகளும் செய்யப்பட்டுள்ளன. மகாமண்டபத்தின் நடுவில் அமைக்கப் பட்ட தூண்களில் குதிரை, யாளி, சிங்கம் முதலிய விலங்குகளின் உருவங்கள் காணப்படுகின்றன. இந்த மகாமண்டபம், திராவிட கோவில் அமைப்புக் கலைக்கு ஓர் அணிகலன் போல் விளங்குகிறது என்று பெர்ஸி ப்ரௌன் (Percy Brown) கூறியுள்ளார்.

அர்த்த மண்டபம் 55 அடி சதுரமுள்ளதாக 12 தூண்கள் அமைக்கப்பட்ட பிரகாரத்துடன் இருக்கிறது. அதன் நடுவில் நான்கு தூண்களின்மேல் கட்டப்பட்ட கல்மேடை அமைந்திருக் கிறது. கருவறையின் மீதுள்ள விமானம் அடித் தளத்தில் 70 அடி அகலமும், 72 அடி உயரமும் உள்ளது.

வித்தளர் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள கலியாண மண்ட பத்தின் அழகை நேரிற் கண்டு களிக்க வேண்டுமேயன்றி எழுத்து களால் விவரிப்பது எளிதன்று. அறுபத்திரண்டு அடி சதுரமுள்ள இடத்தில் இக் கலியாண மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இம் மண்டபம் 48 தூண்களைக் கொண்டு நடுவில் உள்ள சதுர மான மேடையுடன் விளங்குகிறது. திருக்கலியாண உற்சவத்தின்

பொழுது இம் மேடைகளின்மீது சுவாமியும், அம்மனும் (எடுப்புச் சிலைகள்) வைக்கப்பட்டுத் திருமண வைபவம் நடத்தப்படும். கலியாண மண்டபத்தில் காணப்படும் தூண்கள் மிகச் சிறந்த வேலைப்பாடு அமைந்துள்ளவை யாகும். வித்தளர் கோவிலின் மகாமண்டபத்திற்கும், கலியாண மண்டபத்திற்கும் எதிரில் கருங்கல்தேர் காணப்படுகிறது. இக் கற்றேரின்மீது செங் கல்லும், சுண்ணும்பும் சேர்த்துக் கட்டப்படும் விமானம் போன்ற அமைப்பு இருந்திருக்க வேண்டு மென லாங்ஹர்ஸ்ட் (Long hurst) கருதுவர். இந்தத் தேரின் சக்கரங்கள் தாமரைப்பூ வடிவ மாக அமைக்கப்பட்டு உள்ளன. இந்தக் கற்றேரைப் பார்த்துப் பார்த்துத் தொட்டுத் தொட்டு அனுபவித்த யாத்திரிகர்கள் இதன் சக்கரங்களைச் சுற்றிச் சுற்றி இதனுடைய கல் அச்சைத் தேயும்படி செய்து விட்டனர். இத் தேரின்மீது ஏறுவதற்கு இரண்டு யானைகள் முன்னிற்கும் கருங்கற் படிக்கட்டு இருக்கிறது. இந்தக் கல் யானைகளின் உருவங்கள் சிதைவடைந்துள்ளன. பெர்குஸன் என்பவர் இக் கல் ரதம் ஒரே பாறையைக் குடைந்து செய்யப்பட்ட தெனக் கருதினர். ஆனல், ரீ (Rea), லாங்ஹர்ஸ்ட் (Long-hurst) என்ற இருவரும் இது தனிப்பட்ட கருங்கற் பாறை யினல் செய்யப்பட்டது அன்றென்றும், ஒன்பது கற்பாறைகளைச் சேர்த்துச் செய்யப்பட்ட தென்றும், இவைகளைப் பொருத்திய வர்கள், பொருத்தப்பட்ட அடையாளங்கள் எளிதில் தெரியாத வண்ணம் மிக்க திறமையுடன் செய்துள்ளனர் என்றும் கூறுவர். இந்தத் தேரின் உச்சியிலுள்ள இறவாரத்திலிருந்து (Eaves) கருங்கற் சங்கிலிகள் தொங்கிக் கொண்டிருந்தன என்று ஹம்பி நகர வாசிகள் கூறுவது வழக்கம்.

அச்சுதராயர் கோவில் : இக் கோவில் இரண்டு பிராகாரங் களும், மதிற்சுவர்களும் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது. வடக்குப்பார்க்க அமைக்கப்பட்ட கோபுரம் இடிந்து பாழடைந்த நிலையில் இருந்த போதிலும் மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை முதலியவை நல்ல நிலையில் உள்ளன. இடிந்த கோபுரத்தில் காணப்படும் கல்வெட்டில் இக் கோவில், 1539ஆம் ஆண்டில் அச்சுதராயரால் அமைக்கப்பட்ட தெனக் கூறப்பட் டுள்ளது. வித்தளர் கோவிலைவிட வேலைப்பாட்டில் தரம் குறைந்த தாயினும் பல அழகிய தூண்களும், சிற்பங்களும் காணப் படுகின்றன. இக் கோவிலின் சுற்றுப் பிராகாரத்தில் அமைக்கப் பட்டுள்ள தாழ்வாரத்தின் அடிப்பாகத்தில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களும், கொரநாசி மடிப்புகளும் மிக அழகாக அமைந் துள்ளன. படைப்புச் சிற்பங்களில் காணப்படும் அழகிய காட்சியில் யானையும், எருதும் சேர்ந்து செதுக்கப்பட்ட சிற்பம்

மிக அழகு வாய்ந்த தாகும். இச் சிற்பத்தில் ஒரு நோக்கில் காளியுருவத்தையும், இன்னெரு நோக்கில் யானை உருவத்தையும் நாம் காணலாம். வடக்குக் கோபுரத்தின் நுழைவாயிலில் மகாவிஷ்ணுவின் தசாவதாரத்தைக் குறிக்கும் சிற்பங்களும், சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்களும், கிருஷ்ணபகவானுடைய லீலைகளும் கற்களைக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளன. இக் கோபுரத்தின் வாயிற் கதவுப் புடைநிலைகளில் (Door - Jambs) கங்கை, யமுனை ஆகிய இரு பேராறுகளைக் குறிக்கும் இரண்டு பெண் தெய்வங்களின் உருவங்கள் காணப் பெறுகின்றன. அச்சுதராயர் கோவில், விஷ்ணுவிற்காக அமைக்கப்பட்ட கோவிலாகும். இதன் வெளிப் பிராகாரத்தில் நன்முறையில் அமைக்கப்பட்ட கலியாணமண்டபம் ஒன்றும் காணப்படுகிறது.

வராகர் கோவில்: விஜயநகரத்தில் சூளைக்கடைத் தெருவின் வடக்கு முடிவில் இடிந்துபோன கோவிலும், கோபுர வாயிலும் உள்ளன. இந்தக் கோவிலின் உட்சுவரில் மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றுகிய வராகத்தின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இதன் பக்கத்தில் தலைகீழாக நிறுத்தப்பட்ட வாளும், சூரிய, சந்திரர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இந்த உருவங்கள், விஜயநகர அரசர்களால் அமைக்கப்பட்ட பல கட்டடங்களின் தூண்களில் காணப்படுகின்றன. இவற்றை விஜயநகர அரசர்கள் தங்களுடைய அரசாங்கச் சின்னமாகவும், முத்திரையாகவும் உபயோகப்படுத்தினர். இக் கோவிலுக்கு வராகப் பெருமாள் கோவில் என்ற பெயர் வழங்குகிறது.

அனந்த சயனக் கோவில்கள்: சூளைக் கடைத்தெருவின் வட மேற்கு முனையில் இடிந்துபோன கோவில் ஒன்றின் சுவரில் அனந்த சயனப் பெருமாளின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. பெருமாளின் கால்களுக்கு அருகில் ஸ்ரீதேவி, பூதேவி உருவங்கள் காணப்படுகின்றன. அவருடைய உந்திக் கமலத்திலிருந்து பிரமதேவன் தோன்றியதும் காணப்படுகிறது. வலப்புறத்தில் கருடனுடைய உருவமும், இடப்புறத்தில் ஹனுமானுடைய உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. வித்தளர் கோவிலுக்கு அருகில் உள்ள மலைப் பாறையின்மீது கட்டப்பட்டுள்ள ஒரு கோவிலிலும் இந்த அனந்த சயன உருவம் காணப்படுகிறது. அனந்த சயனங்குடி என்ற கிராமத்தில் உள்ள கோவிலிலும் இந்த அனந்த உருவம் காணப் படுகிறது.

மலையவந்த இரகுநாதர் கோவில்: மலையவந்த குன்றுக்கு அருகிலுள்ள ஒரு கோவிலில் ஒரு கற்பாறையின்மீது இராமருடைய உருவம் செதுக்கப்பட்டுள்ளது. இக் கோவிலில் மகாமண்டபமும்,

கலியாண மண்டபமும் காணப்படுகின்றன. இம் மண்டபங்களில் காணப்படும் உருவச் சிலைகள் மிக்க அழகு வாய்ந்தன வாகும். இரண்டு பாம்புகள் சூரியனையும், சந்திரனையும் விழுங்குதல் போன்று சூரிய சந்திர கிரகணங்கள் காட்டப்பட்டுள்ளன.

கடலைக்கல்லு கணேசர் கோவில் : கிருஷ்ணன் கோவிலுக்கு அருகில் இரண்டு மண்டபங்கள் உள்ளன. அவற்றுள் ஒரு மண்டபத்துள் ஒரே கல்லினால் செய்யப்பட்ட விநாயகருடைய உருவம் ஒன்று காணப்படுகிறது. விநாயகருடைய வாகனமாகக் கருதப்படும் மூஞ்சூறு உருவம் ஒன்றும் அதற்கு எதிரில் காணப் படுகிறது. இன்னும் ஒரு விநாயக உருவம் ஹம்பி கடைத்தெரு விற்கு அருகில் உள்ள ஒரு கோவிலில் அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கோவிலின் தூண்கள் மிக அழகான முறையில் அமைக்கப் பட்டுள்ளன. இக் கோவிலின் கற்சுவர்களும், கூரையும் கிரேக்க நாட்டில் காணப்படும் கோவில்களின் அமைப்புகளை ஒத்துள்ளன.

நரசிம்ம விக்கிரகம் : ஒரே கற்பாறை கொண்டு அமைக்கப் பட்ட நரசிம்ம உருவம் நான்கு பக்கங்களிலும் சுவர்கள் சூழ்ந்த ஓரிடத்தில் காணப்படுகிறது. அவ் விடத்தில் காணப்படும் ஒரு கல்வெட்டின்படி இந்த நரசிம்ம உருவம் 1528ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டதாகும். இவ் வுருவத்தின் உயரம் 22 அடிக்குமேல் இருந்த போதிலும், சிற்பத்திறமையோடு சிற்பச் சாத்திரங்களின் முறைப்படியும் அமைந்துள்ளது. ஆனால், இஸ்லாமியருடைய படையெடுப்பினாலோ, வேறு காரணத்தினாலோ இவ் வுருவம் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. சிதைந்த பகுதிகளில் இருந்து இவ் வுருவம் இலக்குமி நரசிம்ம வுருவமாக இருந்திருக்க வேண்டு மெனத் தெரிகிறது. இவ் வுருவத்தைப்பற்றி வின்சென்ட் சுமித் என்பவருடைய கூற்றுகள் சிற்பக்கலை அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட வில்லை. 'இந்த நரசிம்மருடைய உருவமும் ஹனுமானுடைய உருவமும் விஜயநகர அரசாங்கத்தின் அநாகரிகத்தைக் காட்டுகின்றன. மிகத் திறமையுடனும், கவனத் துடனும் அமைக்கப்பட்ட போதிலும் இவை கலை மேன்மையும், அழகும் அற்ற பயங்கரமான சிலைகளாகும்' என்பன வின்சென்ட் கூற்றுகளாகும். இக் கூற்றுகளால் வின்சென்ட் சுமித் இந்திய இதிகாசங்களையும், புராணங்களையும் நன்கு புரிந்துகொள்ளாதவர் என்பது நன்கு விளங்குகிறது.

கருநாடகப் பிரதேசத்தில் விஜயநகரக் கோவில்கள் :

விஜயநகர ஆட்சிக்குமுன் கருநாடகப் பிரதேசத்தில் ஹொய்சள முறையில் கோவில்கள் அமைக்கப்பட்டன. விஜய நகர ஆட்சி கருநாடகத்தில் வேரூன்றிய பிறகு திராவிடக் கட்டட

முறையும் ஹொய்சளக் கட்டட முறையும் கலந்த கோவில் அமைப்புகள் தோன்றின,

சிருங்கேரி வித்தியா சங்கரர் கோவில் : மைசூர்ப் பகுதியை ஆண்ட வாதாபி சாளுக்கியர், இராட்டிர கூடர், கலியாணச் சாளுக்கியர், ஹொய்சளர் முதலியோர் கோவில்களை அமைப்பதற்கு எளிதாகச் செதுக்கக் கூடிய கருங்கற்களை உபயோகப் படுத்தினர். ஆனால், விஜயநகர அரசர்கள், தமிழ் நாட்டில் பல்லவ மன்னர்களும், சோழர்களும் உபயோகப் படுத்திய கடினமான கருங்கற்களை உபயோகித்துக் கோவில்களை அமைத்தனர். சிருங்கேரியில் வித்தியா சங்கரர் கோவில், ஹொய்சள முறையையும், திராவிட முறையையும் பின்பற்றிக் கடினமான கருங்கற்களைக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. இக் கோவிலின் கருவறையும், சிற்ப வேலைப்பாடுகளும், முகமண்டபம் இன்மையும், கோவிலுக்கு வெளியில் மேடைகள் அமைந்திருப் பதும், கயிறு முறுக்கியது போன்ற கொரஞ்சு வேலையும், மூன்று அடுக்குக் கோபுரமும், உச்சியில் உலோகத்தை வைத்து வேலை செய்திருப்பதும், உருவச் சிலைகளின்மீது காணப்படும் ஆடை களும், நவரங்கத் தூண்களும் ஹொய்சளக் கட்டட அமைப்பு முறையும், திராவிட அமைப்பு முறையும் கலந்திருப்பதைக் காட்டுகின்றன. கோவிலின் உட்பகுதியில் திராவிட அமைப்பு முறையையும் வெளிப்பகுதியில் ஹொய்சளர்கள் காலத்திய அமைப்பு முறையையும் நாம் காணலாம்.

கருவறை அல்லது கருப்பக் கிரகத்தின் அமைப்பு, சப்த ரத (ஏழு தேர்) முறையைச் சேர்ந்த தாகும். கருப்பக் கிரகத்தோடு சுகநாசி, பிரதட்சிணை, நவரங்கம் முதலியவைகளும் காணப் படுகின்றன. பிரதட்சணப் பாதையில் ஆறு சோபனங்கள் காணப் படுகின்றன. இந்தச் சோபனங்கள் அல்லது படிக்கட்டுகள் யானைகளின் உருவங்கள் பாதுகாப்பது போல் அமைக்கப்பட்டிருக் கின்றன. உபபீடத்திற்கு மேலுள்ள அதிஷ்டானம், கோவிலின் அடிப்பாகமாகக் காணப்படுகிறது. அதன்மேல் விமானமும், மண்டபமும் அமைக்கப் பட்டுள்ளன. அடிப்பாகத்தில் பல மடிப்பு வேலைகள் உள்ளன. மடிப்புகளுக்குமேல் புடைப்புச் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. புடைப்புச் சிற்பங்களில் ஒன்று, ஆதி சங்கரர் தம்முடைய நான்கு மாணவர்களுக்கு உபதேசம் செய்யும் காட்சியைக் காட்டுகிறது.

கொரஞ்சு வேலைப்பாட்டிற்கும், அடிப்பாகத்திற்கு மிடையில் சாளுக்கிய ஹொய்சளக் கட்டடக் கலையின் சிறப்புகள் தென்

படுகின்றன. இந்த இடைவெளியில் ஆறு வாயில்கள், கதவு களுடன் காணப்படுகின்றன. வாயில்கள் இல்லாத மற்ற இடங் களில் சிற்பத் திறமை வாய்ந்த அறுபத்தொரு உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்தக் கலைச்செல்வங்களில் தென்னிந்திய விக்கிரகங்களின் கலைக்கூடம் போன்ற காட்சியை நாம் காணலாம். இவை சைவ சமயப் புராணங்களில் காணப்படும் வரலாறுகளின் சிற்பங்களாக இருக்கின்றன. அஷ்டதிக்குப் பாலகர்களாகிய இந்திரன், இயமன், வாயு, குபேரன் முதலிய தேவர்களின் உருவங்களும் அமைந்துள்ளன. அத்வைதக் கொள்கைகளின் சின்னங்களாகிய ஸ்ரீ சக்கரங்களின் உருவங்கள் இருக்கின்றன. தெற்குப்புற வாயிலுக் கருகே உள்ள மாடத்தில் தக்ஷ ணா மூர்த்தியின் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவற்றுல், சிருங் கேரி வித்தியாசங்கரர் கோவிலின் அமைப்பில் பிற்காலப் பல்லவர், சோழர் காலத்திய சிற்ப அமைதிகள் சேர்ந்து விளங்குவதை நாம் காண முடியும்.

ஹொய்சளக் கோவில்களின் அமைப்பு முறையைப் பின்பற்றி வித்தியாசங்கரர் கோவிலின் கருவறை விமானம் மூன்று தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியக் கோவில் விமானங்களில் காணப்படும் ஆரம், கூடம், கோஷ்டம், பஞ்சரம் முதலியவைகளை விமானத் தளங்களில் காண முடிய வில்லை. ஆயினும், கிரீவம், குவிமாட சிகரம், தூபி (ஸ்தூபி) முதலிய அலங்காரங்களைக் காணலாம். விமானத்தின் உச்சியிலும், நான்கு பக்கங்களிலும் உள்ள மூலைகளிலும் தூபிகள் அமைக்கப்பட்டு, அவை 'பஞ்சயாதனம்' என்ற சிகர அமைப்பிற்கு எடுத்துக் காட்டாக உள்ளன. உருள் தொட்டி (Barrel) வடிவில் கூரை அமைக்கப்பட்ட சுகநாசியும், முன்பக்கத்தில் தோரணங்கள் தொங்குவதும் சாளுக்கிய அமைப்பு முறைகளாகும். கரு வறையைச் சுற்றி இரண்டு சுவர்கள் உள்ளமையால் இக் கோவில் 'சந்தர கருப்ப' வகையைச் சேர்ந்த தென T. V. மகாலிங்கம் கூறுவார். கருவறையின் உள்ளே அமைவுற்றிருக்கும் ஆறு சிறிய கோவில்களுள் ஒன்றில் சிவலிங்கம் அமைந்துள்ளது. சரஸ்வதி - பிரம்மா, இலக்குமி - நாராயணன், உமா - மஹேஸ்வரர் உருவங் களும் மற்றும் கணபதி, துர்க்கை உருவங்களும் காணப் பெறு கின்றன.

கருவறைக்கும், முன் மண்டபத்திற்கும் இடையில் புடைச் சிறை (Transept) அமைந் துள்ளது. ஆதிசங்கராச்சாரியார் அறுவகைச் சமயங்களை நிலைநாட்டியவர் என்பதற்கு இக் கோயில் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கருவறையின் கிழக்கிலுள்ள

மண்டபம் 'நவரங்க' மண்டப அமைப்பு என்பதற்கு உதாரண மாகும். ஒரே கல்லால் ஆகிய பன்னிரண்டு தூண்களின்மேல் இம் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. தூண்களில் சிங்கங்களின்மீது அமர்ந்து சவாரி செய்யும் மனித உருவங்கள் காணப்படுகின்றன. சிங்கங்களின் வாய்களுக்குள் உருண்டைப் பந்துகள் காணப்படு கின்றன. இந்தப் பன்னிரண்டு தூண்களும் மேடம், (மேஷம்) இடபம் முதலிய பன்னிரண்டு இராசிகளையும் குறிக்கின்றன. ஒவ்வொரு தூணின் உச்சிக் கருகில் சூரியனுடைய உருவம் உள்ளது. மாதங்களுக்கு ஏற்றாற் போலச் சூரியனின் கிரணங்கள் இந்த இராசிகளின்மீது படுவது போன்ற ஐதிகத்துடன் இத் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மண்டபத்தின் மேல்தளம் எட்டு அடிச் சதுர முள்ளது. தளத்தின் அடிப்பாகத்தில் நான்கு அடிச் சதுரமுள்ள பரப்பில் ஐந்து அடுக்குகள் கொண்ட இதழ்கள் அமைந்த தாமரை மலர் அமைக்கப்பட்டுள்ளது. அதன் நான்கு பக்கங்களிலும் கிளிகள் உட்கார்ந்து இதழ்களைக் கோதுகின்ற முறையில் அமைக்கப்பட்டு உள்ளன. கருவறையின் முகப்பில் ஆஞ்சநேயருடைய துவார பாலக உருவம் உள்ளது. இவற்றுள், சிருங்கேரி வித்தியா சங்கரர் கோவில் தனிச் சிறப்புடையதாக விளங்குகிறது.

சிருங்கேரியில் காணப்படும் மற்றொரு கோவிலாகிய திருக் கச்சி நம்பி கோவிலில் பதின்மூன்று சிற்பச் செல்வங்கள் காணப்படு கின்றன. பாண்டவர்களில் நடுப்பிறந்தோனுகிய அர்ச்சுன னுடைய வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் உருவச் சிலை களில் காணப்படுகின்றன. பங்கஜனஹல்லி என்னு மிடத்திலுள்ள மல்லிகார்ச்சுனன் கோவிலில் கண்ணப்பருடைய உருவம் உள்ளது. கண்ணப்பர் மூன்றுதலை நாகத்தின் குடைக்கீழ் உள்ள சிவ லிங்கத்தின்மீது ஒருகாலை ஊன்றிக் கொண்டு, வில்லைத் தோளின் மீது வைத்துக் கொண்டு ஓர் அம்பினுல் தமது வலக்கண்ணைத் தோண்டும் காட்சி மிக்க அருமையுடைத் தாகும். தம்முடைய இடத் தொடையில் வல்லபையை அமர்த்திக் கொண்டு காணப் படும் சக்தி கணபதியும், வராகமும், அன்னப் பறவையும் அடிமுடி தேடுவதைக் காட்டும். இலிங்கோற்பவ மூர்த்தியின் உருவங்களும் இக் கோவிலில் காணப் பெறுகின்றன.

ஆந்திரப் பகுதியில் காணப்பெறும் முக்கிய விஜயநகரக் கோவில்கள் :

அனந்தபுரி மாவட்டத்தில் உள்ள தாட்பத்திரியில் இராம லிங்கேசுவரர் கோவிலும், வெங்கடரமணர் கோவிலும் சிறந்த கோவில் அமைப்பு உடையவை யாகும். இராமலிங்கேசுவரர்

கோவிலில் காணப்படும் இரண்டு கோபுரங்கள், விஜயநகரத்தில் காணப்பெறும் வித்தளர் கோவில் கோபுரங்களைவிடச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. இக் கோபுரங்களின் மேல் பகுதிகளில் சிற்ப வேலைப்பாடுகள் மிகுதியாகக் காணப்பெற வில்லை. அடிப்பாகத்தில் சலவை செய்யப்பட்ட கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தூண்களும், சிற்பங்களும் கண்ணையும், கருத்தையும் கவரத்தக்க வகையில் அமைந்துள்ளன. இவை ஹலேபீடு, பேலூர் முதலிய இடங்களில் காணப்படும் விஜய நகரக் காலத்திய கோவில்களைவிடச் சிறந்த முறையில் அமைக்கப் பட்டிருக்கின்றன என்று பெர்குஷன் (Fergussion) என்பவர் கூறுவார். வெங்கட்டரமணர் கோவிலில் பிரமிக்கத்தக்க மகா மண்டபம் அமைந்திருக்கிறது. கருப்பக்கிரகத்தின் சுவர்களில் இராமாயணக் காட்சிகள் சித்திரிக்கப் பட்டுள்ளன.

லேபாக்ஷி : பாபவிநாசர், வீரேசர், ரகுநாதர் ஆகிய மூன்று தெய்வங்களுக்குத் திரிகூடாசலம் என்ற முறையில் ஒரே முக மண்டபத்துடன் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. வீரேசர் கோவிலிலுள்ள நாட்டிய மண்டபமும், கலியாண மண்டபமும் கட்டட அமைப்புச் சிறப்பு வாய்ந்தவை யாகும். பாபவிநாசர் கோவிலில் அழகிய சிற்பங்களும், வேலைப்பாடு மிகுந்த தூண் களும் காணப்படுகின்றன. மத்தியில் வீரபத்திரர் கோவிலும், அமைந்துள்ளது. சிவனும், விஷ்ணுவும் எதிர்முகமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் முறையில் இக் கோவில்கள் அமைக்கப்பட் டுள்ளன. வீரபண்ணய்ய நாயக்கர், வீரண்ண நாயக்கர், ஹிரிய மல்லப்பண்ணய்யா என்ற மூன்று சகோதரர்களின் உருவங்கள் இக் கோவில்களில் அமைக்கப்பெற்றுள்ளன.

பெனுகொண்டா : தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு ஆர வீட்டு வமிசத்து அரசர்களுடைய தலைநகரமாக இருந்த பெனு கொண்டாவிலுள்ள கோட்டைக்குள் சைவ, வைணவக் கோவில் கள் இரண்டு உள்ளன. ஆனல், இவைகளுக்குப் பிரகாரங்களோ, கோபுரங்களோ இல்லை. இந்த இரண்டு கோவில்களின் அமைப்புகளும், சுவர்களில் காணப்படும் அலங்காரங்களும் மிகச் சிறப்பு வாய்ந்தவை யாகும்.

புஷ்பகிரி : கடப்பை மாவட்டப் புஷ்பகிரியில் உள்ள சென்னகேசவர், சந்தான மல்லீசுவரர், உமாமகேசுவரர் கோவில்கள் விஜயநகர ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பெற்றன வாகும்.

சோமப்பாலம் : இது சித்தூர் மாவட்டத்தில் உள்ள காசிம் கோட்டைச் சென்னராயர் கோவிலின் சுற்றுமதிலைச் சூழ்ந்து

கோபுர வாயிலுடன் அமைக்கப்பட்டிருக்கும் கோவிலாகும். பிர காரத்திலுள்ள ஒரு மண்டபத்தில் பல உருவச் சிலைகள் காணப் பெறுகின்றன. கருப்பக் கிரகத்தின் மீதுள்ள விமானம் ஏகதள முறையில் அமைந்துள்ளது. வட்ட வடிவமாக உள்ள சிகரம் வேசர முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. மகாமண்டபத்தில் காணப்படும் தூண்கள், விஜயநகர பாணியில் அமைந்துள்ளன. கலியாண மண்டபத்தில் காணப்படும் தூண்களின் வேலைப் பாடுகள் மிக்க சிறப்புடையவை. இம் மண்டபங்களின் கூரையின் உட்புறங்களில் சமய சம்பந்தமுள்ள சித்திரங்கள் வரையப் பட்டுள்ளன.

சந்திரகிரி : இரண்டாம் வேங்கட தேவராயர் காலமுதற் கொண்டு விஜயநகர அரசர்களுக்குத் தலைநகரமாகச் சந்திரகிரி விளங்கியது. சந்திரகிரிக் கோட்டைக்குள் விஜயநகர ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்கள் சுமார் ஒன்பது காணப் படுகின்றன. இக் கோவில்களில் பிரகாரங்களோ, கோபுரங் களோ காணப்படவில்லை. இங்குள்ள கோவில்களும், தெனுலி ராமன் வீடு என்று கூறப்படும் ஒரு கட்டடமும் பாழடைந்த நிலையில் உள்ளன.

தமிழ்நாட்டில் காணப்படும் விஜயநகரக் காலத்திய கோவில்கள் :

தமிழ்நாட்டில் காணப்பெறும் கோவில்களில் பெரும் பாலானவை சோழர்கள் காலத்தில் அமைக்கப்பெற்றவையாகும். விஜயநகர அரசர்கள் இக் கோவில்களை விரிவுபடுத்தி ஆயிரக்கால் மண்டபங்கள், நூற்றுக்கால் மண்டபங்கள், கலியாண மண்டபங் கள், திருக்குளங்கள், இராஜ கோபுரங்கள் முதலியவற்றை அமைத்தனர். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோவிலிலுள்ள இராஜகோபுரத்தையும், காளத்தி, திருவண்ணாமலை முதலிய இடங்களிலுள்ள கோபுரங்களையும் கிருஷ்ணதேவராயர் அமைத் துள்ளார். சிதம்பரத்திலுள்ள வடக்குக் கோபுரம் சோழர்கள் காலத்தில் தொடங்கப்பட்டு முடிவுபெறாமல் இருந்ததைக் கிருஷ்ண தேவராயர் முழுமைபெறச் செய்ததாகத் தெரிகிறது. விஜயநகர அரசர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட கோபுரங் களுக்கு இராய கோபுரங்கள் என்ற பெயர் வழங்கலாயிற்று. கிருஷ்ண தேவராயர் காலத்திற்குப் பிறகு திருவரங்கம், இரா மேசுவரம், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய இடங்களில் கோபுரங்களும், கோவில்களும் அமைக்கப்பெற்றன. ஸ்ரீவில்லி புத்தூரின் ஆண்டாள் கோவிலில் காணப்படும் கோபுரம் மிகப் பழமையானதாகத் தெரிகிறது.

வேலூர் : வேலூர்க் கோட்டைக்குள்ளிருக்கும் ஜலகண்டேசுவரர் கோவிலும், கோபுரமும், கலியாண மண்டபமும் விஜய நகர அரசர்களுடைய ஆட்சிக் காலத்தில் வேலூர் நாயக்க மன்னர்களால் அமைக்கப்பட்டன வாகும். இங்குள்ள கலியாண மண்டபம் திராவிடக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. தூண்களில் காணப்படும் யாளிகளும், முன்கால் கீளைத் தூக்கிக்கொண்டு நிற்கும் குதிரைகளும் மிக்க திறமையுடன் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களில் காணப்படும் யாளிகளும், பூதங்களும் கற்பனைக் கலைச் செல்வங்களுக்கு எடுத்துக் காட்டாக உள்ளன. கொடுங்கைகளுக்குமேல் காணப்படும் கொரஞ்சு வேலைகளும், கருங்கல் பின்னல் வேலைகளும் வேறு எங்கும் காணமுடியாத உன்னதமான சிற்பத் திறமையுடன் செய்யப்பட்டுள்ளன.

காஞ்சிபுரத்தில் உள்ள கோவில்கள் : காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலில் நுழைவாயில் கோபுரம், 188 அடி உயரமும், 10 மாடிகளும் கொண்ட தாகும். அதில் காணப்படும் ஒரு கல்வெட்டின்படி இக் கோபுரம் கிருஷ்ண தேவராயரால் அமைக்கப் பெற்றதாகத் தெரிகிறது. இக் கோபுரத்தின் அமைப்பைப் பின்பற்றித் தென்னிந்தியாவில் பல கோபுரங்கள் அமைக்கப்பட்டன. ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் காணப்படும் பெரிய மண்டபத்தில் 540 தூண்கள் உள்ளதென T. V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார். அருளாளப் பெருமாள் கோவிலிலுள்ள கலியாண மண்டபம் வேலூர் ஜலகண்டேசுவரர் கோவிலின் கலியாண மண்டபத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்ட தாகும். இம் மண்டபத்தின் தூண்களில் காணப்படும் குதிரை உடலுள்ள கற்பனை விலங்குகளும், குதிரைகளும் அவற்றின்மீது அமர்ந்து இருக்கும் வீரர்களின் உருவங்களும் மிக்க அழகு வாய்ந்தனவாக உள்ளன. இம் மண்டபத்தின் கபோதங்களில் இருந்து தொங்கிக் கொண்டிருக்கும் கற்சங்கிலிகள் ஒரே கல்லிலிருந்து செய்யப்பட்டவை யாகும். இதில் காணப்படும் சிற்பங்களில் இராமன் ஏழு மராமரங்களை ஓரம்பினால் தொளைக்கும் காட்சி, மக்கள் கண்டு வியக்கத் தக்க முறையிலுள்ளது.

திருப்பதியில் உள்ள கோவில்கள் : கீழ்த் திருப்பதியிலும், மலை மீதிலும் உள்ள கோவில்கள் விஜயநகரப் பாணியை ஒத்திருக்கின்றன. பிற்காலத்தில் இக் கோவில்கள் சீர்திருத்தி அமைக்கப் பட்ட போதிலும் விஜயநகர காலத்திய மண்டபங்களும், கலியாண மண்டபங்களும், கோபுரங்களும் அங்குக் காணக் கிடக்கின்றன.

சிதம்பரம் : கிருஷ்ண தேவராயர் சிம்மாத்திரியில் வெற்றித் தூண் நிறுவிய பிறகு 140 அடி உயரமுள்ள சிதம்பரம் வடக்குக் கோபுரத்தை அமைத்ததாக ஒரு கல்வெட்டில் கூறப்பட்டிருக் கிறது. அடிப்பாகம் கருங்கல்லினாலும், மேற்பகுதி செங்கற் சுண்ணும்பினாலும், சுதையினாலும் அமைக்கப்பட்ட சிற்பங் களோடு மிகுந்த அழகான முறையில் இக் கோபுரம் காணப்படு கிறது. இதில் சைவ, வைணவ சமய சம்பந்தமுள்ள உருவங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் 338 அடி நீளமும், 197 அடி அகலமும் கொண்டு அமைக்கப்பட்ட சிறந்த மண்டப மாகும். இந்த ஆயிரக்கால் மண்டபம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திற்கு முன்னரே இருந்ததாகவும், இம் மண்டபத்தில் பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் தம்முடைய பெரிய புராணத்தை அரங்கேற்றம் செய்ததாகவும் செய்திகள் வழங்குகின்றன. ஆகையால், இம் மண்டபம் விஜயநகர ஆட்சியில் அமைக்கப்பட்ட தென்னும் கூற்று ஆராய்ச்சிக்குரிய தாகும். இதன் நடுவில் காணப்பெறும் உருள்குவி மண்டபம் இஸ்லாமியர் தென்னிந்தியாவிற்கு வந்து இம் மாதிரி மண்டபங்களைத் தென் னிந்தியச் சிற்பிகளுக்குக் கற்றுக் கொடுத்தனர் என்ற பெர்குஸன் என்பவருடைய கருத்தும் ஆராய்ச்சிக்கு உரிய தாகும்.

தில்லையில் சிவகாமியம்மன் கோவிலுக்கு முன் காணப்படும் மூக மண்டபத்தில் ஐந்து பக்கச் சிறைகள் (Aisles) உள்ளன. இரு பக்கங்களில் உள்ள இடைகழிகள் 6 அடி அகலமும், 8 அடி அகலமும் உள்ளன. நடுவில் உள்ளது 22 அடி அகலமுள்ளது. இம் மண்டபத்தின் கூரையில் அமைக்கப்பட்டுள்ள கருங்கற்களின் சுமை, மண்டபத்தைக் கெடுத்து விடாத முறையில் பொருத்தப் பட்டு உள்ளது. சிவகாமி கோட்டத்தைச் சுற்றிப் பிராகாரத் தாழ்வாரங்கள் இரண்டு அடுக்குகளில் அமைந்துள்ளன. இக் கோவில் அமைப்புச் சோழர் காலத்தியதாகத் தோன்றுகிறது. ஆயினும், பிற்காலத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

சிவகாமி கோட்டத்திற்கு வடக்கிலுள்ள பாண்டிய நாயகம் என்னும் சுப்பிரமணியர் கோவிலின் முன்மண்டபம், மிகுந்த வேலைப்பாடு கொண்ட தூண்களின்மேல் உருள்குவி மண்டபமாக அமைக்கப்பட்டு இருக்கிறது. கூத்தப் பெருமானுடைய கோவி லுக்குள் கொடிமரத்திற்கருகில் உள்ள பேரம்பலத்தின் தூண் களைப் போலவே இந்தப் பாண்டிய நாயகக் கோவிலின் தூண்கள் காணப்படுவதால், பேரம்பலத்தை அமைத்த மூன்றாம்குலோத் துங்க சோழனே இதையும் அமைத்திருக்க வேண்டும்.

ஸ்ரீரங்கம் அல்லது திருவரங்கம் கோவில் : ஏழு மதில்களால் சூழப்பெற்ற திருவரங்கம் கோவில், தென்னிந்தியக் கோவில்களில்

மிகப் பெரியது எனக் கூறலாம். இக் கோவிலின் சுற்று மதில் களின் நீளம் 32,600 அடிக்குமேல் உள்ளது. 156 ஏக்கர் நிலப் பரப்பை இக் கோயில் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. விஜய நகர ஆட்சிக் காலத்திலும், பின்வந்த நாயக்கன்மார்களுடைய ஆட்சியிலும் பல பிராகாரங்களும், கோபுரங்களும், மண்டபங் களும் அமைக்கப் பெற்றன. தெற்குச் சந்நிதியில் காணப்படும் மொட்டைக் கோபுரம் முழுமை பெற்றிருந்தால் 300 அடி உயர்ந்திருக்கக் கூடும். சேஷகிரி ராயருடைய மண்டபத்தின் தூண்களில் காணப்படும் கருங்கற்களால் செய்யப்பட்ட குதிரையின் உருவங்கள் இரும்பு, எஃகு முதலிய கடினமான உலோகங்களைக் கொண்டு செய்யப்பட்ட குதிரைகள் போல் தோற்ற மளிக்கின்றன.

மதுரை: மதுரை நகரில் உள்ள மீனாட்சியம்மன் கோவில் திராவிடக் கோவில் அமைப்பு முறையைப் பின்பற்றிப் பதினேழாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட தெனத் திரு. T. V. மகாலிங்கம் அவர்கள் கூறுவார். சுந்தரேஸ்வரருக்கும் மீனாட்சி அம்மைக்கும் தனித்தனியாக இரண்டு கோவில்கள், உள்ளன. இந்தக் கோவில்களில் காணப்படும் மண்டபங்கள் பல வாகும். கிளிகட்டி மண்டபம், கம்பத்தடி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், புது மண்டபம் ஆகிய நான்கும் மிக முக்கியமானவை யாகும். கிளிகட்டி மண்டபம் மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்வதற்கு ஒரு நடைவழி போல் அமைந் துள்ளது. இதில் காணப்படும் தூண்கள் மிகுந்த வேலைப்பாடு கொண்டவை யாகும். கம்பத்தடி மண்டபத்தில் ஒரே கருங் கல்லால் அமைக்கப்பட்ட எட்டுப் பெரிய தூண்கள் உள்ளன. இத் தூண்களில் அமைக்கப்பட்டுள்ள இருபத்துநான்கு சைவ மூர்த்தங்கள், பல வகையான உருவங்களைக் கொண்டுள்ளன. நந்தி மண்டபம் விஜயநகர ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட தாகும் கோபுரங்கள் பாண்டிய மன்னர்கள் காலத்திலும், நாயக்க மன்னர்கள் காலத்திலும் அமைக்கப் பெற்றவை யாகும்.

உருவச் சிலைகள்: இந்திய உருவச்சிலை வரலாற்றில் உண்மை யான உருவச் சிலைகளைக் காண முடியாது என்று அறிஞர் வின்சென்ட் சுமித் என்பவரும் J. வோகல் (Vogel) என்பவரும் கருதிய போதிலும், தென்னிந்தியாவில் காணப்படும் உருவச் சிலைகள் உண்மைக்கு மாறுபட்டவை எனக் கருத முடியாது. சதவாகனருடைய காலமுதற் கொண்டு உருவச் சிலைகளை அமைக்கும் கலை வளர்ந்து வந்துள்ளது. சோழப் பேரரசர் களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு இக் கலையின் தரம் குறைந்து

போதிலும் விஜயநகரப் பேரரசில் புத்துயிர் பெற்ற தெனக் கூறலாம். விஜயநகர ஆட்சிக் காலத்துக் கல்வெட்டுகளில் உருவச் சிலைகளை அமைத்தமை பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. சில உருவச் சிலைகளில் அவற்றின் உண்மைப் பெயர் களும் பொறிக்கப்பட்டுள்ளன.

திருப்பருத்திக் குன்றத்தில் இரண்டாம் புக்கதேவருடைய தண்டநாதராகிய இருகப்ப ஜைனர் என்பவரின் சிலையுருவம் காணப்படுகிறது. இது விஜயநகர காலத்தில் அமைக்கப்பட்ட சிலை யுருவங்களுள் காலத்தால் முற்பட்டதெனக் கூறலாம். இச் சிலை உருவம், இருகப்பர் இடுப்பில் கச்சை கட்டிக் கொண்டு இரு கைகளையும் கூப்பி அஞ்சலி செய்யும் பாவனையில் இருக்கிறது; மேலாடையில்லாமலும், அடக்கமும், பக்தியும், தந்நலம் கருதாது மக்களுக்குச் சேவை செய்ய விரும்பும் முகபாவமும் கொண்டுள்ளது. தலையில் உள்ள சிகை குடுமியாகக் கட்டப்பட்டுச் சிலையின் இடப்பக்கத்தில் தொங்க விடப் பட்டிருக்கிறது. ஹம்பி நகரத்தில் பழைய நுழைவாயிலுக்கு அருகில் உள்ள ஆஞ்சநேயர் கோவிலில் காணப்படும் உருவத்தின் அடிப்பாகத்தில் மல்லி கார்ச்சுனராயர் என்ற பெயர் எழுதப்பட்டிருப்பதால் இச் சிலை அவ் வரசருடைய உருவச் சிலையே யாகும். மல்லிகார்ச்சுன ராய ருடைய கவரிவீசும் அலுவலாளர் சீரங்கர் என்பவரால் இக் கோவில் அமைக்கப்பட்டது.

திருப்பதி திருவேங்கட முடையார் கோவிலில் கிருஷ்ண தேவராயருடைய செப்புச் சிலையுருவம், அவருடைய இரு அரசி களாகிய சின்ன தேவி, திருமலை தேவி என்பவர்களுடைய சிலை களுடன் சுன்னடத்தில் பெயர்கள் எழுதப் பெற்றுக் காணப் படுகிறது. இம் மூன்று உருவங்களும் புடைப்பகழ்வுச் (Repouse) சிற்பத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன; வலப்பக்கமும் இடப்பக்கமும் உட்குழிவான இரு பாகங்களாகச் செய்து நன்கு பொருத்தப்பட்டுத் திண்மையுள்ள சிலைகள் போல் காணப் படுகின்றன. இந்தச் செப்புச் சிலையும் சிதம்பரத்தில் வடக்குக் கோபுரத்தின் மேல்புற மாடம் ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ண தேவராயருடைய கருங்கற் சிலையும் மிக ஒற்றுமை உள்ளனவாகக் காணப் பெறுகின்றன. திருப்பதியில் காணப் படும் சிலைகள் இயற்கை அழகு வாய்ந்தனவாகவும், கம்பீரத் தோற்றமும், அமைதியான முகபாவமும், பக்திப்பரவச நிலையும் வாய்ந்தனவாகவும் உள்ளன. கிருஷ்ண தேவராயருடைய செப்புச் சிலைக்கு வலப்புறத்தில் இன்னொரு செப்புச் சிலையும், இடப் புறத்தில் அரசனும் அரசியுமாக நின்று கொண்டிருக்கும் கருங்கற்

சிலைகள் இரண்டும் காணப் பெறுகின்றன. செப்புச் சிலை இரண்டாம் வேங்கட தேவராயருடைய உருவச் சிலை யென்றும், கருங்கற் சிலைகள் திருமலை தேவராயரும் அவருடைய அரசி வேங்கலாம்பாள் என்பவரும் என்றும் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஹம்பி, வித்தளர் கோவிலுக்கு அருகில் உள்ள துலாபார மண்டபத்தில் காணப்படும் அரசனுடைய உருவச் சிலை கிருஷ்ண தேவராயருடையதாக இருக்கலாம் என்று லாங்ஹர்ஸ்ட் (Longhurst) என்பவர் கருதுவார்.*

கும்பகோணத்திலுள்ள கும்பேசுவரர் கோவிலிலும், பட்டீஸ்வரம் என்னு மிடத்திலுள்ள சிவன் கோவிலிலும் தஞ்சை நாயக்க மன்னர்களின் அமைச்சராகிய கோவிந்த தீட்சிதர் என்பவருடைய கருங்கற் சிலைகள் காணப்படுகின்றன. கும்பகோணம் இராமசாமி கோவிலில் தஞ்சாவூர் இரகுநாத நாயக்கருடைய சிலை உயிருள்ள உருவம் போலச் செய்யப்பட்டு உள்ளது. ஸ்ரீரங்கம், மதுரைக் கோவில்களில் உள்ள சேஷகிரிராயர் மண்டபத்திலும், புதுமண்டபத்திலும் தஞ்சை, மதுரை நாயக்க மன்னர்களின் உருவச் சிலைகள் உள்ளன. புதுச்சேரியின் கடற்கரையில் செஞ்சியிலிருந்து கொண்டுவந்து புதைக்கப்பட்ட அழகிய தூண்களிலும், ஸ்ரீமுஷ்ணம் வராகப் பெருமாள் கோவில் மண்டபத்திலுள்ள தூண்களிலும் செஞ்சி நாயக்க மன்னர்களுடைய உருவச் சிலைகள் காணப்படுகின்றன.

2. அரசாங்க சம்பந்தமுள்ள கட்டடங்கள்

விஜயநகரத்திற்கு விஜயம் செய்து, அரசர்களுடைய அரண்மனைகளையும், அரசாங்க அலுவலகங்களையும், அந்தப்புரங்களையும் நேரில்கண்டு வரலாற்றை எழுதிய அப்துர் ரசாக், பீயஸ், நூனிஸ் என்பவர்களால் விவரிக்கப்பட்ட கட்டடங்கள் எல்லாம் அழிந்து விட்டன. அந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்த அடிப்பாகங்கள் மாத்திரம் இப்பொழுது தென்படுகின்றன. விஜயநகரச் சபாமண்டபம் என்று போர்த்துகீசிய வரலாற்றுசிரியர்களால் புகழப்பட்ட கட்டடத்தின் அடிபாகம் இன்றும் உள்ளன. அந்த மேடையில் ஆறு வரிசைகளில் பத்துப் பத்துத் தூண்கள் அமைக்கப் பட்டிருந்ததன் அடையாளங்கள் உள்ளன. இத் தூண்கள் மரத் தூண்களாக இருந்திருக்கலாம். ஏனெனில், கருங்கல் தூண்களாக இருந்தால் அவற்றின் உடைந்த சின்னங்களை அங்கே காண முடியும். அந்த மேடையின்மீது தூண்களைப் பொருத்தி ஒன்று இரண்டு மாடிகள் கொண்ட கட்டடம் அமைத்திருக்க

*Longhurst - Hampi Ruin P. 43

வேண்டும். அவை மரத்திலும், செங்கல், சுண்ணாம்பு கொண்டும் கட்டப் பட்டிருந்தாலும் எதிரிகளுடைய படை யெடுப்பால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பீயஸ் என்பவர் 'வெற்றி மாளிகை' (House of Victory) என்று வியந்து கூறும் கட்டடமும் அழிந்து விட்டது. அம் மாளிகை அமைக்கப்பட்டிருந்த மேடை இப்பொழுது 'அரியணை மேடை' என்றழைக்கப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் கலிங்க நாட்டின் மீது படையெடுத்து வெற்றி வீரராகத் திரும்பிய பிறகு இம் மேடையின்மீது வெற்றி மாளிகையை அமைத்திருக்க வேண்டும். இந்த மாளிகையில் அமர்ந்து விஜயநகர அரசர்கள் மகாநவமித் திருவிழாவைக் கண்டு மகிழ்ந்தனர் போலும்! சிற்பங்கள் செதுக்கப்பட்ட கருங்கற் பலகைகளைக் கொண்டு மிக்க பலமுள்ள தாக இம் மேடை அமைக்கப் பட்டிருக்கிறது. இம் மேடையின் அடிப்பாகத்தில் காணப்படும் கருங்கல் மடிப்புகளிலும் தூண்களின் அடிப்பீடமாக இருந்த இடங்களிலும் பலவிதமான சிற்ப வரிசைகள் உள்ளன. ஹசார ராமர் கோவிலில் உள்ளது போன்ற போர் வீரர்கள், கரி, பரிகள், ஒட்டகங்கள், நடனமாதர்கள் முதலியோர் ஊர்வலமாகச் செல்லும் காட்சிகளும், அரசர்களும் போர்வீரர்களும், விலங்குகளை வேட்டையாடும் காட்சிகளும் செதுக்கப்பட்டுள்ளன. அன்னம், யாளி முதலிய உருவங்களும் காணப்படுகின்றன. இதற்கு மேலுள்ள கருங்கல் வரிசையில் யானைகள் மாத்திரம் ஊர்வலமாகச் செல்லும் காட்சி அமைந்து உள்ளது. அரியணையில் அமர்ந்துள்ள மூன்று பேர்களின் முன்னிலையில் பாரசீக நாட்டுத் தலையணி போன்றதை அணிந்து கொண்டு இரண்டு அன்னிய நாட்டுத் தூதர்கள் தலைவணங்கி நிற்கும் சிற்பங்களைக் காணலாம். இவ் வடிப்பாகச் சிற்பங்களில் சில, சமண சமயப் பெரியார்களைக் குறிக்கும் என லாங்ஹர்ஸ்ட் கருதுவார். மேற் கூறப்பட்ட சிற்ப வரிசைக்குக் கீழே நடன மாதர்களும், குதிரைகளின் வரிசைகளும், வேட்டையாடும் காட்சிகளும் செதுக்கப் பட்டுள்ளன. அரியணை மேடையின் பக்கத்துச் சுவர்களில் மகாநவமித் திருவிழாவில் நடைபெறும் ஊர்வலக் காட்சிகளும், ஆண்களும், பெண்களும் மஞ்சள் நீரைக் குழாய்களைக் கொண்டு அடித்து விளையாடும் விளையாட்டுகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இக் காட்சியை லாங்ஹர்ஸ்ட் என்பவர் காமன் பண்டிகை விளையாட்டாக இருக்கும் எனக் கருதுவர். மற்றும் சிலர் விஜயநகரப் பிரபுக்கள் நீர் விளையாட்டுச் (ஜலக்கிரீடை) செய்ததைக் குறிக்கும் என்பர்.

அரசர்களுடைய சபா மண்டபத்திற்கும், அரியணை மேடைக்கும் அப்பால் இன்னொரு அகலமான மேடை காணப்

படுகிறது. இம் மேடையின் பக்கச் சுவர்கள் கருங்கற்களால் கட்டப் பெருமல் செங்கற்களால் அமைந்திருந்தன. மரத்தூண் களைக் கொண்டு மேற்கட்டுமானம் அமைந்திருந்த படியால் விரோதிகள் அரண்மனையைக் கொளுத்தியிருக்கக் கூடும் எனத் தெரிகிறது. இந்த மேடையின் அடிப்பாகம் ஐந்தடி உயர மிருக்கிறது. இதன் சுற்றுப்புறங்களில் மகாநவமித் திருவிழாவின் ஊர்வலக் காட்சிகள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன அமைப்புகள்: விஜயநகரத்து மக்கள் குடிப் பதற்கும், நீராடுவதற்கும் ஏற்ற தண்ணீர் உயரமான இடங் களில் அமைக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டிகளிலிருந்தோ, கிணறுகளிலிருந்தோ இறைக்கப் பட்டதாகத் தெரிகிறது. அரியணை மேடைக்கு அருகில் காணப்படும் கருங்கல் தண்ணீர்க் கால்வாய், கோட்டைச் சுவர்களைத் தாண்டி அந்தப்புரப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொண்டு சென்றதாகத் தெரிகிறது. அரசிகளின் குளியலறை இந்தோ - இஸ்லாமிய முறைக் கட்டட அமைப்பின்படி கட்டப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் இருக்கை வரிசைகள் உள்ள மேல்மாடிக் கட்டடம் அமைவுற்றி ருந்தது. சந்திரசேகர் கோவிலுக்கு அருகில் எண்கோண அமைப்பில் நீராடும் குளம் இருந்தது. அக் குளத்தைச் சுற்றி மேலே மூடப்பட்ட தாழ்வாரம் இருந்து அழிந்து விட்டதாகத் தெரிகிறது. இஃது அரசர்களும், அரசிகளும் ஜலக்கிரீடை செய்த இடமாக இருக்கலாம். துருட்டுக் கால்வாய் என்ற நீர்ப்பாசனக் கால்வாய் துங்கபத்திரையின்மீது அமைக்கப்பட்டிருந்த அணைக் கட்டிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கு வெட்டப்பட்டு இருந்தது. சபா மண்டபத்தின் மேடைக்கு எதிரில் 42 அடி நீளமும், மூன்றடி அகலமும் 2½ அடி கனமுமுள்ள கல்தொட்டி ஒன்று காணப்படுகிறது. நீரை நிரப்பிக் குதிரைகள், யானைகள் முதலிய விலங்குகளுக்குக் குடிநீர் அளிப்பதற்கு இத் தொட்டி அமைக்கப் பட்டிருந்தது போலும்!

விஜயநகரத்தில் காணப்படும் கட்டடங்களில் மிகுந்த அழகு வாய்ந்ததாகக் கருதப்படுவது தாமரை மஹால் என்ற கட்டட மாகும். இஃது எண்கோண உருவில் அமைக்கப்பட்டு இந்தோ - இஸ்லாமிய முறை பின்பற்றப் பட்டுள்ளது. இதனுடைய எட்டுப் பக்கங்களிலும் வளைவு விதானங்களுடன் கூடிய நுழைவாயில்கள் உள்ளன. இக் கட்டடத்தின் மத்தியில் நீர் ஊற்று இருந்ததன் அடையாளங்கள் உள்ளன. இக் கட்டடத்தில் ஒரே கருங்கல்லைக் கொண்டு அமைக்கப்பட்ட இன்னொரு பெரிய தொட்டி உள்ளது. இது திருவிழாக் காலங்களில் பால் அல்லது கஞ்சி காய்ச்சி ஏழை

களுக்கு ஊற்றுவதற்காக அமைக்கப்பட்ட தொட்டியாக இருக்கலாம் என T. V. மகாலிங்கம் கூறுவார்.

கடை வீதிகள் : ஹம்பி விருபாட்சர் கோவிலின் கிழக்குச் சந்நதித் தெருவில் காணப்படும் கடைகள் கருங்கல் தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டவை. 800 கஜ நீளமும், 5 கஜ அகலமும் உள்ள இக் கடை வீதி இடிந்த நிலையில் இன்றும் காணப்படுகிறது. இக் கடை வீதியின் கிழக்குக் கோடியில் விருபாட்சர் சந்நதிக்கு எதிரில் பெரிய நந்தி மண்டபம் அமைந்து இருக்கிறது. இந்த நந்தி மண்டபத்திற்கு எதிரில், கறுப்புச் சலவைக் கற்களால் செய்யப்பட்ட தூண்களைக் கொண்டு சாளுக்கியக் கட்டடக் கலை முறையில் அமைக்கப்பட்ட இரண்டு மாடி கொண்டமண்டபம் ஒன்றிருக்கிறது. விஜயநகரத்தில் அச்சுத ராயர் கோவிலுக்கு வடக்கிலுள்ள பகுதி சூலைக் கடைத்தெரு அல்லது நடன மாதர்களின் தெரு என்றழைக்கப்படுகிறது. அங்கிருந்த வீடுகள் எல்லாம் அழிந்து விட்டன. கடைத் தெரு இருந்ததற்கு அடையாளமாகக் கருங்கல் தூண்களின் மேல் கருங்கற்களாலும், மண்ணாலும் மூடப்பட்ட கடை போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன, இவை யெல்லாம் புல், புதர்கள் நிறைந்து அழிந்த நிலையில் உள்ளன. இக் கடைத் தெருவின் வடக்குக் கோடியில் ஒரு குளமும் இருந்ததாகத் தெரிகிறது. கிருஷ்ணசுவாமி கோவிலுக்குக் கிழக்கே இன்னொரு கடைவீதி இருந்ததற்கும் அடையாளங்கள் உள்ளன.

கோட்டை கொத்தளங்கள் : ஒன்றன்பின் ஒன்றாக அமைந்த ஏழு சோட்டைச் சுவர்களுக்குள் விஜயநகரம் அமைந்திருந்த தென அப்துர் ரசாக் கூறியுள்ளார். முதற் கோட்டைச் சுவருக்கு வெளியே 40 கஜதூரம் இடைவெளி இருந்தது. இந்த இடை வெளியில் ஓராள் உயரத்திற்குமேல் உயரமுள்ள கருங்கற் பலகைகள் ஆழமாகக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டிருந்தன. கருங்கற் பலகைகளின் பாதியளவு கீழே புதையுண்டிருந்தது. இந்தக் கருங்கற் பலகைகளைத் தாண்டிக் கொண்டு காலாட் படைகளோ, குதிரை வீரர்களோ முதற் கோட்டைச் சுவரை நெருங்கிவிட முடியாது. முதற் கோட்டைச் சுவரையடுத்து ஆறு கோட்டைச் சுவர்கள் இருந்தன. இறுதியில் இருந்த கோட்டைக் குள் அரசனுடைய அரண்மனை இருந்தது என அப்துர் ரசாக் கூறுவார். பீயசும் அப்துர் ரசாக்கின் கூற்றை உறுதிப் படுத்துகிறார்.

விஜயநகரம் அழிந்து கிடக்கும் நிலையில் அதனுடைய நகர அமைப்புத் திட்டம் எவ்வாறு இருந்த தெனத் தெளிவாக

கூறுவதற் கில்லை. 'விஜயநகரம் ஒரு குன்றில் வட்டமான வடிவத்தில் அமைக்கப் பட்டிருந்ததென அப்துர் ரசாக் கூறியதைச் சீசர் பெடரிக் என்பவர் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், விஜயநகரம் ஒரே சமயத்தில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகர மன்று. நகரத்தில் பல பகுதிகள் பலவிதக் காரணங்களுக்காக இருநூற்று முப்பது ஆண்டுகளில் தோன்றி வளர்ந்த நகர மாகையால் இயற்கை அரண்களும், செயற்கை அரண்களும் அதில் காணப் பெற்றன. நகரத்தின் பரப்பளவைப் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலைபெறுகின்றன. நிகோலோ கான்டி என்பவர் 'மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அறுபது மைல் சுற்றளவுள்ளதாக இருந்த'தென்று கூறுவார். தெற்கில் இருந்து வடக்கிலும், கிழக்கிலிருந்து மேற்கிலும் இரண்டிரண்டு பரசாங்குகள் தூரம் வியாபித்து இருந்ததென அப்துர் ரசாக் கூறுவார். பீயஸ் என்பவர் மேற்படி நகரத்தின் சுற்றளவு முப்பத்தாறு மைல் நீளமிருந்த தெனக் கூறியுள்ளார். சீசர் பெடரிக் இருபத்துநான்கு மைல்கள் சுற்றளவிருந்த தெனச் சொல்லுவார்.

இவ் வித மாறுபட்ட கூற்றுகளிலிருந்து விஜயநகரத்தின் உண்மையான பரப்பளவையும், சுற்றளவையும் நிச்சயப் படுத்திக் கூறுவது சுலபமன்று. நிக்கோலோ கான்டியும், பீயசும் விஜயநகரத்தின் சுற்றளவைப்பற்றிக் கூறும் செயல்கள் மிகைப்படுத்தப் பட்டுள்ளன. நிக்கோலோ கான்டியின் சொற்படி விஜயநகரத்தின் சுற்றளவு அறுபது மைல் இருந்திருந்தால் நகரத்தின் மத்திய பகுதியிலிருந்து முதற்கோட்டைச்சுவர் வரையில் பதினெட்டு அல்லது இருபது மைல் இருக்க வேண்டும். அவ்வளவு தூரம் உள்ளதாகத் தெரியவில்லை. நகரத்தின் குறுக்களவு பதினைந்து மைல்கள் என்ற அப்துர் ரசாக்கின் கூற்றில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால், நிக்கோலோ கான்டியும் பீயசும் கூறுவதைவிட அப்துர் ரசாக்கும், சீசர் பெடரிக்கும் கூறுவதில் உண்மையிருக்கிற தென நாம் உணரலாம்.

கருங்கற்களைக் கொண்டு அகலமாக அமைக்கப்பட்ட கோட்டைச் சுவர்களைத் தாண்டி உள்ளே செல்வதற்குப் பல நுழைவாயில்கள் இருந்தன. இக் கோட்டை வாயில்கள் இந்து முறைப்படி அமைக்கப்பட்டு இருந்தாலும் இஸ்லாமிய முறை அமைப்பின் படியும் சில வாயில்கள் இருந்தன. விஜயநகரக் கோட்டைக்குள் செல்வதற்கு அமைந்திருந்த வாயில் ஒன்றற்குப் பீமனுடைய வாயிற்படி என்றும், மற்றொன்றற்கு ஆஞ்சநேயர் வாயிற்படி என்றும் பெயர்கள் வழங்கின. தெற்குப் பகுதியிலிருக்கும் பட்டாபி ராமர் கோவிலுக்குப் போகும் வழி

யிலுள்ள கோட்டை வாசல் இந்தோ - இஸ்லாமிய முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

சமண சமயக் கட்டடங்கள் : விஜயநகர அரசர்கள் சமயப் பொறையுடன் ஆட்சி நடத்தினர் என்பதற்குச் சான்றாகப் பல சமண சமயக் கட்டடங்கள் பேரரசின் பல பகுதிகளில் காணப் பெற்றன. விஜயநகரத்தில் 'கணிகிட்டி'க் கோவில் என்ற சமணாலயம் இன்றும் காணப்படுகிறது. கணிகிட்டி என்றால் எண்ணெய்க்காரி என்ற பொருள்படும். ஆனால், இப் பெயர் எவ்வாறு இதற்குரியதாயிற்று என்பது விளங்கவில்லை. கணிகிட்டிக் கோவில் பல படிகளுடன் அமைக்கப் பட்டுள்ளது. இக் கோவிலின் தூண்கள் உருட்சியான வடிவ முள்ளவை. இக் கோவிலின் எதிரில் ஒரே கல்லால் ஆகிய கொடிமரம் ஒன்றுள்ளது. இந்தக் கற்றாணில் 1385ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று, இக் கோவில் இரண்டாம் ஹரிஹர தேவருடைய தண்ட நாயகர் இருகப்பர் என்பவரால் அமைக்கப்பட்டது என்று கூறுகிறது. இந்தக் கோவிலின் வாயில் மேல்கட்டையில் (Lintel) சமண தீர்த்தங்கரருடைய உருவம் மூன்று குடைகளுடனும் இரண்டு கவரிகளுடனும் காணப்படுகிறது. இதற்குக் குண்டுஜின நாதர் ஆலயம் என்ற பெயர் வழங்கியது. இக் கோவிலின் முகமண்டபத்தின் கைப்பிடிச் சுவரின் மீதுள்ள மூன்று மாடங் களில் குண்டுஜின நாதருடைய உருவங்கள் அமர்ந்த நிலையில் இருந்ததற்கு ஏற்ற அறிகுறிகள் காணப்பெறுகின்றன.

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருப்பருத்திக் குன்றம் என்னும் ஊரில் காணப்படும் வர்த்தமானர் ஆலயமும், இருகப்ப தண்டநாதரால் அமைக்கப்பட்டதாகும். இவர் தம்முடைய குரு புஷ்ப சேனர் என்பவரின் விருப்பப்படி இக் கோவிலின் அர்த்த மண்டபத்திற்குமுன் இசை மண்டபம் ஒன்றைஅமைத்தார். இம் மண்டபம் 62 அடி நீளமும், 26 அடி அகலமும் உள்ளது. இதன் தூண்கள் விஜயநகரப் பாணியில் அமைந்துள்ளன. இத் தூண் களின் அடிப்பாகத்தில் சிங்கத்தின் உருவங்களும், நெளிந்து செல்லும் பாம்புகள், நடன மாதர்கள், சித்திரக்குள்ள யக்ஷர் கள், செடி, கொடிகள் முதலியனவும் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களின் உச்சி தாமரை மலர் போல அமைக்கப்பட்டுத் தாமரையின் விதையுறை போன்ற அமைப்புகள் அதிலிருந்து தொங்குகின்றன. இந்த இசை மண்டபத்தின் தூண் ஒன்றில் இரு கப்ப தண்டநாதருடைய உருவச்சிலை காணப்படுகிறது. இக் கோயிலின் கோபுரத்தின் அடிப்பாகம் கருங்கல்லினால் அமைக்கப் பட்டு மேற்பகுதி செங்கற்களைக் கொண்டு செய்யப்பட்ட பல சுதை வேலைகளுடன் காணப்படுகிறது. சோழர்கள் காலத்திய

முறைப்படி தண்டியக் கட்டைகளுடன் கூடிய சதுரத் தூண்கள் கோபுரத்தின் பக்கங்களில் காணப்படுகின்றன. கோபுரத்தின் கூடுகள் ஒவ்வொன்றிலும் தியானத்தில் உட்கார்ந்திருக்கும் சமண தீர்த்தங்கரருடைய உருவம் காணப்படுகிறது.

இந்தோ - இஸ்லாமியக் கட்டடங்கள் : விஜயநகரப் பேரரசின் தலை நகரத்திலும், மாகாணங்களின் தலைநகரங்களிலும் சில கட்டடங்களில் அக் காலத்தில் தென்னிந்தியாவில் வழக்கத்திற்கு வந்த இஸ்லாமிய முறைக் கட்டட அமைப்புகளையும் நாம் காண முடிகிறது. பாமினி சுல்தான்களுக்கும், விஜயநகர அரசர் களுக்கும் அரசியல், சமயக் கொள்கைகளில் வேறுபாடுகள் இருந்த போதிலும் கட்டடக் கலை சம்பந்தங்களுள் ஒருவரை யொருவர் பின்பற்றியதால் ஒருவிதமாகக் கலப்புக் கட்டட முறை தோன்றியது. இக் கலையே இந்தோ - இஸ்லாமிய முறை எனக் கட்டடக் கலை வல்லுநர்களால் பெயரிடப்பட்டுள்ளது. தென் னிந்தியச் சிற்பிகள் இஸ்லாமியக் கட்டட முறைகளை வெறுத்து ஒதுக்காது அவற்றினுடைய சிறப்பியல்புகளைத் தங்களுடைய கட்டட அமைப்பில்கலந்து தோன்றும்படி செய்தனர் தொங்கூசிக் கட்டட முறை அறுகோண அமைப்பு. அர்த்த சந்திர நுழை வாயில், கோபுர மாடம், முதலிய இஸ்லாமியக் கட்டட அமைப்பு முறைகளைத் தென்னிந்தியச் சிற்பிகள் கையாண்டனர்.

விஜயநகரத்தில் அந்தப்புறக் கட்டடங்களில் ஒன்றுகக் காணப் படும் தாமரை மஹால் அல்லது தாமரை மண்டபம், திராவிடக் கட்டடக்கலையும் இஸ்லாமியக் கட்டடக் கலையும் கலந்து தோன்றும் கட்டடமாகும்; மேல் மாடியுடன் கூடிய அழகிய மண்டப மாகும். உயரமான மேடையின்மீது அமைக்கப்பட்ட இம் மண்டபத்தில் அழகிய சுதை வேலைகளும் காணப்படுகின்றன. நான்கு பக்கங்களிலும் திறந்துள்ள இம் மண்டபத்தின் தூண் களின்மேல் அமைக்கப்பட்ட விதானங்களின்மீது மேல் கட்டடம் அமைந்துள்ளது. மேல் மாடிக்குச் செல்வதற்குக் கட்டடத்தின் வடபுறத்தில் மாடிப்படிகள் உள்ளன. மேல்மாடியில் உள்ள அறைகளுக்கு ஜன்னல்களும், அவற்றிற்குக் கதவுகளும் இருந்தமைக்கு அறிகுறிகள் இருக்கிறபடியால் இக் கட்டடம் அந்தப்புர மாளிகையாக இருந்திருக்க வேண்டு மென ஆராய்ச்சி யாளர்கள் கருதுவர். இக் கட்டடத்தின் தூண்களும் வளைவு விதானங்களும் இஸ்லாமிய முறைப்படி அமைந்துள்ள போதிலும், அடிப்பாகம், மேல் கூரை, பிதுக்கச் சிற்பம் (Cornice) சுதை வேலைகள் முதலியன தென்னிந்திய முறையில் அமைந்துள்ளன. இந்தோ - இஸ்லாமியக் கலப்பு முறைக் கட்டட அமைப்பிற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறதென லாங் ஹர்ஸ்ட் என்பவர் கூறுவார்.

விஜயநகர அரசர்களுடைய அந்தப்புர மாளிகைகள் உயர்ந்த மதிற் சுவர்களால் சூழப் பெற்றிருந்ததற்குரிய சின்னங்கள் காணப்படுகின்றன. அடிப்பாகத்தில் அகலமாகவும், போகப் போகக் குறுகலாகவும் உள்ள சுவர்களின் சின்னங்கள் தென்படு கின்றன. சுவர்களின் உச்சிப் பகுதியில் இரும்புக் கம்பிகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்தப்புரப் பகுதியின் வடக்குப் புறத்தில் காவல்காரர்கள் இருந்ததற்குரிய மாடக் கோபுரம் ஒன்று காணப்படுகிறது. தென் கிழக்குப் பகுதியில் மற்றொரு மாடக் கோபுரம் உள்ளது. மதிற்சுவர்களின்மீது அமைக்கப் பட்ட இருக்கைப் படிக்கட்டுகளில் அமர்ந்து அரண்மனை மகளிர் கீழே நடைபெற்ற யானைச் சண்டை, விற் போட்டி, வாள் போட்டி முதலியவைகளைப் பார்ப்பதற்கு ஏற்றபடி இக் கட்டடம் அமைந்திருக்க வேண்டுமென லாங்ஹர்ஸ்ட் என்பவர் கருதுவார்.

அந்தப்புற மாளிகைகள் அமைப்பிற்கு வெளியே பதினெரு அறைகள் கவிகை மாடத்துடன் காணப்படுகின்றன. மத்தியில் உள்ள அறையின் உச்சியில் மணிக் கோபுரம் போன்ற மேடை அமைக்கப் பட்டுள்ளது. மேல் தளத்தை அடைவதற்கு இரு பக்கங்களிலும் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. இந்த அறைகளின் அமைப்பு இஸ்லாமியக் கட்டட முறைப்படி காணப் பெறுவதால் இவ் வறைகள் இஸ்லாமிய வீரர்கள் தங்கியிருப்பதற்காக அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென ஹாவெல் (Havell) கருதுவார். ஆனால், அரண்மனையின் உட்புறத்தில் தங்கியிருக்க இஸ்லாமிய வீரர்களை விஜயநகர அரசர்கள் அனுமதிப்பார்கள் என்பது ஆராய்ச்சியாளர்களின் கவனத்திற்கு உரித்தாக வேண்டும். மேற்கூறப் பெற்ற பதினெரு அறைகளில் ஏழு அறை கள் விஜயநகரத்திலுள்ள பெரிய மசூதியின் கவிகைமாட முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டவையாகும். ஆகையால், இஸ்லாமியர் இறைவனுக்கு வணக்கம் செய்வதற்கு அமைக்கப் பட்ட மசூதிகளாக இவை உபயோகப் பட்டிருக்கலாம். மக்கள் இவற்றை யானை கட்டும் இடங்கள் என அழைக்கின்றனர்.

தண்டநாயகர் அலுவலகம் எனக் கருதப்படும் இடத்திற்கு அருகில் இடிந்த நிலையில் உள்ள ஒரு கட்டடம் இஸ்லாமிய முறையில் அமைக்கப் பட்டுள்ளது. இது தொடக்கத்தில் ஒரு மண்டபமாக இருந்து, பின்னர் இஸ்லாமியர் வணக்கம் செய்வதற் குரிய மசூதியாக மாற்றி அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இராம ராயருடைய கருவூல அலுவலகம் என்று கருதப்பட்ட ஒரு கட்டடத்தின் முகப்பு மாத்திரம் இப்பொழுது காணப்படுகிறது. இலைகளுடன் கூடிய செடி கொடிகளும், வளைவுகளும் அமைந்த கட்டடமாகக் அது கட்டப்பட்டிருந்த தெனக் கூறலாம்.

சந்திரகிரியில் காணப்படும் விஜயநகர அரசர்களின் அரண்மனை திராவிடக் கலையும், இஸ்லாமியக் கட்டடக் கலையும் கலந்து அமைக்கப்பட்டதாகும். மூன்று தளங்களுடன் இந்த அரண்மனை காணப்படுகிறது. ஒவ்வொரு தளத்திற்கும் தூண்களின்மீது அமைக்கப்பட்ட விளைவு விதானங்கள் உள்ளன. விதானங்கள் செங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. கருங்கற்களை வைத்துக் கட்டப்பட்ட தண்டியங்களில் விதானங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கீழ்த் தளங்களில் கருங்கல்லும், மேல் தளங்களில் செங்கற்களும் தண்டியக் கட்டைகளாக உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. அடிப்பாகத்தில் அலங்கார வேலைப்பாடுகள் காணப் பட வில்லை. மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் மகாலும் இந்தோ இஸ்லாமிய முறைப்படி அமைக்கப்பட்ட கட்டட மாகும்.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் சித்திரக் கலை : உள்நாட்டு, வெளி நாட்டு இலக்கியச் சான்றுகளிலிருந்து விஜயநகரப் பேரரசர்கள் சித்திரக் கலைக்கு ஆதரவளித்ததாக நாம் அறிகிறோம். குப்தர்கள், பல்லவர்கள், சோழப் பேரரசர்கள் காலத்தில் நிலைபெற்றிருந்த சித்திரக் கலையின் திறம், விஜயநகர ஆட்சியிலும் இருந்ததெனக் கூற முடியாது. விஜயநகர ஆட்சிக் காலத்தில் தீட்டப்பெற்ற சித்திரங்கள் அஜந்தா, சித்தன்ன வாயில் சித்திரங்களுடன் ஒப்பிடக்கூடியவை யல்ல. கோவில்களின் உட்புறச் சுவர்களிலும், உட்கூரையிலும், கோபுரங்களின் மீதுள்ள சுதையுருவங்கள் மீதும் சித்திரங்களும், வண்ணப் பூச்சுகளும் தீட்டப்பெற்றன. ஹம்பி, ஆனேகுந்தி, லேபாக்ஷி, சோமப்பள்ளி, காஞ்சி அருளாளப் பெருமாள்கோவில், திருப்பருத்திக் குன்றம், வர்த்த மானர் கோவில் முதலிய இடங்களில் விஜயநகரக் காலத்திய சித்திரக்கலை காணப்படுகிறது. தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் உட்பிரகாரத்தில் சோழ அரசர்களுடைய காலத்தில் தீட்டப்பட்ட சித்திரங்களின்மீது புதிய சித்திரங்கள் தீட்டப் பெற்றன.

இதிகாசங்கள் அல்லது புராணங்களில் கூறப்படும் கதைகளைச் சித்திரிக்கும் காட்சிகள் விஜயநகர ஆட்சிக் காலத்தில் கோவில் களின் உட்கூரைகளிலும், சுவர்களிலும் தீட்டப்பட்டன. வைணவக் கோவில்களில் இராமாயணம், பாகவதம், விஷ்ணு புராணம் முதலியவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளின் காட்சி கள் தீட்டப்பட்டன. சைவ, சமயக் கோவில்களில் சிவபெரு மானுடைய பெருமையைக் காட்டும் சித்திரங்கள் வரையப் பட்டன. சமண ஆலயங்களில் சமணசமய சம்பந்தமுள்ள சித்திரங்

கள் தீட்டப்பட்டன. ஆனால், சித்திரங்கள் தீட்டப்படும் செய் முறையில் விஜயநகரக் காலத்திய ஓவியம் மாறுபட்டது. சோழர் காலத்திய ஓவியங்கள், வண்ணங்களைச் சுண்ணும்பு நீரில் கலந்து, காய்ந்த சுண்ணும்புப் பூச்சுகளின்மீது வரையப்பட்டன. விஜய நகர காலத்தில் வண்ணங்களைத் தண்ணீரில் கலந்து சுண்ணும்புப் பூச்சு காய்வதற்குமுன் சித்திரங்கள் வரையப்பெற்றன.

ஹம்பி விருபாட்சர் ஆலயத்திலுள்ள மகா ரங்க மண்டபத்தின் உட்கூரையில் இந்து சமய புராண இதிகாசக் காட்சிகள் ஓவியங் களாகத் தீட்டப்பட்டுள்ளன. முதல் மூன்று வரிசைகளில் இந்து சமய மும்மூர்த்திகளின் உருவங்கள் அவர்களுடைய பத்தினி களுடன் காணப்படுகின்றன, அடுத்த வரிசையில் விருபாட்சர் பம்பாதேவியைத் திருமணம் செய்து கொள்ளும் காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. மன்மத விஜயம் என்ற காட்சியும், திரிபுர சங்காரக் காட்சியும் நாம் கண்டுகளிக்க வேண்டியவை யாகும். மன்மதன் இரதியோடு கிளி வாகனத்தில் அமர்ந்து கரும்பு வில்லோடும், மலர்க் கணைகளோடும் துங்கபத்திரை நதிக்கரையில் அமர்ந்து தவம் செய்யும் விருபாட்சர் மீது கணைகளைப் பொழி வதும், நெற்றிக் கண்ணர் தம் கண்ணில் இருந்து நெருப்புப் பொறி பறக்கச் செய்து மன்மதனை எரிப்பதும் சிறந்த கைவன்மை யோடு தீட்டப்பட்டுள்ளன. தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்களுடைய திரிபுரங்களை எரிப்பதற்கு, உலகத்தையே தேர்த்தட்டாகவும், சூரிய, சந்திரர் களைத் தேர்ச் சக்கரங்களாகவும், மகாமேரு பருவதத்தை வில்லாகவும், மகாவிஷ்ணுவை அம்பாகவும் கொண்டு புன்சிரிப் புடன் திரிபுரங்களை எரிக்கும் காட்சி மிகுந்த இயற்கை அழகுடன் தீட்டப்பட்டுள்ளது. மகாவிஷ்ணு மீன், ஆமை, கோலம், நரசிங்கம், வாமனம் முதலிய தசாவதாரங்கள் எடுத்த கதை களும் ஓவியங்களாகக் காணப் பெறுகின்றன. இராமன் சீதையை மணப்பதற்காகச் சிவதனுசை ஒடிப்பதும், திரௌபதையை மணப்பதற்கு அருச்சுனன் சுழலும் மீன் இயந்திரத்தை அம்பு கொண்டு எய்வதும் வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. கடைசி வரிசையின் மத்தியில் ஒரு முனிவரைப் பல்லக்கில் வைத்துச் சுமந்து செல்லும் காட்சி ஓவியமாக வரையப்பட்டுள்ளது. அரச மரியாதைகளோடு பல்லக்கில் அமர்ந்து ஊர்வலமாகத் தூக்கிச் செல்லப்படும் முனிவர் மாதவ வித்தியாரண்யராக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஆனேகுந்தியிலுள்ள உஜயப்ப மடத்தின் கூரையில் சில ஓவியங்கள் காணப் பெறுகின்றன. வெண்டாமரைப் பூவொன்று

எட்டு இதழ்களை யுடையதாகவும், நீலம், செம்மை, மஞ்சள் முதலிய நிறங்களைக் கொண்டு அலங்காரம் செய்யப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. இன்னொரு ஓவியத்தில் மலர்கள் நிறைந்த புதர் ஒன்றில் இரண்டு ஆண்களும், பெண்களும் ஓர் அணிலோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம். மற்றொன்றில் தாடியுடன் கூடிய முனிவர் ஒருவர் யானையின்மீது அமர்ந்து ஊர்வலம் செல்வதைக் காண முடிகிறது.

லேபாக்ஷி ரகுநாதர் கோவிலின் உட்சுவரையிலும், வீர பத்திர சுவாமி கோவிலின் கர்ப்பக்கிரகத்திலும், மண்டபத்திலும் பல ஓவியங்கள் காணப்படுகின்றன. ஆலிலைமேல் பள்ளி கொண்டு இடக்கால் பெருவிரலைத் தன்னுடைய திருவாய்க்குள் வைக்க முயலும் கிருஷ்ணனுடைய ஓவியம் மிக்க திறமையுடன் வரையப் பட்டுள்ளது. நீலவான நிறமும், உருண்டை முகமும் கொண்ட கிருஷ்ண உருவமும், குழந்தையின் கழுத்திலும் மார்பிலும் காணப்படும் முத்து அலங்கார மாலைகளும், இயற்கையழகுடன் வரையப்பட்டுள்ளன. சிவன் - பார்வதி திருமணம், தக்ஷண மூர்த்தி, இராமர் பட்டாபிஷேகம் முதலியன காட்சிக்குகந்த சித்திரங்கள் ஆகும். சிவபெருமான் சுகாசன மூர்த்தியாக அமர்ந்திருப்பதும், அருச்சுனனுடன் வேட உருவத்தோடு போர் புரிந்து பின்னர்ப் பாசுபதாஸ்திரம் அளித்த கிராதார்ச்சுனிய நாடகக் காட்சிகளும் நம்முடைய கருத்தைக் கவர்வன வாகும். மனுநீதிச் சோழன் தன்னுடைய மகன் வீதிவிடங்களைத் தேர்ச் சக்கரத்தின் கீழிட்டு அரைத்துப் பசுவிற்கு நியாயம் வழங்கிய காட்சியையும் நாம் காணலாம், சிவபெருமான் எமனைச் சங்காரம் செய்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றியதும் சண்டிகேசுவரருக்கு அருள் செய்து எச்சதத்தனைத் தண்டித்த காட்சியும் காணப் பெறுகின்றன. கௌரீப் பிரசாதகர் கௌரியைச் சாந்தம் அடையும்படி செய்த காட்சி மிகச் சிறந்த ஓவியம் எனக் கருதப் பெறுகிறது. பகீரதனுக் காகக் கங்கையைச் சடையில் மறைத்ததைக் கண்ட பார்வதி தேவியின் முகவாட்டத்தைச் சித்திரிக்கும் ஓவியத்தை மிக்க சிறப்பு வாய்ந்த தெனக் கூறுவர். வீர பண்ணையா. வீரப்பர் என்ற இருவருக்கும் ஒரு புரோகிதர் திருநீறு வழங்கும் ஓவியம் இயற்கை அழகோடு மிளிர்கிறது. தருமபுரிக் கருகில் உள்ள அதமன் கோட்டையில் இராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலிய இதிகாச புராணக் கதைகளைச் சித்திரங்களாகக் காண முடிகிறது.

தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் காணப்படும் விஜய நகர ஆட்சிக் காலத்திய சித்திரங்கள், சோழர் காலத்திய

ஓவியங்களோடு ஒப்பிடத் தக்கவை யல்ல வாயினும், தென்னிந்திய ஓவியக்கலை வரலாற்றில் சிறந்த இடத்தை வகிக்கின்றன, திருப்பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் கூடித் தேவாமிர்தம் பெறுவதற்குக் கடைவதும், அதில் தோன்றிய ஆலகால விடத்தைத் தனது தொண்டையில் அடக்கி நீலகண்டனாக விளங்குவதும், தட்சயாகத்தை அழித்த பொழுது வீரபத்திரராகத் தோன்றியமையும், இராவணன் கைலைமலையைப் பெயர்த்து எடுக்கும் காட்சியும் தஞ்சைக் கோவிலில் விஜயநகர ஆட்சிக் காலத்தில் ஓவியங்களாக வரையப்பட்டன. தஞ்சைத் தல புராணத்திலிருந்தும், நாயன்மார்களுடைய வரலாறுகளிலிருந்தும் பல காட்சிகளின் சித்திரங்களை நாம் காண முடிகிறது.

மைசூர் நாட்டில் உள்ள கோவில்களின் சுவர்களில் இந்துப் புராணங்களில் கூறப்படும் கதைகள் சித்திரங்களாகப் புனையப் பட்டுள்ளன. குனிகல் தாலுக்கா எடையூர் சித்தலிங்கேசுவரர் கோவிலில் அஷ்டதிக்குப் பாலகர்களுடைய உருவங்கள் ஓவியங்களாக எழுதப் பெற்றுள்ளன. மேற்படி கோவிலின் முகமண்டபத்திலும் பாதலங்கணத்திலும் வீரசைவ ஆச்சாரியர் சித்தலிங்கருடைய இருபத்தைந்து லீலைகள ஓவியங்களாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு படத்தின் கீழேயும் கன்னட மொழியில் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஹரியூர் தேருமல்லீசுவரர் கோவில் முக மண்டபத்தின் உட் கூரையில் சைவபுராணக் கதைகளின் ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன.

திருப்பருத்திக் குன்றத்தில் உள்ள வர்த்தமானர் கோவில் முக மண்டபத்திலும், இசை மண்டபத்திலும் சமண சமயத் தீர்த்தங்கரர்களாகிய ரிஷபதேவர், வர்த்தமானர், நேமிநாதர் முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாறு ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. இச் சித்திரங்கள் பதினேந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை யெனக் கருதப் பெறுகின்றன.

விஜயநகர அரண்மனையில் இதிகாச புராணக் காட்சிகள் தீட்டப்பட்டிருந்ததோடு, அக்காலத்தில் தென்னிந்திய மக்களும், அயல் நாட்டு மக்களும் எவ்வித வாழ்க்கை நடத்தினர் என்று காட்சியளிக்கும் ஓவியங்களும் வரையப்பட்டிருந்தன. விஜய நகர அரண்மனையில் இருந்த அரசிகள் கண்டு களிப்பதற்காக அயல் நாட்டிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்த போர்த்துகீசியர், இத்தாலியர் முதலியோர் தங்கள் நாட்டில் தினசரி வாழ்க்கையை எவ்விதம் நடத்தினர் என்பதைக் குறிக்கும் வகையில் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன எனப் பீயஸ் கூறியுள்ளார். கிருஷ்ண தேவராயர் காலத்தில் அவருடைய உருவமும், அவருடைய தகப்பன்

நரசநாயக்கருடைய உருவமும் ஓர் அறையின் முகப்பில் ஓவியங்களாக எழுதப்பட்டிருந்தன. நரச நாயக்கருடைய உருவம் சிறிது கருமையாகவும், உடற்கட்டமைந்ததாகவும் இருந்ததெனப் பீயஸ் கூறியுள்ளதாகச் சிவெல் எழுதியுள்ளார். மகளிர் வில் வித்தைப் பயிற்சியும், வாட்போர்ப் பயிற்சியும் செய்த உருவங்களும் காணப்பட்டன.

அரண்மனையில் நடன அரங்கு ஒன்றிருந்தது. அவ் வரங்கில் பலவிதமான பரத நாட்டிய நிலைகளைக் குறிக்கும் சிற்பச்சிலைகளும் ஓவியங்களும் காணப் பெற்றன என்றும், இந்தச் சிலைகளையும், ஓவியங்களையும் பார்த்துப் பல நடன மாதர்கள் தங்களுடைய ஆடற் கலையைக் கற்றுக் கொண்டனர் என்றும் பீயசும், நூனிசும் கூறுவர். விஜயநகரப் பிரபுக்களின் வீடுகளில் சிங்கம், புலி, வேங்கை முதலிய விலங்குகளின் உருவங்கள் உயிருள்ளவை போன்று இயற்கையழகுடன் எழுதப் பெற்றிருந்தன. பாரிஜாதாபகரணமு என்னும் நூலில் அன்னம், கிளி, புறு முதலிய பறவைகளை எப்படி அரண்மனை மகளிர் வளர்த்து வந்தனர் என்பதைச் சித்திரங்களின் வாயிலாக எடுத்துக் காட்ட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் விஜயநகர அரசர்கள் ஓவியக் கலையை ஆதரித்த வரலாறு, இரண்டாம் வேங்கட தேவராயர் ஐரோப்பிய ஓவியர்களை ஆதரித்ததைக் கூறுமல் முழுமை பெறாது. டிசா, ரிக்கோ என்ற இரண்டு போர்த்துகீசிய சைத்திரிகர்கள் வேங்கட தேவராயர் சபையில் இருந்தனர், சாந்தோமிலிருந்து ஓவியர்களை அனுப்பும்படியும் அவர்களைக் கேட்டுக் கொண்டனர். அவர்களால் அனுப்பப் பெற்ற அலெக்சாந்தர் பிரே என்பவர் 1602ஆம் ஆண்டு வரையில் சந்திரகிரியில் இருந்தார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் காட்சிகளை ஓவியமாக வரைந்து வேங்கட தேவராயருக்கு அளித்தார். அந்த ஓவியங்களை வேங்கட தேவராயர் கண்டு மிக்க மகிழ்ச்சி யடைந்ததாக நாம் அறிகிறோம். 1607ஆம் ஆண்டில், இத்தாலிய நாட்டு ஓவியராகிய பார்த்தலோமியோ பான்டிபோனு என்பவரை இரண்டாம் வேங்கட தேவராயருடைய சந்திரகிரி அரண்மனைக்கு இயேசு சங்கப் பாதிரிமார்கள் அனுப்பி வைத்தனர். இவர் லயோலா, பேவியர் என்ற கிறித்தவப் பெரியார்களின் உருவப் படங்களைத் தீட்டி வேங்கட தேவராயருக்கு அளித்தார். இந்த உருவப் படங்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்த அரசர் தம்முடைய உருவப் படத்தையும் வரையும்படி கேட்டுக் கொண்டார். பார்த்தலோமியோ பான்டிபோனு (Bartolomeo Fontebona)

தீட்டிய கிறித்தவ சமய சம்பந்தமான படங்களை வேலூர் அரண்மனையிலும் தொங்க விட்டு வைத்திருந்தார். அப் படங்கள் இயற்கையாகவும், உண்மைக்கு மாறுபடாமலும் இருந்த படியால் இயேசு சங்கத்தார் அப்படங்களை எழுதிய ஓவியரைச் சமயப் பிரசாரம் செய்வதில் ஈடுபடும்படி வேண்டிக் கொண்டனர். ஆனால், வேங்கட தேவராயர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. 1611ஆம் ஆண்டில் வேலூரில் இருந்த கிறித்தவ சமயப் பிரச்சார சபை மூடப்பட்டது. ஆகையால், பார்த்தலோமியாவும் வேலூரை விட்டு நீங்கி விட்டார். ஆனால், வேலூரிலிருந்த காலத்தில் வேங்கட தேவராயர் அவருக்கு மிகுந்த ஆதரவளித்ததாகத் தெரிகிறது.

25. டாமிங்கோஸ் பியஸ் எழுதிய விஜய நகரத்தைப் பற்றிய வரலாறு

நரசிம்ம இராஜ்ஜியத்தைப் (விஜயநகரப் பேரரசு) பற்றி நான் அறிந்து கொண்ட செய்திகள். 1520—22ஆம் ஆண்டுகளில் எழுதப் பெற்றன.

(போர்த்துகீசியருக்கு அடங்கிய) இந்தியாவின் கடற்கரையி லிருந்து நரசிம்ம இராஜ்ஜியத்திற்குச் செல்வதற்கு உயரமான மலைப் பிரதேசத்தைக் கடந்தும், மலைச்சரிவுப் பிரதேசத்தைக் கடந்தும் செல்லுதல் வேண்டும். இந்திய நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேலைக் கடற்கரை யோரமாக அமைந்து உள்ளன. இவற்றின் இடையிடையே கணவாய்களும் உள்ளன. இக் கணவாய்களின் மூலமாக நாம் உள்நாட்டிற்குள் செல்லுதல் வேண்டும். இந்தக் கணவாய்கள் தவிர மற்ற மலைப்பகுதிகளில் அடர்த்தியான வனங்கள் காணப்படுகின்றன. கடற்கரையில் அமைந்துள்ள பல துறைமுகங்கள் விஜயநகரப் பேரரசைச் சேர்ந்தவை. இத் துறைமுகங்களோடு நாம் (போர்த்துகீசியர்) அமைதியான முறையில் வாணிகம் செய்து வருகிறோம். இத் துறைமுகங்களில் அம்கோலா, மிர்ஜியோ, ஹோனவார், பட்கல், மங்களூர், கூபரர், பாகனூர் முதலியன முக்கிய மானவை யாகும். மேலே கூறப்பெற்ற மலைத் தொடரைக் கடந்து சமவெளிப் பிரதேசத்தின் வழியாக நாம் விஜயநகரத்திற்குச் செல்லுதல் வேண்டும். இச் சமவெளிப் பிரதேசத்தில் உயரமான மலைகளைக் காண முடியாது. சிறுசிறு குன்றுகளே உள்ளன; போர்ச்சுகல் நாட்டில் உள்ள சாந்தரம் (Santarem) சமவெளி போல் காணப் படுகிறது. பட்கல் நகரிலிருந்து ஜாம்புஜாவிற்குச் (Zambuja)[1] செல்லும் பெருவழியில் காடுகள் அடர்ந்த மலைகள் உள்ளன. இருந்த போதிலும் பெருவழி (Roads) சமதளமாக உள்ளது. பட்கல் என்னு மிடத்திலிருந்து சாம்பூர்[2] நாற்பது லீக் (league) தூரம் உள்ளது. இந்தப் பெருவழியின் இரு பக்கங்களிலும் காணப்படும் ஆறுகளில் நிரம்ப நீர் ஓடிக் கொண்டிருக்கிறது.

1, 2 இவ் விரண்டு ஊர்களும் ஒன்றுதானு, இரண்டு ஊர்களா என்பதும், சாந்தூர் என்னும் ஊரைக் குறிக்குமா என்பதும் விளங்க வில்லை.

நீர்வளம் பொருந்திய இப் பிரதேசத்தின் விளைபொருள்கள் ஐந்து அல்லது ஆருயிரம் பொதி மாடுகளின்மீது சுமந்து செல்லப்பட்டு பட்கல்லுக்கு வந்து குவிகின்றன.

கோவாப் பிரதேசத்திற்குக் கிழக்கில் உள்ள மலைத் தொடரின் மீது காணப்படும் காடுகளைத் தவிர இந்த நாட்டில் பெரிய காடுகள் கிடையா. ஆனால், சில இடங்களில் மரங்கள் அடர்ந்த தோப்புகள் உள்ளன. இந்த மரத் தோப்புகளில் புகுந்து இரண்டு அல்லது மூன்று லீக்குகளுக்கு (Leagues) நாம் நடக்க வேண்டியிருக்கும். விஜயநகரப் பேரரசில் உள்ள நகரங்களையும், பட்டணங்களையும், கிராமங்களையும் சூழ்ந்து மா, பலா, புளி முதலிய பயன் தரும் மரங்கள் அடர்ந்துள்ளன. இந்த மரங்கள் தரும் நிழலின் கீழே வியாபாரிகள் தங்களுடைய வியாபாரப் பொருள்களோடு தங்கி இளைப்பாறிக் கொள்ளுகின்றனர்.

ரிகாலம் (Recalem) என்ற நகரத்தின் அருகில் பெரியதொரு (ஆல)மரம் ஒன்றிருந்தது. அதனுடைய நிழலில் 320 குதிரைகளைக் குதிரை லாயத்தில் கட்டி வைப்பதைப் போன்று கட்டி வைப்பதற்கு வசதி இருந்தது. இந்த நாட்டின் பல பகுதிகளில் இவ் வகையைச் சேர்ந்த சிறிய மரங்களையும் நாம் காண முடிகிறது. இந்த நாட்டிலுள்ள நிலங்கள் மிக்க வளமுள்ளவையாகையால் மக்கள் அந்த நிலங்களை நன்கு பயிரிடுகின்றனர்; ஆடு, மாடுகள், எருமைகள் முதலிய கால்நடைகளும், காட்டிலும், நாட்டிலும் வாழும் பறவை யினங்களும், ஐரோப்பாக் கண்டத்திலுள்ளவைகளைவிட அதிகமாகக் காணப்பெறுகின்றன. நெல், சோளம் முதலிய நவதானியங்கள், மற்றக் கூலங்கள் இன்னும் ஐரோப்பாவில் கிடைக்காத மற்றத் தானியங்கள், பருத்தி முதலியன இங்கு ஏராளமாகப் பயிர் செய்யப் பெறுகின்றன. இங்குப் பார்லி, ஓட்ஸ் முதலியவை பயிரிடப்படவில்லையாகையால் குதிரைகளுக்கென ஒருவகைத் தானியம் (கொள்) உண்டாக்கப்பட்டது. அதைமக்களும் (சில சமயத்தில்) உண்கின்றனர். சிறந்த வகையை சேர்ந்த கோதுமையும் இங்குப் பயிராக்கப்படுகிறது. இந்த நாட்டில் உள்ள நகரங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் மக்கள் நெருங்கி வாழ்கின்றனர். இங்குள்ள நகரங்களைச் சுற்றிக் கருங்கல் கோட்டைகளை அமைப்பதற்கு இந்த நாட்டு அரசன் அனுமதிப்ப தில்லை. எல்லைப் புறங்களிலுள்ள நகரங்களில் மாத்திரம் கருங்கல் கோட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. பட்டணங்களைச் சுற்றி மண் சுவர்களே காணப்பெறுகின்றன.

இந்த நாடு சமவெளிப் பிரதேசமாக இருப்பதால் தடையில்லாமல் காற்று வீசுகிறது. இந்த நாடு மிகப் பரந்த தேச

மாயினும் மிகக் குறைவான ஆறுகளே உள்ளன. மழைக் காலத்தில் பெய்யும் மழை நீரைக் குளங்களிலும், ஏரிகளிலும் தேங்கும்படி செய்து, குடிப்பதற்கும், பயிரிடுவதற்கும் மக்கள் உபயோகப் படுத்துகின்றனர். இந்த ஏரிகளும், குளங்களும் (கோடைக்காலத்தில்) நீரின்றி வரண்டு கிடக்கின்றன. நீரூற்று வசதியுள்ள ஏரிகளில் மாத்திரம் சிறிது நீர் காணப்படுகிறது. நீரின்றி வறண்டுள்ள ஏரிப் படுகைகளில் ஊற்றுகள் தோண்டி அதில் கிடைக்கும் நீரை மக்கள் உபயோகிக்கின்றனர். இந் நாட்டில் பருவக் காற்றுகளின் உதவியினாலேயே மழை பெய்கிறது. இப் பருவக் காற்றுகள் அடிக்கடி பொய்த்துவிடுவதும் உண்டு. ஐரோப்பாக் கண்டத்தில் மழைக்காலம் (குளிர்காலம்) இருப்பது போல் இந் நாட்டில் இல்லை. மழை நீர் தேங்கி நிற்கும் ஏரிகளில் காணப்பெறும் தண்ணீர் மிகக் கலங்கலாக இருக்கிறது. நீரூற்று கள் நிறைந்த ஏரிகளின் தண்ணீர் மாத்திரம் தெளிவாயிருக்கிறது. ஏரிகளிலும். குளங்களிலும் நீர் அருந்தும் ஆடு, மாடுகளும், எருமைகளும், மற்ற விலங்குகளும் இந்த ஏரி நீரைக் குழப்பி விடுகின்றன. இந் நாட்டிலுள்ள பசுக்களை மக்கள் தெய்வம் போன்று கொண்டாடுகின்றனர். பசுக்களையும், எருதுகளையும் கொன்று தின்னும் வழக்கம் இம் மக்களிடையே இல்லை. ஐரோப்பாவில் பொதி சுமப்பதற்குக் குதிரைகளும், கழுதைகளும் உபயோகப்படுவது போல் இங்கு எருதுகள் பொதி சுமக்கப் பயன் படுகின்றன. பசுக்களையும், காளைகளையும் செல்வங்களாகக் கருதி வணக்கமும் செய்கின்றனர், கோவில்களின் மதிற் சுவர்களின்மீது கருங்கல்லாலும், செங்கல்லாலும் செய்யப்பட்ட காளை உருவங்கள் காணப்பெறுகின்றன. கோவில்களுக்குத் தானம் செய்யப்பட்ட காளை மாடுகள் ஊரெங்கும் திரிந்து கொண்டிருக் கின்றன. ஆனல், அவற்றை ஒருவரும் துன்புறுத்துவ தில்லை. இந் நாட்டில் காணப்படும் கழுதைகள் சிறிய உருவ முள்ளவை. அழுக்குத் துணிகளை ஏற்றிச் செல்வதற்குச் சலவைத் தொழி லாளர்கள் இவற்றை உபயோகப் படுத்துகின்றனர். இந் நாட்டில் எள், விதை விதைத்துப் பயிராக்கி, அதிலிருந்து கிடைக்கும் எள்ளைக் கொண்டுபோய்ச் செக்கிலிட்டு ஆட்டி, நல்லெண்ணெய் தயாரிக்கின்றனர்.

நரசிம்ம இராச்சியம் என்ற விஜயநகரப் பேரரசு சோழ மண்டலக் கரையிலிருந்து பாலகாட் வரையில் முந்நூறு லீக்கு களுக்கு (Leagues) மேலெக் கடற்கரையுடையதா யிருக்கிறது. 164 லீக்குகளுக்குமேல் இந் நாட்டின் அகலம் பரவி யிருக்கிறது. மொத்தமாகப் பார்த்தால் கடற்கரை அறுநூறு லீக்குகள் நீளமும், முந்நூற்று நாற்பத்தெட்டு லீக்குகள் அகலமு முள்ளது.

பட்கல் என்னு மிடத்திலிருந்து கலிங்க நாடு வரையில் கிழக்கு மேற்கில் பரவியுள்ளது. (விஜயநகரப் பேரரசு) கிழக்கில் கலிங்க நாடு வரையில் பரவியுள்ளது. இந் நாட்டின் வடக்குப் பகுதியில் அடில்ஷாவின் விஜயபுரி நாடும், நைசாம்ஷாவின் ஆமது நகர நாடும் அமைந்துள்ளன. கோவா நகரத்தைப் போர்த்துகீசியர் அடில்ஷாவிட மிருந்து கைப்பற்றிக் கொண்டமையால் விஜயபுரி நாட்டிற்கும், கோவா நகரத்துப் போர்த்துகீசியருக்கும் விரோத மான நிலைமை நீடிக்கிறது. நான் முன்னர்க் கூறிய ஒரிசா (கலிங்கம்) நாடு வங்காளம் வரையில் வியாபித்துப் பர்மாவில் உள்ள பெகு வரையில் பரவி யிருப்பதால் விஜயநகரத்தைவிட மிக்க பரப்பளவு உள்ள தெனக் கூறுவர். தக்காணத்தில் காம்பே வரையில் வியாபித்துப் பாரசீகம் வரையிலும் பரவி யுள்ளதாகச் சிலர் என்னிடம் உறுதியாகக் கூறினர். (இச் செய்தி நம்பத் தகுந்த தன்று.) ஒரிசா நாட்டில் வாழும் மக்கள் மாநிற முடைய வர்கள்; உடற்கட்டு அமைந்தவர்கள். இந் நாட்டு அரசனிடத்தில் மிகுந்த செல்வமும், அதிக எண்ணிக்கையுள்ள யானைகளும், சேனை வீரர்களும் உள்ளனர் என்று நம்பத் தகுந்த செய்திகள் கிடைத்தன. இந்தியாவிலுள்ள மற்ற அரசர்களைவிட ஒரிசா நாட்டரசன் மிக்க செல்வமுள்ளவனுயினும் அவன் கிறித்தவ சமயத்தைச் சேர்ந்தவன் அல்லன்.

விஜயநகரப் பேரரசைப் பற்றி மீண்டும் கூறும் முறையில் அங்குள்ள நகரங்களையும், பட்டணங்களையும், கிராமங்களையும் பற்றித் திரும்பவும் கூறுவதற்கு எனக்கு விருப்ப மில்லை. தார்ச்சா என்ற நகரத்தைப் பற்றி மாத்திரம் சிலவற்றைக் கூற விரும்பு கிறேன். விஜயநகரப் பேரரசிலுள்ள மற்ற நகரங்களில் காணப் பெறுத சில கட்டட அமைப்புகளை நாம் இங்கே காணலாம். இந்த நகரத்தைச் சுற்றி மண்ணால் அமைக்கப்பட்ட கோட்டைச் சுவர் காணப்பெறுகிறது. இந் நகரத்திலிருந்து கோவாவிற்குச் செல்லும் வழியில் (மேற்குப் பகுதியில்) ஓர் அழகிய ஆறு இந் நகரத்தைச் சூழ்ந்து செல்கிறது. மற்றத் திசைகளில் இந் நகரத்தைச் சுற்றி அகழி யொன்று அமைந்துள்ளது. இந் நகரத்தின் கிழக்குப் பகுதி சமவெளியாக அமைந்துள்ளது. இந் நகரத்தில் வட்ட வடிவமுள்ள கோவில் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இக் கோவில் ஒரே கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. இக் கோவிலின் நுழைவாயில் மிக்க வேலைப்பாடு உள்ள தாகும். இக் கோவிலின் சுவர்ப் புறங்களில் ஒரு முழ உயரத்திற்குமேல் கற்களின்மீது அமைக்கப்பட்ட உருவச் சிலைகள் காணப் படுகின்றன. இந்த உருவங்களின் முக அமைப்பும், உடல் அமைப்பும் மிக்க திறமையுடன் செய்யப்பட்டுள்ளன. உரோ

மானிய முறையில் அமைக்கபட்ட பூப்பந்தரின் கீழே இவ் வுருவங் கள் காணப்படுகின்றன. இக் கோவிலின் முன்னே கற்றூண்களின் மீது அமைக்கப்பட்ட முன் மண்டபம் இத்தாலி நாட்டுக் கல் தச்சர்களால் அமைக்கப்பட்டது போன்று கட்டப் பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் காணப்படும் குறுக்கு விட்டங்களும், பலகை களும் கருங்கற்களினால் செய்யப்பட்டிருந்தன. இக் கோவிலின் அடித் தளத்திலும் கருங்கற் பலகைகள் வைத்துப் புதைக்கப் பட்டிருந்தன. இக் கோவிலைச் சுற்றிக் கருங்கற்களினால் செய்யப் பட்ட ஜன்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கோவிலைச் சுற்றிச் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட திருமதிற் சுவர் இருந்தது. இம் மதிற் சுவர் இந்த நகரத்தின் சுவரைவிட மிகவும் செம்மையான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. இம் மதிற் சுவரின் மூன்று பக்கங்களில் அழகும், அகலமும் பொருந்திய நுழை வாயில்கள் அமைந்திருந்தன.

இக் கோவிலின் கிழக்கு வாயிலில், சந்நிதிக்கு எதிரில் தாழ்வாரங்கள் போன்ற கட்டடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. இந்தப் புறச்சுற்றுத் தாழ்வாரங்களிலும், கோவிலின் உட் புறத்திலுள்ள சிறு சிறு கோவில்களிலும் பல யோகிகள் அமர்ந்து தியானம் செய்துகொண் டிருந்தனர், இந்தக் கோவிலின் சந் நிதியின் கிழக்குத் திசையில் நான்கு மூலையுள்ள மேடையொன்று அமைக்கப்பட்டு அதன்மீது எட்டுப்பட்டை வடிவில் தீட்டப்பட்ட கருங்கற்றூண் ஒன்று நாட்டப்பட்டிருந்தது. அது கப்பற்பாய் மரம் போலக் காட்சி யளித்தது. உரோம் நகரத்தில் செயின் பீட்டர் ஆலயக் கோபுரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டு இருந்த ஊசி முனைக் கம்பியை நான் பார்த்திருந்தபடியால் இந்தக் கருங்கற் கம்பத்தைப் பற்றி நான் வியப்படைய வில்லை.

இந் நாட்டிலுள்ள கோவில்களில் தெய்வங்களின் உருவச் சிலைகளை வைத்து வணக்கம் செய்கின்றனர். ஆண், பெண் தெய்வ உருவங்களும், இடபம், அனுமான் முதலிய விலங்கு உருவச் சிலைகளும் காணப்படுகின்றன; இலிங்கங்களையும் வைத்து வழிபடுகின்றனர். தார்ச்சா நகரத்துக் கோவிலில் விநாயக உருவமும் காணப்படுகிறது, இந்த விநாயக உருவத்திற்கு யானையின் முகமும் தந்தமும் காதுகளும் அமைந்துள்ளன. கழுத்திற்குக் கீழே மனித உருவம் உள்ளது. இவ் வுருவத்திற்கு ஆறு கைகள் உள்ளன. இந்தக் கைகள் எல்லாம் கீழே விழுந்து விட்டால் உலகம் அழிந்துவிடும் என இந் நாட்டு மக்கள் கூறு கின்றனர். இந்த உருவச் சிலையின் முன்னார்ப் பலவித உணவு வகைகளைப் படைத்து மக்கள் வழிபடுகின்றனர். இத் தெய்வம்

இந்த உணவுப் பண்டங்களை உண்மையில் உண்பதாகவும் நினைக்கின்றனர். வழிபாடு நடக்கும் பொழுது, இக் கோவிலைச் சேர்ந்த தேவரடியார்கள் நடனம் செய்து தெய்வச் சிலைகட்கும் உணவு ஊட்டுகின்றனர், இந்தத் தேவரடியார்களுடைய பெண் குழந்தைகளும் கோவில்களில் ஆடல் பாடல் தொழிலில் ஈடுபடு கின்றனர், மேற்கூறப் பெற்ற ஆடல் மகளிர் கற்பு நெறியைக் கைக்கொள்ளாமல் ஈனவாழ்வு நடத்துகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட தெருக்களில் மாளிகை போன்ற இல்லங்களில் வாழ் கின்றனர். விஜயநகரப் பேரரசில் உள்ள பல நகரங்களில் தனித் தெருக்களில் இவர்களை நாம் காணலாம்.

இந்த ஆடல் மகளிருள் மிக்க உடல் அழகு உள்ளவர்களைப் பிரபுக்களும், அரசர்களும் தங்களுடைய ஆசை நாயகிகளாக அமர்த்திக் கொள்ளுகின்றனர். இம் மகளிரைத் தங்களுடைய விருப்பம் போல் செல்வர்கள் அனுபவித்தாலும் இச் செய்கை கௌரவமுள்ள தென இந் நாட்டு மக்கள் நினைக்கின்றனர். இத் தொழிலில் ஈடுபட்ட மகளிர் அரண்மனைக்குட் சென்று அரசி களுடன் அளவளாவுவதும் உண்டு. அரசிகளுடன் உரையாடி வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்வதும் உண்டு. இந்த வெற்றிலை, மிளகு கொடியின் இலைபோன்று கார முள்ளது. வெற்றிலையும் பாக்கும் போட்டு மென்று வாயில் அடக்கிக் கொண்டு இந் நாட்டு மக்கள் வெளியில் புறப்படுகின்றனர். வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டால் முகத்திற்குத் தேசும், பற்களுக்கும் நாவிற்கும் நல்லதும் தரும் என்று கூறு கின்றனர். இந் நாட்டு மக்களில் பலர் மாமிச உணவு கொள்வது இல்லை. மாட்டிறைச்சியும், பன்றி இறைச்சியும் தவிர மற்ற மாமிசங்களை இந் நாட்டு மக்கள் உண்கின்றனர். மாமிச உணவு உண்பவர்களும் உண்ணாதவர்களும் வெற்றிலை பாக்குப் போடு வதை மட்டும் நிறுத்துவ தில்லை.

தார்ச்சா நகரிலிருந்து விஜயநகரம் பதினெட்டு லீக்குகள் தூரத்தில் உள்ளது. இந் நகரம் நரசிம்ம ராச்சியத்தின் தலைநகர மாகும். விஜயநகரப் பேரரசர் இந் நகரத்தில் வாசம் செய்கிறார். இந்த இராச்சியத்தில் மதிற் சுவர்கள் சூழ்ந்த பல நகரங்கள் உள்ளன, விஜயநகரத்தின் எல்லையில் உயரமான மலைத் தொடர் ஒன்றுள்ளது. இம் மலைத் தொடரில் உள்ள கணவாய்களின் மூலம் நகரத்திற்குள் செல்லலாம். இந் நகரத்தைச் சூழ்ந்த இருபத்துநான்கு லீக்குகள் (Leagues) சுற்றளவிற்கு மலைகள் அமைந்துள்ளன. இம் மலைத் தொடர்களின் சரிவுகளிலும் குன்றுகள் அமைந்துள்ளன. இங்கு உள்ள கணவாய்களின் மூலம்

(எதிரிகள் வாராதவாறு) உறுதியான மதிற்சுவர்களை அமைத்து உள்ளனர். விஜயநகரத்திற்குள் செல்வதற்காக அமைக்கப் பட்டுள்ள பெருவழியின் வாயில்கள் தவிர மற்றக் கணவாய்கள் எல்லாம் சுவர்கள் வைத்து மூடப் பெற்றுள்ளன. சில மலைத் தொடர்கள் நகரத்திற்குள்ளும் அமைந்துள்ளன. இங்குக் காணப்படும் கணவாய்களின் மூலம் எதிரிகள் படையெடுத்து வந்தால் அவர்களை எதிர்ப்பதற்கு ஏற்ற வகையில் கொத்தளங்கள் அமைந்துள்ளன. நகரத்தைச் சூழந்துள்ள மலைத் தொடர் களுக்கும், மதிற் சுவர்களுக்கும் இடையில் சமதளமான இடங் களிலும், பள்ளத் தாக்குகளிலும், நெல் பயிரிடப்படுகிறது. சிறிது உயரமான இடங்களில் நாரத்தை, எலுமிச்சை, மாதுளை முதலிய பழத் தோட்டங்களும் பலவிதமான காய்கறி வகை களும் பயிரிடப்படுகின்றன. இங்குள்ள குன்றுகளை இணைத்து அமைக்கப்பட்ட ஏரிகளில் தேங்கி நிற்கும் தண்ணீரைக் கொண்டு மேற் கூறப்பட்ட உழவுத் தொழில் நடைபெறுகிறது.

இங்குக் காணப்படும் மலைகளுக் கிடையே பெரும்புதர்கள் உள்ள காடுகள் கிடையா. இங்குள்ள குன்றுகள் வியக்கத் தகுந்த முறையில் அமைந்துள்ளன. பாறைகள் ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கப்பட்டிருப்பது போன்று, தனித் தனியாகவும், இயற்கை யாகவும் அமைந்துள்ளன. இவ்விதமாக இயற்கையும், செயற் கையும் சேர்ந்து அமைக்கப்பட்ட அரண்கள் சூழ்ந்த இடத்தில் விஜயநகரம் அமைந்துள்ளது.

விஜயநகரப் பேரரசின் மேற்குப் பகுதியில் உள்ள மலைத் தொடர், அடில்ஷாவின் நாடாகிய விஜயபுரியைக் கடந்து தக்காணம் வரையில் செல்லுகின்றது ; ராச்சோல் (இராய்ச்சூர்) என்னும் நகரம் வரையில் கிழக்கிலும் செல்லுகிறது. விஜய நகரத் தரசர்களுக்குச் சொந்தமான இந்த இராய்ச்சூரை அடில் ஷா பிடித்துக் கொண்ட போதிலும் இப்பொழுதுள்ள அரசர் அதை மீண்டும் தம் வசப்படுத்தி விட்டார். விஜயபுரி நாட்டையும் விஜயநகரப் பேரரசையும் இம் மலைத் தொடர்கள் இயற்கையாகவே பிரித்துள்ளன. இவ் விரு நாடுகளுக்கும் அடிக்கடி போர்கள் நடைபெறுகின்றன. கிழக்குப் பகுதியில் கலிங்க நாட்டின் எல்லையில் மலைத்தொடர்கள் இருந்த போதிலும் அவைகள் உயரமானவை அல்ல. சிறு காடுகளும், முட்புதர்களும் நிறைந்துள்ளன. இந்தப் பகுதியில் மலைத் தொடர்களுக்கு இடையில் பரந்த சமவெளிகள் உள்ளன. இந்த இரு நாடு களுக்கும் இடையில் உள்ள சிறு காடுகளில் பலவிதமான விலங்குகள் காணப்படுகின்றன. இக் காடுகள் விஜயநகரத்தின் வடகிழக்கு எல்லைக்கு ஒரு பாதுகாப்பு அரணாக இருக்கின்றன.

இக் காடுகளின் இடையில் கலிங்க நாட்டிலிருந்து விஜய நகரத் திற்குள் செல்வதற்குரிய வழிகளும் உள்ளன. விஜயநகரத்தைப் பாதுகாப்பதற்கு இவ் வழியில் நாயக்கர் நியமிக்கப்பட்டு அவருக்கு உதவி செய்ய ஒரு சேனையும் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், வடமேற்குப் பகுதியில் இருந்து கோவா நகரத்திற்குச் செல்லும் வழியில் இவ்விதப் பாதுகாவல் இல்லை.

விஜயநகரத்தின் மேற்குத் திசையிலிருந்தும், கோவா நகரத்திலிருந்தும் நகரத்திற்குட் செல்வதற்கு முன்னுள்ள இடத்தில் ஒரு பெரிய அரண் அமைந்துள்ளது. இந்த அரணுக்குக் கிழக்குப் பகுதியில் விஜயநகரத்தரசர் ஒரு புதிய நகரத்தை அமைத்துள்ளார். இந் நகரத்தைச் சுற்றிலும் கருங்கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட கோட்டைச் சுவர்களும், நுழை வாயிலில் உயரமான கோபுரங்களோடு கூடிய வாயிற் கதவுகளும் இருக்கின்றன. இவ்வளவு பாதுகாப்பான இடத்தை நான் விஜயநகரப் பேரரசில் வேறு எங்கும் காண வில்லை. கோட்டைச் சுவர் சூழ்ந்த இந் நகரத்தில் பல தெருக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் இரு பக்கங்களிலும் தட்டையான மேற் கூரையுடைய இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந் நகரத்தில் (நாகலா புரம்) பல வியாபாரிகளும் மற்றையோர்களும் வந்து தங்கி யிருக்கும்படி விஜய நகரத்தரசர் ஆதரவளிக்கிறார். இரு குன்று களை இணைத்து ஏரி யொன்றை இந் நகரத்திற்கு அரசர் அமைத் துள்ளார். இந்த மலைப் பகுதிகளில் பெய்யும் மழைநீர் இவ் வேரியில் வந்து தேங்கி நிற்கிறது. இஃதன்றியும் மூன்று லீக்கு களுக்கு அப்பால் உள்ள மற்றுமோர் ஏரியிலிருந்தும் குழாய்களின் மூலம் நாகலாபுரம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. ஆகையால், இந் நகரத்தில் நீர்வளம் மிகுந்துள்ளது.

சிற்ப வேலைகள் அமைந்த மூன்று பெரிய கருங்கல்தூண்கள் இந்த ஏரிக் கரையில் அமைக்கப் பெற்றுள்ளன. இத் தூண்களில் அமைக்கப் பெற்றிருக்கும் குழாய்களின்மூலம் நெல் வயல் களுக்கும் தோட்டங்களுக்கும் நீர்ப்பாசனம் நடைபெறுகிறது. இந்த ஏரியை அமைப்பதற்குமுன் இதன் நடுப்பாகத்தில் இருந்த சிறு குன்றைப் பிளந்து அதன் பாறைகள் நீக்கப்பட்டன. இந்த ஏரியை அமைப்பதற்கு 15 அல்லது 20 ஆயிரம் வேலையாள்கள் வேலை செய்தனர். இத் தொழிலாளர்களிடம் நன்முறையில் வேலை வாங்கி, ஏரியை விரைவில் அமைப்பதற்குக் கண்காணி களும் இருந்தனர். ஏரியில் வேலையாள்கள் மண்வெட்டிக் கொண்டிருக்கும் பொழுது எறும்புகள் மொய்த்துக் கொண்டிருப் பதுபோல் தோன்றியது. ஏரி முழுவதும் மக்கள் நிரம்பியிருந் தனர்.

ஏரியில் நீர் நிரம்பிய பிறகு இரண்டு முறை இவ் வேரி உடைத்துக் கொண்டது. இவ் விதம் உடைப்பு ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று கூறும்படி அந்தணர்களை (சோதிடர்) அரசர் வினவினர். அந்தணர்கள் இந்த ஏரியின் காவல் தெய்வத்திற்கு இரத்தக் காவு கொடுக்காததனால் கோபமுற்று இவ் விதம் உடைப்பு உண்டாகும்படி செய்கிறதெனக் கூறினர். ஏரி கரையில் அமைவுற்றிருந்த கோவிலின்முன் யாகம் ஒன்று செய்து நரபலியோடு குதிரைகளும், எருமைகளும் வெட்டப்பட வேண்டுமெனக் கூறினர். இதைக் கேள்வியுற்ற அரசர் அறுபது பேரை நரபலியிடும்படியும், சில குதிரைகளையும், எருமைகளையும் கோவிலின்முன் பலியிடும்படியும் உத்தரவிட்டு, உடனே நடை பெறும்படியும் ஆணையிட்டார்.

விஜயநகரத்தில் வாழ்ந்த பிராமணர்கள் (அந்தணர்கள்) வேதங்களையும், ஆகமங்களையும், புராணங்களையும் நன்குணர்ந்து கோவில்களில் வேதாகமங்களின் விதிப்படி தொண்டாற்றி வந்தனர். இவர்களை ஐரோப்பிய நாட்டு மத குருமார்களுக்கு ஒப்பிடலாம். இன்னும் சில பிராமணர்கள் உலகியல் கல்வி கற்று அரண்மனையிலும், நகரங்களிலும், பட்டணங்களிலும் அரசாங்க அலுவலாளர்களாக வேலை பார்த்தனர். பல பிராமணர்கள் வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தனர். மற்றும் பலர் தங்களுக்கு வழங்கப் பட்ட பிரமதேய நிலங்களை உழுது பயிரிட்டு அதன் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்தினர். கோவில்களில் பணிபுரியும் அந்தணர்கள் உயிர்க் கொலை புரிவதையும் புலால் உண்பதையும் முற்றிலும் வெறுத்தனர். 'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்(டு) ஒழுக லான்' என்னும் முதுமொழிக் கிணங்க, உயிருள்ள விலங்கு, பறவைகளின் இரத்தம் சிந்தாது, புலாலை மறுத்து, மரக்கறி உணவையே உண்டு, கடவுட் சேவை புரிந்தனர். இவர்களுட் சிலர் யோகநெறியைப் பின்பற்றியும், தவம்செய்தும் இறைவனுடைய அருளை நாடிப் பேரின்பமாகிய முக்தி யடைவதில் முனைந்திருந்தனர்.

தவநெறியில் ஈடுபடாத மற்ற அந்தணர்கள் திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டனர், அந்தணர் இனத்தைச் சேர்ந்த பெண்டிர் அடக்கமே அணியாகக் கொண்டு, ஆடம்பரத்தை வெறுத்து, எளிய வாழ்க்கை நடத்தினர். இந்திய நாட்டில் காணப்படும் பெண்மக்களில் அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிக்க அழகுள்ளவர்களாகவும், காண்பதற் கினிய நிறமுடையவர்களாகவும் இருந்தனர். மேலே கூறப்பட்ட

அந்தணர்களில் பலர் தவநெறியைப் பின்பற்றுது அரசாங்கச் சேவையிலும் ஈடுபட்டனர். அரசாங்கச் சேவையில் ஈடுபட்ட அந்தணர்களை விஜயநகரத்தரசர் மிகுந்த மரியாதையுடன் நடத்தினர்.

மேலே விவரிக்கப்பட்ட நாகலாபுரம் என்னும் நகரம், கிருஷ்ண தேவராயருடைய மனைவி ஒருத்தியின் பெயரால் அமைக்கப்பட்ட தாகும். இந்த நகரம் ஒரு சமவெளியில் அமைந் துள்ளது. இந்த நகரத்தைச் சுற்றியுள்ள இடங்களில் நகர மக்கள் தனித்தனியாகத் தோட்டங்களை அமைத்துள்ளனர். இந்த நகரத்தின் மத்தியில் பல உருவச் சிலைகளை வைத்து வணங்குவதற் குரிய ஆலயம் ஒன்றை அரசர் அமைத்தார். இங்குக் காணப் படும் வீடுகள் ஒவ்வொன்றிலும் நன் முறையில் அமைக்கப் பெற்ற கிணறுகள் காணப்படுகின்றன. தட்டையான மேல் தளங்களுடனும் மாடியில் ஏறுவதற்குரிய படிக்கட்டுகளுடனும். வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகளின் உட்பாகத்தில் தூண் கள் நிறுத்தப்பட்டு வெளிப்புறத்தில் தாழ்வாரங்களுடன் காணப் படுகின்றன. அரசர் வசிக்கும் அரண்மனையைச் சுற்றி மதிற்சுவர் உள்ளது. மதிற்சுவருக்கு உட்பக்கத்தில் வரிசை வரிசையாகப் பல வீடுகள் காணப்படுகின்றன. (நாகலாபுரத்தில்) அரசருடைய அரண்மனைக்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. அரசனிடம் முக்கியமான செய்திகளைக் குறித்துப் பேச விரும்புகிற தலைவர் களைத் தவிர மற்றவர்களைக் காவலாளிகள் அனுமதிப்ப தில்லை. மேற்கூறப்பட்ட இரண்டு நுழைவாயில்களுக்கு இடைப்பட்ட இடத்தில் நான்கு பக்கங்களிலும் தாழ்வாரங்கள் சூழ்ந்த மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இம் மண்டபத்தில் அரசனைக் காண விரும்பும் தலைவர்களும். அயல்நாட்டுத் தூதர் களும் அரசன் தங்களை அழைக்கும் வரையில் காத்துக் கொண்டு இருக்கின்றனர்.

அரசனுடைய (கிருஷ்ண தேவராயர்) உயரம் நடுத் தரமானது. ஒல்லியாக இல்லாமல் சதைப்பற்றோடும் காண் பதற்கு இனிய தோற்றமுள்ள நிறத்தோடும் இருக்கிறார். அவருடைய முகத்தில் அம்மை வார்த்த வடுக் குறிகள் இருந்தன. அவருடைய புன்னகை நிறைந்த முகமும். விருந்தினரை அகனமர்த்து உபசரிக்கும் தன்மையும் போற்றத் தக்கன வாகும். அயல்நாட்டு விருந்தினர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று மிகுந்த கண்ணோட்டத்துடன் நடத்துகிறார் ; அவர்களுடைய தகுதிக் கேற்றவாறு உபசரித்து அயல்நாட்டுச் செய்தி களைக் கூர்ந்து அறிந்து கொள்ளுகிறார் ; பேரரசருக்குரிய பண்பு

கள் பலவற்றை அவரிடம் காண முடிகிறது ; 'சமன்செய்து சீர் தூக்கும் கோல்போல' நியாயம் வழங்குகிறார்: ஆயினும், சிறிது முன்கோபம் உடையவரெனக் கூறலாம். 'மகாசய கிருஷ்ண தேவராயர், பூர்வ, பச்சிம, தட்சண சமுத்திராதிபதி கண்டநாடு கொண்டு, கொண்ட நாடு கொடாத வீரப்பிரதாப ராயர் பல சிற்றரசர்களுக்குத் தலைவர்' எனப் பல பட்டப் பெயர்கள் அவருக்கு வழங்குகின்றன. (தென்) இந்தியாவில் உள்ள மற்ற அரசர்களைவிடச் செல்வத்திலும், பேரரசின் பரப்பளவிலும், சேனை பலத்திலும் மிகுந்து விளங்கியமையால் இவருக்கு மேற் கூறப்பட்ட பெயர்கள் வழங்குகின்றன. பேரரசர்களுக்கு உரிய பண்புகள் எல்லாம் இவரிடம் நிறைந்துள்ளன.

கிருஷ்ண தேவராயருக்கும், கலிங்க நாட்டரசனுக்கும் (பிரதாபருத்திரகஜபதி) அடிக்கடி போர்கள் ஏற்பட்டன. விஜய நகரத்தரசர் ஒரிசா (கலிங்கம்) நாட்டின்மீது படையெடுத்துச் சென்று பல நகரங்களையும், கோட்டைகளையும் தம் வசப்படுத்திக் கொண்டு கலிங்க மன்னனுடைய படைவீரர்களைப் பல இடங் களில் தோல்வியுறும்படி செய்து நூற்றுக்கணக்கான யானைகளைத் தம்முடையதாக்கிக் கொண்டனர். கலிங்க நாட்டு அரசகுமாரன் ஒருவனையும் சிறைப்படுத்தி விஜயநகரத்தில் சிறையிலிட்டு வைத் திருந்த பொழுது அவ் வரச குமாரன் இறந்து விட்டான். கலிங்க நாட்டரசன் கிருஷ்ண தேவராயரிடம் போரில் தோல்வியுற்ற பிறகு தன்னுடைய மகள் ஒருத்தியை மணம் செய்து கொடுத்துப் பின்னர் அவரிடம் அமைதி யுடன்படிக்கையும் செய்து கொண்டான். இவ் வரசர் பெருமானுக்குப் பன்னிரண்டு மனைவியர் இருந்த போதிலும் அவர்களுக்குள் மூவரைத் தம்முடைய பட்டத் தரசியராகக் கொண்டிருந்தார். இம் மூவரில் ஸ்ரீரங்கப்பட்டினத்து அரசருடைய மகள் (திருமலைதேவி) முதல் மனைவியாகவும். இளமையில் ஆசைநாயகியாக இருந்து, பின்னர் மணம் செய்து கொண்டவள் (சின்னதேவி) இரண்டாவது மனைவியாகவும். கலிங்க நாட்டரசன் பிரதாப ருத்திர கஜபதியின் மகள் (ஜெகன் மோகினி) மூன்றுவது தேவி யாகவும் கருதப்பெறுகின்றனர். இரண்டாவது மனைவியின் நினைவுச் சின்னமாக நாகலாபுரம் என்ற நகரத்தை அமைத்த தாகவும் கூறுவர்.

மேலே கூறப்பெற்ற அரசிகளுக்குத் தனித்தனியான அந்தப் புர மாளிகைகள் இருந்தன. இந்த அரசிகளுக்குக் குற்றேவல் புரிவதற்கும் மற்றத் தொண்டுகளைச் செய்வதற்கும், காவல் காப்பதற்கும் பெண் மக்கள் பலர் நியமிக்கப் பட்டிருந்தனர்.

அந்தப் புரங்களைக் காவல் புரிவதற்கு ஆண்மை நீக்கப்பட்ட ஆடவர்கள் நியமிக்கப் பெற்றிருந்தனர். இவர்களைத் தவிர மற்ற ஆண்மக்கள் அந்தப் புரங்களுக்குச் செல்ல முடியாது.

அந்தப்புரங்களிலுள்ள மகளிரை வயது சென்ற பெரியவர்களைத் தவிர மற்றையோர்கள் காண முடியாது. வயோதிகர்களும் அரசனுடைய அனுமதியின் பேரில்தான் காண முடியும். அரசிகள் சுற்றுலாச் செல்லும் பொழுதும் நன்கு மூடப்பட்ட பல்லக்குகளில் அமர்ந்து பெண் மக்களால் தூக்கிச் செல்லப்படுகின்றனர். ஆண்மையற்ற ஆண்களும், பெண் ஏவலாளர்களும் பல்லக்குகளைச் சூழ்ந்து செல்கின்றனர். ஒவ்வோர் அரசிக்கும் பொன்னும், பொருளும் ஆடை யணிகளும் ஏராளமாக இருந்த தென நான் கேள்விப்பட்டேன். கழுத்தணி, காலணி, முத்துவடங்கள், முத்து மாலைகள், நவரத்தின அணிகலன் முதலியன அவர்களுக்கு அளிக்கப் பட்டிருந்தன. இவ் வித அணிகலன்களை அணிந்த அறுபது இளம் பெண்டிர் ஒவ்வொருவருக்கும் தனியாக ஏவற் பெண்டிர் நியமனம் செய்யப் பெற்றிருந்தனர். நான் பின்னர்க் கூறப் போகும் திருவிழாக் காட்சி யொன்றில் இவ் வரசிகளின் ஏவற் பெண்டிரைக் கண்டு வியப்புற்று நின்றேன். அரசிகளுடைய ஏவலைப் புரியும் பெண்டிரோடு, மேலும் பன்னீராயிரம் பெண்களும் அரண்மனைக்குள் இருந்ததாக நான் கேள்விப்பட்டேன். இப் பெண்மக்களுள் பலர் மல்யுத்தம், வாட்போர், கத்தி கேடயப் போர் முதலியவற்றில் பேராற்றல் நிறைந்தவர்களாயிருந்தனர். இசை, நடனம், வீணை வாசித்தல் முதலிய கலைகளில் வல்லவர்களும், மிருதங்கம் அடிப்பவர்களும், பல்லக்குச் சுமப்பவர்களும், சலவை செய்பவர்களும் ஏராளமாக இருந்தனர். அரசிகளுக்குரிய அணுக்கத் தொண்டுகளை யெல்லாம் இவர்களே புரிந்தனர். கிருஷ்ண தேவராயருடைய மூன்று பட்டத் தரசிகளுக்கும், ஒருவருக் கொருவர் மனக்கவலை ஏற்படாதவாறு செல்வங்களோடு ஏவல் பெண்டிரும் அளிக்கப்பட்டிருந்தனர். விஜய நகரத்து அரசருடைய உவளகம் பல துறைகள் கொண்ட பெரிய நகரம் போலவே காட்சி யளித்திருக்க வேண்டும்.

விஜயநகரத்தரசர் தம்முடைய தனிப்பட்ட அரண்மனையில் வாழ்ந்தார். தம்முடைய மனைவியருடன் பேசுவதற்கு விரும்பினால் ஆண்மையற்ற ஆடவன் ஒருவனிடம் செய்தி யனுப்புகிறார். இவன் சென்று பெண் காவலர்களிடம் அச் செய்தியைக் கூற, அவர்கள் அரசியிடம் அரசருடைய விருப்பத்தைத் தெரிவித்த பின்னர், அரசி, அரசரிடம் சென்று பேசுவது வழக்கம். இவ் விஷயங்கள் வேறு ஒருவருக்கும் தெரியாமல் நடைபெறுகின்றன.

அரசருடைய அந்தப்புரங்கள் பற்றிய செய்திகளை நிறைவேற்று வதற்கு ஆண்மையற்ற ஆண்கள் பலர் நியமிக்கப் பெற்றிருந் தனர். இவர்களுள் பலர் அரசருடன் நெருங்கிப் பழகினர். இவர் களுடைய ஊதியமும் பெருமளவில் இருந்தது.

கிருஷ்ணதேவராயரின் தேகப் பயிற்சி :

வைகறையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் சிறிதளவு நல்லெண்ணெய் அருந்திப் பின்னர்த் தம்முடைய உடல் முழுவதும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுகிறார்;; பின்னர் இடுப்பில் கச்சை யணிந்து கர்லாக் கட்டைகளைச் சுற்றுகிறார் ; உடம்பில் பூசப்பட்ட எண்ணெய் வியர்வையுடன் வெளியான பிறகு கைகளில் வாள் கொண்டு சுழற்றுகிறார். இப் பயிற்சியால் உடம்பில் பூசப்பட்ட எண்ணெய் பூராவும் வெளியாகி விடுகிறது ; பின்னர், அரண்மனையில் உள்ள மல்லர் ஒருவருடன் மல்யுத்தப் பயிற்சியை மேற் கொள்ளுகிறார்; இவ்விதப் பயிற்சிகளுக்குப் பிறகு தம்முடைய குதிரையின்மீது அமர்ந்து அரண்மனைக்கு வெளியில் உள்ள சமவெளியில் சவாரி செய்கிறார். இப் பயிற்சிகள் எல்லாம் சூரியன் உதிப்பதற்குள் முடிகின்றன. பின்னர், திருமஞ்சனம் செய்து கொள்வதற்கு ஒழுக்கமும், சீலமும் வாய்ந்த அந்தணர் ஒருவரை அழைத்துத் தம்மைக் குளிப்பாட்டி விடும்படி ஆணை யிடுகிறார் ; குளித்து ஆடைகள் அணிந்த பிறகு அரண்மனைக்குள் இருக்கும் ஆலயத்திற்குச் சென்று வணக்க வழிபாடுகளைச் செய்கிறார்.

பின்னர், சுற்றுப் புறச் சுவர்கள் இன்றிப் பல தூண்களைக் கொண்டமைக்கப்பட்ட ஒரு மண்டபத்திற்குச் செல்லுகிறார். தூண்களுக் கிடையில் உச்சியிலிருந்து திரைச் சீலைகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் திரைச் சீலைகளில் அழகான பெண் தெய்வ உருவங்கள் எழுதப்பட்டுள்ளன. இம் மண்டபத்தில் அமர்ந்து அரசாங்க அலுவலாளர்களுடனும், நெருங்கிய நண்பர்களுடனும் கலந்து ஆலோசனை செய்து அரசியல் காரியங்களைக் கவனிக்கிறார். கிருஷ்ண தேவராயருடைய நெருங்கிய நண்பர் (சாளுவ) திம்மராசர் என்ற அந்தணப் பெரியார் ஆவார். சாளுவ திம்மருடைய அதிகாரம் எல்லையற்ற தாகும். அவருடைய ஆணைகளை அரண்மனையில் உள்ள அலுவ லாளர்களும், பிரபுக்களும், நாயக்கன்மார்களும் சிற்றரசர்களும் தங்களுடைய அரசருடைய ஆணை போல் மதிக்கின்றனர். மேற் கூறப்பட்டபடி அரசியல் அலுவல்களைக் கவனித்த பிறகு அலுவல் மண்டபத்திற்கு வெளியில் காத்துக் கொண்டிருக்கும் பிரபுக் களையும், நாயக்கன்மார்களையும் தம்மை வந்து காணும்படி

ஆணையிடுகிறார். இவர்கள் அரசரைக் காணச் செல்லும் பொழுது தங்களுக்குள் பேசாமலும், வெற்றிலை பாக்கு மெல்லாமலும் கைகளைக் கட்டிக் கொண்டு தலை குனிந்து வணக்கம் செய்கின்றனர்; அரசர் தாம் பேச விரும்பும் தலைவனை ஓர் அலுவலாளன் மூலம் அழைக்கிறார். அரசருடைய அலுவலாளரிடம் நாயக்கன் மார்களும், பிரபுக்களும் தங்களுடைய விருப்பங்களைத் தெரிவித்துப் பின்னர் தங்களுடைய இடத்திற்குச் செல்லுகின்றனர். அரசர் ஆணையிடும் வரையில் அவ்விடத்திலே நிற்கின்றனர்; அரசர் 'போகலாம்' என்று கூறிய பிறகு தலைக்குமேல் இரு கைகளையும் கூப்பி வணங்கிய பிறகு அரசவையை விட்டு வெளியில் செல்லுகின்றனர். ஒவ்வொரு நாளும் இவ் விதமாகச் சென்று வணக்கம் செலுத்துகின்றனர்.

நாங்கள் விஜயநகரப் பேரரசிற்குச் சென்றபொழுது கிருஷ்ண தேவராயர் மேலே கூறப்பட்ட புதிய நகரத்தில் இருந்தார். கிறிஸ்டோவோ - டிஃபிகிரிடோ (Chritovao-de-Figueiredo):என்ற போர்த்துகீசியரோடும், அவருடன் வந்த மற்ற யாவரோடும் நாங்கள் நன்முறையில் ஆடைகள் அணிந்து கொண்டு கிருஷ்ண தேவராயரைக் கண்டோம். அரசர் எங்களை அன்புடன் வரவேற்று முகமலர்ச்சி கொண்டார். அரசருக்கு மிக நெருக்கத்தில் நாங்கள் இருந்த பொழுது எங்களைத் தொட்டுப் பார்த்து மகிழ்ச்சியுற்றார். போர்த்துகீசியத் தலைவர் அனுப்பிய பரிசு பொருள்களையும், கடிதம் ஒன்றையும் கிறிஸ்டோவோ, அவரிடம் சமர்ப்பித்தார். கிறிஸ்டோவோ கொண்டு வந்த காணிக்கைப் பொருள்களில் ஓர் இசைக் கருவியைக் கண்டு மிகவும் களிப்படைந்தார். பொன் சரிகையினால் ரோஜாப் பூக்கள் நெய்யப்பட்ட வெண்மையான ஆடைகளை அரசர் அணிந்து கொண்டிருந்தார். அவருடைய கழுத்தில் வைரங்கள் வைத்திழைக்கப்பட்ட பதக்கம் காணப்பட்டது. இத்தாலியில் காலர்கள் (Galician) அணிந்து கொள்ளும் தலைக்கவசம் போன்று பட்டுத் துணியில் சரிகை வேலை செய்யப்பட்ட தொப்பி ஒன்றை அணிந்திருந்தார். கால்களில் எவ்வித பாதரட்சையும் அணிய வில்லை. அரசரைக் காணச் செல்பவர்கள் எல்லோரும் பாதரட்சை இல்லாமலே செல்ல வேண்டும். இந்திய நாட்டு மக்களில் பெரும்பாலோர் காலணிகள் இல்லாமலேயே நடந்து செல்கின்றனர். சிலர். முனையில் கூர்மையான வடிவமுள்ள காலணிகளை அணிந்துகொண்டு நடக்கின்றனர். கிறிஸ்டோவோ என்பவர் விடை பெற்றுக் கொண்ட பொழுது அரசர் சரிகைத் துணியில் தைக்கப்பட்ட சட்டையும் தொப்பியும் அளித்தார். போர்த்துகீசியருடன் நட்புக் கொள்வதற்கு அடை

யாளமாகக் கிறிஸ்டோவோ என்பவருடன் வந்திருந்த மற்றவர் களுக்கும் சரிகைத் துணிகள் இனமாக வழங்கப்பட்டன.

(நாகலாபுரத்தில்) கிருஷ்ண தேவராயரிடம் விடைபெற்ற பிறகு கிறிஸ்டோவோவுடனும், மற்றும் சிலருடனும் நாங்கள் விஜயநகரத்திற்கு வந்தோம். விஜயநகரத்தில் நாங்கள் தங்கி யிருப்பதற்கு மிக்க வசதிகள் பொருந்திய வீடுகள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டன. கிறிஸ்டோவோ விஜயநகரத்தில் தங்கி யிருந்த பொழுது பல பிரபுக்களும், நாயக்கன்மார்களும் வந்து அவரைக் கண்டனர். நாங்கள் சமையல் செய்து உணவு கொள்வதற்காகப் பல ஆடு, கோழிகளும், சமையல் பாத்திரங்களும், தேன், வெண்ணெய் முதலிய பொருள்களும் எங்களுக்கு அனுப்பப் பட்டன. அவற்றை யெல்லாம் தம்முடன் வந்தவர்களுக்குக் கிறிஸ்டோவோ பகிர்ந்து அளித்தார். கிறிஸ் டோவோவை அன்புடன் உபசரித்துப் போர்ச்சுகல் தேசத்து அரசாங்கத்தைப் பற்றிய பல செய்திகளை அறிந்து கொண்டு அவர்கள் மிக்க மகிழ்ச்சி யடைந்தனர்.

விஜயநகரத்திலிருந்து (நாகலாபுரமாகிய) புதியநகரத்திற்குச் செல்லும் பெருவழியின் இரு பக்கங்களிலும் நிழல் தருவதற் காகப் பல மரங்கள் நடப்பட்டிருந்தன. இரு பக்கங்களிலும் பல வீடுகள் அமைக்கப்பட்டு, அவ் வீடுகளின் முன்றிலில் உள்ள கடை களில் பல விதமான பொருள்கள் வியாபாரத்திற்கெனக் காணப் பட்டன. அந்தப் பெருவழியில் அரசருடைய ஏவலினால் அமைக்கப்பட்ட கற்கோவில் ஒன்றும், பிரபுக்களும், நாயக்கன் மார்களும் அமைத்த கோவில்களும் காணப்படுகின்றன. விஜய நகரத்திலுள்ள அரண்மனைகளையும், அரசாங்க அலுவலகங் களையும் மற்றும் பல மதிற் சுவர்களையும் உள்ளே கொண்டுள்ள முதல் மதிற் சுவர் காணப்படுகிறது. இப்பொழுது அதன் பகுதி களில் சில இடிந்த நிலையிலிருந்தாலும் அதன்மீது கொத்தளங்கள் உள்ளன. அம் மதிற் சுவரைச் சூழ்ந்த தாழ்வான பகுதிகளில் அகழி யொன்றும் காணப்படுகிறது. முதல் மதிற் சுவருக்கும், இரண்டாவது மதிற் சுவருக்கும் இடையில் ஓராள் உயரத்திற்குக் கருங்கற் பலகைகள் அழுத்தமாகப் புதைக்கப் பட்டுள்ளன. இந்தக் கருங்கற் பலகைச் சுவர் ஒரு குன்றில் சென்று முடிகிறது. இடைவெளியிலுள்ள நிலங்களில் நெல், கரும்பு முதலியவை பயிரிடப்பட்டு இரண்டு ஊற்றுகள் நிறைந்த ஏரிகளிலிருந்து நீர்ப் பாசனம் செய்யப்படுகிறது. நெல்வயல்களின் இடையே பனை மரத் தோப்புகளும், பழத் தோட்டங்களும் காணப்படுகின்றன.

விஜயநகரத்தின் முதல் மதிற் சுவர் கருங்கல் கொண்டு அமைக்கப்பட்ட தாகும். சிறிது வளைவாகக் கட்டப்பட்டுள்ள இந்த மதிற் சுவரின் நுழைவாயிலில் இரண்டு கோபுரங்களுள்ளன. இந்த மதிலைக் கடந்து உள்ளே சென்றால் இரண்டு சிறிய ஆலயங்கள் காணப்படுகின்றன. ஒரு கோவிலைச் சுற்றி மதிற் சுவர் இருக்கிறது. பின்னர், இரண்டாவது மதிற் சுவரின் நுழைவாயில் வழியாக நகரத்திற்குள் செல்ல வேண்டும். இரண்டாவது மதிற் சுவரிலிருந்து அரண்மனைக்குச் செல்லும் வழியில் இரு பக்கங்களிலும் அழகாக அமைக்கப்பட்ட பிரபுக்களுடைய இல்லங்களும், நாயக்கன்மார்களுடைய வீடுகளும் காணப்படுகின்றன. நகரத்தின் முக்கியமான தெரு வழியாகச் சென்றால் இன்னொரு நுழைவாயிலைச் சென்றடையலாம். இந்த நுழைவாயிலுக்கு எதிரே திறந்தவெளி மைதானம் ஒன்றிருக்கிறது. இந்த மைதானத்தின் வழியாக அரண்மனைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

விஜயநகரத்திலுள்ள அரண்மனையும் பெரியதொரு மதிற் சுவரால் சூழப்பட்டுள்ளது. அது லிஸ்பன் நகரத்தில் காணப்படும் பெரிய கோட்டைகளைவிடப் பெரியதாகத் தெரிகிறது. முதல் நுழைவாயிலைக் கடந்து சென்றவுடன் இரண்டு பக்கங்களிலும் இரு கோவில்களுள்ளன. ஒரு கோவிலின் முன்னே பல ஆடுகளைக் கொன்று இரத்தப் பலியிடுகின்றனர். பலியிடப்பட்ட ஆடுகளின் தலைகளையும், ஓர் ஆட்டிற்கு ஒரு சக்கரம் வீதம் காணிக்கையும் கோவில் பூசாரிக்கு அளிக்கின்றனர். ஆடுகளைப் பலியிடும்போது இந்தக் கோவில் பூசாரி ஒரு கொம்பு அல்லது சங்கை ஊதித் தெய்வத்தின் சம்மதத்தை அறிவிப்பதுபோல் சப்தம் செய்கிறான். இந்தக் கோவில்களுக்கு அருகில் சித்திர, சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கோவில் ரதம் (தேர்) நின்று கொண்டிருக்கிறது. முக்கியமான திருவிழாக் காலங்களில் இத் தேரைப் பெரிய தெருக்களின் வழியாக இழுத்துச் செல்கின்றனர். கோவில் தெருக்களைக் கடந்து சென்றால் நகரத்தின் செல்வர்கள் வாழும் வீதியைக் காணலாம். இக் கடைத் தெருவில் முத்துகளும், நவரத்தினங்களும், துணிமணிகளுமடங்கிய கடைகள் காணப்படுகின்றன. இக் கடைத் தெருவின் ஒரு பகுதியில் குதிரைகளும், குதிரைக் குட்டிகளும் விலையாவதற்குரிய சந்தை அமைந்துள்ளது. இன்னொரு பகுதியில் பலவிதமான பழங்கள் விற்கப்படுகின்றன. இந்தக் கடைத் தெருவின் கோடியில் மூன்றாவது மதிற்சுவர் காணப்படுகிறது. மூன்றாவது மதிற் சுவரைக் கடந்து சென்றால் பல்வேறு தொழிலாளர்களுடைய வீதியைக் காணலாம். இத் தெருவிலும் இரண்டு சிறிய கோவில்களுள்ளன. தொழிலாளர்கள் தங்களுக்குள்

அமைத்துக் கொண்ட சங்கங்களும் காணப்படுகின்றன. இங்கு மாமிச உணவுப் பொருள்கள் சந்தை நடைபெறுகிறது. வெள்ளிக் கிழமைதோறும் நடைபெறும் இச் சந்தையில் உலர்ந்த மீன்கள், ஆடு, கோழி, பன்றி முதலியன விலையாகின்றன. இத் தெருவைக் கடந்து சென்றால் இஸ்லாமிய வீரர்களின் குடியிருப்பைக் காணலாம். இந்த இஸ்லாமிய வீரர்கள் விஜயநகரச் சேனையில் சேர்ந்து அரசாங்கச் சம்பளம் பெறுகின்றனர். விஜயநகரத்தில் வியாபாரப் பொருள்கள் நிரம்பக் கிடைப்பதால் அவற்றை வாங்குவதற்கும், தங்களுடைய பொருள்களை விற்பதற்கும் முக்கியமாக வைரங்களையும், நவரத்தினங்களையும் வாங்குவதற்கும் வரும் பல்வேறு நாட்டு வியாபாரிகளையும், மற்றவர்களையும் நாம் காணலாம்.

ஓரிடத்திலிருந்து விஜய நகரத்தை முற்றிலும் பார்க்க முடியாதாகையால் இந் நகரத்தின் பரப்பளவை என்னால் கூற முடியவில்லை. நான் ஒரு குன்றின்மீது ஏறி நின்று இந் நகரத்தைப் பார்த்தேன். பல குன்றுகளிடையே இந் நகரம் அமைந்திருப்பதால் இந் நகரம் முழுவதையும் பார்வையிட முடியவில்லை. ஆனால், இத்தாலியிலுள்ள ரோம் நகரத்திற்கு இதை ஒப்பிட்டுக் கூறலாம். ஒரு குன்றின்மீது நின்று காண்பதற்கு இந் நகரம் மிக அழகுடன் தெரிகிறது. இந் நகரத்தின் வீடுகள்தோறும் பழத் தோட்டங்கள் காணப்படுகின்றன. எங்குப் பார்த்தாலும், ஏரிகளும், கால்வாய்களும் நிரம்பி நீர்வளம் மிகுந்துள்ளது. அரண்மனைக்கு அருகில் பெரியதொரு பழத்தோட்டம் காணப்படுகிறது. இஸ்லாமிய வீரர்கள் வசிக்கும் பகுதி ஒரு சிறிய ஆற்றங்கரையில் உள்ளது. அதன் பக்கத்தில் மா, பலா, வாழை, கமுகு, எலுமிச்சை, நாரத்தை முதலிய பழமரங்கள் அடங்கிய தோட்டங்கள் காடுகளைப் போலக் காட்சியளிக்கின்றன. வெண்ணிறமான திராட்சைப் பழத் தோட்டங்களும் உள்ளன. இந் நகரத்திற்கு வேண்டிய தண்ணீர், நகரத்தின் வெளிப்புறத்திலுள்ள இரண்டு ஏரிகளிலிருந்து கொண்டுவரப்படுகிறது. இந் நகரத்தில் வாழும் மக்கள்தொகை மிக்க அதிகமானது. சரிவரக் கணக்கிட்டுக் கூறினால் பிறர் நம்ப முடியாத அளவினதாக இருக்கும். சில தெருக்களில் குதிரைப் படையும், காலாட் படையும் புகுந்து செல்ல முடியாதபடி மக்கள் நிரம்பியுள்ளனர். மக்களைப் போலவே யானைகளின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது.

இந் நகரத்தில் காணப்படும் கடைகளில் எல்லா விதமான பொருள்களும் கிடைக்கின்றன. நெல், அரிசி, கோதுமை, சோளம், நவதானியங்கள், மொச்சை, கொள் முதலிய உணவுப்

பொருள்களும், எண்ணெய் வித்துகளும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இப் பொருள்கள் நிரம்பக் கிடைப்பதோடு, விலையும் மலிவாக இருக்கிறது. கோதுமையை இஸ்லாமிய வீரர்கள் மாத்திரம் உட்கொள்கின்றனர். ஆகையால், அதற்கு அவ்வளவு கிராக்கி இல்லை. வீதிகளில் உணவுப் பண்டங்களையும், மற்றப் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் பொதி மாடுகளின் கூட்டம் நெருக்கமாக உள்ளது. அவற்றைக் கடந்து செல்வதற்கு நெடு நேரம் பிடிக்கிறது. கோழிகளும், குஞ்சுகளும் பணத்திற்கு ஐந்து விலை போகின்றன. விஜயநகரத்தின் காடுகளில் கௌதாரிகளும், மணிப்புறுக்களும் நிரம்பக் கிடைக்கின்றன. கௌதாரிகளில் மூன்று வகை யுள்ளன. வாத்துப்போல் காணப்படும் நீர்ப் பறவைகளும், நாடோடிக் கௌதாரிகளும், முயல்களும் கிடைக்கின்றன. இப் பறவைகளும், விலங்குகளும் உயிருடன் விலைக்கு விற்கப்படுகின்றன, பணத்திற்கு ஐந்து வீதம் கௌதாரிகளும், பணத்திற்கு ஒன்று வீதம் முயலும் கிடைக்கின்றன. சிறிய மணிப் புறுக்கள் பணத்திற்கு 12 அல்லது 14 வீதம் கிடைக்கின்றன. விஜயநகரத்தில் தினந்தோறும் அடிக்கப்பெறும் ஆடுகள் கணக்கற்றவையாகும். தெருக்கள் தோறும் சுத்தமான ஆட்டு இறைச்சி கிடைக்கும் கடைகள் உள்ளன. வெண்மை நிறம் பொருந்தியதும், சுத்தமானதுமாகிய பன்றிகளும், பன்றி இறைச்சியும் கிடைக்கின்றன. பன்றிகள் பணத்திற்கு ஐந்து வீதம் விலையாகின்றன. எலுமிச்சை, நாரத்தை, கத்தரி முதலிய பழ வகைகளும், காய்கறிகளும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இங்குக் கிடைக்கும் பால், எண்ணெய், தேன், வெண்ணெய் முதலிய உணவுப் பொருள்கள் மிக்க தரமுள்ளவையாகும். பால் தரும் பசுக்களும், எருமைகளும் நிரம்பக் காணப்படுகின்றன.

மாதுளை மரங்களும், திராட்சைத் தோட்டங்களும் நிறைந்து உள்ள இந் நகரத்தில் திராட்சை பணத்திற்கு மூன்று கொத்துகள் வீதமும், மாதுளம் பழங்கள் பணத்திற்குப் பத்து வீதமும் கிடைக்கின்றன.

விஜயநகரத்தின் வடக்குத் திசையில் பெரிய ஆறு ஒன்று பாய்ந்து செல்கிறது. இந்த ஆற்றில் மீன் வகைகள் அதிகமாகக் காணப்பட்டாலும் அவை மனித உணவிற்கு ஏற்றவையல்ல எனக் கூறுகின்றனர், பல சிற்றாறுகள் இந்த ஆற்றில் வந்து கூடுவதால் இது மிகப் பெரிய நதியாக விளங்குகிறது. இந்த ஆற்றின் வடகரையில் சேனகுண்டிம் (ஆனெகுந்தி) என்ற மதில் சூழ்ந்த கோட்டை ஒன்றுள்ளது. விஜயநகரம் அமைவதற்குமுன் இந்த இடமே இந் நாட்டிற்குத் தலைநகராக விளங்கியது. ஆனால்,

இப்பொழுது இதன் மக்கள் தொகை மிகவும் குறைவாக உள்ளது. இரண்டு குன்றுகளை இணைத்துக் கட்டப்பட்ட கோட்டைச் சுவர் இந் நகரத்தைப் பாதுகாக்கிறது. இந் நகரத்திற்குள் செல்வதற்கு இரண்டு நுழைவாயில்கள் உள்ளன. இக் கோட்டைக்குத் தலைவன் ஒருவன் நியமிக்கப்பட்டு விஜயநகரத்தரசனுக்கு அடங்கி ஆட்சி புரிகிறான். விஜயநகரத்திலிருந்து ஆற்றைக் கடந்து ஆனைகுந்திக்குச் செல்வதற்கு மூங்கில் பிளாச்சுகளினால் செய்யப்பட்டுத் தோல் கொண்டு மூடப்பட்ட பரிசல்களில் மக்கள் செல்கின்றனர். இதில் 15 முதல் 20 பேர் வரையில் ஏறிச் செல்லலாம். வெள்ளக் காலங்களில் மாடுகளும், குதிரைகளும் இதில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. இந்தப் பரிசல்களைத் துடுப்புகளைக் கொண்டு தள்ளும் பொழுது ஆற்றில் வளைந்து வளைந்து செல்கின்றன. தோணிகளைப் போல இவை நேராகச் செல்வது இல்லை. இந்தியாவில் உள்ள ஆறுகளைக் கடப்பதற்கு இவ் விதப் பரிசல்கள் அதிகம் உபயோகப்படுகின்றன.

நகரத்தின் ஒரு பகுதியில் ஆடு, மாடுகளின் சந்தை நடை பெறுகிறது. இங்கே ஆடு, மாடுகளை விலைக்கு விற்கவும், வாங்கவும் முடியும். இந்த ஆடு, மாடுகளும், எருமைகளும் நகரத்தைச் சுற்றியுள்ள வயல்களில் மேய்வது கண்ணுக்கினிய காட்சியாகும். சில ஆட்டுக் கடாக்களுக்கு மூக்குக் கயிறு போட்டுச் சேணம் வைத்து அதன்மீது சிறுவர்கள் ஏறிச் செல்கின்றனர்.

நகரத்தின் வடக்குப் புறத்தில் மூன்று அழகிய கோவில்கள் அமைந்துள்ளன. ஒரு கோவிலுக்கு வித்தளர் கோவில் என்றும், மற்றொன்றிற்கு ஆயிரம் ராமர் கோவில் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. மூன்றாவது கோவிலுக்கு விருபாட்சர் கோவில் என்ற பெயர் வழங்குகிறது. மூன்றாவது கோவில் கிழக்குப் பார்த்த சந்நிதியுடையது. இந்தச் சந்நிதித் தெருவில் உள்ள வீடுகளில் முன்முகப்புகளும் விமான வளைவுகளும் அமைந்து உள்ளன. மிக்க புனிதமுள்ளதாகக் கருதப்படும் இக் கோவிலுக்குப் புண்ணிய யாத்திரை செய்யும் மக்கள் அவற்றில் தங்கி இளைப்பாறிக் கொள்ளுகின்றனர். பிரயாணிகள் தங்கியிருப்பதற்குரிய உயர்ந்த இல்லங்களும், கோவிலுக்குத் தரிசனம் செய்ய வந்தால் அரசர் தங்கியிருப்பதற்குரிய மாளிகை யொன்றும், இத் தெருவில் அமைந்துள்ளன. இக் கோவிலின் கோபுர வாயிற் படிக்கு அருகில் மாதுள மரம் போன்ற ஒரு மரம் இருக்கிறது. இங்குள்ள கோபுரம் மிகுந்த உயரமாக அமைக்கப்பட்டுள்ளது. இக் கோபுரத்தில் பல உருவச் சிலைகள் அமைக்கப் பெற்றுள்ளன. அடிப் பாகத்தில் அகன்றும் உச்சியில் குறுகலாகவும் இக் கோபுரம்

அமைக்கப்பட்டுள்ளதால் மேற் பகுதியில் காணப்படும் உருவச் சிலைகள் சிறிய வகைகளாகக் காணப்படுகின்றன. கோபுர வாயிற்படியையும் திறந்த முற்றத்தையும் கடந்து மூன்றுவது வாயிலை அடைந்தால் ஒரு பெரிய மண்டபம் காணப்படுகிறது. இம் மண்டபத்தைச் சுற்றிப் பிராகாரங்கள் அமைந்துள்ளன. இம் மண்டபத்தின் மத்தியில் இலிங்கம் அமைந்துள்ளது.

கோபுர வாயிற்படியை அடுத்துள்ள முற்றத்தில் நான்கு தூண்கள் காணப்படுகின்றன. இவற்றில் இரண்டின்மீது தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. மற்ற இரண்டும் செப்புத் தகடுகளால் மூடப்பட்டுள்ளன. தங்க முலாம் பூசப்பட்டுள்ள கொடிமரம் கிருஷ்ண தேவராயரால் அமைக்கப்பட்டது என்றும், மற்றவை அவருடைய முன்னோர்களால் அமைக்கப்பட்டன என்றும் மக்கள் கூறுவர். இக் கோவிலில் இலிங்கம் அமைந்திருக்கும் கரு வறையின் விமானமும் செப்புத் தகடுகளால் மூடப்பட்டுத் தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. மண்டபத்தின் மேலே உள்ள கைப் பிடிச் சுவர்களில் காணப்படும் நந்தி உருவங்களின்மீது செப்புத் தகடு வேய்ந்து முலாம் பூசப்பட்டுள்ளது. கருவறையின் நுழை வாயிலிலும், சுவரிலும் அகல் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை சுமார் 2,500க்கு மேல் இருக்கும். இந்த விளக்குகளில் எண்ணெய் ஊற்றி இரவு முழுவதும் எரிய விடுவ தாகக் கூறுகின்றனர். கருவறையின் உட்பகுதியில் இரண்டு கதவு களுக்குப்பின் இலிங்கம் இருக்கிறது. இலிங்கம் அமைந்திருக்கும் இடம் மிக இருட்டாக இருப்பதால் விளக்கேற்றிக் கொண்டுதான் உட்செல்ல முடியும். இலிங்கம் வைக்கப்பட்டுள்ள இடம் ஓர் இரகசிய அறைபோல் இருக்கிறது.

கருவறையின் முதல் வாயிற்படியில் காவல்காரர்கள் உள்ளனர். இக் கோவிலில் வழிபாடு செய்யும் அந்தணர்களைத் தவிர மற்றவர்களை அனுமதிக்க மறுத்து விடுகின்றனர். நான் அவர்களுக்கு இனம் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தேன். அர்த்த மண்டபத்தில் பல சிறிய உருவச் சிலைகள் உள்ளன. கரு வறையின் பிராகாரத்தில் மகிட சம்ஹாரி என்ற துர்க்கையின் உருவச்சிலை காணப்படுகிறது. துர்க்கையின் உருவத்தின்முன் நெய்விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. பிராகாரத்தில் பல சிறிய கோவில்கள் காணப்படுகின்றன. மேலே கூறப்பட்ட மற்ற இரண்டு கோவில்களும் இதே முறையில் அமைக்கப்பட்டிருந் தாலும் விருபாட்சர் கோவில் மிகப் புராதனமானது என்றும் தெய்வீகம் உடைய தென்றும் மக்கள் கூறுகின்றனர். கோவில் தனைச் சுற்றியுள்ள இடங்களில் நந்தவனங்கள் அமைக்கப்பட்டு

உள்ளன. இத் தோட்டங்களில் மலர்ச் செடிகளையும், காய்கறிச் செடிகளையும் பயிரிட்டுக் கோவிலில் பணிபுரியும் அந்தணர்கள் பயனடைகின்றனர். மேற்கூறப்பட்ட கோவில்களில் தேர்த் திருவிழாக்களும் நடைபெற்றன. நான் விஜயநகரத்திற்குச் சென்ற பொழுது தேர்த் திருவிழா ஒன்றும் நடைபெற வில்லை. ஆகையால், அவற்றைப்பற்றி நான் கூற விரும்ப வில்லை.

விஜயநகரத்தில் நடைபெற்ற பண்டிகைகள் :

கிறித்தவர்களைப் போலவே இந்துக்களும் பல பண்டிகைகளையும் விரத நாள்களையும் கொண்டாடுகின்றனர். சில விரத நாள்களில் பகல் முழுவதும் எவ்வித உணவும் கொள்ளாமல் இருந்து, நடு இரவில் மாத்திரம் உணவு கொள்ளுகின்றனர். திருவிழா அல்லது பண்டிகை நாள்களில் விஜயநகரத்தரசர் புதிய நகரமாகிய நாகலாபுரத்திலிருந்து விஜயநகரத்திற்கு வந்து சேரும் பொழுது மகா நோன்புத் திருவிழாக் கொண்டாடுவதும் மக்கள் திரண்டு அதைக் காண்பதும் வழக்கம். இந்தத் திருவிழாவின் பொழுது மாகாணங்களின் தலைவர்களும் நாயக்கன்மார்களும், சிற்றரசர்களும் தலைநகரத்தில் வந்து கூடுவர். பேரரசின் பல பகுதிகளில் வாழும் ஆடல் மகளிரும் விஜயநகரத்திற்கு வந்து சேருவர். பேரரசின் எல்லைப் புறங்களில் அன்னிய நாட்டரசர்கள் படையெடுக்காதவாறு காவல் புரிந்த எல்லைப்புறத் தலைவர்களின் பிரதிநிதிகளே மேற்படி திருவிழாக் காலங்களில் விஜயநகரத்திற்கு வருவது வழக்கம்.

மகரநோன்புத் திருவிழா ஆண்டுதோறும் செப்டம்பர் மீ 12ஆம் தேதியிலிருந்து ஒன்பது நாள்களுக்குக் கொண்டாடப் படுவது வழக்கம். இத் திருவிழா விஜயநகர அரண்மனையில் மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விஜயநகர அரசர்களுடைய அரண்மனையின் அமைப்பைப்பற்றி இப்பொழுது நாம் அறிந்து கொள்ள வேண்டும், அரண்மனையின் நுழை வாயிலில் கோபுரம் போன்ற கட்டடம் இருந்தது. அதற்கு எதிரில் திறந்த சமவெளியிருந்தது. கோபுரத்திலிருந்து அரண்மனையின் மதிற் சுவர் தொடங்கி அதைச் சூழ்ந்து கட்டப்பட்டிருந்தது. அதன் நுழைவாயிலில் கையில் பிரம்புகளோடு தோலினாலாய சவுக்குகளை வைத்துக் கொண்டு, காவற்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். காவல்காரர்களின் தலைவனுடைய அனுமதி பெற்றவர்களையும், நாயக்கன்மார்கள், பிரபுக்கள் முதலியவர்களையும் தவிர மற்றவர்களை அவர்கள் அரண்மனைக்குள் அனுமதிப்பதில்லை, முன்கூறப்பட்ட வாயிலின் வழியாக அரண்மனைக்குள் நுழைந்ததும் இன்னொரு திறந்த சமவெளி காணப்பட்டது.

பின்னும் ஒரு நுழை வாயிலில் காவற்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். இரண்டாவது வாயிலைக் கடந்ததும் மற்றும் ஒரு திறந்த வெளியிடத்தைச் சுற்றித் தாழ்வாரங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. இந்தத் தாழ்வாரங்களில், மேற் கூறப்பட்ட திருவிழாவைக் காண வந்த பிரபுக்களும், பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர். திறந்த வெளியின் இடப்பக்கத்தில் ஒரு மாடிக் கட்டடம் காணப்பெற்றது. யானையின் உருவங்கள் அமைக்கப்பட்ட தூண்களை நிறுத்தி மேற்கண்ட மாடிக் கட்டடம் கட்டப்பட்டிருந்தது. கருங்கற்களால் ஆகிய படிக்கட்டுகள் மூலம் இக் கட்டடத்தின் மாடிக்குச் சென்று, மக்கள் திருவிழாவைக் கண்டு களித்தனர். கிருஷ்ண தேவராயர் கலிங்க நாட்டரசரை வென்றபின் இக் கட்டடம் அமைக்கப் பெற்றமையால் இதற்கு 'வெற்றி மண்டபம்' என்ற பெயர் வழங்கியது. இவ் வெற்றி மண்டபத்தின் வலப் பக்கத்தில் உயரமான மரங்களை நட்டு மக்கள் அமர்ந்து திருவிழாவைக் காண்பதற்கு வசதியான இருக்கைகள் அமைக்கப் பட்டிருந்தன. அந்த இருக்கைகளின் மீது செம்மை, பச்சை நிறம் கொண்ட அழகிய சீலைகள் கட்டப் பட்டிருந்தன. அடியிலிருந்து உச்சி வரையில் இவை அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. இந் நாட்டில் கம்பளித் துணிகள் கிடைப்பது அருமையாகையால் இத் துணிகள் எல்லாம் பருத்திப் பஞ்சினால் நெய்யப்பட்டவையே யாகும். மரங்களை நட்டும், கட்டியும் அமைக்கப்பட்ட இருக்கைகள் திருவிழாவிற்காக அமைக்கப்பட்டவையே ஆகும். இவ் விதம் பதினெரு இருக்கைகள் அமைக்கப் பட்டிருந்தன. இருக்கைகளுக்கு எதிரில் ஒரு வட்ட வடிவமான இடத்தில் ஆடைகளால் அலங்காரம் செய்து கொண்டு பல நடன மாதர்கள் நின்று கொண்டிருந்தனர்.

வெற்றி மண்டபத்திற்கு எதிரே வேறு இரண்டு மண்டபங்களும் காணப்பட்டன, இம் மண்டபங்களின் மீது ஏறுவதற்குப் படிக்கட்டுகள் அமைந்திருந்தன. இம் மண்டபங்களைச் சுற்றி விலையுயர்ந்ததும் பின்னல் வேலைப்பாடுகள் கொண்டதுமான துணிகள் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. இம் மண்டபங்களில் ஒன்றன்மீது ஒன்றுக இரு மேடைகள் அமைந்திருந்தன. அரசருடைய நெருங்கிய நண்பர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் இம் மேடைகளின்மீது அமர்ந்து திருவிழாக் காட்சி கண்டனர். மேற்பகுதியில் இருந்த மேடையில் கிறிஸ்டோவோவும் அவருடன் போந்தவர்களும் அமர்ந்து கொள்ளும்படி வசதிகள் செய்யப்பட்டிருந்தன. வெற்றி மண்டபத்திலிருந்து அரண்மனைக்குள் செல்வதற்கும், அங்கிருந்து உவளகத்திற்குச் செல்வதற்கும் நுழைவாயில்கள் இருந்தன.

அரண்மனைக்குள் முப்பத்துநான்கு தெருக்கள் இருந்தன. இவற்றில் அமைந்திருந்த இல்லங்களில் உவளகத்தைச் சேர்ந்த அரசிகளும், அவர்களுக்குக் குற்றேவல் புரிந்த பணிப் பெண்களும் வாழ்ந்தனர் எனக் கேள்விப் பட்டேன்.

வெற்றி மண்டபத்தின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த மேடையின்மீது நாற்சதுர வடிவில் அமைக்கப்பட்டு, வளைந்த விதானத்துடன் கூடியதும், அமர்வதற்கு வசதி யுள்ளதுமாகிய அரியாசனம் வைக்கப்பட்டிருந்தது. விதானத்தின்மீது பட்டுத் துணிகள் கட்டப்பட்டிருந்தன. அரியாசனத்தின் கால்களில் சிங்க உருவங்கள் இருந்தன. சிங்க உருவங்கள் தங்கத்தினால் செய்யப் பெற்றிருந்தன. அரியாசனத்தின் பக்கங்களில் முத்துகளும் நவ ரத்தினங்களும் வைத்து இழைக்கப் பெற்றிருந்தன. இந்த அரியா சனத்தில் தங்கத்தினாலாகிய உருவமொன்று வைக்கப்பட்டு மலர் கள் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. அந்தத் தங்க விக்கிரகத்திற்குப் பக்கத்தில் நவரத்தினங்களும், முத்துகளும் வைத்து அலங்கரிக்கப்பட்ட தலைப்பாகை ஒன்று காணப்பட்டது. தலைப்பாகையின் முனைப்பில் கொட்டைப் பாக்கு அளவுள்ள வைரக்கல் பதிக்கப் பட்டிருந்தது. இன்னொரு பக்கத்தில் முத்து களும், நவரத்தினங்களும் வைத்து இழைக்கப் பெற்ற கால் சிலம்பு ஒன்றும் இருந்தது. இவை எல்லாம் விஜயநகர அரசாங்கத்தைச் சேர்ந்த அணிகலன்கள் ஆகும். மேற்கூறப் பெற்ற அரியாசனத்தின் முன்னர் அரசர் பெருமான் அமர்வதற் குரிய மெத்தை வைத்துத் தைக்கப் பெறற ஆசனங்கள் இருந்தன.

திருவிழா நடந்த முறைமை: விழாவின் தொடக்கத் தினத் தன்று காலையில் விஜயநகர அரசர், தங்க விக்கிரகம் வைக்கப் பட்ட வெற்றி மண்டபத்திற்கு வருகிறார். அரசர் திருமுன்னர் விக்கிரகத்திற்கு வழிபாடுகள் செய்கின்றனர். வெற்றி மண்டபத் திற்கு எதிரில் உள்ள மைதானத்தில் பல ஆடல் மகளிர் பரத நாட்டியமாடுகின்றனர். மைதானத்தைச் சுற்றியுள்ள தாழ்வாரங் களில் விழாவைக் காணவந்த பெருமக்கள் அமர்ந்துள்ளனர். வெற்றி மண்டபத்தின் முன்னர் அமைந்துள்ள மேடை ஒன்றன்மீது பதினெரு குதிரைகளும் அவற்றிற்குப்பின் நான்கு அழகிய யானை களும் நன்கு அலங்காரம் செய்யப்பட்டு நின்று கொண்டிருக் கின்றன. வெற்றி மண்டபத்திலிருந்து அரசர் வெளியே கிளம்பும் பொழுது ஓர் அந்தணர் வெண்மையான ரோஜாப்பூக்களை ஒரு கூடையில் கொண்டுவந்து வைக்கிறார். இப் பூக்களில் மூன்று கையளவு எடுத்து மூன்று முறை எதிரில் நிற்கும் குதிரைகளின் மீது தூவுகிறார். பின்னர், குதிரைகளின்மீது பன்னீர் கலந்த

சந்தனம் தெளிக்கப் படுகிறது; வாசனை ஊட்டப்படுகின்றது; பின்னர், யானைகளுக்கும் இவ் விதம் செய்யப் படுகிறது.

அரசர் இவ் விதமாகச் செய்த பிறகு, ஓர் அந்தணர் மலர்கள் நிறைந்த கூடையை எடுத்துக் கொண்டு போய் ஒவ்வொரு குதிரையின் தலையிலும், ஒரு மலரை வைத்துவிட்டுத் திரும்புகிறார். பின்னர், விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குள் அந்த அந்தணர் சென்றவுடன் வெற்றி மண்டபத்தைச் சுற்றித் தொங்க விடப்பட்டுள்ள திரைச் சீலைகள் சுருட்டப் படுகின்றன. அரசர் தம்முடைய இருக்கையில் அமர்ந்து, விக்கிரகத்தின் எதிரே 24 எருமைகளும், 50 ஆடுகளும் பலியிடப்படும் விதத்தைச் சிறிது மன வெறுப்புடன் காண்கிறார். இந்த எருமைகளையும், ஆடுகளையும் பெரியதொரு கொடுவாள் கொண்டு குறிதவறுமல் கொன்று குவிக்கின்றனர். இந்தப் பலியீட்டுத் திருவிழாவிற்குப் பிறகு பல அந்தணர்களுக்குமுன் அரசர் செல்லும் பொழுது அவர்கள் பன்னிரண்டு மலர்களை எடுத்து அரசர்மீது தூவி ஆசீர்வதிக்கின்றனர். பின்னர் தம்முடைய தலைப்பாகையை எடுத்துவிட்டு விக்கிரகம் இருக்கும் இடத்திற்குச் சென்று அதன் முன்னர் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறார். பிறகு ஒரு தோட்டத்திற்குள் சென்று அங்குக் கொழுந்து விட்டு எரிகிற தீயின்மீது பொடி செய்யப்பட்ட நறுமணப் பொருள்களைத் தூவி விட்டு மீண்டும் குதிரைகளும், யானைகளும் நின்று கொண்டு இருக்கும் இடத்திற்குத் திரும்பி வருகிறார்.

முன்னர், தாம் அமர்ந்திருந்த ஆசனத்தில் இருக்கும் பொழுது பேரரசின் பல பகுதிகளிலிருந்து வந்த மகா மண்டலீசுவரர்களும், நாயக்கன்மார்களும் அரசருக்கு வணக்கம்செலுத்துகின்றனர்; அரசருக்குத் திறைப் பொருள்களையோ, வேறு விதப் பரிசுகளையோ அளிக்க விரும்புகிறவர்கள் இப்பொழுது அவற்றை அளிக்கின்றனர். பின்னர் தம்முடைய அரண்மனைக்குள் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளுகிறார். ஆடல் மகளிரும், பரதநாட்டியம் ஆடவல்ல மற்றவர்களும் விக்கிரகத்தின் முன்னர்ச் சிறிது நேரம் நாட்டியம் ஆடிக் கொண்டிருக்கின்றனர். ஒன்பது நாள்கள் நடைபெறும் இத் திருவிழாவில் ஒவ்வொரு நாளும் மேற்கூறிய வாறு சடங்குகள் நடைபெற்றன.

அரண்மனையில் நடைபெற்ற மல்யுத்தங்கள், யானைப்போர் முதலியன :

பிற்பகல் மூன்று மணியளவில் அரண்மனையில் இருக்கும் மைதானத்தில் மக்கள் கூடுகின்றனர். மல்யுத்தம் செய்பவர்களும் யானைப் போரில் ஈடுபடுகிறவர்களும், பரத நாட்டியம்

செய்கிறவர்களும் அனுமதி பெற்று உள்ளே செல்லுகின்றனர். யானைகள் அழகான துணிகளைப் போட்டு அலங்காரம் செய்யப் பட்டுள்ளன. அவற்றின்மீது மெத்தை வைத்துத் தைக்கப்பட்ட சட்டைகளை அணிந்து கொண்ட வீரர்கள் கத்தி, கேடயம், ஈட்டி முதலிய ஆயுதங்களோடு அமர்ந்திருக்கின்றனர். முதலில் ஆடல் மகளிர்களுடைய மல்யுத்தம் அரங்கில் நடைபெறுகிறது. அரங்கைச் சூழ்ந்து அரசாங்க அலுவலாளர்களும், அரச குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களும் அமர்ந்துள்ளனர். ஆண் மல்லர்கள் தனியாகவும், யானைப்போர் நடத்துகின்றவர்கள் மற்றொரு அரங்கிலும் தங்களுடைய திறமைகளைக் காட்டிப் போர் செய்தனர். இந்த விளையாட்டரங்குகள் தனித்தனியாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அரசாங்கத்தால் அழைக்கப்பட்டவர்கள் தவிர, மற்றவர்கள் அவற்றிற்குள் செல்ல முடியாது. கிருஷ்ண தேவரைத் தம்முடைய மகன் போலப் பாதுகாத்து அரசுரிமை யடையும்படி செய்த சாளுவதிம்மர் (அப்பாஜி) விளையாட்டு அரங்கில் முதன்முதலாக வந்து அமருகிறார். அவரை 'அப்பாஜி' என்ற செல்லப் பெயரால் கிருஷ்ண தேவராயர் அழைப்பது வழக்கம். நவராத்திரி உற்சவமும், மல்யுத்தங்களும், யானைப் போர்களும் அவருடைய மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

விளையாட்டுகள் நடைபெறுமிடத்தில் அமைந்துள்ள மேடை யில் அரசர் வந்து அமர்ந்தவுடன் மல்யுத்த வீரர்கள் மல்யுத்த அரங்கில் சென்று உட்காருகின்றனர். அரசருக்குப் பக்கத்தில் அவருக்கு நெருங்கிய உறவினர்கள் அமர்கின்றனர். ஸ்ரீரங்கப் பட்டணத்து அரசனுகிய குமார வீரய்யா என்பவர் கிருஷ்ணதேவ ராயருடைய மாமனுராகையால் அவரோடு சமமான ஆசனத்தில் அமர்ந்தார். மற்றையோர் இவ் விருவருக்கும் பின்னர் அமர்ந்திருந்தனர். வெண்மைநிறம் பொருந்திய துணியில் சரிகைப்பூ வேலைகள் நிரம்பிய ஆடைகளை அணிந்து கொண்டும், பல அணிகலன்களைப் புனைந்து கொண்டும் அரசர் அமர்ந் திருந்தார். அரசருக்குப்பின் தாம்பூலப் பெட்டியை வைத்துக் கொண்டு அடப்பமும், வாள், கேடயங்களும் மற்ற அரச சின்னங் களும் பிடித்துக் கொண்டு மற்ற ஏவலாளர்களும் நிற்கின்றனர். தெய்வங்களுக்குக் கவரி கொண்டு வீசுவது போன்று அரசருக்குக் கவரி வீசும் ஏவலாளர்களும் நின்று கொண்டிருந்தனர்.

விளையாட்டு அரங்குகளுக்கு எதிரே அரசர் வந்து அமர்ந்த பின், வெளியில் காத்துக் கொண்டிருந்த மாகாணத் தலைவர்களும் நாயக்கன்மார்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும் ஒவ்வொரு வராக வந்து வணக்கம் செய்த பிறகு தங்களுடைய இருக்கைகளில் அமர்ந்தனர். பின்னர், கேடயங்களும், ஈட்டிகளும் தாங்கிய

வீரர்களும், அவர்களுடைய தலைவர்களும், விற்போர் வீரர்களும் அவர்களுடைய தலைவர்களும் வந்து அரசருக்குப் பாதுகாவலாக நிற்கின்றனர். இதற்குப் பின்னர்தான் பரத நாட்டியத்தில் வல்ல ஆடல்மகளிர் தங்களுடைய நாட்டியத்தைத் தொடங்கினர், ஆடல்மகளிர் அணிந்திருந்த அணிகலன்கள் பல திறப்பட்டவையாகும், அவர்களுடைய கால்களில் சிலம்புகள் கொஞ்சின ; கழுத்திலும், மார்பிலும் முத்துவடங்களும், ஆரங்களும் தொங்கின ; இடுப்பில் ஒட்டியாணமும், கைகளில் வங்கிகளும் மின்னொளி வீசின. இவர்களுக்கு இவ் விதச் செல்வமும், ஆபரணங்களும் எவ்விதம் கிடைத்தன என்று நாம் வியப்புற வேண்டும். பலர் பல்லக்குகளில் சுமந்து செல்வதற்குரிய செல்வ வளம் படைத்திருந்தனர். ஓரிலட்சம் வராகனுக்குமேல் செல்வ முடைய ஆடல் மகள் ஒருத்தி விஜயநகரத்தில் இருந்ததாகவும் நான் கேள்விப்பட்டேன். இந்த ஆடலழகிகளை நான் நேரில் கண்ட பொழுது, இச் செய்தி உண்மையானதென நம்புகிறேன்.

பரத நாட்டியத்திற்குப் பிறகு மல்யுத்த வீரர்கள் தங்களுடைய திறமையைக் காட்ட முன்வந்தனர். மேலை நாட்டு மல்யுத்த முறைக்கும் விஜயநகர மல்யுத்தத்திற்கும் பல வேறு பாடுகள் காணப்பட்டன. மல்யுத்தத்தில் எதிரிகளுடைய பற்களும், கண்களும் பாழடைந்து விடும்படியும் முகத்தில் மாறு பாடு தோன்றும்படியும் குத்துகள் கொடுக்கப்படுகின்றன. தாங்கள் பெற்ற அடிகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் மெய் மறந்து அரங்கிலிருந்து பிறரால் சுமந்து செல்லும்படியும் மல்யுத்தம் நடைபெற்றது. ஒருவரை யொருவர் கீழே தள்ளி முதுகில் மண்படும்படியும் மல்யுத்தம் செய்கின்றனர். மல்யுத்தம் நடைபெறும் பொழுது, வெற்றி தோல்வி பற்றித் தீர்ப்புக் கூறுவதற்கு நடுவர்களும் இருந்தனர்.

பகல் முழுவதும் பரதநாட்டியப் போட்டியும், மல்யுத்தப் போட்டியும் நடைபெறுகின்றன. இரவானவுடன் தீவட்டிகள் கொளுத்தப்பட விளையாட்டரங்குகள் முழுவதும் பகல் போல் பிரகாசம் பொருந்தியுள்ளது. கோட்டைச் சுவர்களின்மீதும், கட்டடங்களின் கைப்பிடிச் சுவர்களின்மீதும் தீவட்டிகளும், விளக்குகளும் ஒளி வீசுகின்றன. அரசன் அமர்ந்திருக்கும் இடத்தில் தீவட்டிகளும், கைவிளக்குகளும் நிரம்பவும் காணப்படுகின்றன. இப்பொழுது பலவிதமான வாண வேடிக்கைகள் தொடங்கப் பட்டுப் பலவித வண்ணங்கள் நிரம்பிய மத்தாப்புகளும். வெடி வாணங்களும் ஆகாயத்தில் வெடிக்கின்றன. அவை மக்களுடைய கண்களைக் கவரும் வகையில் நடைபெறுகின்றன. வாண

வேடிக்கைக்குப் பிறகு குதிரைவீரர்கள் குதிரைகளின் மேலமர்ந்து வேடிக்கைப் போர் புரிந்தனர். சில குதிரை வீரர்கள் வலைகளை வீசி அரங்கில் அமர்ந்திருந்த மக்களை மீன் பிடிப்பது போல் பிடித்து வேடிக்கை காட்டினர். இதன் பிறகு வானத்தில் சென்று வெடிக்கும் கைவெடிகளும், அதிர் வெடிகளும் வெடிக்கப்பட்டன.

வாண வேடிக்கைகள் முடிந்த பிறகு பேரரசின் எல்லைப் புறங்களில் காவல் காத்து அன்னிய அரசர்களோடு போர் புரிந்து வெற்றி பெற்ற தலைவர்களுடைய பவனி தொடங்கியது. அவர்கள் போர் புரியும் பொழுது ஊர்ந்து சென்ற இரதங்களின் ஊர்வலம் ஆரம்பமாயிற்று. முதலில் சாளுவ திம்மர் ஏறிச் சென்ற தேரும் அதைத் தொடர்ந்து மற்றத் தலைவர்களுடைய வாகனங்களும் வரிசையாகத் தொடர்ந்தன. சில இரதங்களின்மீது பலவிதமான சித்திரங்கள் தீட்டப் பெற்றிருந்தன. சில இரதங்கள் படிப்படியாக அமைக்கப் பட்டிருந்தன. இந்த இரதங்கள் எல்லாம் அரசர் அமர்ந்திருந்த இடத்திற்கு முன் பவனியாகச் சென்றன. இரதங்களின் ஊர்வலம் முடிந்த பிறகு அரண்மனையில் உள்ள குதிரைகளின் ஊர்வலம் தொடங்கியது. அரண்மனையிலிருந்த குதிரைகளின்மீது விலையுயர்ந்த பட்டாடைகள் சேணங்களாகப் போடப்பட்டுக் குதிரைகளின் நெற்றியிலும், தலையுச்சியிலும், பலவித வண்ணப் பூக்கள் செருகப் பட்டிருந்தன. குதிரைகளின் கடிவாளங்கள் முலாம் பூசப்பட்டிருந்தன. இந்தக் குதிரை வரிசைக்குமுன் மற்றக் குதிரைகளைவிட மிகவிமரிசையாக அலங்கரிக்கப்பட்ட ஒரு குதிரையைக் குதிரைப்படைத் தலைவர் நடத்திச் செல்லுகிறார். அதன் இரு பக்கங்களிலும் அரசருடைய வெண் கொற்றக்குடை பிடித்துச் செல்லப்படுகிறது. அக் குதிரைக்கு முன் இன்னொரு குதிரை இங்கும் அங்கும் திரும்பிப் பாய்ந்து கொண்டும், கனைத்துக் கொண்டும் செல்கிறது. வெண்கொற்றக் குடை பிடித்து நடத்திச் செல்லப்படும் குதிரையின்மீது அமர்ந்து தான் விஜயநகர அரசர்கள் அரியணையில் அமரும் பொழுது சூளுறவு கொள்வது மரபு. குதிரைமீது உட்கார்ந்து சூளுறவு எடுத்துக் கொள்ள விரும்பாத அரசர்கள் யானைமீது அமர்ந்து சூளுறவு உரைப்பது வழக்கம். இந்த யானையும் அரசாங்கத்தால் கௌரவமாக நடத்தப் பெறுகிறது.

மேற்கூறப் பெற்ற முறையில் பவனி சென்ற குதிரைகள் விளையாட்டரங்கை ஒரு முறை சுற்றி வந்து, அரங்கின் நடுவில் ஒன்றன்பின் ஒன்றாக ஐந்து அல்லது ஆறு வரிசைகளில் நிற்கின்றன. அரசர் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு எதிரில் இவ் விதம் நிற்கின்றன. மக்கள் அமர்ந்திருக்கும் அரங்கிற்கும்

இக் குதிரை வரிசைகள் நிற்கும் இடத்திற்கும் பெரிய இடைவெளி உள்ளது. பின்னர், அரண்மனையில் உள்ள புரோகிதர்களில் ஒழுக்கமும், கல்வியும் நிறைந்த ஒருவர் ஒரு தட்டில் தேங்காய், பழம், அரிசி, மலர்கள் முதலியவற்றோடு குதிரை வரிசைகளை நோக்கிச் செல்லுகிறார். இன்னொரு புரோகிதர் கையில் நீர்க்குடம் ஒன்றைத் தூக்கிச் செல்லுகிறார். இவ் விருவரும் குதிரைகளின் மீது தண்ணீர் தெளித்துப் பின் மலர்கள் கலந்த அரிசியைத் தெளிக்கின்றனர்; குதிரை வரிசைகளை மூன்று முறை சுற்றி வந்து இவ் விதம் செய்கின்றனர்.

பெண்மக்களின் பவனி :

மேற்கூறப் பெற்ற அசுவ வணக்கத்திற்குப் பிறகு அரண்மனையின் உவளகத்திலிருந்து இருபத்தைந்து அல்லது முப்பது காவற்காரப் பெண்கள் கைகளில் பிரம்புகளையும் தோள்களில் சவக்குப் பைகளையும் கொண்டு விளையாட்டு அரங்கத்தில் நுழைகின்றனர். அவர்களைத் தொடர்ந்து ஆண்மை நீக்கப்பெற்ற ஆடவர் சிலரும் வருகின்றனர். இவர்களை யடுத்து மேளம், மத்தளம், ஊதுகுழல் முதலிய இசைக் கருவிகளை முழக்கிக் கொண்டு பல பெண்கள் வருகின்றனர். இவர்களைத் தொடர்ந்து கையில்வெள்ளிப் பிரம்புகளை வீசிக்கொண்டு இருபது காவற்காரப் பெண்கள் வருகின்றனர். இறுதியாகப் பெண்ணரசிகளின் பவனி தொடங்குகிறது. இப் பவனியில் கலந்து கொள்ளும் பெண்கள் உயர்ந்த பட்டாடைகளை அணிந்துள்ளனர். தலையில் அணிந்து இருக்கும் குல்லாய்கள் பெரிய முத்துகளால் அலங்கரிக்கப்பட்டு உள்ளன. இவர்களுடைய கழுத்தில் காணப்படும் அணிகளில் முத்துகளும், நவரத்தினங்களும் வைத்து இழைக்கப்பட்டுள்ளன. தோள்களிலிருந்து முத்துவடங்கள் தொங்குகின்றன. முன் கைகளில் வளையல்களும், கடகங்களும் காணப்படுகின்றன. இடுப்பில் கல்லிழைக்கப்பட்ட ஒட்டியாணங்கள் உள்ளன. ஒட்டியாணங்களிலிருந்து முத்துச்சரங்கள் முழங்கால் வரையில் தொங்குகின்றன. கணைக்கால்களில் பல அணிகளும், கால்களில் சிலம்புகளும் காணப்பெற்றன. சிலம்புகள் மற்ற அணிகலன்களை விட விலையுயர்ந்தனவாகத் தோன்றின. ஒவ்வொரு பெண் மணியும் பொற்செம்பு ஒன்றில் நீரை முகந்து கையில் கொண்டு வந்தனள். இந்தச் செம்புகள் கெண்டிபோல் அமைந்திருந்தன. பதினைறு வயதிற்கு மேற்பட்டும் இருபது வயதிற்கு உட்பட்டும் இருந்த சுமார் அறுபது பெண்கள், அழகு தெய்வங்கள் பவனி வருவது போல் வந்தனர். இவர்கள் அணிந்திருந்த அணிகளின் விலைமதிப்பை அளவிட்டுரைக்க என்னால் முடியாது. நகைகளின் சுமையைத் தாங்க முடியாத கொடிபோன்ற சில பெண்கள்

தடுமாறி விழுந்தபோது பக்கத்தில் வந்தவர்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டனர்.

வரிசையாகப் பவனி வந்த இப் பெண்மணிகள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குதிரை வரிசைகளைச் சுற்றி மும்முறை வலம் வந்து பின்னர் அரண்மனைக்குள் சென்றனர். பவனியில் வந்த பெண்கள் விஜயநகரத்து அரசிகளின் தாதிகள் என்று நான் கேள்விப்பட்டேன். ஒவ்வோர் அரசிக்கும் இவ் விதத் தாதிகள் உண்டென்றும், நவராத்திரியாகிய ஒன்பது நாள்களிலும் ஒவ்வோர் அரசியினுடைய தாதிகள் குதிரை வரிசைகளைச் சுற்றி வலம் வருவது வழக்கம் என்றும், நான் அறிந்துகொண்டேன். அரண்மனை உவளகப் பெண்டிர் எவ் விதச் செல்வச் சிறப்புடன் வாழ்ந்தனர் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். பெண் பவனி முடிந்த பிறகு குதிரைகள் அவ் விடத்தை விட்டு அகற்றப் பட்டுப் பின்னர் யானைகளின் பவனி தொடங்குகிறது. யானை களும் அரசருக்கு மரியாதை செய்து விட்டு அவ் விடத்தை விட்டு அகன்று விடுகின்றன. வெற்றி மண்டபத்திலிருந்து கொண்டு வந்த விக்கிரகத்தை மீண்டும் வெற்றி மண்டபத்திற்கு அந்தணர் கள் தூக்கிச் செல்கின்றனர். இப் பொழுது அரசரும் வெற்றி மண்டபத்திற்குச் சென்று விக்கிரகத்திற்கு வணக்கம் செலுத்து கிறார். பின்னர் விலங்குகள் பலியிடப்படுகின்றன. இந்த ஒன்பது நாள்களிலும் விஜயநகரத்தரசர் விரதமாக இருந்து நடுநிசியில் மாத்திரம் உணவு உட்கொள்ளுகிறார்.

மேற் கூறப்பட்டவாறு கொண்டாடப்பட்ட நவராத்திரி விழாவின் இறுதி நாளன்று 250 எருமைகளும், 450 ஆடுகளும் பலியாக இடப் பெற்றன.

விஜயநகரச் சேனைகளை அரசர் பார்வை யிடுதல் :

மேலே கூறப்பட்டவாறு வழிபாடுகளும், விளையாட்டுகளும் நடைபெற்ற பிறகு விஜயநகரத்து அரசர் தம்முடைய சேனை களைப் பார்வையிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. விஜயநகரத்தி லிருந்து ஒரு லீக் (Leaque) தூரத்திற்கு அப்பால் உள்ள ஓரிடத்தில், மெக்கா நகரத்து வெல்வெட் துணி கொண்டு அமைக்கப்பட்ட கூடாரம் ஒன்றை அடிக்கும்படி ஆணையிடுகிறார். நவராத்திரி உற்சவம் கொண்டாடப்படுவதற்கு முக்கியமான விக்கிரகம் இந்தக் கூடாரத்தில் கொண்டு வந்து வைக்கப்படு கிறது. இந்தக் கூடாரம் அமைக்கப்பட்ட இடத்திலிருந்து விஜய நகரத்து அரண்மனை வரையில் உள்ள இடங்களில் பேரரசின் சேனைத் தலைவர்களும், தண்ணயக்கர்களும் தங்களுடைய

வரிசைக்கு ஏற்றபடி படை வீரர்களை நிறுத்தி வைக்கின்றனர். இடத்திற்கு ஏற்றாற் போல் இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் போர் வீரர்கள் நின்று கொண்டிருக்கின்றனர். ஏரிகளுக் கருகில் உள்ள கரைகளிலும் போர் வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர். பெருவழியின் குறுகலான இடங்களில் வீரர்கள் காணப்பட வில்லை. குன்றுகளின் சரிவுகளிலும், மைதானங்களிலும் போர் வீரர்கள் நின்று கொண்டிருந்தபடியால் எங்கும் சேனை வீரர் மயமாகக் காணப்பட்டது. பின்பக்கத்தில் யானைகளும், அவற்றிற்கு அடுத்தாற் போல் குதிரைகளும், மூன்றுவது வரிசை யில் காலாட் படைகளும் நின்று கொண்டிருந்தன. நகரத்திற்குள் இருந்த வீரர்களைக் கழிகளை நாட்டி அடைப்பு அடைத்துத் தெருக் களை அடைத்து விடாமல் தடுக்க அவர்களுடைய தலைவர்கள் போர் வீரர்களை நிறுத்தி வைத்தனர்.

மேற் கூறப்பட்ட கரி, பரி, காலாட் படைகள் எவ்விதமான ஆடைகளையும், ஆயுதங்களையும் கொண்டிருந்தனர் என்று நாம் காண வேண்டும். குதிரைப் படைகளின்மீது அணிமணிகள் காணப்பட்டன. குதிரைகளின் நெற்றியில் காணப்பட்ட பட்டயங்கள் வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தன. சில பட்டயங்கள் செப்புத் தகட்டினால் செய்யப்பட்டு முலாம் பூசப் பட்டிருந்தன. கடிவாளங்களும், தலைக் கயிறுகளும் பலவித வண்ணங்கள் கொண்ட பட்டுநூல் கொண்டு முறுக்கப்பட்டு இருந்தன. குதிரைகளின்மீது போடப்பட்ட துணிகள் பட்டு, சாடின், தமாஸ்க் முதலியவைகளால் ஆக்கப்பட்டுச் சீனா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட சரிகைப்பூ வேலையுடன் விளங்கின. குதிரை வீரர்கள் இக் குதிரைகளின்மீது உட்கார்ந்திருந்தனர். சில குதிரைகளின் நெற்றிப் பட்டயங் களில் நாகப் பாம்பு, சிங்கம், புலி முதலிய விலங்குகளின் உருவங்கள் மிக்க திறமையுடன் வரையப்பட்டு இருந்தன. உள்ளே பஞ்சு வைத்துத் தைக்கப்பட்ட தோல்களினாலாய சட்டைகளை அணிந்து இரும்பினால் ஆய கேடயங்களைக் கையில் கொண்டிருந்தனர். இந்தக் கேடயங்களின் ஓரங்களில் பல நிறங்கள் கொண்ட கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. சில கேடயங்களின் உள்ளும் புறமும் முலாம் பூசப்பட்டு இருந்தன. குதிரை வீரர்களுடைய தலை முடிகளும், முக மூடிகளும் தோல்கள் கொண்டு செய்யப்பட்டிருந்தன. குதிரை வீரர்களின் கழுத்தில் பட்டுத்துணி, தங்கம், வெள்ளி. எஃகு முதலியவற்றால் செய்யப் பெற்று முகக் கண்ணாடி போல் ஒளி வீசிய பட்டைகள் காணப் பெற்றன. இடுப்பில் வாள், சிறு கோடரி முதலிய போர்க் கருவிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சில குதிரை வீரர்

களுடைய கையில் கூர்மையான ஈட்டிகள் இருந்தன. வெல் வெட்டு, தமாஸ்க் முதலிய துணிகளைக் கொண்டு செய்யப்பட்ட குடைகளைப் பிடித்துக் கொண்டு குதிரை வால் போல் காணப் பட்ட கொடிகளையும் பறக்க விட்டுக் கொண்டு குதிரைகளின் மீது அமர்ந்து இருந்தனர்.

கரிப்படைகளும் குதிரைகளைப் போலவே அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. யானைகளின் இரு பக்கங்களிலும் மணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. யானைகளில் முகபடாத்தில் பூதங்கள், பயங்கரமான விலங்குகள் முதலியவற்றின் உருவங்கள் வரையப்பெற்றிருந்தன. ஒவ்வொரு யானைக்கும் பின்னே தோலினாலாய அங்கிகளையணிந்து கொண்டும், கையில் கேடயங் களையும், ஈட்டிகளையும் பிடித்துக் கொண்டும் போர் செய்வதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கும் வீரர்களைப்போல் மூன்று அல்லது நான்கு வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். மலைச் சரிவுகளிலும், மைதானங்களிலும் நின்று கொண்டிருந்த காலாட்படைகளின் எண்ணிக்கை கணக்கிட முடியாதது போல் தோன்றியது. அவர்கள் அணிந்திருந்த ஆடைகளின் நிறங்களும் அவ்வாறே தோன்றின. இந்த ஆடைகள் எந்தத் தேசங்களில் இருந்து கிடைத்தன என நான் வியப்புற்று நின்றேன். காலாட் படை வீரர்கள் கையில் கொண்டிருந்த கேடயங்களில் பொன் நிறக் கம்பிகளைக் கொண்டு புலி, சிங்கம், வேங்கை முதலிய விலங்குகளின் உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சில கேடயங் களில் வெள்ளிக் கம்பிகள் கொண்டு மேற்கூறப்பெற்ற விலங்கு களின் உருவங்கள் வரையறுக்கப் பெற்றிருந்தன. மற்றும் சில கேடயங்களின்மீது பலவித வண்ணங்கள் தீட்டப் பெற்றுக் கண்ணுடிகள் போன்று ஒளிவீசின. இவ் வீரர்கள் கைக் கொண்டு இருந்த வாள்களும் மிக்க அலங்காரத்துடன் காணப்பட்டன.

காலாட்படையின் ஒரு பகுதியினர் கைகளில் வில், அம்பு கொண்டு நின்றனர். அவர்களுடைய விற்கள் தங்கம், வெள்ளி முதலிய உலோகத் தகடுகளால் மூடப் பெற்றிருந்தன. அவர் களுடைய அம்புகள் மிக்க பளபளப்புடன் இருந்தன. இடுப்பில் சிறு வாள்களும் போர்க் கோடரிகளும் காணப்பட்டன. காலாட் படையின் ஒரு பகுதியினர் கையில் துப்பாக்கிகளும் வைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய உடல்மீது கனமான அங்கி கள் காணப்பட்டன. எதிரிகளின்மீது எறியக்கூடிய கை வெடி களும், நெருப்பைப் பொழியும் வெடிகளும் அவர்களிடம் இருந்தன. இறுதியாக இஸ்லாமியப் படை வீரர்களும் நின்று கொண்டிருந்தனர். இவர்களிடம் கேடயங்கள், ஈட்டிகள்,

துருக்கிநாட்டு விற்கள். கை வெடிகள், வேல்கள், எரிபந்தங்கள் முதலியவை காணப்பட்டன. இவ் வித ஆயுதங்களை உப யோகித்துப் போர்புரிவதில் இந்த இஸ்லாமிய வீரர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டுவ துண்டு.

முன்னர் கூறப்பட்ட முறைகளில் நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரையின்மீது அமர்ந்து வெண்கொற்றக் குடையின் நிழலில் சேனைகளின் அமைப்புகளைப் பார்வையிடுவதற்கு விஜயநகரத்து அரசர் வருகிறார். இந்தச் சிறப்பு மிக்க நாளில் அணிந்து கொள்வதற்கெனத் தனிப்பட்ட ஆடைகளும், அணிகளும் அரசருக்கு இருந்தன. அரசரைச் சூழ்ந்து வந்த பிரபுக்களும், உயர்தர அலுவலாளர்களும் இவர்ந்து வந்த குதிரைகளைப் பற்றியும், அணிந்திருந்த ஆடை அலங்காரங்களைப் பற்றியும், நான் கூறினால் பிறர் நம்ப மாட்டார்கள். நான் கண்ட காட்சி களைப் பற்றிக் கூறுவதற்கு எனக்குத் தகுந்த வார்த்தை கள் கிடைக்க வில்லை. காலாட்படை வீரர்களின் அமைப்பையும், வில் வீரர்களுடைய அமைப்புகளையும், முன்னே நின்று கொண்டு இருந்தவர்கள் மறைத்து விட்டமையால் இவ் விரு அணிவகுப்பு களை நான் முற்றிலும் காண முடிய வில்லை. இரு பக்கங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தமையால் என்னுடைய கழுத்தும் சுளுக்கிக் கொண்டது. நான் ஏறி வந்த குதிரையின் முதுகில் இருந்து விழுந்துவிடுவேனே? என்று பயப்பட்டேன். விஜயநகரப் பேரரசும் அதில் வாழ்ந்த அரசரும், மக்களும் மிகுந்த செல்வ முடையவர்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

சேனைகளின் அணி வகுப்பைக் காண்பதற்கு அரசர் பவனி வந்த பொழுது நன்கு அலங்கரிக்கப்பட்ட யானைகள் பல முன் வரிசையில் வந்தன. யானைகளை அடுத்து அணிவகை ஆடையுடனும் சேணங்களுடனும் இருபது குதிரைகள் மெல்ல நடந்து சென்றன. குதிரை அலங்கரிக்கப்பட்டிருந்த முறை அரசாங்கத்தின் செல்வ வளத்தையும் எடுத்துக் காட்டியது. அரசருக்குப் பக்கத்தில் செப்புத் தகட்டினால் செய்து முலாம் பூசப்பட்ட சிறிய பல்லக்கு ஒன்றில், முன்னர் நான் கூறிய விக்கிரகம் வைக்கப்பட்டுப் பக்கத்திற்கு எட்டுப் பேராகப் பதினாறுபேர் சுமந்து சென்றனர். அந்தப் பல்லக்கின் பக்கத்தில் குதிரையின்மீது பவனி வந்த அரசர், சேனை வீரர்களின் சமுத்திரத்தைப் பார்த்துக் கொண்டே சென்றார். அரசரைக் கண்ட யானைகள் பிளிறின; குதிரைகள் கனைத்தன; வீரர்கள் தங்களுடைய கேடயத்தின்மீது வாள்களைத் தட்டி ஆரவாரம் செய்தனர். கரி, பரி. காலாட்படையினர் செய்த ஆரவாரம் மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும்

எதிரொலிகளே உண்டாக்கின. துப்பாக்கி வீரர்களும், பீரங்கி வெடிகளும் உண்டாக்கிய சப்தத்தினுல் விஜயநகரமே அதிர்ந்து விடும் போல் தோன்றியது. உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் விஜயநகரத்திற்குத் திரண்டு வந்தது போன்ற ஒரு காட்சி தோற்றம் அளித்தது.

மேலே கூறப்பட்டவாறு அரண்மனையிலிருந்து புறப்பட்டு விக்கிரகம் வைக்கப்படுவதற்கு அமைக்கப்பட்ட கூடாரம் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்த அரசர், அக் கூடாரத்தில் விக்கிரகத்தை இறக்கி வைத்துச் சில வழிபாடு வணக்கங்களைச் செய்தார். வணக்கங்களும், வழிபாடுகளும் முடிந்த பிறகு தாம் சென்ற வழியே அரசர் திரும்பி அரண்மனைக்கு வரும் வரையில் முன்னர் வரிசையாக நின்று கொண்டிருந்த கரி, பரி, காலாட் படைகள் முதலியன இப்போதும் அசையாமல் நின்று கொண்டிருந்தன. அரசர் திரும்பி வந்த பொழுதும் சேனைவீரர்கள் முன்னர் செய்தது போன்று பெரிய ஆரவாரம் செய்தனர். மலைச் சரிவுகளிலும், மைதானங்களிலும் நின்று கொண்டிருந்த வீரர்கள் தங்களுடைய ஆயுதங்களைக் கொண்டு பெருஞ்சத்தம் செய்து இறங்கித் தங்களுடைய கூடாரங்களுக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டனர். நான் கண்ட காட்சிகள் கனவில் தோன்றும் காட்சிகள் போல் இருந்தன.

விஜயநகர அரசர்களுடைய சேனையில் பத்து இலட்சம் எண்ணிக்கையுள்ள கரி, பரி, காலாட் படைகள் இருந்தன எனக் கூறலாம். குதிரைப்படை மாத்திரம் 36,000 வீரர்களைக் கொண்டிருந்தது. இவ் வீரர்களுக்கு நேரடியாக அரசர் ஊதியம் கொடுத்து வந்தார். இக் குதிரைப் படையை அரசர் தம் பேரரசின் எப் பகுதிக்கு வேண்டுமானலும் அனுப்ப வசதிகள் இருந்தன. நான் விஜயநகரத்தில் இருந்த பொழுது கடற்கரை யோரமாக இருந்த ஒரிடத்தைப் பிடிப்பதற்கு ஒரிலட்சத்து ஐம்பதினுயிரம் வீரர்களை 50 சேனைத்தலைவர்களின் தலைமையில் அனுப்பி வைத்ததைக் கண்டேன். விஜயநகரத்தரசரிடம் நூற்றுக்கணக்கான யானைகள் இருந்தன. தமக்கு எதிராகக் கலகம் செய்யும் சிற்றரசர்களையும், வடக்கு எல்லையிலுள்ள மூன்று அன்னிய அரசர்களையும் அடக்குவதற்கு 20 இலட்சம் வீரர்களைத் திரட்ட முடியும் என்று கூறுகின்றனர். ஆகையால், இந்தப் பகுதியில் வாழ்கின்ற மற்ற மன்னர்கள் இவருக்குப் பயந்து கொண்டிருந்தனர்.

பெருந்தொகையான எண்ணிக்கையுள்ள வீரர்களைச் சேனையில் சேர்த்துக் கொண்ட போதிலும், விஜயநகரத்தில் வியாபாரம்

செய்வதற்கு அன்னிய நாட்டு வியாபாரிகளின் வருகையால் மக்கள் தொகையில் குறைவு ஏற்பட்டதாகத் தெரியவே இல்லை. வியாபாரம், கைத் தொழில்கள், உழவுத் தொழில் முதலியவற்றைச் செய்யும் மக்கள் ஏராளமாக இருந்தனர். விஜயநகரத்தில் வாழ்ந்த அந்தணர்கள் போர் செய்வதில் அதிகம் ஈடுபடுவ தில்லை.

விஜயநகரப் பேரரசில் பல பிரபுக்களும், நாயக்கன்மார் களும் இருந்தனர். பேரரசின் பெருவாரியான நகரங்களும், பட்டணங்களும், கிராமங்களும் இந்த நாயக்கன்மார்களுடைய அதிகாரத்தில் அடங்கியிருந்தன. 10இலட்சம் அல்லது பதினைந்து இலட்சம் வராகன்கள் ஆண்டுதோறும் வருமானமுள்ள நாயக்கன் மார்கள் பலர் இருந்தனர். மற்றும் பலருக்கு ஒன்று, இரண்டு, மூன்று அல்லது ஐந்து இலட்சம் வராகன்கள் வருமானம் இருந்தது. அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்றாற் போலக் கரி, பரி, காலாட் படைகளை வைத்திருக்க வேண்டுமெனத் திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. நாயக்கன்மார்கள் வைத்து இருக்கும் சேனைகள் போர்மேற் செல்வதற்கு எப் பொழுதும் தயாராக இருக்கின்றன. பேரரசின் எப் பகுதிக்கு வேண்டு மானாலும் சென்று போரிட்வேண்டும். இவ் வகையில் பத்து இலட்சம் வீரர்கள் நாயக்கன்மார்கள் வசத்தில் உள்ளனர். நாயக்கன்மார்கள் தம் வசமுள்ள வீரர்களுக்கு ஊதியம் அளிப்பதால் போர்த் தொழிலில் வல்ல இளைஞர்களையே சேனையில் சேர்த்துக் கொள்ளுகின்றனர், விஜயநகரத்தில் நவ ராத்திரி உற்சவத்தின் பொழுது அணிவகுத்து நின்ற வீரர்களை நான் பார்த்த பொழுது அவர்கள் போர்த் தொழிலில் வல்லவர் கள் என்று நான் கூறமுடியும்.

குறிப்பிட்ட எண்ணிக்கை யுள்ள கரி, பரி, காலாட் படைகளை அனுப்பி வைப்பதோடு ஒரு குறிப்பிட்ட தொகை யையும் அரசருக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. அரசரும் தம்முடைய சொந்தச் செலவில் பெரியதொரு சேனையை வைத்துப் பராமரித்து வருகிறார். சொந்தமாக எண்ணூறு யானை களையும், ஐந்நூறு குதிரைகளையும் வைத்துள்ளார். இவைகளை வைத்துப் பராமரிப்பதற்கு விஜயநகரத்திலிருந்து கிடைக்கும் வருமானம் உபயோகப்படுகிறது. யானைகளையும், குதிரைகளையும் வைத்துப் பராமரிப்பதில் செலவழியும் பொருளைக் கொண்டு விஜயநகரத்திலிருந்து அரசருக்குக் கிடைக்கும் வருமானத்தை ஒரு வகையாக நாம் உய்த்துணரலாம். விஜயநகரத்து அரசருக்கு அடங்கி ஐந்து சிற்றரசர்கள் இருந்தனர். சிற்றரசர்கள் அன்றியும் நாயக்கன்மார்களும் அரசருக்கு அடங்கி இருந்தனர். அரசருக்கு

ஆண் குழந்தையோ பெண் குழந்தையோ பிறந்தால் நாயக்கன் மார்களும் சிற்றரசர்களும் பல விதமான அணிகலன்களையும் செல்வங்களையும் இனமாக வழங்குவது வழக்கம். அரசருடைய பிறந்த நாள் விழாவிலும் பலவிதப் பரிசுகளை நாயக்கன்மார்கள் அளிக்கின்றனர்.

தீபாவளிப் பண்டிகை

நவராத்திரி உற்சவத்தை அடுத்து அக்டோபர் மாதம் பதினேராம் தேதிக்குப் பிறகு தீபாவளிப் பண்டிகை கொண்டாடுகின்றனர். இப் பண்டிகையின்பொழுது பலவிதப் புத்தாடைகளை அணிந்து பெரிய விருந்துண்கின்றனர். பிரபுக்களும் செல்வர்களும் தங்களுடைய வேலையாள்களுக்குப் புத்தாடைகளும், பரிசுகளும் வழங்குகின்றனர். தீபாவளியின் பொழுது பிரபுக்கள் அரசருக்குப் பலவிதப் பரிசுகளை வழங்குகின்றனர். தீபாவளியின் பொழுது இப் பகுதிகளில் வாழும் மக்களுடைய புத்தாண்டு தொடங்குகிறது. அக்டோபர் மாதத்தில் அமாவாசையன்று புத்தாண்டு தொடங்குகின்றது. இந்நாட்டு மக்கள் சாந்திரமான கணக்கில் மாதங்களைக் கணக்கிடுகின்றனர்.

விஜயநகர அரசரின் மூல பண்டாரம்

விஜயநகரத்தரசர்கள் தங்களுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்து தாங்கள் சேகரித்த செல்வப் பொருள்களை மூல பண்டாரம் ஒன்றில் பத்திரப்படுத்தி வைப்பது வழக்கமாகும். ஒவ்வரசர் உயிர் நீத்தவுடன் இந்த மூல பண்டாரம் பூட்டப்பட்டு முத்திரையிடப்படுகிறது. அடுத்தபடியாக அரியணையில் அமரும் அரசர் இந்த மூல பண்டார அறையைத் திறந்து பார்த்து அதில் எவ்வளவு பொருள்கள் இருக்கிறதென்று கணக்கிடுவதில்லை. நெருக்கடியான காலத்தில் மாத்திரம் இம் மூல பண்டாரம் திறக்கப்படுவது வழக்கம். கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் தனியானதொரு மூல பண்டாரம் அமைத்து அதில் ஆண்டு தோறும் ஒரு கோடி வராகன்களைச் சேர்த்து வைத்தார். தம்முடைய அரண்மனைச் செலவுகள் தவிர மற்றச் செலவுகளுக்கு இப் பண்டாரத்திலிருந்து ஒரு வராகன்கூட எடுத்துச் செலவழிப்பதில்லை. இந்த மூலப் பொருள்கள் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன. இவற்றில் இருந்து கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசு எவ்வளவு செல்வ வளம் மிகுந்து இருந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

வராகன் என்ற நாணயம் விஜயநகரத்து அரசர்களால் அச்சடிக்கப்பட்டது. வட்ட வடிவமாகப் பொன்னால் செய்யப்

பட்ட இந்த நாணயத்தின் ஒரு பக்கத்தில் இரண்டு உருவங்கள் காணப்படுகின்றன. மற்றொரு பக்கத்தில் இந் நாணயத்தை அச்சடிக்கும்படி ஆணையிட்ட அரசருடைய பெயர் காணப்படுகிறது. கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட வராகன்களில் ஓர் உருவம்தான் காணப்பட்டது இந்த வராகன் இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் செலாவணியாயிற்று. ஒவ்வொரு வராகனும் மூன்றரை ரூபாய் மதிப்புடையதாகக் கருதப்பட்டது.

மேலே விவரிக்கப்பட்ட நவராத்திரித் திருவிழா முடிவுற்ற பிறகு கிருஷ்ண தேவராயர் விஜயநகரத்தை விட்டுத் தாம் புதிதாக அமைத்த (நாகலாபுரம்) நகரத்திற்குச் செல்கிறார். இரண்டு ஆண்டுகள் காலத்தில் இந் நகரம் அமைக்கப்பட்டு அதில் மக்கள் குடியிருப்பதற்குரிய வசதிகள் செய்யப்பட்டன. இப் புதிய நகரத்திற்கு அரசர் பெருமான் வருகை தந்தபொழுது அங்கு வாழ்ந்த பொது மக்கள் நகரத்தின் வீதிகளில் மகர தோரணங்கள் கட்டியும் பூரண கும்பங்கள் வைத்தும் வரவேற்பு அளித்தனர். இப் புதிய நகரத்தில் மற்றொரு இராணுவ அணி வகுப்பு நடைபெறத் தம்முடைய சேனைகளை அரசர் கண்டு மகிழ்ந்தார். ஆண்டுக் கொருமுறை தம்முடைய வீரர்களுக்கு ஊதியம் அளிப்பது வழக்கம். நிதியாண்டின் தொடக்க மாகையால் வீரர்களுக்கு எல்லாம் ஊதியங்கள் அளிக்கப் பெற்றன. அரசாங்க இராணுவத்தில் அலுவலில் 'அமர்ந்திருந்த எல்லா வீரர்களுடைய அங்க அடையாளங்களும் நிறம், குறிகளும் ஏடுகளில் எழுதிக் கொள்ளப் பெற்றன. அரசருக்கு அணுக்கத் தொண்டர்களாக விளங்கி அவரைப் பாதுகாத்த வீரர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய வரிசைக் கேற்றவாறு ஆயிரம், எண்ணூறு அல்லது அறுநூறு வராகன்கள் ஆண்டு தோறும் ஊதியமாக அளிக்கப்பெற்றன.

மேற்கூறப்பெற்ற அணுக்கத் தொண்டர்களுக்கு அவர் களுடைய வரிசைக்கேற்றவாறு இரண்டு அல்லது ஒரு குதிரை கொடுக்கப்பட்டன. இந்த இராணுவ வீரர்களுக்குத் தலைவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய ஏவலின்படி இவ் வீரர்கள் அரண்மனையைக் காவல் புரிகின்றனர். மேலும், ஐந்நூறு குதிரைப்படை வீரர்களும் அரண்மனையைக் காவல் புரிகின்றனர். அரண்மனைக்குள் மேலும் இரண்டு காவற் படைகள் உள்ளன.

நாகலாபுரமாகிய புதிய நகரத்திற்குக் கிருஷ்ண தேவ ராயர் திரும்பிய பொழுது போர்த்துகீசியத் தூதராகிய கிறிஸ் டாவோ அரசரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். தாம் இது

வரையில் விஜயநகரத்தில் உள்ள அரண்மனைக்குட் சென்று அதன் அழகை அனுபவித்ததில்லை என்றும் அதனால், தம்முடன்கூட வந்த வர்களும் தாமும் அரண்மனையின் உட்புறப் பெருமைகளைக் கண்டு களிப்பதற்கு அனுமதி தரும்படியும் வேண்டிக்கொண்டார்; அரண்மனையின் உட்புறப் பகுதிகளைக் கண்டு தம்முடைய நாட்டு மக்களுக்கு விவரமாக எடுத்துக் கூறுவதற்கும் அனுமதி வேண்டினர். அவருடைய வேண்டுகோளின்படியே கிருஷ்ண தேவராயர் அரண்மனையின் உவளகப் பகுதிகளைத் தவிர மற்றக் கட்டடங்களைக் காணுமாறு ஆணையிட்டார். நாங்கள் விஜய நகரத்திற்குத் திரும்பி அரண்மனைக்குட் சென்ற பொழுது சாளுவ திம்ம அப்பாஜியும் அவருடைய தம்பி கொண்டம ராசய்யாவும் எங்களை வரவேற்று அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர்.

விஜயநகர அரண்மனையின் உட்புறத்தின் விவரம்

அரண்மனையின் உட்புற நுழை வாயிலை நாங்கள் அடைந்த வுடன் அங்கிருந்த காவல்காரர்கள் எங்களை நிறுத்தி, நாங்கள் எத்தனை பேர் என்று எண்ணிக் கொண்ட பிறகு ஒவ்வொருவராக உள்ளே நுழையும்படி சொல்லினர். முதலில் வழவழப்பான தரை யுடன் கூடியதும், நான்கு பக்கங்களிலும் வெண்மையான சுவர் களால் சூழப் பெற்றதுமான ஒரு முற்றத்தை யடைந்தோம். இந்த முற்றத்தின் இடக்கைப் புறத்தில் இன்னொரு நுழைவாயில் இருந்தது. இதன் வழியாக அரசருடைய அரண்மனையை அடைந் தோம். இந்த அரண்மனையின் நுழை வாயிலில் வலப் புறத்தில் கிருஷ்ண தேவராயரின் தகப்பனுடைய (நரச நாயக்கர்) ஓவியம் உயிருள்ள சிலை போன்று சுவரின்மீது வண்ணங் களால் தீட்டப்பட்டிருந்தது. தகப்பனுடைய (நரச நாயக்கர்) உருவம் உடற்கட்டு வாய்ந்ததாகவும், மகனைவிடச் சதைப்பற்று உள்ளதாகவும், கருமை நிறம் பொருந்தியதாகவும் தீட்டப் பட்டிருந்தது. இடப்புறத்தில் கிருஷ்ண தேவராயருடைய உருவம் காணப்பட்டது, நேரில் காணும்பொழுது எவ்வித ஆடைகளையும் அணிகலன்களையும் அணிந்திருந்தனரோ, அதே வடிவத்தில் இச் சித்திரங்கள் காணப்பட்டன. இந்த வாயிற் படியைக் கடக்கும் பொழுதும் அங்கிருந்த காவல்காரர்கள் எங்களை மீண்டும் ஒருமுறை எண்ணிய பிறகே நாங்கள் உள்ளே சென்றோம்.

இந்த அரண்மனை கவிகை மாடமாக அமைக்கப்பெற்று இருந்தது. இதில் இரண்டு தளங்கள் இருந்தன. அடியிலுள்ள தளத்திற்குள் செல்வதற்குச் செப்புத் தகடுகள் வைத்து அமைக்கப்பட்ட படிக்கட்டுகள் காணப்பட்டன. இத் தளத்தில்

நான்கு மூலைகள் கொண்ட முகமண்டபம் ஒன்று பிரப்பங் கழிகளைக் கொண்டு அமைக்கப்பட்டு இருந்தது. இந்த முக மண்டபத்தின் உச்சி நவரத்தினங்களை வைத்து அலங்காரம் செய்யப்பட்டதுபோல் காணப்பட்டது. இதன் ஓரங்களில் பொற் கம்பிகளில் முத்துகள் கோக்கப்பட்டுச் சரங்களாகத் தொங்கின. மனித இதயத்தின் வடிவம் போன்று நவரத்தினங்களைப்பொருத்தி யிருந்தனர். இந்த முகமண்டபத்தின் நடுவில் மிக நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்ட கட்டில் ஒன்று காணப்பட்டது. இக் கட்டிலின் குறுக்கு விட்டங்களில் பொற்றகடுகள் பொருத்தப் பெற்றிருந்தன. கட்டிலின்மீது கறுப்புச் சாட்டின் (Satin) துணி கொண்டு தைக்கப்பட்ட விரிப்பு ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. இந்த விரிப்பின் ஓரங்களில் ஒரு சாண் அகலத்திற்கு முத்துவரிசை கள் கோக்கப் பெற்றிருந்தன, இந்த விரிப்பின்மீது இரண்டு மெத்தைகள் காணப்பட்டன. இந்த அரண்மனையின் மேல் தளத்தை நாங்கள் பார்க்கவில்லை.

கீழ்த் தளத்தின் வலப்பக்கத்தில் சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்ட தூண்களின்மீது கட்டப்பட்ட ஓர் அறை இருக் கிறது. இந்த அறையின் சுவர்களிலும் தூண்களின் குறுக்கு விட்டங்களிலும் யானைத் தந்தங்களைக் கொண்டு செய்யப்பட்ட தாமரைப்பூ வடிவங்களும் ரோஜாப்பூக்களும் காணப்பட்டன. இங்குள்ள தந்தச் சிற்ப வேலைப்பாடுகளை வேறு எங்கும் காண முடியாது. தந்தச்சிற்ப வேலைகளின் இடையிடையே பல நாட்டு மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டும் சித்திரங் கள் வரையப்பட்டிருந்தன.

இச் சித்திரங்களில் பல போர்த்துகீசியருடைய உடைகளும் பழக்க வழக்கங்களும் இன்னவை என்று விளங்கும்படி தீட்டப் பட்டிருந்தன. அரண்மனையை விட்டு வெளியிற் செல்லாதவர்கள் அயல் நாட்டவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி அறிந்து கொள்வதற்கு இச் சிற்பங்கள் உதவி செய்தன. இந்த அறையில் தங்கத் தகடுகள் பொருத்தப்பட்ட இரண்டு அரியணைகள் காணப் பெற்றன. கொசுவலையால் மூடப்பட்டவெள்ளிக் கட்டில் ஒன்றும் காணப்பட்டது. மரகதக் கல்லால் செய்யப்பட்ட சிறுமேடைக்கல் ஒன்றும் இருந்தது. இந்த அறைக்குப் பக்கத்தில் பூட்டி முத்திரை வைக்கப்பட்ட அறையொன்றை மூல பண்டாரம் என எங்களுக்குக் காவல்காரர்கள் காட்டினர்.

மேற்கூறப்பட்ட அரண்மனையை விட்டு நீங்கி இன்னொரு திறந்த வெளி முற்றத்தை அடைந்தோம். இந்த முற்றத்

தில் செங்கல் பரப்பித் தளவரிசை செய்யப்பட்டிருந்தது. இதன் நடுவில் இரண்டு மரத்தூண்கள் நடப்பட்டு, ஒரு குறுக்கு விட்டம் கொண்டு இரண்டும் இணைக்கப்பட்டிருந்தன. இவ் விட்டத்தில் இருந்த நான்கு கொக்கிகளிலிருந்து நான்கு வெள்ளிச் சங்கிலிகள் தொங்கிக் கொண்டிருந்தன. இந்தச் சங்கிலிகளில் ஊஞ்சற் பலகைகள் அமைத்து அதில் அரண்மனையிலுள்ள பெண்ணரசிகள் ஊஞ்சலாடுவது வழக்கமென நான் கேள்விப்பட்டேன். இந்தத் திறந்தவெளி முற்றத்தின் வலப் பக்கத்திலிருந்த பல படிக்கட்டு களின்மீது ஏறிச் சென்று பல மாடி வீடுகள் அமைந்திருப்பதை யும் நாங்கள் கண்டோம். மரங்களைக் கொண்டு தூண்களை நிறுத்திச் சித்திரவேலைகளுடன் கூடிய பல மொட்டைமாடி வீடு களை நாங்கள் கண்டோம். தூண்களின்மீதும் பலகைகளின்மீதும் செப்புத் தகடுகள் வேய்ந்து முலாம் பூசப்பட்டிருந்தது.

மேலே விவரிக்கப்பட்ட அரண்மனையின் நடுக்கூடத்தில் நான்கு தூண்கள் அமைக்கப்பட்டு மேல்விதானத்துடன் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. இம் மண்டபத்தின் சுவர் களில் பலவிதமான பரதநாட்டியச் சிற்பங்கள் காணப்பட்டன. இச் சிற்பங்களின் இடையே பலவிதச் செடி, கொடிகளின் சிற்பங் களும் காணப்பட்டன. இம் மண்டபத்திலிருந்து நுழைந்து சென்றால் நாம் ஒரு சிறிய கோவிலைக் காணலாம். இந்தக் கோவிலுக்குள் உருவச்சிலை ஒன்று வைத்து அரண்மனையில் உள்ளவர்கள் வணக்கமும் வழிபாடும் செய்கின்றனர். இக் கோவிலின் முன்பு பரத நாட்டியமும் நடைபெறுகிறது.

இக் கோவிலிலிருந்து திறந்தவெளி முற்றத்தின் இடப் பக்கத் திலுள்ள ஒரு தாழ்வாரத்தில் பல விநோதங்களை நாங்கள் பார்த்தோம். இந்தத் தாழ்வாரத்தின் நடுவிலுள்ள ஓர் அறையில் வெள்ளிச் சங்கிலிகள் கொண்டு தொங்கவிடப்பட்ட கட்டில் ஒன்று காணப்பட்டது. இந்தக் கட்டிலின் கால்களும் குறுக்கு விட்டங்களும் பொற்றகடுகளால்வேயப்பட்டிருந்தன. இவ்விதக் கட்டில்கள் இரண்டு காணப்பட்டன. இந்த அறையைக் கடந்து சென்றால் இன்னொரு அறையை நாம் காணமுடிகிறது. இந்த அறை கிருஷ்ண தேவராயர் காலத்தில் அமைக்கப்பட்டதாகும். இவ் வறையின் வெளிப்புறச் சுவர்களில் வில், அம்பு கொண்டு போர் செய்யும் பெண்வீரர்களின் உருவங்கள் தீட்டப்பட்டு இருந்தன. இந்த அறையின் உட்புறச் சுவர்களின்மீது சித்திரங் கள் வரைவதற்கு அரசர் உத்தரவிட்டுள்ளதாகவும், சில பகுதி களைப் பொன்முலாம் பூசுவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாகவும் நான் கேள்விப்பட்டேன்.

இந்த அறையிலிருந்து ஒரு நடைபாதை மூலமாக மற்றொரு அறையை அடைந்தோம். அங்கே சமையல் செய்வதற்குரிய பல பாத்திரங்கள் காணப்பட்டன. அங்குக் காணப்பட்ட பாத்திரங்களில் சில பொன், வெள்ளிப் பாத்திரங்கள் போன்று பிரகாசமாக இருந்தன. சமையல் கூடத்திலிருந்து சிறிது தூரம் சென்று நடன அரங்கு ஒன்றை அடைந்தோம். இந்த நடன அரங்கு நீளமாக இருந்தது; ஆயினும், அதிக அகலம் உடையதன்று. இந்த அரங்கின் நடுவில் பல தூண்கள் காணப்பட்டன. இந்தத் தூண்களின் உச்சிப் பீடங்களில் யானைகள் முதலிய விலங்குகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மனித உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு முழ உயரமுள்ள மனித உருவங்களும் காணப்பட்டன. தூண்களை இணைத்து நிற்கும் விட்டங்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த பலகைகள் காணப்பட்டன. அரங்கில் காணப்பட்ட தூண்களில் பலவித பரதநாட்டிய நிலைகள் காணப்பட்டன. நடனமாதர்களின் கையில் உடுக்கை போன்ற மத்தளங்கள் இருந்தன. இவ்வித அமைப்புகளிலிருந்து இது மாதர்கள் பரதநாட்டியம் கற்றுக் கொள்வதற்கேற்ற அரங்கமென நாம் உய்த்துணரலாம்.

விஜயநகரத்தில் தட்டையான மாடிகள் வைத்துக் கட்டப்பட்டதும் சுற்றுமதிற் சுவரோடு கூடியதுமான வீடுகள் ஓரிலட்சத்துக்குமேல் இருந்தன. நாகலாபுரத்திற்குச் செல்லாத சமயங்களில் அரசர் இந்த நகரத்திலேயே வாழ்வதாக மக்கள் கூறுகின்றனர். இந்த நகரத்திற்கும் இதன் வடக்கிலுள்ள மலைகளுக்கு மிடையே ஓர் ஆறு (துங்கபத்திரை) பாய்ந்து செல்லுகிறது. இந்த ஆறு ஆனேகுந்திக் கருகில் வடக்கு நோக்கிப் பாய்கிறது. இவ் வாற்றின் மேற்குக் கரையில் ஆனேகுந்தி அமைந்துள்ளது. இந் நகரத்திற்குள் செல்வதற்கு மூன்று வாயில்கள் உள்ளன. விஜயநகரத்தின் வடமேற்குத் திசையிலுள்ள கிருஷ்ணபுரி என்னும் ஊரில் பல கோவில்கள் காணப்படுகின்றன.

மரபுவழிப் பட்டியல்

ஹொய்சள வமிசத்து அரசர்கள்

நிருபகாமா (கி.பி. 1022 - 47)

வினயாதித்தியர் (1047 - 98)

இரணியகர் (1063—1100)

- முதலாம் பெல்லாளர் (1100 - 10)
- விஷ்ணுவர்த்தனர்
  - பிட்டி தேவர் (1110 - 52)
    - முதலாம் நரசிம்மர் (1152 - 73)
      - இரண்டாம் பெல்லாளர் (1173—1220)
        - இரண்டாம் நரசிம்மர் (1220 - 38)
          - சோமேஸ்வரன் (1233 - 67)
            - மூன்றும் நரசிம்மர் (1254 - 92)
              - மூன்றும் பெல்லாளர் (1291—1342)
                - நான்காம் பெல்லாளர்
            - இராமநாதர் (1254 - 95)
              - விஸ்வநாதன் (1295—1300)
- உதயாதித்தியர்

சங்கமை வமிசத்து அரசர்கள்



சாளுவ வமிசத்து அரசர்கள்



துளுவ வமிசத்து அரசர்கள்



ஆரவீட்டு வமிசத்து அரசர்கள்



மேற்கோள் நூற்பட்டியல்

(BIBLIOGRAPHY)

Archaeological Sources

1. Annual Reports of the Archaeological Survey of India, Calcutta, 1907-8; 1908-9; 1911-15.
2. Annual Reports on South Indian Epigraphy, Madras, 1887—1951.
3. Archaeological Survey of Southern India, South Indian Inscriptions, Vols. 1 to 13, Madras.
4. A Topographical list of Inscriptions of the Madras Presidency with notes and references by V. Rangachari, 3 Vols., Madras, 1919.
5. Epigraphia Indica, Vols. 1 to 29, Calcutta, 1892—1954.
6. Epigraphia Carnatica by Lewis Rice, 12 Vols., Bangalore, 1901—1924.
7. Mysore Archaeological Reports, Bangalore, 1924—1927
8. Nellore District Inscriptions by A. Buttsworth and Venugopal Chetty, V., 3 Vols., Madras, 1905.
9. Tirumalai Tirupati Devasthanam Inscriptions, 6 Vols., Madras, 1937—1951.
10. Pudukkottai State Inscriptions, Pudukkottai, 1929.
11. Travancore Archaeological Series, Vols. I to VII, Trivandrum, 1920.
12. South Indian Temple Inscriptions, Madras.
13. Government Oriental Series, edited by T. Chandrasekharan, M.A., L.T., Madras, 1955.

Chronicles and Travellers' Accounts

Abdur Razzack — Elliot and Dowson, Vol. IV, London, 1872.

Barbosa Duarte — Translated with Notes by Longworth Dames, 2 Volumes, London, 1918.

Caesar Frederick — Samuel Purchas. His Pilgrimes Vol. X, Glascow, 1905.

Chronicle of Domingo Paes. — Translated by Robert Sewell in A Forgotten Empire.

Chronicle of Fernao Nuniz — Do.

Ferishta — History of the Rise of the Mohamedan Power in India till A.D. 1612. Translated from the Original Persian by John Briggs, 4 Vols., Calcutta, 1908.

Do. — History of the Dekkan by Jonathan Scott. Shrewsbury, 1794, 2 Vols.

Ibn-Batuta — Edited by Sir Denison Ross and Eileen Power, London, 1929.

Major King — India in the 15th Century, London, 1858.

Wassaf — Elliot and Dowson, Vol. III, London, 1871.

Modern Works

Brown, C.J. — The Coins of India, Calcutta, 1922.

Elliot, Sir Walter — Coins of Southern India, London, 1885.

Elliot and Dowson — History of India as told by Her Own Historians, Vol. III., London, 1871.

Heras Rev. Father — The Aravidu Dynasty of Vijayanagar.

Krishnaswami Iyengar, Dr. S. — Sources of Vijayanagar History, Madras, 1919.

Do. — South India and Her Muhammadean Invaders, Oxford, 1921.

Do. — History of Tirupati, 2. Vols., Madras, 1941.

Krishnaswami, Dr. A. — The Tamil Country under Vijayanagar, Annamalanager, 1964.

P. B. Desai — A History of Karnataka, Dharwar, 1970.

Mahalingam, Dr. T .V. — Administration and Social Life under Vijayanagar, Parts I and II, Madras, 1975.

Nilakanta Sastri, K. A. — Foreign Notices of South India from Megasthenes to Ma-thuan, Madras, 1940.

Do. — A History of South India, Oxford University Press, Madras, 1955.

Ramachandrayya, Dr. O. — Studies on Krishnadevaraya of Vijayanagar, Waltair, 1953.

Saletore, Dr. B. A. — Social and Political Life in the Vijayanagara Empire, 2 Vols., Madras, 1934.

Sathianathier, R. — History of the Nayaks of Madura, Madras, 1924.

Sathianatheir, R. — A Political and Cultural History of India, II Vol., Madras,1952.

Do. — Studies in the Ancient History of Tondaimandalam, Madras, 1944.

Sewell Robert — A Forgotten Empire, National Book Trust of India, New Delhi, 1970.

Sherwani, H. K. — The Bahmanis of the Deccan, Hyderabad, 1953.

Srinivasa Sastri and Harihara Sastri — Madhuravijayam by Gangadevi, Trivandram, 1924.

Taylor, W. — Oriental Historical Manuscripts 2 Vols., Madras, 1862.

Tiruvenkatachari — Madhuravijayam of Gangadevi, Edited with an Introduction, Annamalainagar, 1957.

G. Duncan Derret — The Hoysalas, Oxford University Press, Madras, 1957.

Venkatarama Iyer, K. R. — Hoysalas in the Tamil Country, Annamalainagar, 1944.

Venkataramanayya, Dr. N. — Kampili and Vijayanagara, Madras, 1929.

Do. — Origin of Vijayanagara - The City and the Empire, Madras, 1933.

Venkataramanayya, Dr. N. — The Early Muslim expansion in the Deccan and South India, Madras, 1942.

Do. — Further Sources of Vijayanagara History, 3 Vols., Madras,1942.

Venkaṭaramanayya, Dr. N. — Studies in the Third Dynasty of Vijayanagara, Madras, 1935.

Longhurst, A. H. — Hampi Ruins - Described and Illustrated, Madras, 1917.

Venkataramanappa, M. M. — Outlines of South Indian History, New Delhi, 1975.

Tamil Works

அவ்வை துரைசாமிப் பிள்ளை. — தமிழ் நாவலர் சரிதம், சென்னை, 1948.

தண்டபாணி தேசிகர் — சிதம்பரம், தருமபுரம், 1948.

மு. இராகவ அய்யங்கார் — சாசனத் தமிழ்க்கவி சரிதம், சென்னை, 1937.

ஷை — தனிப்பாடல் திரட்டு, மதுரை, 1935.

இராமச்சந்திரன் செட்டியார், C. M. — கொங்கு நாட்டு வரலாறு.

புலவர் குழந்தை — கொங்கு நாட்டு வரலாறு.

சோமசுந்தர தேசிகர் — பதினெரும் நூற்ருண்டுத் தமிழ்ப் புலவர்கள்.

ஷை — பதினேழாம் நூற்ருண்டுத் தமிழ்ப் புலவர்கள்.

சதாசிவப் பண்டாரத்தார் — பாண்டியர் வரலாறு, சென்னை, 1950.

ஷை — தமிழ் இலக்கிய வரலாறு 13, 14, 15ஆம் நூற்ருண்டுகள், அண்ணுமலை நகர், 1955.

அ. கி. பரந்தாமனர் — மதுரை நாயக்கர் வரலாறு

டாக்டர் K. K. பிள்ளை — தமிழக வரலாறு — மக்களும் பண்பாடும்.